
தமிழ்நாடு ... மற்றும்
தமிழ்நாடு ...
... 008



மாண்புமிகு இந்தியத் துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் சென்னைக்கு வருகை தந்த போது, அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றார் (8.6.90)

# 21வது ஆண்டில் தமிழரசு

'தமிழரசு' 21-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப்பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரை, கவிதைகள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாக தமிழரசு விளங்கி வருகிறது.

'தமிழரசு' இதழுக்கு, தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

—ஆசிரியர்




தமிழரசு

1-7-1990

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆனித் திங்கள் - 17

மலர்:21 இதழ்:1


## இந்த இதழில்...


மக்களால் மக்களுக்கான வளர்ச்சி! முன்னுரிமைகள் வளர்ச்சிக்கான முன்மாதிரி!
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 2

நலம் பயக்கும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள்
—மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் ... 5

புதிய ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் ... 8

உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவோம்!
—மாண்புமிகு ஊரக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் உரை ... 9

இராமநாதபுரம் மாவட்டத்தில் ... 13

செங்கை-அண்ணா மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிப் பணிகள் ... 15

பாரதிதாசனின் பண்புகள் ... 17

அருங்காட்சியகம் ... 24

பிணி தீர்க்கும் பண்ணைக் கீரை ... 28

சேலம் மாவட்டத்தில் தொழுநோய் ஒழிப்புப் பணிகள் ... 30

அண்ணல் அம்பேத்கர் ... 33

கண்ணாடிக் குச்சியில் கைவண்ணம் ... 37

தலைசிறந்த தேசபக்தர் காயிதேமில்லத் ... 45

சென்னைத் துறைமுக வரலாறு ... 47


முகப்பில்: திருக்குற்றால அருவி



# மக்களால் மக்களுக்கான வளர்ச்சி! முன்னுரிமைகள் வளர்ச்சிக்கான முன்மாதிரி

## -முதல்வர் கலைஞர்

டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

**மா**ண்புமிகு பிரதமர் அவர்களே!

தேசிய வளர்ச்சிக்குழு உறுப்பினர்களே!

தேசிய முன்னணி அரசு அமைக்கப்பட்ட ஒரு சில மாதங்களுக்குள்ளேயே எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் செயல்திட்ட அறிக்கையைத் தயாரித்த மத்திய அரசையும், திட்டக்குழுவையும் நான் பெரிதும் பாராட்ட விழைகிறேன். அவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ள முன்னுரிமைகளை, நாங்கள் உளமார வரவேற்கிறோம் என்பதை, முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவை தேசிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதிகளுக்கு இணங்க உள்ளன; அவை நம்முடைய மக்களின் அடிப்படையான உடனடித் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்ட வளர்ச்சிக்கான முன்மாதிரியாக விளங்குகின்றன.

இந்தச்செயல்திட்ட அறிக்கையை எங்களுடைய அரசும், மாநிலத் திட்டக்குழுவும் பரிசீலித்துள்ளன. எங்களுடைய விரிவான கருத்துக்களை நாங்கள் மத்திய திட்டக்குழுவிற்குத் தெரிவிப்போம். எனவே, நான் இச்சமயத்தில் முக்கிய பிரச்சினைகள் குறித்து மட்டுமே கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

### மக்களால், மக்களுக்கான வளர்ச்சி

இந்தச் செயல்திட்ட அறிக்கையில் போதிய அளவு வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்தல், குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல், அரசு செய்யும் நிதி ஒதுக்கீடுகள் அனைத்திலும் குறைந்தது பாதியேனும் கிராமப் பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல், திட்டமிடல்-செயற்பாடு ஆகியவற்றைப் பரவலாக்குதல், மக்கள் நுகர்பொருட்களைப் .பெருமளவில் உற்பத்தி செய்யும் கிராமத்தொழில்கள், சிறுதொழில்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல் ஆகியவை தலையாய தேவைகள். இவை இந்தியாவில் கடந்த 40 ஆண்டுக்கால திட்டமிட்ட வளர்ச்சியில் நேர்ந்திருந்த குறைபாடுகளைப் போக்குவதற்கான மாற்று வழிமுறையின் இன்றியமையா அம்சங்களாகும். இவற்றுக்கு, எங்கள் அரசு தாக்கல் செய்த இரண்டு வரவு-செலவுத் திட்டங்களிலும் முன்னுரிமை அளித்துள்ளோம்.

வேலைவாய்ப்பு, மகளிர் நலன், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோரின் பொருளாதார - சமூக - கல்வி வளர்ச்சிக்கும், குழந்தைகள் நலன், சத்துணவு ஆகியவற்றிற்கும் நாங்கள் முக்கியத்துவம் அளித்துள்ளோம். நம் நாட்டில் வளர்ச்சி என்பது மக்களால், மக்களுக்குக் காணப்படும் வளர்ச்சியாக இருக்கவேண்டும்; இல்லையெனில் அந்த வளர்ச்சியில் பொருளே இல்லை என்பதை இந்த செயல்திட்ட அறிக்கை தெற்றெனச் சுட்டிக்காட்டியிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது.

### மாநிலங்களுக்குப் போதிய நிதி வசதி

இப்புதிய அணுகுமுறையில் பெரிய சிக்கல்கள் சில இருக்கின்றன. அவற்றை நாம் எதிர்கொண்டாக வேண்டும். இவற்றை நான் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். இந்தச்செயல்திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள முன்னுரிமைகள்-வேலைவாய்ப்பிற்கோ, கிராம வளர்ச்சிக்கோ பரவலாக்கப்பட்ட திட்டமிடும் முறைக்கோ, கல்வி, சுகாதாரம், குடிநீர் வழங்கல், வீட்டுவசதி ஆகிய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கோ எதுவாயினும் சரி, அவற்றை முதற்கண் செயற்படுத்தவேண்டியது மாநிலங்களே ஆகும். மாநிலங்களுக்குப் போதிய நிதி வசதிகள் அளிக்கப்பட்டாலன்றி, இந்த முன்னுரிமைத் திட்டங்களைச் செயற்படுத்த முடியுமென்பதை நாம் எதிர்பார்க்க இயலாது. இதைச் செய்து முடிக்க முக்கியமான இரண்டே வழிகள் தான் இருக்கின்றன. அவை, நிதிக்குழு மூலம் நிதி பகிர்ந்தளிக்கப்படுவது, ஆண்டுத்திட்டங்களின் மூலம் திட்ட நிதியுதவி அளிக்கப்படுவது ஆகியவையே.

### எட்டாம் திட்டக் காலத்தில்

எட்டாம் திட்டக் காலத்தைப் பொறுத்தவரை, ஒன்பதாம் நிதிக்குழு, அதன் முடிவைத் தெரிவித்துள்ளது. பகிர்ந்து கொள்ளத்தக்க வரிகளில் மிக முக்கியமான வருவாய் ஆதாரமான மத்திய ஆயத்தீர்வைகளில் மாநிலங்களின் பங்கை 1979-ல் ஜனதா அரசு பதவியில் இருந்த காலத்தில் 20 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக ஏழாம் நிதிக்குழு உயர்த்தியது. எட்டாவது நிதிக்குழு பற்றாக்குறை மாநிலங்களுக்குக் கூடுதலாக 5 சதவீதம் வழங்கிய போது, அனைத்து மாநிலங்களுக்கும் அது பற்றாக்குறை மாநிலமாக இருந்தாலும் அல்லது வேறு வகையிலான மாநிலமாக இருந்தாலும் அவற்றுக்குக் கிடைக்கக்கூடிய பங்கு 1984-89-ல் 40 சதவீதம் என்கிற அதேஅளவில் வைத்துக்கொள்ளப்பட்டது. ஒன்பதாவது நிதிக்குழு இந்தப்பங்கினை 8-வது திட்டக்காலத்திற்கு 37.5 சதவீதமாகக் குறைத்துள்ளது. மாநிலத்தின் வளர்ச்சிக்கான பொறுப்புகள் மிக அதிகமாக உயர்ந்துள்ளபோதிலும், 1979-84-ல் செய்யப்பட்ட ஒதுக்கீட்டைவிட தற்போது மாநிலங்களுக்குக் குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து நாம் கொண்டுள்ள இக்கருத்தினை மாநிலங்களும் ஏற்கும் என நான் நம்புகிறேன்.

### நிதிக்குழுவின் ஒதுக்கீடு:

நிதிக்குழுவின் ஒதுக்கீட்டுப் பரிந்துரையில் காணப்படும் பல்வேறு கடுமையான குறைகளையும் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விழைகிறேன். நிதிக்குழு மாநிலத்தின் நிதிவாயில்

**தமிழகத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்குக!**

களை மிகையாக மதிப்பிட்டுள்ளது; மேலும், மாநிலங்களின் திட்டஞ்சாரா செலவினங்களைக் குறைவாக மதிப்பிட்டுள்ளது; ஒரு சில மாநிலங்களுக்கு மட்டுமே கணிசமாகப் பயனளிக்கக்கூடிய முறையில் ரூ.9,000 கோடி அளவுக்குக் கணிசமான ஒரு தொகையைத் திட்ட மானியமாக வழங்க நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளது. நிதிக்குழுவின் இந்த ஒதுக்கீடு 1968-ல் தேசிய வளர்ச்சி மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காட்கில் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானதாகும்.



டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டார் (18.6.90).

**மாநிலங்களின் மத்திய நிதி உதவித்தேவையை ஆய்வு செய்ய ஒரு குழு**

அணுகுமுறை அறிக்கையில் சிறப்பாகக் காட்டப் பட்டுள்ள முன்னுரிமைத் திட்டங்களை நிறை வேற்றுகிற ஒருநிலையில் மாநிலங்கள் வைக்கப் படுமானால், நிதிக்குழுவின் மேற்சொன்ன ஒதுக் கீட்டுப் ,பரிந்துரையினால் ஏற்படும் விளைவுகளைத் தேசிய வளர்ச்சி மன்றம் கடுமையாகக் கருதிப் பார்க்கவேண்டுமென நான் வலியுறுத்த விழை கிறேன். இந்நோக்கத்திற்காக 8-வது திட்டத்தில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடுகள், நிதிக்குழுவின் பரிந்துரை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மாநிலங் களின் மத்திய நிதி 'உதவித்தேவையை ஆய்வு செய்ய இம்மன்றம் ஒரு குழுவை அமைக்க வேண்டு மென நான் கருதுகிறேன். அந்த ஆய்வின் அடிப் படையில், மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக் குத் தேவைப்படும் திட்ட நிதியுதவியையும், திட்ட நிதியுதவியை மாநிலங்களுக்கிடையே எவ்வாறு பகிர்ந்தளிக்க வேண்டுமென்பதையும் தேசிய வளர்ச்சி மன்றம் முடிவுசெய்யலாம்.

**மக்கள்தொகைக் கொள்கை**

மக்கள்தொகைக் கொள்கையைப் பொறுத்த வரையில், குடும்பநலத்திட்டங்களின் ஒருங்கிணைந்த

**மத்திய - மாநில அரசுகளின் உறவு குறித்து ஆய்வு**

அணுகுமுறை வாயிலாக, பிறப்புவீதத்தை 22.5 என்கிற அளவுக்குக் கொண்டுவந்து இம்மாநிலம் ஒரு சாதனையை எய்தியுள்ளது என்பதை நான் மிக மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விழைகிறேன். மாநிலங்களின் இந்த முற்போக்கு மக்கட்தொகைக் கொள்கை அம்மாநிலத்தின் பொருளாதார அரசியல் நலனுக்குப் பாதகம் விளைவிப்பதாக இருப்பதை நாம் உணர்கிறோம். உதாரணமாக முன்னர் பின்பற்றப்பட்ட 1971 மக்கள்தொகைப் புள்ளி விவரத்திற்குப் பதிலாகக் கூடுதல் ஆய்த்தீர்வை காரணமாக நிதி ஆதாரங்களை ஒதுக்குவதற்கு 1981 மக்கள்தொகையை 9-வது நிதிக்குழு அடிப் படையாக எடுத்துக்கொண்டுள்ளது. அத்தகைய செயல்நோக்கங்கள் அனைத்திற்கும் 1971-ஆம் ஆண்டு மக்கள்தொகைப் புள்ளிவிவரம் மட்டுமே இனி பயன்படுத்தப்பட வேண்டும். இம்மாநிலத் தில் மக்கள் தொகையைக் குறைத்ததன் காரண மாக நாம் நாடாளுமன்றத்தில் இரண்டு உறுப்பினர் பதவியை இழந்தோம். சட்டப்பேரவைத் தொகுதி களுக்கு வாக்காளர்களின் எண்ணிக்கை மாநிலத் திற்கு மாநிலம் வேறுபடுவதால், எதிர்காலத்தில் மக்கள் தொகையில் மாற்றம் ஏற்பட்டபோதிலும், மாநிலத்திலுள்ள நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைத் தற்போதுள்ள அளவிலேயே வைத்திருப்பதைக் கருத்திற்கொண்டு, நாடாளு மன்றத் தொகுதிகளிலுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடு வதற்கு அனுமதிக்க வேண்டும்.

**மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்**

இந்த அணுகுமுறை அறிக்கை அதிகாரங்களைப் பரவலாக்குதல், ஒருங்கிணைந்த பகுதி குறித்துத் திட்டமிடுதல் ஆகியவற்றைச் சரியான முறையில் வலியுறுத்துகிறது. இந்த அணுகுமுறையை நாங்கள் வரவேற்கிறோம். தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணி களில், ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும், தீவிரப் பங்கேற்குமாறு செய்ய, நாங்கள் ஏற் கனவே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இவ்வாறு சரியான வழிகளில் வலியுறுத்தப்பட்டி ருக்கின்ற இந்தச் செயல்திட்ட அறிக்கை, மத்திய அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது. அதிகாரங்களைப் பரவலாக்குதல் என்கிற கொள்கையையும், நடைமுறையையும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாகவே நாங்கள் கருதுகிறோம்.

மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் வழங் கத் தயாராக இருந்தால் தவிர, உள்ளாட்சி அமைப்பு களுக்கு அதிக அதிகாரங்களையும் நிதி ஆதாரங் களையும் வழங்குமாறு மாநில அரசுகளைக் கேட்பது சாத்தியமாகாது. உகந்ததும் ஆகாது. இதைக் கருதி தான், தேசிய முன்னணி அரசு, ''உண்மையான கூட்டாட்சி முறையைக் கொண்டுவரவும், முன் பிருந்த மத்திய அரசு குவித்து வைத்திருந்த அதி காரங்களைப் பரவலாக்கவும்'' பொறுப்பேற்றுள்ளது. மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 263-ஆம் பிரிவின்கீழ், பன்மாநிலக்குழுவை அமைத்தல் போன்ற பெரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, அவசரநிலைக் காலத்தில் 1976-ல் கொண்டுவரப்பட்ட, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 42-வது திருத் தத்தின் மூலமாக, ''தொழில் நுட்பக்கல்வி, மருத் துவக்கல்வி, பல்கலைக்கழகங்கள் உட்பட'', ''கல்வி' ''வனங்கள்'', ''மக்கள்தொகைக் கட்டுப் பாடு, குடும்பநலன்'' ஆகியவற்றை மாநிலப் பட்டி யலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றியதைத் தற்போது மாற்றவேண்டியது அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம்.

**மத்திய-மாநில அரசுகளின் உறவுகள்**

வரிவிதிப்பு தொடர்பாக மத்திய மாநில அரசு களுக்கிடையே உள்ள உறவுகள், பொருளாதார சமூகத் திட்டமிடுதலில் மத்திய அரசின் பங்கு தொடர்பான வேறு பல பிரச்சினைகளும் இருக் கின்றன. செயல்திட்ட அறிக்கையின் நோக்கங் களையும், இலக்குகளையும் நாம் வெளியிட வேண்டு மாயின் அவற்றை நாம் மறுஆய்வு செய்யவேண் டியது அவசியமாகும். ''மாநில அரசுகள் தங்களு டைய தன்மானத்தை விட்டுக்கொடுத்து, மத்திய

41-ஆம் பக்கம் பார்க்க





# நலம் பயக்கும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள்

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
திரு நாஞ்சில் கி.மனோகரன்

விவசாயச் சீர்த்திருத்தங்களைப் பற்றியும், கிராமப்புற ஏழைமக்களின் நலனுக்கு உகந்த வகையில் அவற்றைச் செயல்படுத்துவது பற்றியும், விவாதிப்பதற்காகக் கூட்டப்பட்ட இந்த மாநாட் டில், தமிழக முதல்வர் சார்பில் கலந்து கொள்வது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில், 1948-ஆம் ஆண்டு வாக்கிலேயே அரசாங்கத்துக்கும், சாகுபடியாளர்களுக்குமிடை யில் இருந்து வந்த ஜமீன்தாரிகள், இனாம் தாரர்கள் முதலிய இடைத் தரகர்களை ஒழிப்பதற் காக முக்கியமான பல்வேறு விவசாயச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன. தற்போது தமிழ் நாட்டில் நீதி மன்றங்கள் முன்பு பைசலாகாம லிருந்து வரும் ஒருசில வழக்குகள் நீங்கலாக, இடைத்தரகர் போன்ற நிலையிலுள்ள நில உரிமை யாளர்கள் எவருமில்லை.

சாகுபடியாளர்களை நிலத்திலிருந்து வெளி யேற்றுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பது, அவர்கள் செலுத்த வேண்டிய நியாய வாரத்தை நிர்ணயிப்பது இந்த மாநிலத்தில் உள்ள நில உடைமையாளர் களுக்கும் பொது அறக்கட்டளைகளுக்கும் சொந்த மான நிலங்களைச் சாகுபடி செய்து வருபவர்களின் பெயரைப் பதிவு செய்தல் ஆகியவை போன்ற பல நிலகுத்தகைச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. தற் போது, இராணுவத்தினராயில்லாத நில உடைமை யாளர்கள், குத்தகைப் பாக்கி செலுத்தாததற்காக நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தாலொழிய, சாகு படியாளர்களிடமிருந்து நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ள முடியாது.

தற்போது தனி நபர்களுக்கும் பொது அறக் கட்டளைகளுக்கும் சொந்தமான சுமார் 6,84,500 ஏக்கர் நிலம் சம்பந்தமாக, 4,94,000 பதிவு செய் யப்பட்ட சாகுபடியாளர்கள் இருந்து வருகின்றனர். பதிவு செய்யப்படாத சில சாகுபடியாளர்களும் இருக்கக் கூடும். இந்தச் சாகுபடியாளர்களுக்கு நில உடைமை உரிமையை வழங்குவது பற்றி அரசாங்கம் பரிசீலித்தது.

நிலச் சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈடு கொடுப் பதற்காக ஒரு பெருந்தொகை (ரூ.350 கோடி) தேவைப்படுவதாலும், இந்தத் திட்டத்துக்கு நிதி யுதவி செய்ய நிதி வசதியமைப்புகள் தயங்கு வதாலும், இது சம்பந்தப்பட்ட சட்டத்தை இயற்ற முடியவில்லை. இந்த நிலச்சீர்திருத்தத்தை விரை வில் செயல்படுத்துவதற்காக, இந்திய அரசோ, அல்லது நிதி வசதி அமைப்புகள் மூலமோ உதவ முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக நில உச்சவரம்புச் சட்டம் 1960-ஆம் ஆண்டில் அமலுக்கு வந்தது. தற்போது, ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு விதிக்கப்பட் டுள்ள உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஆகும். ஒட்டுமொத்தமான உச்ச வரம்பு நிலப் பரப்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஆகும். இந்தச் சட்டம் எங்கள் மாநிலத்தில் 30 ஆண்டு காலமாக அமலில் இருந்து வருவதாலும், தற்போது பெரும் பாலான நிலச் சொந்தக்காரர்களிடம் இருந்து வரும் நிலம், பாகப் பிரிவினைகள், விக்கிரயம், வாரிசு உரிமைகள் போன்ற காரணங்களின் விளை வாக இந்த உச்ச வரம்பை விடக் குறைவாகவே



**எந்தப் பிரச்சார இயக்கமும், அன்புவழி சென்றால்தான் வெற்றிபெற முடியுமே ஒழிய, பலாத்கார வழி சென்றால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது!**

**—தந்தை பெரியார்**

இருப்பதாலும், உச்சவரம்பை மேலும் குறைக்க வேண்டிய அவசியம் எதுமில்லை.

இருப்பினும், இந்தச் சட்டம் அமலுக்கு வரவிருக்கும் தறுவாயில், முன்கூட்டியே சில நிலச் சொந்தக்காரர்கள் பினாமி பேரத்தில் ஈடுபட்டு, அதன் விளைவாக நிலங்கள் உச்ச வரம்புச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிட்டிருக்கின்றனர். இந்த நிலங்களை மேற்கொள்ள வேண்டியதுதான், இப்போது அவசியமான விஷயமாகும். இந்த நிலச் சொந்தக்காரர்கள், யுக்தியைக் கையாண்டதன் மூலம், நிலங்கள் பெயரளவில் வேறு சிலர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் விளைச்சலைத் தாங்களே தொடர்ந்து அனுபவித்து வர முடிகிறது. இதைக் கருத்தில் கொண்டுதான், தமிழக அரசு ஒரு சட்டம் கொண்டு வந்தது. சட்ட மன்றத்தில் அதற்கு அமோகமான ஒப்புதலும் கிடைத்தது. இந்தச் சட்டத்துக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்ததுமே, 1958 ஜனவரி 1-ந் தேதிக்கும் 1960-ஏப்ரல் 6-ந் தேதிக்கும் இடையில் நடந்துள்ள பினாமி நில மாற்றங்கள் குறித்து விசாரணை நடத்த நடவடிக்கைகள் எடுக்கும். நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் இந்த நிலங்களை மேற்கொள்வதற்கான சட்ட ரீதியான நடைமுறைகளை மேற்கொள்ளும்.

சாகுபடியாளர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக, தமிழக அரசு அவ்வப்போது சட்டங்கள் இயற்றி வந்திருக்கிறது. வெள்ளத்தினாலோ அல்லது வறட்சியினாலோ விளைச்சல் பொய்த்துப் போகும் போதெல்லாம், குத்தகை வசூலை நிறுத்தி வைக்கவோ, ஒத்திவைக்கவோ பல சந்தர்ப்பங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பலர் விஷயத்தில், இப்போது இந்த குத்தகைப் பாக்கிகள் மிக அதிகமாகப் பெருகி விட்டுள்ளது. குத்தகைப் பாக்கி பூராவையும் சாகுபடியாளர்களால் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் இது சம்பந்தமாக ஒரு ஏற்பாட்டை உள்ளடக்கிய சட்டம் ஒன்று இயற்றப்பட்டிருக்கிறது. ஒரு மொத்தத் தொகையை உடனடியாகச் செலுத்தி விட்டால், மிச்சமுள்ள தொகை தள்ளுபடி செய்யப்படும் என்பது இந்த ஏற்பாடுகளில் ஒன்றாகும். குத்தகை பாக்கியில் ஒரு பகுதியை 5 ஆண்டு தவணைகளில் செலுத்தி விட்டால் மிச்சமுள்ள பாக்கித் தொகை தள்ளுபடி செய்யப்படும் என்பது மற்றொரு ஏற்பாடாகும். இந்த இரு ஏற்பாடுகளில் எந்த ஒன்றையாவது தேர்ந்தெடுக்கும் விருப்ப உரிமை சாகுபடியாளர்களுக்கு உண்டு. இந்தச் சட்டமும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகக் காத்து நிற்கிறது.

மாநில அரசினால் மேற்கொள்ளப்பட்ட 1.75 லட்சம் ஏக்கர் நிலத்தில், 1.37 லட்சம் ஏக்கர் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் பெரும்பாலோர், ஆதி-திராவிட மக்களும் பழங்குடிப் பிரிவினருமேயாவர். அண்மையில் எங்களது அன்புக்குரிய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சுமார் 5000 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலப்பட்டாக்கள் வழங்கினார் என்பதையும், அதில் 3,600க்கு மேற்பட்டவர்கள் ஆதிதிராவிடர்கள் என்பதையும் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு நிலப்பட்டா பெற்றவர்கள், அந்த நிலங்களைச் சீர்செய்வதற்காக, எக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 என்ற அளவில் உதவி பெற அருகதை உடையவர்கள். இந்த உதவி விகிதம் வெகு காலத்துக்கு முன்பு எப்போதோ நிர்ணயிக்கப்பட்டதாகும். இதைத் தக்க முறையில் அதிகரிக்க வேண்டும். இந்த உதவி விகிதத்தை எக்டேர் ஒன்றுக்கு ரூ.10,000 ஆக உயர்த்த வேண்டுமென்றும், இந்தப் பொறுப்பை மத்திய அரசும், மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் யோசனை கூற விரும்புகிறோம். இதை இந்த மாநாடு பரிசீலிக்க வேண்டும்.

வழக்குகள் நீண்டு கொண்டே போவதும், தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதும்தான், நிலச் சீர்த்திருத்த அமல் தாமதமடைவதற்குக் காரணமாகும். எனவே, இதற்காகத் தனியாக ஒரு சிறப்பு மன்றத்தை அமைத்தால், நிலச் சீர்திருத்தங்களைத் துரிதமாக அமல் நடத்த முடியும் என்று கருதப்படுகிறது. நில நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க எங்கள் மாநில அரசு ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்குத் தேவையான சட்டபூர்வமான நடைமுறைகள் பூர்த்தியாகி விட்டன. இந்த நடுவர் மன்றம் விரைவிலேயே அமைக்கப்படும். இப்போது உயர்நீதி மன்றத்தின் முன்புள்ள மேல் முறையீடுகள், துரிதப் பைசலுக்காக இந்த நடுவர் மன்றத்துக்கு மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடுவர் மன்றத்தில் நீதித்துறையைச் சேர்ந்தவர்களும், நிர்வாகத்துறையைச் சார்ந்தவர்களும் இருப்பார்கள். அதிகாரச் சார்பற்றவர்களை இந்த மன்றத்துக்கு நியமிப்பதை நாங்கள் விரும்பவில்லை.

கிராமப்புறங்களில் தனியார் நிலங்களில் வீடு கட்டிக்கொண்டு வசிக்கும் நிலமற்ற ஏழைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டத்தை 1971-ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக இயற்றியது தமிழ்நாடு தான். இவ்வாறு வீடு கட்டப்பட்டுள்ள மனையையும், அதையொட்டியுள்ள சொற்ப நிலத்தையும் அவர்களுக்கே சொந்தமாக்குவதுடன், அந்த மனைக்குப் போவதற்கான வழியின் மீது உரிமை அளிக்கவும் இந்தச் சட்டம் வகை செய்திருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் இதுவரை 1.81 லட்சம் கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் வீட்டுமனைகளுக்கான உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தில் அண்மையில் ஒரு அபிவிருத்தியும் செய்யப்பட்டிருக்கிறது. 1990 ஏப்ரல் 1-ந்தேதியன்று இவ்வாறு அனுபவித்து வருபவர்களுக்கும், இந்தத் தகுதி விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, ஆண்டொன்றுக்குச் சுமார் 3 லட்சம் மனைகள் என்ற விகிதத்தில் மனைப்பட்டாக்களை அரசு வழங்கி வருகிறது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்

நிலங்கள் சிறு சிறு துண்டுகளாகப் பிரிந்து நிற்காமல், ஒரு தொகுப்பாக இணைந்து இருக்கும்படி- அதாவது துண்டாடப் படாதபடி - பார்த்துக் கொள்ள வேண்டும் (Consolidation) என்று கூறப்படுகிறது. இதைச் சட்டத்தின் மூலம் கைகூடச் செய்ய முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. தமிழ்நாட்டைப் பொருத்தவரை, சிறு விவசாயிகள், சொற்ப நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் என்ற வகையில் மிக ஏராளமான பேர் உள்ளனர். இதைத் தவிர, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பலருக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் குறைந்த அளவு நிலங்கள் ஒதுக்கப்படுகின்றன.

இவர்கள் எல்லாம் தங்கள் பங்குக்குச் சிறிதளவு தியாகம் செய்ய முன்வந்தாலொழிய, ஓரளவு விட்டுக்கொடுக்க முன்வந்தாலொழிய, பெரிய நிலத்தொகுப்புகளை உருவாக்கும் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவது என்பது மிகவும் சிரமமான விஷயமாகும். எனவே, தற்போதைக்கு, சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தாமல், அவரவர் விருப்பத்துக்கு உரிய விஷயமாக இதை விட்டுவிட விரும்புகிறோம்; இருந்தபோதிலும்,, சம்பந்தப்பட்டவர்கள் இத்தகைய திட்டங்களுடன் வந்தால், அவர்களுக்குத் துணை புரிய அரசு எப்போதுமே தயாராக இருக்கிறது.

1967-லிருந்து 1976 வரை ஆட்சிப் பொறுப்பை வகித்து மீண்டும் 1989-லிருந்து ஆட்சிக்கு வந்துள்ள இந்த ஆளும் கட்சியானது, நிலச்சீர்த்திருத்தச் சட்டங்கள் அனைத்தையும் திறம்படச் செயற்படுத்த வேண்டும் என்று அரசுக்குத் திட்டவட்டமாக அரசியல் கட்டளை பிறப்பித்துள்ளது. இந்த வகையில், பல சட்ட ரீதியான நடவடிக்கைகளும் நிர்வாக ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, ஏற்கெனவே குறிப்பிடத்தக்க வெற்றியும் கிட்டியுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தில் உள்ள பொத்தல்களை அடைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அறக்கட்டளைகளுக்கும் நிறுவனங்களுக்கும் மாற்றப்படுவதன் மூலம் தற்போதுள்ள சட்டத்தின் பிடியில் அகப்படாமல் தப்பி விட்டிருக்கும் நிலங்களை எடுத்துக் கொள்வதற்காக, சட்டத்தைத் திருத்தவும் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. எனினும், மதச்சார்பு அமைப்புகளுக்குச் சொந்தமான நிலங்களை கையகப் படுத்தும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் சரிவர செயல்படுத்தும் பணியில் கிராமப்புறங்களில் உள்ள பொது நல ஊழியர்களின் ஒத்துழைப்பையும் எங்கள் அரசு நாடுகிறது. கிராமப்புற ஏழை எளியவர்களுக்குப் பணக்கார நிலச்சுவான்தார்களுக்கு மிடையில் ஏற்படும் தகராறுகளில் வருவாய்த்துறை அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் காட்டும் மனப்பான்மையில் மாறுதலை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க முற்பட்டுள்ளோம்.

## அம்பேத்கர் நூற்றாண்டு



***“சமூகக் கொடுமையானது அரசியல் கொடுமையை விடப் பயங்கரமானது ஆகும். ஆகையால், எவனொருவன் சமூகக் கொடுமையை எதிர்த்து நின்று துணிந்து போராடுகிறானோ, அந்தச் சமூக சீர்திருத்த வாதியானவன் அரசியல் வாதியை விட மிகுந்த தைரியசாலியாக மதிக்கப்படுவான்”.***

எங்கள் மாநிலத்தில் பழங்குடி மக்கள் சொற்பம் பேரே வசிக்கின்றனர். அவர்களும் இங்குமங்குமாகச் சிதறிக் கிடக்கிறார்கள். 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, பழங்குடிப் பிரிவினர் எண்ணிக்கை 5.20 லட்சம்தான்.

இது இந்த மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.07 சதவிகித அளவுதான். பழங்குடிப் பிரிவினர் கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள் என்ற போதிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களில் உள்ள பழங்குடிப் பிரிவினருக்கு இருக்கும் அதே பிரச்சினைகள்தான் இவர்களுக்கும் இருக்கின்றன. ஒருபுறத்தில் சமூக, பொருளாதார, கல்வித்துறைகளில் இவர்கள் ஒரேயடியாகப் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ளனர். மற்றொரு புறத்தில், லேவாதேவிக்காரர்கள் கடும் வட்டியின் மூலமும், இவர்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரிப்பதன் மூலமும் இவர்களைச் சுரண்டி வருகிறார்கள்.

பழங்குடிப் பிரிவினருக்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க நிலத்தை, மற்றவர்கள் அபகரிப்பதைத் தடுக்க, தற்போது வருவாய்த்துறையின் நிலை ஆணையில் ஒரு ஷரத்து இருந்து வருகிறது. மத்திய அரசு தெரிவித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, பழங்குடிப் பிரிவினரிடமுள்ள நிலத்தை மற்றவர்கள் பறித்துக் கொள்ளுவதைத் தடுப்பதற்காக எங்கள் மாநிலத்தில் ஒரு சட்டம் இயற்றுவது பற்றி எங்கள் அரசு பரிசீலித்து வருகிறது. விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

**(டில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து (12.6.90).**



**புதிய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**

பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு க. சுந்தரம் அவர்கள் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவருக்கு மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் 16.6.90 அன்று மாலை 6.00 மணியளவில் ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். அமைச்சர் திரு. க. சுந்தரம் அவர்கள் தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். தொடர்ந்து ரகசிய காப்புறுதிப் பிரமாணமும் செய்து வைக்கப் பட்டது.

எளிய முறையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு அவர்கள், தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப. மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அரசின் அறிவிப்புகள்-ஆக்கப் பணிகள்

★ சென்னையில் குடிசைப் பகுதிகளில் புதிய கழிவறைகள் கட்டத் தமிழக அரசு ரூ.5 கோடி நிதி வழங்கியுள்ளது. இந்த நிதியின் மூலம் சென்னையில் 14 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளில் புதிய கழிவறைகள் கட்டப் பட உள்ளன.

★ ஆதிதிராவிடருக்கும் பழங்குடியினருக்கும் ஒன்றாக இருந்து வந்த இட ஒதுக்கீடு மாற்றியமைக் கப்பட்டு, கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் ஆதி திராவிடருக்கு 18 சதவிகிதம் இட ஒதுக்கீடும், பழங்குடி மக்களுக்கு 1 சதவிகிதம் இட ஒதுக்கீடும் அளிக்கப்படுகிறது என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

★ ஆதரவற்ற விதவைகள், குழந்தைகள், தங்குவதற்கெனத் தமிழகத்தில் 5 இடங்களில் புதிதாக மறுவாழ்வு இல்லங்கள் கட்டப்படும் என மாண்புமிகு சுற்றுலா அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் அறிவித்தார்.

★ நடப்பாண்டில் தமிழ்நாட்டில் 2,000 ஏழைப் பெண்களுக்குச் சமூக நலத்துறையின் மூலம் இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தெரிவித்தார்.

★ சென்னை மாநகரைத் தூய்மைப் படுத்திடப் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர்கள் திரு. பொன்முடி, திரு. கோ.சி. மணி ஆகியோர் முறையே வள்ளுவர் கோட்டம் புதிய பூங்கா, ஆயிரம் விளக்குப் பகுதிகளில் முதல் கட்டமாக இந்தப் பணியை 16.6.90 அன்று தொடங்கி வைத்தனர். இதில் மாணவர், பொது நல அமைப்பினர் கலந்து கொண்டனர்.

★ நடப்பு ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 115 இலட்சம் ரூபாய் செலவில் காடுகள் வளர்ப்புப் பணித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.





# உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவோம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர்

திரு **கோ. சி. மணி**

மாண்புமிகு பிரதமர் அவர்களே! மாண்புமிகு துணைப் பிரதமர் அவர்களே! மாநிலங்களின் முதலமைச்சர்களே! மத்திய, மாநில அமைச்சர்களே! ஆளுநர்களே! துணை ஆளுநர்களே! நண்பர்களே!

இம்மாநாட்டில் பங்கேற்று எங்கள் மாநிலத்தின் சார்பில் 'பஞ்சாயத்து ராஜ்' மற்றும் நகர அமைப்புகள் குறித்த கருத்துக்களை எடுத்தியம்புவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன். இம்மாநாட்டைக் கூட்டி அனைத்து முதல்வர்களின் கருத்துக்களையும் அறிய மாண்புமிகு பிரதமர் அவர்கள் எடுத்த முயற்சியை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'பஞ்சாயத்து ராஜ்' தொடர்பான 64-வது அரசியல் சட்டத் திருத்த மசோதா மற்றும் நகர் பாலிகா தொடர்பான 65-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாக்களில் எவ்விதமான கலந்துரையாடலும் இன்றி முந்தைய மத்திய அரசு திருத்தங்கள் கொண்டுவர முனைந்தபோது எங்கள் முதலமைச்சர் அவர்கள் மாநில அரசுகளுக்குத் தங்கள் கருத்துக்களை எடுத்தியம்ப எந்த ஒரு வாய்ப்பும் அளிக்கப்படாதது குறித்து சுட்டிக் காட்டியிருந்தார்கள். ஆனால் தற்போது மத்திய அரசு மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்கின்ற இந்தப் புதிய அணுகுமுறை உண்மையில் மனதிற்கு மகிழ்வூட்டுவதாக உள்ளது.

இன்றைய தினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் இரண்டு பொருட்கள்- 'பஞ்சாயத்து ராஜ்' மற்றும் நகர அமைப்புகளைப் பற்றியதாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஊராட்சி அமைப்புகள் இடைப்பட்ட வரலாற்றுக் காலத்திலேயே சிறப்பாகச் செயல்பட்ட பெருமை உடையது. நிலம், நீர்ப்பாசனம், நீதி நிர்வாகம், ஆவணங்கள் பராமரித்தல் போன்ற பல்வேறு வகையான ஊராட்சிப் பணிகளைச் செயல்படுத்திய பெருமை பண்டைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு உண்டு. இதே போன்று நாடு விடுதலை பெற்றபின் 1958-ஆம் ஆண்டிலேயே கிராம அளவில் அதிக அதிகாரங்களை அளிக்கும் சட்டத்தை இயற்றிய முதன்மை மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

மாவட்டக் கழகம் என்ற அமைப்பு தங்கள் அதிகாரங்களை முறையற்ற வழிகளில் கையாண்டதாலும், மக்களிடையே செல்வாக்கை இழந்து மக்களின் நலன்களில் அக்கறை காட்டாத அமைப்பாகச் செயல்பட்டதாலும் 1961-ஆம் ஆண்டு முதல் தேவையில்லையென்று சட்டமியற்றப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் இரண்டு நிலை (Two Tier) ஊராட்சி நிர்வாக முறை மட்டுமே உள்ளது. ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் வட்டார அளவில் செயலாற்றுகின்றன. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும்கொண்ட மாவட்ட வளர்ச்சி மன்றம் இரண்டாவது நிலையாகச் செயல்படுகின்றது.

எங்கள் அரசு 1989-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடனேயே தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்களைப் பெருக்கித் தருவது, அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் உரிய அளவில் வழங்குவது, அரசின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது போன்ற திண்ணிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1989-ஆம் ஆண்டில் ஊராட்சி மற்றும் நகராட்சிச் சட்டங்களில் விரிவான முறையில் திருத்தங்கள் பல இயற்றப்பட்டன. அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டது. இந்த உள்ளாட்சி அமைப்புக்களின் பதவிக்காலமான 5 ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்பான 6 மாத காலத்திற்குள், தேர்தல் நடத்தப்பட வேண்டுமென ஊராட்சி சட்டங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தேர்தலில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் ஏற்கெனவே பதவி வகிப்போரின் பதவிக் காலம் முடிந்த உடனேயே காலதாமதம் இல்லாமல் பதவியேற்பதற்கு வசதி உண்டாகிறது. இதுபோன்ற திருத்தத்தை நகராட்சிச் சட்டங்களிலும் கொண்டு வர முடிவு செய்துள்ளோம். ஊராட்சி அமைப்புகளின் கால அளவினை நீட்டிக்கச் செய்யும் அரசின் அதிகாரம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு ஏற்றவகையில் தேவைப்பட்ட அதிகாரங்கள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சிகளுக்கு வழங்கிடும் வகையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயலாக்குதல், நடைமுறைப்படுத்துதல், ஆய்வு செய்தல், கண்காணித்தல் ஆகிய பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியக்குழுக்களுக்கு வழங்குவதற்கு ஊராட்சிச் சட்டத்தின் புதிய பிரிவு ஒன்று வகை செய்கிறது. நகராட்சி மற்றும் மாநகராட்சிச் சட்டங்களிலும் இத்திருத்தங்கள் கொண்டு வரப்பட உள்ளன.

ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமைகளை ஆராய்ந்து, அவைகளின் நிதி ஆதாரங்களைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்கான பரிந்துரைகளைச் செய்யும் பொருட்டு ஐந்தாண்டுக்கு ஒரு முறை வல்லுநர் குழு ஒன்று அமைப்பதற்கு வகை செய்யும் விதத்தில் ஊராட்சிச் சட்டத்தில் மற்றும் ஒரு புதிய பிரிவு தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் குழு ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டு, அது தனது அறிக்கையை இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் 30-ஆம் நாளுக்குள் அரசிடம் அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கும் இவ்வாறு ஒரு வல்லுநர் குழு அமைக்க சட்டத்திருத்தங்கள் கொண்டு வர முடிவு செய்துள்ளோம்.

இந்தக் கூட்டத்திற்கான அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஒப்படைப்பது, தனியிட ஒதுக்கீடு செய்தல், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களின் கால அளவு போன்ற திருத்தங்கள் ஏற்கெனவே எங்கள் மாநில சட்டங்களில் கொண்டு வரப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக எங்கள் அரசின் உறுதியான ஈடுபாட்டினை எடுத்துக் காட்டவே நான் இவற்றைக் கூறினேன். இவற்றை அந்தந்த மாநிலங்களிடமே விட்டுவிட வேண்டும் என்பதே எங்கள் கருத்தாகும்.

மேலும், தற்போது பரிந்துரை செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்ட மாற்றங்களில் சில மாநில நிர்வாகத்தின் கீழ் வர வேண்டியவையாகும். உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்த பிரச்சினைகள் ஒவ்வொரு மாநிலத்திற்கிடையேயும் மாறுபட்டவைகளாக உள்ளன. மாநிலங்களுக்கிடையே சமூக அமைப்பு. அரசியல் தோற்றம், உள்ளாட்சிப் பகுதிகளில் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஆகியவைகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாக உள்ளன. குறிப்பாக, தற்போது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தத்திற்காகத் தெரிவிக்கப்பட்டுள்ள சில பரிந்துரைகள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பொருந்தாது.

எனவே, மாநிலங்களில் உள்ள ஜனநாயக அமைப்புகளின் வளர்ச்சிக்குப் பொருந்தாத, தேவையில்லாத மாற்றங்களை எல்லாம் வலுக்கட்டாயமாகக் கொண்டு வரும் வகையில் மத்திய அரசின் அதிகாரங்கள் மிகைப்படுத்துவது கூடாது.

தற்போது குறிப்பிட்ட எண்ணிக்கையிலுள்ள கிராமங்கள் மற்றும் குக்கிராமங்கள் ஒரு ஊராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்டவைகளாக இருப்பதால், திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உள்ளன. எனவே, இப்போது சட்டத் திருத்தத்தில் கூறப்பட்டுள்ளவாறு கிராமத்தின் வாக்குரிமை பெற்றவர்களைக் கொண்ட 'கிராம சபா' என்ற அமைப்பு, இதன் பொருட்டு தேவையில்லாதது மட்டுமின்றி, எளிதில் நிர்வகிக்கவும் முடியாததாகவும் அமைந்துவிடும்.

தமிழ்நாட்டில் பிரதிநிதித்துவத் தன்மை கொண்ட ஊராட்சி மன்றமே முடிவுகளை எடுக்கிறது. எனவே, ''கிராம சபா'' என்னும் கோட்பாட்டை நாங்கள் ஏற்கவில்லை.

ஊராட்சிகள் தவிர மற்ற அமைப்புகளிலும் நேரடித் தேர்தல் மூலம் 50 சதவிகிதத்திற்குக்குறையாமல் உறுப்பினர்களைச் சேர்ப்பது என்னும் கருத்து, நிர்வாகம் மற்றும் செயலாக்கத்தில் ஏராளமான பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். தமிழ்நாட்டில் கிராம அளவிலான ஊராட்சி மன்றங்களுக்கும், கோட்ட அளவிலான ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு உண்டு. இது கிராமங்களுடைய கோரிக்கைகளை ஊராட்சி ஒன்றியக் குழுவில் எடுத்துரைக்கவும், ஒன்றியத் திட்டங்களை அவர்களது கிராமங்களில் நிறைவேற்றவும், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு உரிமையையும், பொறுப்பினையும் அளிக்கிறது. ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு நேரடித் தேர்தல் மூலம் சில உறுப்பினர்களைத் தேர்வு செய்யலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ள திருத்தமானது, மேற்கூறிய ஊராட்சி மன்றங்களுக்கும் ஒன்றியங்களுக்குமிடையே உள்ள நெருங்கிய தொடர்பைத் துண்டித்துவிடும் என்பதால் இந்தக் கருத்தை ஏற்கவியலாது.

அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களிலும், பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கும் இடஒதுக்கீடு செய்வதை வரவேற்கிறோம். ஊராட்சி மன்றம், மாநகராட்சிகளில் பெண்களுக்காக 30 சதவிகிதமும், ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்காகப் போதுமான அளவிலும், மாநகராட்சிகளில் அவ்வினத்தவர்களின் மக்கட்தொகை விழுக்காடுக்கேற்பவும் ஏற்கெனவே நாங்கள் இட ஒதுக்கீடு செய்ய சட்ட திருத்தங்கள் கொண்டு வந்துள்ளோம். நகராட்சிகள் சட்டத்திலும் இவ்வாறு செய்ய சட்டத் திருத்தங்கள் கொண்டு வர முடிவு செய்துள்ளோம். இருப்பினும் நகராட்சி தலைவர் பதவிகளில் தனியிட ஒதுக்கீடு செய்தல், மற்றும் பின் தங்கியவர்களுக்கும் தனியிட ஒதுக்கீடு செய்தல் போன்றவைகளைப் பொறுத்தமட்டில் அந்தந்த மாநிலங்களே முடிவு செய்யும்படி விட்டுவிட வேண்டும் என்று கருதுகிறோம். உள்ளாட்சித் தேர்தல்கள் தமிழ்நாட்டில் தலைமைச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட துறைகள் மேற்பார்வையில் நடைபெறுகின்றன. இதுகுறித்து, எந்தக் குற்றச்சாட்டும் இதுவரை வந்ததில்லை.

எனவே, இதற்காகத் தனியாக ஒரு தேர்தல் ஆணையம் வேண்டும் என்பது தேவையில்லை.

இதைப்போல, பெரிய நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் வார்டு கமிட்டி அமைத்தல், மாநகராட்சிகளில் பகுதிக்குழு அமைத்தல், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதிக்குழு அமைத்தல் போன்றவற்றை மாநில அரசின் முடிவுக்கு விட்டுவிடுவதே நல்லது என்பது எங்களது கருத்தாகும். மற்ற நிர்வாக அமைப்புகளில் கொண்டு வர விரும்பும் மாறுதல்கள், புதிய குழுக்கள் அமைத்தல் போன்றவைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

இறுதியாக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், இங்கு குழுமியுள்ள அனைவருக்கும் நான் உறுதியளிக்க விரும்புவது என்னவெனில் உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் எமது அரசு ஏனைய எந்த அரசுக்கும் பின்தங்கியதல்ல.

அதே நேரத்தில், நாடு முழுமைக்குமாக ஒரே அளவாக வரையறுக்கப்பட்டவாறில்லாமல், அந்தந்த மாநிலங்களின் கலாச்சாரம் மற்றும் சூழ்நிலைக்கேற்ற வகையில், உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்தும் பொறுப்பை மாநிலங்களுக்கே விட்டுவிட வேண்டும் என்பதில் மற்றவர்களைப் போலவே நாங்களும் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

இந்த உணர்வின் அடிப்படையில் தான், மாநிலங்கள் நிர்வகிக்கக் கூடிய பொருள்களில் எந்த ஒரு அரசியல் அமைப்புத் திருத்தமும் கொண்டு வருவதை நாங்கள் ஏற்க இயலவில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அவர்களே தேர்வு செய்து ஏற்றுக் கொள்ளும் வகையில், விரிவான மாதிரி வழிமுறைகளைப் பற்றி மட்டுமே மாநிலங்களின் கருத்தினை மத்திய அரசு கேட்டறிய வேண்டும் என்பது எங்கள் கருத்தாகும்.

**புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டில் 11.6.90 அன்று ஆற்றிய உரை.**

## ஒதூர் டி.வி.எஸ். சுசுகி ஆலை மீண்டும் திறக்கப்பட்டது.

**தருமபுரி மாவட்டம், ஓசூரில், டி.வி.எஸ். சுசுகி தொழிற்சாலை ஜூன் மாதம் 4-ஆம் தேதியன்று திறக்கப்பட்டது. இத்தொழில் தகராறு சம்பந்தமாய் பல்வேறு கட்டங்களில் அதிகாரிகள் முன்னிலையில், இரண்டு, மூன்று முறை பேச்சு வார்த்தை நடந்தது. இதற்கிடையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலையிட்டு ஆலோசனையும், அறிவுரையும் கூறினார். 29.5.'90 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில் இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்று, அதன் வாயிலாக உடன்பாடு ஏற்பட்டது.**

## அம்பேத்கர் நூற்றாண்டு



உலகத்திலுள்ள எல்லாமே மாறுதலுக்கு உட்பட்டதுதான். சமுதாயமேயானாலும் சரி, தனிப்பட்ட மனிதனேயானாலும் சரி; காலத்தோடும் காலமாற்றத்தோடும் சேர்ந்து இணைந்து செல்லக்கூடிய மனப்பக்குவம் பெறவேண்டும். அதுவே உண்மையான நாகரிகம் ஆகும்.

நம்மை நாமே உயர்த்திக்கொள்ள வேண்டும். சுயமாக வாழ்வது எப்படி என்று. கற்றுக்கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாக வாழ வேண்டும். நாமாக முயற்சிசெய்து நம் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி''.

''சுயமரியாதையில்லாமல் வாழ்வதும், வாழ நினைப்பதும் மிகப் பெரிய அவமானமாகும். ஒவ்வொருவரது வாழ்க்கைக்கும் மிக முக்கியமான ஓர் அம்சமே சுயமரியாதை. சுயமரியாதையோடு நாம் ஒவ்வொருவரும் நெஞ்சை நிமிர்த்தி வாழவேண்டும்.

For
Quality, Strength and
Durability

SANKAR
IC
CEMENT

THE INDIA CEMENTS LIMITED,
827, ANNA SALAI, MADRAS-600002.

FACTORIES:
Sankarnagar, Nellai - Kattabomman District
Sankaridrug, Salem District.

# இராமநாதபுரம் மாவட்டத்தில்...

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம் 11 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. ரூ.7 இலட்சம் மானியம் இத்திட்டத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு 100 எக்டேர் பரப்பில் 14 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, மொத்தம் 1400 எக்டேரில் மானாவாரிப் பயிர்கள் சாகுபடிக்கு மானியம் வழங்கப்பட உள்ளது.

இராமநாதபுரம்- வேளாண் கோட்டத்தில் காவனூர், திருஉத்தரகோசமங்கை மற்றும் வாலாந்தரவை ஆகிய மூன்று கிராமங்களும், திருவாடானை வேளாண்மைக் கோட்டத்தில் புல்லமடை, கருங்குடி மற்றும் கடம்பாக்குடி ஆகிய மூன்று கிராமங்களும், பரமக்குடி வேளாண் கோட்டத்தில் இராஜக்கல்பட்டி, அக்ரமேசி, மஞ்சூர் மற்றும் எஸ். கொடிக்குளம் ஆகிய நான்கு கிராமங்களும், கமுதி வேளாண் கோட்டத்தில் தேரிருவேலி, கீழச்சிறுபோது, நந்திசேரி மற்றும் திருமாலுகந்தான் கோட்டை ஆகிய நான்கு கிராமங்களும் அடங்கிய 14 கிராமங்கள் நடப்பு ஆண்டில் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தில் மானாவாரிப் பயிர்களில் மகசூலைப் பெருக்கிடச் சிறப்புத் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்க விவசாயிகளிடம் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

மழை நீரை மண்ணில் நிலை நிறுத்திட, கோடை உழவு செய்தல், கட்டுப்பாத்திகள் அமைத்தல், தாவரத் தடுப்பு அமைத்தல், ஆழச்சால் அகலப் பாத்தி அமைத்தல் போன்ற தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பருவத்தில் பெய்யும் மழையினை முழுவதுமாகப் பயன்படுத்திட முன் பருவ விதைப்பு மேற்கொள்ளவும், மகசூலைப் பெருக்கிட அடிஉரமாக ஊட்ட மேற்றிய தொழு உரமிடவும், மேலுரமிடவும், ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளவும் இத்திட்டத்தில் மானியம் வழங்கப்பட்டு எல்லா விவசாயிகளும் கடைப்பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் விவசாயிகளில் வருவாய் உயர்ந்திட இருபோக சாகுபடி, தீவனப்பயிர்கள் சாகுபடி, ஊடு பயிர் சாகுபடி மற்றும் பயன் தரும் மரக்கன்றுகள் நடவு செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் 100 எக்டேர் பரப்பிற்கு அடியிற் குறிப்பிட்டுள்ள விவரப்படி, விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

1. கோடை உழவு ரூ. 180/எக்டேர்
2. ஊட்டமேற்றிய தொழு உரமிடுதல் ரூ. 60/எக்டேர்
3. இருபோக சாகுபடிக்கு விதை மற்றும் உயிர் உரங்களுக்கு ரூ. 50/எக்டேர்.
4. தீவனப் பயிர்கள் சாகுபடி ரூ. 50/எக்டேர்.
5. ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள் ரூ. 50/எக்டேர்
6. தழைச் சத்து மேலுரமிடுதல் ரூ. 35/எக்டேர்

இத்திட்டத்தில் தேர்வு செய்துள்ள கிராமம் ஒவ்வொன்றிலும் 50 விவசாயிகள் மற்றும் சுற்றியுள்ள



பகுதிகளில் 50 விவசாயிகள் வீதம் 100 விவசாயிகளைத் தேர்வு செய்து, ஒவ்வொரு 100 எக்டேர் பகுதியிலும் மானாவாரிச் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி பயிற்சியளிக்கப் படவுள்ளது.

## தொழில் மையத்தின் பணிகள்

இம்மாவட்டத்தில் உள்ள தொழில் மையம் சிறு தொழில் ஊக்குவிப்பு முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

தொழில் முனைவோருக்கு இம் மையம் அனைத்து உதவிகளையும் செய்து தற்காலிகப் பதிவுச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் 491 தொழில் முனைவோருக்குத் தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர தங்களுடைய தொழிலைத் துவங்கி விட்டவர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள் தொடர்ந்து பெறுவதற்கு ஏதுவாக நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. 1989-90-ஆம் ஆண்டில் 164 சிறுதொழில் நிரந்தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் 31.3.90 முடிய 939 நிரந்தரச்சான்றிதழ்கள்வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கைத்திறன் விளைஞர்கள் மற்றும் குடிசைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பற்றி கணக்கெடுப்பு எடுத்து சான்றிதழ்கள் வழங்கி அவர்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடனுதவி பெற வழிவகைகள் செய்யப்பட்டன. 1989-90-ஆம் ஆண்டில் இந்த இனத்தில் 587 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்தியப் பிரதமர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பத்தாம் வகுப்பு படித்து தேறியுள்ள 18 முதல் 55 வயது வரம்பிற்குள் உள்ள வேலையில்லாமல் உள்ளவர்களுக்கு சுய வேலை வாய்ப்புப் பெற தொழிலகங்கள் அமைக்கக் கடன் உதவி பெற இம்மையம் வழிவகைகள் செய்து வருகின்றது. 1989-90-ஆம் ஆண்டில் 424 இளைஞர்களுக்குக் கடன் உதவி வழங்க தேசிய வங்கிகளுக்குச் சிபாரிசு செய்யப்பட்டதில் 170 இளைஞர்களுக்கு ரூ.25.14 இலட்சம் கடன் உதவி வழங்கப் பட்டுள்ளது.

ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக மிகக் குறைந்த வட்டி விகிதமான 6¼% விழுக்காடு வட்டி விகிதத்தில் விதைப் பணமாகக் கடன் உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இரண்டு தொழிலகங்களுக்கு ரூ.50,000/ கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

9.5.88-க்குப் பின்னர் தொடங்கப்பட்ட புதிய தொழிலகங்களுக்கு விற்பனை வரி மறுதளிப்பு அளித்து வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டில் 4 தொழில்களுக்கு ரூ.1.30 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது.

கிராமக் கைவினைஞர் திட்டத்தின் கீழ், கிராமப்புற இளைஞர்களுக்கு அரசு மற்றும் தனியார் பயிற்சி நிலையங்களில் ஆறு மாதக் காலம் தொழில் திறன் அடைய பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டில் 10 கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கும், பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப் படுகின்றது.

சிறு தொழிலகங்கள் தாங்கள் தொழில்களைத் தொடர்ந்து நடத்துவதில் அரசுத்துறைகளில் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண "ஒரு ஜன்னல் பொதுக் கருத்துக் குழு" என்ற அமைப்பு, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகின்றது. கடந்த ஆண்டு 12 கூட்டங்கள் நடத்தப்பட்டு 25 விண்ணப்பங்களுக்கு முடிவு காணப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள தொழில் முனைவோர்களை ஊக்குவித்து அவர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளைத் தொழில் தொடங்க ஊக்குவிப்பு முகாம்கள் 11 ஊராட்சி ஒன்றியங்களில் மற்றும் நகராட்சியிலும் 15 இடங்களில் முகாம் நடத்தப்பட்டு, 125 தொழில் முனைவோர்கள் அடையாளங் கண்டு தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.

**உ. இரவீந்திரன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுர மாவட்டம்**

## கொத்தடிமைகள் மீட்பு

மத்திய பிரதேச மாநிலத்தில் கல் உடைக்கும் கொத்தடிமைகளாக இருந்தவர்கள், தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சாரங்கி முயற்சியால் மீட்கப்பட்டு தங்கள் சொந்த கிராமங்களுக்கு திரும்பினர்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் வருவாய்க் கோட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ்.வி. பாளையம், மலைக்கோட்டாலம், உலகியநல்லூர், ஆலத்தூர் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாகக் கொத்தடிமைகளாக மத்தியப் பிரதேச மாநிலத்தில் இருந்து தொல்லைப்பட்டனர். இது தொடர்பாக, தங்கராசு என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு கொடுத்தார்.

திரு. தங்கராசு ஏற்கெனவே போபாலில் கொத்தடிமைத் தளையில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, விடுதலை ஆனவர். அதன் அடிப்படையில் அவர்களை விடுவித்து அழைத்து வர ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார்.

# செங்கை-அண்ணா மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிப் பணிகள்

செங்கை-அண்ணா மாவட்டத்தில், மாவட்டத் தொழில் மையம் கடந்த நிதி ஆண்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கிட குறிப்பிடத்தக்க சாதனை புரிந்துள்ளது.

இலாபகரமாக செயல்படக்கூடிய தொழில் திட்டங்களைத் தயாரித்தல், தொழில்களைத் துவக்க வேண்டிய உரிமங்கள் பெற ஆணை செய்தல், வேண்டிய மூலப்பொருட்களைக் குறித்த காலத்தில், குறித்த விலையில் வழங்குதல், தொழில் திறம்படச் செயல்பட உதவும் வகையில் அதற்குத் தக்க தொழில் நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதில் ஆலோசனைகளைத் தக்க தருணத்தில் வழங்கி, போதுமான நிதியுதவி கிடைக்கச் செய்தல், தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பதற்கு உதவி செய்தல் முதலான எல்லாப் பணிகளிலும் இம்மாவட்டம் சாதனை படைத்துள்ளது.

1989-90 நிதியாண்டில், புதிதாகத் துவங்கப்போகும் 4,143 தொழில் நிறுவனங்களுக்குத் தற்காலிக சிறுதொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதிபெற்றுத் தொழில் தொடங்க அனைத்து உதவிகளும் செய்யப்பட்டுள்ளன.

கிராமியக் கடன் திட்டத்தின் கீழ் 1989-90-இல் 10 நபர்களுக்கு விதைப் பணம் கட்டுவதற்கு ரூ.2.42 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. கச்சாப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு இந்த நிதியாண்டில் 55-நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் உள்ள மூலப்பொருட்கள் பெற 186 மனுக்கள் பரிசீலித்துப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 31.3.90 வரையில் 11,135 சிறுதொழில்கள் தொடங்க, நிரந்தர சிறுதொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் மட்டும் 1,327 நிரந்தர சிறு தொழில்கள் தொடங்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

1989-90-இல் 25-தொழிலகங்களுக்கு வட்டியில்லாத விற்பனை வரிக்கடனாக ரூ.40.52 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் பின்தங்கிய வட்டங்களாகிய பொன்னேரி, திருத்தணி, பள்ளிப்பட்டு, காஞ்சிபுரம், ஊத்துக்கோட்டை, உத்திரமேரூர், செய்யூர் மற்றும் மதுராந்தகம் ஆகிய வட்டங்களில் தொடங்கப்படும் சிறுதொழில் நிறுவனங்களுக்குப் பதினைந்து விழுக்காடு அல்லது ரூ.15 இலட்சத்திற்கு மேற்படாமலும் மாநில அரசு முதலீட்டு மானியம் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில் 58 தொழிலகங்களுக்கு ரூ.18.34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க, 13-தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2.50 இலட்சம் மின்சார மானியமாக இந்த நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ. தரச் சான்றிதழ் வழங்கிய நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு மானியமாக 13-நிறுவனங்களுக்கு ரூ.31,800 வழங்கப்பட்டுள்ளது.

நலிந்த தொழிற்சாலைகளுக்கு உதவி செய்தல் என்ற திட்டத்தின்கீழ், 6-நிறுவனங்களுக்கு ரூ.1.90 இலட்சம் கடன் உதவி அளிக்கப்பட்டு அந்த நிறுவனங்களுக்குப் புனர் வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

படித்த வேலையில்லா இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கோடு, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவியுடன் இந்த நிதியாண்டில் 1,072 படித்த இளைஞர்களுக்கு வங்கியின் மூலம் கடன் அனுமதி வழங்கப்பட்டு 31.3.90 வரையில் 605 நபர்களுக்கு ரூ.123.15 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 467 இளைஞர்களுக்கு 1990-91-ஆம் ஆண்டில் கடன் தொகை வழங்கப்படவுள்ளது.

மேலும், சிறுதொழில் துவங்க முனைவோர்களுக்குக் கிராமப்புறங்களில் கூட்டுறவு முறையில் சங்கங்கள் அமைக்கவும், தொழில் நடத்த அனைத்து உதவிகளும் வழங்கப்படுகின்றன. தொழில் வளர்ச்சிக்கு வழி எங்கெல்லாம் இருக்கின்றதோ அங்கெல்லாம் தொழில் கடன்களை சிட்கோ மூலம் வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வழங்கப்படுகின்றன.

செங்கை-அண்ணா மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம், வங்கிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் ஆகியவற்றின் மூலம் 1989-90ஆம் ஆண்டில் 1883 கிராமக் கைவினைஞர்களுக்கு ரூ.95.82 இலட்சமும், 2001-குடிசைத் தொழில் புரிவோர்களுக்கு ரூ.136.07 இலட்சமும், 3,319 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.3,608.65 இலட்சமும், 106 நிறுவனங்களுக்கு மாவட்டத் தொழில் மையம் கடன், நிதியுதவி மான்யமாக ரூ.63.78 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.3,904.32 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு தொழில்கள் வளர பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுதொழில் நிறுவனங்களின் மூலமாகவும், குடிசைத் தொழில் கைவினைத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் 1989-90 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புப் பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 14,423 பேர் என்பது குறிப்பிடத் தக்கது.

**திரு. பா. நாராயணமூர்த்தி**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்,**
**செங்கை-அண்ணா மாவட்டம்.**

# Hotel Rajam

NAGERCOIL
(The First Three Star Standard Hotel in Kanyakumari Dt.,)

Centrally located, the Hotel is a real boon to Tourists & Businessmen visiting this part of the Country.



**FACILITIES**

* 32 Well-furnished A/C & Non A/C Rooms
* Exclusive Luxury Suites
* Telephone, Shower, Hot & Cold Water, Channel Music & Colour TV in Rooms.
* Posh Air-conditioned Restaurant
* Cosy AC Permit Room
* Colourful TV Lounge
* Large Conference Hall (To seat 1000) for Weddings, Functions & Conferences
* Mini Conference Hall (To seat 250)
* Roof Garden for pleasant Evening Functions.
* Telex facility
* Travel Counter to arrange Sight seeing Tours etc.,
* Shops displaying Tourists' requisites
* Express Laundry Service
* Exclusive Car-parking area.
* And many more facilities that a Three Star Hotel can ever dream of offering.

**WE ARE CLOSE TO**

**KANYAKUMARI** (Land's End) Just 20 mts. drive.
**SUCHINDRAM** (The famous Temple Town) Just 10mts. drive.
**VATTAKKOTTAI** (The exotic Sea-side Fort)
**PADMANABHAPURAM** (The magnificent Palace Complex of ancient Rulers)
**TRIVANDRUM** (The enchanting City of Kerala Culture & Art)
**KOVALAM BEACH** (The Beach Resort par excellence)
And many more places of immense Tourists' interests.

MEMBER - ASHOK RESERVATION SYSTEM(I.T.D.C.)

**Come – Visit Nagercoil – Stay at Rajam – Go sight seeing, and take back the most pleasant memories of a life time.**

MODERATE TARIFF – COMFORTABLE STAY – DELICIOUS FOOD – COURTEOUS SERVICE
Hotel Rajam, M.S. Road, Vadasery, Nagercoil – 629 001.
Tel. 4581 (10.lines) Grams : 'RAJSTAR' Telex : 436-204-Rajm-IN

Chart


பாவேந்தர் நூற்றாண்டு:

# பாரதிதாசனின் பண்புகள்




**பு**துவை, மாதா கோயில் தெருவில் பன்னிரண்டு ரூபாய் வாடகையில் சிறு வீடு; தெரு நடையில் அறையொன்று; அதன் கதவிலும், உள் சுவரிலும் பல இடங்களில் - பற்பல கோணங்களில் - எழுதப்பட்டு, இல்லை - கிறுக்கப்பட்டிருக்கும் "ராஜவேல் அண்ணா" என்று.

அவ்அறைதான் என் அலுவலகம். வாத்தியார் எழுதும் கவிதைகளைப் பெயர்த்தெழுவது என் 'பிரதான' வேலை.

முதல் முறையாக என்னைப் பார்ப்பவர்களில் ஒரு சிலர், வாத்தியாரைக் கேட்டதுண்டு. "தம்பி, யார்... உங்க பிள்ளையா ?" என்று.

புன்சிரிப்புடன் பதில் சொல்வார், "இல்லை...... எனக்கு ரொம்ப வேண்டியவன்... இங்கதான் இருக்கிறான்... இதோ... பண்ணுருட்டி... சொந்தவூர்" என்று.

அறிமுகஞ் செய்கையில், பெயரைக் குறிப்பிட நேர்ந்தால் 'ராஜவேல்' என்பாரே தவிர, என்னையழைப்பது அப்படியல்ல. பெரும்பாலும், "இவனே" என்றுதான் கூப்பிடுவார்.

இது, 1936-ல் மட்டுமல்ல - இப்பொழுதும் அப்படித்தான்! 1952 பல பேர் மத்தியில் "இவனே" என்றால, "ஏன்?" என்பவன் நான்தான்.

"கவி காளமேகம்" படமெடுக்கப்பட்டது 1939ல், சென்னை அடையாற்றில் படப்பிடிப்பு. பெண்களில் பெரும் பாத்திரம் 'தாசி மோகனா'. இதையேற்று நடித்தவர் எஸ்.பி.எல். தனலட்சுமி. அவருக்குள்ள பல பாடல்களில் 'இராகமாலிகா'வும் ஒன்று. காதற்சுவையுள்ள எண்சீர்விருத்தம் அது. நம் புலவர் ஆக்கியது.

ஒத்திகைக்குப் பின்னொரு நாள், தனலட்சுமியின் முறையீடு கீழ் வருமாறு:- "அண்ணா... விருத்தம் சிறிது சிக்கலாயுள்ளது; பாடும் போது ......" புலவர், "எங்கே உன் பாடத்தைக் கொடு" என்று வாங்கி, ஒருமுறை அவ்விருத்தத்தைப் பார்வையிட்டார். அண்டையில் 'சாதிக்காய்ப் பெட்டிகள்' அடுக்கப்பட்டிருந்தன. நின்றபடியே, பெட்டி மேல் வைத்து எழுதினார். வினாடியில் பாடத்தைத் திருப்பித் தந்து, "வேறொன்று எழுதியிருக்கிறேன், இதையும் படித்துப்பார்!" என்று கூறிக்கொண்டே சென்றுவிட்டார்.

-நா. இராசவேல்.

இந்நிகழ்ச்சியைக் கண்டவர்கள் டி.என்.இராமன், பி.எஸ். செட்டியார் உட்பட அநேகர்.

பழைய விருத்தத்தின் கருத்து சிறிதும் மாறாது, எளிய நடையினும் எளிய நடையில், புதிய எண்சீர் விருத்தம்! அப்பொழுதே பாடப்பட்டது. பாடியவர் மகிழ்ந்தது விந்தையல்ல; புலவரின் புலமையைப் போற்றாதார் அங்கொருவர் இல்லை!

★ ★ ★

புலவர்க்குத் தமது துணைவியைக் காட்டிலும் - புதல்விகள் மூவரைக் காட்டிலும் - புதல்வன் 'கோபதி' (மன்னர் மன்னன்)யிடந்தான் மிகுந்த 'பாசம்'. 'ஒரே மகன்' என்ற காரணம் போலும்!

'காளமேகம்' படமெடுப்பின் போது, நாளொன்றில் நிகழ்ந்தது உதாரணத்திற்கொன்று:-



'ஈஸ்வர் பாக்' என்ற கட்டிடத்தின் முகப்பில் பெரியதோர் அறை. படஉற்பத்திக் காரியாலயம் அது. அதையொட்டியதோர் உள் அறை. அங்கிருந்து, 'இவனே' என்றொலி கேட்டு, அலுவலகக் கணக்கன் நான் விரைந்து அண்டினேன். ஒரு நிலையில் நிற்காமல், "தம்பியை... ஏண்டா இவனே... பாருடா அவனை..." என்றெல்லாம் கோவையின்றிக் கூறினார் கவிஞர். அவரது முகத்தில் வியர்வைத் துளிகள்; சொல்லில் சிறு தடுமாற்றம். நானும் குழம்பினேன்.

படுத்துள்ள தம்பியின் மார்பையும், நெற்றியையும் தொட்டுப் பார்த்துக் கொண்டே, 'தம்பிக்கொன்றுமில்லை; சிறு காய்ச்சல் தான்... இதோ வர்ரேன்" என்று சொல்லிக் கொண்டே உட்புறம் ஓடினேன்.

'அமிர்தாஞ்சனத்'துடன் திரும்பினேன்; தடவினேன். அடுத்து, காப்பியைக் கொண்டு வந்தேன்; அருந்த வைத்தேன்.

ஐந்து நிமிடங்களில் தம்பி, தன்னை எதிர்த்து வந்த இருமலைக் களைப்பால் தாங்கியவாறு எழுந்தமர்ந்தான், உடலெல்லாம் வியர்த்தது. அப்பொழுதுதான் புலவரின் முகம் மாறியது; சுருட்டொன்றும் வாயினில் ஏறியது!

★ ★ ★

தமது மனைவி, மக்களிடத்தில் என்பதல்ல; பொதுவில் எவரிடத்தும் உள்ளன்புடையவர், கவிஞர். அதிலும், எளியவர்களிடம் இரக்கமுடையவர்; பேரன்புடையவர்.

ஆசிரியராக இருந்தவரை, வெளியூர் சென்றால் ஓரிரு நாட்களிலேயே திரும்ப வேண்டியவர். வினாடியும் வீணாக்காது, நண்பர்கள் பலரையும் ஒரே நாளில் காண்பார். 'தம்மைப் பிறர் வந்து காண வேண்டும்' என்ற 'தலைவர் மனப்பான்மை' அவரிடம் காண்பதரிது. உதாரணத்திற்கொன்று—

சென்னைக் கொருசமயம் வந்திருந்தபோது, பல்லாவரம் புறப்பட்டோம். 'ரயிலடி'யை விட்டு நடந்தோம். ஏறத்தாழ இரண்டு மைலுக்கு மேலும் சென்ற பிறகு - இடையில் ஒரு சிலர் வழி காட்டி விவரம் கூறிய பிறகு - ஒற்றையடிப் பாதையோரம் ஒதுங்கிய 'கூரை வீடு' ஒன்றைக் கண்டோம். காண வேண்டிய தமது முன்னால் மாணவரையும் கண்டார், ஆசிரியர். பயணத் தொல்லையையும் மறந்தார். நலங்கேட்டு உரையாடினார். சிறு தொகையை வைத்துக்கொள் என்று உதவித் திரும்பினார். வழியெல்லாம் அம்மாணவர் பற்றி, அவரது குடும்பத்தைப் பற்றிக் கூறிவந்தார்; கேட்டுவந்தேன்.

மேலும், எளியவர்க் கிரங்கும் இயல்பினுக்கொன்று-

ஊரில், வீட்டுக் குறட்டின் படிக்கட்டில் 'கைலி' உடையுடன், சுருட்டுப் புகையுடன் அமர்ந்திருப்பார். தெருவே செல்லும் ஒருவர் - வாத்தியார் வீட்டையும் கடந்து சென்றவர் - திடீரெனத் திரும்புவார்.

வாத்தியார் எதிரில், தூண் ஒன்றின் துணையில் நின்று, தலையைச் சொரிந்து கொண்டே சொல்லுவார், "ஒரு பத்து ரூபா வேணும்.. நாலாந்தேதி சம்பளம் வாங்கியதும்..." என்று

தரையை அல்லது தெரு வெளியை உற்றுப் பார்த்து புகையை ஒரு முறை விட்டுக் கேட்பார் வாத்தியார், "பத்து ரூபாயா?" என்று.

"ஆமாம்" என்பார் வந்தவர்.

"ஊஉம்" என்ற மூச்சுடன் கூறுவார் கவிஞர், "பழநியம்மா... அவன் கிட்டே ஒரு பத்து ரூபா கொடுத்தனுப்பு" என்று.

பின் நிற்கும் நான், அம்மா (கவிஞரின் துணைவியார்) விடம் செல்வேன். அம்மா மெதுவாக என்னிடம், "எதற்கு?" என்பார்கள்.

நான் ; "எவருக்கோ கொடுப்பதற்கு !"

தேதி அநேகமாக 28, 29 ஆக இருக்கும். நாட்டில் எங்கும் "பொது நெருக்கடி" உலவும் பருவம். வாத்தியார், தமது சம்பளத் தொகையை 'அம்மா'விடம் தந்தது போல் தந்து, உடனுக்குடன் ஐந்து, பத்தாக வாங்கித் தீர்த்துவிட்ட பத்து நாட்களுக்குப்பிறகு, அம்மா என் செய்வது? என்ன சொல்வது?

யாருக்கோ, எதற்கோ, எந்தக் கடன் தீர்க்கவோ, பதுக்கி அல்லது சேமித்து வைத்திருந்த தொகையையோ, எதையோ எப்படியோ தந்தாக வேண்டும். தருவார்கள். 'நிலைமை' முழுதும் அறிந்துள்ள 'இரண்டாங்கெட்டான்' நானும் வாங்கி வருவேன். வந்தவரும் வாங்கிச் செல்வார்!

திடீரெனக் கேட்பவர்க்குத் தடையின்றித் தருவது மட்டுமல்ல; கேட்பதும் அவ்வாறே!

"சென்னைக்குப் போகவேண்டும், பணம் இருக்கா?" புலவரின் பொது அறிக்கை இது; அதுவும் மாலை ஆறு மணிக்கு மேல்.

மெய்யாகவே கையில் இல்லாதிருந்தால் "இல்லை" என்பார்கள் அம்மா.

"சுத்தமா, கொஞ்சங்கூட இல்லையா?" என்பார் மறுபடியும்.

"செம்பாலடித்த காசு...?" என்ற பதில் நகைச் சுவையோடு.

"பாபபா.. தம்பி... உங்க கிட்டக் கூடவா?" என்ற வேண்டுகோள், அடுத்தபடி!

"எங்க கிட்டே ஏதாம்?"

"நம்மையே கேக்கிறாரப்பா இவரு!" என்றெல்லாம் மறுமொழிகள் படர்க்கையில்.



அம்மாவுக்குச் சிரிப்பு; வாத்தியாருக்குந்தான். ஆனால் சுருட்டுப் புகையால் மறைத்துக் கொள்வார்.

"சரி!...எனக்கென்ன?... என்னென்னவோ கேட்டீங்களே.... அதெல்லாம் மெட்ராசிலே..." என்று புலவரின் முறையீடு புரட்சியாக மாறும்.

"உ... ஊம்.... அப்படியின்னா சரி..." என்று சொல்லிக் குதித்தோடுவர் மக்கள். சேர்த்து வைத்தது மறைத்து வைத்தது எல்லாவற்றையும் 'சல்லி' விடாது கொண்டுவந்து ஒப்படைப்பர். அதோடு, தத்தம் தேவைகளைக் குறித்து 'ஜாபிதா'வும் தருவர்.

தேவையை மதிப்பிட்டால் பத்துப் பதினைந்து ரூபாய்க்கு மேலிருக்கும். தொகையை எண்ணினால் நாலைந்துக்குள்ளிருக்கும். மொத்தத்தில் பயணத்திற்கும் போதாது பணம்; என் செய்வார் புலவர்?

சிறிது நேரம் அமைதியாக உலவுவார். திடீரென 'மேஜை'யண்டை வந்து நின்றபடியே சீட்டொன்று எழுதுவார். 'இவனே' என்றென்னிடம் தந்து 'வாங்கி வா' என்பார்.

சிறிதும் தாமதியேன்; தயங்கேன். விரைந்து செல்வேன். வெளியில் வந்தபிறகே சிட்டின் 'தகவல்' உணர்வேன். வேறொன்றுமில்லை - நண்பர் ஒருவருக்கு எழுதியிருப்பார் 'கடன்' கேட்டு! குறித்த நபரும் தவறாது தருவார். சென்னைப் பயணமும் தொடங்கி நிகழும்.

ஆனால்,கடன் தந்த 'பத்தை'யும் கைச்சீட்டு மூலம் கடன் வாங்கிய 'இருபத்தைந்தையும், என் போன்று அடுத்துள்ளவர் தாம் நினைவுபடுத்த வேண்டும். அவ்வளவு மறதி அவருக்கு!

ஒரு சில சமயங்களில், தம்மிடம் பணம் இருப்பதாகவே எண்ணிக் கொண்டு பயணப்பட்டு விடுவார்; 'பஸ், ட்ராம்' முதலானவற்றிலும் அமர்ந்துவிடுவார். நடுப்பாதையில், உடன் செல்வர் தாம் குறிப்பறிந்து 'குட்டை' மறைக்கவேண்டும்!

நம் புலவர், வெறும் புலமை மட்டும் நிறைந்து, ஏட்டோடு, எழுத்தோடு நில்லாதவர்; செயலாற்ற வல்லவருங்கூட.கொடுமையைக் காண மறுப்பவர் மட்டுமல்ல; கண்டபோதே கண்டிப்பவர் அவர். எப்படி?

தொடக்கத்தில் குறிப்பிட்ட வாத்தியார் 'வாடகை' வீட்டின் மாடியில் எனக்குப் படுக்கை. நள்ளிரவு.

திடீரென, "பளார், பளார்!" என்ற முழக்கம் என்னை எழுப்பியது. விழித்தெழுந்து, துடித்து நின்று வெளியில் நோக்கினேன். நடுத்தெருவில் இருவர் மத்தியில் வாத்தியார் நிற்கிறார். விரைந்தோடி வந்தேன். அதற்குள், இருவரில் ஒருவரை மேலும் அறைகிறார். அண்டினேன். என்னைப்போலவே விழித்துக்கொண்ட அக்கம் பக்கத்தோர் கூடினர். "என்னங்க, வாத்தியார்?" என்றனர்.

"திருட்டு ராஸ்கல் இவன்! நான் பார்த்துக்கொண்டேதான் இருந்தேன். இவன் மெதுவாக வந்தான்; படுப்பதற்கு இடம் பார்ப்பது போல் நடித்தான்; இவரது பக்கம் படுத்தான்; நானும் கவனித்தேன். மிகவும் நெருங்கி, மெள்ள அவரது வேட்டி முனையின் 'முடிச்சி'யை அவிழ்த்தான்; இவரும் விழித்தார். ஓடியவனை நானும் பிடித்துக் கொண்டேன்!... ஏண்டா? என்ன சொல்றே" என்று இறுதியில் ஓர் அறை தருவதற்குள், கள்வன் கைகூப்பி மன்னிப்புக் கோரினான். வாத்தியார் அவனை விட்டாலும்,கூடியவர் விடவில்லை; கைப்பற்றிக் கொண்டனர்.

இதுமட்டுமல்ல- எதிர்பாராது சட்டத்திற்கு மீறிய துணிவு கொள்வார் புலவர்.

கவிகாளமேகம் கதை, வசனம், பாடல் மூன்றையும் ஆக்கித் தந்தவர் கவிஞர்தாம். பி.எஸ். செட்டியார், நம் புலவரிடத்தில் பற்றுடையவர். இத்தொடர்பில் பாடுபட்டுழைத்தவர். எனவே இவரது விருப்பப்படி, "வசனம், பாடல் - பாரதிதாசன்" என்றும்,"கதை - பி.எஸ். செட்டியார்" என்றும் விளம்பரப்படுத்திக்கொள்ள இசைந்தார் புலவர். ஆனால், நாளடைவில் "கதை, வசனம் - பி.எஸ். செட்டியார்" என்று வரத் தொடங்கியது விளம்பரம். ஓரிரு முறைகள் செட்டியாருக்குப் புலவர் எச்சரிக்கையும் செய்தார். பிழை திருந்தவில்லை. தொடர்ந்தும், அப்படியே வந்தது. புலவர் புரட்சிக் கவிஞராயிற்றே! அலுவலகத்தில் அமர்ந்தபடி செட்டியாரை அழைத்தார்; அவரை எதிர் நிறுத்தி,

"என்ன பி.எஸ்.செட்டி! உனக்குப் பலமுறை சொல்லிவிட்டேன். தொடர்ந்து அப்படியே வருகிறது. இப்போ சொல்றேன்... என் தகவலில் ஜாக்கிரதையாக நடந்துகொள். ஏன் தெரியுமா? - நான் புதுச்சேரிப் பேர்வழி - சுட்டுடுவேன்!" என்று விளாசினார்.

பிறர் அஞ்சத்தக்க தோற்றம், பீடு நடை, நிமிர்ந்த நோக்கு, கண்டிப்பான பேச்சு - இவையனைத்தும் புலவர் தம் பிறப்புரிமை. பற்றாக் குறைக்கு மீசையும் அலாதி! இந்நிலையில் வாத்தியாரின் சுட்டு விரலையே "துப்பாக்கி" என்று கருதினார் போலும் செட்டியார்!

வாத்தியார் மிக விரைவில் உண்டு எழுவார். குளிப்பது, உடுப்பது, உண்பது முதலான அனைத்திலும் சுறுசுறுப்புள்ளவர்.

விருந்தினரை வரவேற்பதில் வாத்தியார் குடும்பமே சளைப்பதில்லை. பெரும்பாலும் விருந்தின்றிப் புசிப்பதில்லை. புலவருக்குப் புலால் உணவில்தான் பற்றுதல், காய், கறிகளைக் காட்டிலும்! உள்ளன்போடு எவரையும் வரவேற்பார். போலி உபசரிப்பை என்றும் மேற்கொள்ளார். அவரது அகமும், புறமும் ஒன்றுதான்!

இரவில் நெடுநேரம் எழுத்தில் அல்லது பேச்சில் ஈடுபட்டிருந்தாலும், விடியற்காலையே விழித்தெழுவார். இரவு கண் விழித்த நேரத்தைக் கணக்கிட்டுப் பிற்பகல் வரையிலும் தூங்கும் வழக்கம் அவருக்கில்லை!

உறக்கத்தில் சிறிது ஒலித்தாலும் விழித்துக் கொள்வார். அது மட்டுமல்ல, ஒவ்வோர் சமயம் சிணுங்



கொள்வார். பகல உணவுக்குப் பின் சிறிது நேரம் உறங்குவதும் உண்டு.

ஒருநாள், வீட்டில் வளரும் கோழி, தன் கால்களில் கட்டிய கயிறு சிக்கியதால் குதித்ததோடில்லை; கூவியும் விட்டது. அம்மா அதைச் சரிப்படுத்த முயல்கையில் மேலும் கூவியது. வாத்தியார் விழித்துக் கொண்டதோடில்லை; எழுந்தோடி அம்மாவை 'அறைந்து'ம் விட்டார். அம்மா வாய் பேசாது நடுங்கிப் போனார்கள். நாங்கள் கதிகலங்கிப் போனோம்! எப்போதேனும் வாத்தியார் இப்படித்தான்!

சிறிதேனும் அறிமுகமில்லாத ஒருவரை, எவ்வகை விசாரணையுமின்றி முதல் நாளே முழுதாக நம்புவார். பல்லாண்டு பழகிய என் போன்றவன் மீதும், பிறர் சொல்வதை நம்பித் திடீரென ஐயுறுவார். அடுத்த நாளே அல்லது மிக விரைவிலேயே ஆராய்ந்து உண்மையைத் தெரிவார். உரியவரிடம், "நான் நினைத்தது தவறுதான்" என்றுரைத்து வருந்துவார். பொய்யனை உடனே விலக்குவார்.

'முகத்துக்காக' என்று எதையும் செய்யார். 'சரி'யெனத் தோன்றுவதைத்தான் செய்வார்; சொல்வார்.

அண்மையில், ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் பதவியில் இருக்கையில், திருச்சி வானொலி நிலையத்தில், ரெட்டியார் தலைமையில் கலை நிகழ்ச்சி ஒன்று! அதில் நம் புலவர்க்கும் பங்குண்டு.

ஆனால், அதே நாளில், தில்லையில் 'ஊழியர்' ஒருவரின் திருமணத்தை நடத்தித் தரவே இசைந்தார்.

ரெட்டியார் அவர்களை மதிப்பவர் கவிஞர். என்றாலும், வானொலி மூலம் அன்றைய சேவையைவிடத் திருமண நிகழ்வே பெரிதெனக் கொண்டார்!

கவிஞர் நல்ல ரசிகர். இசை, நாடகம், நடனம், சிற்பம், ஓவியம் முதலான கலைகள் அனைத்திலும் பற்றுதல் உடையவர்; இளைஞர்களிடத்தே மதிப்புடையவர். கலைகளை ஆராய்வதில் கருத்து வேற்றுமை-கட்சி வேற்றுமை துளியும் இல்லாதவர். மாற்றாராயினும் அவர்தம் மாண்பினை, புலமையைப் பாராட்டும் பண்பினர்.

இப்படிப் பற்பல நண்பர்கள் அமையப் பெற்ற வாத்தியார், பாரதிதாசன் காசருமை தெரியாதவர். 'புலமை' ஒன்றுதான் அவரது சொத்து; அவருக்கமைந்த துணிவும், நேர்மையும் அச்சொத்தினைப் பாதுகாக்கும் அரண்கள்!

இனியும், இந்நாட்டுக்குத் தேவையாகும் அவரது கவிதைகள், வெள்ளப் பெருக்கெனப் பாய்ந்திடக் கோருவோமாக!

*(பொன்னி-1951 பாவேந்தர் மலர்)*


வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த

நல்வாழ்த்துக்கள்

**மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்,**
**மேலூர் - 625 106. மதுரை மாவட்டம்.**

தந்தி: "மெல்நூல்"

தொலைபேசி: அலுவலகம்: 242 மேலூர்
தனி அலுவலர்: 241 மேலூர்
தனி அலுவலர்: 43584 மதுரை
(இருப்பிடம்)

**தயாராகும் தரமான நூல் ரகங்கள்**

20 நெ. முதல் 60 நெ. வரை சிட்டம், முறுக்கு மற்றும் கோன் நூல்கள்

நவீனப்படுத்தப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு திறமைமிக்க தொழிலாளர்களின்முழு ஒத்துழைப்புடன் தரமான நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

தங்களின் நூல் தேவைகளுக்கு எங்களை அணுகவும்.

எஸ்.எஸ். ஜவஹர் பாபு, எம்.ஏ.,
மாவட்ட வருவாய் அலுவலர்/
தனி அலுவலர்




# பார்த்தோம் படித்தோம்

முதல்வர் கலைஞர் அறிவித்த அடுக்கடுக்கான சலுகைகள்- தொகுப்பு என் போன்ற மாணவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன.

—கு. இளங்கோ
குமுக்கோட்டை
(இராமநாதபுரம் மாவட்டம்)

---

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவினை ஒட்டிய கவிதை என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. கவிஞர் சாமி. பழனியப்பன் அவர்களுக்குப் பாராட்டு.

—ப.அ. சண்முகம்
களம்பூர்
(திருவண்ணாமலை
சம்புவராயர் மாவட்டம்)

---

**16.5.90** இதழில் மாணவர் பக்கத்தில் வெளிவந்த அறிவுரை நன்றாக இருந்தது.

—மு. வேதபுரி,
கோட்டுப்பாக்கம்
(திருவண்ணாமலை
சம்புவராயர் மாவட்டம்)

---

'அம்பேத்கார் அந்தாதி' என்னும் தலைப்பில் கவியரசு இளந்தேவன் எழுதிய கவிதை தேனாய் இனித்தது.

—எம். சேகர்,
தோட்ட நாவல்
(செங்கை-அண்ணா மாவட்டம்)

---

வளரும் வேளாண்மைப் பகுதியில், தானியங்களைப் பாதுகாக்கும் முறை பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

—அஞ்சாலை
கத்திரிசேரி
(செங்கை-அண்ணா மாவட்டம்)

---

'தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றிச் சின்னம்'— மே தின நினைவுத் தூண் கட்டுரை பயன்படும்படியாக இருந்தது.

—ஏ. கந்த சுவாமி
திருப்பூர்
(கோயம்புத்தூர் மாவட்டம்)

## மேடைப் பேச்சுக்குப் பயன்படும் 'தமிழரசு'

"தமிழரசு தமிழ், ஆங்கில இதழ்கள் மிக நன்றாக இருக்கின்றன.

"தமிழக அரசு நலத்திட்டங்கள், விழாக்கள், முதல்வர் உரைகள், திட்டப் பணிகள், புள்ளி விவரங்கள் முதலியவை நன்றாகவும் தெளிவாகவும், மேடைப் பேச்சுக்குப் பயன்படும் வகையிலும் வெளிவருவது குறித்து தங்களுக்கும் தங்கள் குழுவினருக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஆங்கில இதழும் வெளி மாநில அரசுகளும், மக்களும் தமிழக அரசின் செயல்திட்டங்களைப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக உள்ளது. மேலும் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா இதழ் மிக நன்றாக இருந்தது.

"எனக்கே பல விவரங்கள், தங்கள் இதழ் பார்த்த பிறகுதான் தெரிய வந்தன.

"தங்களுக்கு மீண்டும் என் பாராட்டுக்கள்."

—ஈ.ஆர். கிருஷ்ணன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
தலைவர்:
சேலம் தமிழ்ச் சங்கம்

---

பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் கட்டுரை மூலம் அரசின் ஆக்கப் பணிகளை அறிய முடிந்தது.

எம்.எஸ். வேலுமணி
கா. மேட்டுப்பாளையம்,
(பெரியார் மரவட்டம்)

---

'இதய நோயைத் தவிர்ப்போம்' கட்டுரை இதயத்தைத் தொட்டது.

—க. கவிதா,
வளவனூர்
(தென் ஆர்க்காடு மாவட்டம்)

---

வேளாண்மைப் பகுதியில், தானியங்களைப் பாதுகாக்கும் முறை பற்றிய கட்டுரையும், இதய நோயைத் தவிர்ப்போம் கட்டுரையும் சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது.

—வி. வீரராகவன்
(உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர்)
கண்ணபிரான்புரம்
(செங்கை-அண்ணா மாவட்டம்)

---

இதய நோய் பற்றிய கட்டுரை, வருமுன் காத்திட உதவுகிறது.

-ஜெ. கண்ணன்
உ. மேரூர்
(திருச்சிரஏப்பள்ளி மாவட்டம்)

---

பாவேந்தர் நூற்றாண்டுத் தொடக்க விழா பற்றிய தமிழ்ப்பித்தனாரின் தொகுப்பு 1.5.90 இதழில் கண்டேன். அருமை. பெற்றோர் ஆசிரியர் கழக வெள்ளி விழாக் காட்சிக் கோலமும், கட்டுரையும் நன்றாக இருந்தது.

—ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி
(கோவை மாவட்டம்)

---

## பாவேந்தர் நூற்றாண்டு:



கருத்தூற்று மலையூற்றாய்ப்
பெருக்கெடுக்க வேண்டும்;
கண்டதைமேற் கொண்டெழுதிக்
கட்டுரையாக் குங்கால்
தெருத்தூற்றும் ஊர்தூற்றும்;
தம்முளமே தம்மேல்
சிரிப்பள்ளித் தூற்றும்;நலம்
செந்தமிழ்க்கும் என்னாம்?

# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

## எளியவர் வாழ்வு ஏற்றம் பெற எமது ஆக்கப் பணிகளில் சில துளிகள்

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் - 1990-91

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட நிதி | ரூ. 248.335 லட்சம் |
| பயன்பெறுவோர் | 7894 பயனாளிகள் |
| கிராமப்புற இளைஞர் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி பெறுவோர் | 665 இளைஞர்கள் |

**சிறப்பு அம்சம்**

| | |
|---|---|
| 1) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினர் | 50 சதவீதம் ஒதுக்கீடு |
| 2) பெண்களுக்கும், பெண்களைத் தலைவியாகக் கொண்ட குடும்பத்தினருக்கும் | 40 சதவீதம் ஒதுக்கீடு |

### ஜவகர் வேலைவாய்ப்புத்திட்டம் - 1990-91

| | | | |
|---|---|---|---|
| மொத்த நிதி ஒதுக்கீடு | ரூ. | 451.32 | லட்சம் |
| ஆதி திராவிடர்களுக்குத்தொகுப்பு வீடுகள் | | 1700 | |
| தார்ச்சாலை போடுதல் | | 70 | கி.மீ. |
| மெட்டல் சாலைகள் | | 37 | கி.மீ. |
| பள்ளிக்கூடங்களுக்கு கட்டடங்கள் | | 15 | |
| ஊராட்சி மன்றங்களுக்கு கட்டடங்கள் | | 40 | |
| சமூக நலக்காடுகளுக்கு | ரூ. | 20.07 | லட்சம் |
| ஊராட்சிகள் மூலம் செய்யப்படும் பணிகள் | ரூ. | 78.04 | லட்சம் |
| மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் | ரூ. | 22.40 | லட்சம் |

**திரு. ஆர். புஹாரில், இ.ஆ.ப.**
கூடுதல் ஆட்சித்தலைவர் (வளர்ச்சி)
மற்றும் திட்ட அலுவலர்.
மா.ஊ.வ.நி., திருநெல்வேலி

**திரு. எஸ். இராசரெத்தினம், இ.ஆ.ப.**
பெருந்தலைவர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
மா.ஊ.வ.நி., திருநெல்வேலி




## மாணவர் பக்கம்

### டோக்கியோ

உலகத்தின் மிகப்பெரிய நகரங்களில் டோக்கியோவும் ஒன்று. ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவில் 74,621 உணவு விடுதிகள் உள்ளன. இவை தவிர, 2,800 சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன.

டோக்கியோவில் 37 இலட்சம் மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. டோக்கியோவில் மட்டும் சுமார் ஒரு இலட்சம் டாக்ஸி ஓட்டுபவர்கள் உள்ளனர். 24மணி நேரமும் டாக்ஸிகள் இங்குக் கிடைக்கும். இவை தவிர 50,000 பதிவு செய்யப்பட்ட கார்கள் உள்ளன. மேலும் 40,000 கார்கள் ஜப்பானின் மற்ற நகரங்களில் ஓடுகின்றன.

டோக்கியோவின் மக்கள் தொகை 260 இலட்சம் ஆகும். இதில் 120 இலட்சம் பேர் 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்றாலும் டோக்கியோ ஓர் இளைஞர்களின் நகரமாகவே காட்சி தருகிறது. இங்குள்ளவர்களின் சராசரி வயது முப்பத்தாறு ஆகும்!

உலகத்தின் மிகப்பெரிய சில்லறை நாள அங்காடிகள் (மார்க்கெட்டுகள்) இங்குள்ளன.

240 திரையரங்குகள் உள்ள இந்த நகரத்தில் 184 கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் உள்ளன. உலகத்தின் மிகப்பெரிய கட்டடங்கள் சில இங்கே உள்ளன. உலகத்தின் மிகப் பணக்கார நாடு ஜப்பான்!

### சிங்கப்பூர்

சிங்கப்பூரின் மக்கள் தொகை சுமார் 25 இலட்சம் ஆகும். பரப்பளவு 620 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

சிங்கப்பூரில் வெளிநாட்டுப் பயணிகளுக்காக மட்டும் 51 உணவு விடுதிகள் இருந்தன. அவைகளில் 16,440 அறைகள் உள்ளன. இவைதவிர 141 பதிவு செய்யப்பட்ட உணவு விடுதிகளும் இருந்தன. அவற்றில் 300-க்கு மேற்பட்ட அறைகள் உள்ள உணவு விடுதிகள் 27 ஆகும். 100 முதல் 300 வரை அறைகள் உள்ள உணவு விடுதிகள் 19 ஆகும்.

சிங்கப்பூரின் தேசியப் பல்கலைக் கழகத்தில் 6 மில்லியன் டாலரில் கம்ப்யூட்டர்கள் உள்ளன. அந்தப் பல்கலைக்கழக நூல்நிலையத்தில் 12 இலட்சம் நூல்களும், 9,400 மாத, வார, பருவ இதழ்களும் உள்ளன. 'தமிழ் முரசு' என்ற தமிழ் தினசரியும் வெளிவருகிறது.

உலகத்தின் மிகவும் சுத்தமான சுகாதாரமான நகரங்களில் சிங்கப்பூரும் ஒன்று!

—தகவல்: நா. ஜகந்நாதன்




எதையும் நன்றாய்த் தெரிந்துகொள்;
இயல்பாய் வாழப் புரிந்துகொள்;
விதைக்கும் விதையே கனியாகும்
விளையும் பயிரே மரமாகும்!

அதையும் இதையும் எண்ணாமல்
அறிவால் நன்மை சேர்த்திடுவாய்
புதிதாம் சிந்தனை பரப்பிடுவாய்
புன்னகை வாழ்வில் நிறைத்திடுவாய்!

அறிவியல், கணிதப் பாடங்கள்,
ஆழ்ந்தே கற்றுத் தேர்ந்திட்டால்,
பொறியியல் வல்லுநர் ஆகிடலாம்;
புதுப்புதுப் தொழிலை வளர்த்திடலாம்!

பொருளியல் கற்றுத் தேர்ந்திட்டால்
பொருளியல் நிபுணர் ஆகிடலாம்;
பொருளா தார வளர்ச்சிக்காய்
புதுப்புதுத் திட்டம் தீட்டிடலாம்!

சட்டக் கல்வி தேர்ந்தெடுத்தால்,
சமமாய் நீதி வழங்கிடலாம்;
பட்ட துன்பம் போக்கிடலாம்;
பலரும் போற்ற வாழ்ந்திடலாம்!





# வேலூர் அரசு அருங்காட்சியகம்

**வே. ஜெயராஜ்**

காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், வேலூர்.

அருங்காட்சியகம் இன்று கல்வி புகட்டும் கல்விக் களஞ்சியமாகச்செயல்பட்டு வருகிறது. ஒரு நாட்டின் ஒவ்வொரு பகுதியும் அதற்கே உரித்தான சுற்றுப்புறச் சூழல், பண்பாடு, கலை போன்ற தெளிவான சிறந்த பண்புகளைக் கொண்டுள்ளது. இவற்றை, தொடர்புடைய அரும்பொருட்கள், மற்றும் மாதிரிகள் வழி எடுத்தியம்பும் இடமே அருங்காட்சியகமாகும்.

மாவட்டங்கள்தோறும் அருங்காட்சியகங்கள் என்ற முனைப்பில் தமிழ்நாடு அரசு மாவட்டத் தலைமையிடங்களில் அந்தந்த மாவட்ட கலை, பண்பாடு, வரலாறு, சிறப்புக் கூறுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட பொருட்களைச் சேகரித்து பாதுகாத்து அருங்காட்சியகங்களைத் தொடங்கி வருகிறது. இதன் அடிப்படையில் இது ஐந்தாவதாகும்.

வேலூர் நகரத்தின் மையப்பகுதியிலுள்ள வேலூர் நகராட்சி, தியாகி சனாப் வி.எம். உபயதுல்லா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) பேருந்து நிலையத்தை ஒட்டி அமைந்துள்ளது இந்த அருங்காட்சியகம். 1906-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது இந்த அருங்காட்சியகம். 6.9.1985 முதல் பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்டு, இயங்கி வருகிறது.

இவ்வருங்காட்சியகம் பல நோக்கு அருங்காட்சியகமாகும். இது ஏழு கூடங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகம் அமைந்துள்ள கட்டிடமே தனது பண்டைய சாயலால் வருவோரை வரவேற்கிறது. அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள



மர, கல் சிற்பங்கள்

சிற்பத் தோட்டத்தில் கல்சிற்பங்கள், கல்வெட்டுக்கள், பீரங்கிகள் ஆகியவை குறிப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

அருங்காட்சியகத்தின் நுழைவாயிலை ஒட்டி வடஆர்க்காடு (இன்றைய வட ஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்கள்) மாவட்டக் கூடம் அமைந்துள்ளது. ஒளியூட்டப் பெற்ற மாவட்ட வரைபடம் ஒன்றும் சிறப்புமிக்க இடங்களின் நிழற்படங்களும் ஒளியூட்டப்பெற்ற படங்களும் இம்மாவட்டச் சிறப்பியல்புகளை விளக்குகின்றன.

இதனையடுத்து, சிற்பக்கூடம் அமைந்துள்ளது. தமிழகச் சிற்பிகளின் கைவண்ணத்தைப் பகரும் தட்சிணாமூர்த்தி, கிருட்டினன் போன்ற மரச்சிற்பங்கள் காட்சியில் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் படிமக்கலை உன்னத நிலையினை அடைந்துள்ளதை எடுத்துக்காட்டும் வண்ணம் சோழர்கால நடராசர், தேவி போன்ற பஞ்சலோகச் சிற்பங்களும், பிற்காலச் சிற்பங்களும் காட்சியில் அமைந்துள்ளன.

இந்தியாவில் பண்டைய காலம்தொட்டு, புழக்கத்தில் இருந்த அச்சுக்குத்திய (புரானா) காசுகள் முதல், இந்திய-ஆங்கிலேய நாணயங்கள் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பத்திரண்டு நாணயங்களின் உலோக வார்ப்பு மாதிரிகளும் அவற்றின் வரைபடங்களும், நிழற்படங்களும், தொடர்புடைய அரசர்களின் ஆட்சி எல்லைகளைக் குறிக்கும் வரைபடங்களும் இணைக்கப்பட்டு, இந்திய வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

அடுத்து, வடஆர்க்காடு அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களின் தொல்வரலாறு, மரபு இனநூல் ஆகியவை பற்றிய பொருட்கள், மாதிரிகள், நிழற்படங்கள் வழி கூறப்பட்டுள்ளன. இருபது அடி அகலமுள்ள காட்சிப் பெட்டியில் அமைந்துள்ள குன்றுகளின் இயற்கைப் பின்னணித் தோற்றத்தில் காணப்படும் இருளர்கள், மலையாளிகள் மற்றும் இலம்பாடிகளின் கருவிகள், இப்பிரிவின் மனம் கவர் பகுதி எனலாம். இம்மாவட்டத்தைச் சார்ந்த புரிசை என்னும் இடத்தில் சிறப்பாக்கப்பட்ட தெருக்கூத்துக் கலையின் அணிகலன்கள் அடுத்த காட்சிப் பெட்டியில் உள்ளன. காட்டு நாய்க்கன் இனத்தவர்கள் மணமக்களைச் சுமந்து செல்லப் பயன்படுத்திய பல்லக்கு, காட்சியில் இடம் பெற்றுள்ளது.

ஓவியக் கூடத்தில் பொதுவாக, தமிழ்நாட்டின் வளர்கலை வல்லுநர்கள், குறிப்பாக இம்மாவட்டங்களைச் சார்ந்த ஓவியர்கள் தீட்டியுள்ள ஓவியங்கள் கண்கவர் காட்சியாக உள்ளன.

இம்மாவட்டங்கள் பல கைவினைப் பொருட்களுக்குப் பெயர் பெற்றவை என்பதை இங்கு உருவாக்கப்படும் கூடைகள், கரிகிரி வழுவழுப்பான பாண்டங்கள், முடையூர் மாக்கல் சிற்பங்கள், வந்தவாசி கோரைப்பாய், ஆரணிப்பட்டு போன்றவற்றால் தெளிவாக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து வருவது இயற்கையியல் கூடமாகும். இக்கூடத்தில் தாவரவியல் பொருட்கள், பூச்சிகள், வண்டுகள், பறவைகள், ஊர்வன, சங்குகள், தொல்லுயிர்ப் படிவங்கள், பாறைகள், புகைப்படங்கள் ஆகியவை வழியாகத் தாவரவியல், விலங்கியல் மற்றும் புவியியல் சார்ந்த குறிப்புகள் விவரிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து 20 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட உருவமாதிரிக் காட்சிப் பெட்டியில் தாவரங்கள் மற்றும் விலங்குகள் ஒன்றையொன்று எங்ஙனம் சார்ந்துள்ளது என்பதும் அவை வசிக்கும் சுற்றுச் சூழலும் மனதை ஈர்க்கும் வண்ணம் சித்தரிக்கப்பட்டுள்ளன. இங்கு போலி உயிரினமாக்கப்பட்ட மிருகங்கள் மற்றும் பறவைகள் மலைப்பாங்கான புதர்க்காட்டுப் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டங்களின் வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் அரும்பொருட்கள் இனங்கண்டு கொள்ளப்பட்டு, சேகரிக்கப்பட்டு வருகின்றன. சேகரிக்கப்பட்டுள்ள பொருட்களின் மீது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறப்புக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. சிறப்புத் தலைப்புகளில் திங்கட் சொற்பொழிவுகள் அருங்காட்சியகத்திலும் அவ்வப்போது கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் ஆய்வு நிறுவனங்களிலும் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன.

வேலூர், அரசு அருங்காட்சியகம் வரலாறு, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் பாதுகாப்பகமாகவும் கல்வி புகட்டும் கல்விக் களஞ்சியமாகவும் செயல்படுகிறது.

அரசு அருங்காட்சியகம், வேலூர், வெள்ளி, இரண்டாம் சனி, குடியரசு தினம், சுதந்திர தினம், அண்ணல் காந்தியடிகள் பிறந்த தினம் தவிர மற்ற நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். நுழைவுக் கட்டணமில்லை.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களின் சிறப்பினைக் கண்டு களிக்க அருங்காட்சியகம் நம்மை அழைக்கிறது



ஓவியக் கூடம்



# வளரும் வேளாண்மை

### பாமாயில் கெடாது இருக்க...

எண்ணெய் விலை ஏறிவரும் இந்நாளில், பெரும்பாலோர் பனை எண்ணெய் உபயோகிக்கிறார்கள். இந்த எண்ணெயின் விலை மலிவாக இருப்பதோடல்லாமல், தரத்திலும் மற்ற எண்ணெய்களைப்போல் சிறந்து உள்ளது. ஒருவகைப் பனைமரத்தின் பழங்களிலிருந்து எடுக்கப்படுவதே இந்தப் பனை எண்ணெய்.

வைட்டமின் 'ஈ' எண்ணெய்களில் இருந்தால், அந்த எண்ணெய் அதிக நாட்களுக்குக் கெடாது இருக்கும். ஆனால், நம் உபயோகத்தில் இருக்கும் பதனிடப் பட்ட பனை எண்ணெ்யில் வைட்டமின் 'ஈ' குறைவாக உள்ளது. ஏனென்றால் சுத்திகரிப்பு செய்யும்பொழுது இந்த வைட்டமின் 'ஈ' நீக்கப்பட்டு விடுவதால் பதனிடப்பட்ட எண்ணெய் விரைவாகக் கெட வாய்ப்பு அதிகமாகின்றது. அதனால் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், விரைவாகக் கெடாமல், பாதுகாப்பது எப்படி என்று பல விதமான கொள்கலன்களில் வைத்து வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

ஈயம், கண்ணாடி, ஜாடி, டின் மற்றும் பிளாஸ்டிக் கொள்கலன்களில் சேமித்து வைத்து எண்ணெய்யின் தரம் ஆராயப் பட்டது. வேதிமரங்களின் அளவைக் கணக் கிட்டுஎண்ணெய்யின்மாற்றங்களை ஆராயும் பொழுது எல்லாவற்றையும் விட டின் கொள்கலன்களில் சேமித்து இருந்த எண்ணெய்யே தரம் பாதிக்கப்படாமல் இருந்தது. அதனால் பாமாயில் என்ற சீனப்பனை எண்ணெய்யைச் சேமிக்கும் பொழுது, மற்ற கொள்கலன்களைவிட டின்னில் சேமித்து வைத்தால் அதிக நாட்களுக்குத் தரம் கெடாமல் இருக்கும்.

### நெல் அரவை ஆலைக்கழிவு நீரினால் சுற்றுப்புறத்திற்கு ஏற்படும் தீமைகளும், தவிர்க்கும் முறையும்

நெல்லைப் புழுங்க வைப்பது பழங் காலந்தொட்டு வழக்கத்தில் இருந்து வரும் ஒன்றாகும். நெல்லை, குளிர் நீரில் இரண்டு மூன்று நாட்களுக்கு ஊற வைத்த பிறகு வேக வைப்பது வழக்கம். இவ்வாறு ஊற வைப்பதால் நீரில் நுண்ணுயிர்கள் பெருகி, அதில் ஒருவித துர்நாற்றம் ஏற்படுகிறது.

இந்தக் கழிவு நீரை நீக்கும் பொழுது நுண்ணுயிர்கள் பரவி சுற்றுப்புற சூழ்நிலை கெடுகின்றது. நீரில் நுண்ணுயிர்களை தடுப்பதற்காக வெந்நீரில் ஊற வைக்கும் புதிய முறை ஏற்படுத்தப்பட்டது. இந்த நெல் ஊற வைத்த கழிவு நீரினால் நெல் அரவை ஆலையின் சுற்றுப்புறத்திற்கு ஏற் படும் கெடுதலைத் தவிர்க்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண் பதனஞ்செய் துறையில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது.

குளிர் நீரில் ஊற வைக்கும் பொழுது வரும் கழிவு நீரில் கெடுதல் விளைவிக்கும் அளவில் நோய் உண்டாக்கும் கிருமிகள், மற்றும் துர்நாற்றம் உண்டாக்கும் நுண் ணுயிர்கள் பெருகிக் காணப்படுவது அறியப்பட்டது. மற்றும் இந்தக் கழிவு நீரை மண்ணில் பாய்ச்சும் பொழுது கழிவு நீரில் உள்ள ஊட்டச் சத்தினால் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களும் பெருகி, அவைகளுக்கு இடையில் ஏற்படும் போட் டியினால்வேரினில்தழைச்சத்தைச் சேர்க்கும் நுண்ணுயிர்களாக ரைசோபியம், அசோஸ் பைரில்லம், மற்றும் அசோட்டோபாக்டர் அழிக்கப்படுகின்றது.

ஆனால் வெந்நீரில் ஊற வைத்து பதனஞ் செய்யும் பொழுதுவரும் கழிவு நீரில் நுண்ணுயிர்கள் மிகக் குறைவாக இருப்பதாக ஆராய்ச்சியில் அறியப்பட்டது. மண்ணில் உள்ள நுண்ணுயிர்களும் பாதிக்கப்படுவதில்லை. ஆகையால் குளிர் நீரில் ஊறவைத்த கழிவு நீரை வெளி யேற்றும்போது கிருமி நாசினியான சோடியம் ஹைப்போ குளோரைட் 7 சதம் சேர்த்தும், வெந்நீரில் ஊறவைத்த கழிவு நீரில் ஒரு சதவீதம் சேர்த்தும் வெளியேற்றுவதால் நுண்ணுயிர்களால் சுற்றுப்புறத்திற்கு ஏற்படும் தீமையும், துர் நாற்றமும் தவிர்க்கப்படுகின்றது.

### நூற்புழுவைக் கட்டுப்படுத்த பாலித்தீன் விரிப்பு

நாற்றங்கால் பயிர்களான கத்தரி, தக்காளி, மிளகாய் போன்றவற்றில் வேர்முடிச்சு நூற்புழு அதிகச்சேதம் விளை விக்க வல்லது. நூற்புழுக்கொல்லிகளை உபயோகித்துக் கட்டுப்படுத்தும் முறை நடைமுறையில் உள்ளது.

மண்ணிலுள்ள வெப்பத்தையும், ஈரப் பதத்தையும் அதிகப்படுத்த வெள்ளை பாலித்தீன் காகிதத்தை விரித்து ஆராய்ச்சி செய்து நல்ல பயன்கண்டுள்ளோம். மண் ணிலுள்ள வெப்பம் 14 டிகிரி சென்டி கிரேடு வரை உயர்வதால் நூற்புழுக்கள் சாகடிக்கப்படுகின்றன. தக்காளி நாற்றங் காலில் இம்முறை நல்ல பயனைக் கொடுத் துள்ளது. கோடைகால வெப்பத்தை இந்த முறையில் நாற்றங்கால் பயிரில் நூற் புழுக்களைத் தடுக்க இது ஒரு நல்ல முறை.

இந்த முறையில் நாற்றங்கால் பாத்தி கட்டி, தொழு உரமிட்டு, பாலித்தீன் காகி தத்தால் மூடி, ஓரங்களின் வழியாக காற்று புகாமல், மண்ணால் மூடி, குறைந்தது 25 நாட்கள் வைக்கவேண்டும். பிறகு பாலித்தீன் காகிதத்தை நீக்கி, மண்ணைக் கிளறி, விதைத்தால் நல்ல பயன் கிடைக்கும். இந்த நிலங்களில் ஒரு மாத காலம்வரை களைச்செடிகள் முளைப்பதில்லை. பாலித் தீன் காகிதம் 800 கிராம் பருமனுள்ளதே சிறந்தது. ஒரு கிலோ பாலித்தீன் காகிதம் விலை நாற்பது ரூபாய். நான்கு சதுர மீட்டர் பரப்பில் இடப்(நாற்றங்காலுக்கு), போதுமானது. ஒருமுறை உபயோகித்த பாலித்தீன் காகிதம் மேலும் நான்கு, ஐந்துமுறை உபயோகத்திற்கு வரும். மேலும் விளக்கமான தகவலுக்கு, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தின் நூற்புழுத்துறையை அணுகலாம்.

### பயறு வண்டினைக் கட்டுப்படுத்தி ஊக்குவிக்கப்பட்ட வெள்ளைக்களிமண்

பயறுவகை தானியங்களை விதைக் கவோ அல்லது உணவுக்காகவோ சேமிக் கும் பொழுது அவற்றை கெலஸோபுரூக் கஸ் என்னும் வண்டுகள் தாக்கி அதிக சேதத்தை உண்டாக்குகின்றன. இவ்வண்டுகள் வெள்ளை நிற முட்டைகளை பயறு விதை களின் மீது ஒருவித பசை போன்ற திரவத்தால் ஒட்டி இடுகின்றன. முட்டை யிலிருந்து வெளிப்படும் காலில்லாப் புழுக்கள் தானியங்களைக் குடைந்து சென்று உண்டு வளர்கின்றன. புழுக்கள் தானியங்களுக்குள்ளேயே கூட்டுப்புழு வாகி விதைகளில் துளையை ஏற்படுத்தி தாய்வண்டுகளாக வெளிவருகின்றன வண்டு களின் தாக்குதலால் தானியங்களின் உட் பகுதி அரிக்கப்பட்டு சேதமாவதுடன் ஓட்டைகளும் தோன்றுகின்றன. துளை யுண்ட தானியங்களை விதையாகவோ, உண்ணவோ பயன்படுத்த முடியாது.

பயறுவகைத் தானியங்களைப் பூச்சி களினின்று பாதுகாக்கப் பல முறைகள் பின்பற்றப்பட்ட போதிலும் ஊக்கு விக்கப்பட்ட வெள்ளைக் களிமண் உப யோகிப்பதன் மூலம் வண்டுகளைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தலாம். இக்களி மண் அலுமினா மற்றும் சிலிக்கன் டை ஆக்ஸைடு முதலிய பொருட்கள்ளக் கொண்டது. இக் களிமண்ணை உப யோகிப்பதால் மனிதர்களுக்கும், கால் நடைகளுக்கும் எவ்விதத்தீங்கும் இல்லை. விதைகளின் முளைப்புத் திறனும் பாதிக் கப்படுவதில்லை. பக்குவம் செய்யப்படாத களிமண் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திலிருந்து தருவிக்கப்பட்டு அடர் கந்தக அமிலம் கொண்டு அதிக வெப்பம் கொண்ட உலைகளினுள் ஊக்குவிக்கப் படுகிறது.

ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணை நூறுகிலோ விதைக்கு ஒரு கிலோ என்ற அளவில் நன்கு கலந்து, மூடப்பட்ட கலன்களிலோ அல்லது பாலிதீன் சாக்குப் பைகளிலோ காற்றுப் புகாதவாறு சுமார் ஓராண்டு வரை பூச்சிகளிலிருந்து பாது காக்கலாம். இக்களிமண் துகள்கள் கூரிய முனைகளைக் கொண்டுள்ளதால் வண்டுகள் தானியங்கள் மீது ஊர்ந்து செல்லும் போது அவற்றின் மேல் தோலில் சிராய்ப் புகள் ஏற்பட்டு உடலிலிருந்து நீர் வெளி யேறி நீர்ப் பற்றாக்குறையால் பூச்சிகள் இறந்து விடுகின்றன. தானியங்களை உணவுக்காக உபயோகப்படுத்தும் முன்னர் நீரில் நன்கு கழுவிவிட்டால் களிமண் முற்றிலும் அகன்றுவிடும். ஊக்குவிக்கப் பட்ட களிமண் பூச்சியியல் துறையில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயிகள் இந்த எளிய உத்தியைக் கடைப்பிடித்து பயறுவகைத் தானியங்களில் பூச்சிகள் வராமல் தடுக்கலாம்.

**வேளாண் தகவல் பணி மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்.**


**பாண்டியன் கூட்டுறவு சிறப்பு அங்காடி,**
**162, பாலஸ் ரோடு, மதுரை - 1.**

எங்கள் குறிக்கோள்

குன்றாத தரம்! குறையாத எடை!! கூடுதலில்லாத விலை!!!

இல்லங்களுக்குத் தேவையான
மஞ்சள், மளிகைப் பொருட்கள், அரிசி, எண்ணெய், சீனி,
குழந்தைகள் உணவு, பால் உணவு, வாசனைப் பவுடர்கள்
சோப்புகள் சலவை சோப்புகள்
மற்றும்
அனைத்து வகை அழகுசாதனப் பொருட்களையும்
ஒரே இடத்தில் வாங்கிடலாம்.
எச்.எம்.டி., டைட்டன் கைக்கடிகாரங்கள் உண்டு.
மிக்ஸி, கடிகாரம், கட்டில், பீரோக்கள் உண்டு.

சிறப்பு அம்சங்கள்

1) அங்கத்தினர்களுக்கு 2% தள்ளுபடி
2) டோர் டெலிவரி வசதி உண்டு.
3) கல்யாணம் மற்றும் விசேட காரியங்களுக்கு மொத்த விலையில் சப்ளை.
4) மருந்துகளுக்கு விற்பனை வரி கிடையாது.
5) வாடிக்கையாளர்களின் பிக்ஸட் டெபாசிட்டுக்கு கூடுதல் வட்டி.
6) சுயசேவை விற்பனை வசதிகள்.

(ஒப்பம்) இரா. நல்லதம்பி,
இணைப்பதிவாளர்/தனி அலுவலர்.



# பிணி தீர்க்கும் பண்ணைக் கீரை

ஏ.ஆர்.என். துரைராஜ்

கீரை வகைகளில் பண்ணைக் கீரையும் ஒன்று.

பயிரிடும் நிலத்தைப் பொதுவாக, பண்ணை என்று அழைப்பார்கள். பண்ணையில் வளர்ந்து உணவாகப் பயன்படும் கீரை இனமாகையால் 'பண்ணைக் கீரை' என்னும் வழக்குச் சொல் இக்கீரைக்கு அமைந்து விட்டது.

பண்ணைக் கீரையானது தண்டுக் கீரை இனத்தைச் சார்ந்தது. இது செவ்வல், கரிசல் நிலங்களில் தானே கிளைச் செடியாக நான்கடியிலிருந்து ஐந்து அடி வரை வளரும்.

இப்பண்ணைக் கீரையில் இரண்டு வகை உண்டு. ஒன்றின் இலை அகலமாக இருக்கும்; இலைகள் பெரிதாகவும் சிறிது சிவப்பு நிறம் கொண்டதாகவும் இருக்கும். இப் பெரிய இலைகளைக் கொண்ட கீரையே உணவிற்குச் சிறந்ததாகும். ஏறத்தாழ அரைக்கீரையின் சுவை உடையதாக இருக்கும். மற்றொரு வகை, இலை அகலமாய் இராமல் நீண்டு சிறுத்திருக்கும். இவ்வாறு சிறுத்துள்ள கீரையை ஆண் பண்ணைக் கீரை என்பர். குணத்திலும் செய்கையிலும் இரண்டும் ஒன்றே எனலாம். ஆனாலும், சுவையைப் பொறுத்தவரை அகலமான இலையைக் கொண்ட பண்ணைக் கீரையே சிறப்புடையதாகும்.

இதற்கு 'நறும் பண்ணை', 'சிறு பண்ணை', 'புனல் பண்ணை', 'புற் பண்ணை' என்ற பல பெயர்கள் உள்ளன.

பண்ணைக் கீரை முற்றிவிட்டால் வெள்ளையான - கதிர் போன்ற பூக்களைப் பூத்து நிற்கும். இப்பூக்கள் வெண்மை நிறம் பெற்றும் / பூக்கதிர்கள் பால்நிற வெண்மை பெற்றும் திகழும். ஆனால், முதிர்ந்த பூவில் விதைகள் தோன்றும். முதிர்ந்த கீரையும் தண்டும் உணவுக்கு உதவாது. ஆனால், இளம் தண்டையும் கீரையையும் உணவில் சேர்த்துக் கொண்டு உண்ணலாம். பருவத்தில் பறித்த கீரையும் அதன் தண்டும் மிகச் சுவையுடையதாக இருக்கும். மற்றும் பண்ணைக் கீரையின் இலையை, கொழுந்தாகப் பறித்துச் சமைத்து உண்ணலாம். இக்கீரையின் இலை, கொழுந்து, பூ, விதை ஆகிய அனைத்தும் மருத்துவத்தில் கையாளப்படுகின்றன.

## தீரும் வியாதிகள்:

உடலில் காணும் உள் அழலை, குடல் சம்பந்தப்பட்ட நோய், தோல் சம்பந்தப்பட்ட நோய், அஜீரணம், கரப்பான், இரணம், கிரந்தி, சொறி-சிரங்கு, மேகவூறல், கப இருமல், இரத்தபேதி, சீதபேதி, மூத்திரத் தாரை நோய், மலமிளக்கு, பெரும்பாடு மற்றும் பல நோய்களை இக்கீரை குணப்படுத்துகிறது.

இப்பண்ணைக் கீரையை எடுத்துச் சுத்தம் பார்த்து, பருப்புடன் கடைந்து சாதத்தில் சிறிது நெய் விட்டுச் சாப்பிடலாம். அல்லது வேகவைத்து வெங்காயம், பச்சை மிளகாய் உடன் கரைத்த புளி சேர்த்துக் கடைந்து சாதத்துடன் போட்டு உண்ணலாம். இது குடலைச் சுத்தி செய்து, குளிர்ச்சியைத் தருவதுடன், கரப்பான், கிரந்தி, இரணம், மேகவூறல் ஆகிய நோய்களை நீக்குகிறது.

## மலக்குடல், ஜீரணக்குடல் ஆகியவை வலுப்பெற

இப்பண்ணைக் கீரையை எடுத்து முதலில் சுத்தம் பார்த்து, பருப்புடன் சேர்த்து, இஞ்சி, கொத்தமல்லி, பெருங்காயம், கறிவேப்பிலை போட்டுக் கடைந்து, சிறிது நெய்விட்டுச் சாதத்தில் போட்டுச் சாப்பிட்டால் மலக்குடல், ஜீரணக்குடல் ஆகியவை வலுப்பெறுவதுடன், உடல் சக்தியும் பெருகி, சர்ம நோய்கள் யாவும் நீங்கி நலம் பெறும்.

## பெரும்பாட்டின் உதிரப் போக்கைக்கட்டுப்படுத்த:

இக்கீரையினுடைய பூக்களை மட்டும் (சுமார் 10 பூக்களைப்) பறித்து, சுத்தம் பார்த்து, பிறகு 400 மில்லி நீரில் போட்டுக் காய்ச்சி, வடிகட்டி காலை/மாலை அருந்திவர உதிரமாகப் போகும் பெரும்பாட்டுப் போக்கு 3 நாட்களில் நின்று நலம் பெறும்.

### குறிப்பு:

ஒருவருக்கு நாட்பட்ட வயிற்றுப் போக்கு இருந்தால், இதே கஷாயத்தையே அருந்தி வந்தால் வயிற்றுப் போக்கையும் கண்டிக்கும் தன்மை பெற்றது இக்கீரை.

## விதையின் பயன்:

இக்கீரை விதையினால் கப இருமல், இரத்த பேதி, மூத்திரத் தாரை நோய் ஆகியவை நீங்குகின்றன.

முதலில் விதைகளை எடுத்துச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அவற்றை உலர்த்திய பிறகு இருபது கிராம் அளவு ஆவதுபோல் தூள்செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

முதலில் 10 கிராம் தூளை எடுத்துக்கொண்டு 200 மில்லி பசும் பாலில் போட்டுக் காய்ச்சி, காலை-மாலை மூன்று நாட்கள் அருந்திவர கப இருமல், இரத்தபேதி, மூத்திரத் தாரை நோய் சம்பந்தமான அனைத்து நோய்களும் நீங்கி நலம் பெறும்.

### குறிப்பு:

உப்பு, புளி, காரம் இவைகளை மட்டுப்படுத்தி இச்சா பத்தியம் இருக்க நன்மை தரும்.

இளங்கீரைகளையும், தண்டுகளையும் மட்டுமே உணவாகக் கொள்ள வேண்டும். இந்தக் கீரையில் 85 விழுக்காடு கொழுப்புச் சத்தும், 2.3 விழுக்காடு நார்ச்சத்தும், 6.0 விழுக்காடு மற்றைய மாவுப் பொருள்களும் இருக்கின்றன.

சித்த மருத்துவத்தின் தந்தை எனக் கருதப்படும் 'குறுமுனி', இக்கீரையின் சிறப்பைத் தெளிவாகக் கூறுகிறார்.

"பண்ணைக் கீரையது பற்று மலமிளக்கும்
உண்ணும் குடலுக்கிதம் கொடுக்கும்-
பெண்ணே கேள்
சீதம் கரப்பான், சிரங்குடன் மாற்றி விடும்
போதங்கிலை யதனைக் கொள்"

இக்கீரையை உணவுக்காகப் பயிரிடலாம்: நல்ல உரமுள்ள நிலத்தில் விதைகளை நெருக்கமில்லாதபடி தெளித்து இலேசாக மண்ணைத் தூவி மூடவேண்டும். சிறிது வைக்கோலைப் போட்டு மூடுவதும் நல்லது.

விதைத்தவுடன் பூவாளியைக் கொண்டு தண்ணீர் தெளிப்பது சாலச் சிறந்தது. விதைத்த மூன்றாம் நாள் வைக்கோலை அகற்றிவிட வேண்டும். விதைக்கப்பட்ட நான்காம் நாள் எல்லா விதைகளும் முளைத்து வளர ஆரம்பிக்கும். முளைக்க ஆரம்பித்த காலகட்டத்தில் அடிக்கடி நீர் விடக்கூடாது. விதைத்த 15 நாட்களுக்கு மழை இல்லாமல் இருப்பது நல்லது. அவ்வாறு மழை பெய்தால் முளைத்த கீரைகள் யாவும் அழுகிவிடும்.

கிராமங்களில் தொன்றுதொட்டு நடைபெற்று வரும் ஜல்லி கட்டு என்னும் மாடு பிடிக்கும் நிகழ்ச்சியின்போது பல தோரணங்கள் கட்டுவார்கள். அதிலே இந்தப் பண்ணைப் பூவையும் கட்டி, மாலையாகப் போட்டு, மாட்டை விரட்டுவது நம் தமிழ்நாட்டின் பழக்கங்களில் ஒன்றாகும்.

குடல் பலம் இழந்தவர்களும், குடல் இரணம் உள்ளவர்களும் நலம் பெறுவதற்கு இக்கீரை ஒரு வரப் பிரசாதம் ஆகும். எனவே, இக்கீரையை நல்ல முறையில் வீட்டுத் தோட்டத்தில் பயிரிட்டு நம் உணவில் சேர்த்துக் கொள்வது நம் உடல் நலத்திற்கும், உணவுச் சிறப்பிற்கும் மிகவும் அவசியம்.


WITH
BEST
COMPLIMENTS
FROM

N. MANI MOZHIAN, M.A.,
MANAGING DIRECTOR

Residence
1, Bulabai Desai Road,
Chockikulam,
Madurai - 625 002.
Phone : 44759

NEW COLLEGE HOUSE,
2, TOWN HALL ROAD,
MADURAI - 625 001.
Phone : 24311 - 27145

AND

SRI V.K.K. PLAY GROUP MATRICULATION SCHOOL
3 - Ratnasamy Nadar Road,
Chokkikulam,
Madurai - 625 002.
Phone: 44701.

சேலம் மாவட்டத்தில்...

# தொழுநோய் ஒழிப்புப் பணிகள்

சேலம் மாவட்டத்தில் 1987 பிப்ரவரிக்கு முன் இருந்த 37,11,991 மக்கள் தொகையில் 44,464 பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தனர். அதுவரை ஒருமருந்து (டேப்சோன்) கொடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அதற்குப்பின் புதிய சக்தி வாய்ந்த கூட்டு மருந்துகள் சிகிச்சைத் திட்டம் டேனிடா உதவியுடன் பிப்ரவரி 1987-இல் தொடங்கப்பட்டது. பிப்ரவரி 1987-இல் இருந்து டிசம்பர் 1989 வரை, அதிக தொழுநோய்க் கிருமிகளுடைய நோயாளிகள் 2,563 பேர், குறைவாகக் கிருமிகளுடைய நோயாளிகள் 22,597 பேர் ஆக, 25,160 நோயுற்றவர்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டனர். ஆக, நோயால் பாதிக்கப்பட்ட 69,624 பேர்களில் புதிய கூட்டு மருந்துகள் மூலம் 41,340 பேர்கள் (2,827 எம்.பி. 38,513 பி.பி) பூரண குணம் பெற்றனர். தற்போது 14,318 நபர்கள் கூட்டு மருந்துச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**கூட்டு மருந்துகள் சக்தி வாய்ந்தவை**

புதிய கூட்டு மருந்துகள் தொழுநோயைக்குறுகிய காலத்தில் குணப்படுத்தக் கூடியவை. அதிக சக்தி வாய்ந்த இவை, கிருமிகளை விரைவில் அழிக்கின்றன. இம்மாத்திரைகள் டென்மார்க்கிலிருந்து தருவிக்கப்பட்டவை; இவை அட்டைகளில் வழங்கப்படுகின்றன.

சேலம் மாவட்டம் முழுவதும் அரசு தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்கள் 8 மூலமும் தன்னிச்சைச் சேவை நிறுவனங்கள் 2 மூலமும் தொழுநோய்க்குக் கூட்டு மருந்துச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்தத் தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் சேலம், ஆத்தூர், இராசீபுரம், நாமக்கல், ஆட்டையாம்பட்டி, திருச்செங்கோடு, எடப்பாடி, மேட்டூர் அணை, செட்டிப்பட்டி, சேலம் அரிசிப்பாளையம் ஆகிய இடங்களிலிருந்து செயல்படுகின்றன.

**சிகிச்சைத் திட்டம்**

ஒவ்வொரு சிகிச்சை நிலையத்திலும் தொழுநோய்க்காகச் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர், தொழுநோய்ப் பணியாளர்கள், மேற்பார்வையாளர் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள், தொழுநோய் ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையங்கள் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு, தோல் பரிசோதனை, பள்ளி மாணவ மாணவியர் பரிசோதனை போன்ற முறைகளின் மூலம், புதிய நோயாளிகளைக் கண்டு பிடித்துப் புதிய கூட்டு மருந்துச் சிகிச்சை வழங்குகின்றன. அரசு தொழுநோய் கட்டுப்பாட்டு நிலையம் ஒவ்வொன்றும் 20 கிளை நிலையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிளை நிலையப்பகுதியிலும் 28 நாட்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட நாளில் மருத்துவக்குழு சென்று சிகிச்சையளிக்கிறது. காலை 6 மணிக்குத் தொடங்கும் சிகிச்சை, பிற்பகல் வரை நீடிக்கிறது. ஒரு கிளை நிலையப்பகுதியில் 5 முதல் 8 வரை சிகிச்சை நிலையங்கள் உள்ளன.

தொழுநோயாளிகளுக்குக் கை கால்களில் புண், வீக்கம் போன்ற தொந்தரவுகள் ஏற்பட்டால் மருத்துவமனையில் சிறப்புத் தொழுநோய் மருத்துவப் பகுதிக்கு அனுப்பப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகிறது. ஆத்தூர், இராசீபுரம், சேலம், சங்ககிரி ஆகிய ஊர்களில் இம் மருத்துவப் பகுதிகள் உள்ளன.

**தொழுநோய்க் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாட்டுத் திட்டங்கள்**

தொழுநோய்க்குச் சிகிச்சையளிப்பதுடன் நலக்கல்விப் பிரச்சாரங்கள் மாவட்டம் முழுவதும் தீவிரமாகச் செய்யப்படுகின்றன. ஆசிரியர்கள், மாணவர்கள் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், உறுப்பினர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள், இளைஞர்கள், தொழிற்சாலையில் பணிபுரிவோர், முடி திருத்துவோர், ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்கள் போன்ற பலருக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சியின்போது தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள், புதிய கூட்டு மருந்துகளின் பயன் போன்றவை விளக்கிக் கூறப்படுகின்றன. இப்பயிற்சி பெற்ற பலர், ஆரம்ப நிலையிலுள்ள நோயாளிகளைச் சிகிச்சை பெறுவதற்கு அனுப்பி வைக்கின்றனர். தொடர்ந்து சிகிச்சை பெற அவர்களைத் தூண்டுகின்றனர்.

புதிய அணுகுமுறைகளின் மூலம் பல சமூகக்கல்வி நிகழ்ச்சிகள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. தொழுநோய் ஒழிப்புத் திருவிழா, ஊனத்தடுப்பு சிகிச்சை முகாம், தோல்நோய் சிகிச்சை மற்றும் தொழுநோய் கண்டு பிடிப்பு சிகிச்சை முகாம் போன்றவற்றை நடத்தப் பொதுமக்கள் பெரிதும் ஒத்துழைக்கின்றனர். பொருள் உதவி செய்தும் உடல் உழைப்புத் தந்தும் தொழுநோய்ப் பணியாளர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கின்றனர். இக்கருத்தரங்கங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் நோயில் இருந்து குணம் பெற்றவர்கள், பொது மக்களுடன் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

இந்தப் புதிய அணுகுமுறைகளைப் பற்றி அறியத் தமிழக முழுவதிலுமிருந்து தொழுநோய் ஒழிப்பு நலக் கல்வியாளர்கள் சேலத்திற்கு வந்து 5 நாட்கள் பயிற்சி பெற்றனர். புதிய கூட்டு மருந்து பற்றியும், தொழுநோய் ஆரம்ப அறிகுறிகளைப் பற்றியும் மக்களிடையே பரவலாக எடுத்துக்கூறப் பல்வேறு விளம்பரச் சாதனங்களும், முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. படக்காட்சி, பொருட்காட்சி, சினிமா சிலைடுகள், சுவரொட்டிகள், சுவர் வண்ணம், அறிவிப்புப் பலகைகள், புகைப்படங்கள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. ஊர்வலங்கள், பாதயாத்திரை, நொடி வினா-விடை, பொதுக் கூட்டங்கள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்றவை நடத்தப்படுகின்றன. நாளிதழ்கள் மூலமும், வானொலி மூலமும் இச்சேவைச் செய்திகள் மக்களுக்குப் போய்ச் சேருகின்றன.

சேவைநிறுவனங்களான ரோட்டரி சங்கம், அரிமா சங்கம், நேரு இளைஞர் நற்பணி மன்றம் போன்றவை பெரிதும் ஒத்துழைக்கின்றன. தொழுநோயால் பாதிக்கப்பட்ட இளைஞன் ஒருவனின் உண்மை வாழ்வினை ஒட்டி, "புதிய மனிதன்" என்னும் திரைப்படம் சேலத்திலேயே எடுக்கப்பட்டது. இப்படத்தை மருத்துவ இயக்குநர், பல பிரதிகள் வழங்கி தமிழகம் முழுவதும் காண்பிக்க ஏற்பாடு செய்துள்ளார்.

முழுமையாகக் குணமடைந்த நோயாளிகள் 2 முதல் 5 ஆண்டுகள் வரை கண்காணிக்கப்படுகிறார்கள். இவர்கள் 6 மாதங்களுக்கு ஒருமுறை பரிசோதனை செய்யப்படுகின்றனர்.

**தொழுநோய் சிறப்புப் பயிற்சி**

1987-இல் தொழுநோய்த் துறையைச் சார்ந்த மருத்துவ அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் 356 பேருக்குக் கூட்டு மருந்துச் சிகிச்சைப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பணியிடைப் பயிற்சியும் அவ்வப்போது அளிக்கப்படுகிறது. ஆரம்பச் சுகாதார மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் 239 நபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

**திட்ட ஆய்வுக் கண்காணிப்பு**

மாவட்ட அளவில் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களும், தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களில் மாதாந்திர மதிப்பீட்டுக் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. இக்கூட்டங்களில் பணி நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிக்கல்கள், பிரச்சனைகள் குறித்துக் கருத்துரைகள் தெரிவிக்கப்படுகின்றன.

மாதாந்திர அறிக்கைகள், பதிவேடுகள் மூலம் களப்பணியில் நேரடிக் கண்காணிப்பு மூலமும், திட்டத்தின் முன்னேற்றங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. பணியாளர்களின் வேலைத்திறன், பணி முறைகள் ஆகியவை அடிக்கடி ஆய்வு செய்யப்படுகின்றன. பணி முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

**தொழுநோயும் மற்ற நோய்களைப் போல ஒருவகைக்கிருமியால் உண்டாகின்ற சாதாரண நோய்.**

**வெளிறிய அல்லது சிவந்த உணர்ச்சியற்ற படை, தொழுநோயின் அறிகுறியாகும்.**

**புதிய கூட்டுமருந்துகள் தொழுநோயைக் குறுகிய காலத்தில் குணப்படுத்தும்.**

**ஆரம்பநிலைச் சிகிச்சை, தொழுநோயை முற்றிலும் குணப்படுத்தும். உடல் ஊனம் ஏற்படாமல் தடுக்கும்.**

## ரூ.139.60இலட்சம் செலவில் 59 மழைநீர் வடிகால்கள்

சென்னை மாநகரில் மழை பெய்தால் அவற்றைத் தேங்காமல் வடியச் செய்ய மாநகராட்சி, மழைநீர் வடிகால்களை அமைக்கிறது.

சென்னை மாநகரில் சாலைகளின் மொத்த நீளம் 1600 கி.மீ. ஆகும். தற்போது மழைநீர் வடிகால் 550 கி.மீ. நீளத்திற்கு மட்டுமே உள்ளது. நகரின் மழைநீர் வடிகால் தேவையை நிறைவு செய்ய இன்னும் 530 கி.மீ. நீளத்திற்கேனும் மழைநீர் வடிகால்களைக் கட்டியாக வேண்டும். இதற்குச் சுமார் ரூ.53 கோடி செலவாகும்.

நிதிப் பற்றாக்குறை காரணமாக மாநகராட்சி ஒவ்வோராண்டும் படிப்படியாகப் புதிய வடிகால்களை அமைத்து வருகிறது. இந்த ஆண்டு, சென்னை மாநகராட்சி ரூ.139.60 இலட்சம் செலவில் 59 மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளத்திட்டமிடப்பட்டு இருக்கிறது. இதனால் மாநகராட்சியில் மழைநீர் வடிகால்களின் நீளம் 12. கி.மீ. வரை அதிகரிக்கும்.

1989-90-இல் பெரம்பூர் சுரங்கப்பாதை, பெரியமேடு சைடன் ஆாம்ஸ்சாலை. புரசைவாக்கம்நெடுஞ்சாலை, கண்ணன் தெரு மற்றும் புனித சேவியர் தெரு முதலிய இடங்களில் மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டுத் தண்ணீர் தேங்கும் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

இந்த ஆண்டு, நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சாலை, புளியந்தோப்பு, எண்ணூர் நெடுஞ்சாலை, வியாசர்பாடி, கொளத்தூர் டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சுரங்கப் பாதை, அமைந்தகரை, அசோக் நகர், நுங்கம்பாக்கம், கஸ்தூரிபாய் நகர், தேனாம்பேட்டை, தியாகராய நகர், விருகம்பாக்கம் ஆகிய இடங்களில் 12. கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.






அம்பேத்கர் நூற்றாண்டு

# அண்ணல் அம்பேத்கர்

-டாக்டர் ஆஞ்சநேயலு

**ஆ**திதிராவிட மக்களின் ஆற்றல் மிகுந்த தலைவராக மட்டுமின்றி இந்திய அரசியல் சாசனத்தின் பிரதான சிற்பியாகவும் திகழ்ந்தவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர். 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்த அம்பேத்கர் 1956 டிசம்பர் ஆறாம் நாள் புகழுடம்பு எய்தினார்.

சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளை அம்பேத்கர் அணுகிய விதம், அவரது அறிவார்ந்த ஆற்றலைப் பறை சாற்றுவதாகும். இந்து சமூக அமைப்பானாலும், சாதி முறைகளானாலும் சூத்திரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் தோற்றம் பற்றிய கருத்துக்களானாலும், தீண்டத்தகாதவர்களுக்கு விமோசன வழியானாலும், ஜனநாயக அரசியல் நெறியானாலும், அவர் கூறும் கருத்துகள் அடிக்கடி சர்ச்சைக்குட்பட்டன. எனினும் அவை மிக முக்கியமான கருத்துக்களாகவே இருந்தன.

**அறிவுத் தாகம்:**

அம்பேத்கர் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் அவ்விஷயம் குறித்த ஆழ்ந்த அடிப்படையான தகவல்களை ஆதாரத்துடனேயே பேசுவார். உண்மைகளை ஒருபோதும் அவர் விட்டுக்கொடுத்ததில்லை. அவரது அறிவுத்தாகமும் தனது ஆற்றலில் அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையும் சில சமயங்களில் அறிவுத்திமிர் என்று கூட வர்ணிக்கப்பட்டதுண்டு.

தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்களின் நலனுக்காக அரும்பாடுபட்ட இரு பெரும் தலைவர்கள் காந்தியடிகளும் அம்பேத்கரும். எனினும் இருவரும் இருவேறு துருவங்களாகவே செயல்பட்டனர். தாழ்த்தப்பட்ட மக்களை அழைப்பதில்கூட அவர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தது. பஞ்சமர்களான அம்மக்களைக் கடவுளின் குழந்தைகள் என்று பொருள் தரும்படியாக 'ஹரிஜனங்கள்' என்று காந்தியடிகள் அழைத்தார். ஆனால் காலங்காலமாக அடக்குமுறைக்கு ஆட்பட்ட அவர்களை இந்திய அரசுச் சட்டத்தில் உள்ளவாறு 'ஷெட்யூல்ட் சாதியினர்' என்றே கூறவேண்டுமென்று அம்பேத்கர் வாதிட்டார். சாதிப் பெயரை மட்டும் ஆறுதல் தருவதாக மாற்றினால் போதாது என்பதே வாதம். மறுக்கப்பட்ட உரிமைகள் அளிக்கப்பட்டு, அனைவராலும் சரிசமமாக மதிக்கப்படவேண்டியதே இப்போதைய தேவை. மாறாகக் கடவுளின் குழந்தைகள் என்று அழைத்தால் ஆகும் பயன் எதுவுமில்லை என்று அவர் அறிந்திருந்தார். சிதிலமடைந்துபோன வீட்டுக்கு வெள்ளையடிப்பது போன்றதுதான் அச்செயல். அஸ்திவாரம் ஆட்டங்கண்டுபோன நிலையில் அதனை முற்றிலும் இடித்துவிட்டுப் புதிதாக ஒரு கட்டடத்தைக் கட்டியாக வேண்டும் என்று அவர் கூறினார்.

**தீண்டாமை ஒழிய:**

தீண்டாமை என்பது ஓர் அடிமைத்தனம் என்று அம்பேத்கர் வர்ணித்தார். ஆனால் தீண்டாத அடிமைகளுக்குச் சோறுபோடும் பொறுப்பைச் சமூகம் ஏற்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். தீண்டாமைக் கொடுமையை அமைதியான வழியில் படிப்படியாக ஒழிக்க வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார். ஆனால் தீண்டாமைக்கு மூலவித்தான சாதியமைப்பையே ஒழிக்க வேண்டும் என்று தீவிரமாகக் குரலெழுப்பியவர் அம்பேத்கர். ''தீண்டாமைக்கு வேர் சாதிமுறை; சாதியமைப்புக்கு மூலம் வர்ணாசிரம முறையைச் சேர்ந்த சமயநெறி; வர்ணாசிரமத்துக்கு அடிப்படை பார்ப்பனீயம் நிறைந்த சமயம்; பார்ப்பனீய சமயத்திற்கு மூலம் அரசியல் அதிகாரம்'' என்று தர்க்க ரீதியாக வாதிட்டார் அண்ணல் அம்பேத்கர்.

### சமூகச் சீர்திருத்தம்:

சமூகச் சீர்திருத்தம் என்பதில் இரண்டு பரிமாணங்கள் உண்டு; ஒன்று இந்துக் குடும்ப அமைப்பில் சீர்திருத்தம் கொண்டுவருவது; மற்றொன்று இந்து சமுதாயத்தையே மாற்றியமைப்பது, முதலாவது சீர்திருத்தத்தில் விதவைத் திருமணம், குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல் போன்றவை அடங்கும். இரண்டாவது சீர்திருத்தம் என்பது சாதியமைப்பை ஒழிப்பது என்று அவர் கூறினார்.

சாதிப்பிரிவினைகள் காரணமாகப் பொருளாதாரத்திறன் மேம்படவில்லை, வாழ்க்கைத்தரம் முன்னேறவில்லை, சாதிப்பிரிவுகளால் எவ்வித நன்மையும் ஏற்படவேயில்லை என்று கூறிச் சாதியமைப்பை ஒழிக்க வேண்டும் என்று அம்பேத்கர் அயராது முயன்றார். ''பொதுவாழ்வில் சாதிமுறையே வியாபித்திருக்கிறது; சாதியமைப்புக்கும் பொறுப்பாகவும் விசுவாசமுள்ளவர்களாகவுமே இந்துக்கள் நடக்கின்றனர். திறமையுள்ளவர்கள் அங்கீகரிக்கப்படவில்லை; தேவைப்படுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்டப்படவில்லை'' என்று மனம் நொந்து அவர் கூறியிருக்கிறார்.

### சாதி ஒழிப்பு:

இந்தியா, புதிய இந்தியாவாக வேண்டுமானால் சாதியை வேரோடு ஒழிப்பதைத் தவிர வேறு வழியில்லை. சாதி என்ற அஸ்திவாரத்தின் மீது ஒரு தேசத்தைநிர்மாணிக்க முடியாது; சாதியமைப்பின் மீது நிர்மாணிக்கப்படும் எதுவும் விரைவிலேயே விரிசல் கண்டுவிடும் என்று அவர் கூறினார். சாதியை ஒழிக்கக் கலப்பு மணமே வழி என்று அவர் கூறினார். விதிகள் நிறைந்த சமயத்தைக் காட்டிலும், கோட்பாடுகள் கொண்ட சமயமே தேவை என்றார் அவர். பிரிட்டனின் அரசியல் சிந்தனையாளரான எட்மண்ட் புருக் கூறியவாறு, உண்மையான சமயமே சமூகத்துக்கு அடித்தளமாகும் என்றும், அதில்தான் உண்மையான அரசு அமையும் என்றும், கருதிய அம்பேத்கர், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளைக் கொண்ட ஜனநாயகமே உண்மையான சமயம் என்று நம்பினார்.



## அந்த வாழ்வுதான்
## எந்த நாள் வரும்?

நாங்கள் சாந்தி நிகேதனுக்குச் சென்றிருந்த சமயம், அதிகாலையில் அங்குள்ள தெருக்களில் நாங்கள் நடை போட்டபோது, சாந்தி நிகேதன் நிறுவனத்தைச் சேர்ந்த சில ஊழியர்கள் எங்களுடன் வந்து, ''இதுதான் குரு தேவர் தினமும் நடந்து செல்லும்பாதை! இதுதான் குரு தேவர் அமரும் இடம்'' என்றெல்லாம் பற்பல செய்திகளைச் சொல்லிக் கொண்டே வந்தார்கள்.

அந்தச் சமயத்தில் சிலர் சைக்கிள்களில் கூடைகளை வைத்துக் கொண்டு அந்தப் பாதை ஓரங்களில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தோம். காய்கறிகளை விற்பனை செய்கிறார்களோ என்று நாங்கள் நினைத்தோம். பின்னர்தான் புரிந்தது அவர்கள் எல்லோரும் தாகூரின் திருவுருவப் பொம்மைகளை சைக்கிளில் கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள் என்பது. மக்கள் அந்த பொம்மைகளை ஆர்வத்துடன் வாங்குகின்றனர். சில மணி நேரங்களில் அவர்கள் அந்த பொம்மைகளை எல்லாம் விற்றுவிட்டு அங்கிருந்து கிளம்பி விடுகிறார்கள். அந்தக் காட்சியைக் கண்டதும் வங்க மண்ணிற்கு - வங்க மக்களுக்கு தாகூரிடம் உள்ள பேரன்பு எனக்கு விளங்கியது. அந்தச் சிறப்பு பாவேந்தருக்கு எந்நாளில் கிடைக்கும் என்ற ஏக்கம் என்னுள் எழுந்தது.

டாக்டர் ஆறு. அழகப்பன்

(திருச்சியில் பாவேந்தர் நூற்றாண்டு தொடக்க விழாக் கருத்தரங்கில்)

—தகவல்: த.பி.

### பதவி விலகல்:

இந்து சமூகத்தைச் சீர்திருத்துவதற்காக அம்பேத்கர் தமது பாணியிலேயே செயல்பட்டார். நேரு அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருக்கையில், வாரிசுரிமை, திருமணம், மணமுறிப்பு, மகளிர் நிலை போன்ற இந்து சமய நெறிகளை ஒழிப்பதற்காக இந்து சட்ட வரைவு ஒன்றைக்கொண்டு வந்தார். சுயநல சக்திகளால் அவரது முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே 1950-ஆம் ஆண்டு, அமைச்சரவையிலிருந்து அவர் விலகினார்.

### புத்தர் நெறி:

சுயமரியாதையையும், தனிமனித கண்ணியத்தையும் உயிருக்கும் மேலாகப் போற்றிய அண்ணல் அம்பேத்கர், சமத்துவத்தைப் போதித்த அருளாளர் புத்தரின் நெறியைப் பின்பற்றி, பௌத்த சமயத்துக்கு மதம் மாறினார். அவசரக் கோலத்தில் அவர் இம்முடிவை மேற்கொள்ளவில்லை. இஸ்லாம், சீக்கியம், மார்க்சிசம் உள்ளிட்ட பிறசமய நெறிகள் பற்றி விரிவான விவாதங்கள் நடத்திய பின்னரே புத்தமதத்தைத் தழுவினார். புத்தரின் நெறி மனிதனின் மனப்போக்கை மாற்றும் நெறி என்றும், மனிதனின் செயல்கள் எதுவாயினும் அது அவனது விருப்பமின்றி நிகழ்வதில்லை என்றும் கூறி, தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்டவர்களுக்கு ஏற்றது புத்த சமய நெறியே என்று கூறினார். அதனால்தான் அம்பேத்கர், தான் இறப்பதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னர்- 1954-ஆம் ஆண்டில் கூறினார்: ''உங்களுக்கு என்னுடைய இறுதியான அறிவுரை ... கற்பிப்பீர், போராடுவீர்,! ஒன்றுபடுவீர்... நமது போராட்டம் அதிகாரத்திற்கோ, சொத்து சுகங்களுக்கோ அல்ல; மனித ஆளுமையைப் புனரமைக்கவே நாம் போராடுகிறோம்''.




பம்பாயில் நடைபெற்ற அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளன மாநாட்டில் - நீதிக்கட்சி இளைஞரணித் தலைவரும் அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவருமான ராவ்சாகிப் என். சிவராஜ் அவர்களுடன் அண்ணல் அம்பேத்கர்.

—படம் உதவி: என்.ஏ. கருணாகரன்

### அரசியல் சாசனச் சிற்பி:

அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவராக அண்ணல் அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரிஜன் ஒருவருக்கு அளிக்கப்பட்ட சம்பிரதாய வாய்ப்பு அன்று அது. அறிவார்ந்த நீதித்துறை வல்லுநர் ஒருவரின் அரசியல் சாசன ஞானத்தை ஏற்றுக் கொள்கின்ற நடவடிக்கை அது. உலக நாடுகளின் அரசியல் சாசனங்களைக் கற்றுக் கரைதேர்ந்த அவர், இந்திய அரசியல் அமைப்புக்கு ஒரு வலுவான அடிப்படையே உருவாக்கினார்.

நமது அரசியல் சாசனத்தில் அடிப்படை உரிமைகள், நீதித்துறை பரிகாரங்கள் போன்றவை அம்பேத்கரின் கை வண்ணத்தால் மிளிர்ந்தன. சமஷ்டி குணாதிசயங்களைக் கொண்டிருந்தாலும் நமது அரசியலமைப்பில், மத்திய ஆட்சி முறையை அவர் பெரிதும் வலியுறுத்தினார். நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காக்க மத்தியில் அதிகாரம் குவிந்த ஆட்சியமைப்பே தேவை என்று அவர் நம்பினார்.

ஜனநாயக நெறி தழைத்தோங்க வேண்டுமானால், நாட்டின் அரசியலமைப்பு எவ்வாறிருக்க வேண்டும் என்பது மட்டுமின்றி, அந்நாட்டின் பொருளாதார அமைப்பும் எவ்வாறிருக்க வேண்டும் என்று விளக்கப்பட வேண்டுமென்று அவர் கூறினார். ஊராட்சி பற்றிச் சொல்லப்பட்டபோது தனிமனிதனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று அவர் வாதாடினார்.

மதச்சார்பற்ற அரசு என்பதற்கு மக்களின் சமய நம்பிக்கைகளை நாம் பரிசீலிப்பதில்லை என்று பொருளல்ல; மக்களின் மீது எந்த ஒரு சமயத்தையும் திணிக்காத நிலையே மதச்சார்பற்ற அரசு என்று அம்பேத்கர் கூறினார். அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் சோஷலிஸ நெறியில் செயல்படவில்லை என்றால், சோஷலிஸம் என்பதற்கே பொருளில்லை என்று அவர் கூறினார். அரசியலமைப்பு வெற்றிகரமாகச் செயல்பட வேண்டுமானால் எதிர்க்கட்சிகள் வலுவானவையாகவும் விழிப்புணர்வுடனும் செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார். அரசியலமைப்பு வெற்றி பெறாவிட்டால் அதற்குக் காரணம் மக்கள் தமது நிலையிலிருந்தும் இழிவான நிலைக்குச் செல்வதாகவே இருக்கும் என்றும் அதனால் அமைப்பைக் குறைசாட்ட வேண்டாம் என்றும்அவர் கூறினார்.

வகுப்புவாதம், மொழிவாதம் போன்றவற்றால் எதிர்ப்படும் அபாயங்களை உணர்ந்திருந்தார் அவர். இந்தியா உண்மையிலேயே ஜனநாயக நாடாக இருக்கவேண்டும் என்றால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளே வேண்டியவை என்றும், ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமானால், சமுதாய சமத்துவமும், பொருளாதார நீதியும் அடிப்படைத் தேவைகள் என்றும்அவர் கூறினார். அவருடைய வாழ்க்கைப் போராட்டத்தை அவர் அடிக்கடி கூறுவது போல் சொல்வதென்றால் அவர் பேச்சு உண்மையைப்போல் சுடும், நீதியைப்போல் எதற்கும் விட்டுக் கொடுப்பதில்லை.

(பத்திரிகைத் தகவல் அலுவலகம்

## தமிழ்நாடு மின்சார வாரியம்
### கோயம்புத்தூர் நீர் வழங்கு திட்டம்
### (உலக வங்கி உதவியுடன்)

## ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) **மூன்று நகல்களோடு** மேற்பார்வை பொறியாளர்/பொதுவியல் புனல் மின் அலுவலகம், இரண்டாவது தளம்/கிழக்கு, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | கோயம்புத்தூர் நீர் வழங்கு திட்டம்- பில்லூர் நீர் தேக்கத்திலிருந்து, கோயம்புத்தூர் உள்ளாட்சி திட்டம் மற்றும் ஊரக பரப்புகளுக்கு நீர் வழங்கு திட்டத்திற்கான சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் சுரங்கங்கள் அமைத்தல். |
| 2. | ஏறத்தாழ பணியின் மதிப்பு | ரூ.400 இலட்சங்கள் மட்டும். |
| 3. | ஒப்பந்த வரை எண். | SECH. 16. |
| 4. | பிணை வைப்புத் தொகை | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்). |
| 5. | ஒப்பந்தம் பெற்றுக்கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும். | 1990 ஜூலை 18-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை. |
| 6. | தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும். | 1990 ஜூலை 18-ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி. |
| 7. | ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை தமிழ் நாட்டிற்குள் (அல்லது) தமிழ் நாட்டிற்கு வெளியே. | (அனைத்து வரிகள் உட்பட) ரூ.844/- (ரூபாய் எண்ணூற்று நாற்பத்தி நான்கு மட்டும்). |
| 8. | ஒப்பந்தத்தை அனுப்புதல் | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு. ஒப்பந்தங்கள் ஒப்பந்த வரையறையில் உள்ள பகுதி A. 3-ன் 17வது பிரிவில் கண்டுள்ள விதிகளின்படி அனுப்பப்பட வேண்டும். இவ்விதிமுறைகளுக்கு புறம்பாக சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். |

**ஒப்பந்தப் புள்ளிக்காரர்களுக்கு தேவையான முன் தகுதிகள் கீழ்வருமாறு:**

1. ஒப்பந்தம் கொடுப்பவர், குறைந்த பட்சம் ஒவ்வொன்றும் 1000 மீட்டர் நீளமுள்ள இரண்டு சுரங்க வழிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்க வேண்டும்.
2. ஒப்பந்தம் கொடுப்பவர், குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு 150 மீட்டர் நீளமான சுரங்க வேலை தொடர்ந்து இரண்டு மாதத்திற்கு நிறைவேற்றியிருக்க வேண்டும்.
3. ஒப்பந்தம் கொடுப்பவர், கடந்த மூன்று வருமான ஆண்டுகளில் வருடந்தோறும் குறைந்த பட்சம் வேலை செய்து முடிந்த அளவு (TURN OVER) ரூ.2.50 கோடிக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் கொடுப்பவர், வெடிமருந்து கொள்முதல் செய்வதற்காகவும், தகர்க்கவும், ஏற்றிச் செல்லவும், வெடி மருந்து கிடங்கு வைப்பதற்காகவும், உரிமம் வைத்திருத்தல் வேண்டும்.

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள்தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையை பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்திப் பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல் புனல் மின் அலுவலகத்தில் 25.6.1990 காலை 10.30 மணி முதல் 16.7.90 மாலை 5.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த வரையறையின் விலைத் தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத் தரப்படமாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.100/- கூடுதலாக செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணை வைப்புத் தொகையின்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும்போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

**தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு**
சென்னை-2.

டிஐபிஆர்/1366/எம்எஸ் 90/அக்கார்ட்




# கண்ணாடிக் குச்சியில் கைவண்ணம்



**சி**று துரும்பும் பல் குத்த உதவும் என்பார்கள்.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்று கூறுவதுமுண்டு.

திறமை இருந்தால் எவரும் வாழ்க்கையில் உயரலாம்.

கண்ணாடிக் குச்சியைக் கொண்டு, கைவண்ணம் காட்ட முடியுமா? திறமை இருந்தால் எதுவும் முடியும்.

கண்ணாடி நமக்குப் பலவகையில் பயன்படுகிறது. முகம் பார்ப்பதற்கு மட்டுமல்லாமல், மருத்துவம், பொறியியல் போன்ற பல்வேறு துறைகளுக்கும் அது பெருமளவில் பயன்படுகிறது.

அதேபோல, கண்ணைக் கவரும் பலவகையான பொருள்களைச் செய்யவும், குறிப்பாக பொம்மைகள் செய்யவும் அது பயன்படுகிறது.

கண்ணாடிக் குச்சியைக் கொண்டு, கைவண்ணம் காட்டும் இருவரை அண்மையில் சந்தித்தோம்.

அதோ, ஒருவர் தீ ஜ்வாலையில் கண்ணாடிக் குச்சியைக் காட்டுகிறார். வெப்பத்தில் அது இளகுகிறது. ஒரு சில நிமிடங்களில் அது மானாக, மயிலாக உருவம் பெறுகிறது!

கண்கட்டு வித்தையோ என நாம் வியப்புறும்போது, அந்தக் கைவினைஞர் புன்னகைத்தவாறே நமக்கு விளக்கினார்.

"இந்தக் கண்ணாடிப் பொம்மைகள் செய்வதற்கு முக்கிய மூலப்பொருள், கெட்டியான கண்ணாடிக் குச்சிகள்தாம். இவை பம்பாயிலிருந்து தருவிக்கப்படுகின்றன.

இந்தப் பொம்மைகளைச் செய்வதற்குக் கற்பனையும்,





கைத்திறமையும் மிக மிக அவசியம்.

இந்தக் கலையில் இரட்டையர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

ஒருவர் திரு ஆர். சுப்பிரமணியம், மற்றவர் திரு கே.பி. விநாயகம்.

கண்ணாடிப் பொம்மைகளைச் செய்யும் திரு ஆர். சுப்பிரமணியம் கூறுகிறார்.

''சமையல் காஸ் ஜ்வாலை மூலம், கண்ணாடிக் குச்சியை இளக வைத்து, அந்தப் பக்குவத்திலேயே நாம் மனத்தில் நினைக்கின்ற பொருளை, கற்பனைத் திறனைக் கொண்டு, நீட்டியும் மடக்கியும், வளைத்தும் நிமிர்த்தியும் உருவாக்கலாம்.''

அருகே பார்க்கிறோம். இவர் கைவண்ணத்தால் உருவான பறவைகள், விலங்குகள், மனிதர்கள் என்று சிறிய பெரிய அளவில் கண்ணாடிப் பொம்மைகள் காட்சியளிக்கின்றன.

இந்தப் பொம்மைகள் எடைக்கேற்ப விலை நிர்ணயிக்கப்படுகிறது. குறைந்தது 3 ரூபாயிலிருந்து அதிகப்பட்சம் 3,000 ரூபாய் வரை இவை விற்கப்படுகின்றன.

இந்தப் பொம்மைகள் பூம்புகார், காதி கிராப்ட் ஆகியவற்றின் மூலம் டெல்லி, பம்பாய், குஜராத், ஆந்திரா, கேரளா, கர்நாடகா முதலான மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சென்னை அமைந்தகரையில் தயாராகும் இந்தக் கலைப் பொருட்களை மேலை நாட்டுப் பயணிகளே விரும்பி வாங்கிச் செல்கின்றனர் என்றால், இதன் நேர்த்தியை என்னவென்று சொல்வது?

கண்ணாடிக் குச்சிப் பொம்மைகள் தவிர, காகித, மரப் பொம்மைகளையும் இவர்கள் தயாரிக்கிறார்கள்.

மரப் பொம்மைகளுக்குத் தேவையான 'வெப்பாலை' என்கிற ஒருவகை மரம், ஆந்திர மாநிலத்திலேயே சிறப்பாகக் கிடைக்கின்றதாம்.

மரப் பொம்மைகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள், அரக்கு, பவுடர், வர்ணம் ஆகியவையாகும்.

ஆந்திரத்தில் கிடைக்கும் இந்த மரங்கள் தரமாக இருப்பதால், அங்கேயே ஒரு நிறுவனத்தை வைத்து இவர்கள் பொம்மைகளைத் தயாரிக்கிறார்கள். அதாவது, அவற்றுக்கு வண்ணம் தீட்டுவதும் அங்கேயே; அங்கு செய்யப்படும் பொம்மைகளின் உதிரிப் பாகங்கள், சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, பொருத்தப்படுகின்றன.

இந்த வேலையில் ஈடுபட்டு வருபவர்தான் திரு கே.பி. விநாயகம்.

சென்னைத் தீவுத் திடலில் நடக்கும் இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியிலும், காதி கிராப்ட், பூம்புகார் ஆகியவை நடத்தும் பொம்மைக் கொலுவிலும் இந்தக் கைவினைஞர்கள் பங்கு கொண்டு தம் கைத் திறமையைக் காட்டி வருகிறார்கள்.

அண்மையில் கோயம்புத்தூரில் நடந்த, செய்தி-மக்கள் தொடர்புத் துறைப் பொருட்காட்சியிலும் இவர்களது காட்சி அரங்கு இடம் பெற்றிருந்தது.

''இந்தக் கலை அருகி வருகிறது. இது பெருகி வளர பொதுமக்கள் எங்களுக்கு நல்லாதரவு நல்கிட வேண்டும்.

''அரசுப் பொருட்காட்சிகளில் எங்களுக்கும் வாய்ப்புத் தந்து வருவதற்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்கின்றனர் மகிழ்ச்சியுடன் இந்த இரட்டையர்கள்.

—பி.வி.கிரி.

### பாவேந்தர் நூற்றாண்டு:



- தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
  சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
  சின்னதொரு கடுகுபோல் உள்ளம் கொண்டோன்!
- ஒருவன் புகழ்வான் ஒருவன் இகழ்வான்
  இருவருக்கும் அப்பால் இரு.
- உடைந்திடக் கூடாது நெஞ்சம் - நீ
  உண்மைக்குப் பாடுபடும் போதில்!



# நூல் நயம்

## SOCIO-POLITICAL PHILOSOPHY OF TIRUVALLUVAR

**ஆசிரியர்:** எம்.எஸ். வெங்கடாசலம்
**வெளியீடு:**
வி.எஸ்.பி. வெளியீட்டகம்,
திருச்சி 17.
விலை:ரூ 125 பக்கம்:150

வள்ளுவர் பழையவர்; ஆனால் வள்ளுவம் இளையது. முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பொருத்தமான பொருட்களைப் பற்றி அது பேசுவதால், காலத்தின் சுருங்கைகளுக்கும் அப்பாற்பட்ட கன்னித் தன்மையோடு அது காட்சியளிக்கிறது.

பிளேட்டோவையும், கௌடில்யரையும் தெரிந்திருக்கும் உலகம் திருவள்ளுவரைத் தெரிந்து கொள்ளாமல் போனதற்கு 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுகிற மனப்பான்மை'யே காரணம். இந்த நிகழ்கால நீரோட்டத்திலிருந்து விடுபட்டு, உலகச் சிந்தனையாளர் வரிசையிலே வள்ளுவனை உட்கார வைக்கிற ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறார் திரு எம்.எஸ். வெங்கடாசலம் அவர்கள். அதுவே 'திருவள்ளுவரின் சமூக-அரசியல் தத்துவம்' என்னும் இந்த ஆங்கில நூல்.

இதுபோன்ற நூல்களைப் படைப்பவர்க்குத் தேவையானவை நான்கு:

1) மூலநூலில் தோய்வதற்கும் ஆய்வதற்கும் தேவையான மொழிப் புலமை.

2) எழுதப் புறப்பட்ட துறைகளைப் பற்றிய ஆழ்ந்த அறிவு.

3) பலதுறை ஞானம் - பட்டறிவு

4) எழுதுகின்ற மொழியை இலாவகமாகக் கையாளுவதில் இணையற்ற தேர்ச்சி.

இந்த நாற்பால் திறமும் நன்கு கைவரப்பெற்ற திரு எம்.எஸ். வெங்கடாசலம் முப்பாலை எப்பாலும் கொண்டு செல்லும் தமது முயற்சியில் முத்திரை பதித்திருக்கிறார். பத்தொன்பது பகுதிகளில் சமூகம் - அரசியல் பற்றிய வள்ளுவச் சிந்தனைகளை, வரலாற்று நாயகராம் உலகப் பெரியார்களின் சிந்தனைகளோடு ஒப்பிட்டுக் காட்டுகின்ற இந்த ஆய்வு நூல் ஆராய்ச்சி உலகுக்கு ஓர் அரிய வரவு.

நூலின் அச்சும் அமைப்பும் கண்ணுக்கு விருந்து. நூல் நுவலும் பொருள் - கருத்துக்கு விருந்து; சமுதாய நோய்களுக்குச் சரியான மருந்து!

- இளந்தேவன்.

## சுற்றுலாச் சுகம்

**ஆசிரியர்:** மு. குப்புசாமி எம்.காம்.
**வெளியீடு:**
ஜெயசக்தி பதிப்பகம்
45A, பம்மல் நெடுஞ்சாலை
பம்மல், சென்னை-600 075.
விலை: ரூ.14 பக்கம்: 121

பெரும்புகழ் படைத்தவர்கள்தான் சுற்றுலா சென்றுவந்த செய்தியை நூலாக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. தான் கண்டதை எடுத்துச் சொல்லும் உணர்வு- திறன்-பெற்ற எவரும் தமது சுற்றுலா அனுபவத்தை நூலாக்கலாம். அந்த வகையில் அரசு ஊழியர் ஒருவர், தமது நண்பர்களுடன் மேற்கொண்ட சுற்றுலாவின் சிறப்பை, ஒரு நூலாக உலாவரச் செய்துள்ளார். இந்நூலைப் படிக்கும் போது நாமும் அந்தச் சுற்றுலாக் குழுவில் இடம் பெற்றுள்ள உணர்வே நமக்கு ஏற்படுகிறது.

புகழ்பெற்ற நகரங்கள், பாடல் பெற்ற தலங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்கள் ஆகியவை குறித்து விளக்கமான முறையிலே தகவல்களைக் கொடுத்துள்ளார்.

இந்நூலில் புவியியல் இருக்கிறது, புராணக் கதை இருக்கிறது. வரலாறு இருக்கிறது, வண்ணத் தமிழ் இலக்கியம் இருக்கிறது. சுற்றுலாச் சுகம் என்ற தலைப்பே நமது உள்ளத்தில் சுகமான உணர்வை உருவாக்குகிறது.

- தமிழ்ப்பித்தன்

## கடலுணவு

**ஆசிரியர்:** கடலூர். கே. வேலாயுதம்
**வெளியீடு:**
கே.என்.ஆர். பப்ளிகேஷன்ஸ்.
20 ஏ.ஜே. காலனி 2வது தெரு
சென்னை-600 013.
விலை:ரூ.15.50 பக்கம்:128

நூலின் தலைப்புதான் கடலுணவு என்றிருக்கிறதே தவிர உள்ளே ஏகப்பட்ட செய்திகளை நயமான மேற்கோள்களோடு புள்ளி விவரங்களோடு கூறியிருக்கிறார் ஆசிரியர். எல்லாம் கடலுணவு மிகச் சிறந்தது, பயன் தரக் கூடியது என்பதை வலியுறுத்தவே.

உலகமீன் செய்தி, கருவாடு, ஓடுயிர்கள், மெல்லுடலிகள், கடல் தாவரங்கள் ஆகியவை சுவையான செய்திகள்.

—என். குமாரசாமி

## கவிஞர் முத்தெழிலன் கவிதைகள்

**ஆசிரியர்:** மயிலை முத்தெழிலன்
**வெளியீடு:**
மலர்முகம் பதிப்பகம்,
43, கோதண்ட ராமர் கோயில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-33.
விலை:ரூ.12/- பக்கம்:112

மரபுக் கவிதைக் கனிகள் காய்த்துத் தொங்கும் தோட்டமாக இந்நூல் விளங்குகிறது. எளிய இனிய நடையில் அமைந்துள்ள மரபுக் கவிதைகளுக்கு நடுவே ஓரிரு புதுக்கவிதைகளும் காட்சி தருகின்றன. அவற்றைத் தவிர்த்திருக்கலாம்.

பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், வாணிதாசன் போன்ற கவிஞர்களும் அண்ணல் காந்தி, இந்திரா காந்தி, சர்.ஏ. ராமசாமி, டாக்டர்.அ.சிதம்பரநாதன் போன்ற பெருமக்களும் கவிதை மலர்களால் பூஜிக்கப்பட்டுள்ளனர், இந் நூலில்.

அகத்துறையையும் நூலாசிரியர் மறக்கவில்லை. 'கொத்தன்' என்னும் தலைப்பில் உள்ள கவிதை, நயமாக உள்ளது. உள்ளுறை உவமம் போல - கொத்தனை

# புத்தகங்கள்

புத்தகங்கள் இருவகைப்படும். ஒரு வகை பொழுதுபோக்க உதவுகிறவை. மற்றொரு வகை வாழ்க்கைக்கு உதவுகிறவை.

—ரஸ்கின்

உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே.

—கதே

நான் என்னைப் பொறுத்தவரையில் சிந்தனையற்றவனாய் இருந்தாலும் எந்தப் புத்தகமும் என் சிந்தனையைத் தூண்டத் தவறுவதில்லை.

—சார்லஸ் லாம்ப்

வைத்தே சுவையான அகப்பாடலை எழுதியுள்ள கவிஞரைப் பாராட்ட வேண்டும்.

## கம்பர் காட்டும் பாலைநிலம்

**ஆசிரியர்: புலவர் முத்து. எத்திராசன்.**
**வெளியீடு:**
அருண் புத்தகாலயம்,
104, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர்.நகர்.
சென்னை-600 078.

விலை:ரூ.12/- பக்கம்:112

தமிழ் மக்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து அவற்றிற்குரிய ஒழுக்கங்களையும் வகுத்துள்ளனர். அந்த ஐந்து நிலங்களில் 'பாலை'யும் ஒன்று. தொல்காப்பியர் காலத்தில் பாலை நிலம் சுட்டப்படவில்லை. அவருக்குப் பின்னர் முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலையாகியது.

பாலை என்றாலே, அது துன்பம் - கொடுமை, பிரிவுத்துயரம் போன்றவற்றின் உருவமாகத் திகழ்வது என்பது தெளிவு.

கம்பர் தமது இராமாயண காவியத்தில் பாலையைக் குறித்து வருணித்துப் பாடிய பாடல்களின் நயத்தை நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார் இந்நூலில். 'கம்பன் காட்டும் பாலை நிலம்' எனத் தலைப்பு இருந்தாலும், சங்கப் புலவர்கள் பலர், பாலை குறித்துப் பாடிய பாடல்களும் நூலில் விளக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் இது ஓர் ஒப்பற்ற ஒப்பியல் நூலாகவே விளங்குகிறது. நூலின் நடை நம்மைக் கவர்கிறது.

## காவிய நாயகர் கலைஞர்

**ஆசிரியர்: கலவை. பா. வரதன்**
**வெளியீடு:**
சுந்தரா பதிப்பகம்,
27 ஏ, நடுசெங்குந்தர் தெரு,
கலவை, வடஆர்க்காடு மாவட்டம்.

விலை:ரூ.10/- பக்கம்:103

முதல்வர் கலைஞர் அவர்களின் பல்துறைத் திறன் குறித்தும், அவரது வாழ்க்கை ஏட்டின் அரிய நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தொகுத்தும் இந்நூலில் எழுதியுள்ளார் நூலாசிரியர்.

சிறுவயது முதலே கலைஞரிடம் காணப்பட்டு வந்த இயக்கத் தொண்டு, அறப்போர் முறை, வெற்றிக் கொடி நாட்டும் திறன் ஆகியவை நன்கு விளக்கப்பட்டுள்ளன இந்நூலில். பேரறிஞர் அண்ணாவும் கலைஞரும் முதன் முதலாகச் சந்தித்த நிகழ்ச்சி மிகவும் சுவை ததும்பச் சொல்லப்பட்டிருக்கிறது.

கலைஞரின் மேடைப் பேச்சுத்திறன், எழுத்தாற்றல், கவிதைத் திறன், பத்திரிகைப் பணி, திரைப்படச் சாதனை, சேர்தல் ஈடுபாடு ஆகியவற்றைத் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார் நூலாசிரியர். நூலின் நடை - மரபுக் கவிதை நூல் ஒன்றைப் படிக்கும் மகிழ்ச்சியை நமக்கு அளிக்கிறது.

— எஸ். எஸ். சுந்தரம்

## பத்தாவது வகுப்பு படித்து முடித்தவர்களுக்குத் தொழிற்பயிற்சி வாய்ப்புகள்

**ஆசிரியர்: கேப்டன் மு. சிங்கராஜா**
**வெளியீடு:**
ரத்னபாலா மீடியா என்சினியர்ஸ்,
100, சி.குமாரசாமி ராஜா நகர்,
ராஜபாளையம்-626108.

விலை:ரூ.14/- பக்கம்:92.

தொழில் நுணுக்கத்தில் ஆர்வம் உள்ள மாணவர்கள் பத்தாவது வகுப்பு படித்து முடித்ததும் மேற்கொண்டு +2 படிக்க முடியுமா, பட்டதாரியாக முடியுமா, என்றெல்லாம் சிந்திப்பார்கள். பட்டதாரியாக முடியவில்லையே என்று சிலர் ஏங்குவார்கள். அத்தகைய மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டி நூலாக ''பத்தாவது வகுப்பு படித்து முடித்தவர்களுக்குத் தொழில் பயிற்சி வாய்ப்புகள்'' என்ற இந்நூலைப் பொறியாளர் கேப்டன் மு. சிங்கராஜா அவர்கள் எழுதியுள்ளார். நூலாசிரியர் எளிய இனிய நடையில் தொழிற் பயிற்சி சம்பந்தமாக எல்லா விவரங்களையும் தொகுத்து இந்நூலில் அளித்துள்ளார். தொழிற் பயிற்சி நிலையங்கள் பற்றிய முழு விவரங்கள், பயிற்சி வகுப்பில் சேர்வதற்கான விதிமுறைகள், சலுகைகள், இட ஒதுக்கீடு போன்ற பல விவரங்களை அரிதில் முயன்று சேகரித்துத் தொகுத்து, இந்நூலாசிரியர் தந்துள்ளார்.

தொழில் நுணுக்கப் பயிற்சி தொடர்பாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அரிய யோசனைகளை அளிக்கும் சிறந்த பயன் உள்ள நூல் இது.

—இராச மனோகரன்.

## இலக்கியச் சிந்தனைகள்
### நூற்களஞ்சியம்: தொகுதி-1

**ஆசிரியர்:**
பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை.
**வெளியீடு:**
வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம்,
2, 4-வது தறுக்குச் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-28.

விலை:ரூ.42 பக்கம்:532

இலக்கிய தீபமாய் விளங்கிய பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் ஆழ்ந்த புலமையில் விளைந்த அற்புத மலர்களே இக்கட்டுரைத் தொகுப்பு.

பேராசிரியர் அவர்கள் பல்வேறு கால கட்டங்களில் எழுதிய அரிய இலக்கியக் கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்த நூல் ஐந்து தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதற் தொகுதியில், இலக்கியச் சிந்தனைகளின் பிழிவைக் காண முடிகிறது. இரண்டாம் தொகுதியில், சங்க இலக்கியம் குறித்த தொகுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கடைச் சங்கம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை பற்றிய விளக்கமும், சங்ககாலச் செய்யுட்களின் சிறப்பும் கவிதை நயத்தோடு கூறப்பட்டுள்ளன.

இலக்கியச் சுவையில் இமயமாய் விளங்குவதுமுத்தொள்ளாயிரம். இது இந்நூலில் அழகுற விவரிக்கப்படுகிறது. இது குறித்த மூன்று கட்டுரைகள் நம் சிந்தனைக்கு விருந்தூட்டுவனவாக அமைந்துள்ளன.

மூன்றாம் தொகுதியில், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பற்றிய அரிய ஆராய்ச்சிக் குறிப்புகள், தெளிவுரைகள் இடம் பெற்றுள்ளன.

நான்காம் தொகுதியில், முற்காலக் காவியங்களான சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி ஆகியவை சிறப்பித்துக் கூறப்படுகின்றன

ஐந்தாம் தொகுதியில், புறத்திரட்டு முதலான தொகை நூல்கள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இதில் மறைந்துபோன நூல்கள் குறித்தும், முழுதும் அகப்படும் நூல்கள் குறித்தும் பேராசிரியரின் அரிய குறிப்புரைகள் பொதிந்துள்ளன.

தமிழ் இலக்கியக் கடலில் ஆழ்ந்தெடுத்த முத்துக்கள் கோத்த மாலையாக இந்நூல் விளங்குகிறது.

தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியும் இந்தத் தொகுதி, ஆராய்ச்சி மாணவர்க்கு மட்டுமல்ல, தமிழ் ஆர்வலர்க்கும் பெரிதும் துணை புரியும் என்பது உறுதி.

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசிடம் கையேந்தி நிற்காமல், அரசியல், சட்டம், பொருளாதாரம், வரிவிதிப்பு, நிர்வாகம் போன்றவற்றில் மாநில அரசுகள் உரிய தன்னாட்சி உரிமையைப் பெற்றிருக்க வேண்டும்'' என்பது தேசிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதியாகும். இவ்வகையில், மத்திய அரசு, அனைத்து முதலமைச்சர்களுடனும் கலந்தாலோசித்து, மத்திய-மாநில அரசுகளின் உறவுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்படும் என்று, தேசிய முன்னணி அரசு உறுதி அளித்துள்ளது. அந்த அடிப்படையில், பல்வேறு மாநிலங்களில் வாழும் மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்கும்வகையில், இந்திய ஆட்சி முறையின் கூட்டாட்சித் தன்மை வலுப்படுத்தப்படும். இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

தற்போதைய திட்ட அமைப்பில், மாநிலங்களின் மூலதனச்செலவு பெரும்பாலும் பாசனம், மின்சக்தி, சாலைகள், நடுத்தர- பெரிய தொழில் மேம்பாடுகள் ஆகியவற்றிற்காகவே செலவிடப்படுகின்றன. மத்திய அரசு, எரிசக்தித்துறைக்கும், அடிப்படை வசதிகளான ரயில்வே, துறைமுகங்கள், தேசிய நெடுஞ்சாலைகள் போன்றவற்றிற்கும் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றது. இந்த முதலீடுகள், மாநிலத் திட்டங்களுக்குத் தகுந்த வழிகளில் உறுதுணை புரிவதாக இருக்க வேண்டும்.

**தமிழ்நாட்டில் மின்சக்தி உற்பத்தி**

மின்சக்தி உற்பத்தியில் தமிழ்நாடு தொடர்ந்து பற்றாக்குறை நிலையில் உள்ளது. இம்மாநிலம் மின்சக்தி உற்பத்தியில் நீர்வள ஆதாரங்களை ஏற்கனவே முழு அளவில் பயன்படுத்தியுள்ளது. இனி மின் உற்பத்தியைப் பெருக்க அனல், அணு மின் உற்பத்தி மேம்பாட்டையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இம்மாநிலம் அனல்மின் உற்பத்தி செய்யத் தேவையான நிலக்கரிக்காக மத்திய அரசை நம்பியிருக்க வேண்டியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களுக்கு இதுவரையில் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து நிலக்கரி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இது நிறுத்தப்பட்டு, வட மாநிலங்களிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து இரயில்-கப்பல் மூலமாகக் கொண்டுவர வேண்டியுள்ளது. இதனால், இம்மாநிலத்திற்குக் கணிசமான அளவிற்கு நிதிச்சுமை ஏற்படுகிறது. தமிழநாட்டிலுள்ள அனல்மின் நிலையங்கள், மேலே குறிப்பிட்டவாறு, ஏனைய மாநிலங்களிலுள்ள நிலக்கரியையே பெரிதும் சார்ந்திருக்கையில், தமிழ்நாட்டில் வெட்டியெடுக்கப்படுகிற பழுப்பு நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தை அண்டை மாநிலங்களுக்கு வழங்குவது நியாயமற்ற செயலாகும். நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கே ஒதுக்கீடு செய்து மத்திய அரசு நியாயம் வழங்கவேண்டும்.

நிலக்கரி வழங்குவதற்காக மாற்றியமைக்கப்பட்ட ஏற்பாட்டினால், உண்டாகக்கூடிய கூடுதல் நிதிச்சுமையும் சரிசெய்யப்பட வேண்டும்.

வேறுவகையில் சொன்னால், நாட்டிலுள்ள அனைத்து அனல்மின் நிலையங்களிலும் ஒரே விலையில் நிலக்கரி வழங்கப்படுகிறது என்பதை உறுதிசெய்வதற்காக, நேரடியாக உதவித்தொகை வழங்குவதை அல்லது நிலக்கரியை அனுப்புவதற்கான கப்பல் சரக்குக் கட்டணத்தை ஒரேமாதிரி வைத்துவரும் முறையை மீண்டும் கொண்டுவரலாமென்று நாம் கேட்டுக் கொள்கிறோம். கூடங்குளத்தில் அமைக்கப்படவுள்ள அணுமின்நிலையத்தின் வளர்ச்சிக்காகக் கணிசமான தொகையைச் செலவிட மாநில அரசு முன்வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த அணுமின்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் குறைந்தது 75 சதவீதத்தையாவது இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்வதன்மூலம் மத்திய அரசு, இம்மாநிலத்திற்கு ஏற்படும் நிதிச்சுமையை ஈடுசெய்ய வேண்டும். மின்துறையில், தனியார்துறை பங்குகொள்வதை ஊக்குவிக்க விரைந்து முடிவெடுக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஜெயங்கொண்டான் என்னுமிடத்தில் பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுப்பதற்காக மத்திய அரசு முதலீடு செய்வது குறித்தும், அரசுத் துறையும். தனியார் துறையும், இம்மாநிலத்தில் மின் உற்பத்தி செய்வதற்கென்றே பழுப்பு நிலக்கரியை ஒதுக்குவது குறித்தும் விரைந்து முடிவெடுக்க வேண்டும்.

**நெய்வேலி நிலக்கரி**
**தமிழகத்திற்கே தாரீர்!**

**தமிழகத்தில் பெருந் தொழில்கள்:**

சென்னையிலும், தஞ்சாவூர்ப் பகுதியிலும், உள்ள பெட்ரோலிய இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு, காவிரிப்படுகையில் கிடைக்கும் எண்ணெயைப் பயன்படுத்துவதிலும், பம்பாய்க் கடற்பகுதியிலிருந்து கிடைக்கும் இயற்கை எரிவாயுவுடன் தென்னகத்தை இணைக்க வேண்டும் என்பதிலும் மத்திய அரசு போதிய அளவு முதலீடு செய்ய வேண்டுமென்பதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். தற்போது, உருட்டாலையாக இயங்கி வருகிற சேலம் உருக்குத் தொழிற்சாலையை ஒருங்கிணைந்த உருக்குத் தொழிற்சாலையாக மாற்றவேண்டியது மற்றொரு முக்கியத் திட்டமாகும். சேதுசமுத்திரம் கால்வாய்த் திட்டம் தமிழ்நாட்டிற்குப் பயனளிப்பதோடு மட்டுமின்றி, இந்தியத் தீபகற்பம் முழுவதிலும் கப்பல் போக்குவரத்து லாபகரமாக நடைபெறுவதற்கும் பெரிதும் உதவும். தொழில் தொடங்குவதற்கான அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் பெறும் ஏற்பாட்டின்கீழ் இயன்றவரையில் தனியார்துறை முதலீடுகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் நடைமுறை விரைவுபடுத்தப்படவேண்டுமென்றும், மாநில அரசுகள் அக்கறை கொண்டுள்ள பெரும் திட்டப்பணிகளுக்குச் சிறப்பு முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென்றும்

நாங்கள் வலியுறுத்துகிறோம். குறிப்பாக, சென்னையில் அமைக்கக் கருதப்பட்டுள்ள நீர்க்கரிமப் பெட்ரோலிய ஆலைக்கு மத்திய அரசு ஒப்புதலளிக்க வேண்டுமென நாங்கள் வலியுறுத்துகிறோம். இத்தொழிற்சாலைக்குத் தேவையான அனுமதிக்கடிதம் வழங்கப்பட்டு, பல தொடக்கப்பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன.

### நகர்ப்புற வளர்ச்சிக்குச் சிறப்பு உதவி

தமிழ்நாடு நகரங்கள் மிகுந்த ஒரு மாநிலமாக இருப்பதால், நகர்ப்புற வளர்ச்சிக்காக, குறிப்பாக குடிநீர்வழங்கல், சென்னை மாநகர விரைவுப் போக்குவரத்து ஆகிய திட்டங்களுக்காக இம்மாநிலத்திற்குச் சிறப்பு உதவி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே, உயர் முன்னுரிமை அளித்து எட்டாவது திட்டத்தில் மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் வருகின்ற இந்த முக்கியமான திட்டப்பணிகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படும் என நம்புகிறோம்.

முடிவாக, இந்தச் செயல்திட்ட அறிக்கையைத் தயாரித்து, விரிவான விவாதத்திற்காக தேசிய வளர்ச்சிக்குழுவின் முன் வைத்ததற்காகப் புதிய அரசையும், புதிய திட்டக்குழுவையும் மீண்டுமொருமுறை நான் பாராட்டுகிறேன். எட்டாவது திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பணி விரைவுபடுத்தப்படும் என நம்புகிறேன். இத்திட்டம் வகுக்கப்படுகையில் அனைத்து நிலைகளிலும் மாநில அரசுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு கலந்தாலோசிக்கப்படும் என்றும், தேசிய வளர்ச்சிக்குழு அவசியமானபோதெல்லாம் கூட்டப்பட்டு, திட்டம் வகுப்பதற்குத் தேவையான ஆலோசனையும், ஆதரவும் பெறப்படும் என்றும் நம்புகிறோம். நமது கூட்டாட்சி அமைப்பில் திட்டம் வகுக்கும் நடைமுறையை ஓர் இரயிலுடன் ஒப்பிடுவோமானால், இந்தச் செயல்திட்ட அறிக்கை, அந்த இரயிலைச் சரியான பாதையிலேயே இயங்கச் செய்வது என்று கூறலாம். திட்டக்குழு என்னும் மத்திய அரசின் எஞ்சின், வேகம் பெற்று அனைத்து மாநிலங்களையும் ஒன்றாக இணைத்து இழுத்துச் செல்லவேண்டியது அவசியமாகும். மாநிலங்கள் ஒவ்வொன்றும் மக்களடங்கிய இரயில் பெட்டிகளாகும்.



எட்டாவது திட்ட அணுகுமுறை பற்றிய கருத்துக்களைக் கேட்டறியும் வாய்ப்பு நேற்று நமக்குக் கிடைத்தது. இன்று இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ள சில முக்கியமான பிரச்சினைகள் குறித்தும், நடைமுறை குறித்தும் விவாதிக்க இருக்கிறோம்.

முதலில் மக்கள் தொகை பற்றியும் மனிதவள மேம்பாடு பற்றியும் பேச விழைகிறேன். பிறப்பு விகிதத்தைத் தமிழகம் ஏற்கெனவே 22.5 ஆகக் குறைத்து விட்டிருக்கிறது. மக்கள் தொகைக் கட்டுப்பாடு முயற்சிக்குக் கிடைக்கும் வெற்றியானது, மாநிலத்தின் தேவைகளுக்குப் பாதகமாக முடிந்துவிடும் என்று ஒரு அச்சம் இருந்து வருகிறது. இந்த அச்சத்தைப் போக்கியாக வேண்டும். மக்கட்தொகைக் கட்டுப்பாடு சம்பந்தமான இலக்குகளை அடைய திட்டவட்டமான ஊக்குவிப்புகளை மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய கட்டத்தை எட்டியிருக்கிறோம்.

### பெண்கள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள்

மனிதவள மேம்பாட்டின் முக்கியத்துவத்தை அதிலும் முனைப்பாக மகளிர், பிற்படுத்தப்பட்ட பிரிவினர், மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினர், ஆதி திராவிடர்கள், பழங்குடிப்பிரிவினர் ஆகியவர்களைக் கருத்தில் கொண்டு, இந்த முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழகத்தில் அரசுப் பணிகளில் 30 சதவிகித காலி இடங்களை மகளிருக்காக ஒதுக்கியிருக்கிறோம். துவக்கப்பள்ளிகளில் மூன்றாவது வகுப்பு வரை பெண்கள் மட்டுமே ஆசிரியைகளாக நியமிக்கப்படுகிறார்கள்.

இந்த ஏற்பாட்டை ஐந்தாவது வகுப்பு வரை விரிவுபடுத்தவும் உத்தேசித்துள்ளோம். பதினெட்டு வயதில், எட்டாவது வகுப்பு படித்து முடித்துள்ள ஏழைப் பெண்களுக்கு ரூ.5,000 திருமண உதவி வழங்கும் புதிய திட்டமொன்றையும் தொடங்கியிருக்கிறோம். அதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதுவரை, ஓராண்டு காலத்தில் 18,000 பெண்கள் இதனால் பயனடைந்திருக்கிறார்கள். விதவைத் திருமணம் மற்றும் ஆதி திராவிடர், பழங்குடிப் பிரிவினருடன் நடக்கும் கலப்புத் திருமணம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக, ரூ.5000 அளவுக்கு சிறப்பு உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது. பெண் குழந்தைகளுக்கு "சொத்தில் சம உரிமையும்" வழங்கியிருக்கிறோம். ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வியும் அளிக்கிறோம். மகளிருக்குப் பொருளாதார பலம் அளிப்பதற்காக, ரூ.45.8 கோடி செலவில் சிறப்புத் திட்டம் ஒன்றைத் துவக்கியுள்ளோம். வேளாண்மை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, கிராமக் கைத்தொழில்கள் ஆகிய துறைகளில் 40,000 பெண்கள் இதனால் பயனடைவர்.

### பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காக

இந்த ஆண்டு பட்ஜெட்டில் மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காக இருமடங்குத் தொகை ஒதுக்கியுள்ளோம். சென்ற ஆண்டில், மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காக தனியாக 20 சதவிகிதம் ஒதுக்கியதன் மூலம், கல்வி மற்றும் வேலைவாய்ப்புத் துறைகளில் அவர்கள் குறிப்பிடத்தக்க அளவு பயனடையுமாறு பார்த்துக் கொண்டிருக்கிறோம். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ளும் என்றும் நம்புகிறோம்.

### நிலச் சீர்திருத்தத்திற்கு முக்கியத்துவம்

தமிழகத்தில் மொத்த உழைப்பாளிகளில் விவசாயத் தொழிலாளர்களின் விகிதாச்சாரம் மிக அதிகமாக அதிகரித்துள்ளது. தேசிய சராசரி அதிகரிப்பு விகிதத்தைவிட மிகவும் அதிகமாக உள்ளது. நிலச் சீர்திருத்தங்களுக்கு நாங்கள் மிக அதிக முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். பினாமி நில பேரங்களைப் பற்றி விசாரணை நடத்தி, அத்தகைய நிலங்களை நிலமற்றவர்களுக்கு விநியோகிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். வளர்ச்சிப் பணிகளில், கிராமப்புற ஏழை மக்கள் பங்கேற்கச் செய்வதற்கான முயற்சிகளைப் பெருக்குவதற்காகப் பாடுபட வேண்டுமென்பதே எங்கள் நோக்கமாகும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் போது, நிலச்சீர்திருத்தங்களுக்காகக் கடனுதவி அளிக்கும் விஷயத்தில், வர்த்தக ரீதியிலான வங்கிகளும் பங்குபெற வேண்டியது அவசியமாகும்.

திட்ட வருவாய் மானியங்களை நிர்ணயிக்கும் விஷயத்தில், ஒன்பதாவது நிதிக் கமிஷன், மனித வள மேம்பாட்டுக்கான திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதில் நல்ல சாதனை கண்டுள்ள தமிழகம் போன்ற மாநிலங்களைத் தண்டித்திருப்பதாகவே தோன்றுகிறது. 1990 முதல் 1995-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் மக்கள் தொகை எந்த அளவிலிருக்கும் என்பதை மதிப்பிட்டறியும் வகையில் உள்ள புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதன் மூலம், 9-வது நிதிக்குழு இந்த பின்னடைவை மேலும் சிக்கலாக்கி விட்டிருக்கிறது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கும், மனித வள மேம்பாட்டுக்கும் முதலீடு செய்துள்ள ஒரு மாநிலம் இந்த வகையில், மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையை- குறிப்பாக, எட்டாவது திட்டத்தின் வெற்றிக்கே அச்சாணி போல் விளங்கும் மக்கள் தொகை, மனித வள மேம்பாடு ஆகிய பிரச்சினைகளைப் பரிசீலிக்கும்போது - இந்தக் கவுன்சிலின் ஒரு குழு இந்தப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்தாக வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

வேலை வாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்து கொண்டிருக்கும் வேலையற்றோர் எண்ணிக்கை, பல மாநிலங்களில் குறைந்திருப்பதாகச் சொல்லப்படும் நிலைமையில், தமிழகத்தில் இந்த எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. மொத்த உழைப்பாளிகள் தொகையில், நிலமற்ற கிராம விவசாயத் தொழிலாளர்களின் விகிதாச்சாரம் வேகமாக அதிகரித்து வருவது, தீவிர கவலைக்கு உரிய விஷயமாகும். வேலை வாய்ப்பு உத்தரவாத திட்டத்தை, நாடு பூராவிலும் அமல் நடத்த வேண்டும். ஒரு சில மாவட்டங்களுடன் மட்டும் நிறுத்திக் கொண்டு விடலாகாது. வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்விக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

திறமை மற்றும் சிக்கனத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை நான் ஆமோதிக்கிறேன். இந்த விஷயத்தில் தமிழ்நாட்டின் சாதனை நல்லபடி உள்ளது. எங்களது பாசன வாய்ப்புகள் அனைத்தையும் முழு அளவில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். பாசன நீரைச் சேமிக்கும் பணிக்காக (சிக்கனப் படுத்தும் பணிக்காக) ஏராளமாக முதலீடு செய்து வருகிறோம். எங்களுடைய தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் லோட் ஃபேக்டர் (Load Factor) 80.1 சதவிகிதமாகும். நாட்டிலேயே மிக அதிக பட்ச சாதனை கண்டுள்ள மின்நிலையங்களில் இதுவும் ஒன்றாகும். எரிபொருளைத் (எண்ணெயை) திறம்படப் பயன்படுத்தும் விஷயத்தில் எங்களது போக்குவரத்துக் கழகங்கள் நல்ல சாதனை புரிந்துள்ளது. வளங்களையும், வசதிகளையும் திறம்பட பயன்படுத்துவது பற்றி பேசுகையில், தமிழகத்தின் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு தயாரிக்கும் மின்சாரம் முழுவதையும், இந்த மாநிலத்தின் உபயோகத்துக்காக மட்டுமே ஒதுக்க வேண்டும் என்பதுதான் பொருத்தமாகும்.

வளர்ச்சிப் பணிகளில் அதிகாரங்கள் பரவலாக்கப் பட வேண்டும் என்பதற்கு எட்டாவது திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். அதிகாரப் பரவலை, வெவ்வேறு பாணிகளில் சாதிக்க முடியும். நாங்கள் ஏற்கனவே

## மாநிலங்களுக்குப் போதிய நிதி வசதி கிடைக்க வேண்டும்

தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தில் பலதரப்பட்ட திருத்தங்களைச் செய்திருக்கிறோம். 5 ஆண்டுக்கு ஒரு முறை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒழுங்காகத் தேர்தல் நடத்த, இந்தத் திருத்தங்கள் வகை செய்துள்ளன. மகளிருக்கு 30 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் அவர்களது எண்ணிக்கையின் விகிதாச்சாரத்தில் இடம் ஒதுக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. திட்டவட்டமாக சில பணிகளை நிறைவேற்றும் பொறுப்பை ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி வசதிகளைப் பெருக்குவதற்கான பரிந்துரைகளை அளிக்க வல்லுநர் குழு ஒன்றை அமைக்க வகை செய்திருக்கிறது. இந்த வல்லுநர் குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுவிட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி வசதியைப் பெருக்குவதற்கான முடிவுகளை விரைவில் எடுக்கவிருக்கிறோம்.

நான் நேற்று சொன்னது போல, அதிகாரத்தைப் பரவல் ஆக்குவது என்பது, மத்தியிலிருந்து தொடங்க வேண்டும். நிதியுதவி அமைப்புகள் வழங்கும் கடனுதவிதான், எட்டாவது திட்ட வளர்ச்சிப் பணிகளில் முக்கிய பங்கு வகிக்கப் போகின்றது. முடிவுகள் எடுக்கும் அதிகாரத்தைப்

பரவலாக்க வேண்டுமானால், வர்த்தக ரீதியிலான வங்கிகளுக்கு ஸ்தல வாரியங்களை (Local Boards) அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். மத்திய-மாநில உறவு முறை பற்றி விவாதிப்பதற்காக, மாநிலங்கள் குழுவின் (இண்டர் ஸ்டேட் கவுன்சில்) கூட்டம் விரைவில் பெங்களூரில் நடக்கும் என்று பிரதமர் நேற்று தெரிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். வருங்காலத்துக்கு இது ஒரு நல்ல அறிகுறியாகும். தேசிய வளர்ச்சிக் கவுன்சிலும் அடிக்கடி தென்மாநிலங்கள் ஏதாவது ஒன்றில் கூட வேண்டும் என்றும் யோசனை கூற விரும்புகிறேன்.

**அரசுத்துறை நிறுவனங்கள் மூலம் கடன் பத்திரங்கள்!**

இப்போது, நிதி வசதி நிர்வாகப் பிரச்சினை சம்பந்தமாக சில திட்டவட்டமான யோசனைகளைக் கூற விரும்புகிறேன். மாநிலங்கள் எட்டாவது திட்டப்பணிகளைப் பயனுள்ள வகையில் மேற்கொள்ள வேண்டுமெனில், அவற்றின் நிதி வசதி அடிப்படையை வலுப்படுத்தியாக வேண்டும். மத்திய ஆயத்தீர்வைகளில் அனைத்து மாநிலங்களின் பங்கு 37.5 சதவிகிதமாக இருந்து வருவதை 42.5 சதவிகிதமாக உயர்த்தியாக வேண்டும். இது முதலில் 40 சதவிகிதமாக இருந்தது. ஒன்பதாவது நிதிக் கமிஷன் இதை 37.5 சதவிகிதமாகக் குறைத்து விட்டது. அதைச் சரி செய்வதற்காகத்தான் இந்த யோசனை. மனிதவள மேம்பாடு, அதிகாரப் பரவல். வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்குச்சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், மாநிலங்களுக்குப் போதிய நிதி வசதி கிடைக்கச் செய்வது தான் பொருத்தமாகும். சாதாரணமாக, மாநிலத் திட்டங்களுக்கு மத்திய உதவி 10 சதவிகித அளவில் இருந்து வருகிறது. இதைப் பெரிதும் அதிகரித்தாக வேண்டியது அவசியமாகும். அரசுத் துறை நிறுவனங்கள் மூலதன மார்க்கெட்டில் கடன் பத்திரங்கள் வெளியிட இப்போது வாய்ப்பு இல்லை. அரசுத் துறை நிறுவனங்கள் மூலதனக் கடன் பத்திரங்கள் வெளியிடுவதை அனுமதிக்க வேண்டும் என சிபாரிசு செய்கிறேன்.

கடன்பத்திர வெளியீடுகள் மூலம் எழுப்பப்படும் நிதியில், தற்போது மாநிலங்களின் பங்குக்கு 28 சதவிகிதந்தான் கிடைக்கிறது. இதை 50 சதவிகிதமாக அதிகரிக்க வேண்டும். மாநிலங்களின் திட்டங்களுக்கு நிதி வசதி திரட்டுவதில், சிறு சேமிப்பின் பங்கு மிகவும் முக்கியமானதாக ஆகிவிட்டிருக்கிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக, அண்மை ஆண்டுகளில் மத்திய அரசு செய்துள்ள மாறுதல்கள் சிறுசேமிப்பு வசூலைப் பாதித்துள்ளது. இந்தப் பிரச்சினை பற்றிப் பரிசீலிக்க ஒரு குழுவை அமைக்கலாம்.

''கன்சைன்மெண்ட் டாக்ஸ்'' என்று சொல்லப்படும் சரக்குக் கட்டண வரி விதிப்பது பற்றி ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தாக வேண்டும். கார்ப்பரேஷன் வரியைப்பகிர்ந்தளிக்க வேண்டும் என்று, தொடர்ந்து பல நிதிக் கமிஷன்களும், சர்க்காரியா கமிஷனும் பரிந்துரைகள் செய்திருக்கின்றன. கார்ப்பரேட் துறைக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதில், மாநில அரசுகளே அதிக பொறுப்பு ஏற்க வேண்டியிருப்பதால், இந்த வரியையும் பகிரத்தக்க வரியாக ஆக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

எட்டாவது திட்டம் சம்பந்தப்பட்ட பல முக்கியப் பிரச்சினைகள் பற்றி நாம் பயனுள்ள வகையில் விவாதித்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். மனம் விட்டுப் பேசி நாம் நடத்திய இந்த விவாதம், 8-வது திட்டம் நமது மக்களுக்கு, குறிப்பாக ஏழை-எளிய மக்களுக்கு உண்மையிலேயே பயன் அளிக்கும் வகையில் அமைய உதவும் என நம்புகிறேன்.

**(புதுடெல்லியில் ஜூன் 18,19 ஆகிய இரு நாட்கள் நடைபெற்ற, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை)**

## ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்



**கோவையிலே பிறந்து விஞ்ஞானத் துறையிலே அதிக வசதி வாய்ப்புகள் இல்லாத கால கட்டத்திலேயே விஞ்ஞானத்தில் பல புதுமைகளைச் செய்து, விவசாயத்துறையிலே பல அற்புதங்களைச் செய்து காட்டியவர் ஜி.டி. நாயுடு என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் அவருக்கு அன்றிருந்த அரசுகள் எந்தவிதமான அனுமதியும், அங்கீகாரமும் தராத காரணத்தால் குடத்திற்குள் வைக்கப் பட்ட விளக்காக அவருடைய ஆராய்ச்சிகள் போய்விட்டன.**

**அவருடைய பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்ல இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் ''ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்'' என்று அறிவிக்கப்படுகிறது. வேந்தர் அவர்களையும் கலந்து கொண்டு இதனை அறிவிக்கிறேன்.**

**—முதல்வர் கலைஞர்**
**(வேளாண்மைப் பல்கலைக் கழக விழாவில்)**
**24-6-[illegible]**



# தலைசிறந்த தேசபக்தர் காயிதே மில்லத்

## — மாண்புமிகு முதல்வர் கலைஞர்

கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களுடைய பிறந்த இனிய நாளில் அவர் அமைதி கொண்டிருக்கின்ற இடத்தில் மலர்ச்சரங்களை வைத்து மரியாதை செலுத்துவது மாத்திரமல்ல, அவர் ஆற்றியுள்ள பெரும் பணிகளையும், அவருடைய ஆற்றலையும், அன்பையும், பண்பையும் எண்ணிப் பார்த்து, அவர் விட்டுச் சென்றுள்ள செயல்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு உறுதியெடுத்துக் கொள்கிற ஒரு நிகழ்வாக இதனைக் கருதி நாமெல்லாம் இங்கே குழுமியிருக்கிறோம்.

அப்தல் லத்தீப் அவர்கள் இங்கு காயிதே மில்லத் அவர்களைச் சிறப்பித்து- பெருமைப் படுத்தி- அவருடைய அரிய பெரிய ஆற்றல்களையெல்லாம் எடுத்தியம்பி, அதோடு 3-ஆம் தேதி அன்று மழை வந்து விட்ட காரணத்தால் என்னைப்பற்றி அன்று அதிகம் பேச முடியாத சூழ்நிலையில் அவைகளையெல்லாம் இங்கே பேசி தன்னுடைய ஆசையைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்.

அவர் இந்தத் தொகுதியிலே இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்தேன் என்பதைத் தொகுதி மக்களைத் திருப்திப்படுத்த எடுத்துச் சொன்னார் என்றாலுங்கூட, இஸ்லாமியப் பெருமக்களால் போற்றத்தக்க ஒரு பெருமகனின் இந்த நாளை இன்றைக்கு நினைவுகூர்வதும், அவர் எந்த ஒற்றுமைக்காக, எந்த சகோதரத்துவத்திற்காகப் பாடுபட்டாரோ அதை நிலைநாட்டுவதும் நம்முடைய கடமை என்பதை உணர்ந்திருக்கின்ற நாம்- தமிழ்நாட்டில் கடந்த சில திங்கள்களாக அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சில சம்பவங்கள் சுட்டிக்காட்டப்படும்போது, நமக்கு அந்தச் சம்பவத்தினுடைய நடப்புகளைப் பற்றிய நினைவுகள் வருவதற்கு முன்பு, காயிதே மில்லத் அவர்கள், பெரியார் அவர்கள், அண்ணா அவர்கள் ஆகியோருடைய நினைவு தான் முந்திக்கொண்டு வருவது இயல்பாக இருக்கிறது.

அவர் இந்தியத் திருநாட்டிலே குறிப்பாகவும், சிறப்பாகவும் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டத்தக்க வகையிலே தமிழ்நாட்டில் மத வேறுபாடுகளைக் களையவும், அதன்காரணமாக வருகின்ற பூசல்களுக்குத் தடுப்புச் சுவர் எழுப்பவும் பாடுபட்ட ஏந்தல் என்ற காரணத்தால்தான் பெரியாரை, அண்ணாவை எண்ணுகிற நேரத்தில் தொடர்ந்து எண்ணப்படுகின்ற ஒரு பெயராக காயிதே மில்லத் அவர்களின் பெயரும் இருந்து வருகின்றது. சகிப்புத் தன்மையின் மறுவடிவமாகத் திகழ்ந்தவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள். எளிமையின் திருவுருவமாகத் திகழ்ந்தவர் காயிதேமில்லத் அவர்கள். இனிய இயல்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் காயிதே மில்லத் அவர்கள்.

எனக்கிருக்கின்ற ஆறுதல் எல்லாம் அவர் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்தது மாத்திரமல்ல- வாழ்ந்து கொண்டிருப்பது மாத்திரமல்ல- அவரோடு நெருங்கிப் பழகுகின்ற, அளவளாவுகின்ற நிலைமைகள் பலமுறை ஏற்பட்டதுதான் எனக்கிருக்கின்ற ஆறுதல்- மன மகிழ்ச்சி.

அரசியல்ரீதியாக, சமுதாயரீதியாக, பல பிரச்சினைகளை அவரோடு கலந்து பேசி அளவளாவுகின்ற கட்டங்கள் எத்தனையோ உண்டு. அவரு



## இலக்கியம் - வயல்!
## இலக்கணம் - வரப்பு!

முதலிலே இலக்கணமா, இலக்கியமா என்றால், முதலிலே இலக்கியம் தான் இருந்திருக்க முடியும். சீப்பு செய்து கொண்டு அதற்குப் பிறகு யாரும் தலை முடியை வளர்க்க மாட்டார்கள். தலை முடி வளர்ந்தால்தான் சீப்பு செய்வார்கள். வரப்புக் கட்டிக் கொண்டு அதற்குப் பிறகு யாரும் வயலை உருவாக்க மாட்டார்கள். உருவான வயலுக்குத்தான் வரப்பு கட்டுவார்கள். அதைப் போல இலக்கியத்திற்கு வரப்பாக இலக்கணம் - இலக்கியத்தை அழகு படுத்துகின்ற சீப்பாக இலக்கணம் அமைந்திருக்கிறது.

—முதல்வர் கலைஞர்

டைய பல்வேறு கோரிக்கைகள்- பொதுநல அடிப்படையிலே எழுந்த கோரிக்கைகள்- முன்பு கழக அரசு இருந்த காலத்திலும்-மீண்டும் அவர் இல்லாது நம்முடைய உள்ளத்திலே இருக்கின்ற நேரத்தில், இப்போது கழக அரசு அமைந்திருக்கின்ற நேரத்திலும் ஏற்கப்பட்டு ஆவண செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் சிறுபான்மை சமுதாயமாக இருக்கின்ற இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு ஒரு பாதுகாப்பு அரணாக இன்றுள்ள அரசு அமைந்திருக்கின்றது. அரசு என்கிற நிலையிலே மாத்திரமல்ல. இந்த அரசை நடத்துகின்ற கழகம் என்ற நிலைமையிலே கூட எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும் என்றைக்கும் சிறுபான்மை மக்களுக்கு- குறிப்பாக இஸ்லாமியப் பெருமக்களுக்கு தி.மு.கழகம் ஒரு பாதுகாப்பு அரண் என்பதை இன்றைக்கு அல்ல- இந்த இடத்திலே அல்ல- எல்லா இடத்திலும் நான் எடுத்துச் சொல்லி வருபவன்.

தலைசிறந்த தேச பக்தர் காயிதே மில்லத் அவர்கள். ஆனால் வானத்திலே இருக்கின்ற சூரியனைப் பார்த்து சில நேரங்களில் பூமியிலே இருக்கின்ற ஓணான்கள் அண்ணாந்து பார்த்துப் பழிப்பதுண்டு. சூரியனுக்கு அருகே சென்றால் என்னவாகுமென்று அதற்குத் தெரியாது. நமக்குத் தெரியும். அதைப்போல காயிதே மில்லத் அவர்களின் தேச பக்தியைக்கேலி செய்கின்ற, விமர்சனம் செய்கின்ற சிலர்- அவர் மறைந்த பிறகும் கூட இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது வேதனையே மிஞ்சுகின்றது. ஏனென்றால் அவர் தலைசிறந்த தேச பக்தர் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டுகள் தேவையில்லை. பாராளுமன்றத்திலே அவர் ஆற்றிய உரை ஒன்றே போதுமானது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின்போது- பாகிஸ்தான் போராட்டத்தின் போது- இந்திய ராணுவத்தில் என்னுடைய மகனைச் சேர்த்து, போருக்கு அனுப்ப நான் தயாராக இருக்கிறேன் என்று சொன்ன உரை ஒன்றே அவர் எத்தகைய தேச பக்தர் என்பதற்குச் சரியான சான்றாகும்.

அப்படிப்பட்ட தேச பக்தர், நாட்டுப் பற்றாளர், மொழிப் பற்றாளரும்கூட! தமிழ்மொழி இந்தியாவின் பொது மொழியாக, தேசிய மொழியாக ஆக வேண்டும் என்று திட்டவட்டமாக தெளிவாகத் தெரிவித்தவர். இந்தியாவின் பொது மொழியாக எது இருப்பது என்ற சர்ச்சை அரசியல் நிர்ணய சபையிலே எழுந்த நேரத்தில்- இலக்கிய ரீதியாக, இலக்கண ரீதியாக, வரலாற்று ரீதியாக, வளம் பொருந்திய ஒரே மொழி தமிழ் மொழிதான், அந்த மொழிதான் இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று எடுத்துக்கூறி தமிழ் மொழிப் பற்றாளர் என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

அவருடைய புகழை இங்கு பாடுகின்ற இந்த நேரத்தில் லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல எனக்கொரு வாய்ப்பாக நான் பிறந்தது- ஜூன் திங்கள் 3-ஆம் தேதி, அவர் பிறந்தது ஜூன் திங்கள் 5-ஆம் தேதி என்பதேகூட— எப்படியும் நான் இந்த 5-ஆம் தேதியன்று அவர் அமைதி கொண்டிருக்கின்ற இடத்திற்கு வரக்கூடிய வகையிலே, 3-ஆம் தேதி என்று என்னுடைய பிறந்த நாள் அமைந்திருப்பதால் நான் சென்னையிலே 5-ஆம் தேதியிருக்கவும், இங்கே வரவுமான சூழ்நிலை அமைந்திருப்பது- இயற்கையிலே இது நம்மிடையே இருக்கின்ற ஒற்றுமைக்கு அடையாளம் என்று கூறி வாழ்க காயிதே மில்லத் அவர்களின் புகழ் என்று வாழ்த்துகிறேன்.

**(கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் 95-வது பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவரது நினைவிடத்திற்குச் சென்று மலரஞ்சலி செலுத்தி ஆற்றிய உரையிலிருந்து)**



நான்காம் அட்டை சொல்லும் செய்தி

# சென்னைத் துறைமுக வரலாறு



சென்னைத் துறைமுகம் உருவான கதையே மிகச் சுவையான ஒன்று. இப்போது நாமிருக்கும் இந்த சென்னை நகரம் 16-ஆம் நூற்றாண்டிலே, அதாவது ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்னால் - மீன் பிடிப்பவர்கள் வசிக்கும் ஒரு குக்கிராமமாகவே இருந்தது. அப்போது இதை சென்னைப் பட்டணம் என்பார்கள். நமது நாட்டிற்கு அப்போது வந்த ஆங்கிலேயர்கள், கிழக்கிந்திய கம்பெனி என்கிற ஓர் ஆங்கிலேய வாணிப நிறுவனத்தை இங்கே அமைத்தார்கள்.

17-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இவர்களுடைய வாணிபம் இங்கே மும்முரம் அடைந்தது. இந்நிலையில், இங்கே துறைமுகம் இல்லாதது அவர்களுக்குத் தொல்லையாயிருந்தது. எனினும், கடலில் கரையிலிருந்து கால் மைல் தூரத்தில் கப்பல்களை நிறுத்தி, மசூலா எனப்படும் சிறிய படகுகள் மூலமாக சரக்குகளைக் கொண்டு வந்து கரை சேர்த்தார்கள். இந்தப் படகுகள் 1 டன் முதல் 10 டன் எடையுள்ள சரக்குகளையே ஏற்றிவரும் சக்தி படைத்தவையாக இருந்தன.

அப்போது ஆங்கிலேயரின் வாணிப நிறுவனம் தற்போது தமிழக அரசு தலைமைச் செயலகம் இருக்கும் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளேயே இருந்தது. கப்பல்கள் வருவதற்கு வசதியாக இருக்கும் வகையில், கோட்டையிலேயே 1796-ஆம் ஆண்டு 100 அடி உயரமுள்ள கலங்கரை விளக்கத்தை அமைத்தனர். இது தேங்காய் எண்ணெய்யால் எரிந்தது. கடல் பகுதிக்குள் இதன் ஒளி 17 மைல் தூரம் தெரிந்தது.

1875-ஆம் ஆண்டு வரை இங்கே இயற்கைத் துறைமுகம் என்றோ, செயற்கைத் துறைமுகம் என்றோ ஒன்றும் கிடையாது. திறந்த மணல் வெளிப்பரப்பே இருந்தது. இது மழையாலும், புயலாலும் பாதிக்கும் பகுதியாகவே இருந்தது.

18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கிலேயரின் வணிகம் பெருகியது. அதனால், கிழக்கிந்திய கம்பெனி வலுவடைந்து வந்தது. வியாபாரிகளின் வசதிக்காக கோட்டைக்குள் இருந்த சுங்க இலாகா அலுவலகம், இப்போதிருக்கும் கடற்கரை மின் வண்டி நிலையத்திற்கு அருகில் இருக்கும் சுங்க இலாகா அலுவலக இடத்திற்கு மாற்றப்பட்டது. இதன் காரணமாக கோட்டைக்கு எதிரே கடலில் நிறுத்தப்பட்டு வந்த கப்பல்கள், கடற்கரை மின் வண்டி நிலையத்திற்கு அருகில் மாற்றப்பட்ட சுங்க இலாகா அலுவலகத்திற்கு எதிரே, கடலில் நிற்கத் தொடங்கின. நாளடைவில் கப்பல்கள் அதிகமாக வரத் தொடங்கியதால், மசூலா படகுகள் மூலம் சரக்குகளை ஏற்றிக் கொண்டு கரைக்கு வருவதில் நட்டம் ஏற்பட்டது. இதைத் தடுப்பதற்காக திட்டம் தீட்டினார்கள். இதுதான், பின்னாளில் துறைமுகம் தோன்றுவதற்கும் ஒரு முன்னோடியாக இருந்தது.

முதற்கட்டமாக - தற்போதிருக்கும் சுங்க இலாகா அலுவலகத்திற்கு எதிரே மேற்கிலிருந்து கிழக்காக, கரைக்கு செங்குத்தாக கடலுக்குள் 1100 அடி நீளமுள்ள பாலம் போன்ற ஓர் இரும்பு மேடையை ஏற்படுத்தி, அந்த மேடையின் முனையில் 30 அடி ஆழமுள்ள அந்தப் பகுதியில் - கப்பல்கள் கட்டுவதற்கான வசதியைச் செய்தார்கள். 1859-ல் இந்த இரும்பு மேடை அமைக்கும் பணி ஆரம்பமானது; 1861-ல் பணி முடிவடைந்தது. இதனால் மசூலா படகுகளைக் கடினப்பட்டுக் கரை சேர்க்கும் துன்பம் தீர்ந்ததோடு, காலமும் பணமும் மீதமானது.

1868-ல் மூன்று இலட்சம் டன் சரக்குகள் கையாளும் நிலைக்கு நிலைமை உயர்ந்தது. கப்பல் போக்குவரத்தும், சரக்குகள் சென்னைக்கு வருவதும் அதிக அளவில் இருந்ததால் இங்கு ஒரு துறைமுகம் அமைப்பது பற்றி அப்போதிருந்த சென்னை வாணிபக் கழகம் 1868-ல் திட்டம் ஒன்று தீட்டியது. அதன்படி, 1875 டிசம்பர் 15-ல் துறைமுகம் அமைப்பதற்கான முதல் துவக்கப்பணி இங்கிலாந்து நாட்டு வேல்ஸ் இளவரசரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திரு. வில்லியம்ஸ் பார்க்ஸ் என்ற துறைமுக திட்ட நிபுணர் திட்டத்தின்படி, முதலில் மேற்கிலிருந்து கிழக்காக இரண்டு அலைதடுப்புச் சுவர் 3000 அடி இடைவெளியில், ஒரு மைல் நீளத்திற்குக் கட்டுவது; பின்



மையத் துறையில் முன்பிருந்த துறைமுக நிர்வாக அலுவலகக் கட்டடம்.

அவற்றை ஒன்றையொன்று நோக்கித் திரும்பச் செய்து கிழக்குச் சுவராக இணைப்பது. இந்தக் கிழக்குச் சுவரில் 550 அடி அகலத்திற்கு பாதை விட்டுவிட்டால், அதன் வழியாக கப்பல்கள் உள்ளே வரலாம். இதன்படி 1876-ல் வடதிசை அலைதடுப்புச் சுவர் அமைப்புப் பணியும், 1877-ல் தென்திசை அலைதடுப்புச் சுவர் பணியும் துவங்கின. கட்டி முடிந்ததும், இந்த இரு சுவர்களின் முனைகளையும் இணைத்து, அதாவது மூன்று பக்கமும் சுவர்கட்டி உள்ளடக்கமாக ஒரு துறைமுகம் உருவாக்கப்பட்டது. இந்தச் சுவருக்கான கற்களை பல்லாவரம் கல் சுரங்கத்திலிருந்து கொண்டு வந்தார்கள். இதற்காகவே தென்னிந்திய இரயில்வே நிர்வாகத்தினர் கடற்கரை (பீச்) வரை இரயில்பாதை அமைத்துத் தந்தனர். அதுவே அப்போது இரயில் பாதையாக இருந்தது.

துறைமுக அமைப்புப் பணியின் போது - துறைமுக நுழைவாயில் அருகில் மணல் குவியத் தொடங்கியது. இதனால் கிழக்குப்புறம் இருந்த நுழைவாயில் - சுவர் எழுப்பி அடைக்கப்பட்டு, வடகிழக்குப் பகுதியில் புதிதாக நுழைவாயில் அமைக்கப்பட்டது. இந்த நுழைவாயிலில் மணல் சேராமல் இருக்க 1200 அடி நீளத்திற்கு தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டது.

1894-ல் சென்னை உயர்நீதி மன்றக் கட்டடத்தின் மைய மண்டபத்தில் கலங்கரை விளக்கம் கட்டப்பட்டு செயல்படத் துவங்கியது. இதுவும் மண்ணெண்ணெய் விளக்கே. 1952-ல் இதில் மின்விளக்கு அமைத்தனர். இதன் ஒளி கடலில் 20 மைல் தூரம் தெரிந்தது.

1904-ல் துறைமுகத் தலைவராக நியமிக்கப்பட்ட சர் பிரான்சிஸ் ஸ்பிரிங், இத்துறைமுகத்தை மிகச்சிறந்த வாணிபத் தளமாக உருவாக்கினார். இதனால் உலகப் படத்தில் கடல் வாணிபம் புரியும் துறைமுகமாக இது குறிப்பிடப்பட்டது.

1920-ல் படகுகள் பாதுகாப்பாக நிற்பதற்காக படகுத்துறை கட்டப்பட்டது. படகுகள் பழுது பார்க்கும் வசதியும் உடையதாக கட்டப்பட்டது.

1931-ல் மேற்குத் துறைக்கும், இராயபுரத்திற்கும் இடையேயான இரயில்பாதை செயல்படத் துவங்கியது. 1936 முதல் தெற்குத் துறை 2-ம், 1959 முதல் பயணிகள் நிலையமும், 1964 முதல் ஜவஹர் துறையும் செயல்படத் துவங்கின.

1950-ல் இங்கிருந்து இரும்புக்கனிகள் கூடைகளின் மூலமாக கப்பல்களில் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வேகமாக ஏற்றுமதி செய்ய, துறைமுகத்தின் வடக்குத் துறையை அடுத்து முழுதும் இயந்திர மயமாக்கப்பட்ட இரும்புக் கனித்துறை மேடை பாரதித் துறையில் உருவாக்கப்பட்டது. இது மணிக்கு 8,000 டன் இரும்புக்கனி ஏற்றுமதியாகும் சக்திமிக்கது. இது 1974 முதல் செயல்படத் துவங்கியது. அதே பாரதித் துறையில், நவீன எண்ணெய்த்துறை ஒன்றும் 1972 முதல் செயல்படத் துவங்கியது. 1984-ல், இரண்டாவது எண்ணெய்த் துறையும் உருவானது. எண்ணெய், மணிக்கு 4,000 டன் இறக்குமதியாகிறது.

1977-ல் வானொலி நிலையத்திற்கு எதிரில் புதிய கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது. கடலில் இதன் ஒளி 28 மைல் தூரம் செல்லும்.

உலகெங்கிலும், கன்டெயினர் - அதாவது பல வகையான பொருள்களையும் ஒரு பெட்டிக்குள் வைத்து அடைக்கப்பட்டிருக்கும் கொள்கலப் பெட்டியின் மூலம் வாணிபம் நடைபெறும் முறை வரவேற்கப்படும் நிலையில் - இந்தியாவிலேயே முதன் முதலாக இத்துறைமுகத்தில் கன்டெயினர் துறை அமைக்கப்பட்டு, மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் 1983 டிசம்பரில் துவக்கி வைத்தார். அப்போதே மீன்பிடி துறைமுகமும் துவக்கி வைக்கப்பட்டது. துறைமுக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது இந்த நிகழ்ச்சி.

தற்பொழுது 380 மீட்டர் நீளமுடையதாக இருக்கும் கன்டெயினர் துறையின் நீளத்தை 220 மீட்டர் நீட்டித்து, ஆண்டுக்கு 80,000 கன்டெயினர்கள் கையாளும் வசதி படைத்ததாக மாற்ற திட்டம் தீட்டப்பட்டு 1988 ஏப்ரல் முதல் அப்பணிகள் மிக வேகமாக நடந்து வருகின்றன.

தற்போது ஒரு இலட்சத்து 40 ஆயிரம் டன் இரும்புக்கனி ஏற்றிச் செல்லும் தகுதி படைத்த இரும்புக் கனி கப்பல்கள் வந்து போகின்றன. ஒரு இலட்சத்து 70 ஆயிரம் டன் இரும்புக்கனி ஏற்றிச் செல்லும் கப்பல்கள் வருவதற்கு ஏற்ப, பாரதித் துறையை ஆழப்படுத்தும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதே போல் எண்ணூரிலேயே ஆண்டுக்கு 8 இலட்சம் டன் நிலக்கரியைக் கையாளும் வகையில் துணைத் துறைமுகம் அமைப்பதற்கான திட்டமும் தீட்டப்பட்டுள்ளது.

நன்றி : "சென்னைத் துறைமுகம்



### பாவேந்தர் நூற்றாண்டு:

செவ்வையுற மகளிர்க்குக் கல்வி நலம் தேடல்
செயற்பால யாவினுமே முதன்மைஎனக் கொண்டே
அவ்வகையே செயல்வேண்டும்! அறிவுமனை யாளால்
அமைதியுல குண்டாகும் என்னஇதில் ஐயம்?

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில்

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்



ங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங்
● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA






சென்னைத் துறைமுகத்தில் உள்ள ஜவகர் துறையின் தோற்றம்.



பெருந்தலைவர் காமராஜருடன் பேரறிஞர் அண்ணா

# இந்த இதழில்...


வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் முதல்வர் ... 2

பெருந்தலைவர் காமராசர் ... 7

உன் பிறந்த நாள் சிறந்த நாள்! (கவிதை) —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 9

சென்னையில் பாபுஜெகஜீவன்ராம் சிலை திறப்பு ... 11

எரிசக்தி-90 ... 13

முதல்வருக்கும் அரசுக்கும் எங்கள் நன்றி ... 17

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் மீன் வளர்ப்போர் முகமை ... 19

சுழற்சி முறைப் பாசனம் ... 21

நூல்நயம் ... 23

பெருந்தலைவர் காமராசர் படத்தொகுப்பு ... 24

மாணவர் பக்கம் ... 27

ஆதிதிராவிடர் பழங்குடியினருக்குத் தொழில் வழிகாட்டும் நிலையம் ... 29

12 இலட்சம் பேர் பலன்பெறும் கடன் நிவாரணத் திட்டம் ... 33

தமிழகத்திற்குத் தடையின்றி மத்திய திட்ட உதவி தேவை ... 39

நகர்ப்புற வீட்டுவசதி ... 41

வேளாண்மை உற்பத்தி பெருகிட ... 43




நாடு முன்னேற - வறுமையும் அறியாமையும் போகவேண்டும்; இவையிரண்டும் போனாலன்றி எந்த ஒரு நாடும் முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

—பெருந்தலைவர் காமராசர்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆடித் திங்கள் - 1

மலர்:21 இதழ்:2

16-7-1990


அட்டைப்பட விளக்கம்

பெருந்தலைவர் காமராஜரின் 88-வது பிறந்த நாளையொட்டி (ஜூலை-15) அவருடைய திருவுருவப்படம் இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கிறது.

# வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் முதல்வர்

**வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் 67 திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டன; அவற்றின் மூலம் 67 ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்தேழு பேர் பயனடைந்தார்கள். அவற்றுக்காகத் தமிழக அரசின் பல்வேறு துறைகள் ஒதுக்கீடு செய்த மொத்த நிதி ரூ 67 கோடியே 87 இலட்சத்து 63 ஆயிரம் ஆகும். இந்த வகையில்- மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1.7.1990 அன்று காலை முதல் இரவு வரை வடஆர்க்காடு அம்பேத்கர்/ மாவட்டத்தில் பங்கேற்ற பலவகை நிகழ்ச்சிகளின் தொகுப்புக் கட்டுரையே இது:**

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 1.7.90 அன்று காலை முதல் இரவு வரை வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்; பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்தார்; தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலைகள், வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆகியவற்றைத் திறந்து வைத்ததோடு, ஏழை எளிய மக்களுக்கான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

காலை 9 மணியளவில் தொடங்கிய அனைத்து நிகழ்ச்சிகளும் இரவு 10.30 மணியளவில்தான் முடிவுற்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள், எல்லா நிகழ்ச்சிகளிலும் பல்லாயிரக்கணக்கான மக்களால் பேருவகையோடு வரவேற்கப்பட்டார். வேலூர் நகரமே திருவிழாக் கால நகரம் போலக் கோலாகலமாகக் காட்சியளித்தது

அத்தனை நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன்- மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் மின்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களும் திரு தி.அ. முகமது சகி எம்.பி. அவர்களும், வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எம். சத்தியமூர்த்தி இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டார்கள்.

## கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நவீன முறை விரிவாக்கம் - நாட்டுக்கு அர்ப்பணிப்பது; தொழிலாளர் குடியிருப்பு- விருந்தினர் இல்லம்– சர்க்கரைக் கிடங்கு- நிர்வாக அலுவலகக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைப்பது; மெட்ரிகுலேஷன் பள்ளி, கூடுதல் தொழிலாளர் இல்லம், தென் இந்திய சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் அடிக்கல் நாட்டுவிழா ஆகியவை- அன்று காலையில் முதல் நிகழ்ச்சியாக வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் அம்முண்டியில் உள்ள வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வளாகத்தில்- வேலூர் ரம்யா இசைக்குழுவினர் இன்னிசையோடு தொடங்கியது.



முத்துமண்டபம் திறப்பு விழா

மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் மின்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பங்கேற்கு முன்பாகக் கரும்புப் பயிரிடல் குறித்து அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்.

சர்க்கரைத் துறை இணை ஆணையர் திரு வை. பழனிச்சாமி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்; சர்க்கரைத் துறை ஆணையர் திரு. மு.க.அ. தய்யப் இ.ஆ.ப., அவர்கள் திட்ட விளக்க உரையினைப் படித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் திரு டி.ஆர். கெஜபதி எம்.எல்.ஏ. கரும்பு உற்பத்தியாளர்கள் சார்பில் ஆரணி திரு எத்திராஜ், திமிரி ஸ்ரீராமுலு, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் சார்பில் திரு ஜி. நடராசன் மற்றும் திரு அ.க.அ. அப்துல் சமது எம்.பி., திரு தி.அ. முகமது சகி எம்.பி., ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் தமது தலைமையுரையில்- இந்த ஆலைக்குப் போதுமான மின்சாரம் வழங்கத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் மாநிலத்தில், விவசாயப் பணிகளுக்குப் பகலில் 8 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் மின்சாரம் கிடைக்கும் என்றும், கரும்பு வரத்திற்கேற்ப சாலைகள் செப்பனிடப்படவும்- ரயில்வே பாலத்தைப் பலப்படுத்தவும்- பை பாஸ் சாலை அமைக்கவும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலே குறிப்பிட்ட திட்டங்களைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"இந்த ஆலையின் விரிவாக்கம் என்பது ஏற்கெனவே உள்ள 1,250 டன் சர்க்கரை உற்பத்தி என்பதிலிருந்து 2,500 டன் என்ற அளவில் விரிவடைகிறது. இதனால்- பதினைந்தாயிரம் விவசாயிகள் ஏற்கெனவே பங்கு பெற்றார்களென்றால், மேலும் சில ஆயிரம்பேர் இதனால் பயன்பெறக் கூடும். கூடுதலாக ஒரு ஐயாயிரம் பேர் அங்கத்தினர்களாக இணையும் சூழ்நிலையும் இந்த விரிவாக்கத்தின் மூலம் ஏற்படுகின்றது.



ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில்...

தமிழகத்தில் இப்போது 30 சர்க்கரை ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன; ஒன்றிரண்டு ஆலைகளுக்கான அடிக்கல் நாட்டு விழாக்கள் அண்மையில் நடைபெற்றன; விரைவில், மேலும் ஒன்றிரண்டு சர்க்கரை ஆலைகளுக்கான தொடக்க விழாக்கள் நடைபெறவிருக்கின்றன.

கரும்புக்கு, இந்த வட்டாரத்திலே 30 ரூபாய் ஊக்கத் தொகை உள்ளிட்ட 371 ரூபாய் தரப்படுகிறது. அதை 400 ரூபாயாக அறிவிக்கும்படி சொன்னார்கள்; அப்படிச் செய்தால்- சர்க்கரையின் அடக்க விலை அதிகமாகி, சாதாரண மக்கள் அதற்குத் தரவேண்டிய விலையும் அதிகமாகிவிடும். அப்படிச் செய்தால் கழனிகளையெல்லாம் கரும்பு வயல்களாக்கும் எண்ணமும் பலருக்கு ஏற்பட்டு, சர்க்கரை ஆலைகள் அதிகமாகலாம். சர்க்கரை ஆலைகள் அதிகம் வருமானால்- உணவு தானியத்திலே அரிசியை மாத்திரம் நம்பி வாழ்கிற தமிழ்நாட்டு மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அந்த அச்சமும் இந்த அரசுக்கு இருக்கின்றது.

தமிழ்நாட்டிலேதான் ஒரு புதிய ஊக்கத் தொகையை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். குறிப்பாக- இதுவரையிலே கூட இந்தக் கூட்டுறவுத்துறை சர்க்கரை ஆலை ஈட்டிய லாபம், கூட்டுறவு- மற்றும் பொதுப்பணித்துறை சர்க்கரை ஆலைகள் ஈட்டிய லாபம் 15 கோடி ரூபாய் என்றால், அந்த 15 கோடி ரூபாயை, ஆலைக்குக் கரும்பைக் கொடுக்கின்ற விவசாயிகளுக்கு அந்தக் கரும்பின் விலையை- அந்த லாபத்தைப் பகிர்ந்து, உயர்த்திக் கொடுக்கின்ற ஒருமுறை இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கரும்புச் சக்கைகளைக் கொண்டு காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவிட நிதிநிலை அறிக்கையிலேயே நான் அறிவித்திருக்கிறேன். அடுத்த கட்டமாகத் தென்னார்க்காடு மாவட்டத்திலே காகித உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலை கிட்டத்தட்ட 500 கோடி ரூபாயிலிருந்து ஆயிரம் கோடி ரூபாய் வரை அமையக் கூடியதாக உருவாக இருக்கிறது. சர்க்கரை உற்பத்தியிலிருந்து கிடைக்கும் 'மொலாசஸ்'சிலிருந்து எரிசாராயம் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் அரசின் சார்பிலேயே ஏற்படுத்தத் திட்டமிட்டு, சேலத்திலும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலேயும் எரிசாராயத் தொழிற்சாலைகளை நாம் உருவாக்க இருக்கிறோம்.

தொழில் வளத்தில், ஏற்கெனவே மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு- 1989-ல் நாங்கள் ஆட்சிக்கு வருகின்ற நேரத்திலே 13-வது இடத்திற்குப் போய் விட்டிருந்தது. அதனை மீண்டும் மூன்றாவது இடத்திற்காவது கொண்டு வந்து சேர்க்கும் பணி இந்த அரசுக்கு இருக்கிறது. அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை''.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார். இவ்விழாவில் ஒரு பெண் குழந்தைக்கு 'மணிமேகலை' என்று பெயரிட்டார்.

விழா முடிவில்- வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தனி அலுவலர் திரு சி. ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.

## வெடிமருந்து தொழிற்சாலை

இரண்டாவது நிகழ்ச்சியாக, வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், காட்பாடிக்கு அருகில் உள்ள 'டெல்' குடியிருப்பில்- ரூ.42.59 கோடி மொத்த முதலீட்டில் வெடி ஊக்கி திட்டத்துவக்க அடையாளமாகத் தாமத வெடி ஊக்கி விற்பனைத் துவக்கம் மற்றும் கலவை வெடிமருந்து அடிக்கல் நாட்டுவிழா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

'டிட்கோ' மற்றும் 'டெல்' தலைவர் திரு க. வெங்கடேசன் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். நிர்வாக இயக்குநர் திரு சுகவனேஸ்வர் இ.ஆ.ப. அவர்கள் திட்ட அறிக்கை படித்தபோது இத்தொழிற்சாலை மூலம் 995 பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருப்பதாகத் தெரிவித்தார். திரு அ.க.அ. அப்துல் சமது எம்.பி. வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் தலைமையுரையாற்றுகையில்- "என் பெயர் முருகனாக இருப்பதாலோ என்னவோ, எனது தொகுதியில் மலைமேல் அமைந்திருப்பதாக இந்த ஒரே ஒரு தொழிற்சாலை அமைந்திருக்கிறது" என்று நகைச்சுவை ததும்பக் குறிப்பிட்டார்.

திட்டங்களைத் துவக்கிவைத்துச் சிறப்புப் பேருரை ஆற்றிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்- "வெடிமருந்துத் தொழிற்சாலை எனினும் அழிவுக்குப் பயன்படாமல் ஆக்கப் பணிக்குப் பயன்படுவது இது" என்று குறிப்பிட்டார். "பாட்டாளி வர்க்கத்தை நாம் என்றுமே அலட்சியப்படுத்தியதில்லை; தொழிற்சாலைகளிலே பணிபுரிகிற நேரத்தில் மட்டுமல்ல; வெளியே, அதற்குப் பிறகும் தொழிலாளர்கள் நலம் காணத் துணை நிற்கும் அரசு இது" என்றும் தமது உரையில் தெரிவித்தார்.

விழா முடிவில்- பொது மேலாளர் திரு வி. பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

## பெரியார் சிலை திறப்பு

அன்று மாலை, வேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், ஏறத்தாழ ரூ. 70 ஆயிரம் செலவில் உருவாக்கப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்.

. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டார். ஒன்றியப் பெருந்தலைவர் திரு நா. சுப்பிரமணியம் வாழ்த்துரை வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில்...



மாண்புமிகு முதல்வர் அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

**"வீழ்ந்துபட்ட இந்தச் சமுதாயம் தலை நிமிர வேண்டும் என்பதற்காக 95 வயது வரையிலே ஓடியாடி உழைத்து, இறுதி யாக இதே வேலூர் மருத்துவமனையில் உடல் நலிவுற்றுத் தன்னுடைய விழிகளை மூடிய ஐயா அவர்கள், கோடிக்கணக் கான மக்களின் வழிகளைத் திறந்த பெருமைக்குரியவராவார். சிலர் இந்த அரசு மீது இப்போது புழுதிவாரித் தூற் றிடக் காரணமே- பெரியாரின் அடி மட்டக் கொள்கைகளை உள்ளத்திலே ஏந்தி, அறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியங்களைப் பரப்புகின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்ற ஒரே ஒரு காரணம் தான். அந்த எதிர்ப்புக் கண்டு கலங்கி, பெரியாரினுடைய கொள்கைகளையோ, அண்ணாவினுடைய இலட்சியங்களையோ நாம் விட்டுவிடப் போகின்றவர்கள்**

வாழ்த்துரையின் போது- "இத்தனை யாண்டுக்காலமாக நாங்கள் கண்டு வந்த கனவை நனவாக்கியமைக்காக- இலங்கை அரசு செய்யத்தவறிய ஒரு நல்ல காரியத் தைச் செய்தமைக்காக எங்கள் குடும்பத்தின் சார்பில் எங்கள் வாரிசுகளின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று கண்கலங்கி, உணர்ச்சி வசப்பட்டு நாத் தழுதழுக்கக் கூறினார்.

திரு தி.அ. முகமது சகி எம்.பி., திரு வி.எம். தேவராஜ் எம்.எல்.ஏ., மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் ஆகியோர் வாழ்த்துரைக்குப் பின்னர் மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தலைமையுரை யாற்றினார். அவர்கள் தமது தலைமையுரையில்- "இந்த நாட்டுக்காகப் பாடுபட்ட அண் மைக்காலத் தியாகிகளை மட்டுமல்ல; தமிழ் மண்ணுக்காகப் பாடுபட்ட பழந் தமிழ் மன்னர்களையும் கூட மாண்புமிகு

விக்கிரம ராஜ சிங்கனின் இயற்பெயர் கண்ணுசாமி; கண்டியிலே அவர் ஆளு வதற்கு வழிவகுத்துக் கொடுத்ததே பண் டாரக வன்னியன்தான். இத்தகைய சிறு சிறு வரலாற்றுக் குறிப்புகளை வைத்துத் தான் 'பாயும் புலி பண்டாரக வன்னியன்' என்று ஒரு தொடர் கதையை நான் எழுதினேன். விரைவில் அது நூலாக வெளிவரவிருக்கிறது.

நான் ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது தான் இந்தக் கல்லறையை யெல்லாம் புகைப்படம் எடுத்து பத்திரி கைகளிலும் வெளியிட்டேன்.

இப்போது இந்த முத்து மண்டபம் இங்கே எழுப்பப்பட்டுள்ள காரணத்தால் இங்கே நல்ல சாலைகளெல்லாம் அமைய விருக்கின்றன. இந்தப் பரந்த வெளியில் ஒரு அழகான சோலையும், அருங்காட்சி யகமும் அமையவிருக்கின்றன. அந்த அருங்காட்சியகத்தில் கண்டி மன்னனு

# குடியிருப்புத் திறப்பு விழா

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் (29.6.90) அன்று, செங்கை அண்ணா மாவட்டம் ஆதனூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்காக 35 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ. 2 கோடியே 72 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 412 வீடுகள் கொண்ட குடி யிருப்பினைத் திறந்து வைத்தார். விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு கே. சுந்தரம் அவர்களும் மற்றும் சட்டமன்ற ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் உயர் அதிகாரிகளும் பங்கேற்றார்கள்.**

**அல்ல; அந்த உறுதியை இந்தச் சிலை நிழலில் நாம் மீண்டும் ஒருமுறை எடுத்துக் கொள்வோம்".**

**முத்து மண்டபம்**

இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் கண்டி விக்கிரம ராஜ சிங்கன் நினைவு முத்து மண்டபம்-ரூ7.5இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டிருந்தது; அதன் திறப்பு விழா அன்று மாலை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் தலைமை தாங்கினார்.

இவ்விழாவில் வரவேற்புரையாற்றிய திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., பேசுகையில் "இந்த முத்து மண்டபம், நாட்டுப்பற்றை எடுத்துக்காட்டும் சின்னமாக விளங்கும்" என்றார். அதையடுத்து- முத்து மண்ட பத்தை உருவாக்கிய தமிழ்நாடு கட்டு மானக் கழக நிர்வாக இயக்குநர் திரு இரத்தினவேலு திட்ட விளக்கவுரை யாற்றினார். வேலூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு நா. சுப்பிரமணியம் வாழ்த் துரை வழங்கினார்.

**கண்டி மன்னன் விக்கிரமராஜசிங்க னின் வாரிசான திரு ராஜசிங்கன் தமது**

முதல்வர் அவர்கள் பெருமைப்படுத்தி வருகிறார். தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜனுக்குச் சிலை வைத்தது போலவே இங்கே இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் கண்டி விக்கிரம ராஜ சிங்கனுக்கு நினைவு முத்து மண்டபத்தை முதல்வர் அவர்கள் அமைத்திருக்கிறார்கள்; இப்படிப்பட்ட உயரிய பணிகளுக்காகவே தலைவர் அவர்களைத் தமிழ் மக்கள் இதயத்தில் ஏந்துவார்கள்" என்று தெரி வித்தார்.

முத்து மண்டபத்தைத் திறந்து வைத்து, ஆவண மலரை வெளியிட்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இலங்கையில் கண்டி பகுதியை ஆண்ட தமிழ் மன்னர்களில், கடைசியாக ஆங்கிலேயரை எதிர்த்து நின்று 1816-ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் சிறைப் பிடிக்கப்பட்டு, வேலூர் கோட்டையிலுள்ள சிறைச்சாலையில் பதினாறாண்டுக்காலம் குடும்பத்தோடு அடைக்கப்பட்டு வேலூர் கோட்டைச் சிறைச்சாலைக்குள்ளேயே மாண்டுபோன மன்னன் விக்கிரம ராஜசிங்கன்தான் இங்கே கல்லறை வடிவாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றான்.

டைய வரலாறெல்லாம் செதுக்கப்பட்டு, இது ஒரு நல்ல சுற்றுலா மையமாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் விளங்கவிருக் கிறது.

**இதற்கு நான் முத்து மண்டபம் என்று பெயரிட்டதற்குக் காரணமே- ஆழமான கடலில் தேடி எடுப்பது போல, இங்கே அடர்ந்து கிடந்த குடிசைகளுக்கு மத்தியில் இந்த முத்தை நாம் கண்டெடுத்திருக் கிறோம் என்பதால்தான். இந்த முத்து மண்டபம் தமிழர்களுடைய இன உணர்வைப் பறைசாற்றட்டும்; இந்த முத்து மண்டபம் இலங்கையிலே கடைசி வரையில் ஆங்கிலேயர்களை எதிர்த்த ஒரு தமிழ் மன்னனுடைய வீரத்தை முரசொலிக்கட்டும்; அந்த நினைவு என்றென்றும் நமக்கு எழுச்சியைத் தரட்டும்"**

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. சத்தியமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

**இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு குழந்தைக்கு 'மதிவாணன்' என்று பெயர் சூட்டினார்.**



**மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம்**

அன்றிரவு 7 மணியளவில் - வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடை பெற்ற மாபெரும் விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

திரு வி.எம். தேவராஜ் எம்.எல்.எ., தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநர் டாக்டர் டி.ஆர். நடேசன், வருவாய்த் துறைச் செயலாளர் திரு ஏ.எம். சாமி நாதன் இ.ஆ.ப., திரு பி. அப்துல்சமது எம்.எல்.ஏ., திரு வி. கோவிந்தன் எம்.எல்.ஏ., டாக்டர் அம்பேத்கர் நூற் றாண்டு விழாக் குழு உறுப்பினர் டாக்டர் பெருமாள், திரு வை. .பாலசுந்தரம், திரு கே.ஆர். சுந்தரம் எம்.எல்.ஏ. திரு டபுள்யூ. ஆர். வரதராசன், திருமதி சத்தியவாணிமுத்து, திரு ஆர். ஜீவரத்தினம் எம்.பி., திரு தி.அ. முகமது சகி எம்.பி., திரு அ.க.அ. அப்துல் சமது எம்.பி., ஆகி யோர் இவ்விழாவில் உரையாற்றினார்கள்.

அதைத் தொடர்ந்து மாண்புமிகு செய்தி- தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை- மற்றும் மின்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களும், சிறப்புரையாற்றினார்கள்.

விழா மேடைக்கு வருமுன், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட அலு வலகக் கட்டட வளாகத்தில் உள்ள அறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை யணிவித்தார். சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு அவர்களின் துணைவியாருக்குப் பொன்னாடை அணிவித்தார்.

டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு விழாவினைத் தொடங்கி வைத்ததும், டாக்டர் அம்பேத்கர் சிலையைத் திறந்து வைத்தும் 'சி.பி. சிற்றரசு மாளிகை' எனப் பெயரிடப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைத் திறந்து வைத் தும், பெரியார் அரசினர் பொறியியல் கல்லூரியைத் துவக்கி வைத்தும், அரசுத் திட்ட விளக்க முகாமைத் தொடங்கி வைத்தும், ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய விழாப் பேருரைச் சுருக்கம் வருமாறு:

"இன்றைக்கு அம்பேத்கர் சிலையைத் திறக்கிறோம்; பெரியார் சிலையைத் திறக்கிறோம்; சி.பி.சி. அவர்கள் பெய ரால் மாளிகையைத் திறக்கிறோம். அன்னை மணியம்மையார் பெயரால் வளாகத்தை இங்கே உருவாக்கி வைத்திருக் கிறோம், பெரியார் பெயரால் பொறி யியற் கல்லூரியைத் திறந்திருக்கிறோம். இந்தப் பெரியவர்கள் எந்தத் தத்துவத் திற்காக- கொள்கைக்காக- இலட்சியத்திற் காகப் பாடுபட்டார்களோ, எந்த மக் களுடைய நல்வாழ்வை மையமாக வைத்து உழைத்தார்களோ, கருத்துக்களைச் சொன் னார்களோ அவைகளைச் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் நலிந்தோருக்காக, ஏழை எளிய விவசாயி களுக்காக, தொழிலாளர்களுக்காக இந்த அரசு இதுபோன்ற கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்களை அறிவித்து அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

**"இங்கே இலட்சக் கணக்காகக் கூடி யிருக்கிற தமிழ்ப் பெருங்குடிமக்களே, உங்களுக்கு நான் சொல்லிக் கொள்ளு வேன்- நான் வாழ்ந்தாலும் உங்களுக்காக வாழ்வேன்; வீழ்ந்தாலும் உங்களுக்காக வீழ்வேன். இதுதான் நான் உங்கள் மத் தியிலே எடுத்துக் கொள்ளுகின்ற தொடர் சபதம்."**

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசினார்.

விழாமுடிவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. சத்தியமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

**—நிகழ்ச்சித் தொகுப்பு**
**பி.எல்.ஆர்.**

## அரசுத் துறைகளிலிருந்து 'தமிழரசு' இதழ்களுக்குச் சந்தாச் செலுத்துவது குறித்த விதிமுறைகள்:

1. அரசுத் துறைகள் 'தமிழரசு' இதழுக்குச் சந்தா செலுத்துவதற்கு எந்தவிதக் கடன் பட்டியல்களும் (Invoice-Credit Bill) வழங்கப்பட மாட்டாது.

2. 'தமிழரசு' இதழுக்குச் சந்தா செலுத்திய தேதிக்குப் பிறகு வெளி வரும் இதழ்களிலிருந்துதான் சந்தா தாரர்களுக்கு இதழ்கள் அனுப்பப் படும்.

3. 'தமிழரசு' இதழ்களுக்கான சந் தாவைச் செலுத்தி, முன் தேதியிட்ட இதழ்களைக் கேட்டால் அவற்றை அனுப்ப இயலாது.

4. 'தமிழரசு' சந்தா கீழ்கண்ட விவ ரங்களின்படி செலுத்த வேண்டும்.

அ. தமிழரசு (தமிழ்) ஆண்டுச் சந்தா ரூ. 24.000

தமிழரசு (தமிழ்) அரையாண்டுச் சந்தா ரூ. 12.00

ஆ. தமிழரசு (ஆங்கிலம்) ஆண்டுச் சந்தா ரூ.12.00

ஆங்கில இதழுக்கு அரையாண்டுச் சந்தா கிடையாது.

சந்தாத் தொகையைப் பண விடை (Money Order) அல்லது வங்கி வரைவோலை (Demand Draft) மூலம் உதவி இயக்குநர், (விற்பனை-விநியோகம்) (Assistant Director (Circulation) )தமிழரசு அலுவலகம் என்ற பெயருக்குத் 'தமிழரசு' அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

5. சந்தாத் தொகை கிடைத்த பிறகே இதழ்கள் அனுப்ப முடியும். சந்தா செலுத்தும், முன்புள்ள பழைய இதழ்களை எக்காரணம் கொண்டும் சேர்த்து அனுப்ப இயலாது.

6. சந்தா செலுத்திய பிறகு சந்தா எண்ணைக் குறிப்பிட்டுத் 'தமிழரசு' அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப் பிய பிறகு, அச்சந்தா எண்ணைக் குறிப்பிட்டே கடிதம் எழுத வேண்டும்.

தமிழரசு இதழ்களைச் சரிவர விநியோகிக்கவும் தகுந்த முறையில் கடிதங்களுக்குப் பதில் கடிதங்கள் அனுப்பவும், மேற்படி விதிமுறை களைக் கடைபிடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**—உதவி இயக்குநர்**
**(விற்பனை-விநியோகம்)**
**தமிழரசு அலுவலகம்**
**சென்னை-2**

**TNPSC**

**விளம்பர எண்: 22/90**

தமிழ்நாடு பொதுச் சார்நிலைப் பணியில், தமிழ்நாடு திரைப்படப் பிரிவில் செய்தித் திரைப்பட ஒளிப்பதிவாளர் (Newsreel Cameraman) பதவியில் இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 30.7.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்தாது).

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,820-60-2,300-75-3,200

**வயது:** 1.7.1990 அன்று 35-க்குக் குறைவாக.

**தகுதி:** அ. (i) ஸ்டேட்போர்டு ஆஃப் டெக்னிகல் எஜுகேஷன் அண்டு ட்ரெய்னிங், தமிழ்நாடு, சென்னை அவர்களால் வழங்கப்பட்ட சினிமாடோகிராபியில் ஒரு பட்டயம் (Diploma) மற்றும்

(ii) ஃபீட்சர் (Feature) ஃபிலிம்ஸ் அல்லது டாக்குமென்டரி ஃபிலிம்ஸ் அல்லது நியூஸ்ரீல் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் ஒளிப்பதிவாளராக மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத செயல் வழி அனுபவம்.

அல்லது

ஆ. (i) குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி; மற்றும்

(ii) ஒளிப்பதிவாளராக ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத செயல்வழி அனுபவம்.

**குறிப்பு:** தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும் பெறும், இப்பதவிக்கான கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விளக்கம்:** ''ஆதரவற்ற விதவை'' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும் பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்கும் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2. அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 19.6.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 19.6.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்கு கிளை, சென்னை-600 006-ல் செலுத்தத்தக்க ரூபாய் 10/-க்கான கேட்புக்காசோலை (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

டிஐபிஆர்/1551/எம்.எஸ்/90/அக்கார்ட்



பெருந்தலைவர்

# காமராசர்



## வாழ்க்கைக் குறிப்பு

1903- விருதுபட்டி என்னும் விருது நகரில் குமாரசாமி நாடார் சிவகாமி அம்மாள் தம்பதிக்கு 1903 ஜூலை 15 அன்று மகனாகப் பிறந்தார். 1907-ல் தங்கை நாகம்மாள் பிறப்பு.

1908- காமராசர் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பெற்றார். ஏனாதி நாயனார் வித்யாசாலாவிலும், சத்திரிய வித்தியாசாலாவிலும் சேர்ந்து படித்தார்.

1909- தந்தை மறைவு. தாய்மாமன் கருப்பையா நாடார் காமராசர் குடும்பத்திற்கு உதவியாக இருந்தார்.

1914- ஆறாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது, பள்ளி செல்வதை நிறுத்திக் கொண்டார்.

1919- ஏப்ரல் - ரவுலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தியடிகள் விடுத்த அழைப்பை ஏற்றுக் காங்கிரசின் முழு நேர ஊழியரானார்.

1920- ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார்.

1921- தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிச் செயலராக இருந்த பெரியாரை முதன் முதலாக விருதுநகரில் சந்தித்து, அவரது உறுதி மிக்க பேச்சுத் திறனைப் போற்றினார்.

1923- நாகபுரி கொடிப் போராட்டத்தில் பங்கு கொண்டார். மதுரையில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.

1925- கடலூரிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1926- சத்தியமூர்த்தி - சீனிவாச அய்யங்கார் ஆகியோருடன் தேர்தல் பணி புரிந்தார்.

1927- சென்னையில் கர்னல் நீல் சிலையை அகற்றும் போராட்டத்தை நடத்த அண்ணல் காந்தியிடம் அனுமதி பெற்றார். போராட்டம் நடைபெறுவதற்குள் அரசாங்கமே நீல் சிலையை அகற்றிவிட்டது.

மதுரைக்கு வருகைபுரிந்த சைமன் குழுவை எதிர்த்தார்.

1930- வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டதால், இரண்டாண்டு அலிபூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

1931- காந்தி இர்வின் ஒப்பந்தம் காரணமாகக் காமராசர் விடுதலை செய்யப்பட்டார். இராமநாதபுரத்திலிருந்து சென்னை மாநிலக் காங்கிரஸ் செயற்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1933- சதி வழக்கில் காமராசர் சிறைக்கனுப்பப்பட்டு, குற்றம் நிரூபிக்கப் படாததால் விடுதலை செய்யப்பட்டார்.

1934- காமராசர் உழைப்பால் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வென்றது.

1936- காரைக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில் சத்தியமூர்த்தி தலைவராகவும், காமராசர் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1937- சட்டமன்றப் பொதுத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் வென்றார். விருதுநகர் நகராட்சி மன்றத் தேர்தலில் 7-வது வார்டில் போட்டியிட்டு வென்றார்.

1940- தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார்.

1941- யுத்தநிதிக்கு எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ததால், கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் இருக்கும்போதே 1941-மே 31 விருதுநகர் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1942- மார்ச்-சிறையிலிருந்து விடுதலையானதும், ஒருநாள் மட்டும் நகராட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, தீவிர கட்சிப் பணிக்காக நகராட்சித் தலைவர் பதவியை விட்டு விலகினார்.

1942- ஆகஸ்ட்டு போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, அமராவதி சிறைச் சாலையில் இரண்டு ஆண்டுகள் கழித்த பிறகு, வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். 1945-ல் விடுதலை ஆனார்.

1946- மே 16—தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றார். அதே ஆண்டு சென்னை சட்டமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1947- ஆகஸ்ட்டு 15 - இந்தியா விடுதலை பெற்றது. நேருவின் தலைமையில் இடைக்கால அரசு உருவானது. அண்ணல் காந்தியடிகளைப் போற்றி அறிக்கை வெளியிட்டார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஆனார்.

1948- மூன்றாவது முறையாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஆனார்

1949- இலங்கையில் சுற்றுப்பயணம்.

1950- நான்காவது முறையாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆனார். 1952- தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக டாக்டர் சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வழிவகுத்தார்.

1952- நாடாளுமன்ற உறுப்பினர்- சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பெரும்பான்மை பெறமுடியவில்லை. இராஜாஜி முதலமைச்சர் ஆவதற்குக் காமராசர் ஒத்துழைப்பு நல்கினார். 1952 டிசம்பரில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1953- இலங்கையில் சுற்றுப் பயணம் செய்தார்.

1954- பிப்ரவரியில் மலாய் நாட்டில் சுற்றுப் பயணம். குலக் கல்வித் திட்ட எதிர்ப்பு காரணமாக இராஜாஜி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்யவும், சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவராகக் காமராசர் போட்டியிட்டு வென்றார்.

1954- ஏப்ரல் 13— சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் ஆனார். குடியாத்தம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்றார்.

1955- ஆவடி காங்கிரஸ் மாநாடு வெற்றிகரமாக நடைபெற காமராசர் அரும் பணி ஆற்றினார்.
இராமநாதபுரம் மாவட்டத்தில் புயலாலும் பேய் மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்த்து, நிவாரண உதவிகளைச் செய்தார்.

1956- மொழிவழி மாநிலம் என்ற திட்டத்தின்படி புதிய தமிழகம் உருவாவதற்கு ஆதரவு தெரிவித்தார். பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

1957- பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, வென்று, இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆனார்.

1960- ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் 11-ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளித்தார்.

1961- அக்டோபர் 9-சென்னை மாநகராட்சி உருவாக்கிய காமராசர் திருவுருவச் சிலையைப் பிரதமர் நேரு திறந்து வைத்தார்.

1962- பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக முதலமைச்சர் ஆனார்.

1963- எல்லாருக்கும் இலவசக் கல்வித் திட்டத்தை அமல்படுத்தினார். அக்டோபர் 2- காமராசர் திட்டத்தின்படி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

1964- அனைத்திந்தியக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மே 27-ல் நேரு அவர்கள் மறைந்த பிறகு, லால் பகதூர் சாஸ்திரி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட காமராசர் ஆவன செய்தார்.

1965- இந்தியா - பாகிஸ்தான் போர் ஏற்பட்டபோது பஞ்சாப் போர் முனைப் பகுதிகளுக்குக் காமராசர் சென்று வீரர்களை உற்சாகப் படுத்தினார்.

1966- தாஷ்கண்ட் சென்று லால்பகதூர் மறைவு எய்தியதால், இந்திராகாந்தி, பிரதமராவதற்குக் காமராசர் ஆவன செய்தார். சோவியத் நாட்டிற்கும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் காமராசர் சென்று வந்தார்.

1967- பொதுத் தேர்தலில் காமராசர் தோல்வியடைந்தார்.

1969- நாகர்கோயில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு பெற்றார்.
காமராசர் அவர்களின் தாயார் மறைவு.

1971- பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி. நாடாளுமன்ற உறுப்பினராகக் காமராசர் தேர்வு.

1972- தாமிரபத்திர விருது பெற்றார்.

1975- பெருந்தலைவர் காமராசர் 1975 அக்டோபர் 2 அன்று அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாளில் நம்மைவிட்டு உடலால் பிரிந்தார். நினைவாக நம் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்.

தொகுப்பு:- வ. [illegible]



## சிறு சேமிப்புத் துறையின் பரிசுகள் இணைந்த சேமிப்பு பெருக்கும் திட்டம் 1990

## வென்றிடுங்கள் ஒரு அழகிய மாருதி கார்!




- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு வருமான வரி விலக்கு மற்றும் பரிசுகள்
- அனைத்து மாவட்டத்திலும் ஒவ்வொரு ஒரு லட்சம் கூபபன்களுக்கு குலுக்கல் நடைபெறும்
- NSS 87ல் முதலீடு செய்து 100% வருமானவரி விலக்கு ரூ.40,000/- வரை பெற்றிடுங்கள்
- NSC 8வது வெளியீடு/PPF ல் முதலீடு செய்து கணிசமான அளவு வருமான வரி விலக்கு பெறுங்கள்.
- மத்திய அரசுக்கு இணையாக சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.
- ரூ.1000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத்தொகை கிடைக்கும்*

ரூ.500/- முதலீடு செய்து பளபளப்பான புதிய மாருதி காருக்கு சொந்தக்காரர் ஆகும் அதிர்ஷ்டசாலி நீங்களாக கூட இருக்கலாம். சிறு சேமிப்பு-வரிவிலக்குடன் உயர் வருவாயை அளிக்கும் முதலீட்டு திட்டங்கள்,



1 முதல் பரிசு - பஜாஜ் ஸ்கூட்டர் | 2 இரண்டாவது பரிசுகள் - E.C. டி.வி. | 3 மூன்றாவது பரிசுகள் ரெப்ரிஜிரேடர் | 5 நான்காவது பரிசுகள் - மோபட | 10 ஐந்தாவது பரிசுகள் தையல் எந்திரம் | 10 ஆறாவது பரிசுகள் - சைக்கிள் | 30 ஏழாவது பரிசுகள் - குவார்ட்ஸ் கைக் கடிகாரம் | 200 ஆறுதல் பரிசுகள் - சுவர்க்கடிகாரம்

ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக்கூப்பன் பெற்றிடுங்கள். தனி நபர்கள் மட்டுமே கீழ்க்கண்ட திட்டங்களில் தமிழ்நாட்டில் ஜூன் '90 முதல் டிசம்பர் '90 வரை முதலீடு செய்து பெறலாம். சேமிப்பு பத்திரம் எல்லா அஞ்சல் நிலையங்களில் கிடைக்கும்

- தேசிய சேமிப்பு பத்திரம் 8வது வெளியீடு
- தேசிய சேமிப்பு திட்டம் 1987
- பொது சேமநல நிதி
- மாதாந்திர வருமானத் திட்டம்
- விவசாயிகள் சேமிப்பு பத்திரம்
  இந்திரா சேமிப்பு பத்திரம்
- அஞ்சலகக் குறித்தகால முதலீடு
- அஞ்சலக தொடர்வைப்புத் திட்டம்/ வளரும் மாத சேமிப்புத்திட்டம்

பரிசுக் கூப்பன்கள்—மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் வட்டார வளர்ச்சி அலுவலங்களில் கிடைக்கும்.

இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

DIPR/NS/90/ARES




### சென்னையில்

# பாபு ஜெகஜீவன்ராம் திருவுருவச்சிலை திறப்பு

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 28.6.90 அன்று சென்னையில் - முன்னாள் இந்தியத் துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன்ராம் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

காமராசர் சாலையில் - சேப்பாக்கம் எழிலகத் தின் முன் அமைக்கப்பட்டுள்ள அந்தத் திருவுருவச் சிலையின் திறப்பு விழா நிகழ்ச்சி - சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது.

திருவுருவச் சிலையைத் திறந்து வைத்துப் பேசிய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் - ''நானும் பாபு ஜெகஜீவன்ராமும் நாற்பதாண்டுக் கால நண்பர்கள். சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கப் பாடுபட்ட அவர், எல்லாத் தரப்பு மக்களும் போற்றத்தக்கவராக விளங்கினார்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமது தலைமை உரையில், திரு பாபு ஜெகஜீவன்ராம் அவர்களின் தொண்டு மனப்பான்மையைப் பெரிதும் புகழ்ந்துரைத்தார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு சவுத்ரி சந்த்ராம், பாபு ஜகஜீவன்ராம் அவர்கள் புதல்வி திருமதி மீராகுமார், இந்தியன் வங்கித் தலைவர் திரு எம். கோபாலகிருஷ்ணன், துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு ஆ. பால்ராஜ், இ.ஆ.ப., திரு முனுசாமி ஆகியோர் இவ்விழா வில் உரையாற்றினர். திரு எம். குப்புசாமி வரவேற்புரையாற்றினார். விழா முடிவில் திரு எம். அழகர்சாமி நன்றி கூறினார்.

சென்னை-திருவல்லிக்கேணியில் உள்ள பெல்ஸ் சாலை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணைப்படி 'பாபு ஜெகஜீவன்ராம் சாலை' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது!



பெண்கள் விழிப்படைந்தால்- குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்!

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது!

—பெருந்தலைவர் காமராசர்

K. THAMPURAN
PROPRIETOR

# SREE KUMARI HANDICRAFTS COMPLEX

4-A, MADAVA PURAM, KANNIYAKUMARI-629 702.

*SHOW ROOM*

SREE KUMARI HANDICRAFT STORE
SANNATHI STREET, KANNIYAKUMARI

PHONE:286.

உத்தரவாதமுள்ள 22 காரட் தங்க நகைகளுக்கு

# அலி ஜூவல்லர்ஸ்

மீனாட்சிபுரம்,
நாகர்கோவில்

தொலைபேசி

கடை: 3397, 4421
வீடு: 3700, 7200



**● மின் உற்பத்தியைவிட மின்சாரத்தைச் சேமிப்பதில் நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்!**

**● தமிழகத்தில் இப்பொழுது உள்ள பத்து சதவிகித மின்வெட்டும் ஜூலை 1 முதல் இருக்காது!**

—முதல்வர் கலைஞர்



# எரிசக்தி 90

'எரிசக்தி '90' என்னும் பொருட்காட்சி மற்றும் கருத்தரங்கின் தொடக்கவிழா 28.6.90 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்தது.

பொருட்காட்சியைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்—

தமிழகத்தில் 1989-ஆம் ஆண்டில் நாங்கள் மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டபோது நம்முடைய் பொதுப் பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் குறிப் பிட்டதைப் போல் மின்வெட்டு பெரும் அளவிற்கு நம்மைத் தாக்குகின்ற நிலைமை இருந்தது. ஒரு அறுபது சதவிகிதம் மின்வெட்டு இருக்கக் கூடிய சூழலிலேதான் இந்த அரசு பொறுப்பேற்க நேர்ந்தது. அத்தகைய ஒரு பயங்கரமான சூழ்நிலை தமிழகத்திலே ஏற்படுவதற்கு முக்கியமான காரணமாக நாங்கள் பொறுப்பிற்கு வருவ தற்கு முன்பே 10.10.1988-ஆம் நாள் எண்ணூரிலே அனல் மின்நிலையத்தில் ஏற்பட்ட ஒரு பெரும் தீ விபத் தின் காரணமாக ஒவ்வொன்றும் 110 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது மற்றும் நான்காவது பிரிவுகள் இயங்காமலே போய்விட்டன. நான் வேடிக்கையாக அல்ல, வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். அந்தச் செய்தி கூட நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகுதான் அரசின் கவனத்திற்கே வந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போலவே தேர்தல் நடைபெறுகின்ற அந்தக் கால கட்டத்திலே 25.1.89 அன்று அந்த அனல் மின் நிலையத்திலே 110 மெகாவாட் திறன் கொண்ட ஐந்தாவது பிரிவும் பழுதடைந்து மின் உற்பத்தி மேலும் பாதிக்கப்பட்டது. அதே நாளில் சொல்லி வைத்தாற் போல் திருப்பெரும்புதூரில் 400 மெகாவாட் திறன்

21-வது ஆண்டில் 'தமிழரசு'

## தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டு புரியும் 'தமிழரசு'

எல்லா அரசுகளும் தங்கள் சாதனைகளை விளக்கும் பத்திரிகைகளை நடத்துகின்றன. எனினும், அவற்றுள் எதையும் பொதுமக்கள் விரும்பி வாங்கிப் படிப்பதில்லை. தமிழக அரசு நடத்தும் 'தமிழரசு' ஒன்று மட்டும் பொதுமக்களிடமும் விற்பனையாகும் பத்திரிகையாக உள்ளது. அது தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டு செய்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளிலும் வெளியிடப்பெற்ற 'பாக்கிய லட்சுமி', சௌபாக்கியம், மேழிச் செல்வம், இன்காம், ஆரோக்கிய மார்க்கம், மெட்ராஸ் ஹெல்த் எஜுகேஷன், ஏரணி (கிராம நலம்) ஆகிய 7 பத்திரிகைகளையும் ஒருங்கிணைத்து 1.7.1970-இல் தமிழ்நாடு அரசு, 'தமிழரசு' என்னும் பெயரில் திங்கள் இருமுறை இதழ் ஒன்றை நிறுவியது.

'தமிழரசு' இதழில் 'வெண்பாப் போட்டி' துவக்கப் பெற்று, தமிழ்க் கவிஞர்களுக்கு ஊக்கமும், கவிதைத் துறை வளர நல்லதொரு சூழ்நிலையும் உருவாகியுள்ளது. இதுவரை 67 வெண்பாப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. முதலமைச்சர் கலைஞர், இவ்விதழில் எழுதிய 'இனியவை இருபது' என்ற பயணக் கட்டுரைத் தொடர், நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

ஆதாரம்: 'தமிழ் இதழ்கள்'
சோமலெ
சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு (1975)

கொண்ட துணை மின் நிலையத்தில் 315 மெகாவாட் (டிரான்ஸ்பார்மர்) மின்மாற்றி எந்திரம் பழுதடைந்து சென்னை மாநகரத்தினுடைய மின் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இப்படி அடிமேல் அடி விழுந்து இடிமேல் இடி விழுந்து நாங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட அந்தக் காலக் கட்டத்தில் மின்வெட்டு அறுபது சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்ந்து நின்றது. இருந்தபோதிலும், இந்த அரசு தொய்வில்லாமல் தொடர்ந்து மிக வேகமாக எடுத்துக் கொண்ட முயற்சிகளின் காரணமாக எண்ணூர் அனல் மின் நிலையத்திலிருந்து மூன்று நான்கு மற்றும் ஐந்தாவது பிரிவுகளில் செப்பனிடும் பணி, அதைப் போலவே திருப்பெரும்புதூரிலே அமைந்துள்ள 315 மெகாவாட் மின்மாற்றியின் பழுது நீக்கும் பணி இவைகளெல்லாம் வேகவேகமாக அப்போது நம்முடைய நேரு அவர்கள் மின்சாரத்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருந்த கால கட்டத்தில் மிக வேகமாக நடைபெற்றன.

மேட்டூர் அனல் மின்நிலையத்திலே புதிய இரண்டு உற்பத்தி பிரிவுகளை 420 மெகாவாட் திறன் கொண்ட அந்தப் பிரிவுகளை விரைவாக அந்தப் பணியை முடித்து அதுவும் இயக்கி வைக்கப்பட்டது. நண்பர் வெங்கட்ராமன் பொறுப்பேற்றுள்ள இந்தத் துறையில் காற்றாலைகள் 14 மெகாவாட் திறனுக்கு நெல்லை கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைக்கப்பட்டு அவைகளும், பிறகு பைகாரா, வைகை போன்ற கீழ் பவானி நுண்புனல் உற்பத்தி மூலமாக 14 மெகாவாட் திறன் உள்ள அளவிற்கு நமக்கு மின் உற்பத்தியும் கிடைக்கக் கூடிய சூழ்நிலைகளும் ஏற்பட்டன.

நெய்வேலியிலும், கல்பாக்கத்திலும் அமைந்துள்ள மைய அரசினுடைய மின் உற்பத்தி நிலையத்திலேகூட நாம் எடுத்துக்கொண்ட தீவிரமான விரைந்த முயற்சிகளின் காரணமாக உடனடியாக இவைகள் எல்லாம் இயங்க வழிகோலப்பட்டு 1.7.89 முதல் மின்வெட்டு 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக குறைக்கப்பட்டு, பிறகு 25.7.89 அன்று முதல் 40 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக மின் வெட்டு குறைக்கப்பட்டு, பிறகு 20.12.89 முதல் மின்சக்தி பயனீட்டில் இருந்த மின் வெட்டு 20 சதவிகிதத்திலே இருந்து 10 சதவிகிதமாக குறைக்கப்பட்டு, பிறகு 21.1.90-ல் மின்வெட்டு அறவே நீக்கப்பட்டது.

மின்வெட்டு அறவே நீக்கப்பட்டாலும் கூட டிமாண்ட் கட் 25.7.89-ல் 20 சதவிகிதமாக இருந்தது. பிறகு 16.2.90-ல் 10 சதவிகிதமாக அது குறைக்கப்பட்டு இன்று வரையிலே டிமாண்ட் கட் 10 சதவிகிதம்- அதுவும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகக் குறைவானது தான்.

உங்களிடத்திலே இந்தப் புள்ளி விபரத்தினை சொல்ல வேண்டுமேயானால் 85-ஆம் ஆண்டில் 1.2.85-ல் எனர்ஜி கட் 30 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 30 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 1.3.85-ல் எனர்ஜி கட் 50 விழுக்காடாகவும், டிமாண்ட் கட் 50 விழுக்காடாகவும் இருந்திருக்கிறது. 2.7.85-ல் எனர்ஜி கட் 30 ஆகவும், டிமாண்ட் கட் 30 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 1.1.86-ல் எனர்ஜி கட் 40 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 40 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 22.1.86-ல் எனர்ஜி கட் 20 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 20 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது.

1.1.87-ல் மின்சக்தி வெட்டு 40 சதவிகிதமாகவும், அதைப்போலவே டிமாண்ட் கட் 40 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 16.9.88-ல் எனர்ஜிகட் 30 சதவிகிதமாகவும், அதைப்போலவே டிமாண்ட் கட் 30 சதவிகிதமாக இருந்திருக்கிறது. 1.3.89-ல் எனர்ஜி கட் 40 சதவிகிதம், டிமாண்ட் கட் 40 சதவிகிதம். 24.4.89-ல் எனர்ஜி கட் 60 சதவிகிதம், டிமாண்ட் கட் 60 சதவிகிதமாக இருந்தது. 21.6.89-லும் எனர்ஜி கட் 60 சதவிகிதம், டிமாண்ட் கட் 60 சதவிகிதம். 1.7.89-ல் எனர்ஜி கட் 40 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 40 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 25.7.89-ல் எனர்ஜி கட் 20 சதவிகிதமாகவும் டிமாண்ட்கட் 20 சதவிகிதமாகவும் இருந்திருக்கிறது. 20.12.89-ல் எனர்ஜி கட் 10 சதவிகிதமாகவும், டிமாண்ட் கட் 20 சதவிகிதமாகவும் இருந்தது. 12.1.90-ல் எனர்ஜி கட் இல்லை, டிமாண்ட் கட் 20 சதவிகிதமாக இருந்தது. 16.2.90-ல் எனர்ஜி கட் இல்லை. டிமாண்ட் கட் 10 சதவிகிதம் என்று வந்திருக்கிறது.

இன்று உண்மையிலேயே இந்த விழாவிலே மகிழ்ச்சிகரமான ஒன்றைத் தெரிவிக்கிறேன். 1.7.90 முதல் இந்த பத்து சதவிகித மின்வெட்டும் இருக்காது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை (கைதட்டல்) இந்த விழாவிலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே முதலில் குறிப்பிட்டதைப் போல மின் உற்பத்தியைவிட மின்சாரத்தைச் சேமிப்பதிலே நாம் அதிக நாட்டம் செலுத்தவேண்டும் என்பதை மறந்து விடுவதற்கில்லை. இதைக்கூட சொல்ல வேண்டுமா என்று கேட்கக்கூடும். ஏனென்றால் 'லயன் லாஸ்' என்ற நிலையை எடுத்துக் கொண்டால்கூட இந்தியாவிலேயே தமிழ்நாடு என்ற இந்த மாநிலத்திலேதான் அது 18 சதவிகிதமாக இருக்கிறது. மற்ற மாநிலங்களிலெல்லாம் இதைவிட அதிக சதவிகித அளவிற்குத்தான் 'லயன் லாஸ்' இருக்கிறது. மற்றவர்கள் நம்மைவிட 'லயன் லாஸ்' செய்கிறார்கள் என்பதற்காக நாம் இதைக் குறைக்கக் கூடாது என்பதல்ல. அந்த 18 சதவிகிதத்தையும் மேலும் குறைக்கும் முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும். அதற்கான ஒத்துழைப்பைத் தரவேண்டியவர்கள் தந்தாக வேண்டும்.

இந்த சேமிப்பின் மூலம் தமிழகத்தின் எதிர்காலத்தில் எல்லா வளர்ச்சியையும் நாம் நல்ல முறையிலே உருவாக்க முடியும். இதைச் சொல்ல வேண்டிய அவசியம், இதற்கொரு பொருட்காட்சியை நடத்த வேண்டிய அவசியம்

## எரிசக்தியைச் சேமிப்பதும் புதுப்பிப்பதும்...

சேமிப்பு என்பது, நாம் சேமமுற வாழ வழி வகுப்பதாகும்.

சேமிப்பு என்கிறபோது, பணத்தை மட்டுமே சேமிப்பது என்று நாம் எண்ணி விடுகிறோம்.

அன்றாட வாழ்க்கையில் நாம் சேமிப்பதற்கு எவ்வளவோ இருக்கிறது.

உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்லலாம்.

மின்சாரத்தை நாம் சேமிக்கலாம். அதனால் நமக்கு மட்டுமல்ல. சமுதாயத்துக்கும் பயனுண்டு. அதேபோல, தண்ணீரையும் சேமிக்கலாம்.

இவையெல்லாம் நமக்குத் தெரிந்ததே! ஆனால் அன்றாட அவசர வாழ்க்கையில் அவற்றையெல்லாம் மறந்து விடுகிறோமே!

அவற்றையெல்லாம் நினைவுபடுத்தவும். சேமிப்பின் அவசியத்தைக் கடைப்பிடிக்கவும் ஒரு தூண்டுகோலாக அமைந்தது ஒரு பொருட்காட்சி...

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஜூன் 28 முதல் ஜூலை 1 வரை நடந்த அந்தப் பொருட்காட்சிதான், 'எரிசக்தி 90'.

இந்தப் பொருட்காட்சி மற்றும் கருத்தரங்கினை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், பெட்ரோலியம் சேமிப்பு ஆராய்ச்சி நிறுவனம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவை சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தன.

எரி சக்தியைச் சேமிக்க முடியுமா?

''முடியும்'' என்பதைச் சொல்லாமல் சொன்னது, இந்த அழகிய அதே சமயத்தில் ஆக்கப் பூர்வமான இந்தப் பொருட்காட்சி.

எரிசக்தி சேமிப்பதை மட்டும் இந்தப் பொருட்காட்சி வலியுறுத்தவில்லை. எரிசக்தி வளர்ச்சிக்குத் தேவையான புதிய எரிசக்தி உத்திகளை உபயோகிப்பது பற்றியும் இது விளக்கிக் காட்டியது.

சுமார் 45 நிறுவனங்கள் கலந்து கொண்ட இந்தப் பொருட்காட்சியில், மைய அரசு மரபு சாரா எரிசக்தித்துறை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழக ஊரக வளர்ச்சித் துறை, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, தமிழ்நாடு மின்வாரியம் போன்ற நிறுவனங்கள் பங்கு கொண்டு சிறப்பித்தன.

சூரிய வெப்பம், சூரிய ஒளி, காற்று, மரம், செடி ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் எரிசக்தியை எப்படி நாம் பயன்படுத்திக் கொள்வது என்பதை, இந்தப் பொருட்காட்சியில் நாம் நேரில் தெரிந்து கொள்ள முடிந்தது.

பொருட்காட்சியோடு, பயனுள்ள கருத்தரங்கமும் நடைபெற்றது. மின்சாரத்தைச் சேமித்தல், பெட்ரோலியப் பொருட்களைச் சேமித்தல், புதிய எரிசக்தித் திட்டங்கள் ஆகியவை குறித்து கருத்தரங்கு பல பயனுள்ள கருத்துக்களை வெளியிட்டது. பொதுமக்களும், மாணவர்களும் பயனடையும் வகையில், உற்பத்தியாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் போன்றவர்கள் எளியமுறையில், எரிசக்தி சேமிப்பு முறையை விளக்கிச் சொன்னார்கள்.

பொதுவாக, ''எரிசக்தியைச் சேமிப்பதும், புதுப்பிப்பதும்'' என்பதுதான், இந்தப் பொருட்காட்சி மற்றும் கருத்தரங்கின் முக்கிய நோக்கமாக இருந்தது.

பொருளாதாரத் துறையில் வளர்ந்து வரும் நம் நாட்டிற்குப் பல வழிகளில் எரிசக்தி தேவைப்படுகிறது. அப்போதுதான், தொழில், வேளாண்மை, போக்குவரத்து, வாணிபம் மற்றும் வீடுகளுக்கான தேவைகளை நிறைவேற்றி, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த இயலும். மின்சார வளர்ச்சிக்காக நாடு முழுவதும் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் முதலீடு செய்யப்படுகின்றன. புதிய மின்சாரம் நமக்குத் தேவை என்றாலும், தற்போது கிடைக்கக்கூடிய மின்சாரத்தை நாம் சேமிப்பது அவசியம் என்பதையும் மறுக்க முடியாது.

ஒரு யூனிட்டைச் சேமிப்பது, இரண்டு யூனிட்டுகளைத் தயாரிப்பதற்குச் சமமாகும். இன்று தொழில் துறை 50% மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது. விவசாயம் 20% பயன்படுத்துகிறது. தொழில் துறையிலும், வேளாண்மைத் துறையிலும் மின்சாரம் சேமிக்கப்பட்டால், அது நாட்டுக்கு நல்ல பயனை விளைவிக்கும்.

மேலும், பொருளாதார வளர்ச்சிக்கு எல்லா இடங்களிலும் எப்போதும் மின்சாரத்தைத்தான் பயன்படுத்த வேண்டுமென்பதில்லை. மின்சாரத்திற்குப் பதிலாக சூரிய வெப்பம், சூரிய ஒளி, காற்றின் சக்தி, தாவரச் சக்தி ஆகியவற்றை நல்ல முறையில் பயன்படுத்தலாம். இதுபோன்றவற்றைத் தமிழகத்தில் பயன்படுத்துவதற்குச் சிறந்த வாய்ப்புகள் உண்டு.

இந்தப் பணியில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, மக்களுக்கு குறிப்பாக கிராமப்புறங்களில் மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்துவது பற்றிய விளக்கங்களை அளித்து, புதிய உத்திகளைக் கையாளச் செய்து நல்ல சாதனைகளைப் புரிந்திருக்கின்றது.

மனித-இயல்பே சில நேரங்களில் கொஞ்சம் அளவுக்கு மீறி இருப்பதாகத் தெரிந்தால் அல்லது தேவைக்கேற்ப இருப்பதாகத் தெரிந்தால் அதை மிச்சப்படுத்த வேண்டும் என்று எண்ணுவது கிடையாது.

உதாரணமாக ஒரு ஓட்டலிலே சென்று ரூம் வாடகைக்கு எடுத்து தங்குவதாக வைத்துக்கொள்வோம். மனித இயல்பு-அந்த ஓட்டலை விட்டு காலி செய்து விட்டோ அல்லது ஓட்டலில் தங்கியிருப்பவர்கள் கடைத் தெருவுக்கோ அல்லது பக்தர்களாக இருந்தால் கோயிலுக்கோ செல்லுகிற நேரத்தில் அவர்கள் அந்தக் கதவை வெளியில் பூட்டிக்கொண்டு போன பிறகுகூட மின்விசிறிகள் ஓடிக் கொண்டிருக்கும், அவர்களுடைய இயல்பை உணர்ந்திருக்கிற காரணத்தால்தான் ஓட்டல்காரர்கள் வெளியே ஒரு சுவிட்சை வைத்திருப்பார்கள். எதற்காகத் தெரியுமா? இவர்கள் பேனை (Fan) 'ஆப்' செய்திருக்கமாட்டார்கள். உள்ளே எரியும் விளக்கை அணைத்திருக்க மாட்டார்கள். எனவே அவர்கள் அலட்சியமாகப் போய்விட்டாலும் அதை நிறுத்த வேண்டும் என்பதற்காக வெளியில் ஒரு சுவிட்சை வைத்திருப்பார்கள். அது தமிழ்நாட்டிற்கு அல்லது மக்களுக்குப்பெருமை என்று கருதுகிறீர்களா? அல்ல. நம்முடைய அலட்சியத்திற்காக சூட்டப்பட்ட 'சர்டிபிகேட்'தான் அறைக்கு வெளியே வைக்கப்பட்டிருக்கின்ற சுவிட்சு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே ஒரு அறையிலே போடப்பட்டிருக்கின்ற விளக்கு, மின்விசிறி இவைகளெல்லாம்கூட இதில் என்ன 'கரண்ட்' அதிகமாகிவிடப் போகிறது என்று எண்ணுவதோ அல்லது 500 ரூபாய் ரூமிற்கு வாடகை வாங்குகிறானே ஓட்டட்டுமே என்று அந்த எரிச்சலிலே போவதோ அந்த ஓட்டலுக்கு மாத்திரம் நஷ்டம் அல்ல. எல்லோருக்கும் சேர்த்துதான் நஷ்டம். அங்கே விரையமாகிற, வீணாகிற, தேவையில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கிற, விசிறிக்கோ எரிந்து கொண்டிருக்கிற விளக்கிற்கோ பயன்படுகின்ற அந்த மின்சாரம் மிச்சப்படுமேயானால்தேவைப் படுகிற நேரத்தில் ஒரு விளக்கிற்கும், மின்விசிறிக்கும் அது பயன்படும் என்பதை நாம் உணர்ந்தால் அது ஒரு பெரிய சமுதாய நன்மை என்பதை நாம் உணரமுடியும்.

எனவே இந்த அளவிலே ஒவ்வொரு காரியத்திலும் நாம் இந்த மின்சாரம் சேமிப்பைப்பற்றி கவலைப்பட்டாக வேண்டும். வேறுவகையிலே அனல், புனல், காற்று இவைகளை மாத்திரம் நம்பியில்லாமல் வேறுவகையிலே சூரிய வெப்பத்தில்கூட மின்சாரத்தை இன்றைக்கு உற்பத்தி செய்யமுடியும். அதன்மூலமாகவும் அந்த மின் சாரத்தின் பயனை அந்த அளவிற்குப் பெறமுடியும் என்கின்ற விஞ்ஞானப் புதுமைகள் எல்லாம் இன்றைக்கு நாட்டிலே வந்திருக்கின்றன.

இங்கே கடல் அலையில் கிடைக்கின்ற மின்சாரத்தைக் கொண்டு குடிசைகளிலே விளக்கேற்ற முடியும் என்று இந்த மேடையிலே விளக்கு போட்டு காட்டியிருக்கிறார்கள். இதில் இங்கே ஒரு விளக்கு எரிகிறது. அங்கே ஒரு விளக்கு எரிகிறது. இதற்கும், அதற்கும் கனெக்ஷன் இல்லை என்றாலும்கூட அதிலே சொல்லப்படுகின்ற தத்ரூபமான உண்மை என்னவென்றால் கடல் அலைகளிலே இருந்து கிடைக்கின்ற அந்த மின் உற்பத்தி ஏழை-எளியோர்களுடைய வீட்டிலே விளக்கு எரிவதற்கு பயன்படும், எனவே அதையும் நாம் விட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த முயற்சிகளிலே நாம் இன்றைக்கு ஈடுபட்டிருக்கின்றோம். அது பலன் அடைய எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை.

இந்தக் கருத்தரங்கத்திலே இன்றைக்கு வெளியிடுகின்ற கருத்துக்கள் அதற்கு மேலும் உரமூட்டுகின்ற வகையிலே



## புதியதோர் உலகு செய்வோம்

'சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகு செய்வோம்!

அமையட்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அமையும் என்று நான் நம்புகிறேன். இந்த பொருட்காட்சியின் தத்துவங்கள் தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புற மக்களெல்லாம் தெரிந்து கொள்கின்ற அளவிற்கு விரிவடைய வேண்டும், அதற்கான முயற்சிகளை இந்தத் துறையினர் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

முன்னதாக, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத் தலைவர் திரு. டி.வி. வெங்கட்டராமன் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தென்னகத்தில் மின்வெட்டு இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நமக்கு 4,345 மெகாவாட் (34,464 மில்லியன் யூனிட்) மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் நமக்கு 3,017 மெகாவாட் மின்சாரம்தான் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1400 மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறை ஏற்படும். இதனால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார்.

''1986-ல் மத்திய அரசு ஒப்புதல் அளித்தும் மின் நிலையம் தொடங்காமல் திட்டத்தைக் கிடப்பில் போட்டிருந்தனர். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முயற்சி செய்து 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றி 1000 ஏக்கரை மின் உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்துக்குத் தந்தார்''.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிர்வாகி திரு இராமலிங்கம், பெட்ரோலியம் சேமிப்பு ஆராய்ச்சி நிறுவன அலுவலர் திரு ஆர்.ஆர். மண்டல், மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தித்துறை இணைச்செயலர் திரு டி.சி.ஏ. சீனிவாசன் ஆகியோர் பேசினார்.

விழாவில், பொருட்காட்சியையொட்டி பள்ளி-கல்லூரிகளுக்கு நடத்தப்பட்ட வினாடி-வினாப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

—பி.வி. கிரி





# "முதல்வருக்கும் அரசுக்கும் எங்கள் நன்றி"

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்



கா. இந்திரா காந்தி



ஏ. அம்சா

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், அரசு நலத் திட்ட உதவிகளால் பயனடைந்தோர் பலராவர். அவ்வாறு பயன்பெற்ற பெண்மணிகள் தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் புகழ்மாலை சூட்டினர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், பயனடைந்த ஒரு பயனாளியைச் சந்தித்தபோது அந்தச் சகோதரி கூறியவை-

''என்பெயர் இந்திரா காந்தி. என் கணவர் பெயர் காசிநாதன், நாங்க திருவண்ணாமலை பக்கத்திலே பழையனூர் காலனியிலே குடியிருக்கோம்; எனக்கு மூணரை வயதிலே ஒரு குழந்தை இருக்கு - இது இரண்டாவது குழந்தைங்க. என் புருஷன் ஆடு மேய்ப்பார் மாடு மேய்ப்பார்-சமயத்திலே கிணறு வேலை செய்வாரு. கூலி வேலையிலே எப்போதும் தட்டுப்பாடுங்க. முதல் குழந்தை 3 வருசத்துக்கு முன்னாலே பிறந்தப்போ என்னான்னு கூட கேட்கறதுக்கு ஆளில்லை - இப்போ 2-வது குழந்தை பிறந்தப்போ கவர்மெண்ட் ஆயாமாருங்க வந்து விசாரிச்சாங்க. கவர்மெண்ட்டிலே, கர்ப்பிணியா இருக்கிறவங்களுக்கு மாசம் ரூ.50 வீதம் நாலு மாதத்துக்கு போஷாக்குக்காக ரூ.200/- தர்றாங்க என்று சொல்லி ஒரு பேப்பர்ல கையெழுத்து வாங்கிட்டுப் போனாங்க- ஒருநாள் திடுதிப்பென்று ரூ.200/- கொடுத்து இந்தா புடி- நல்லா சத்தான சாப்பாடு சாப்பிடு; உடம்பைக் கவனிச்சுக்க'' என்று சொன்னாங்க. வறுமையிலே வாடி பசியால் நொந்து குழந்தைக்குப் பாலூட்ட முடியாத எங்க நிலையைப் பார்த்து முதலமைச்சரு ரூபாய் கொடுத்திருக்காங்க; அவருக்கும் இந்த அரசாங்கத்துக்கும் என் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

திருவண்ணாமலையை அடுத்துள்ள பழையனூர் குடியிருப்பைச் சார்ந்த ஏழுமலை மனைவி அம்சாவைச் சந்தித்தபோது, அவர் முக மலர்ச்சியோடு என்ன சொன்னார் தெரியுமா?

''என் புருஷன் பெங்களூரிலே ஒரு ஓட்டல்ல சமையல்காரரா வேலை செய்யறாருங்க எப்பவாவது வருவார், போவார்; வர்றப்போ எதுனா பணம் கொடுப்பாரு. என் மாமனாரும்-மாமியாரும் கூலி வேலை செய்றாங்க-நானும் கூலி வேலைக்குப் போவேன். நான் கர்ப்பிணியா இருக்கிறப்ப ஒருநாளு கூலி வேலைக்கு வயக்காட்டுக்குப் போனேன்; அப்ப ஒருத்தரு பேப்பர்ல படிச்சு, கர்ப்பமா இருக்கிறவங்களுக்கு போஷாக்குச் செலவுக்கின்னு அரசாங்கத்துல ரூபாய் தராங்க என்று சொன்னாரு; அதன்படி நானும்-மாமியாரும் பி.டி.ஓ. ஆபிஸ்ல போய் மனு எழுதிக் கொடுத்தோம். என் குழந்தை புஷ்டியாய் வளர்ரதுக்கும், நான் நல்லா சாப்பிடறதுக்கும் கவர்மென்ட்ல பணம் கொடுக்கிறாங்க என்று அவரும் சொன்னாரு. அடுத்த ஒரு வாரத்திலே ரூ. 200/-ம் கொடுத்தாருங்க- இந்த மாபெரும் உதவிக்காகத் தமிழக முதல்வருக்கும் தமிழ்நாடு அரசுக்கும் ஏழைபாளைங்க ரொம்ப ரொம்ப நன்றி சொல்லனுமுங்க'' என்று சொன்னார் அந்தப் பெண்மணி, மிகுந்த நன்றியுணர்ச்சியோடு.

—ஜீ. மணிக்குமார்,
செய்தி-மக்கள்தொடர்பு அலுவலர்,
திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.

இனிய வாழ்த்துக்கள்

# லெட்சுமி
# டூரிஸ்ட் ஹோம்

## கன்னியாகுமரி

போன்: 333





பொது மக்களின் மீன் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகவும் தீவிர நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன் திருநெல்வேலி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை திருநெல்வேலி 10.12.1980-இல் தொடங்கப்பட்டது. இம்முகமையின் பணிகள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**குறிக்கோள்**

மீன் வளர்ப்பதற்குத் தகுதியான நீர்நிலைகளைச் சீரமைப்பு செய்து மீன் உற்பத்திக்கான அதிக பட்ச அளவு நீர்ப்பரப்பினைத் தயார் செய்தல்.

மீன் வளர்ப்பில், நவீன தொழில் நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்து, பொது மக்களின் மீன் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்தல்.

செயல்முறைகளைத் தீவிரப்படுத்துவதன் மூலம் மேன்மேலும் அதிக அளவு நீர்ப்பரப்பினை மீன்வளர்ப்பிற்குக் கொண்டு வருதல்.

மீன் வளர்ப்பதற்கு முன்வரும் நபர்களுக்கு, நவீன தொழில் நுட்ப முறைகளில் பயிற்சி அளித்து மீன் வளர்ப்பினால் ஏற்படும் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தி, அதன் மூலம் புறநகர் வாழ் மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்துதல்.

**செயல்முறை**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்ப்பிற்குத் தகுதி வாய்ந்தவை எவை என்பது பற்றி அளவாய்வு செய்யப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட நீர்நிலைகள், சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து (வருவாய்த் துறை, பஞ்சாயத்து, நகராட்சி, அறநிலையத்துறை மற்றும் தனியார்) நீண்டகாலக் குத்தகைக்கு (10 வருடங்கள்) முகமையின் கீழ் முதல் கட்டமாக எடுக்கப்படுகின்றன. மீன் வளர்ப்பினை மேற்கொள்ளுவதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களில் தகுதியானவர்கள் துணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒரு எக்டேர் நீர்ப்பரப்பளவுள்ள குளம், ஒரு நபருக்கு ஒதுக்கப்படுகிறது. அதற்குமேல் உள்ள நீர்ப்பரப்பிற்கு ஏற்றவாறு மீன் வளர்ப்போர் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டு நீர்நிலைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் வளர்ப்போருக்கு மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு ஏற்றவாறு குளங்களைத் தயார் செய்தல், உரமிடுதல், மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல், உணவிடுதல் மற்றும் இனம் சம்பந்தமான முறைகள் குறித்துப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

குளங்கள் தயார் செய்யப்பட்ட பிறகு கலப்பு இன மீன் வளர்ப்பிற்காக கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை, வெள்ளிக் கெண்டை, புல்கெண்டை இன மீன்குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. விரைவில் வளர்ச்சி அடையும் இந்த இன மீன் குஞ்சுகள் முகமையின் மூலமாக வாங்கப்பட்டு ஒரு எக்டேருக்கு 5,000 மீன் குஞ்சுகள் வீதம் இருப்பு செய்யப்படுகின்றன. பின்னர் மீன் குஞ்சுகள் போதுமான அளவு வளர்ச்சி அடைந்துவிட்டனவா என்றும், உணவு மற்றும் உரம் இடும் முறையில் மாற்றம் ஏதாவது தேவையா என்பதை அறியவும் சோதனை மீன்பிடிப்புப் பணி அவ்வப்போது மேற்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு மாதம் இதன் வளர்ச்சி பற்றி அறியப்பட்டு விரிவாக்கப் பணி பார்க்கப்படுகிறது. முதல் 10 மாதங்களானதும் மீன்களைப் பிடித்து விற்பனை செய்து அதன் மூலமாக மீன் வளர்ப்போருக்குச் சுயவேலை வாய்ப்பு அளிப்பதுடன் இலாபகரமான தொழிலுக்கு உதவுவதோடு, மீன் உற்பத்தியையும் ஒரு எக்டேருக்கு 1,000 கிலோ முதல் 1,500 கிலோ வரை பெருக்குவதற்கும் வழி வகுக்கப்படுகிறது. ஒரு எக்டேருக்கு 3,000 கிலோ மீன் உற்பத்தி என்ற உச்சநிலைக் குறியீட்டை அடைய, குறிப்பிட்ட சில குளங்களைத் தேர்வு செய்து, அவற்றில் இம்முகமையின் நவீன திட்டங்களையும் தொழில் நுட்ப உதவிகளையும் செயல்படுத்தி, ஏனைய மீன் வளர்ப்போருக்கு உதாரணமாக

எஸ்.எம். பஷீர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி
கட்டபொம்மன் மாவட்டம்

வும் ஆர்வத்தினைப் பெருக்குவதற்கும் முகமை, செயலாற்றி வருகிறது. வங்கிகள் மூலமாக மீன்குஞ்சுக் கடன், மராமத்துக் கடன் முதலியவைகள் மீன் வளர்ப்போருக்குக் கிடைக்க உதவி செய்வதன் மூலம் அவர்களின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் இம்முகமையின் மூலமாக செயல்பட்டு வருகிறது.

முகமையினால் தேர்வு செய்யப்பட்ட குளங்களுக்கு, முகமையின் மூலம் விநியோகிக்கப்படும் உயர்தர பெருங்கெண்டை மீன்குஞ்சுகளின் விலையை தேசீய வங்கிகள் மூலம் உடனடியாக மீன் வளர்ப்போர்கள் பெற, இம்முகமை ஏற்பாடு செய்கிறது. இவ்வாறு மீன் குஞ்சுகள் வாங்குவதற்காகவும் உரம் மற்றும் உணவு வாங்குவதற்காகவும் மீன் வளர்ப்போர்கள் பெறும் உள்ளீட்டுக் கடனில், முதல் ஆண்டிற்கு மட்டும் 25 சதவிகித மானியம் முகமையினால் வழங்கப்படுகிறது. இது போன்று குளத்தினை மேம்படுத்தவும் மராமத்துப் பணி பார்க்கவும் செலவிடப்படும் தொகைக்கு முதல் ஆண்டிற்கு மட்டும் 25 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது.

### முகமையின் சாதனைகள்

இதுவரை, இம்முகமையின் திட்டத்தினால் 422.31 எக்டேர் பரப்பளவுள்ள 195 குளங்கள் மீன் வளர்ப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 334 நபர்களுக்குப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

1980-81-ஆம் ஆண்டிலிருந்து இவ்வாண்டு 1990 ஜனவரி முடிய 73,27,675 உயர்தர மீன்குஞ்சுகள் குளங்களில் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்பட்டு 1,020 டன் மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இதுநாள் வரை 106.38 எக்டேர் பரப்பளவுள்ள 43 குளங்களில் மராமத்துப் பணி பார்க்கப்பட்டு, அதற்காக ரூ.21,473.00 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### மணிமுத்தாறு மீன் விதைப் பண்ணை

மாவட்டத்திலுள்ள முகமைக் குளங்களுக்கு விரலளவு மீன் குஞ்சுகள் பொதுவாகப் பல்வேறு இடங்களிலிருந்து வாங்கப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகின்றன. வளர்ந்துவரும் இம்முகமைத் திட்டத்திற்கு ஈடுசெய்யவும், பிற நிலையங்களிலிருந்து வாங்கப்படும் தேவையை இயன்ற அளவு தவிர்க்கவும் இம்முகமையின் மூலமாக மீன்நுண் குஞ்சுகள் உற்பத்தி செய்து, வளர்ந்து, தரமுள்ள விரலளவு மீன் குஞ்சுகளை மீன் வளர்ப்போர்களுக்கு விநியோகிக்கும் வகையில் ரூ.5.01 இலட்சம் செலவில் மீன் பண்ணை ஒன்று தேசிய புறநகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், அரசால் இம்மாவட்டத்திலிருக்கும் மணிமுத்தாறில் கட்டப்பட்டுள்ளது. இதன்படி 16 நாற்றங்கால்கள், ஒரு பம்ப் ஹவுஸ், ஒரு பண்டக அறை ஆகியவை கட்டப்பட்டு, மீன் குஞ்சுகள் வளர்ப்புப் பணி 10.9.85 முதல் நடைபெற்று வருகின்றது.

1989-90-ஆம் ஆண்டில் அரசின் குறியீடான 55 இலட்சம் நுண் மீன்குஞ்சுகள் உற்பத்திக்கு எதிராக 55.25 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டுச் சாதனை புரியப்பட்டுள்ளது. இதன் மூலம் 5,97,750 விரலளவு மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.


பால்வளம் பெருக! முட்டை உற்பத்தி அதிகரிக்க!!

# கோத்ரெஜ்

## மாட்டுத்தீவனம் & கோழித்தீவனம்

மாவட்ட விற்பனையாளர்;

எஸ். சுந்தரலிங்கம்
கேப்ரோடு, கோட்டாறு, நாகர்கோவில்-629 002
போன்:
கடை 4369, வீடு 4278

கிளைகள்:

மார்கெட் ரோடு, மார்த்தாண்டம்
25, மேலமாடவீதி, திருநெல்வேலி டவுன்
போன்:24655


# சுழற்சி முறைப் பாசனம்


ந. மகாலிங்கம்
செயற்பொறியாளர்
பாசனப்பகுதிமேம்பாட்டுத்திட்டம்
ஈரோடு




முதல் மடை முதல், கடை மடை வரை உள்ள அனைத்து நிலங்களுக்கும் எளிதாக நீர் கிடைக்க அமைக்கப்பட்ட சிமெண்ட் வாய்க்கால்கள்.

இன்று நமது நாட்டில் வேளாண்மைக்கு மிகவும் இக்கட்டான இடு பொருள் பாசனநீர் ஆகும். ஆகவே கிடைக்கும் நீரைச் சரியான முறையில், பயிரின் தேவைக்கு ஏற்பவும், நீர்ப்பாசன நிலத்தின் தன்மை மற்றும் விகிதாச்சாரப்படியும், விநியோகம் செய்வது மிகவும் இன்றியமையாதது. இதற்கு நீர் மேலாண்மை மேற்கொள்வது சாலச் சிறந்தது.

புதுக்கோட்டை மாவட்டத்தில், 20 கண்மாய்கள் ஐரோப்பிய பொருளாதாரக்குழு நிதி உதவியுடன் நவீனப்படுத்தப்பட்டு, பண்ணை மேம்பாட்டுப் பணிகள், திறம்பட செயல்படுத்தப்பட்டு, சிறந்த நீர் மேலாண்மை மேற்கொள்ளும் நிலையில் உள்ளது. சிறந்த நீர் மேலாண்மைக்கு மிக அடிப்படைத் தேவை முறைப்பாசனம் அல்லது சுழற்சிப்பாசனம் அல்லது வாரபந்தி முறைப்பாசனம் ஆகும். அளவுக்கு ஏற்ப சிக்கனமாகப் பாசன நீரைப் பயன்படுத்தி மகசூலை அதிகரிக்க வேண்டும். தேவைக்கு அதிகமாகப் பாசன நீர் பாய்ச்சுவதால் பயிர் வளர்ச்சிக்குப் பாதகமான சூழ்நிலை ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்படும் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆகவே நீர் மேலாண்மை உத்தியின் மூலம் வாரபந்தி முறை நீர்ப்பாசனத்தைக் கண்மாய்ப் பாசனப் பகுதிகளில் மேற்கொள்வது தற்பொழுது உள்ள சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமானது.

### வாரபந்தி

இதைச் சுழற்சி முறைப்பாசனம் அல்லது முறைப்பாசனம் எனவும் கூறலாம்.

இப்பாசன முறையின்படி ஒவ்வொரு விவசாயிக்கும் மதகின் கொள்ளளவிற்கேற்ப 5 (ஐந்து) நாட்களுக்கு ஒரு முறையோ, ஒரு வாரத்திற்கு ஒருமுறையோ அவருடைய நிலப் பரப்பிற்கு ஏற்றபடி அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நேரத்தில் பாசனம் செய்ய அனுமதிக்கப்படும்.

வாரபந்தி என்பது முன்னரே நீர் மானிக்கப்பட்ட நாள், நேரம், காலஅளவு ஆகியவற்றை அட்டவணையிட்டு முறைப்படி பாசன நீரைப் பாசன நிலத்தின் விகிதாசாரத்திற்கேற்ப ஒவ்வொரு விவசாயிக்கும் பகிர்ந்து அளிப்பது ஆகும்.

### வாரபந்தியின் அவசியம்:

வாரபந்தி முறைப்பாசனம் பின்பற்றப்படவில்லை என்றால் முதல் மடைப்பகுதி விவசாயிகளுக்கு அதிக அளவு பாசனநீர் கிடைக்கும். கடைமடைப் பகுதி விவசாயிகளுக்கு மிகக் குறைந்த அளவு பாசன நீர் கிடைக்கும். சில சமயங்களில் கடைமடைப் பகுதி விவசாயிகளுக்குப் பாசனநீர் அறவே கிடைக்காமலும் போகும். ஆதலின் விவசாயிகள் வாய்க்கால் கரைகளை வெட்டிப் பாசனம் செய்ய முயலுவார்கள். சில சமயங்களில் குறுக்கே அணையிட்டுப் பாய்ச்சவும் முயலுவார்கள். இதனால் குழப்பமான சூழ்நிலை நிலவுவதுடன் கண்மாய்ப் பாசன ஒழுங்குமுறை மேலாண்மை பாதிக்கப்படுகிறது.

முறைப்பாசனம் கடைபிடிக்கப்படாமல் இடைவிடாமல் தொடர்ந்து கள வாய்க்காலில் (Field Channel) பாசனநீர் போகுமானால் மிகக் குறைந்த அளவே நீர் செல்லும். மேலும் வாய்மடை (Turn out) எப்பொழுதும் திறந்தே இருக்கும். இதனால் விவசாயிகள் தொடர்ந்து பாசனநீர் எடுத்துக் கொண்டிருப்பார்கள். அதனால் போதிய அளவு நீர், பயிர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் பாசனநீர் கிடைப்பது பற்றிச் சந்தேகம் நிலவும். விவசாயிகள் பாசனப்பயிர் செய்யத்தயங்குவர். ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வாரபந்தி முறை நீர்ப்பாசனம் கண்மாயில் இருக்கும் நீரின் அளவையே முழுவதும் சார்ந்தது ஆகும்.

### வாரபந்தியின் சிறப்பு அம்சங்கள்:

வாரபந்தி பாசன முறையின் சிறப்பு அம்சங்களைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்.

**1. நேர்மை: (Equity)**

ஒவ்வொரு விவசாயியும் அவருடைய நிலப்பரப்பு விகிதாசாரப்படி முன்னரே தீர்மானிக்கப்பட்ட அட்டவணைப்படி பாசனநீர் விநியோகம் பெற உரிமை உடையவர் ஆகிறார். கடைமடைப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு நீர் விநியோகம் செய்யும் போது களவாய்க்காலினால் ஏற்படும் நீர் இழப்பையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆகவே இதில் நேர்மையுள்ளது.

**2. சார்புத் தன்மை: (Dependability)**

ஒவ்வொரு விவசாயிக்கும் எந்த நாளில், எந்த நேரத்தில் அவர் பாசன நீர் எடுத்துக் கொள்வது என்பது பற்றி முன்னதாகவே தெரி விக்கப்படுகிறது. ஆகவே இம்முறை சார்புத் தன்மை உள்ளது.

**3. தேவைக்கேற்றது: (Adequacy)**

பாசனநீர் பொதுவாக பயிரின் பருவத்திற்கேற்றபடி நிபுணர்களின் சிபாரிசுபடி வழங்கப்படுகிறது. தேவைக்கேற்ற

அளவு கிடைக்கிறது.

**4. பங்கு நிரப்பு: (Coverage)**

ஒவ்வொரு மதகின் நீர்ப்பாசனப் பரப்பினைத் திட்டமிட்ட நீர்ப்பாசன சக்திக்குஏற்பக்குறிப்பிட்டு, விவசாயிக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு வயலுக்கும் பாசனநீர் சென்றடைகிறது. ஆதலின் ஒவ்வொரு விவசாயியின் நிலமும் பாசனம் பெறுகிறது.

**5 கட்டுப்பாடு: (Discipline)**

பாசனமுறை ஒரு தடவை உறுதியாக்கப்படுவதுடன் பாசனநீர் பயிர்ப்பருவத்திற்கு ஏற்பவும் நீர்ப்பாசன சக்திக்கு ஏற்பவும் வழங்கப்படுவதினால் ஒருவருக்குள்ள உரிமை மற்றவரால் அபகரிக்கப்படுவதில்லை.

**6. பொது முன்னேற்பாடு:**

மேற்கூறிய சிறப்பு அம்சங்களினால் ஒரு பாசனத் திட்டத்தைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் அதை மேற்கொண்டு அபிவிருத்தி செய்யவும் ஒவ்வொரு விவசாயிக்கும் தனி அக்கறை ஏற்படுகிறது.

**7. சிக்கனத் தன்மை:**

பாசன நீரின் அளவு,நேர அளவுக்குத் தகுந்தவாறு நிர்ணயிப்பதால், நீரைச் சிக்கனமாக உபயோகிக்க விவசாயிகள் முற்படுகிறார்கள்.

**வாரபந்தியினால் ஏற்படும் நன்மைகள்:**

1. ஒவ்வொரு வயலுக்கும் முழு நிறை பயனை அடையக்கூடிய அளவிற்கு, பாசனம் எளிதாக்கப்படுகிறது. மேலும் விவசாயிகள் நீர் நிர்வாகம் நல்ல முறையில் செய்கின்றனர். ஆகையினால் பாசனத்திற்குத் தேவையான நேரமும் வேலை ஆட்களும் குறைக்கப்படுகின்றன.

2. நல்லமுறையில் பாசனநீர் கட்டுப்படுத்தப்படுகிறது. விவசாயிகள் தங்களின் விருப்பம் போல் பயிரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆகையினால் மகசூல் ஒரு அலகு நிலத்திற்கு அதிகரிக்கப்படுகிறது. அதிக அளவு நிலங்கள் ஒரு அலகு பாசன நீருக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

3. பாசனநீர் வீணாவது குறைக்கப்படுகிறது. அத்துடன் சச்சரவுகள் மற்றும் சட்டப்பிரச்சினைகளும் குறைக்கப்படுகின்றன.

4. சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கும், கடைமடை விவசாயிகளுக்கும் பாசனநீர் தவறாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

5. ஒவ்வொரு விவசாயிக்கும் எப்பொழுது எவ்வளவு பாசனநீர் கிடைக்கும் என்று முன்கூட்டியே தெரிவதனால் விவசாயப் பணிகளைத் தகுந்த முறையில் முன்னரே திட்டமிட முடிகிறது.

6. உயர்ந்த விதை, உரம் முதலியவற்றைப் பயன்படுத்த விவசாயிகள் ஊக்கம் அடைகின்றனர். அவ்விதம் உபயோகிப்பதனால் விளைச்சல் அதிகரிப்பதுடன் முதலீட்டுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது.

வாரபந்தி பாசனம் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களில் நல்ல மகசூல் கிடைப்பதினாலும், பாசனநீர் அனைத்து விவசாயிகளுக்கும், நல்ல முறையில் பங்கிடப்படுவதினால் இத்திட்டம் விவசாயிகளிடம் நல்லவரவேற்புப் பெற்று உள்ளது.

இத்திட்டம் தஞ்சையிலும், ஈரோட்டிலும், முறையே காவிரிப் பாசனப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்திலும், கீழ்பவானி பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**அம்பேத்கர் நூற்றாண்டு**

## எல்லோரும் நமக்குச் சகோதரர்களே!



நாம் அடிமையாகப் பிறந்து விட்டோம் என்று உங்களுக்கு நீங்களே உறுதி செய்து கொண்டு விட்டீர்களானால், எந்த உரிமையையும் உங்களால் அடைய முடியாமலே போய்விடும். யாரும் யாருக்கும் அடிமையல்ல என்பதை உணருவோம். தலை நிமிர்ந்து நடப்போம். நாமும் மனிதர்களே; எல்லோரும் நமக்குச் சகோதரர்களே!

—டாக்டர் அம்பேத்கர்


**கன்யாமில்க்**

**எங்களது சுவைமிக்க "பால்பேடா"வை ருசித்து மகிழுங்கள்.**

தமிழ் நாட்டிலுள்ள பல மாவட்டக் கூட்டுறவு பால்
உற்பத்தியாளர்ஒன்றியங்களுக்கு எங்களது நயமிக்க
சுவைமிக்க "கன்யாமில்க்" பால்பேடாவை வழங்கி
வருகிறோம் என்பதில் பெருமையடைகிறோம்.

பதப்படுத்திய பால், பைகளில் அடைத்த பால், சூடான பால், சுவையூட்டிய பால், நறுமண நெய், நயமிக்க பால்பேடா தரமுடன் பெற்று நிறைவுடன் செல்ல எங்களது கன்யா பாலகங்களுக்கு வருகை தாருங்கள்.

கா.சேக் அகமது பாசா,
நிர்வாக இயக்குநர்.

எம்.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,
பெருந்தலைவர்/மாவட்ட ஆட்சியாளர்

கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்
எண். 2946, நாகர்கோவில்-629 003.




# நூல் நயம்

### கலைஞர் கருணாநிதியும் கனியமுதுச் செல்வங்களும்

**ஆசிரியர்:** டாக்டர் எஸ். குலசேகரன்
**வெளியீடு:**
அமிழ்தம் பதிப்பகம்
15 முத்துப் பிள்ளைத் தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்-632 001
விலை:ரூ.10 பக்கம்:102

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் அற்புதமான பண்புகளும், அரிய குண நலன்களும் இளந்தளிர்களுக்கு எளிதில் புரியும்படி, அழகாக, எளிமையாக இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

ஒவ்வோர் அத்தியாய முடிவிலும், அதனால் விளக்கப்படும் நெறி, விளக்கப்பட்டிருப்பது சிறப்பு. இளந் தலைமுறை படித்துப் பயன்பெற வேண்டிய நல்ல தொகுப்பு.

-என். குமாரசாமி

### போதிசத்துவர் கதைகள்

**ஆசிரியர்:** நெ.சி. தெய்வசிகாமணி,
**வெளியீடு:**
பைலட் பப்ளிகேஷன்ஸ்
304, லிங்கி செட்டித் தெரு,
சென்னை-600 001.
விலை:ரூ.12 பக்கம்:119.

துன்பங்களுக்குக் காரணம் ஆசையே என்றார் புத்தர். அவர், மக்களுக்காகத் துறவு நிலை மேற்கொண்டு, பல அரிய உண்மைகளை அறிவித்தார்.

அவரது வாழ்க்கையைச் சித்திரிக்கிறது இந்நூல். சிறுவர், சிறுமிகள் படிப்பதற்கேற்ற வகையில், எளிய தமிழில் தக்க படங்களுடன் எழுதப்பட்டுள்ளது.

### உலகத்தின் ஒளிச்சுடர்கள்

**ஆசிரியர்:** என்.ஏ. வேலாயுதம்
**வெளியீடு:**
அன்பு நிலையம்
வடிவீஸ்புரம்
நாகர்கோவில்-629 002.
விலை:ரூ.45 பக்கம்:376

உலகத்தின் ஒளிச்சுடர்களாயிருந்து, மறைந்தும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்கள் பலர். அவர்களது வாழ்க்கை நமக்குக் கலங்கரை விளக்காக இருந்து வழிகாட்டிக் கொண்டிருக்கிறது.

அறிவியல் அறிஞர்கள், கவிஞர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், ஆன்மீக ஞானிகள் இப்படிப் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய 101 பெருமக்களைப் பற்றிய வரலாற்றுச் சுருக்கங்கள் இந்நூலில் காணக்கிடைக்கின்றன.

இளைய தலைமுறை படித்துப் பயன்பெற வேண்டிய அறிவுக் கருவூலம் இது.

—பி.வி.கிரி

### தண்ணீரும் இரத்தமும்

**ஆசிரியர்:** ஸ்வீட்லின் பிரபாகரன்
**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை-3.
விலை:ரூ.4 பக்கம்:25

கிராமப்புறப் பெண்களின் முன்னேற்றம், சுதந்திரம் ஆகியவற்றிற்காகச் சில பெண்கள் முயன்று ஒரு கிராமத்தில் அவற்றைப் பெற்றுத் தர முயல்வதுதான் கதை. வரதட்சிணைக் கொடுமை, தண்ணீர்ப் பிரச்னை முதியோர் கல்வி, சுகாதாரம், தீண்டாமை என்று ஒரு கிராமத்தின் ஒட்டு மொத்தப் பிரச்னைகளையும் இச்சிறு நூலில் மிக அழகாக அணுகி இருக்கிறார் ஆசிரியர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது அழகாக விளக்கப்பட்டுள்ளது.

– குமார்

### பணமொழிகள்

**ஆசிரியர்:** ரமா வேல்சாமி
**வெளியீடு:**
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி சிட்கோ எஸ்டேட்
சென்னை-600 098.
விலை:ரூ.4 பக்கம் 31

பணம் சம்பந்தப்பட்ட பழமொழிகளின் தொகுப்பு. பணம், தனம், பொருள், காசு என்று பணம் பற்றிய பழமொழிகளோடு, கடன், செலவு, போன்று பணத்தோடு தொடர்புள்ள பழமொழிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

### அனைவர்க்கும் அறிவியல்

**ஆசிரியர்:** தல்தகீர் சலாவுத்தீன்
**வெளியீடு:**
மகாசக்தி பதிப்பகம்
16, சுங்குராமத் தெரு,
சென்னை-600 001.
விலை:ரூ.16 பக்கம்:144

இன்று அறிவியல் துறை வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதன் பயனாக மக்கள் அடைந்த பயன்களோ ஏராளம். அத்தகைய அறிவியல் உண்மைகளைத் தொகுத்துத் தருகிறது. இந்நூல்.

மூலக் கூறுகளின் விந்தை, சூரிய மண்டலம், பரிதி ஆற்றல், செய்தித்தாள்கள், நிலவினைப் பற்றிய கொள்கை முதலான ஏராளமான அறிவியல் உண்மைகள் பொதிந்துள்ள அறிவுப் பெட்டகமாக இந்நூல் விளங்குகிறது. பள்ளி மாணவர் மட்டுமல்ல, மற்றவர்களும் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடிய சுவையான தொகுப்பு.

### நல்ல தாத்தா

**ஆசிரியர்:** கவிஞர் முத்தெழிலன்
**வெளியீடு:**
மலர்முகம் பதிப்பகம்
43, கோதண்டராமர்
கோயில் தெரு,
சென்னை-600 033.
விலை:ரூ.8 பக்கம்:51

குழந்தைகளை நல்வழிப்படுத்தும் குழந்தைப் பாடல் தொகுப்பு. எளிய இனிய சந்தங்களுடன் கூடிய சின்ன சின்னப் பாடல்கள் குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் மகிழ்விக்கும்.

பறவை, விலங்குகள் பற்றியும், நாட்டுத் தலைவர்கள் பற்றியும் பாடல்கள் உள்ளன. படிக்கவும், பாடவும் ஏற்ற பாடல்கள்.

### கவிதை இலக்கியம்-ஓர் ஆய்வு

**ஆசிரியர்:** மு. விவேகானந்தன்
**வெளியீடு:**
மு. விவேகானந்தன்
ஏ.எச்.15 தாடண்டர் நகர்
சென்னை-600 015.
விலை:ரூ.15 பக்கம்:151

திறனாய்வு என்பது ஒரு கலையாகும். அதுவும் இலக்கியத் திறனாய்வு செய்யப்படுவதற்கு மிகுந்த புலமையும், ஆழ்ந்த சிந்தனையும் வேண்டும். அத்தகைய ஆற்றல் பெற்றவர் இந்நூலாசிரியர் என்பதை இந்நூல் மெய்ப்பிக்கிறது.

எது கவிதை? என்பதிலிருந்து, கவிதை இலக்கியம் வளராததேன்? என்பது வரை எல்லாமே சிறந்த ஆய்வுக் கட்டுரைகளாக விளங்குகின்றன.

புதுக் கவிதையின் நோக்கும் போக்கும் கூட இந்நூலில் விளக்கப்படுகிறது.

-பி.வி.ஜி





காந்தியடிகளுடன்...



தமது அமைச்சரவையினருடன் (1954)

# பெருந்தலைவர் காமராசர்

பண்டித நேருவுடன்...



லால் பகதூர் சாஸ்திரியுடன்...



எகிப்து அதிபர் நாசர் மற்றும் தலைவர்களுடன்...



எத்தியோப்பிய மன்னருடன்...





தலாய்லாமாவுடன்...



ரஷ்ய அதிபர் கோசிஜின்னுடன்...

மூதறிஞர் இராஜாஜியுடன்...



தந்தை பெரியாருடன்...



பாபு ஜெகஜீவன்ரா முடன்



மாண்புமிகு முதல்வர் கலைஞருடன்...



# நெல்லை பால்

ஊட்டச்சத்து நிறைந்தது!  ருசி மிகுந்தது!!  உயர்தரமானது!!!

# ''நெல்லை பால்''

இல்லங்களுக்குத் தேவையான தரமான அக்மார்க் நெய்,
வெண்ணெய், நறுமணப் பால், பால்பவுடர் நியாய விலையில்
'நெல்லை பால்' பாலகங்களில் கிடைக்கும்.

பொதுமக்களின் வசதியை முன்னிட்டு
திருமணம், சடங்கு, வீட்டு விசேடங்கள் மற்றும்
பிற நிகழ்ச்சிகளுக்குத் தேவையான பாலுக்கு
முன்பதிவு செய்து பால் வழங்குகிறோம்.

ஹோட்டல்களுக்கு அதிகக் கொழுப்புச்சத்து அடங்கிய
பால், தொடர்ச்சியாக வழங்கி வருகிறோம்.
ஹோட்டல்களின் அன்றாடப் பால் தேவைகளுக்குத்
தொடர்பு கொள்ளவும்.

**திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுப் பால்
உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறு)
ரெட்டியார்பட்டி சாலை,
திருநெல்வேலி-627 007.**

**தொலைபேசி எண். 72361, 71003.**




மாணவர் பக்கம்

## வீடு மாறிப் போகிறேன்!

-தம்பி சீனிவாசன்.



*வீடு மாறிப் போகிறேன்
வேறு வீடு போகிறேன்.
தேட வேண்டாம் எங்களை
திசைகள் மாறிப் போகிறோம்.*

*வீடு மாறிப் போகிறேன்,
வண்டி ஏறிப் போகிறேன்!
வேடிக் கையாய் வாழ்ந்தவரை
விட்டு விட்டுப் போகிறேன்.*

*வீடு மாறிப் போகிறேன்
வேறு பேட்டை போகிறேன்.
தேட வேண்டும் வேறுபள்ளி,
தேட வேண்டும் நண்பரை.*

*வீடு மாறிப் போயினும்,
பள்ளி மாறிப் போயினும்,
உள்ளம் மாற வில்லைநான்
உணர்வும் மாற வில்லையே !*

## அறிவுச் சுடர்

புவியை மையமாகக் கொண்டே சூரியன் சுற்றி வருகிறது என்ற கொள்கையை வெளியிட்ட அறிஞர் யார்?
-டாலமி.

ஆஸ்பரின் மருந்தைக் கண்டுபிடித்த வர் யார்?
**-1889-ஆம் ஆண்டு ஜெர்மானிய நாட்டைச் சார்ந்த டிரன்ஸர் என்பவர் கண்டுபிடித்தார்.**

உலகில் நாம் காணும் பொருட்கள் எவ்வகை நிலைகளில் காணப்படுகின்றன?
**-3 நிலைகளில் காணப்படுகின்றன. 1. திண்மநிலை, 2. நீர்மநிலை, 3. வாயுநிலை.**

பரப்பளவில் பெரியது கனடாவா? அமெரிக்காவா?
**-கனடா.**

இந்திய மாகாணங்களில் மிகப் பெரிய மாநிலம் எது?
**-மத்தியப் பிரதேசம்.**

இந்தியாவிலுள்ள மிக உயர்ந்த அருவி எது?
**-மைசூரில் உள்ள கிராசப்பா அருவி.**

இந்து மகா சமுத்திரத்தின் மிக ஆழமான பகுதி எது? ஆழம் எவ்வளவு?
**-ஜாவா டிரன்ச் என்ற இடம். 7725 மீட்டர்.**

ஊசல் கடிகாரங்கள் எதன் அடிப்படையில் இயங்குகின்றன.?
**சுழற்சியில்**

ரேடியன் எனப்படுவது என்ன?
**புவியில் கோணத்தை அளக்கும் அலகு.**

தெரிந்து கொள்ளுங்கள்

## கம்போடியா

உலக நாடுகளில் ஒன்று கம்போடியா. இந்நாட்டு மக்கள் 'கெமர்' (Khmer) என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் பேசும் மொழியும் கெமர்தான். அவர்களுக்குப் பிரெஞ்சு மொழி கொஞ்சம் தெரியும். ஆனால் ஆங்கிலம் அவர்கட்குத் தெரியாது.

அந்தத் தேசத்தில் முழுவதும் ஓடும் ஒரே இரயில் நாம்பென்னுக்கும் பாட்டன் பாங்குக்கும் மட்டும்தான். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு தடவைதான்.
அங்கு தொழிற்படிப்பு படித்தவர்கள், அதாவது இன்ஜினியர்கள், டாக்டர்களும் விவசாய மற்றும் கால்நடைப் பட்டதாரிகள் விரல்விட்டு எண்ணும் அளவில்தான்.
கம்போடியா நாட்டு மக்கள் மிகவும் இனியவர்கள். நன்கு பழகுகின்றனர். அங்கு, சரியாகச் சாலை வசதியோ மற்ற சௌகரியங்களோ கிடையாது.
பெண்கள் எலலா வேலைகளையும் சுறுசுறுப்பாகச் செய்கின்றனர்.

அங்கு, பழக்கத்தில் இருக்கும் நாணயம் ரியில் (Reil) என்பது. சுமார் 200 ரியில் ஒரு டாலருக்குச் சமம். நாட்டின் வருமானம் சராசரி நபர் ஒருவருக்கு 50 டாலர்தான்.

ஆசியாவிலே மிகப் பெரிய ஏரியான (Sweet Water) டான்லி சாப் என்பது இந்தத் தேசத்தில்தான் உள்ளது. இந்தத் தேசத்தின் வழியாகத்தான் துன்பத்தைத் தரும் மிகாங் நதி ஓடுகின்றது.

கம்போடியர்கள் பேசும்மொழியில் நிறைய சமஸ்கிருதம் கலந்து உள்ளது. அங்கு இருக்கும் கலாச்சாரம், தென் இந்தியாவின் கலாசாரத்தைப் போன்று உள்ளது.

**—டாக்டர் இரா. க. சிவனப்பன்**
*(நன்றி: 'செய்திமடல்')*

# அகஸ்தீஸ்வரம்
# ஊராட்சி ஒன்றியம்

**1989-90-ஆம் ஆண்டு வளர்ச்சிப்பணிகள் சாதனை விபரம்**

| | எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் | 157 | 23,10,000 |
| 2. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | 364 | 5,70,000 |
| 3. பெரு விவசாய உற்பத்தித் திட்டம் | 16 | 37,000 |
| 4. குடும்ப நல்வாழ்வுத் திட்டம் | 313 | |
| 5. சிறுசேமிப்புத் திட்டம் | | 80,80,000 |
| 6. சாண எரிவாயு கலன் அமைத்தல் | 29 | 1,06,140 |
| 7. புகையில்லா அடுப்புகள் அமைத்தல் | 250 | 13,000 |
| 8. முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் | 218 | 42,100 |
| 9. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஏழைப்பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம் | 44 | 2,20,000 |
| 10. உபரி நிதி வேலைகள் | 54 | 34,24,542 |

**1986 மார்ச் முதல் 1989 டிசம்பர் முடிய.**

திரு எஸ். இராஜரெத்தினம், பி.ஏ.,
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்

திரு என். கணேசன், பி.எஸ்ஸி.,
ஆணையாளர்

திரு எஸ்.பி. நடராஜா, பி.ஏ., பி.எட்.,
ஊராட்சி ஒன்றியத்தலைவர்

ஆதி திராவிடர்-பழங்குடியினருக்கு:

# தொழில் நெறி வழிகாட்டும் நிலையம்

பெ. கிருஷ்ணன்
உதவி இயக்குநர்
ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவித்தல்
மற்றும் வழிகாட்டல் நிலையம்
கோயம்புத்தூர்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியினருக்காக, தமிழக அரசு, வேலூர், நெல்லை, திருச்சி, கோவை ஆகிய நான்கு இடங்களில் பயிற்றுவித்தல் மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது.

கோவையில் இந்தப் பயிற்சி நிலையம், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் வளாகத்திலேயே இயங்கி வருகிறது. இந்த நிலையம் கடந்த ஆண்டு (1989) ஏப்ரல் திங்களில் செயல்படத் தொடங்கியது.

இந்திய அரசியல் சட்டத்திலேயே ஆதி திராவிட பழங்குடியினருக்காக இட ஒதுக்கீடு செய்யப்பட்டு சமூகப் பாதுகாப்புக்காக வழி வகைகள் செய்து ஏறத்தாழ அரை நூற்றாண்டு ஆகியும் இன்று வரை எதிர்பார்த்திட்ட அளவு அவர்கள் ஏற்றம் பெறவில்லை என்பதை அரசு உணர்ந்து, முழுமையான அளவிலே அரசின் சலுகைகளையும் பெற்றுப் பயன் அடைந்திட, பயிற்றுவித்தல் மற்றும் வழிகாட்டும் நிலையங்களை ஏற்படுத்தி உள்ளது.

***நிலையங்கள் செய்வதென்ன?***

- ஆதி திராவிட மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த படித்த இளைஞர்களின் ஆற்றலுக்கேற்பப் பொருத்தமான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்,
- வேலைத் திறனை அதிகரிக்கும் வகையில் பயிற்சி அளித்தல்,
- பொருத்தமான கல்வி நிலையில் தொழில் நெறி வழி காட்டல் வழங்கிடல்
- பள்ளிஇறுதி வகுப்பு, மற்றும் மேனிலைக் கல்வி முடித்தவர்களுக்கு என்ன தொழில் கல்வி அல்லது மேல்படிப்ப படிக்கலாம் என்ற விவரத்தை அவரவர் கல்வி மேம்பாட்டிற்கேற்ப எடுத்துச் சொல்லல்.
- பணிநாடிச் செல்லும் முறையில் எவ்வாறு அப்பணிகளுக்கேற்ப கல்வித் திறன், பயிற்சி ஆற்றல் பணி அனுபவம் அமைய வேண்டும் என்று விளக்குதல்.
- தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற பயிற்சிகளைப் பெற முடியாதவர்களுக்கு அரசின் உதவித் தொகை அளித்து அப்பயிற்சிகளைப் பெறுவதற்கு வழிவகை செய்தல்.
- பலவேறு வகையான போட்டித் தேர்வுகளுக்கு, முன் தேர்வுப் பயிற்சிகள் அளித்து, போட்டித் தேர்வினைத் திறமையாக எழுதுவதற்குச் சிறப்பு வகுப்புகள் நடத்துதல்.
- "சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை" என்பதற்கிணங்க, தன்னம்பிக்கை அளிக்கும் வகையில் திங்கள் ஒரு முறை விண்ணப்பதாரர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் சொற்பொழிவு- கலந்தறிதல்- கலந்துரையாடல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- அனைவருக்கும் அரசுப்பணி அமைவது அரிது என்பதால், சுயவேலை வாய்ப்புச் சிந்தனைகளை எழுப்பி, அவ்வாறு சுயதொழில் தொடங்கிட அனைத்து உதவிகளையும் உடனிருந்து செய்தல்.
- பணிவாய்ப்புக்கான நேர்காணலின் போது, பெரும்பாலானோர்,வேலையளிப்பவர் எதிர்பார்க்கக் கூடிய வகையில் நேர் காணல் பேட்டியினைச் செய்திட முடிவதில்லையாதலால், நேர் காணலுக்கு முன்னர், ஓர் ஒத்திகை நேர்காணல், நடத்தி ஊக்குவித்தல்.

இந்த நிலையம் ஆண்டுதோறும் பலவேறு பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.

மத்திய அரசு அலுவலகங்களில் பணியாளர்கள் தேர்வு செய்வது 'ஸ்டாப் செலக்ஷன் கமிஷன்' ஆகும். ஸ்டாப் செலக்ஷன் கமிஷன்- அ) எல்.டி.சி. பணிக்கான தேர்வு ஆ) இன்கம்டேக்ஸ்/கஸ்டம்ஸ் இன்ஸ்பெக்டர், ஆடிட்டர் போன்ற பணிகளுக்கான தேர்வு இ) அஸிஸ்டண்ட் கிரேடு பணிகளுக்கான தேர்வு ஈ) ஸ்டெனோ கிராபர் பணிகளுக்கான தேர்வு, ஆகிய தேர்வுகளை நடத்துகிறது.

இந்தத் தேர்வுகளுக்கெல்லாம் முன் தேர்வுப் பயிற்சியினை இந் நிலையம் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு நடத்துகிறது.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கான எழுத்தர், காசாளர், தட்டச்சர் போன்ற பணிகளுக்குப் பேங்கிங் சர்விஸ் ரெக்ரூட்மெண்ட் போர்டு நடத்தும் தேர்வுகள்.

இரயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்டு நடத்தும் எழுத்தர் பணிக்கான தேர்வு.

தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் நான்காம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைப். பணிகளுக்கான தேர்வுகள்.

இது தவிர அவ்வப்போது பெருவாரியான இடங்களுக்கு ஆட்சேர்ப்புத் தொடர்பாக நடத்தப்படும் முக்கியத் தேர்வுகளுக்கும் முன் தேர்வுப் பயிற்சிவகுப்புகள் நடத்தப்படுகின்றன.

**இந்நிலையம் மேற்கொண்ட தலையாய பணிகள்:**

1. வேலை தேடும் படித்த ஆதி-திராவிட மற்றும் பழங்குடியினத்தவருக்குத் தொழில் நெறி வழிகாட்டல்.

2. நம்பிக்கை ஊட்டும் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துதல்.

3. பணிமேம்பாட்டுத் திட்டங்களை அமல்படுத்தல்

4. தட்டச்சு/சுருக்கெழுத்து பயிற்சிக்கு உதவுதல்

5. ஆள் பற்றாக்குறை பணியிடங்களை ஆய்ந்து அதற்கேற்ப நபர்களைத் தயார்ப்படுத்தல்.

6. முன் தேர்வுப் பயிற்சிகளை முறையாக நடத்துதல்.

7. சுய வேலைவாய்ப்பிற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறி ஈடுபடுத்துதல்.

8. பயிற்சி, மேல்படிப்பு, போன்றவைகளுக்கு நிதி ஆதாரங்களைப் பெற ஆலோசனை வழங்கல்.

9. சமுதாயச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு ஊக்கம் அளித்தல்.

10. ஆதி-திராவிடர்/பழங்குடியினர் மாணவ/மாணவிகள் விடுதிகளுக்குச் சென்று தொழில் நெறி புகட்டல்.

*பயிற்சிச் சலுகைகள்:*

பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ரூ.5 பயிற்சிக் காலத்தில் அளிக்கப்படுகிறது. வெளியூரிலிருந்து வருபவர்கள் கோவையில் தங்கிப் பயிற்சி பெற ஆதிதிராவிட நலத்துறை விடுதிகளில் இலவசமாகத் தங்கிக் கொள்வதற்கு ஆண், பெண் விடுதிகளில் தனித் தனியே ஏற்பாடு செய்யப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் தேவையான பாடங்கள், பாடக் குறிப்புகள் மாதிரித் தேர்வுத் தாள்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன பயிற்சி பெறுவதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலை உருவாக்கிட, பயிற்சி வகுப்புகள் அரசினர் பெண்கள் கல்வியியல் கல்லூரி, கோவை-1-இல் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் ஆசிரியைகளை உருவாக்கி வரும் சிறந்த பயிற்சி ஆசிரியைகள்- ஒவ்வொரு பாடத்திலும் புலமை நிறைந்தவர்கள் முன் தேர்வுப்பயிற்சியினைப் பயிற்றுவிக்கிறார்கள்.

''போட்டித் தேர்வு''

ஒரு சில வேலைகளுக்கு பலநூறு பேர்கள் விண்ணப்பிக்கும் போது போட்டித் தேர்வு என்ற நிலை உருவாகிறது. எனவே இது தவிர்க்க முடியாதது. அத்தகைய போட்டித் தேர்வுக்கு நாம் நம்மை தயார்படுத்திக் கொள்வதே விவேகம்.

போட்டித் தேர்வுகளில் பெரும்பாலும் பொது அறிவுத் தொடர்பான வினாக்கள் வருவது உண்டு. பொது அறிவு என்பது மனித வாழ்வில் அன்றாட நிகழ்வுகளில் கலந்த விஷயங்களே! அவை, கலை, விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம், அரசியல், புவியியல் அனைத்து சம்பந்தப்பட்டவையே. இந்தப்பொது அறிவு, வாழ்வில் அன்றாட நிகழ்வுகளைச் சுற்றியதே ஆதலின், நாள் தோறும் நாளேடுகளைப் படிக்க வேண்டும். தவிர, ஒட்டு மொத்தமாக புத்தக வடிவிலும் அச்சிட்ட வெளியீடுகள் வந்துள்ளன. அவைகளையும் கவனமாகப் படிக்க வேண்டும். பொது அறிவினைப் பெருக்குவதன் மூலம் போட்டித் தேர்வினை எளிதில் சமாளிக்க முடியும்.

*அரசுச் சலுகைகள்:*

சமுதாயத்திலே அடித்தளத்தில் அன்றாட வாழ்க்கைக்குப் போராடும் ஆதி திராவிட, பழங்குடியினத்தவர்கட்கு அரசு பல்வேறு வகையான சலுகைகள் அளித்து, சமுதாயத்திலே சமத்துவம் பெற்றிட வாய்ப்பளித்து உள்ளது. 'சமுதாய நீதி அவர்கட்குக் கிடைத்தாக வேண்டும் என்பதே சமுதாய நீதி ஆண்டாக இந்த ஆண்டைக் கொண்டாடிடும் அரசின் நோக்கம்.

கல்வி மேம்பாடு பெற்றால் சமுதாயத்திலே மதிக்கப்படுவார்கள் என்ற குறிக்கோளுடன் கல்விச் சலுகை அளித்துள்ளது. பட்டப் படிப்பு வரை இலவசம். இதற்கிடையில், தங்கிப் படிக்க உணவு, சீருடை இலவசம். மேல் கல்வி பயில உதவித் தொகை- கல்வியின் தரம் பொறுத்து அளிக்கப்படுகிறது. கல்லூரிகளில் 18 விழுக்காடு இடஒதுக்கீடு முறை அமலாக்கப்பட்டு ஆதி-திராவிட பழங்குடியினர்சமவாய்ப்புப் பெற வழி பிறந்துள்ளது. கல்வி பயின்ற பிறகு அதைத் தொடர்ந்து பயிற்சி பெறவும் அரசு உதவித் தொகை வழங்குகிறது. சான்றாகச் சட்டம் பயின்றவர்கள், வழக்கறிஞர்களாகப் பயிற்சி பெறவும், வணிகவியல் பட்டம் பெற்றவர் கணக்கர்களாகப் பயிற்சி பெறவும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிகளுக்கான பயிற்சியினை உதவித் தொகை அளித்துக்கொடுக்கிறது.

பொதுவாக, கல்வி பயில, கணக்கற்ற சலுகைகளை அரசு அளித்துள்ளது எனினும் அவைகளை முழுமையாகப் பயன்படுத்தாமை ஒன்றுதான் குறை என்று சொல்ல வேண்டும். ''கடையை விரித்தேன் கொள்வாரில்லை'' என்ற நிலை வரக்கூடாது என்பதுதான் இந்த நிலையத்தின் அவா. ●



# விண்ணப்பம் எழுதும் முறை!

நம்மில் அநேகருக்கு முறையாக ஒரு கடிதம் கூட எழுதத் தெரியாது என்பது உண்மைதான். அதிலும் ஒரு வேலைக்கு விண்ணப்பம் எழுதுவது என்பது மிகவும் சிரமமான காரியம்தான். நாம் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக விளம்பரப்படுத்தப்பட்ட வேலைகளுக்கு விண்ணப்பங்கள் படிவத்தில் வரையறுக்கப் பட்டுள்ளன. அந்த விண்ணப்பங்களில் கூட சில நேரங்களில் கல்வித்தகுதியை முழுமையாகத் தெரிவிக்கத்தவறி விடுவது உண்டு. இன்னும் சிலர் அவசரக்கோலத்தில் கையெழுத்துப் போட மறந்து விடுவது உண்டு. சில நேரங்களில் விண்ணப்பம் அனுப்பும் முகவரியில் தன்னுடைய முகவரியை எழுதி விடும் அபத்தும் நேர்வது உண்டு. தவிர போதிய தபால் வில்லைகள் ஒட்ட மறந்து விடுவது உண்டு. இவையெல்லாம் தவிர்க்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் கொடுத்தும் கூட இந்தக் குறைபாடுகள் ஏற்படும்போது, விண்ணப்பபடிவமே இல்லாத நிலையில் வேலை கேட்டு விண்ணப்பம் தனியார் துறைக்கோ அல்லது ஓர் அரசுச் சார்பு நிறுவனத்திற்கோ எழுதும் போது மிகவும் கவனமாக விண்ணப்பம் செய்திடல் வேண்டும்.

1. நீ ஏழை தான். அதனால் ஏழை என்று பறைசாற்றி விண்ணப்பிக்காதே. நீ கோழை ஆகி விடுவாய்.

2. வேலை அளிப்போரிடம் இரக்கத்தை எதிர்பார்க்கும் நிலையில்-உனது சுயமரியாதையை இழக்கும் நிலையில் விண்ணப்பம் இருக்கக் கூடாது

3. உண்மை, தெளிவு, துணிவு, பணிவு, கனிவு இவை கலந்து விண்ணப்பம் அமைதல் வேண்டும்.

4. வள, வள, என்று நீண்ட கதை போன்ற விண்ணப்பம் எழுத வேண்டாம்.

5. பெயர், முகவரி, வயது, கல்வித் தகுதி தொழில் திறன், பணி அனுபவம் இவைகளைக் குறிப்பிட மறக்கலாகாது.

6. ஒரு பக்கம் அடங்கிய விண்ணப்பம் நல்லது.

7. கையால் எழுதினாலும் சரி, தட்டச்சு செய்து அனுப்பினாலும் சரி பார்க்க, படிக்க - ஈர்க்கக் கூடிய அளவில் இருக்க வேண்டும்.

8. ''உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்'', ''உத்தரவுக்காகக் காத்திருக்கிறேன்'' என்ற எதிர்பார்ப்புகளுடன் விண்ணப்பத்தை முடிக்காதே

9. மொத்தத்தில் விண்ணப்பம் நம்பிக்கை அடங்கியதாக அமைய வேண்டும்.



# அற்புதங்கள் செய்யும் கம்ப்யூட்டர்!

**நூ**லகங்கள் என்பவை இப்போது புத்தகங்களும் செய்தித்தாள்களும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இடங்களாகத் திகழ்கின்றன. எதிர்காலத்திலே நூலகங்களில் எல்லாத் தகவல்களும், செய்திகளும் மின்அணுத் தொகுப்புகளாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் என்றும், வீட்டில் இருந்தபடியே கம்ப்யூட்டர் மூலம் இந்தத் தகவல்களை சுலபமாகப் பெற முடியும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

''சி.டி. ரோம் டிஸ்க்'' (C.D. Rom Disc) என்னும் கம்ப்யூட்டர் தட்டுகளில், புத்தகங்களின் செய்திகளையும் படங்களையும் நுணுக்கமாகப் பதிவு செய்யும் தொழில் நுட்பம் எப்போதோ துவங்கி விட்டது. இந்தக் கம்ப்யூட்டர் தட்டுக்களைத் தேவையான இடங்களுக்குத் தபாலில் அனுப்ப முடியும். கம்ப்யூட்டரில் இவற்றைச் செலுத்தி இயக்கினால், கம்ப்யூட்டர் திரையிலே இச்செய்திகளையும், படங்களையும் எளிதாகப் படிக்கலாம்.

அமெரிக்காவின் மிகப்பெரிய நூலகமான நாடாளுமன்ற நூலகம் (லைப்ரரி ஆஃப் காங்கிரஸ்) வாஷிங்டன் நகரில் உள்ளது. கம்ப்யூட்டர் டிஸ்க் புரட்சியில் இந்த நூலகம் இப்போது முன்னணியில் உள்ளது.

''அமெரிக்கன் மெமரி'' (அமெரிக்க நினைவுகள்) என்னும் மின்அணுத் திட்டம் இங்கு துவக்கப்பட்டுள்ளது. அமெரிக்க வரலாறு, சமுதாயம், கலாசாரம், தொடர்பான தகவல்களை 'சி.டி.ரோம்' கம்ப்யூட்டர் தட்டுகளில் பதிவு செய்வதே இப்பணி ஆகும்.

இந்த நூற்றாண்டின் முதல் 20 ஆண்டுகளில் அமெரிக்கா எப்படி விளங்கியது என்பதைச் சித்திரிக்கும் 30,000 புகைப்படங்கள், இங்குக் குடியேறியவர்களின் வாழ்க்கைச் சரிதங்கள், 1820 முதல் 1920-ஆம் ஆண்டு வரையில் கறுப்பர் அமெரிக்கர்களால் எழுதப்பட்ட கையேடுகள், அமெரிக்க அரசு ஏற்படுத்தப்படுவதற்கு முன்பாக நடைபெற்ற அரசியல் சாசன மாநாடு, முதலாவது நாடாளுமன்றக் கூட்டம் ஆகியவை தொடர்பான சாசனங்கள் முதலியவை இந்தக் கம்ப்யூட்டர் தட்டுக்களில் பதிவு செய்யப்படும்.

அங்குல நீளமுள்ள 'சி.டி. ரோம்' கம்ப்யூட்டர் தட்டு ஒவ்வொன்றிலும் 500 மெகாபைட்கள் அளவுக்குத் தகவல்களைப் பதிவு செய்ய முடியும். உதாரணமாக, ஒரு கம்ப்யூட்டர் தட்டில் 5,000 அரசியல் கார்ட்டூன்களைத் தெளிவாகப் பதிவு செய்யலாம். எழுத்துக்களைப் பதிவு செய்வதென்றால் பல கலைக்களஞ்சியங்களையே இதில் அடக்கலாம்.

தற்போது பரவலாக அமலில் உள்ள ''மைக்ரோ பிலிம்'' படச்சுருள் முறையை விட, இந்த சி.டி. ரோம் கம்ப்யூட்டர் தட்டு முறை பல வகைகளில் மேம்பட்டது.

உலகின் பல பகுதிகளிலே வீடியோ யுகம் எப்போதோ ஆரம்பமாகி விட்டது. சிறுவர்களும் வீடியோ விளையாட்டுகளில் தங்களை மறந்து ஈடுபடுகின்றனர். கம்ப்யூட்டர் தட்டு முறையானது இந்த வீடியோ யுகத்துக்கு ஏற்றது. பள்ளிகளில் பாடபோதனைக்கும், இந்த வீடியோ விளையாட்டுக்களுக்கும் இடையில் ஏற்படக்கூடிய இடைவெளியை இந்தக் கம்ப்யூட்டர் தட்டுகள் இட்டு நிரப்ப முடியும்.

# கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி
## நாகர்கோயில்

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுப்பணிகளைச் செயல்படுத்துவதில் கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முன்னணியில் நிற்கிறது. தனது 33-வது ஆண்டு சேவையில் அடி எடுத்து வைத்து வீறு நடைபோடும் ஒளி மயமான இந்த வங்கியின் பணி ஒரு தொடர்கதை.

**1989-90-ஆம் ஆண்டு மாவட்டத்தில்:**

| | | திட்டமிடப்பட்ட கடன் (ரூ.லட்சத்தில்) | வழங்கப்பட்ட கடன் (ரூ.லட்சத்தில்) | பயன் பெற்றவர்கள் |
|---|---|---|---|---|
| பயிர்க்கடன் | ... | 850 | 928 | 29,029 |
| மத்தியகாலக்கடன் | ... | 125 | 135 | 4,093 |
| நகைக்கடன் | ... | 1700 | 2379 | 82,231 |
| வேளாண்மை சாராக்கடன் | ... | 50 | 53 | 60 |

**1990-91-ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட கடன் அளவு:**

| | | ரூ.லட்சம் |
|---|---|---|
| பயிர்க்கடன் | ... | 1045 |
| மத்தியகாலக்கடன் | ... | 135 |
| நகைக்கடன் | ... | 1750 |
| வேளாண்மை சாராக்கடன் | ... | 25 |
| டிப்பாசிட்டுகள் நிலுவை | ... | 1548 |

குறியீடுகள் அனைத்தும் எய்தி, தமிழக அரசின் திட்டங்களைச் செயலாக்கம் காண்பதில் தமிழகத்தில் முதன்மை பெற்று, வரலாறு படைத்து வருகிறது. கடந்த ஆண்டுகளில் தவணை கடந்த கடன் முற்றிலும் வசூலித்து, பாராட்டுப் பெற்ற ஒரே வங்கி!

இதர வங்கிகளைவிட ½ சதவிகிதம் அதிக வட்டி அளிக்கிறோம்!

ஆதரவு தருக!

சிவகிருஷ்ணன், பி.ஏ.,
தனி அலுவலர்




# விவசாயிகள் - கைவினைஞர்கள் நெசவாளர்கள்
# 12 லட்சம் பேர் பலன் பெறும்
# கடன் நிவாரணத் திட்டம்

**வி**வசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்கள் ஆகியோர் 12 இலட்சம் பேர்களுக்குப் பலனளிக்கும் வகையில், கூட்டுறவுக் கடன்களில் இருந்து 10,000 ரூபாய் வரையுள்ள கடன்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு அண்மையில் அறிவித்துள்ளது. இவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்துமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அலுவலர்களுக்கு ஆணையிட்டுள்ளார்கள். அவரது ஆணைப்படி, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், மண்டல கிராமிய வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கி அலுவலர்கள் கொண்ட கூட்டத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

கடன் நிவாரணத்தில் பெரும் பகுதி எத்தனை ஆண்டுகட்கு முன்பு வாங்கியிருந்தாலும், 2.10.1989 அன்று குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் கடன் நிலுவை உள்ளவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும். இதற்கு எவ்விதச் சான்றிதழும் தேவையில்லை. இவற்றை அன்னியில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்பட்ட அனாவாரி சான்றிதழ்களின் அடிப்படையிலும் நிவாரணம் வழங்கப்படும். மாவட்ட ஆட்சியாளர்கள் வறட்சி நிலைமைக்கேற்ப கக்கம் மாவட்டங்களில் அனாவாரி சான்றிதழ்களை அவ்வப்போது அளித்து வந்துள்ளனர். 1.4.86 முதல் 2.10.89 வரை வழங்கப்பட்ட அனாவாரி சான்றிதழ்களின் பட்டியல்களை 10.7.90 தேதிக்குமுன் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்து இப்பட்டியல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வங்கி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் பெறத் தகுதியுள்ள கடனாளிகளைத் தெரிந்தெடுக்கும் பணியை முடிக்க சுமார் 15 நாட்கள் தேவைப்படும். அதாவது 15.7.90-க்குள் இப்பணி முடிவுறும். அடுத்த கட்டமாக வட்டார அளவில் வங்கி அலுவலர்களின் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் கூட்டித் தகுதியுள்ள கடனாளிகளுக்குத் தள்ளுபடி செய்யப்படவேண்டிய தொகை குறித்த நபர் வாரிப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். கடன் நிவாரணத் திட்டத்தை விரைவில் முடிப்பதற்குத் தேவைக்கேற்ப வட்டார அளவில் அடிக்கடி இத்தகைய ஒருங்கிணைப்புக் கூட்டங்களைக் கூட்ட வேண்டுமென அரசு அறிவுரை வழங்கியுள்ளது. இப்பணியை முடிக்க சுமார் ஒரு மாத காலம் தேவைப்படும். கடன் நிவாரண நடவடிக்கைகள் 31.8.1990 தேதிக்கு முன் முடிந்துவிடும்.

விவசாயிகள், நெசவாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் பலன் விரைவில் கிடைக்க வேண்டுமென்பதில் தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்துவதற்காக மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொதுத்துறை கூட்டுறவு வங்கிகளின் ஒரு கூட்டத்தை மதுரையில் 12.7.1990 அன்று கூட்டியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கைகளை அரசுத்துறையும் வங்கியும் மேற்கொள்வதால், கடன் நிவாரணம் பெறுவதற்கு மேற்கண்ட கடனாளிகள் விண்ணப்பம் கொடுக்க வேண்டியதில்லை. இறந்துபோன கடனாளிகளின் வாரிசுதாரர்களும், நொடித்தவர் (Insolvent) என அறிவிக்கப்பட்ட கடனாளிகள் மட்டுமே கடன் வழங்கிய வங்கிகளுக்கு எழுத்து மூலமாக விண்ணப்பங்கள் கொடுக்க வேண்டும்.

2.10.1989 தேதிக்குப் பிறகு செலுத்தப்படவேண்டிய கடன்களுக்கு இந்த நிவாரணத் திட்டம் பொருந்தாது. எனவே இத்தகைய கடன் நிலுவைகளையும் இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் பெறத் தகுதியற்ற கடன் நிலுவைகளையும் உடனே திருப்பிச் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட கடனாளிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Phone:288, 365

# KAVERI LODGE
# &
# HOTEL NARMADHA

## BOARDING & LODGING

KOVALAM ROAD
KANNIYAKUMARI - 629 702.
TAMIL NADU.

## வாடிக்கையாளர் அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்!

# A.D.S. STORES
## NAGERCOIL - 629 001.

பயனடைந்தோர் பகர்வன:

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்:

# ஏழைப்பெண்களின் ஏக்கப்பெருமூச்சை நீக்கும் திட்டம்!



மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

"பேச்சாலும் எழுத்தாலும் நாடக நடிப்பாலும் நாட்டுக்குத் தொண்டு செய்து பகுத்தறிவைப் பரப்புகின்ற வீரத் தமிழ் இளைஞர்"

இது, நமது முதல்வர் கலைஞர் அவர்களுக்கு 1948-ஆம் ஆண்டில் மூதாட்டியார் ஒருவர் சூட்டிய புகழாரம்.

அன்னிபெசன்ட் அம்மையார் போன்ற தோற்றமும், அழுத்தமான குரலும், ஆவேசமான பேச்சும் கொண்டு அடிமைப் பட்டுக் கிடந்த சமுதாயத்தின் எழுச்சிக்காகப்பாடுபட்ட அந்த மூதாட்டியார் வேறு யாருமல்ல; தந்தை பெரியாரின் வழிநின்று பெண் மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட மூவலூர் ஆ. இராமாமிர்தம் அம்மையார் அவர்கள்தான் அந்த மூதாட்டியார்.

பெண்களை வஞ்சித்திடும் நிலைகெட்ட சமுதாய அமைப்பினை நிர்மூலமாக்கிட 'தாசிகள் மோசவலை' என்னும் நூல் இயற்றி, கருத்துப் புரட்சிக்குப் பெரும் வலிமை சேர்த்திட்ட வீராங்கனையான மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மையாரின் நினைவாக, அவர் போற்றிய "வீரத் தமிழ் இளைஞர்" கண்ட சீரிய திட்டம்தான் இலவசத் திருமண நிதியுதவி வழங்கும் திட்டம்.

'ஏழையாகப் பிறந்ததனால் திருமணம் நடக்கவில்லையே' என்று ஏக்கப் பெருமூச்சுவிடும் பெண்களின் வேதனையை நீக்கவந்த திட்டம் இது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்ற பழமொழியை மாற்றி, பெண் கல்விக்கு ஆக்கம் தரும் திட்டம், இது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் 1974-இல் துவக்கிவைக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில், இத்திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு 408 பெண்கள் பயன்பெற்றுள்ளார்கள். இவர்களுக்குத் திருமண நிதி உதவியாக ரூ. 22.40 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.



அரசு நலத்திட்டத்தால் மணம் கண்ட சோலையம்மாள் தன் தாயாருடன்

இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற பெண்களைச் சந்தித்துப் பேசிய போது இத்திட்டத்தின் அருமையை உணர்ந்திட முடிந்தது. 'திருமணம் என்பது எட்டாத கனி' என்று எண்ணியிருந்த பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் மகத்தான திட்டம் இது என்பதை அனுபவபூர்வமாக அறிந்திட முடிந்தது.

இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற முள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த லலிதா என்ற பெண்ணைப் பார்த்து இத்திட்டம் குறித்துக் கேட்டபோது "இப்படி ஒரு திட்டம் வராவிட்டால் என்னைப்போன்ற பெண்களுக்குத் திருமணம் நடந்திருக்குமா என்பது சந்தேகம்தான்" என்று எடுத்தஎடுப்பிலேயே அந்தச் சகோதரி தெரிவித்தார்.

தனது கருத்தை நிலைநிறுத்த தனது வாழ்க்கைச் சித்திரத்தை அவர் வார்த்தைகளால் தீட்டிக் காட்டினார்.

"சிறுவயதிலேயே நான் தாயை இழந்தேன். தந்தை மறுமணம் செய்து கொண்டதால் சொந்த வீட்டில் இருக்கமுடியாமல் சின்ன வயதிலேயே எனது அத்தை வீட்டில் அடைக்கலம் புகுந்தேன். தன்னையே காப்பாற்றிக் கொள்ள வசதியற்ற அத்தை கஷ்டப்பட்டு என்னை வளர்த்தார். எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்க வைத்தார். 27 வயதாகியும்

எனக்குத் திருமணம் செய்துவைக்க முடியவில்லையே என்ற வருத்தம், அத்தைக்கு- ஆனால் அவர் பணத்திற்கு எங்கே போவார்? என்று தனது நிலையை விளக்கிய அந்தச் சகோதரி ''இந்த நிலையில் இத்திட்டம் குறித்து அடுத்த வீட்டிலிருந்த ஆசிரியை ஒருவர் தெரிவித்தார்.- விண்ணப்பித்தேன்; ரூ. 5,000 கிடைத்தது- திருமணம் செய்து கொண்டேன்'' என்று சொல்லி முடித்தார்.

''இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது யார் என்று தெரியுமா?'' என்று கேட்டபோது ''இது கூடத் தெரியாதா- தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தான்'' என்று குறிப்பிட்ட அந்தச் சகோதரி, ''நாட்டு மக்களின் நாடித் துடிப்பபை உணர்ந்த அந்தத் தலைவர் மிகப்பெரிய சமுதாய விஞ்ஞானி என்பதை இத்திட்டம் பறை சாற்றுகிறது''. என்று நன்றிப் பெருக்கோடு குறிப்பிட்டார்.

அதன்பின், இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற வாகவாசல் கிராமத்தைச் சேர்ந்த கஸ்தூரி என்ற பெண்ணைச் சந்தித்தோம், பிளஸ்டு வரை படித்த இந்த 23 வயதுப் பெண்ணுக்கு அப்பா இல்லை; அம்மா மட்டும் உண்டு. சமூகநலத் துறையின் மூலம் இலவசமாகத் தையல் இயந்திரம் ஒன்றைப்பெற்று, துணிகள் தைத்து சொற்ப வருவாயைக் கொண்டு குடும்பம் நடத்தி வந்தார்கள்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்றுப் பயன்பெற்ற இச்சகோதரி...

''வறுமையில் வாடும் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக வாய்த்த திட்டம் இது'' என்று குறிப்பிட்டார். ''எங்கள் ஊரில் இந்தத் திட்டத்தின் கீழ், பயன்பெற்ற முதல் பெண் நான்தான் என்ற வகையில் பெருமை அடைகிறேன்'' என்று அந்தச் சகோதரி, ''இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத்தமிழ் சமுதாயம் என்றும் நெஞ்சில் நிறுத்திப் போற்றும்'' என்று தெரிவித்தார்.

அடுத்து, திருவரங்குளம் ஒன்றியம் பூவரசகுடி கிராமத்தில் இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற சோலையம்மாள் என்ற பெண்ணைச்சந்தித்து, இத்திட்டம் குறித்துக் கேட்டோம்.

''நான் 8 மாதக்குழந்தையாக இருக்கும்போதே எனது தந்தை இறந்துவிட்டார். தமிழக முதல்வர் தந்தையின் நிலையிலிருந்து எனது திருமணத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளதாகக் கருதுகிறேன்'' என்று மனநெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

சோலையம்மாளின் தாயார் திருமதி மீனாம்பாள் இத்திட்டம் குறித்துச் கூறியதாவது:

''என் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைப்பதற்குப் பல ஆண்டுகளாக முயற்சி செய்து வந்தேன். கையில் காசு இல்லாததால் இந்த ஆண்டு- அடுத்த ஆண்டு என்று திருமணம் தள்ளிப் போய்க்கொண்டே வந்தது. மகராசன் கொண்டுவந்த இந்தத் திட்டத்தால் ரூ.5,000 கிடைத்தது. கடந்த ஆனி மாதம் 25-ஆம் தேதி என் மகளுக்குத் திருமணம் செய்து வைத்தேன். ஏழை வீட்டில் விளக்கேற்றி வைத்த மகராசன், என்றும் வாழவேண்டும்''.

நன்றிப்பெருக்கோடு அந்தத்தாய் குறிப்பிட்டார்.

வன்னியன் விடுதியைச் சேர்ந்த இந்திராணி, பூமதி ஆகிய பெண்கள் அரசின் இந்த அரிய திட்டத்தால் அடைந்த பயனை நம்மிடம் விவரித்தார்கள். ஆலங்குடி கலிபுல்லாநகர் 3-ம் தெருவைச் சேர்ந்த முத்துலிங்கம் மகள் விஜயலெட்சுமி என்பவர் இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற பாங்கினை எடுத்துக் கூறிவிட்டு- ''இதுபோன்ற திட்டம் இதுவரை எந்த ஒரு அரசும் செயல்படுத்தியது இல்லை'' என்று குறிப்பிட்டார்.

இத்திட்டச் செயலாக்கம் குறித்துத் திருவரங்குளம் ஒன்றியத்தின் சமூக நல விரிவாக்க அலுவலர் திருமதி புஷ்பம் அவர்களிடம் கேட்டபோது, திருவரங்குளம் ஒன்றியத்தில் 57 பெண்களுக்குத் தலா ரூ.5,000 வீதம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

கலிபுல்லாநகரில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த சிவமலர் என்ற பெண்ணுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்ட விவரத்தையும், பணம் இல்லாததால் திருமணம் தடைபட்டும் போன செய்தியையும் இத்திட்டத்தின் கீழ், நிதி உதவி பெற்று அவர் திருமணம் செய்துகொண்ட விவரத்தையும் சமூக நல விரிவாக்க அலுவலர் விவரித்தார்.

ஜாதி பேதமின்றி அனைவருக்கும் உதவக்கூடிய சீரிய திட்டம் இது என்பதற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுகளைக் கூறமுடியும்.

வடகாடு கூட்டான்புஞ்சைப் பகுதியைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் இத்திட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், ''மன்னர்கள் ஆட்சியில் கிடைக்காத நன்மைகள்கூட கலைஞர் அவர்களின் ஆட்சியில் கிடைக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

தனது பகுதியைச் சேர்ந்த தனலட்சுமி என்ற பிராமண வகுப்பைச் சேர்ந்த 32 வயதுப் பெண்ணுக்குப் பொருளாதார நெருக்கடி காரணமாகத் திருமணம் நடக்காத சூழ்நிலையினையும், இத்திட்டத்தின் கீழ் ரூ.5,000 பெற்று அவர் மணம் முடித்துக்கொண்ட நிலையினையும் அந்தப் பெரியவர் விவரித்துக் கூறினார்.

புதுக்கோட்டை சமூகநல அலுவலர் திருமதி ராதா ஸ்ரீனிவாசன் அவர்களைச் சந்தித்து இத்திட்டம் குறித்துக் கேட்டபோது, ''அரசின் விருப்பம் உணர்ந்து, திட்டத்தின் பயன், சிந்தாமல் சிதறாமல் முழுமையாகப் பயனாளிகளைச் சென்றடைய வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து காரியமாற்றி வருகிறோம்'- இத்திட்டம் பெண் கல்விக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது'' எனக் குறிப்பிட்டார்.

தமிழக அரசு அறிமுகப்படுத்திய இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற பெண்களும், அவர்களின் பெற்றோர்களும், மனம் திறந்து நன்றிப்பெருக்கோடு தெரிவித்த கருத்துக்களைக் கேட்டிடும் போது- ''பெண்ணாகப் பிறந்துவிட்டால் பெற்றோருக்குச் சுமைதான் என்ற நிலையை மாற்றிட வந்த திட்டம் இது'' என்ற எண்ணம் தான் நமது இதயத்தில் தோன்றுகிறது.

இ.ரெ. மகாலிங்கம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை.



மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதிஉதவித் திட்டத்தால் பலன் பெற்ற இந்திராணி- பூமதி தம்பதியர்.



## பாவேந்தர் நூற்றாண்டு:

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை;
தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு
தமிழ மக்கள்
தமிழ்என்னும் பேருணர்ச்சி
இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும்
இருந்த தில்லை!
தமிழர்க்குத் தொண்டுசெய்யும்
தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும்
தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டுசெய்வோன்
சாவ தில்லை!

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ தருமபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டிணம் அருகில் நடப்பாண்டில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் பழம் பதனிடும் தொழிற்சாலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

★ நலிந்த குடும்பங்களுக்கு உதவும் வகையில் ''நலிந்தோர் குடும்பநல உதவித் திட்டம்'' மற்றும் ''விபத்து நிவாரணத் திட்டம்'' ஆகிய இரு திட்டங்களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இவற்றின் மூலம் ஒரு குடும்பத்தில் பொருளீட்டும் குடும்பத் தலைவர் இறந்துவிட்டால், அக்குடும்பத்தினருக்கு ரூ.3000/- தமிழக அரசு மூலம் உதவியாய் கிடைக்கும். இதுபோன்று ஏழைக் குடும்பத்தினர் கை-கால்-கண் இழந்தால், ரூ.10,000 உதவித் தொகையாகத் தமிழக அரசு வழங்கும்.

★ பன்னிரண்டு இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.500 கோடி அளவிற்குக் கடன் நிவாரணம் அளிக்கப்படுகிறது என்றும் இந்தக் கடன் நிவாரணச் சட்டம் 24.6.90 முதல் அமலுக்கு வருகிறது என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

With
Best
Compliments
From

# RAJA STUDIO

Air Conditioned
College Road,
Nagercoil.

Phone: 5132

Pin: 629 001.

GRAM: MANICKAM PHONE:387

## MANICKAM TOURIST HOME
**NORTH CAR STREET, (NEAR SEA SHORE)**
**KANNIYAKUMARI-629 702.**

**A/C & NON A/C ROOMS & RESTAURANT ATTACHED**
**CHECKOUT TIME 24 HOURS**

★ HOME AWAY FROM HOME
★ HOMELY 24 HOURS SERVICE
★ CHINESE & CONTINENTAL DISHES
★ ALL ATTACHED BATH ROOMS
★ HOT AND COLD WATER
★ COMMON T.V. & VIDEO
★ MUSIC CHANNEL
★ VERY GOOD VIEW FOR SUN RISE & MOON RISE



தமிழகத்திற்குத் தடையின்றி

# மத்திய திட்ட உதவி தேவை!

— முதல்வர் கலைஞர்

**மா**ண்புமிகு மத்திய திட்டக் கமிஷன் துணைத் தலைவர் ராமகிருஷ்ண ஹெக்டே தமிழக அரசுடனும், மாநில திட்டக் கமிஷ்னுடனும் 22.6.90 அன்று சென்னையில் விவாதம் நடத்தினார். பல்வேறு திட்டப்பணிகளும் பற்றி விவாதிக்கப்பட்ட இந்தக் கூட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

"மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு ஹெக்டே அவர்களையும் மற்றும் நண்பர்களையும் உளப்பூர்வமாக வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் வழிகாட்டுதலுடன் திட்டக் கமிஷன் தயாரித்த அருமையான செயல்திட்ட அறிக்கை குறித்தும், தேசிய வளர்ச்சிக் குழுவின் 41-வது கூட்டம் நடத்தப்பட்ட விதத்தையும் பாராட்ட விரும்புகிறேன்.

தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்திற்குப் பிறகு, எங்கள் மாநில திட்டக் குழுவைக் கலந்தாலோசிப்பதற்காக நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள முதலாவது மாநிலம் தமிழகம் என்பதில் பெருமகிழ்ச்சியடைந்து உங்களை நாங்கள் வரவேற்கிறோம்.

மாநிலங்கள் தங்களுக்கெனத் திட்டக்குழுவை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்த யோசனைக்கு முதன்முதலாகச் செவி சாய்த்தது தமிழகம்தான். 1971-ல் தி.மு.கழக அரசு, மற்ற எல்லா மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக அமையும் வகையில் மாநிலத் திட்டக் குழுவை அமைத்தது. அப்போது எல்லோருமே அதனை ஒருமுகமாகப் பாராட்டினார்கள்.

ஆனால் துரதிஷ்டவசமாக, கடந்த சில ஆண்டுகளில் மாநில திட்டக் குழுவில் வல்லுநர்களின் பங்கு பெரிதும் குறைக்கப்பட்டு, திட்டக் குழுவும் செயலற்றதாகிவிட்டது.

1989-ல் நாங்கள் இந்த மாநிலத் திட்டக்குழுவை "சிந்தனைக் கருவூலமாக" (THINK TANK) இயங்கும் வகையில் பல்வேறு துறைகளில் புகழ் பெற்ற வுல்லுநர்களைக் கொண்டு புதுப்பித்திருக்கிறோம்.

இந்த மாநிலத் திட்டக் குழு, 1989 மே மாதத்திலிருந்து இதுவரை நான்கு தடவை கூடியிருக்கிறது. திட்டக் குழுக் கூட்டங்களில் குறிப்பிட்ட சில விஷயங்களை விரிவான விவாதத்திற்காக எடுத்துக் கொண்டு ஆலோசனை நடத்தியிருக்கிறோம்.

வல்லுநர்கள் தெரிவிக்கும் புதிய கருத்துகளுக்கும், புதிய முயற்சிகளுக்கும், திட்டங்களை நிர்வகிப்பவர்கள் அமல் நடத்தும் திட்டங்கள் மற்றும் பணிகளுக்கிடையில் நல்லதொரு தொடர்பு இருக்குமாறு மாநில அரசு பார்த்துக் கொள்ளுவதை இந்தக் கூட்டங்கள் சாத்தியமாக்கியுள்ளன.

1990 பிப்ரவரி மாதத்தில் ஆண்டுத்திட்டம் பற்றி விவாதம் நடைபெற்றபோது, நான் தங்களிடம் கொடுத்த முறையீட்டில் இந்த மாநிலத்தை எதிர் நோக்கியுள்ள பல்வேறு அவசரப் பிரச்சினைகள் குறித்து விரிவாக விளக்கியிருக்கிறேன். இந்தப் பிரச்சினைகளில் சிலவற்றைப் பற்றி தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் நான் வலியுறுத்தியிருக்கிறேன்.

குறிப்பாகச் சில திட்டங்கள் குறித்து மீண்டும் உங்கள் ஆதரவைக் கோர விரும்புகிறேன். முதற்கண் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி வலியுறுத்த விரும்புகிறேன்.

செயல்திட்ட அறிக்கையிலே கூட இதுபற்றி ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தின் பாசன வசதிகளை நாங்கள் முழு அளவில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். வேளாண்மைத் துறையில் வருங்கால வளர்ச்சிக்கு மிகக் குறைவான வாய்ப்புக்களே உள்ளன. கிராமப்புறத் தொழிலாளர்களைத் தொழில்களில் ஈடுபடுத்துவது ஒன்றுதான் இதற்கு ஒரே வழி என்று தோன்றுகிறது. தொழில்கள் வளர்ச்சிக்கு மின் உற்பத்தி இன்றியமையாததாகும்.

இந்த மாநிலத்தில் மின்சார உற்பத்திக்கு மிக அதிகமாகச் செலவாகிறது. சிங்கரேணியிலிருந்து நிலக்கரி அனுப்புவதற்குப் பதிலாக, வடமாநிலங்களிலிருந்து நிலக்கரியை ரயில், கப்பல் மூலமாக இங்கு கொண்டுவர வேண்டியிருப்பதுதான் இந்த அதிகச் செலவுக்குக் காரணம்.

நில மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் வெகு தூரத்திலிருந்து நிலக்கரியைக் கொண்டு வருவதால் 1989-90-ஆம் ஆண்டில் எங்களுக்கு ரூ.107 கோடி கூடுதலாகச் செலவாகியுள்ளது. ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு - நிலக்கரிக்காக ஆகும் செலவு சுமார் எழுபத்தைந்து பைசாவாகும். இதற்காக எங்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்கச் செய்வது அவசர அவசியமான ஒன்றாகும். அதுவரை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டுக்கு ஒதுக்குவது பற்றி மத்திய அரசு பரிசீலித்தாக வேண்டும்.

பம்பாய் ஆழ்கடல் எரிவாயுவைத் தென் மாநிலங்களுக்கு விநியோகிப்

### இன்பம்!

நாமெல்லாம் ஒருகுடும்பம்!
ஆகா, அந்த
நயம்மிகுந்த வார்த்தையில்தான்
என்ன இன்பம்!
—கவிஞர் கண்ணதாசன்

பதற்காகப் பொது விநியோக அமைப்பு (GRID) ஒன்றை ஏற்படுத்த விரைவில் அனுமதி கிடைக்கச் செய்ய உங்கள் உதவியை, கர்நாடக மாநிலத்துடன் இணைந்து நானும் கோருகிறேன்.

மின்உற்பத்தித் துறையும், பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில் துறையும் தென்னகத்தில் வளர்ச்சியடைய இது பெரிதும் துணைபுரியும்.

உற்பத்தி முனையிலும், நுகர்வோர் முனையிலும் மூலப் பொருட்களுக்கு விலைகளை நிர்ணயிக்கும் விஷயத்தில் நமது நாட்டில் கணிசமான நிர்ப்பந்தங்கள் காணப்படுகின்றன. விலைச் சமநீட்டு முறைக்கு (Price Equalisation) எல்லா இடங்களிலும் எதிர்ப்புக் காணப்படுகிறது. வரப்போகும் ஆண்டுகளில் மார்க்கெட் பொருளாதாரத்தை - குறிப்பாகத் தொழில்துறையில் - பேணி வர வேண்டுமெனில் எல்லா மாநிலங்களிலும் குறிப்பாகத் தென் மாநிலங்களில், அரிதான மூலப் பொருட்களும், விசை ஆதாரங்களும் கிடைக்கச் செய்ய விரைவில் நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டியது இன்றியமையாததாகும். தென் மாநிலப் பொருளாதாரம் போட்டியிடக் கூடிய திறன் உள்ளதாக விளங்கச் செய்வதற்காகத் தென்னக எரிவாயு பொது விநியோக அமைப்பிற்கு (Southern Gas Grid) தலையாய முன்னுரிமை வழங்க வேண்டுமெனத் தீவிரமாக வலியுறுத்துகிறோம்.

மாநிலத்தில் மத்திய அரசு முதலீடு செய்வது சம்பந்தப்பட்ட பிரச்சினையை இந்த மாநிலம் எழுப்ப விரும்புகிறது. ஆரம்பத்தில் பாரத் கனரக மின் நிறுவனம், இணைப்பு ரெயில் பெட்டித் தொழிற்சாலை, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் போன்ற சில பெரிய தொழில் நிறுவனங்களால் சிறு தொழில்கள் வளர்ச்சியடைவது சாத்தியமாயிற்று. ஆனால், அண்மை ஆண்டுகளில் பொதுத் துறையில் பெரிய முதலீடுகள் எதுவும் இல்லாமல் போய்விட்டதால், தொழில் வளர்ச்சி சுணக்கமடைந்துள்ளது. இந்த விஷயத்தில் மத்திய அரசு தலையிட்டு இந்த மாநிலத்தில் மத்திய அரசின் முதலீட்டைப் பெருக்கியாக வேண்டியது அவசியமாகும். அண்மை ஆண்டுகளில் இந்த மாநிலத்தில் மத்திய அரசின் முதலீடு மிகக் கடுமையாகக் குறைந்து விட்டிருக்கிறது. மத்திய அரசு இவ்வாறு முதலீடு செய்யுமானால் மாநில அரசு மகிழ்ச்சியுடன் அதற்கான அனைத்து உதவிகளையும் புரியும்.

இது தொடர்பாக ஒரு விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். சென்னை சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்தின் அரொமெட்டி தொழிற்சாலைத் திட்டத்திற்கு விரைவில் அனுமதி வழங்க வேண்டும். இது இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிக மிக முக்கியமானதாகும். இந்தத் திட்டத்திற்கான ஆயத்த நடிவடிக்கைகள் பலவற்றை மாநில அரசு ஏற்கனவே எடுத்திருக்கிறது.

ஒன்பதாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளினால் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள் பற்றித் தமிழ்நாடும், மற்ற மாநிலங்களும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் எழுப்பியுள்ளன. அரசியல் சட்ட ரீதியான ஒரு அமைப்பின் பரிந்துரைகளை ஏற்றாக வேண்டியதுதான் என்று நிதியமைச்சர் அந்தக் கூட்டத்தில் பொதுப்படையாகக் கூறியதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். என்றபோதிலும், இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வைக் காண்பதற்காக மாற்று வழிமுறைகளைக் கண்டாக வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்.

மனிதவள மேம்பாட்டுக்காக இது வரை செய்யப்பட்டுள்ள முதலீடுகளை மதிப்பிட்டு, அதனடிப்படையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஒன்பதாவது நிதிக்குழு முயன்றிருக்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து வல்லுநர் குழுக்கள் நடத்தியிருக்கும் ஆய்விலிருந்து, மனிதவள மேம்பாட்டிற்காக இந்த மாநிலம் அதிகமாகவே முதலீடு செய்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

மத்திய அரசு மானியங்களில் இந்த மாநிலத்துக்கு உரிய பங்கு கிடைப்பதற்கு இந்த முன்னோடி நடவடிக்கைகள் ஒரு இடையூறாக இருந்து விடக்கூடாது.

ஒன்பதாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் விளைவாக ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளைக் களைந்து மத்திய திட்ட உதவிகளும் மற்றும் பிற வகையான உதவிகளும் தமிழகத்திற்குத் தங்குதடையின்றிக் கிடைக்க மத்திய திட்டக் குழுவும், அதன் துணைத் தலைவரான தாங்களும் தலையிட்டு ஆவன செய்வீர்கள் என நம்புகிறோம்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் உரையாற்றினார்.


நல் வாழ்த்துக்கள்

# ஹோட்டல் பிரபு

(அசைவம்)

121 மதுரை ரோடு
திருநெல்வேலி ஜங்சன்
பின்: 627 001.
போன்: 24094
தந்தி: PROTTA

245 காலேஜ் ரோடு,
நாகர்கோவில்
பின்: 629 001.
போன்:5015
தந்தி: BIRIYANI


# நகர்ப்புற ஏழைகளுக்கு வீட்டு வசதி



தேசிய வீட்டுவசதிக் கொள்கை பற்றிய நகல் மீதான, தென் பிராந்திய வல்லுநர்கள் மற்றும் அதிகாரிகள் மாநாடு சென்னையில் (22.6.90) நடைபெற்றது.

மாண்புமிகு மத்திய திட்டக்குழுத் துணைத்தலைவர் திரு இராமகிருஷ்ண ஹெக்டே, மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்த இந்த மாநாட்டில், தேசிய வீட்டுவசதிக் கொள்கைக் கருத்தரங்கினை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசினார்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

வீட்டுமனைகள், புதிய வீடு கட்டுதல், வீடுகளை அபிவிருத்தி செய்தல், பழைய வீடுகளைப் பழுது பார்த்தல், பழைய வீடுகளைப் புதுப்பித்தல் ஆகிய விஷயங்களில் கிராமப்புறங்களிலும், நகரங்களிலுமுள்ள ஏழை மக்களின் தேவைகளைக் குறைந்த அளவுக்கே பூர்த்தி செய்ய முடிந்திருக்கிறது என்பதை நாங்கள் உணராமல் இல்லை.

வீட்டு வசதி செய்து தருவதற்காக மட்டுமின்றி, அத்தகைய வீட்டு வசதிகளைச் செய்து தரும்போது கூடவே செய்தாக வேண்டிய குடிநீர் விநியோகம், வடிகால் வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்காகவும்கூட, போதிய நிதி வசதி இல்லாததுதான் தமிழ்நாட்டின் முன்பும், மற்ற மாநிலங்களின் முன்பும் உள்ள மிக முக்கியமான இடர்ப்பாடாகும். நிதி வசதிகளை எழுப்பும் விஷயத்தில் நூதனமான வழிமுறைகளைக் கண்டுபிடித்துக் கையாண்டால்தான், இந்தப் பிரச்சினையை நாம் சமாளிக்க முடியும். இது தொடர்பாக, கணக்கில் காட்டாமல் மறைத்து வைக்கப்படும் வருமானங்களையும், கறுப்புப் பணத்தையும் குடிசை மாற்றுத் திட்டம், ஏழை-எளிய மக்களுக்கான வீட்டுவசதித் திட்டம் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற யோசனை இந்த நகல் கொள்கை அறிக்கையில் இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

நகர்ப்புற மனைகள், வீடுகள் விற்பனையில் ஹேஷ்ய பேரங்கள் மூலம் ஏராளமான கறுப்புப் பணம் உருவாகியிருப்பதால், இவ்வாறு சேர்ந்துள்ள பணத்தைப் பயன்படுத்துவதில் வீட்டு வசதித் திட்டங்களுக்கே தலையாய உரிமை அளிக்க வேண்டுமென்பதுதான் பொருத்தமாகும். இது சம்பந்தமாகத் திட்டவட்டமான திட்டமொன்றை மத்திய அரசு விரைவில் அறிவிக்குமென்று நம்புகிறேன்.

நகர்ப்புற நிலங்களையும், வீடுகளையும் விற்பதன்மூலம் கிடைக்கும் மூலதன லாபம், குடிசைப் பகுதி அபிவிருத்தி, வீட்டு வசதி ஆகியவற்றுக்காகப் பயன்படக் கூடிய மற்றொரு நிதி ஆதாரமாகும். தற்போது இத்தகைய மூலதன லாபங்களை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட செக்யூரிடிகளில் (அரசு கடன் பத்திரங்கள் போன்றவற்றில்) முதலீடு செய்தால், அவற்றுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. இவ்வாறு முதலீடு செய்யப்படும் நிதிகளை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

அப்படிச் செய்தால், மாநிலங்கள் சுழற்சி முறை அடிப்படையில் இந்த நிதி வசதியை நகர்ப்புற எழை மக்கள் வீட்டு வசதிக்காகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். சேரிப் பகுதிகளை மனிதர்கள் வசிப்பதற்கும் ஏற்ற குடியிருப்புகளாக அபிவிருத்தி செய்வதற்காக நகர்ப்புறப் பணக்காரர்களுக்குப் புதிய வரி ஒன்றை விதிக்கும் சாத்தியக்கூறு பற்றியும் தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நகர்ப்புற நிலங்கள் மற்றும் வீடுகளை விற்பதன் மூலம் கிடைக்கும் மூலதன லாபத்தில் குறைந்த பட்சம் ஒரு பகுதியையாவது வளைத்துப் போடக் கூடிய நடவடிக்கைகளுடன் இந்த வரியை இணைக்கலாம். பணக்காரர்கள் வைத்துக்கொள்ளக் கூடிய

நிலங்கள், வீடுகள் ஆகியவற்றுக்கு நியாயமான ஒரு உச்சவரம்பை விதித்து, அந்த வரம்புக்கு மேல் அவர்களிடமுள்ள நிலம் மற்றும் வீடுகளுக்கு வரி விதிப்பதுடனும் இதை இணைக்கலாம்.

இது சம்பந்தமாக இந்த நகல் கொள்கை அறிக்கையில், மனைகளுக்கும், குடியிருப்புகளுக்கும் குறைந்தபட்ச வரம்பு மட்டுமின்றி, உயர்ந்தபட்ச வரம்பும் நிர்ணயிக்கும் உத்தேசம் இருப்பதாகக் குறிப்பிட்டிருப்பது சரியான திசையில் அடியெடுத்து வைப்பதாகும். மிக ஏழ்மை நிலையிலுள்ள மக்களை வறுமைக் கோட்டுக்கு மேல் உயர்த்தும் முயற்சியில் வெற்றி காணவேண்டுமெனில், பிரதமர் அண்மையில் கட்டிக்காட்டியிருப்பதுபோல, வளமைக்கோடு நிர்ணயிப்பது பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

குறிப்பாக, வீட்டு வசதி விஷயத்தில் இது மிகப் பொருத்தமானதாகும்.

கிடைப்பதற்கு அரிதாக உள்ள நிலத்தையும் நிதி வசதியையும், கட்டிடப் பொருட்களையும் பணக்காரப் பிரிவினர் தங்கள் ஏகபோகமாக்கிக் கொள்வதை நாம் அனுமதிக்க முடியாது.

மிக முக்கியமான இந்தப் பிரச்சினை குறித்த தேசிய விவாதத்தை மத்திய திட்டக் கமிஷனின் துணைத் தலைவரும், எனது மதிப்புக்குரிய நண்பருமான திரு ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் துவக்கி வைப்பது சாலப் பொருத்தமாகும்.

முதலமைச்சராக இருந்தபோதும், தற்போது திட்டக் கமிஷனிலும் அவருக்குக் கிடைத்துள்ள அரிய அனுபவம், பிரத்தியட்ச ரீதியில் அனுபவசாத்தியமான வீட்டு வசதிக் கொள்கையை வகுக்கவும், இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு நீடித்த பரிகாரம் ஒன்றைக் காணவும் வழிகாட்டி உதவும் என்பது திண்ணம்.

என் உரையை நிறைவு செய்யும் இந்த நேரத்தில், மிகவும் முற்போக்கான கொள்கை ஒன்றைத் தயாரித்து, வீட்டு வசதிக் கொள்கை பற்றிய அனைத்து அம்சங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட அனைவருடனும் நாடு தழுவிய அளவில் விவாதம் நடத்த ஏற்பாடு செய்தமைக்காக மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன். உங்கள் முயற்சிகளுக்கு வெற்றி கிடைத்திட வாழ்த்துகிறேன்.

—இவ்வாறு முதல்வர் கலைஞர் உரையாற்றினார்.

# பார்த்தோம் படித்தோம்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் வண்ண முகப்பு (1.6.90) அருமை. கலைஞரின் பிறந்த மண் பெருமையை இதைவிட வேறு எவரால் எண்ணி எழுதி சிந்திக்க முடியும்?

—ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி
(கோயம்புத்தூர் மாவட்டம்)

கவியரசு வைரமுத்துவின் கவிதை தித்திக்கும் இன்பத் தேன் துளிகள்!

—க. குமரேசன்
திருவாரூர்
(தஞ்சை மாவட்டம்)

மாண்புமிகு கலைஞர் அவர்களின் வண்ண முகப்பு அருமையாக இருந்தது.

—எம்.எஸ். வேலுமணி
கே. மேட்டுப்பாளையம்
(பெரியார் மாவட்டம்)

தமிழகத்தில் புதிய ஆளுநராகப் பதவி யேற்ற மேதகு பர்னாலா அவர்களின் வாழ்க்கைக் குறிப்பையும், படத்தையும் வெளியிட்டமைக்கு நன்றி.

—எம். சேகர்,
தோட்ட நாவல்
(செங்கை-அண்ணா மாவட்டம்)

'மாணவர் பக்கம்' பாதுகாக்கப்பட வேண்டிய பகுதி.

—கொ.மு. மோகன்
வை. தொட்டியபட்டி,
(சேலம் மாவட்டம்)

தமிழக அரசின் திட்டங்களை மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. 'தமிழரசு', படித்துப் பாதுகாக்கப்பட வேண்டிய இதழ்.

—ஆர். சுப்பாராஜூ
குருவிகுளம்
(திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்)

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைப் பற்றி பல்வேறு தலைவர்களின் கருத்தோவியங்கள் சிறப்பிதழுக்குப் பெருமை சேர்த்தது.

—பி. கோவிந்தசாமி
ஊத்தங்கரை
(தருமபுரி மாவட்டம்)

## ஊக்குவிக்கும் ஒரு பணி

சென்னை-இராயப்பேட்டையில் உள்ள அரசுப் பொது மருத்துவமனையில் இருக்கும்- எங்களது இதயநோய் சிகிச்சைப் பிரிவுத் துறையின் மருத்துவப் பணிகள் பற்றி 'தமிழரசு' 16.5.90 இதழில் மிக அருமையாக வெளியிடப்பட்டிருந்தது. அதற்காக மருத்துவமனை சார்பிலும், அத்துறையின் தலைமை மருத்துவர் என்ற முறையிலும் 'தமிழரசு' ஆசிரியர் குழுவினருக்கு எங்கள் பாராட்டுதலையும், இதயபூர்வமான நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மருத்துவமனையில் உள்ள இதய நோய் சிகிச்சைப் பிரிவு பற்றி உள்ளது உள்ளபடி நல்லவிதமாக எழுதியிருப்பதானது - மற்ற அரசுத் துறைகளில் இருப்பவர்களது தூய பணியை இன்னும் ஊக்குவிப்பதாக உள்ளது. மருத்துவமனைகளில் இருக்கும் மற்ற மற்ற சிகிச்சைப் பிரிவுகள் குறித்தும் இதுபோன்ற கட்டுரைகள் தொடர்ந்து ஒவ்வொரு 'தமிழரசு' இதழிலும் இடம்பெறச் செய்யலாம். நன்றி.

—டாக்டர் சி.வி. பிரம்மானந்தம்
தலைமை மருத்துவர்
இருதய நோய் சிகிச்சைப் பிரிவு,
இராயப்பேட்டை மருத்துவமனை,
சென்னை-600 014.



''மக்களுக்கு- குறிப்பாக விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய வகையில் புதுமையைக் கண்டுபிடிக்கிற வித்தகர்களுக்கு ஆண்டுதோறும் அரசின் சார்பில் விருது வழங்கப்படும்... இனி, இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் 'ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்' என்று அறிவிக்கப்படும்''- என, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 24.6.90 அன்று கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேருரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

## வேளாண்மை உற்பத்தி பெருகிட

# மேலான தொழில்நுட்பம் காண்போம்

4-வது அட்டை சொல்லும் செய்தி:

1969-ல் பஞ்சாப் மாநில முதல்வர் திரு குர்னாம்சிங் அவர்களால் அழைக்கப்பெற்று, அந்த மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். மாலை நேரத்தில் சாலைகளில் டிராக்டர்களில் விவசாயிகள் தங்கள் குடும்பத்தினருடன் அழகிய உடைகள் அணிந்து திரைப்படக் காட்சிகளுக்குச் செல்லும் குதூகல வாழ்வைக் கண்டு பூரிப்பு கொண்டேன். அந்த மண்ணின் மைந்தர்களுக்கு ஆக்கப்பூர்வமான விவசாய வளர்ச்சிக்கு வழி வகுத்திடும் விபரம் அறிந்தேன். அங்கிருந்து திரும்பியவுடன் தமிழகத்திலும் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உருவாகும் என அறிவித்தேன். அந்தப் பல்கலைக் கழகம்தான் இது!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1971-ல் பல்கலைக் கழகமாக மலர்ந்ததும், கடந்த 19 ஆண்டுகளாக, வேளாண்மை வளர்ச்சியின் முக்கிய அங்கமாக, அரணாக இருந்து, ''உழுவோம், உழைப்போம்! உயர்வோம்!'' என்னும் உயரிய குறிக்கோளுடன் பணியாற்றி வருவதும், வரலாறு பெருமையோடு குறித்துக்கொள்ள வேண்டிய செய்திகளாகும்.

உலகப்பொதுமறை, 10 குறட்பாக்களில் பாங்காக விளக்கிய வேளாண்மையை- உழவுத் தொழிலை- இன்று அறிவியல் வாயிலாக, ஆராய்ச்சிகளின் பரிமாணங்களை வரையறுத்து, தொழில் நுட்ப உத்திகளைப் பெருக்கி, உழவுத்தொழிலை உன்னதமாகச் செய்து வருகின்ற உழவர் பெருமக்களுக்கு வழங்கிடும் புனிதமான பணியில் ஈடுபட்டிருக்கின்ற வேளாண்மைக் குடும்பத்தைச் சார்ந்த விஞ்ஞானிகள், விரிவாக்கப் பணியாளர்கள், உழவர்கள் அனைவரும் பெருமையோடு போற்றத்தக்கவர்கள்.

''நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்'' என்னும் பாவேந்தர் நல்மொழிக்கிணங்க, இந்தப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், வனவியல், மனையியல் ஆகிய பல்வேறு பிரிவுகளும் ஒரு நல்ல குடும்பமாக இணைந்திருப்பது கண்டு பெருமையடைகின்றேன்.

வேளாண்மை வளர்ச்சியில், நாம் ஒரு திருப்பு முனையை ஆர்வமாக எதிர்நோக்கியுள்ளோம். 21-ம் நூற்றாண்டில் நம் நாட்டின் மக்கள் தொகை 100 கோடியை நெருங்கும். இந்த 100 கோடி மக்களுக்கும், மொத்தமாக உணவு உற்பத்தித் தேவை 240 மில்லியன் டன்களாக உயரும் என்பது கணிப்பு.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தில் சீராக முன்னேறிக்கொண்டே வருகின்றோம். சாகுபடி நிலப்பரப்பு குறைந்து வருகின்ற போதிலும், தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது. தமிழ் நாட்டில் ஒரு தனி நபருக்குக் கிடைக்கக்கூடிய நிலத்தின் அளவு இந்தியாவில் மற்ற பகுதி மக்களுக்குக் கிடைக்கக் கூடிய நிலத்தின் அளவில் அரைப்பங்குதான். தண்ணீரைப் பொறுத்தவரை கால் பங்கு மட்டுமே. இருந்த போதிலும் 1989-90 ஆண்டில் தமிழகத்தின் அரிசி உற்பத்தி அறுபத்தி இரண்டரை இலட்சம் டன்களாக உயர்ந்திருக்கின்றது. எக்டருக்கு சுமார் 3090 கிலோ அரிசி என்ற கணக்கில் நல்ல விளைச்சல் கண்டு பெரிய சாதனை படைத்துள்ளோம். அதேபோன்று, கரும்பு, நிலக்கடலை, பருத்தி ஆகிய பயிர்களிலும் உற்பத்தி கணிசமாக உயர்ந்திருக்கிறது. இந்த முன்னேற்றங்களுக்கெல்லாம் அச்சாணியாக இருப்பது, வேளாண்மை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்களின் ஒருங்கிணைந்த முயற்சியும், உழவர்களின் இடையறா உழைப்பும் ஆகும்.

தமிழ்நாட்டின் தற்போதைய மக்கள் தொகை 5.2 கோடியாகும். இது கி.பி. 2000-ல் 6.6 கோடியாக உயர்ந்துவிடும் என கணக்கிடப்பட்டுள்ளது. 2000-ம் ஆண்டில் நமக்கு 100 இலட்சம் டன் உணவுத் தானியங்கள் தேவையாக இருக்கும். நமது இந்த தேவைகளைக் கணக்கில் கொண்டே வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்களுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, வருகின்ற ஆண்டில் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ.160.29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு நமது மாநிலத்தில் விளைநிலத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு உத்திகளைக் கையாளுவதுடன், நிலச் சீர்திருத்தச் சட்டங்களையும் கொணர்ந்து விரைவாகச் செயல்பட ஆவன செய்து வருகிறது.

கிராமப்புற வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, சாலை மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல் மானாவாரி பண்ணை சாகுபடி, சிறப்பு உணவு தானியங்கள் உற்பத்தித் திட்டம், கரும்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பண்ணை மேம்பாட்டுத் திட்டங்கள் எனப் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

உலக வங்கியின் உதவியுடன் பண்ணைக்குட்டை அமைப்புத் திட்டம் மற்றும் மானாவாரித் தொழில் நுட்பங்களைப் பரிமாறுதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டத்தில், தீவிர நெல் சாகுபடி உற்பத்தித் திட்டம் செங்கை அண்ணா, வட ஆர்க்காடு அம்பேத்கர் , திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி,



# சென்னையில் 25 ஏழை மகளிருக்குத் திருமண நிதியுதவி

தமிழ்நாடு அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சி மூலம் திருவல்லிக்கேணியில் 25 ஏழை மகளிருக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 30.6.90 அன்று ரூ.5,000 பெறுமான காசோலைகளை வழங்கினார்.

சென்னை மாநகராட்சியில் 8 வது வட்டத்தைச் சார்ந்த 21 பேர்களுக்கும்; 9 வது வட்டத்தைச் சேர்ந்த 4 பேர்களுக்கும் 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிப் பேசுகையில், "அரசின் நல வாழ்வுத் திட்டங்களைக் குறைகூறுவோரும், பழித்தும் இழித்தும் பேசுவோரும் இருப்பினும் அரசு இடையுறாது தொடர்ந்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றியே தீரும்" என்றும், "மக்களுக்கு நன்மைகள் சென்று சேர வேண்டும் என்று ஒரே நோக்கத்தோடு செய்யப்படுகின்ற பணிகள் இவை" என்றும் கூறினார்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய உறுப்பினர் திரு. எஸ்.ஏ.எம். உசேன் தலைமை வகித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. அரங்கநாதன், ஒன்பதாவது வட்ட அலுவலர் திரு. வி. இரமணன் ஆகியோர் பேசினர். திரு. முரளி நன்றி கூறினார்.

---

புதுக்கோட்டை, மதுரை மற்றும் நெல்லை கட்டபொம்மன் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் தொடரப்பட்டு வருகிறது.

கீழ் மட்டத்தில் இடு பொருள் விநியோக வசதிகளை வலுப்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள 783 வேளாண்மை விரிவாக்க மையங்களுடன் 100 புதிய விரிவாக்க மையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. சான்றளிக்கப் பட்ட நெல் விதை விநியோகத்தை அதிகரிக்கும் பொருட்டு வரவு - செலவுத் திட்டத்தில் ரூ.8.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் ரூபாய் 170 கோடி செலவில் ஒருங்கிணைந்த வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வேளாண்மை விரிவாக்கப் பணிகளைத் திருத்தி அமைப்பதும், விதை உற்பத்திக்கான வசதிகளைப் பெருக்குவதும், தீவனப்பயிர் மேம்படுத்துதலும், நீர்ப்பள்ளத்தாக்கு பராமரிப்புத் திட்டங்களும் மற்றும் ஊரகச் சாலை மேம்பாட்டுத்திட்டங்களும் அடங்கும்.

டென்மார்க் நாட்டின் உதவியுடன் ரூ.6.25 கோடி செலவில் ஒரு மானாவாரி பண்ணைத் திட்டம் வ.உ. சிதம்பரனார் மற்றும் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டங்களில் 44 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப் பட உள்ளது. இத்துடன் மாநிலம் முழுவதும் ரூ.1.50 கோடி செலவில் ஒருங்கிணைந்த மானாவாரி பண்ணைத் திட்டத்தைச் செயல்படுத்தவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

ஏராளமான நிலமில்லாத விவசாயத்தையே நம்பியிருக்கும் கூலி வேலை செய்பவர்களின் வாழ்க்கைத் தரம் உயர, ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு கிடைக்க, வேளாண்மையுடன் கால்நடை பராமரிப்பு, மீன்வளர்ப்பு, பண்ணைக் காடுகள் ஆகியவை இணைந்த கலப்புப் பண்ணைத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். வேளாண்மைச் சார்புத் தொழிலையும் பெருக்க வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவ, மாணவிகள் பல்வேறு பொதுத் தேர்வுகளில், பெருமைப் படத்தக்க இடங்களைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆண்களோடு சரிநிகர் சரிசமமாகப் போட்டியிட்டு, எண்ணிக்கையிலும், கல்வியின் தரத்திலும் வளர்கின்ற பல்கலைக்கழகத்தின் பெண் பட்டதாரிகள் "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்கின்ற பழமையைப் பழமையாக்கி, வேளாண்மை வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கிறார்கள்.

இந்தப் பாரம்பரியம் மிக்க பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் கற்ற வேளாண்மைக் கல்வியையே அடிப்படையாகக் கொண்டு, சுயவேலை வாய்ப்பில் ஈடுபட்டு கிராமங்களில், சிறு நகரங்களில் நீங்கள் முன்னுதாரணமாக செயல்பட்டு வளம் பெருக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். இதன் மூலம் வேளாண்மையிலும் சிறு சிறு தொழில்கள் செயல்படுத்தப்படும் கிராமங்களில் வேளாண்மையில் புது மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

இப்பல்கலைக் கழகத்தின், பழைய மாணவர்கள்- திக்கெட்டும் சென்று- பல்வேறு உயர்ந்த நிலைகளில் பணிபுரிந்து வருகின்றார்கள். இப்பட்டமளிப்பு விழாவில்- சிறப்புப் பட்டங்கள் பெறுகின்ற பெருமைக்குரிய நண்பர்கள் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் ராமச்சந்திரன், மற்றும் கடந்த ஆண்டு சிறப்புப் பட்டம் பெற்ற டாக்டர் சுவாமிநாதன் ஆகியோர் இப்பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர்களே என்று அறிந்து மகிழ்கின்றேன். இச்சிறப்பால், அவர்களுக்கும் பெருமை - அவர்களால் இப்பல்கலைக் கழகமும் பெருமை பெறுகின்றது.

வேளாண்மைக் கல்வியை மேலும் வலுவூட்டும் வகையிலும், நமது மாநிலத்தின் நடுநாயகமாக அமைந்துள்ள திருச்சி மாவட்டம், அதைச் சுற்றிலுமுள்ள புதுக்கோட்டை, திண்டுக்கல் காயிதே மில்லத்,தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் வறண்ட பகுதிகளை மேம்படுத்தவும், அங்குள்ள வேளாண் குடிப்பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்தில் உள்ள குமுழூர் கிராமத்தில் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியை இந்த அரசு சென்ற ஆண்டு தொடங்கியுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு, நமக்குத் தேவையான உணவுப் பொருட்கள் கிடைக்காமல், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது நாமெல்லாம் அறிந்த நிகழ்ச்சியாகும். ஆராய்ச்சியின் மூலமாக உயர் விளைச்சல் இரகங்களும், தொழில் நுட்பங்களும் கண்டறியப்பட்டு இன்று நமக்குத் தேவையான உணவை நாமே உற்பத்தி செய்யும் நிலையில் உள்ளோம். அதற்காகப் பாடுபட்ட இப்பல்கலைக் கழக வேளாண்மை விஞ்ஞானிகள், வேளாண்துறை அலுவலர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் ஆகியோரைப் பாராட்டுகிறேன்.

இனிவரும் ஆண்டுகளில் நீர்ப்பராமரிப்பு, மானாவாரி சாகுபடி, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி, தரிசு நிலங்களை மேம்படுத்துதல், கடலோரப் பகுதி நிலமேம்பாடு ஆகிய துறைகளில் அதிக அளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

நமக்குத் தேவையான நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. சாகுபடி நிலப்பரப்பில் 47 விழுக்காடு மட்டுமே பாசன வசதி பெற்றுள்ளது. இத்தருணத்தில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். குளம், குட்டை, கால்வாய், கிணற்று நீர்ப்பாசனங்களின் நிர்வாகத்தைச் செம்மைப் படுத்த வேண்டும். மழை நீர், நிலத்தில் வழிந்து ஓடாமல் தேக்கி வைத்து விவசாயத்திற்கு முழுமையாகப் பயன் படுத்த வேண்டும். தோட்டப் பயிர்களின் சாகுபடியில் நவீன உத்திகளைக் கையாண்டு மகசூலை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக தோட்டப் பயிர்களில் சொட்டு நீர்ப்பாசனம் பெருமளவு பயன்படுத்தப்பட்டு மகசூலை அதிகரிக்க வேண்டும். ஒவ்வொரு பயிருக்கும் குறைந்த அளவு நீர்த் தேவை, அதிக மகசூல் அடைவதற்கான நீர்த் தேவை முதலியவற்றைக் கணக்கிட வேண்டும். நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சொட்டுத் தண்ணீரையும் வீணாக்காமல் பயன்படுத்த வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

நமது மாநிலத்தில் உள்ள ஏராளமான தரிசு நிலங்களை சாகுபடிக்கு ஏற்ற நிலங்களாக மாற்ற வேண்டும். அதற்கேற்ற பயிர்களையும், சாகுபடி முறைகளையும், ஆராய்ச்சியின் மூலமாக உருவாக்க வேண்டும். கிராமப்புற மேம்பாட்டுக்காக கால்நடை, மீன்வளம், வேளாண்மை, வேளாண் பொறியியல், வேளாண் வனவியல் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

இப்பல்கலைக் கழகத்தில் உயிரியல் தொழில் நுட்பத் துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக, எளிதில் அடைய முடியாத அநேக உயர் விளைச்சல் பயிர் இரகங்களையும், நோய் பூச்சி எதிர்ப்பு சக்தி உள்ள இரகங்களையும், உருவாக்க இயலும். நோய் பூச்சிகளைக் கட்டுப் படுத்தி நிர்வகிக்கவும், கழிவு நீரை நுண்ணுயிர்கள் மூலம் சுத்தம் செய்து சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கவும், இதுவரை உபயோகத்திற்குக் கொண்டு வராத இயற்கை சக்திகளைப் பயன்படுத்தவும் இத்துறை பெரிதும் உதவும். அறிவியல் பூர்வமான தொழில்நுட்பங்களை, வணிக ரீதியில் இலாபகரமான தொழில்களாக மாற்றுகின்ற உத்திகளை உழவர்களுக்கும், கிராமங்களிலுள்ள இளைஞர்களுக்கும் அறிய வைத்து பயன்பெறச் செய்ய வேண்டும். இதுவே இன்றைய கிராமங்களின் அடிப்படை முன்னேற்றத்திற்கு அடிகோலுவதாகும்.

அதிக மகசூல் அடைய உயர் விளைச்சல் இரகங்களின் தரமான விதைகளைப் பல்கலைக்கழகமும், வேளாண் துறையும் இணைந்து செயல்பட்டு வேளாண் பெருமக்களுக்கு வழங்கி வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இத்தருணத்தில், மூலவிதை, ஆதாரவிதை, சான்றிதழ் பெற்ற விதை உற்பத்தியின் அளவை மென்மேலும் அதிகப்படுத்தி, வேளாண் பெருமக்கள் அனைவரும் அதன் பயனை அடைய ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தியில் ஆராய்ச்சியும், சாதனையும், மனநிறைவு தருவதாக இருந்தாலும், எண்ணெய்வித்து பயறுவகை, காய்கறி, மற்ற தோட்டப் பயிர்களின் ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்த வேண்டும்.

மண், நீர், காற்று ஆகிய மூன்றும் அதிக அளவு மாசுபடுத்தப்பட்டு வருவதை உலகம் முழுவதும் மிகுந்த கவலையுடன் நோக்கி இருக்கும். இத்தருணத்தில், சுற்றுப் புறச்சூழல் ஆராய்ச்சியை மேற்கொண்டு, விரைவில் சுற்றுப் புறத்தைப் பாதுகாக்க வழிவகுக்க வேண்டும். இந்தத் துறையின் இப்பல்கலைக் கழகத்துடன் தமிழ்

பசியெனத் தோன்றுவோர்
பகைவர்கள் ஆயினும்
புசியெனச் சொல்லுவோம்
புதியதோர் உலகிலே!
—கவியரசர் கண்ணதாசன்

நாட்டில் உள்ள மற்ற பல்கலைக் கழகங்களும், தனியார் நிறுவனங்களும் இணைந்து செயல்பட வேண்டும் என விரும்புகிறேன்.

மேலும் போதிய மழைப் பொழிவைப் பெறவும், இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்கவும், குறைந்தும், அழிந்தும் வரும் வனப் பகுதியைப் பாதுகாக்கவும் தீவிர ஆராய்ச்சி கல்வி மற்றும் பயிற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

விரிவாக்கக் கல்வி மூலமாக விவசாயிகள் நிலத்தில் அனுசரணை ஆராய்ச்சி மேற்கொள்ளுதல், மாதிரிப் பண்ணைகள் அமைத்தல், விரிவாக்கப் பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல், வானொலி, ஒலி-ஒளி நாடாக்கள், தொலைக்காட்சி மூலமாக விவசாயிகளுக்குப் பாடங்களையும், பயிற்சிகளையும் அளிப்பதுடன், உருவாக்கப்பட்ட உயர் விளைச்சல் இரகங்களும், தொழில் நுட்பங்களும் விரைவில் கிராமப்புற விவசாயிகளைச்|சென்று சேர்தல் ஆகியவற்றால் நாம் எதிர்பார்க்கும் நல்ல மாற்றங்களை விரைவில் அடைய முடியும்.

விஞ்ஞானிகள், விவசாயப் பெருங்குடி மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களின் தேவைகளை நேரிடையாக அறிவதனால் அவர்களின் தேவைக்கேற்ற ஆராய்ச்சி மேற்கொள்ளவும், ஏற்கனவே வெளியிட்டுள்ள தொழில் நுட்பங்களைச் சீர்படுத்தவும் இயலும்.

விவசாய வேலையில் ஈடுபட்டுள்ள பெண்களும் மற்றவர்களும் சோர்வடையாமல் வேலை செய்வதற்காக, புதிய கருவிகள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியும், அந்தக் கருவிகளைப் பயன்படுத்தப் பயிற்சியும் மேற்கொள்ள வேண்டும்.

நமது பட்டப்படிப்பு, ஏட்டோடு நில்லாமல் சமுதாயத்தில் நலிந்தவர்கள், கிராமப்புறப் பெண்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வரும் ஏழை எளிய மக்கள் ஆகியோரின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான இப் பல்கலைக் கழகத்தில் அளிக்கப்பட்டுவரும் பயிற்சிகள் மேலும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

உணவுப் பொருள் தேவை காரணமாக, வேளாண்மை உற்பத்தியில் நிலவிவரும் இயற்கைச் சூழ்நிலையையும் விவசாயிகளினுடைய இலாபத்தினையும் பொருட்படுத்தாத நிலையில் நமது திட்டங்கள் அமைந்துவிடக் கூடாது. ஆகவே, பொருளாதார ரீதியில் வலுவான, இயற்கையோடு இணைந்த வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் தொழில் நுட்பங் கண்டறிந்து பரப்ப வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அறிவியலார் தங்கள் முழுமையான ஆற்றல், அறிவு, அனுபவம் ஆகியவற்றைப் பயன்படுத்தி வேளாண் விளைபொருள் உற்பத்தியை அதிகப்படுத்துவதில் நாட்டம் கொள்ள வேண்டும்.

1971-ல் முதலமைச்சராக நான் இப்பல்கலைக் கழக வளாகத்திற்கு வரும் வாய்ப்புப்பெற்றேன். இலண்டன் மாநகரில் எனக்குப் பரிசாக வழங்கப்பட்ட பர்கூசன் டிராக்டரை இந்தப் பல்கலைக் கழகத்திற்கு வழங்குவதாக அந்த இடத்திலேயே அறிவித்தேன். இதிலிருந்து எனக்கு இந்தப் பல்கலைக் கழகத்தின்பால் உள்ள பாச உணர்வு எத்தகையது என்பதை அறிவீர்கள். இந்தியாவில் முதன்மை பெற்று விளங்கும் ஒருசில வேளாண் புல்கலைக் கழகங்களில் இப்பல்கலைக் கழகமும் ஒன்று என்பதில் நான் மிகவும் பெருமை கொள்கிறேன்.

இப்பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியே சென்றுள்ள பட்டதாரிகள் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் உயர் பதவி வகிக்கின்றார்கள். தற்போதைய

## பாவேந்தர் நூற்றாண்டு:



தமிழகத்தில் மலைபோன்ற
செல்வத் தாரும்
தம்ஆணை பிறர்ஏற்க
வாழு வாரும்
தமிழர்க்கோ தமிழுக்கோ
இடையூ றொன்று
தாம்செய்து வாழ்ந்தநாள்
மலையே றிற்றே!

தமிழக அரசு, வேளாண்மைக்கு அதிக அளவில் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு உங்களின் சேவையையும் - அறிவுத் திறமையையும் பயன்படுத்திக் கொள்ள தமிழக அரசு அதிக வாய்ப்புகள் கொடுக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

இவ்விழாவில் பட்டம் பெறும் உங்களுக்கு வளமான எதிர்காலம் அமைய வாழ்த்துகிறேன். தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு அதிக அளவில் நீங்கள் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இதன்மூலம் மிகச் சிறந்த நிறுவனமாகத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தொடர்ந்து சிறந்து விளங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இங்கு வேளாண்மைத்துறை வாயிலாக சில பரிசுகள் பற்றி அறிவிக்கப்பட்டது. அதோடு இணைந்து ஆண்டு தோறும் ஒரு பரிசை சிறந்த ஆராய்ச்சிப் பேராசிரியர்கள் தேவையான ஒரு புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, மக்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய புதுமையைக் கண்டுபிடிக்கின்ற வித்தகர்களுக்கு ஆண்டு தோறும் அரசின் சார்பில் ஒரு விருது வழங்க ஒரு லட்ச ரூபாய் (பலத்த கைதட்டல்) வைப்பு நிதிக்கு வழங்கப்படும். அதிலிருந்து கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு அவர்களுக்கு ஆண்டுதோறும் அரசின் சிறப்பு விருது வழங்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் இந்தக் கோவையில் பிறந்து விஞ்ஞானத் துறையிலே அதிக வசதி வாய்ப்புகள் இல்லாத கால கட்டத்திலேயே விஞ்ஞானத்தில் பல புதுமைகளைச் செய்து விவசாயத் துறையிலே பல அற்புதங்களைச் செய்து காட்டியவர் ஜி.டி. நாயுடு என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் அவருக்கு அன்றிலிருந்து அரசுகளால் எந்த விதமான அனுமதியும், அங்கீகாரமும் தராத காரணத்தால் குடத்திற்குள் வைக்கப்பட்ட விளக்காக அவருடைய ஆராய்ச்சிகள் போய்விட்டன. அவருடைய பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்ல இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் "ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்" என்று அறிவிக்கப்படுகிறது. வேந்தர் அவர்களையும் கலந்து கொண்டு இதனை அறிவிக்கிறேன்.

TNPSC

விளம்பர எண். 21/90

தேர்வாணையத்தின் விளம்பர எண் 7/90இல் வெளியிடப்பட்ட தேர்வாணையத்தின் அலுவலர்/ மகளிர் பள்ளி ஆய்வாளர் பதவியில் 13 காலியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிக்கையில் கீழ்க்கண்ட பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற்ற விண்ணப்ப தாரர்களைக் கொண்டு இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது:

| Subject (1) | | No. of Vacancies (2) |
|---|---|---|
| | | 3 |
| Physics | - | 2 |
| Mathematics | - | 4 |
| Chemistry | - | 1 |
| Commerce | - | 1 |
| Zoology | - | 1 |
| Botany | - | 1 |
| Geography | - | |

கீழ்க்கண்ட பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்களைக் கொண்டு இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது:-

| Subject (1) | | No. of Vacancies (2) |
|---|---|---|
| | | 2 |
| Physics | - | 2 |
| Mathematics | - | 2 |
| Chemistry | - | 1 |
| Commerce | - | 1 |
| Zoology | - | 1 |
| Botany | - | 1 |
| Geography | - | 1 |
| Tamil | - | 1 |
| Economics | - | 1 |
| History | - | |

ஏற்கெனவே அறிவிப்பு செய்யப்பட்ட மற்ற நிபந்தனைகளில் கல்வித் தகுதியில் உள்ள மாற்றத்தைத் தவிர மாறுதல் ஏதும் இல்லை.

தமிழ்நாடு கல்விப் பணியில் மாவட்ட கல்வி அலுவலர்/ மகளிர் பள்ளி ஆய்வாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட கீழ்கண்ட பாடங்களில் முதுகலைப்பட்டம் பெற்ற விண்ணப்பத்தாரர்களிடமிருந்து மட்டும் 30.7.1990 அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:-

தமிழ், பொருளாதாரம், வரலாறு

ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

இப்பதவிக்கு தமிழ், பொருளாதாரம் மற்றும் வரலாறு பாடங்களுக்குக் குறிப்பிட்டுள்ள வயது மற்றும் தகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**வயது: I. For recruitment to vacancies to be filled from Open Market** (i.e. Other than teachers of recognised Aided Secondary Schools). - Below 30 years as on 1st July 1990.

**II. For recruitment to vacancies reserved to be filled from among teachers employed in recognised Aided Secondary Schools.**

Below 40 years as on 1st July 1990.

**தகுதி:** The candidates should possess the following or equivalent qualifications on the date of their applications:-

I. For both Open Market and teacher candidates (i.e., teachers employed in recognised Aided Secondary Schools):-

(i) Master's degree of any University in the State of Tamil Nadu or a degree of equivalent standard/M.O.L. of Annamalai University with not less than 50 percent of marks in the Master's degree examination/M.O.L. of Annamalai University in any one of the following subjects/language, viz, Tamil, Economics and History.

Provided that a candidate possessing a degree of M.A. or M.Sc., or an equivalent degree awarded under the grading system shall not be considered eligible for appointment unless he has obtained the said Degree with 'O' or 'A' or 'B'.

(ii) B.T. or B.Ed., degree of any University in the State of Tamil Nadu or a degree of equivalent Standard.

**NOTE:** Candidates who do not possess the B.T. or B.Ed. degree may also apply for vacancies to be filled from Open Market. But such candidates, if selected, should acquire the said qualification before appointment.

(iii) Must have studied Tamil Undec Part I or Part II of the Intermediate or Pre-University or Higher Secondary Course.

**Note:** Paragraph 7 of the Commission's Instructions, etc. to Candidates will not apply to this recruitment.

**II. Only for recruitment to the vacancies to be filled from among the teachers employed in recognised Aided Secondary Schools.**

Teaching experience in a recognised School for a total period of not less than twelve years after acquiring the qualifications specified in item (ii) above

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்கும் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2. அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேரிவாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.6.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும், அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bahk of India) ஏதாவது ஒரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.6.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006, ஆயிரம்விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க ரூபாய் 10/-க்கான கேட்புக்காசோலை (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

DIPR/1548/MS/90

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.





1-8-1990 ரூ. 1

Licence No. TN/MS(C)/PP-2



கோவையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்புவிழா மேதகு ஆளுநர் திரு. பர்னாலா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தினார். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் விழாவில் கலந்துகொண்டார். (24.6.90)



பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்த நாளையொட்டி சென்னையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், அரசுப் பொதுத் தேர்வில் முதன்மை பெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுகளை வழங்கினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் கலந்து கொண்டனர் (15.7.90).



- ஆதி திராவிடர் நலனுக்குப் பாடுபட்ட அருளாளர்
- நந்தனார் குருகுலம் நிறுவிய சிந்தனையாளர்
- தீண்டாமை ஒழிப்புக்குப் பாடுபட்ட தீரர்
- சட்டமன்றத்திலும் மேலவையிலும் அங்கம்பெற்று சமுதாயத் தொண்டு செய்த செம்மல்
- துறவு வாழ்க்கை மேற்கொண்ட தூயர்

**சுவாமி சகஜானந்தா** அவர்களின்

நூற்றாண்டை முன்னிட்டு ஆகஸ்ட் 9-ல் சிதம்பரத்தில் அரசு சார்பில் விழா நடைபெற உள்ளது.

**சுவாமி சகஜானந்தா குறித்த கட்டுரைகள் 'தமிழரசு' 16.8.90 இதழில் இடம் பெறுகின்றன.**

120

# இந்த இதழில்...

**இலங்கைத் தமிழர் பிரச்சினை:**


| | |
|---|---|
| தமிழகத்தில் முழு அடைப்பு | 2 |
| திருச்சி மாவட்டம் கரூருக்குக் காவிரி நீர் வழங்கும் திட்டம் ... | 4 |
| புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் ... | 6 |
| பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா ... | 9 |
| கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பளிக்கும் காதிகிராப்ட் ... | 13 |
| நூல் நயம் ... | 16 |
| பயன் பெற்றோர் பகர்வன ... | 17 |
| மாவட்டச் செய்திகள் ... | 19 |
| ராஜஸ்தான் மாநிலக் கைவினைப் பொருள் கண்காட்சி ... | 23 |
| தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள் ... | 24 |
| மூன்று கட்டளைகள் ... | 28 |
| சிறுசேமிப்பு முதலீட்டாளர்களுக்கு மாபெரும் பரிசுத் திட்டம் ... | 31 |
| மாணவ மணிகளின் நலன் காக்கும் அரசு ... | 33 |
| தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - விளம்பரங்கள் ... | 43 |



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆடித் திங்கள் - 16

மலர்:21 1-8-1990 இதழ்

20.7.90 முழு அடைப்பின் போது வெறிச்சோடிக்கிடக்கும்- சென்னையில் உள்ள அண்ணா சாலை.



### இலங்கைத் தமிழர் பிரச்சினை

# தமிழகத்தில் முழு அடைப்பு

இலங்கையில் இராணுவத்தினரால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, 20.7.90 வெள்ளிக்கிழமை அன்று, தமிழகம் முழுவதும் முழுஅடைப்பு வெற்றிகரமாக நடைபெற்றது. அத்தியாவசியப் பணிகள் என்று ஏற்கனவே விதி விலக்கு கொடுத்து அறிவிக்கப்பட்டவைகள் தவிர, மற்ற எந்தப் பணிகளும் நடைபெறவில்லை. மருத்துவமனைகள், குடிநீர், மின்சாரம், பத்திரிகைகள், தொலைபேசி, பால்விநியோகம், தீயணைப்பு போன்ற அத்தியாவசியப் பணிகளுக்கு முழு அடைப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

அன்றைய தினம் மாநில அரசு அலுவலகங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், தனியார்-அரசு போக்குவரத்து நிறுவனங்கள், வங்கிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றிற்கும் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு ஊழியர்களுக்குச் சிறப்பு விடுப்பு மத்திய அரசால் வழங்கப்பட்டது.

திரையரங்குகள், படப்பிடிப்புத் தளங்கள், கலையரங்குகள், கடைகள், உணவகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

அட்டையில்: இலங்கைத் தமிழ் அகதிகள் வருகையைக் குறிக்கும் படம்.

தனியார் நிறுவனங்கள், பொது வேலை நிறுத்தத்தையொட்டித் தங்கள் பணியாளர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கின.

புகைவண்டி மற்றும் விமானப் போக்குவரத்து அன்று காலை 6 மணிமுதல், மாலை 6 மணிவரை இயங்கவில்லை; அவைகளின் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. பஸ்கள், லாரிகள்- மற்றும் எந்த வாகனங்களும் அன்று ஓடவில்லை.

தமிழக மக்களின் ஒருமித்த உணர்வை இலங்கை அரசு புரிந்து கொள்ளப் பயன்படும்விதத்தில், தமிழகமெங்கும் முழுஅடைப்பு அமைதியாகவும், சிறப்பாகவும் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைத்துத் தரப்பினருக்கும் அன்று மாலையே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பின்போது நன்றி தெரிவித்துக் கொண்டார். அந்தச் சந்திப்பில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போது, ''தமிழ் மக்களுடைய உணர்வை இலங்கை அரசு புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை அரசு புரிந்து கொள்ள மறுத்தால், இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இதற்கு இந்த முழு அடைப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ள தமிழ் மக்களின் உணர்வு பயன்படும் என்று நம்புகிறேன்'' என்று குறிப்பிட்டார். மேலும், ''இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்க்க மத்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்; மத்திய, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. குஜ்ரால் நிலைமை இப்படியே போனால், 'இந்தியா சும்மா பார்த்துக் கொண்டிருக்கமுடியாது என்று சொல்லியிருக்கிறார். இருதரப்பிலும் போர் நிறுத்தப்படுவதற்கும், தமிழ் ஈழத்தில் அமைதி ஏற்படுவதற்கும் பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும்'' என்றார்.



### பிரதமர் வி.பி.சிங் அறிவிப்பு

அதே நாளில் - (20.7.90) புதுடில்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள், பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது ஒரு வினாவிற்கு அவர் விளக்கமளிக்கையில் - ''இலங்கைப் பிரச்னையில் மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்குமிடையே எந்தவிதக் கருத்து மாறுபாடும் கிடையாது'' என்று குறிப்பிட்டார். இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்பு குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது; இவர்களைப் பாதுகாக்க அரசு சார்பில் நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன''. என்றும் அவர் தெரிவித்தார்.

### இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவிகள்

21.7.90 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் செங்கை-அண்ணா மாவட்டத்தில்- முத்துக்காடு, நெமலி, சாளுவன் குப்பம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களுக்கு நேரில் சென்று பார்த்து அவர்களது நலம், அவர்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் பற்றி விசாரித்தறிந்தார். தமிழகத்தில் எல்லா வசதிகளும் செய்து தரப்படுவதாகவும் மகிழ்வோடிருப்பதாகவும் அனைவரும் முகமலர்ச்சியோடு தெரிவித்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன், மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், திரு. கே.என். நேரு, திரு. க. சுந்தரம், செங்கை அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சமீர் வியாஸ், இ.ஆ.ப., மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த முகாம்களுக்குச் சென்றிருந்தார்கள்.

சென்னை திரும்பிய மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்றே செய்தியாளர் சந்தித்தனர். அப்போது, அவர் ''இன்று காலைவரை தமிழகம் வந்துள்ள மொத்த அகதிகளின் எண்ணிக்கை 28,725 ஆகும்; அகதிகளுக்கு இன்று முதல் இங்கே உடைகள் வழங்கப்படும்; அஃதன்னியில் தமிழக அரசின் சார்பாகச் சிறப்பு ஏற்பாடாக ஆகஸ்ட் 15-ஆம் தேதி சுதந்திர நாள் அன்று அகதிகளாக வந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அவரவர்களுக்குத் தேவையான வேட்டி, சேலை, லுங்கிகள், குழந்தைகளுக்குச் சீருடைகள் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்றார்.

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள், பெரியார் மாவட்டம் கரட்டடிப் பாளையத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமிற்குச் சென்று பார்வையிட்டார் (24.7.90).





# திருச்சி மாவட்டம் கரூருக்குக் காவிரிநீர் வழங்கும் திட்டம்

**வ**ளர்ந்துவரும் நகரமாகிய கரூர், தண்ணீர்த் தட்டுப்பாட்டால் பல ஆண்டுகளாகத் தவித்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மக்களின் குறையினைப் போக்க, குடிநீர் போதிய அளவு கிடைத்திடும் வகையில் திட்டம் தயாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உத்தரவிட்டார்.

கரூர் நகருக்கு ஒரு விரிவான தன்னிறைவு அளிக்கக்கூடிய வகையில் குடிநீர்த் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, முடிவில் காவிரி ஆற்றை ஆதார மாகக் கொண்டு ரூ.407.69 இலட்சத்திற்குத் திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கரூர் நகரில் 10.7.90 அன்று அடிக்கல் நாட்டினார். இத்திட்டத்தின்படி நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 125 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது கரூர் நகரில் நபர் ஒருவருக்கு 56 லிட்டர் வீதம்தான் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 2016-ஆம் ஆண்டில் 1,81,300 மக்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இத்திட்டப்படி கரூரிலிருந்து 13 கி.மீ. தொலைவிலுள்ள நெரூர் அருகே காவிரி ஆற்றில் 6 மீட்டர் விட்டமுள்ள ஒரு சேகரிப்புக் கிணறு அமைக்கப்படவுள்ளது. இக்கிணற்றிலிருந்து கிடைக்கும் குடிநீர் 135 குதிரைத்திறன் கொண்ட நீரேற்றிகளின் மூலம், 13 கி.மீ. நீளமுள்ள கல்நார் நீரேற்றுக் குழாய் மற்றும் 13.328 கி.மீ. நீள்முள்ள பிரிவு நீரேற்றுக் குழாய் மூலம், கரூர் நகருக்குக் கொண்டு செல்லப்படும். இவை கரூர் நகரில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 7 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் புதியதாகக் கட்டப்பட வுள்ள 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு, கரூர் நகர மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கரூர் மக்களின் நீண்டகாலக் கனவு செயலாகி வருகிறது.

கரூரில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 27,554 நபர்கள் பயன் பெறும் வண்ணம் ரூ.26.82 கோடி அளவிற்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் 400 நபர்களுக்கு தலா ரூ.5,000 வீதம் ரூபாய் 20 இலட்சம் விநியோகிக்கப்பட்டது. டாக்டர் முத்துலட்சுமி மகப் பேறு உதவித்திட்டத்தின் கீழ் 3470 நபர்களுக்கு தலா 200 வீதம் ரூ.6.94 இலட்சம் வழங்கப் பட்டது. டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமணத் திட்டத்தின் மூலம் இருவருக்கு தலா 5,000 வீதம் ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 4021 நலிந்தோர்க்கு மான்யக் கடனாக ரூ.250.25 இலட்சம் வழங்கப்பட்டது. கரூர் நகராட்சியில் பணியாளர்களில் குறைந்த வருமானம் பெறுபவர் களுக்கு "சொந்த வீடு" வழங்கும் திட்டத்தின்கீழ் 13 நபர்கள் ரூ.13 இலட்சங்களைப் பெற்றார்கள்.

1,000 பேருக்கு "முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்" கீழ் ரூ.50,000 வழங்கப் பட்டது. 9,252 நபர்களுக்கு ரூ.92.52 இலட்சம் மதிப்புள்ள வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட் டன. 590 ஆதி திராவிடர்களுக்கு ரூ.8.85 இலட்சம் மதிப்புள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டன.

**கரூர் நகருக்கு 110 கி.வா. துணை மின் நிலையம்**

கரூர் நகரில் மின் தட்டுப்பாடு போக்கிடவும், தொழில் வளம் பெருகிடவும் புதியதாக அமைக்கப் பட்டுள்ள 110 கி.வா. திறன் கொண்ட துணை மின் நிலையத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார். இம்மின் நிலையத் தினை நிறுவிட ஆன செலவு ரூ.191 இலட்ச மாகும்.

பல்வேறு அரசுத்துறைக் கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன் உரையில் குறிப்பிட்டதாவது:

"குடிநீர் வடிகால் வாரியம் இடைக்காலத்தில் சரியான முறையில் செயல்படாமல் போய் மீண்டும் இப்போது செயல்படத் தொடங்கியுள்ளது.

"குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தமிழகத் தில் 10 ஆயிரம் குழாய்கள் கடந்த காலத்தில் போடப்பட்டு தொடர்ந்து அந்தப் பணி நிறைவேற வேண்டும் என்று முடுக்கி விடப்பட்டு அவ்வற்றில் ஒரு கூறாக இன்றைக்கு இந்த வட்டாரத்துக்குத் தண்ணீர் தரப்படுகின்ற ஒரு திட்டம் இன்று தொடங்கி வைக்கப்படுகின்றது.

"இதைப்போலவே நிலையான நிரந்தரத் திட் டங்களாகத் தொழிற்சாலைகள் அமைய வேண்டும் என்பதற்காகச் சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெருந்தொழில்கள் ஆகியவை ஊக்கப்படுத்தப்பட வேண்டும். 3-ஆவது இடத் திலே இருந்த தமிழகத் தொழில் வளர்ச்சித் திட்டம் இடையிலே 13 ஆண்டுக்காலத்தில் 13-ஆவது இடத்திற்குப் போய்விட்டது. அதனை மீண்டும் 3-ஆவது இடத்திற்குக் கொண்டுவர வேண்டும். முடியுமானால், முதல் இடத்திலே கொண்டுவந்து நிறுத்தவேண்டும் என்ற முயற்சிகளை அரசு மேற் கொண்டுள்ளது.

"மின்சாரத் துறையிலே எவ்வளவோ இடை யூறுகள் இருந்தன. 1989-ஆம் ஆண்டில் 60 சதவிகித மின்வெட்டு இருந்தது. எண்ணூர், மேட்டூர், கல்பாக்கம் ஆகிய மின்உற்பத்தி நிலை யங்கள் பழுதாகி இருந்தன. நெய்வேலியிலிருந்தும் சரியாக மின்சாரம் பெற இயலவில்லை. இவற்றை யெல்லாம் இந்த அரசு சீர் செய்ததன் காரணமாக இன்றைக்கு இந்தியாவிலேயே மின்வெட்டு இல் லாத மாநிலம் தமிழ்நாடுதான் என்ற நிலையை உருவாக்கியுள்ளோம்".

இந் நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கண். தீனதயாளன், இ.ஆ.ப. அவர்கள் மாவட்ட அலுவலர்கள் சார்பில் ரூ.1.50 இலட்சம் முதல்வர் நிவாரண நிதிக்கு வழங்கினார்.

விழாவிற்கு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு தலைமை வகித்தார்.

விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு மு. கண்ணப்பன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி, மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப் புரையாற்றினார்கள். மாவட்ட ஆட்சியர் திரு கண். தீனதயாளன் வரவேற்புரையாற்றினார்.

திருச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் திரு ப. கனகசபை நன்றியுரை யாற்றினார்.

***தகவல்: எஸ். சுதாகர்***
***உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,***
***திருச்சி.***



**பாவேந்தர் நூற்றாண்டு**

ஒருதமிழன் தமிழர்க்கே
உயிர்வாழ் கின்றான்;
உயிர்வாழ்வோன் தமிழர்க்கே
தனைஈ கின்றான்!
அரியபெரும் செயலையெலாம்
தமிழ்நாட் டின்பின்
ஆழத்தில் காணுகின்றான்!
தமிழன் இந்நாள்
பெரிதான திட்டத்தைத்
தொடங்கி விட்டான்!
'பிறந்துளார் தமிழறிஞர்
ஆதல் வேண்டும்;
வருந்தமிழர் வையத்தை
ஆள வேண்டும்!'
வாழ்கதமிழ்! இவ்வையம்
வாழ்க நன்றே!

### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# அரசு நலத்திட்ட உதவிகள்

புதுக்கோட்டையில் 9.7.90அன்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைத் துவக்கி வைத்தும், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''இன்றைக்குப் புதுக்கோட்டையிலே குடிநீர்த் திட்டம் ஏறத்தாழ 19 கோடி ரூபாய் செலவிலும், டானிடா கால்நடை மேம்பாட்டுத் திட்டம் ஏறத்தாழ நாலரைக் கோடி ரூபாய் செலவிலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வாடகைக் குடியிருப்பு ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், 400 ஆதிதிராவிடர் கூட்டுக் குடியிருப்பு இல்லங்கள் ஏறத்தாழ 57 இலட்சம் ரூபாய் செலவிலும், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள் இவைகளெல்லாம் மொத்தம் ஏழரை இலட்சம் ரூபாய் செலவிலும், புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவுக்காக 15 இலட்சம் ரூபாய் செலவிலும், 4 படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சைப் பிரிவு ஒரு இலட்சத்து அறுபது ரூபாய் செலவிலும், அரசினர் ராணியார் மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு நாலேகால் இலட்சம் ரூபாய் செலவிலும், பலநோக்குச் சிகிச்சைப் பணியாளர்கள் தங்குமிடம் 50 இலட்சம் ரூபாய் செலவிலும், திருவரங்குளம் செவிலியர் பயிற்சி நிலையம் 23 இலட்சம் ரூபாய் செலவிலும், திருமயம் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி 20 இலட்சம் ரூபாய் செலவிலும் ஆக மொத்தம் 27 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

''திருமணம் ஆகாமல் இருக்கின்ற - 8-ஆம் வகுப்பு வரையிலே படித்த பெண்களுக்குத் தலா 5,000 ரூபாய் வீதம் இன்றைக்கு மாத்திரம் 100 பெண்களுக்கு 5 இலட்சம் ரூபாயும், அதைப் போலவே, கர்ப்பிணிப் பெண்களுக்குத் தலா 200 ரூபாய் என்ற வகையில் 200 பேருக்கு இன்றைக்கு 40,000 ரூபாயும், டாக்டர் தருமாம்பாள் நினைவு மறுமண உதவித் திட்டத்தின் கீழ் இரண்டு பேருக்கு 10,000 ரூபாயும், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணத் திட்டத்தின்கீழ் இரண்டு பேருக்கு 10,000 ரூபாயும், மற்றும் இலவசத் தையல் இயந்திரம், ஊனமுற்றோர்க்குச் சக்கர நாற்காலிகள், சலவைப் பெட்டிகள், வீட்டுமனைப் பட்டாக்கள், விபத்து நிவாரணம் என்கின்ற பெயரில் கிட்டத்தட்ட 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் ஆக மொத்தம் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே நல்வாழ்வுத் திட்டங்கள் இந்த மகத்தான விழாவிலே வழங்கப்படுகின்றன.''

## 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நல்வாழ்வுத் திட்டங்கள்

## அரசின் அறிவிப்புகள்

★ நடப்புக் கல்வியாண்டில் 70 புதிய உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தவும் ஏற்கனவே இருந்துவரும் 40 உயர்நிலைப் பள்ளிகளை மேநிலைப் பள்ளிகளாக மாற்றவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் அறிவித்தார்.

★ தமிழகத்தில் தொழில்கள் வளர, தொழில் வளம் பெருக, மின் உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் காரணமாகத் தமிழகத்தில் தற்போது மின்வெட்டு முழுதும் இல்லையென்றும், இந்தியாவிலேயே மின்வெட்டு இல்லாத மாநிலம் தமிழ்நாடுதான் என்றும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 5.7.90 அன்று ஆண்டிப்பட்டியில் அறிவித்தார்.

அம்பேத்கர் நூற்றாண்டு



உலகிலுள்ள எல்லாமே மாறுதலுக்கு உட்பட்டதுதான். சமுதாயமேயானாலும் சரி; தனிப்பட்ட மனிதனேயானாலும் சரி- காலத்தோடும் கால மாற்றத்தோடும் சேர்ந்து இணைந்து செல்லக் கூடிய மனப்பக்குவம் பெறவேண்டும்; அதுவே உண்மையான நாகரிகம் ஆகும்.





மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் 23.7.90 அன்று மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், சென்னை - திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த நான்கு பெண்களுக்குத் தலா ரூ.5 ஆயிரம் வழங்கினார்.

## படமும் செய்தியும்

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள்- 18.7.90 அன்று சென்னை - இராதா கிருட்டிணன் நகர்ப் பகுதியில் தீவிர துப்புரவுப் பணிகளின் இயக்கத்தைத் துவக்கி வைத்தார்; பொதுமக்கள் குறைகளைக் கேட்டறிந்தார். தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.பி. சற்குணம் அப்போது உடன் இருந்தார்.



**TNPSC**

**விளம்பர எண்:23/90**

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் 200 கால்நடை உதவி அறுவை மருத்துவர் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 20.8.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2000-60-2300-75-3200-100-3500.

| | | |
|---|---|---|
| (ஆதி திராவிடர் வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | : | 33 (8 காலியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது) |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | : | 55 (முன் தேர்வில் நிரப்பப்படாத 19 காலியிடங்கள் உட்பட) (10 காலியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ) | : | 54 (17 காலியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது). |
| பகிரங்கப் போட்டி | : | 58 (17 காலியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது) |

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அக்காலியிடங்கள் ஆண் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30 வயதிற்குக் குறைவாக

**தகுதி:** (i) B.V.Sc. degree; and

(ii) Must be a registered practitioner within the meaning of the Tamil Nadu Registration of Veterinary Practitioners Act., 1957 (Tamil Nadu Act. XXI of 1957)

**NOTE:** Preference will be given to destitute widows who posses the prescribed qualification and who secure atleast the minimum marks for selection.

**EXPLANATION:** 'Destitute widow' means a widow who has neither any means by herself to live nor any dependant to protect her from starvation.

ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., மற்றும் பி.வ. ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறை"களில் தரப்பட்டுள்ளன.

(பிற்படுத்தபட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்.).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.7.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.7.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) "கேட்புக் காசோலை" (Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கிலமொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப் படமாட்டா.

டிஐபிஆர்/1796/எம்எஸ்/90/எம்சிஎஸ்



இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:



# பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 88-வது பிறந்த நாள் விழா, 15.7.90 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் சிறப்புற நடைபெற்றது.

தமிழகக் கல்வித்துறைச் செயலர் திரு வி. சங்கர சுப்பையன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு தமிழ்க்குடிமகன் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ஜாலியன் வாலாபாக் படுகொலை, வைக்கம் போராட்டம் ஆகிய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தார்.

அவர் மேலும் பேசுகையில், "பள்ளித் தேர்வுகளில் முதலிடம் பெற்றுள்ள மாணவ, மாணவியருக்கு மொத்தம் சுமார் இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுகளை இந்த விழாவில் அரசு வழங்குகிறது.

"இலவசக் கல்வித் திட்டத்தைக் காமராசர் கொண்டு வந்தார். எனினும், கல்வியறிவு பெறாதவர்கள் எண்ணிக்கை அதிகம் உள்ளது. எனவே, இந்த அரசு கட்டாயக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும்." என்றார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு க. சுந்தரம் அவர்கள் பேசுகையில், "ஏழை எளியவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்று பெருந்தலைவர் காமராசர் இலவசக் கல்வியைக் கொண்டு வந்தார். அவரது எண்ணங்களை நிறைவேற்றுவதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்" என்றார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் பேசுகையில், "பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளின்போது, அரசுப் பொதுத் தேர்வுகளில் முதன்மை பெற்ற மாணவ, மாணவியர்க்குப் பரிசுகள் வழங்குவது பொருத்தமாகும். இன்று இலவசச் சீருடை, இலவசப் பாடப்புத்தகம், இலவச பஸ்பாஸ் எல்லாம் வழங்கப்படுவதற்குக் காரணம், எல்லாரும் படித்து முன்னேற வேண்டும், அறியாமை அகல வேண்டும், மற்ற நாடுகளோடு போட்டி போடத் தக்க அளவுக்கு உயர வேண்டும் என்பதற்காகத் தான்" என்றார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாநில முதன்மை பெற்ற 10 மற்றும் பிளஸ் 2 வகுப்பு மாணவ, மாணவியர்க்கும், ஆங்கிலோ-இந்தியன், மெட்ரிகுலேசன், கீழ்த்திசைப் பள்ளிகள் பொதுத் தேர்வுகளில் முதன்மை பெற்ற மாணவ, மாணவியர்க்கும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட-பழங்குடி மாணவ-மாணவியர்க்கும் ரொக்கப்பரிசுகள் வழங்கிப் பாராட்டிப் பேசினார். அப்போது அவர் பேசுகையில் —

"தமிழக முதல்வர் கலைஞர் இன்றியமையாத கடமை காரணமாக, டெல்லி சென்றதால் இங்கு பரிசு வழங்க வர இயலவில்லை. இருந்தாலும், அவரது வாழ்த்து இங்கு பரிசு பெறும் அத்தனை மாணவ-மாணவியருக்கும் உண்டு.

"காமராசர் பிறந்தநாள் விழாவின்போது மாணவ-மாணவியருக்குப் பரிசு வழங்க வேண்டும் என்று அறிவித்தவரே கலைஞர்தான்.

"அரசியல் கருத்து வேறுபாடு இருந்தாலும் பொது நன்மை கருதி, எந்த ஏழை மக்கள் கல்வி பெற வேண்டும் என்று காமராசர் விரும்பினாரோ, அந்த உணர்வோடு தமிழக அரசு இந்தப் பரிசளிப்பு விழாவை நடத்தி வருகிறது.

# சென்னை மாநகரில் நேரு வேலை வாய்ப்புத் திட்டம்

"நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகரில் இந்த ஆண்டு 10 ஆயிரம் பேர் பயனடைவார்கள். இந்திய அரசும் மாநில அரசும் வறுமையைப் போக்க கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் இத்திட்டத்தை ஏற்படுத்தியுள்ளன. சென்னை மாநகரில், இதைச் சென்னை மாநகராட்சி நிறைவேற்றுகின்றது. முதல் கட்டமாக 3,000 பேர்களுக்கு 90 தொழில்களில் பயிற்சியளிக்க 40 முகாம்களைத் தன்னியக்கத் தொண்டு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் செயற்படுத்தும். சென்னையில் இந்திய மாதர் சங்கம், 25 மகளிர்க்கு அண்ணா நகரில் உள்ள தையல்கலைப் பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்கும். இத்திட்டம் மானியத்துடன் கூடிய கடன் மற்றும் பயிற்சி அளித்தல் ஆகிய இரு பகுதியை உடையது; பயிற்சிக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் ரூ.150 உதவித் தொகை வழங்கப்படும். பின் 25 சதவீதம் மானியத்துடன் கூடிய கடன்கள் வங்கிகள் மூலம் பெற்றுத் தரப்படும். அதிகபட்சம், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ரூ.5,000 என்றும், பிற வகுப்பினருக்கு ரூ.4,000 என்றும் கடன்கள் வழங்கப்படுகின்றன."

இந்திய மாதர் சங்கம், சென்னை மாநகராட்சி, இந்தியன் வங்கி ஆகியவற்றின் சார்பில் சென்னை அண்ணா நகரில் மகளிர் தையற்பயிற்சி நிலையத் தொடக்க விழாவில் (11.7.90) மாநகராட்சி ஆணையர் திரு. மு. அபுல்ஹாசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

"தமிழ்நாட்டில் பரவலாகக் கல்வி வளர்ந்து வருகிறது. கல்வி பயில்வோர் எண்ணிக்கை ஆண்டுக்கு ஏறத்தாழ 10 சதவீதம் உயர்ந்து வருகிறது. 10-ஆம் வகுப்புத் தேர்வில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 50 ஆயிரம் பேரும், மேல்நிலைத் தேர்வில் 30 ஆயிரம் பேரும் அதிகம் எழுதி உள்ளனர். மகளிரைப் படிக்க வைக்கும் ஆர்வம் பெற்றோரிடம் மெல்ல வளர்ந்து வருகிறது.

"கல்வி பரவலாக உயர்ந்த போதிலும் உயர்தரக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி ஆகியவற்றைச் சிறப்பாக வளர்க்க மாநில அரசாலும், மத்திய அரசாலும் மட்டும் முடியாது. அவற்றைச் சிறப்பாக வளர்க்கும் பொறுப்பில் மக்களை ஏற்கச் செய்ய மத்திய அரசு ஆலோசனை வழங்கி வருகிறது.

"தமிழகத்தைப் பொறுத்தவரை ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. மொத்தச் செலவில் 3-ல் ஒரு பங்கு அதாவது ரூ.400 கோடி தொடக்கக் கல்விக்குச் செலவிடப்படுகிறது. அந்தக் கல்வியின் தரத்தையும் உயர்த்தத் திட்டமிட்டே தொடக்க நிலையிலும் மாணவ-மாணவியருக்குத் தேர்வு நடத்த முடிவு செய்துள்ளோம். அதேபோல உயர்நிலைக் கல்வியில் 20 சதவிகிதம் மதிப்பெண் பெற்றால் தேர்ச்சி என்பதையும் உயர்த்த அரசு திட்டமிட்டு இருக்கிறது.

"ஆசிரியர்களுக்கும் தகுந்த பயிற்சி அளிக்கும் முயற்சியிலும் அரசு ஈடுபடும். இந்த முயற்சிகளுக்கு ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டும். பல நேரங்களில் ஆசிரியர்கள் தங்கள் குறைகளைப் பற்றித்தான் எடுத்துக் கூறுகிறார்கள். மாணவர்களுக்குப் பாடம் நடத்தும் முறை பற்றிக் குறிப்பிடுவதில்லை.

"கல்வி என்றால் ஆசிரியர் சம்பளம் உயர வேண்டும் என்று நினைக்கக் கூடாது. நான் 10-ஆம் வகுப்பு படிக்கும்போது 1939-ஆம் ஆண்டு மாதம் ரூபாய் 5.50 சம்பளம் கட்டிப் படித்தேன். இப்போது 50 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கும் போது, முன்பு ரூ.5 என்பது பவுன் மதிப்பில் பார்த்தால் ரூ.160, விலைவாசி கணக்கில் பார்த்தால் ரூ.150 சம்பளம் செலுத்தும்படி படிக்க வேண்டும். அப்படியென்றால் ஏறத்தாழ 100-க்கு 30 பேர் தான் படிப்பார்கள்.

"இப்போது படிக்கும் ஒரு கோடியே 20 இலட்சம் பேரில் 50 இலட்சம் பேர் தொடக்கப் பள்ளியில் படிப்பவர்கள் மாதச் சம்பளம் கட்டிப் படிப்பது என்றால் அது 30 சதவிகிதம் குறைந்துவிடும்.

"பெற்றோர்-ஆசிரியர் சங்கம் ஏற்படுத்தி அந்தந்தப் பகுதியில் கல்வியை உயர்த்த ஆசிரியர் சமூகத்தைக் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியருக்கும் மாணவருக்கும் நெருக்கமான உறவு இருந்தால் தான் நல்லது. அந்த உறவு இல்லாத பள்ளிகளில் மாணவர்களிடம் முன்னேற்றம் இருக்காது. இந்த வித்து முளைத்து வளர்ந்து செழித்து அவைகளில் இருந்து வருகிற மணிகள்தான் நாட்டின் பல்வேறு பஞ்சத்தைத் தீர்த்து வைக்கும். எனவே, ஆசிரியர், பெற்றோர், மாணவர் என்ற 3 பிரிவினரும் இணைப்பாகச் செயல்பட வேண்டும் என்று தொடர்புடையவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"இந்த ஆண்டு கல்விக்கு ரூ.1,042 கோடி செலவிடப்படுகிறது. அதைவிட அதிகரிக்கலாம். கடந்த காலத்தில் ரூ.900 கோடி செலவிடப்பட்டது. ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்ட உதவித் தொகையாக ரூ.100 கோடி செலவிடப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர் துறை, சமூக நலத்துறை, சத்துணவுத் துறை எனப் பல்வேறு பிரிவிலும் கல்விக்காகச் செலவிடப்படுகிறது.

"ஏழ்மை கல்விக்குத் தடையாக இருந்து விடக் கூடாது. படிப்பதை நிறுத்தக் காரணமாக வறுமை இருந்துவிடக்கூடாது. பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள், தாழ்த்தப்பட்ட நிலையில், முடக்கப்பட்ட நிலையில் இருப்பவர்கள் கல்வி பெற்றால்தான் சமத்துவம் வளரும். மனிதத் தன்மை வளரும். அதற்கு அரசு பாடுபடுகிறது.

"பேரறிஞர் அண்ணா அந்தச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டார். அத்தகைய நல்ல கடமையை அரசு ஆற்றும்போது தகுந்த ஆதரவை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்.

"பாடப் புத்தகங்கள் 8-ஆம் வகுப்பு வரை ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. அவற்றில் அச்சில் சிறு பிழைகள் இருந்தாலும் ஏடுகளில் பெரிது படுத்தி வருகிறார்கள். நாங்கள் படித்தபோது ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு விதமாகப் புத்தகங்கள் இருந்தன. இப்போது தமிழ்நாடு முழுவதும் 8-ஆம் வகுப்பு வரை அரசு, மாநகராட்சி, நகராட்சி, ஒன்றியப் பள்ளிகளில் ஒரே மாதிரியான புத்தகங்கள் வெளியிடப்படுவதால் குறையைப் பெரிதாக மதிக்கிறார்கள். அந்தக் குறைகளையும் களைய அரசு முயற்சி எடுத்து வருகிறது.

"10-ஆம் வகுப்புப் பாடத்திட்டம் கடுமையாக இருப்பதாக ஒரு பத்திரிகையில் எழுதப்பட்டு உள்ளது. இதுகுறித்துக் கேட்டபோது, சற்றுக்கடுமையாக இருந்தாலும் ஆசிரியர்கள் ஆர்வத்தோடு கற்றுக் கொடுத்தால் அந்த மாணவர்கள் கல்லூரிப் படிப்பில், பொறியியல், மருத்துவத் துறைக்கான போட்டித் தேர்வு எழுதுவதற்குச் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக விளங்குவார்கள் என்று கூறுகிறார்கள். ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது. உரிய திருத்தங்கள் தேவையான ஆய்வு மூலம் நடத்தப்படும்.

"சிறந்த முறையில் பயிற்சி அளித்து 100-க்கு 100 தேர்ச்சி பெற்ற பள்ளிகளுக்குச் சான்றிதழ் விரைவில் அனுப்பி வைக்கப்படும். 100-க்கு 60 சதவிகிதம் தேறிய பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு இப்போதே பாராட்டுந்தெரிவித்துக் கொள்கிறேன். 100-க்கு 30 சதவிகிதம் தேர்ச்சி உள்ள பள்ளிகளின் ஆசிரியர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

"ஆங்கிலம் உள்பட பல பாடங்களில் 100-க்கு 100 மதிப்பெண் வாங்கி இருக்கிறார்கள். ஆனால், தமிழில் மட்டும் யாரும் 100-க்கு 100 வாங்கவில்லை. இதற்கு மாணவர்கள் காரணம் இல்லை. ஆசிரியர்கள்தான் அந்த அளவுக்குப் பயிற்சி தரவில்லை." என்று குறிப்பிட்டார்.

தமிழ், ஆங்கிலம், சிறப்புத் தமிழ்ப் பாடங்களில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முதல் பரிசு ரூ.5 ஆயிரமும், 2-வது பரிசு ரூ.3 ஆயிரமும், 3-வது பரிசு ரூ.2 ஆயிரமும் வழங்கப்பட்டது. மற்ற பாடங்களுக்கு முதல் பரிசு ரூ.3 ஆயிரமும், 2-வது பரிசு ரூ.2 ஆயிரமும், 3-வது பரிசு ரூ. ஆயிரம் வீதத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன. சென்னை மாணவி பி.காயத்திரி அறிவியலில் முதலிடமும், கணிதத்தில் 2-வது இடமும், ஆங்கிலத்தில் 3-வது இடமும் பெற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தார். அவருக்கு ரூ. 7 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு வா. ஆ. சிவஞானம் அவர்கள் நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

★ சென்னை மற்றும் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்ட 50 ஆயிரம் அடுக்குமாடி வீடுகள் குடியிருப்போர்க்குச் சொந்தமாகும் என்று அரசு அறிவித்துள்ளது. (26.6.90)

★ சுதந்திரப் போராட்டத் தியாகியும் எழுத்தாளருமான திரு. வ.ரா.வின் துணைவியார் திருமதி புவனேஸ்வரி அம்மாளின் வேண்டுகோளை ஏற்று ஒவ்வொரு மாதமும் அவருக்கு ரூ.1,000/- உதவித்தொகை வழங்கிட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டு, முதல் தவணையாக 1,000/- ரூபாயை 30.6.90 அன்று திரு. வ. ரா. வின் துணைவியாரிடம் நேரில் வழங்கினார்.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் ஆகிய இரு திட்டங்களின்கீழ் ஏழைப் பெண்களுக்கு ரூ.29/- இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது. (27.6.90)

★ ஊராட்சி ஒன்றிய வளர்ச்சிப் பணிகளுக்கு ரூ.20/- கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கான உத்தரவு அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் அறிவித்தார்.

★ குடிசைவாழ் மக்களின் நல்வாழ்வுக்காக அவர்கள் வீட்டுமனையையும் சொந்தமாக்குவதோடு அவர்கள் வீடு கட்டிக் கொள்ளவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது என்றும், 20 ஆயிரம் குடும்பங்களுக்கு பயன்பெறும் இத்திட்டத்திற்காக ரூ.20/- கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது. (27.6.90)

★ திண்டுக்கல்லில் ரூ.2.5 கோடி செலவில் சுற்றுப்பாலம் அமைக்கப்படும் என்றும், ரூ.68/- கோடி செலவில் சென்னையிலிருந்து மதுரைக்கு 4 வழிச்சாலை அமைக்கப்படும் என்றும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அறிவித்தார்.

★ உணவு விடுதிகளில் ஏற்கனவே 15/- இலட்சம் ரூபாய்க்குமேல் வியாபாரம் நடந்தால் 5 சதவிகித வரி விதிக்கப்படும் என்று இருந்த நிலையை தற்போது மாற்றி, ரூ.18.25 இலட்சம் என வரம்பை நிர்ணயித்தது அரசு.

# இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

## 1989-90-ம் ஆண்டில் வளர்ச்சிப் பணிகளில் சாதனை

| | எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு ரூ. |
|---|---|---|
| 1. தொகுப்பு வீடுகள் | 45 | 6,39,000 |
| 2. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் | 102 | 25,34,500 |
| 3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் | 460 | 9,13,875 |
| 4. பெருவிவசாய உற்பத்தித்திட்டம் | 45 | 40,031 |
| 5. குடும்ப நலம் | 404 | |
| 6. சிறு சேமிப்பு | | 1,11,82,370 |
| 7. சாண எரிவாயுக் கலன் அமைக்கப்பட்டது | 45 | |
| 8. சூளா அடுப்புகள் அமைக்கப்பட்டது | 250 | |
| 9. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டம் | 27 | 1,35,000 |
| 10. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டம் | 350 | 70,000 |
| 11. சிறுபாசனத்திட்டம் | 2 | 48,832 |

மேலும் எமது நிர்வாகத்திலுள்ள காரவிளை தச்சுக்கூடத்தில் வீட்டிற்குத்தேவையானமரக்கட்டில், சோபாசெட் போன்ற மரச்சாமான்களும், அலுவலகங்களுக்கும், பள்ளிகளுக்கும் தேவையான மேசை, நாற்காலி, ரேக் போன்ற மரச்சாமான்களும் தேக்கு மரத்திலும் மற்றும் காட்டு மரங்களிலும் நேர்த்தி யாகவும், உறுதியாகவும்கிராமக்கைவினைஞர்களைக் கொண்டு செய்து குறித்த நேரத்தில் விநியோகிக்கப் படும்.

வே. செல்வசுதந்திரம்
பெருந்தலைவர்

சு. ராமையா
ஆணையாளர்

எஸ்.கி. சுகுமாரன்
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்.



### கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புத் தரும்

# காதி கிராப்ட்

'காதி கிராப்ட்' என்கிறபோது கதரும், கைவினைப் பொருள்களுமே நம் நினைவுக்கு வரும்.

அதுமட்டுமன்று, 'தரமான பொருள்களைத் தருகின்ற இடம்' என்பதும் நினைவுக்கு வரும்.

சென்னை பாரிமுனைக்கு அருகிலுள்ள குறளகத்தில் காட்சியளிப்பதுதான் 'காதிகிராப்ட்' என்னும் கதர் கிராமக் கைத்தொழில் பேரங்காடி.

தமிழ்நாடு கதர்கிராமக் கைத்தொழில் வாரியத்தின் ஓர் அங்கமாக இயங்கி வரும் இது, ஆசியாவிலேயே மிகப்பெரிய கதர் விற்பனைப் பேரங்காடி என்பது மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சிறப்பும் உடையது.

இங்கே இல்லாத பொருள்களே இல்லை எனலாம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி வாங்கும் பொருள்கள் இங்கே ஏராளம் உண்டு.

பெரும் பரப்பளவில் காட்சியளிக்கும் காதிகிராப்ட்டில், கதர், கைவினைப் பொருள்கள், சோப்பு, தேன், பாய், சந்தனப் பொருள்கள், பொம்மை, மட்பாண்டப் பொருள்கள், அறைகளுக்கு எழிலூட்டும் மேசை, நாற்காலி, பீரோ, கட்டில் முதலான பொருள்கள் இப்படிப் பல்வேறு பிரிவுகள் உள்ளன.

அதுமட்டுமா? நல்ல தரமான பட்டுச் சேலைகள் விற்பனைக் கூடமும் இங்கே இருக்கின்றது. காஞ்சிபுரம், கும்பகோணம் ஆகிய ஊர்களில் நவீன வடிவமைப்புகளில் தயாரிக்கப்பட்ட வண்ணப் பட்டுப் புடவைகளும் இங்கே விற்பனைக்கு உண்டு.

ஆண்டுதோறும் நவராத்திரிக் கொலுவை முன்னிட்டு, இங்கு நடத்தப்படும் 'பொம்மைக் கொலுக் கண்காட்சி' பிரசித்தி பெற்றதாகும்.

கண்ணையும் கருத்தையும் கவரும் இந்த வண்ணப் பொம்மைகளைக் காணக் கண்கோடி வேண்டும்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து தருவிக்கப்படும் இந்த மண், காகித, மரப் பொம்மைகளுக்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

இந்தக் கைவினைப் பொருள்கள் தயாரிப்பு மூலம், கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்புப் பெற்று வருகிறார்கள். இதற்கு அங்கு உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுக்குக் கை கொடுக்கின்றன.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்தான் அதிகமான மட்பாண்ட உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதேபோல எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன.

கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தினால் தயாரிக்கப்படும் பொருள்கள் தரமானதாக உள்ளதால், அவற்றை மேலை நாட்டினரும் விரும்பி வாங்குகின்றனர்.

குறிப்பாக பனைத் தும்பு மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

பனை ஓலைப் பொருட்கள் மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.11 இலட்சத்துக்கு மேல் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, ஆண்டுதோறும் ரூ.113.68 இலட்சத்துக்குக் குறையாமல் பனந்தும்புப் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

கதர்கிராமக் கைவினைப் பொருள்கள் விற்பனை குறித்து, காதிகிராப்ட் பொது மேலாளர் அவர்களைச் சந்தித்தபோது அவர் கூறினார்:

"சென்னை அண்ணா பன்னாட்டு முனையத்தில் உள்ள காதிகிராப்டின் மூலம், சிங்கப்பூர், மலேசியா போன்ற அயல்நாடுகளுக்குச் செல்லும் பயணிகள், கலையழகு மிக்க பொம்மைகளை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.





"மேலை நாட்டவர்கள் இந்த அங்காடிக்கு வருகை தந்து, மண்-காகிதப் பொம்மைகளின் கலை யழகை ரசித்திருக்கிறார்கள். கை வேலைப்பாடுடைய தஞ்சாவூர்த் தட்டுகள், தக்கையாலான கண் கவர் பொருட்கள் முதலானவை, அவர் களைக் கவர்கின்றன. கதர் மிக நேர்த்தியாக உள்ளது என்றும் அவர்கள் பாராட்டியுள்ளனர். அது மட்டுமல்ல, கதர்த் துணியை வாங்கி யும் செல்கின்றனர்.

"மண்பாண்டத் தொழிலை நம்பியுள்ள ஏழை எளியவர்களுக்கு வாழ்வளிக்கும் முகத்தான், ஒவ் வொரு ஆண்டும் நவராத்திரியின் போது, குறைந்தது 40 நாட்கள் பொம்மைக் கொலுக் கண்காட்சி நடத்தி, தமிழ்நாடு முழுவதும் களி மண், காகிதப் பொம்மைகளைக் கொள்முதல் செய்து, நகர மக்களுக்கு வழங்குகிறோம்.

"ஓராண்டின் வருமானத்தில், 75 விழுக்காடு மதிப்புள்ள வரு மானத்தை, இந்தக் கொலு கண்காட்சி மூலமே பொம்மைத் தொழி லாளர்கள் பெறுகிறார்கள் என் பதையும் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும். 1988-ஆம் ஆண்டு கொலு பொம்மைக் கண்காட்சியில் பொம்மைகள் ரூ.10 இலட்சத்திற் கும், 1989-ஆம் ஆண்டு ரூ.12.76 இலட்சத்திற்கும் விற்பனை செய்யப் பட்டுள்ளன.

"சாதாரணக் காலங்களில் கத ருக்கு மட்டும் 15% சிறப்புத் தள்ளு படி இங்கே தரப்படுகிறது. தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின் போது, அகில இந்தியக் கதராணைக்குழு மூலம் 25%, தமிழ்நாடு அரசு மூலம் 10%, கதர் நிறுவனங்கள் மூலம் 5% ஆக 40% கதர் பருத்தி ரகங்களுக்குச் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படு கிறது. பாலியஸ்டருக்கு 25%-ம், பட்டுக்கு 20%-ம் சிறப்புத் தள்ளுபடி தரப்படுகிறது.

ஆரம்ப கட்டத்தில், சொற்ப விற்பனை மட்டுமே செய்யப்பட்டு வந்த பேரங்காடியில் தற்போது, இவ்விற்பனை பத்து மடங்கு உயர்ந்துள்ளது.

1980-81-இல் கதர் ரூ.40.01 இலட்சத்திற்கும், கிராமப் பொருட்கள் ரூ.61.43 இலட்சத்திற்கும், கை வினைப் பொருட்கள் ரூ.12.81 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.115.25 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன.

1989-90-இல் கதர் ரூ.556.61 இலட்சத்திற்கும், கிராமப் பொருட் கள் ரூ.384.27 இலட்சத்திற்கும், கைவினைப் பொருட்கள் ரூ.62.40 இலட்சத்திற்கும், ஆக மொத்தம் ரூ.1003.28 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்தப் புள்ளி விவரங்களைக் கவனிக்கும்பொழுது, கடந்த ஒன்பது ஆண்டுகளில், இவ்வங்காடியின் விற்பனை ஆறு மடங்காக உயர்ந் துள்ளது என்பது தெளிவாகும்.

பம்பாய் கதர் கிராமத் தொழில் குழுவின் பொருளாதார உதவித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதரங் காடியை 15 இலட்சம் ரூபாய் பொதுமக்களின் வசதிக்காகவும், அங்காடி நவீன மெருகு பெற்று பொலிவு பெறுவதற்காகவும் செலவு செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சென்னை மாநகரத்திலேயே அழகு மிளிரும் அங்காடியாகத் திகழ்ந்து வருவதுடன், அயல் நாட்டினரையும் கவரக் கூடிய வகையில் இந்த அங்காடி இருந்து வருகிறது. பொது மக்கள், தமது நண்பர்கள் திருமணம் மற்றும் இதர விழாக்களுக்குத் தேவைப்படும் பரிசுப் பொருட்களையும் வாங்கிச் செல் கிறார்கள். குடும்பத்திற்குத் தேவை யான சோப்பு, எண்ணெய், அப்பளம், ஊறுகாய், பழரசம், ரசப்பொடி, சாம்பார்ப் பொடி, இட்லிப்பொடி முதலியன இங்கே தரமாகவும் விலை குறைவாகவும் இருப்பதால் அங்காடி யில் கூட்டம் இருந்து கொண்டே இருக்கிறது.

'காதிகிராப்ட்' காலணிகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவைகளுள் ஒன்றாகும். அசல் இலவம் பஞ்சி னால் ஆன மெத்தை மற்றும் தலை யணை முதலியவைகளும் பொது மக் களால் பெரிதும் விரும்பி வாங்கப் படுகின்றன.

ஒரு மகிழ்ச்சியான செய்தி—

1990-ஆம் ஆண்டும் கதரங்காடி யில், கொலு பொம்மைக் கண் காட்சி, 20.8.90-லிருந்து மிகச் சிறப்பாகத் தொடங்க உள்ளது!

—பி.வி.கிரி

குறளகம்



# கதர் கிராமத் தொழிலில் மகளிருக்கு வேலைவாய்ப்பு

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உள்ளூரில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி சுய வேலை வாய்ப்பளிக்கிறது. கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. 1960 ஏப்ரல் திங்களிலிருந்து இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது.

கதர் கிராமத் தொழில் பணிகள், வாரியத்தின் துறை அலகுகள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கிராமங்களில் தனிநபர் அலகுகளை ஊக்குவிப்பது ஆகியவை மூலம் நிறைவேற்றப்படுகின்றன. பல்வேறு வேலை வாய்ப்பினை அளிக்கும் வகையில் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம், "தாட்கோ" உருவாக்கும் திட்டங்கள் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம், தொகுப்பு வளர்ச்சித் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றையும் கதர் வாரியம் ஒருங்கிணைந்து செயல்படுத்துகிறது. இத்திட்டங்கள் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பை உருவாக்கும்.

## மகளிர்க்கு வேலை வாய்ப்பு

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் செயல்படுத்துப்படும் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் மூலம் மொத்தம் 8.60 இலட்சம் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதில் 3.31 நபர்கள் மகளிர் கைவினைஞர்களாவர். இவர்களில் 55,123 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினர் ஆவர். இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்மணிகள் நாளொன்றுக்கு ஏறத்தாழ ரூ: 10 முதல் ரூ. 20 வரை ஊதியம் பெறுகின்றனர்.

661 கிராமிய நூற்பு உற்பத்தி நிலையங்கள் மூலம் மொத்தம் 34,066 நூற்பாளர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இதில் 24,013 மகளிர் பயனடைந்துள்ளனர். கதர், பட்டு மற்றும் பாலியஸ்டர் நெசவுத் தொழில் மூலம் 8,453 மகளிர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். பனைத்தொழில் மூலம் வேலை வாய்ப்பு பெறும் 6.01 இலட்சம் நபர்களில், 2.66 இலட்சம் நபர்கள் மகளிர் ஆவர். உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில் மூலம் பயனடையும் 1,017 கைவினைஞர்களில் மகளிர் மட்டும் 254 பேர் ஆவர். பருப்பு மற்றும் தானியங்கள் பக்குவப்படுத்துதல் தொழிலில் ஈடுபட்டுள்ள 6,368 பேரில் மகளிர் பங்கு மட்டும் 2,039 ஆகும். மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள மொத்தம் 63,857 கைவினைஞர்களில் 32,125 பேர் பெண்கள். ஏறத்தாழ 50 சதம் பெண்கள் பயனடைகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தோல் பதனிடுதல் மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல் தொழிலில் மொத்தம் 26,220 மக்கள் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களில் 1,685 மகளிர் பயன் பெறுகின்றார்கள். வெல்லம் மற்றும் கந்தசாரி தொழில் மூலம் பயனடையும் மொத்த கைவினைஞர்கள் 3,881 நபர்கள். இவர்களில் 1,181 மகளிர் பயனடை கிறார்கள். தேனீ வளர்ப்புத் தொழிலில் 572 மகளிருக்குத் தேவையான மூலதனம் மற்றும் உதவிகள் அளித்து பயன் பெறச் செய்யப்பட்டுள்ளது.

கைமுறைக் காகிதம் தயாரித்தலில் மொத்தம் 1,004 நபர்களில், 34 மகளிர் பயன் பெற்றுள்ளார்கள். நார் மற்றும் பாய்த் தொழிலில் ஈடுபட்டுள்ள 14,673 கைவினைஞர்களில் 1,315 மகளிர் பயனடைந்து வருகின்றார்கள். பழப்பக்குவப் படுத்துதல் தொழிலில் ஈடுபட்டுள்ள 365 நபர்களில் 18 மகளிர் பயனடைந்துள்ளார்கள்.

சுண்ணாம்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள 11,002 நபர்களில் 685 மகளிர் பயனடைந்துள்ளார்கள். பிரம்பு மற்றும் மூங்கில் தொழிலில் 8,440 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். இவர்களில் 465 மகளிர் பயனடைந்துள்ளார்கள்.



# நூல் நயம்

## அண்ணாவின் மனித நேயம்

**தொகுப்பு: மூவேந்தர் முத்து**
**வெளியீடு:**

பூவழகி பதிப்பகம்,
29/2 சீனிவாசப் பெருமாள்
சன்னதி தெரு,
ராயப்பேட்டை, சென்னை-600 014.

**விலை:ரூ.7** **பக்கம்:78**

பேரறிஞர் அண்ணா அவர்களிடம் குடிகொண்டிருந்த மனித நேய உணர்வுகளைக் குறித்து கவிஞர் கருணானந்தம் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் ஆற்றியுள்ள உரைகள், டாக்டர் சி.என்.ஏ. பரிமளம், **மற்றும்** மா.செங்குட்டுவன் ஆகியோர் எழுதிய கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பே இந்நூல்.

அண்ணாவிடம் மண்டிக் கிடந்த மனித நேய உணர்வுகள் சான்றுகள் காட்டி நிறுவப்பட்டுள்ளன. பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக அண்ணாவின் மனிதநேயப் பாங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## ஒளியும் நிழலும்

**ஆசிரியர்: கவிஞர் மாணிக்கம் (எழிற்பித்தன்)**
**வெளியீடு:**

நேயமை
9, சின்னப்ப தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

விலை:ரூ.9 பக்கம்:93

மரபுக் கவிதைகளும் புதுக் கவிதைகளும் கொண்ட கதம்ப மாலையாகத் திகழும் இந்தக் கவிதைத் தொகுப்பில் உள்ளத்தைத் தொடும் கவிதைகள் பற்பல ஒளிவீசுகின்றன. கற்பனை வளமும் கருத்துச் செறிவும் கவிதைகளில் ததும்பி வழிகின்றன.

கண்ணீர், புன்னகை, நம்பிக்கை ஆகியவற்றிற்கு நூலாசிரியர் தந்திருக்கும் விளக்கம் பாராட்டுதற்குரியது. அழியாத அடிச்சுவடுகள் என்னும் தலைப்பின் மூலம் பாரதி, பாரதிதாசன் போன்ற பெருங்கவிஞர்களைக் குறித்து அழியாத கவிதைகளைத் தீட்டியுள்ளார் நூலாசிரியர். இனிய, எளிய, ஆழமான நடை நம்மைக் கவர்கிறது.

—எஸ்.எஸ். சுந்தரம்

## கவிதைச் செல்வம்

**ஆசிரியர்: டாக்டர் சு. இன்னாசி**
**வெளியீடு:**

சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600 005.

விலை:ரூ.25 பக்கம்:136

கிறிஸ்துவ சமயம் தொடர்பான இலக்கியங்கள் பலவற்றைக் குறித்த தகவல்களின் தொகுப்பே இந்நூல் மொத்தத்தில் 471 நூல்களைக் குறித்த விவரங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

அந்தாதி, அம்மானை, ஆற்றுப்படை போன்ற பலவகை இலக்கியங்களுக்குரிய இலக்கணத்தையும் நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

கிறிஸ்துவ சமயம் தொடர்பாக அம்மானை வகையில் மட்டுமே 83 நூல்கள் வெளிவந்துள்ளன என்பதை அறியும்போது வியப்பு அலை மோதுகிறது. பல்வேறு நூலகங்களுக்கெல்லாம் சென்று (வெளிநாடுகளுக்கும் சென்று) நூல்களைக் குறித்த செய்திகளைத் தேடித் திரட்டியுள்ளார் நூலாசிரியர். அவரது கடின உழைப்பு தெளிவாகத் தெரிகிறது.

—தமிழ்ப்பித்தன்

## ஒலிக்க மறுத்த தண்டோராக்கள்

**ஆசிரியர்: ஆ. தனஞ்செயன்**
**வெளியீடு:**

உதயம், கடற்கரைச் சாலை,
காவிரிப்பூம்பட்டினம்,
பூம்புகார் - 609 105.

விலை: ரூ.12 பக்கம்:84

புதுக் கவிதைகள் தொகுப்பு. பல்வேறு தலைப்புகளில் பின்னப்பட்டுள்ள இக்கவிதைகள், இன்றைய சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆசிரியரின் சிந்தனைப் பிழிவுகள் பல கவிதைகளில் பளிச்சிடுகின்றன.

## அரிய தலைவி அன்னை இந்திரா

**ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்**
**வெளியீடு:**

ஸ்ரீ நிலையம்,
2, முத்துக் கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

விலை: ரூ.10 பக்கம்:92

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளுடன், அவரது கருத்துரைகளும் இணைந்த தொகுப்பு நூல். அன்னாரைப் பற்றி அறிந்து கொள்ள இந்நூல் உதவும்.

## நீரிழிவுக்குத் தமிழ் மருந்துகள்

**ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராசன்**
**வெளியீடு:**

தமிழ்ச் செல்வி நிலையம்
43, சித்திரைக் குளம்
வடக்குத் தெரு, சென்னை-600 004.

விலை: ரூ.9 பக்கம்:96

மனிதனைத் துன்பத்துக்குள்ளாக்கும் நோய்களுள் நீரிழிவு நோயும் ஒன்று.

இந்நோயின் அறிகுறி, ஆரம்பத்தில் அதனைப் போக்கும் முறை, நோய் முற்றியவர்கள், மற்றும் பாரம்பரிய நீரிழிவு நோயுள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் முதலான ஆலோசனைகளைக் கூறும் அரிய மருத்துவ நூல்.

—பி.வி.ஜி.

## இஞ்சி-எலுமிச்சை-தேன் எளிய வைத்தியம்

**ஆசிரியர்: டாக்டர்.திருமலை நடராசன்**
**வெளியீடு:**

தமிழ்ச்செல்வி நிலையம்,
43, சித்திரைக்குளம் வடக்குத்தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை:ரூ.5 பக்கம்:72

நூலாசிரியர் - இஞ்சி. எலுமிச்சை, தேன் ஆகியவற்றை உணவில் எவ்வாறெல்லாம் சேர்த்துக் கொண்டால் எப்படிப்பட்ட நோயெல்லாம் விலகும் என்பதைப் பாமர மக்களும் படித்துப் பயன்பெறும் வண்ணம் இந்த நூலில் எடுத்து விளக்கியிருக்கிறார். அருமையான நூல் இது.

—'இந்திரன்'

## இந்து சமய நெறி

**ஆசிரியர்: தி. தயானந்தன் பிரான்சிஸ்**
**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பூங்கா நகர்,
சென்னை - 600 003.

விலை: ரூ.15/- பக்கம்:101

இந்து சமயம் என்ற பெயர் எப்படித் தோன்றியது என்ற விளக்கத்தோடு ஆரம்பமாகும் இந்நூல், இந்து சமயம் பற்றிய சிறப்பியல்புகளைக் கூறுகிறது. இது தொடர்பாக, மேனாட்டு அறிஞர்கள் பலரின் கருத்துக்களும் தேவையான இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எளிய, இனிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்நூல், இச்சமயத்தைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புவோர்க்கு சிறந்த கையேடாக விளங்குகிறது.

**நூல் நிலையம் இல்லாத ஊரும் ஓர் ஊரா? படியுங்கள்! படியுங்கள்! படித்துக் கொண்டே இருங்கள்.**

-லெனின்

---

**பயன் அடைந்தோர் பகர்வன:**

# வாழ்வில் ஒளி பிறந்தது!

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்:





மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத்திருமண நிதி உதவித்திட்டத்திற்கு, இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் ரூ.20 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் தொகை தலா ஐயாயிரம் வீதம், நானூறு ஏழைப் பெண்களுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்தில் 54 பெண்களுக்கு 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

திருமண உதவி பெற்ற இராமநாதபுரம் வடக்கு புதுத்தெருவைச் சேர்ந்த திருமதி வாசுகியிடம் இதுபற்றிக் கேட்டபோது அவர் கூறினார்: "என் தந்தை ஜோதிடம் பார்ப்பவர். அதில் வரும் வருமானத்தில் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். என் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் 7 பேர். இதில் பெண்கள் 4 பேர். என்னுடைய திருமணம் நிச்சயமானவுடன், திருமண உதவித் தொகையாக அரசு வழங்கிய ரூ. 5,000 மூலம், என் திருமணம் நல்லபடியாக நடந்தது."

கடலாடி ஊராட்சி ஒன்றியம், நரிப்பையூரைச் சேர்ந்த திருமதி தனம் அவர்களிடம் திருமண உதவிபற்றிக் கேட்டபோது, "என் தந்தை கூலி வேலை செய்பவர். என்னுடைய திருமணத்திற்காக, வீட்டில் உள்ள பொருள்களை அடகு வைத்துத் திருமணம் செய்யலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில், பக்கத்து வீட்டு ஆசிரியர் ஒருவர் சொன்னதன் பேரில், என் தந்தை சமூக நலத்துறையின் மூலமாக ரூ.5 ஆயிரம் பெற்று என் திருமணத்தை நடத்தினார். இதனால் என் வாழ்வில் ஒளிபிறந்தது.

தமிழக முதல்வர் அவர்கள் ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதற்காகக் கொண்டு வந்த இந்தத் திட்டத்தினால் என் போன்ற ஏழைகள் பயன் அடைந்துள்ளார்கள். தமிழக அரசுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்." என்றார்.

**வி.ஜி. பிரசாத்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்

# தோவாளை ஊராட்சி ஒன்றியம், கன்னியாகுமரி மாவட்டம்

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வொன்றியத்தில் எடுத்துச் செய்யப்பட்ட வேலைகள் விவரம்

| வ.எண். | வேலையின் விவரம் | எண்ணிக்கை | மொத்த மதிப்பீடு. ரூ. |
|---|---|---|---|
| 1. | தொகுதி வீடுகள் | 150 | 17,71,057 |
| 2. | ரோடு மற்றும் கட்டட வேலைகள் | 59 | 4,18950 |
| 3. | குளம் மேம்பாடு | 22 | 2,09,085 |
| 4. | இதர வேலைகள் | 38 | 16,91,207 |
| 5. | சமூகக் காடு வளர்ப்பு | - | 2,00,000 |
| | மொத்தம் | 269 | 42,90,299 |

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் இயங்கும் தச்சுப் பட்டறையில் உத்தரவின் பேரில் தேக்கு, ஈட்டி, மரங்களினால் அனைத்து வீட்டு உபயோகத்திற்கான சாதனங்கள் நன்முறையில் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| **என். சிதம்பரநாதபிள்ளை** | **கே. வேலப்பன்** | **ஸ்ரீ. நம்பிநாதபிள்ளை** |
| தலைவர் | ஆணையாளர் | கூடுதல் வட்டாரவளர்ச்சி அலுவலர் |
| தோவாளை ஊராட்சி ஒன்றியம் | தோவாளை ஊராட்சி ஒன்றியம் | தோவாளை ஊராட்சி ஒன்றியம் |



# மாவட்டச் செய்திகள்

## செங்கை-அண்ணா மாவட்டத்தில்

ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள் செயலாக்குவதிலும், வறட்சி நிவாரணப் பணிகள், ஊரகக் குடிநீர்த் திட்டப்பணிகள் செயல்படுத்துவதிலும் 1989-90-ஆம் ஆண்டில் மாநில அளவில் செங்கை-அண்ணா மாவட்டம் முதலிடம் வகிக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.373.88 இலட்சம் செலவழிக்கப்பட்டு, 13,782- ஏழை எளியவர்கள் பயனடைந்துள்ளார்கள். இவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட தொகை ரூ.286.22 இலட்சம்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் முடிக்கப்பட்ட வேலைகள் 10,828, செலவழிக்கப்பட்ட தொகை ரூ.1,886.50 இலட்சம். இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு 4,276- தொகுப்பு வீடுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஆதிதிராவிடர்களுக்கு 330- ஜீவன் தாரா கிணறுகளும் கட்டப்பட்டுள்ளன.

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1,748.60 எக்டேர் நிலப்பரப்பில் 33.85 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. செலவழிக்கப்பட்ட தொகை ரூ.84.75 இலட்சம்.

வேளாண்மைப் பெருநோக்குத் திட்டத்தின்கீழ் 1073- சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.54.98 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.26.88- இலட்சம் செலவழிக்கப்பட்டு 1,009- இளைஞர்களுக்குச் சுயமாகத் தொழில் தொடங்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 718-சாண எரிவாயுக் கலன்களும் 6,750- புகையில்லா அடுப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ.16.19- இலட்சம் செலவில் 4,661- கைப்பம்புகளும், 1,971- விசைப்பம்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், ரூ.35.74- இலட்சம் செலவழிக்கப்பட்டு 1,594- பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

—பா. நாராயணமூர்த்தி
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், செங்கை-அண்ணா மாவட்டம்.**

## திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், 1988-89-ஆம் ஆண்டில் பல்வேறு பொருட்கள் தயாரிக்கும் 10 டோக்கரா மையங்கள் துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. அவற்றில் கீழ்க்கொவளவேடு சாக்குக் கட்டிகள் உற்பத்தி செய்யும் டோக்கர சங்கமும் ஒன்றாகும்.

இச்சங்கத்தில் மொத்தம் 15 பெண் அங்கத்தினர்கள் உள்ளனர். அவர்களில் ஆறு ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களும் அடங்குவர். இச்சங்கத்தில் முதல் தரமான மூலப்பொருள்களைக் கொண்டு, நன்கு பயிற்சி பெற்ற மகளிர்களால் தயாரிக்கப்பெறும் சாக்குக்கட்டிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

வெள்ளை சாக்குக் கட்டிகள் ஒரு குரோஸ் அடங்கிய பெட்டி ஒன்று ரூ.3.25-க்கும், வண்ணச் சாக்குக் கட்டிகள் ஒரு குரோஸ் அடங்கிய பெட்டி ஒன்று ரூ.5.50-க்கும் விற்கப்படுகின்றன.

ஒருவர் ஒருநாளைக்குச்சுமார் நூறு முதல் நூற்றைம்பது குரோஸ் வரை சாக்குகள் மோல்டில் தயாரிக்கின்றார். மற்ற நால்வர் சாக்கு உலர்த்துதல், பேக்கிங் பெட்டிகள் தயாரித்தல், சாக்கு அடுக்குதல், பீஸ் பேப்பர் லேபிள் ஒட்டுதல், பேக்கிங் செய்தல் முதலிய பணிகளைக் கவனிக்கின்றனர். இம்மாதிரி மூன்று பிரிவுகளில் தலா ஐந்து நபர்கள் வீதம் பணி புரிகின்றனர். ஒரு பெண், நாள் ஒன்றுக்குச் சுமார் ரூ.10-லிருந்து ரூ.25 வரை ஊதியமாகப் பெறுகிறார். இம்மாதிரி 15 குடும்பங்கள் இச்சங்கத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றன.

செய்யாறுகோட்ட வளர்ச்சி அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவன திட்ட அலுவலர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் இந்தச் சங்கத்தைப் பார்வையிட்டு இதன் வளர்ச்சியை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

கல்வி நிலையங்கள் மற்றும் தனியார் தேவைகளுக்கு இச்சங்கச் சாக்குக்கட்டிகளை வாங்கிப் பயன்படுத்து மாறு திருவண்ணாமலை, சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனப் பெருந்தலைவர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்கள். வந்தவாசி நகரில் விற்பனை மையம் துவங்கப்பட்டு, விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சாக்குக்கட்டிகள் தேவைக்குத் தொடர்பு கொள்ளவேண்டியமுகவரி:

- அமைப்பாளர்,
  டோக்கரா சாக்குக் கட்டி
  உற்பத்திச் சங்கம்
  கீழ்க்கொவளவேடு அஞ்சல் 604 40
- வட்டார வளர்ச்சி அலுவலர்,
  வந்தவாசி - 604408.

# பெரியார் மாவட்டத்தில்...

## முப்பெரும் விழா

பெரியார் மாவட்டம் தாளவாடி மல்லையில், தொகுப்பு வீடுகள் திறப்பு விழா, அரசு சாதனை விளக்க முகாம் கண்காட்சி, ஆதி திராவிடர் மாணவியர் விடுதித் திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழா [illegible] அன்று நடைபெற்றது.

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு, நலிவுற்ற மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களின் அடிப் படையில் அரசு நலத்திட்ட உதவி களை வழங்கினார்.

தாளவாடி ஆரம்பச் சுகாதார நிலைய வளாகத்தில், அரசு சாதனை விளக்க முகாம் கண்காட்சி நடை பெற்றது. இக்கண்காட்சியில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை, வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை, சமூகநலத் துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, வேலைவாய்ப்புத் துறை, பட்டு வளர்ச்சித் துறை மற்றும் பால்வளத் துறை முதலான 12 அரசுத் துறைகள் இடம் பெற்றிருந்தன.

பாங்குற அமைக்கப்பட்டிருந்த இக்கண்காட்சியினை மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் திருமதி. சுப்பு லட்சுமி ஜெகதீசன் அவர்கள் திறந்து வைத்தார்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத் தின் கீழ் மாவல்லம் என்ற கிராமத் தில் ரூ.2.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 20 தொகுப்பு வீடு களையும் மெட்டல்வாடி கிராமத்தில் ரூ.3.54 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 32 தொகுப்பு வீடு களையும் ஆக ரூ.5.75 மதிப்பீட்டில் கட்டப்பட்ட 52 தொகுப்பு வீடு களை மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் 41 ஆதிதிராவிட மாணவியர்கள் தங்குவதற்கான வசதிகளைக் கொண்ட ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி யினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இம்முப்பெரும் விழாவிற்குப் பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். சத்தியமங்கலம் சட்டமன்ற உறுப் பினர் திரு. டி.கே. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலை வகித்தார்.

முப்பெரும் விழாவில் அரசுத் திட்டங்களைத் துவக்கி வைத்து மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் உரையாற்றுகையில், ''பல்வேறு அரசுத்துறைகள் அரசின் சாதனை விளக்க முகாம் கண்காட்சி யில் அரங்குகளைச் சிறப்புற அமைத்து உள்ளன. குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க, கடந்த ஆண்டில் 5 ஆயிரம் ஆழ்குழாய்க் கிணறுகள் போடப் பட்டன. 1500 மக்கள்தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக் கும் மேல்நிலை குடிநீர்த்தொட்டி அமைக்க முதல்வர் அவர்கள் உத் திரவிட்டுள்ளார்கள். இதேபோல் 1500-க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட கிராமங்களுக்கும் போக்கு வரத்து வசதிகள் செய்து கொடுக்கப் படும். 500 மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஓராசிரியர் பள்ளி அமைக் கப்படும். கடந்த ஆண்டு 500 ஆசிரியர்கள் நியமனம் செய்யப் பட்டனர். கல்விக்காக 900 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. தற் போது 1500 கோடி ரூபாய் கல்விக் காகச் செலவிட ஒதுக்கப்பட்டுள்ளது.'' என்றார்.

இவ்விழாவில் 50 பேர்களுக்கு ரூ.1.05 இலட்சம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளையும், 158 வீட்டுமனைப் பட்டாக்களையும் 150 ஏழைக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடைகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

விழாவிற்கு வந்திருந்தோரை தாளவாடி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சி. ராமண்ணா வரவேற்க, தாளவாடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. வ.தே. பழநிசாமி நன்றி கூறினார்.

**—கிருபால்தாஸ் ஜான்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்





# மதுரை மாவட்டத்தில்

## மதுரை சர்க்கரை ஆலை

மதுரை சர்க்கரை ஆலை, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா, பாண்டியராஜபுரத்தில் உள்ளது. ஆலையின் மொத்தப் பரப்பு சுமார் 70 ஏக்கர் ஆகும்.

இவ்வாலை 26.12.1983 முதல் அரசுடைமை ஆக்கப்பட்டு தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நிர்வாகத்தில் ஒரு அலகாக, சிறப்புடன் இயங்கி வருகிறது. அதற்கு முன்பு இவ் வாலை தனியார் நிர்வாகத்தினரிடம் இருந்து வந்தது.

இவ்வாலை தனியார் துறை யினரிடம் இருந்தபொழுது ஒரு நாளைய அரவைத்திறன் 800 டன் களாகும். அரசுடைமை ஆக்கப்பட்ட பின்பு, அதாவது 26.12.1983-க்குப் பிறகு, அரவைத் திறன் நாளொன் றுக்கு 800 டன்களிலிருந்து 1,250 டன்களாக உயர்த்தப்பட்டது.

ஆலைப்பகுதியிலேயே ஆலை அரவைக்குப் போதுமான கரும்பு கிடைப்பதற்குக் கரும்பு அபிவிருத் திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 1988-89 அரவை ஆண்டில் நாற் றங்கால் மானியமாக ரூ.4.08 இலட்சமும், ரக மானியமாக ரூ.20.10 இலட்சமும் வழங்கப் பட்டன. நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்த ஏதுவாக, கிணறு ஒன் றுக்கு ரூ.5,000 வீதம் 525 கிணறு களுக்கு ரூ.26.25 இலட்சமும், புதிய கிணறு அமைக்க கிணறு ஒன்றுக்கு ரூ.15,000 வீதம் 50 கிணறுகளுக்கு ரூ.7.50 இலட்சமும் மத்திய அரசின் சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து 8 சத வட்டியில் வழங்கப்பட்டன.

இரண்டாவது தவணை, சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து கிணறு ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் 200 கிணறுகளுக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் கிணறு ஒன்றுக்கு ரூ.10,000 வீதம் 180 கிணறுகளுக்கு ரூ.18 இலட்சம் வழங்கப்பட்டது. புதிய கிணறு அமைக்க, கிணறு ஒன்றுக்கு ரூ.15,000 வீதம் 9 கிணறுகளுக்கும், ரூ.20,000 வீதம் 1 கிணற்றுக்கும், ரூ.25,000 வீதம் 2 கிணறுகளுக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று கிணற்றுக் கடன் அடுத்த ஆண்டிலும் குறைந்த வட்டி யில் வழங்க ரூ.34 இலட்சம் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

வருகிற அரவைப் பருவத்திற்கு இதுவரையிலும் 7,730 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1,600 ஏக்கர் வரை கரும்பு பதிவு செய்ய இயலும் என எதிர் பார்க்கப்படுகிறது. அதற்கான சூழ் நிலைகள் நன்கு உள்ளன. அடுத்த அரவைப் பருவத்தில் இவ்வாலை யின் அரவைக்குத் தேவையான 2.15 இலட்சம் டன் கரும்பை ஆலைப் பகுதியிலேயே பெற்று தன் னிறைவு அடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவ்வாலைக்கு கரும்பு பதிவு செய்து சப்ளை செய்யும் விவ சாயிகள் 'கரும்பு உற்பத்தியாளர் சங்கம்' என்ற பெயரில் சங்கம் ஒன்று அமைத்து இயங்கி வருகின்றனர். அச்சங்கம் இவ்வாலையின் நிர்வாகத் திற்கு நேசக்கரம் நீட்டி முழு ஒத் துழைப்பும் நல்கி வருகிறது.

இவ்வாலை அரசுடைமையாக்கப் படுவதற்கு முன்பு 430 ஊழியர் களும், 148 அற்றைக் கூலிகளும் பதிவேடுகளில் இருந்தனர். அப் பொழுது அரவைக் காலங்களில் மாதம் சுமார் ரூபாய் 3.30 இலட் சமும், அரவை இல்லாத காலத்தில் சுமார் ரூ.1.10 இலட்சமும் சம்பள மாக வழங்கப்பட்டு வந்தன. ஆலை யின் அரவைத் திறனுக்கு ஏற்ப தற்பொழுது 615 ஊழியர்களும், 445 அற்றைக் கூலிகளும் பதி வேட்டில் உள்ளனர்.

தற்பொழுது அரவைக் காலத்தில் மாதம் ரூ.10.67 இலட்சமும், அரவை யில்லாக் காலத்தில் ரூ.6.60 இலட் சமும் சம்பளமாக வழங்கப்பட்டு வருகின்றன. அரசுடைமையாக்கப் பட்ட பின்பு, ஏனைய கூட்டுறவுப் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் வழங்கப்பட்டு வரும் அனைத்துச் சலுகைகளும் இவ்வாலையிலும் விரிவாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இங்குப் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் மற்றும் தொழிலாளர் களும் நிர்வாகத்துக்கு முழு ஒத் துழைப்பு நல்கி இரவு பகல் பாராது இவ்வாலை நன்கு இயங்கி வரதங் களின் உழைப்பினை நல்கி வருவது மிகவும் போற்றுவதற்கு உரியது. நிர் வாகமும் எல்லா ஊழியர்களுக்கும் அவர்களுக்கு வேண்டிய சலுகை மற்றும் இதரக் கோரிக்கைகளை அவ் வப்போது செய்து தனது கடமை யினை நிறைவேற்றி வருகிறது.

இவ்வாலை ஊழியர்கள், கரும்பு விவசாயிகள் மற்றும் இவ்வாலை வட்டாரத்திலுள்ள மற்ற குழந்தை களின் நலன் கருதி, இங்கு நர்ஸரி பள்ளி ஒன்றும் மேல்நிலைப்பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. குழந் தைகள் மற்றும் மாணவ, மாணவி யரின் போக்குவரத்திற்குப் பள்ளிப் பேருந்தும் இயக்கப்படுகிறது.

இவ்வாலையினை அரசு எடுத்துக் கொண்ட பின்பு, விரிவாக்கப் பணிகளுக்காக ரூ.4.85 கோடி செலவு செய்யப்பட்டு, மேலே குறிப் பிட்ட நிறுவனங்களுக்கு கடன் கொடுத்தது போக, தற்பொழுது தொழிலாளர்களின் குடியிருப்பிற் காக ரூ.21.20 இலட்சம் செலவில் 24 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள் ளன. மேலும் ரூ.12 இலட்சம் செலவில் நிர்வாக அலுவலகங்கள் கட்டுவதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. அதோடல் லாமல் ரூ.75 இலட்சம் செலவில் மேலும் குடியிருப்புகள், பள்ளிக் கட்டடம், உணவு விடுதி கட்டு வதற்கு ஆயத்த வேலைகள் நடை பெற்று வருகின்றன.

**– ரெ. இராவணன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மதுரை மாவட்டம்.**

**பாவேந்தர் நூற்றாண்டு:**



# கன்னியாகுமரி மாவட்டத்தில்

சுமார் 2,700 ஆண்டுகளுக்கு முன், அதங்கோட்டாசான் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அதங்கோட்டில் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. பாண்டியன் அவையில் தொல்காப்பிய அரங்கேற்றத்திற்குத் தலைமை வகித்த இப்பெரும் புலவர், சிறந்த வில்லிசை எழுதும் கவிஞராகவும், உடற்கூறு தத்துவ சாஸ்திரங்களின் முன்னோடியாகவும், சோதிடக் கலையில் ஞானம் கொண்டவராகவும், தமிழ்மொழியால் மிகுந்த பற்றும் ஆர்வமும், தெளிந்த அறிவும் கொண்ட அறிஞராகவும் திகழ்ந்தார்

அதங்கோட்டாசான் தலைமையில் முதல் தமிழ்ச் சங்கம் சூரிய முக்கில் நடந்ததாகக் கருதப்படுகிறது. இவரின் தனிப் பெருமையை நாட்டிற்கும், இளம் தலைமுறையினருக்கும் உணர்த்துகின்ற வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் முதல் விழா 22.6.90 அன்று, ஆசான் பிறந்து வளர்ந்த இடமான கன்னியாகுமரி மாவட்டம் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அதங்கோட்டில் சிறப்பாக நடைபெற்றது. தொடக்கத்தில் கவியரங்கமும், பட்டிமன்றமும் நடைபெற்றன. தொடர்ந்து கிராமிய வீர விளையாட்டுகளும் நடந்தன.

இதனைத் தொடர்ந்து சிறப்புக் கூட்டம் தொடங்கியது. சிறப்புக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் இவ்விழாவில் கலந்து கொண்டு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தந்திருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் அவர்கள் அதங்கோட்டில் உள்ள அதங்கோட்டாசான் சிலைக்கு மாலை அணிவித்தார்.

இவ்விழாவிற்கு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. த. இளங்கோவன் அனைவரையும் வரவேற்றார். சுந்தரதாஸ், எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.சி. சங்கரலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். ரெத்தினராஜ், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத் தலைவர் சி. சிவப்பிரகாசம், மெதுகும்மல் பேரூராட்சித் தலைவர் புலவர் கோவிந்தநாதன், பேராசிரியர் இரா. தியாகசுவாமி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் அவர்கள் தமிழ்ப்பெரும்புலவர் அதங்கோட்டாசானின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். இவ்விழாவில் உரையாற்றிய முதல்வரின் பேரவைத் செயலர், ''இங்கு கோரிக்கைகள் பலவற்றை என்னிடம் கொடுத்துள்ளீர்கள். இவற்றில் அதங்கோட்டாசான் ஆய்வு நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கூறினார்.

பின்னர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுதிருமண உதவித் திட்டத்தின்கீழ் 88 பெண்களுக்குத் தலா ரூ. 5,000 வீதம் மொத்தம்ரூ.4 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கினார் முடிவில், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. என். கணபதி நன்றி கூறினார்.

**– த. இளங்கோவன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**



ராஜஸ்தான் மாநில

# கைவினைப் பொருள் கண்காட்சி



கண்ணைக் கவரும் வண்ண ஆடைகள், குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் பார்க்கிறோம். எல்லாவற்றையும் வாங்கவேண்டும் போல் தோன்றுகிறது!

ஆம், அவ்வளவு நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன அவை.

சென்னை அண்ணாசாலையில் உள்ள 'பூம்புகார்' விற்பனைக் கூடத்தில், ராஜஸ்தான் மாநிலக் கைவினைப் பொருள்கள் கண்காட்சி நடந்தது.

ஜூன் 30லிருந்து ஜூலை 18 முடிய நடந்த இந்தக் கண்காட்சி கண்ணுக்கு விருந்தாய் அமைந்திருந்தது.

வண்ண ஆடைகள் மட்டுமின்றி, வகை வகையான அணிகலன்களும் இதில் இடம் பெற்றிருந்தன.

மணிமாலைகள், கற்கள் பதித்த நகைகள், பூவேலைப் பாடுகள் கொண்ட அழகிய வளையல்கள் மகளிரை மட்டுமின்றி, ஆடவரையும் கவர்ந்தன.

இதேபோல, தோல் பொருட்கள் காலணி முதல் கைப்பை வரை... எல்லாமே தரமானவை.

மணிமாலைகள், தோல் பொருட்களை அம்மாநிலக் கைவினைஞர்கள் நேரில் செய்து காட்டிய விதம் அற்புதமாக இருந்தது.

வண்ணந்தீட்டப்பட்ட மர மேசைகள், ஈசிசேர்கள், பளபளக்கும் கலையழகுடைய உலோகப் பாத்திரங்கள் முதலானவை ராஜஸ்தான் கைவினைஞர்களின் திறமையை வெளிப்படுத்துவதாக இருந்தன.

ராஜஸ்தான் சிறுதொழில் கழகப் பொறுப்பு அலுவலர் திரு. ஆனந்த விஜயவர்னியா அவர்களைச் சந்தித்தபோது,

''ராஜஸ்தான் மாநிலத்தில் கிராமப்பகுதிகளில் 15,000 கைவினைஞர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தயாரிக்கும் பொருள்களுக்கு நம் நாட்டில் மட்டுமின்றி, உலக நாடுகளிலும் பெருமளவில் ஆரதவு இருந்து வருகிறது. இந்தப் பொருள்கள், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா முதலான நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இக்கழகம், சென்னையில் விற்பனை நிலையம் ஒன்றை வெகு விரைவில் ஏற்படுத்தவிருக்கின்றது'' என்றார்.

ராஜஸ்தான் மாநிலக் கைவினைப் பொருள் கண்காட்சி தமிழ்நாட்டில் நடைபெறுவது நான்காவது தடவையாகும்.

கடந்த ஆண்டு நடந்த கண்காட்சியில் ரூ 4 இலட்சத்திற்கு விற்பனை ஆகியது. இந்த ஆண்டு ரூ 6 இலட்சத்திற்கு விற்பனையாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியில், நடுத்தர மக்களும் வாங்கக்கூடிய விலையில் பொருட்கள் விற்கப்பட்டன. குறைந்த விலை ரூ5லிருந்து அதிகவிலை ரூ2,500 வரை பொருள்கள் இருந்தன.

பொதுவாக, இந்தக் கண்காட்சி, ராஜஸ்தான் கிராமப்புறக் கைவினைஞர்களின் கைவண்ணத்தைக் காட்டுவதாக இருந்தது.

-பி.வி.ஜி



தமிழ் வளர்த்த பெரியார்

# தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள்

—இரா. முத்துக்குமாரசாமி

'திராவிட மொழிக்குடும்பத்தில் தமிழ்மொழிதான் வடசொற் கலப்பு மிகக் குறைந்த அளவில் உடையது. தேவையாயின் அக்குறைந்த அளவு சொற்களைக் கூடக் களைந்துவிட்டுத் தமிழால் தனித்தியங்க முடியும்' என்று முதன்முதல் குறிப்பிட்டவர் கால்டுவெல் பெருமகனார். என்ன கருதி அதனை அவர் எழுதினாரோ தெரியாது. வடசொற் கலப்பைக் களைய வேண்டுமென்று அவருக்கு முன்னர் யாரும் துணிந்து கூற முன் வரவில்லை.

தனித்தமிழின் பெருமையை நிலை நாட்டி வடசொற்கலப்பின்றி எழுதவும் பேசவும் முடியுமென்று தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்துக் காட்டியவர் 'பொழுதெல்லாம் தமிழுக்குழைத்த புலவன்' என்று பாவேந்தர் பாரதிதாசனால் போற்றப் பெற்ற மறைத்திரு மறைமலை அடிகளார் ஆவர்.

'அற்றை நக்கீரனாரும் பிற்றைச் சிவஞான முனிவரனாரும் ஒருருக் கொண்டு' போந்தவர் சுவாமி வேதாசலம் என்ற மறைத்திரு மறைமலையடிகளார்' என்று போற்றுவார் திரு.வி.க.

1876 ஜூலைத்திங்கள் 15-ஆம் அடிகளார். பெற்றோர் சொக்கநாதர் - சின்னம்மை. இளமையிலேயே தமிழ் மேல் கொண்ட பற்றால் தமிழ்நூல்களை நெட்டுருச்செய்தார். தொல்காப்பியத்தையும் சங்க நூல்களையும் முறையாகப் பயின்றார். நாகை பண்டித நாராயணசாமி பிள்ளையிடம் இவற்றை முறையாகக் கற்றார்.

இவர்தம் தமிழ்ப்புலமை இவரைச் சென்னைக் கிறித்துவக் கல்லூரித் தமிழாசிரியராக்கியது. ஆங்கிலத்திலும் வடமொழியிலும் நன்கு புலமை பெற்றார். ஆங்கில நாடகப் பேராசிரியர் பெர்னாட்ஷாவைப் போல் அடிகளார் தாம் இயற்றிய நூல்கள் அனைத்துக்கும் விரிவான முன்னுரை எழுதினார். அவர்தம் முன்னுரைகள் அனைத்தும் ஆங்கிலத்தில் அமைந்துள்ளது அவருக்கிருந்த ஆங்கிலப்புலமையை எடுத்துக் காட்டியது.

அடிகளாரின் வடமொழிப்புலமை காளிதாசரின் 'சாகுந்தல' நாடகத்தைத் தமிழாக்கியதில் காணலாம். மும்மொழிப்புலமை பெற்றிருந்த அடிகளார் சைவத்தையும் தமிழையும் தம்மிருகண்ணெனப் போற்றினார். சைவசித்தாந்த சண்டமாருதம் எனப் போற்றப் பெற்ற சோமசுந்தர நாயகர் அவர்களிடம் அடிகளார் சமய அறிவு பெற்றார். பல்லின்-யாற்றி ஓய்வுபெற்றுச் சென்னையை அடுத்த பல்லாவரத்தில் நிலையாக 1911-இல் குடியேறினார். 1950-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாளில் மறையும்வரை அங்கே தாம் அமைத்த மாளிகையிலேயே வாழ்ந்து வந்தார்.

அடிகளார் வாழ்வின் பயனே தனித்தமிழ் இயக்கம்தான். தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கலப்பால் நல்ல, தூய தமிழ்ச் சொற்கள் வழக்கற்றுப் போய் விடுகின்றனவே என்ற கவலையாலும் வருத்தத்தினாலுமே இவ்வியக்கம் தோன்றியதே தவிர பிறமொழிமேல் ஏற்பட்ட வெறுப்பினாலல்ல. அயன்மொழிக் கலப்பால் தமிழ் தன்னியல்பு கெட்டு மலையாளம், தெலுங்கு போல் முற்றிலும் திரிந்து வேறு மொழியாகிவிடுமோ என்ற அச்சமும் தனித்தமிழ் இயக்கம் தோன்றக் காரணமாயிற்று.

அடிகளாரின் இயக்கம் பல்வேறு எதிர்ப்புகளிடையே வளர்ந்தது. சுவாமி வேதாசலம் என்ற தம் பெயரை மறைமலையடிகள் என்று மாற்றிக்கொண்டார். தாம்கொண்ட கொள்கையை விடாது, எழுத்திலும் பேச்சிலும் தனித்தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தினார். தாம் முன்னரே எழுதிய நூல்களில் பயின்று வந்த [illegible]

'மறைமலை யடிகள் பிறந்திலரேல்
மணிமிடை பவளம் வளர்ந்திருக்கும்
அறிவிலர் கூட வடமொழியில்
ஐந்துசொல் தெரிந்த அவ்வளவில்
விறுவிறுஎன்று மந்திரங்கள்
மேடையில் ஏறி வெளுத்திருப்பார்
குறுகிய பார்வை தொடர்ந்திருக்கும்
குலநலம் யாவும் உடைந்திருக்கும்'

என்று இலங்கைக்கவிஞர் முருகையன் பாடியது போல், அடிகளார் தோன்றியிராவிடில், தமிழ், இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், ஆங்கிலம், வடசொல் முதலிய அனைத்து மொழிச் சொற்களும் கலந்த 'ஓர் அவியல்' மொழியாக மாறியிருக்கும்.

அடிகளார் தம் இயக்கத்தை வலுப்படுத்தத் தனித்தமிழில் எல்லாத் துறை நூல்களையும் எழுதினார். தமிழ்மொழியின் இடத்தைப் பிற மொழி கவர்ந்துவிடக் கூடாது என்பதற்காக மொழிக்காப்புப்போர் நடந்த போது அதில் ஈடுபட்டார். இந்தி கட்டாயப் பாடமாக ஆக்கப்பெற்றதை எதிர்த்துத் தமிழ்மக்கள் கிளர்ந்தெழுந்த போது அடிகளார் தலைமை தாங்கி நடத்தினார். அதில் வெற்றியும் கண்டார்.

மாணவப் பருவத்திலேயே அடிகளார் சமயக் கூட்டங்களுக்குச் செல்லும் இதழ்களில் கட்டுரைகள் எழுதுவதுமாக இருந்தார். முதன் முதலாக இலக்கியம், சமயம் போன்ற துறைகளில் சிறுசிறு நூல்கள் எழுதத் தொடங்கினார். 1898-இல் நாகையிலிருந்தபோதே முதற்குறள்வாத நிராகரணம், சித்தாந்த ஞானபோதம் சிற்றம்பலநாடி, ஞானசேகரவெண்பா, துகளறுபோத உரை, பஞ்சாக்கர மாலை, வேதாந்தவிசாரம் போன்ற நூல்களை வெளியிட்டார்.

இளமையில் கடும் வயிற்றுவலி வந்த போது திருவொற்றியூரிலுள்ள முருகனை வழிபட்டு நோய்நீங்கப் பெற்றார். அவ்வமயம் முருகன் மீது 'திருவொற்றி முருகன் மும்மணிக் கோவை'யைப் பாடினார். சங்கப் பாடல்களுக்கு நிகராக அக்கோவையின் பாடல்கள் இருந்ததெனத் தமிழறிஞர்கள் போற்றினர்.

பிறஇதழ்களில் கட்டுரை எழுதி வந்த நிலையில் தாமே ஓர் இதழ் தொடங்கினாலென்ன என்ற எண்ணம் அடிகளாருக்குத் தோன்றியது. [illegible]-இல் 'ஞானசாகரம்' என்ற மாத இதழைத் தொடங்கிப் பல்லாண்டுகள் நடத்தினார். அவ்விதழில் அவர் பல புதுமைகளைப் புகுத்தினார். தாம் எழுத நினைத்த பல நூல்களைப் பகுதி பகுதியாக ஞானசாகரத்தில் எழுதினார். அவற்றைத் தனித்தனியாகப் பிரித்து அடுக்கினால் தனிநூல் கிடைக்க வழிசெய்தார். பல நூல்களை அவர் இவ்வழியில் உருவாக்கினார். தனித்தமிழ்க் கொள்கையைப் பின் பற்றத் தொடங்கியபோது 'அறிவுக் கடல்' என்று இதழின் பெயரைத் தனித்தமிழாக்கினார்.



மறைமலை அடிகளாரின் ஆசிரியத் தோற்றம்

தமக்கிருந்த ஆங்கிலப் புலமையைக் கொண்டு ORIENTAL MYSTIC MYNA என்ற இதழை 1908-இல் தொடங்கினார். சில ஆண்டுகளில் அது நின்றுவிட்ட நிலையில் 1935-இல் OCEAN OF WISDOM என்ற இதழைத் தொடங்கி நடத்தினார். முதல் இதழில் அடிகளாருடைய கட்டுரைகளும் பிற அறிஞர்கள் கட்டுரைகளும் வெளிவந்தன. பின் வந்த இதழ், அடிகளாரின் எழுத்துரைகள் ம்ட்டுமே தாங்கிவந்தது.

அடிகளார் உடல்நலம் பேணுவதில் வல்லவர். சிவந்தமேனி, நெடிய தோற்றம், ஒளி தவழும் முகம், கனிந்த பார்வை, பெண்மையின் சாயல்கலந்த குரல், இவ்வாறு கண்டவரைக் கவரும் தோற்றம். அதனைக் காப்பதில் மிக்க கவனம். உண்பதிலும் உறங்குவதிலும் எல்லாவற்றிலும் ஓர் ஒழுங்கு. தாம் மட்டுமல்லாது எல்லாரும் நூறாண்டு வாழ வேண்டுமென்பதற்காக 'மக்கள் நூறாண்டு உயிர்வாழ்வதெப்படி' என்ற அறுநூறு பக்கங்கட்கு மேற்பட்ட விரிவான நூலை எழுதினார். உடல்நலம் பேண, உண்ணும் உணவில் கருத்தாக இருக்கவேண்டும். அதற்கு வழி காட்டியாக 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்' என்ற அரிய நூலை ஆக்கினார்.

துறவு நிலை மேற்கொண்ட அடிகளார்க்கு மறைபொருள் (MYSTICISM) துறையில் நாட்டம் உண்டாயிற்று. பிறரை வயப்படுத்தும் வசியக் கலையை விளக்க 'மனிதவசியம்' என்ற சீரிய நூலைப் படைத்தார். அக்கலையைத்தாமே பயின்று அதனை மக்களுக்கு நோய்நீக்கப் பயன்படுத்தினார். பிறர்நோயைக் குணப்படுத்த வசியக்கலை பயன்படும் என்று செய்துகாட்டினார். தமிழ் மொழிக்கு ஆக்கம்தரும் நூல்களைப் படைக்க வேண்டுமென்ற எண்ணம் வலிமைபெற இக்கலையைக் கைவிட்டார். யோகநித்திரை, தொலைவிலுணர்தல், மரணத்தின்பின் மனிதர்நிலை போன்றவை இத்துறைகளில் தமிழில் எழுந்த முதல் நூல்களாகும். இவை தமிழுக்குப் புதிய துறைகள்.

தமிழ் இலக்கியத்திற்கு அடிகளார் ஆற்றிய பணி பலவகைப்படும். நாடகம், கவிதை, புதினம், ஆய்வு போன்ற பலதுறைகளில் இவர்தம

நூலகமா உருவாயின. காளிதாசரின் சாகுந்தல நாடகத்தைத் தமிழாக்கம் செய்ததன் மூலம் இவர்தம் வடமொழிப் புலமை தமிழுலகிற்கு நன்கு புலனாயிற்று. நாடகத்தைத் செய்ததுடன் நில்லாது நாடக ஆய்வு நூலையும் தனியாகச் செய்து நாடகத்திறனாய்வு நூலைத் தமிழகத்திற்கு அறிமுகம் செய்தார். புதிதாக அம்பிகாபதி-அமராவதி என்ற நாடகத்தையும் அவர் படைத்தார்.

சங்கப்பாடல்களுக்கு முன்பெழுந்த உரையாசிரியர்களின் உரை பல பல இடங்களில் புனைந்துரையாகவும் நூலாசிரியர் கூறாதன சிலவற்றை இல்லது விளக்கும் வகையிலும் அமைந்திருப்பது கண்டு அடிகளார் வருந்தினார். இவர் தீட்டிய முல்லைப் பாட்டாராய்ச்சி உரையும் பட்டினப் பாலை ஆராய்ச்சி உரையும் தமிழன் பார்க்கும் தமிழ் பயிலும் மாணவர்க்கும் பெருவிருந்தாய் அமைந்தன.

இவர்தம் திருக்குறள் ஆராய்ச்சி, குறள் பற்றிய புதிய செய்திகளை மக்களுக்குத் தந்தது. வள்ளுவரின் கால ஆய்வில் ஈடுபட்டு வள்ளுவர் பிறந்த ஆண்டு இதுவென நிலை நாட்டிய பெருமை அடிகளாருக்கு உண்டு. அக்கால முறையே இன்று தமிழக அரசாலும் மக்களாலும் பின்பற்றப்பெறுகிறது.

தமிழ் இலக்கிய வரலாறு, ஈராயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட நெடிய வரலாற்றினை உடையது. இதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பினும் மாணிக்கவாசகரின் காலம் ஒரு புதிராகவே இருந்து வருகிறது. அவர் தேவார மூவருக்கும் முற்பட்டவரா பிற்பட்டவரா என்பது இன்னும் முடிந்தபாடில்லை. அடிகளார், மூவருக்கும் முற்பட்டவர் என்ற கருத்தை நிலைநாட்ட ஆயிரம் பக்கங்களுக்கு மேல் பல்வேறு சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார்.

தமிழில் கடிதவடிவில் புதினம் எழுதும் புதியமுறையைப் புகுத்தியவர் மறைமலையடிகளார். கோகிலாம்பாள் என்ற கதைத்தலைவி எழுதிய கடிதங்கள் ஒரு புதினம்போல் கோவையாக அமைந்துவிட்டது. சாதிவேறுபாடுகளற்ற ஒரு சமுதாயத்தைக் காண விழைந்தார் அடிகளார். இன்றுள்ள சமுதாயச் சூழலில் கைம்பெண்டிர்படும் துன்பத்தைக்கண்டு அதனைப்போக்கவே இப்புதினத்தைப் படைத்தார். குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி என்பது ஆங்கில நாவல் ஒன்றின் தழுவலாகும். அதுவும் முற்றுப்பெறாதது. இருப்பினும் அடிகளாரின் நடைக்காக அதனை விரும்பிப் படிப்பவர் பலர் உண்டு.

அடிகளாருக்குக் கட்டுரை எழுதுவது கைவந்தகலை. படிப்பவர்க்கு ஏற்ற வகையில் வேறுவேறு நடையில் கட்டுரை எழுதவல்லவர். சிறு சிறு தொடர்களைக்கொண்டு எழுதப் பெற்ற 'சிறுவர்க்கான செந்தமிழ்' 'இளைஞர்க்கான இன்றமிழ்' போன்றவை இளஞ்சிறார்க்குத் தனித்தமிழ் நடையை அறிமுகப்படுத்துபவையாம். அவர்தம் 'சிந்தனைக் கட்டுரைகள்', 'அறிவுரைக் கொத்து' போன்றவை மக்களுக்குச் சிந்தனையைத் தூண்டும் செறிவான கட்டுரைகளைத் தாங்கியவை; அடிகளாரின் ஆழ்ந்த புலமை நடையை இவற்றில் காணலாம்.

சைவத்தைப் பரப்புவதில் அடிகளார் மிகவும் முனைப்புடன் நின்றார். 'சைவசித்தாந்தப்பெருமன்றம்' என இன்று வழங்கும் சைவசித்தாந்த சமாஜம்' அடிகளாரால் தோற்றுவிக்கப்பெற்றதேயாம். இதில் அடிகளாருக்குத் துணைநின்றவர் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகள் ஆவர். 'சமாஜத்தின்' சார்பில் அவ்வப்போது அடிகளார் ஆற்றிய சமயப் பேருரைகள் 'முன்பனிக்கால உபந்நியாசங்கள்', பின்பனிக்கால உபந்நியாசங்கள் என்ற தலைப்பில்நூலாக உருப்பெற்றன.

சமய நம்பிக்கையை வளர்க்கும் போது பழைய பழக்கங்களை அப்படியே கண் மூடிக்கொண்டு கடைப்பிடிக்கக்கூடாது என்பது அவர்தம் எண்ணம். சிறுதெய்வங்களை வழிபடுவதையும் சிற்றுயிர்களைப் பலியிடுவதையும் அவர் கண்டித்தார். சிவனே முழுமுதற்கடவுள் என்பதும் அவனைமட்டுமே வழிபட வேண்டும் என்பதும் அவர்தம் துணிவு. திருக்கோயில் வழிபாடு, சைவசமயப் பாதுகாப்பு, சீர்திருத்தக் குறிப்புகள் போன்ற சிறுநூல்களில் இத்தகைய கருத்துக்களை அடிகளார் பொதிந்துள்ளார்.



**மறைமலை அடிகளாரின் இளமைக் காலத் தோற்றங்கள்**

கற்போர் நெஞ்சை உருகவைக்கும் திருவாசகத்திற்கு அடிகளார் விரிவான உரை எழுத முற்பட்டு, முதல் நான்கு அகவல்களுக்கு மட்டும் எழுதி முடித்தார். பல்வேறு சூழல்களினால் உரை முற்றுப்பெறாமலேயே போயிற்று.

சைவசித்தாந்தமே மக்கள் பின்பற்ற வேண்டிய சரியான சமயத்துவம் என்பதை நிலைநாட்ட சைவ சித்தாந்த ஞானபோதம், சிவஞான போத ஆராய்ச்சி, SAIVA SIDDHANTHA AS A PHILOSOPHY OF PRACTICAL KNOWLEDGE போன்ற அரியநூல்களை அடிகளார் படைத்தார்.

தமிழர் வரலாற்றை ஆய்வதிலும் அடிகளார் ஈடுபட்டார். தமிழர் மதம், பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், வேளாளர் நாகரிகம் போன்றவை தமிழ் மக்களின் சமுதாய வரலாற்றைத் தெளிவாக எடுத்துரைக்கும் நூல்களாகும்.

தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பிய அடிகளார் தாம் பேசியதையும், எழுதியதையும்விட அதிகமாகப் படித்தார். நாட்கடமையில் படிப்பதற்கென்று ஒரு நேரத்தை ஒதுக்கி வைத்தார். தமக்கு வேண்டிய நூல்களை விலைகொடுத்து வாங்கிச் சேர்த்தார். இவை தனி நூலகமாக அவர்தம் இல்லத்தின் மேற்பகுதியில் திகழ்ந்தன. நூல்களைத் தம் உயிர் போல் பாதுகாத்தார். நூலில் தமக்குப் பிடித்த பகுதிகளை அடிக்கோடிட்டும், பக்கக்கோடிட்டும் படித்தார். நூல்கள் அனைத்திற்கும் மேலுறையிட்டுப் பாதுகாத்தார். தம் மறைவுக்குப்பின் அந்நூல்கள் தமிழ் மக்களுக்குப் பயன்படத் தனியாகத் தம்பெயரில் ஒரு நூலகமாக அமையவேண்டுமென்று தம் விருப்ப ஆவணத்திலேயே குறிப்பிட்டார். அவர்தம் விருப்பத்தின் படி அவை இன்று சென்னை மறைமலையடிகள் நூல் நிலையத்தில் இடம்பெற்று இன்றைய ஆய்வாளர்கட்குப் பெருந்துணைபுரிந்து வருகின்றன.



**ம்றைமலை அடிகளாரின்**

**துறவுக்கோலம்**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் தமக்கெனத் தனி இடம் பெற்றுக்கொண்ட மறைத்திரு. மறைமலையடிகளார் நினைவு, பல்வகையாலும் போற்றப் பெறுகிறது. மறைமலையடிகள் நூல் நிலையம், மறைமலையடிகள் கலை மன்றம், மறைமலையடிகள் பாலம், மறைமலையடிகள் நகர்கள், சென்னையை அடுத்துப் பரந்து விரிந்த மறைமலைநகர், அப்பெயரிலேயே ஒரு தொடர்வண்டி நிலையம் இப்படிப் பற்பல வழிகளில் அடிகளார் நினைவு போற்றப்பெறுகின்றது. அடிகளாரின் எழுத்துக்கள் தமிழர்கள் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றுத் தமிழ் உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும் என்பது உறுதி.

## கலைக் களஞ்சியத்தின் கதை!

கலைக்களஞ்சியத்தை ஆங்கிலத்தில் 'என்சைக்ளோப்பீடியா' என்பர். மக்கள் கற்று அறிய வேண்டிய இன்றியமையாத பொருள்களனைத்தும் அடங்கியது என்பது இதன் பொருள்.

'கலைக் களஞ்சியம்' என்னும் நூல் செய்ய வேண்டும் என்று உலகில் முதன் முதலில் எண்ணியவர்கள் சீன மக்களே ஆவர். ஆனால், அவர்கள் செய்த நூலில் இக்காலத்துக் கலைக் களஞ்சியத்தில் அறிஞர்கள் கலைக் களஞ்சியத்திற்காகவே எழுதும் கட்டுரைகள் காணப்படுவது போல் காணப்படவில்லை. அவர்கள் நூல் அதுவரை இயற்றப்பட்டுள்ள நூல்களிலிருந்து அரியபொருள்களைத் திரட்டித் தொகுத்ததேயாகும்.

இத்தகைய சீன நூல் முதன் முதல் 10-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. அதன்பின் 14, 15-ஆம் நூற்றாண்டுகளிலும் எழுதப் பெற்றன. ஆனால், 18-ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்ற கலைக்களஞ்சியமே பெரியது. 5020 தொகுதிகள் கொண்டது. அதன் படி (பிரதி) ஒன்று 700 தொகுதிகளாகக் கட்டப்பெற்று இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

பொருள்கள் அனைத்தையும் கொண்ட நூல் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை மேனாட்டில் முதன் முதலாகக் கூறியவர் அறிஞர் அரிஸ்டாட்டில் [illegible] இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டிலிருந்து மேனாட்டு அறிவியற் கலைக்கு அடிகோலியவர் என்று கருதப்படுபவர்.

அவருடைய கருத்தை ஏற்றுப் பல அறிஞர்கள் அத்தகைய கலைக் களஞ்சியத்தை இயற்றப் பல நாடுகளிலும் முயன்று வந்தார்கள். எனினும் 1541-ஆம் ஆண்டில், ஜெர்மனியில் வாழ்ந்த ரிங்கர்ஜிபர்யஸ் என்பவரே 'என்சைக்கிளோப்பீடியா' என்னும் சொல்லை முதன் முதலாகக் கையாண்டவர். ஆனால், இப்பொழுதுள்ள கலைக் களஞ்சியங்களில் பொருள்களை நிரல் பெற அமைத்திருப்பது போல முதன்முதலாக நிரல்படுத்தித் தந்தவர் 'ஆல்ஸ்டெட்' (1588-1688) என்ற ஜெர்மானியரே ஆவர்.

இந்நாளில் உலகத்திலுள்ள கலைக்களஞ்சியங்களில் அதிகப் புகழ் பெற்றது ஆங்கில மொழியில் 'என்சைக் கிளோப்பீடியா பிரிட்டானிக்கா' என்னும் பெயரால் வழங்குவதே ஆகும். இது 1768-இல் தொடங்கப் பெற்றது.

இங்கிலாந்தில் வெளியாகியுள்ள 'எவ்வரிமான்ஸ்' (Everyman's) கலைக் களஞ்சியமும், 'சேம்பர்ஸ் கலைக் களஞ்சியமும் சிறந்தனவாகும்.

தமிழில் கலை, விஞ்ஞானம் முதலான எல்லாத் துறைகளையும் கொண்ட விரிவான கலைக்களஞ்சியம் ஒன்றை உருவாக்கத் தமிழ் வளர்ச்சிக் கழகம் முயன்று வெற்றி கண்டுள்ளது.

**ஆதாரம்**
**டாக்டர் இராம. சுப்பிரமணியன்**
**எழுதிய 'நூலகம்' என்னும் நூலிலிருந்து**

'பாவேந்தர்' நூற்றாண்டு!

# புரட்சிக் கவிஞரின் மூன்று கட்டளைகள்

மு. திருமேனி



இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டு குரல்கள் தமிழ் இலக்கிய உலகில் ஒலித்தன. ஒன்று தேசியக் குரலான, வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்த உரிமைக்குரலான பாரதியின் குரல். பிறிதொன்று திராவிடக்குரலான, பழமைகளை எதிர்த்த புரட்சிக் குரலான பாரதிதாசனின் குரல்.

பாவேந்தர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழாக் காணும் நாம் இந்த ஆண்டின் ஒரு நாளாவது அவர் நமக்கிட்ட ஆணைகளை எண்ணிப் பார்த்தல், செயற்படுத்த முனைதல் நன்றன்றோ?

கிறித்தவர்கள் பத்துக் கட்டளைகளைப் பற்றிப் பேசுவார்கள். அவற்றை இறைவன், மோசஸ் வழியாக எடுத்துச் சொன்னதாகக் கொண்டாடுவார்கள். அதுபோன்றே பாரதிதாசனும் தமிழர்க்கு மூன்று கட்டளைகள் இட்டார். இவற்றைத் திறனாய்வாளர்கள் உற்று நோக்கி அவரது நூல்களில் கணிக்கின்றனர். பாரதிதாசனின் இந்த மூன்று கட்டளைகளை முறையே அரசியல், மொழி, சமுதாயம் ஆகிய முத்துறைகளிலும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த மூன்று கட்டளைகளால்தான் நாம் அவர்க்குப் புரட்சிக் கவி என்றும், மரபுக் கவி என்றும், புதுமைக் கவி என்றும் புகழாரம் சூட்டி மகிழ்கின்றோம்.

அரசியலில் தமிழர்க்கு அவர் ஒன்று சொன்னார், தமிழ் மண்ணை ஆளமுனைவோர் தமிழ்ப் பண்பின் அடித்தளம் கொண்டவராக இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

''தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டின்
முதலமைச்சாய் வருதல்
வேண்டும்
தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த்
தமிழ்நாட்டில்
வராது தடுத்தல் வேண்டும்''

என்றே அவர் தமிழர்க்கு அறிவுரை ஈந்தார். அவர் கண்ட கனவு இன்று நனவாகி விட்டதன்றோ? இன்று தமிழக முதல்வராக இருக்கும் நம் கலைஞரவர்கள் தமிழ்மொழி ஆய்ந்து அறிந்து காத்த காவலர் என்பது நாம் அறிந்த ஒன்றுதானே! அவர் எழுதிய 'குறளோவியமும்' 'சங்கத்தமிழும்' அவர் தமிழாய்ந்த தமிழன்தான் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. அரசியலில் அவர் இட்ட கட்டளை தமிழரால் செயற்படுத்தப் பட்டது.

தமிழியக்கம் கண்டவர் பாரதிதாசன், இந்தி எதிர்ப்போடு நின்றவர் அல்லர் அவர். தமிழர் தம் தாய்மொழியைப் புறக்கணித்ததைப் பேணாததை அவர் உணராமல் இல்லை. தமிழ் உயர்தனிச் செம்மொழி, இதைப் பாவாணரும் அப்பாத்துரையும் பல்லாண்டுகளாகப் பாடாற்றி நூல்கள் வெளியிட்டு நிறுவினார்கள். தமிழ், உலகப் பழமொழிகளான கிரேக்கம், இலத்தீனம், எபிரேயம், வடமொழி ஆகியவற்றுடன் ஒப்பு நோக்கத்தக்கது. மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றிய - வழங்கிய இம்மொழிகள் எல்லாம் வழக்கிழந்து, வடிவிழந்து போயின. ஆனால் தமிழ் ஒன்றுதான் மக்கள் மொழியாக இன்றும் நின்று நிலவுகிறது. எனினும் தமிழ் வாழ, வளம் பெற தமிழர் அதை நயமுடன் பேசப் பாரதிதாசன் விரும்பினார்.

ஆனால் இன்று தமிழகத்தின் தலைநகரிலே கூடத் தமிழ் ஒழுங்காகப் பேசப்படுவதில்லை. தமிழ் நாளேடுகள், கிழமை ஏடுகள், திங்கள் ஏடுகள் தமிழைத் திட்டமிட்டுச் சாகடிக்கின்றன. மொழியறியா மூங்கையர் பலர் இன்று தமிழ் எழுத்துலகில் கால்வைத்துத் தமிழைச் சாகடிப்பதை அவர் உணராமல் இல்லை. தமிழகக் கடைகளில், சதுக்கங்களில், விற்பனைக் கூடங்களில் தமிழ்ப் பெயர்ப் பலகைகள் இல்லையே என்று அவர் வெந்து போனார்; உள்ளம் நொந்து போனார்.

இந்த வேதனையே தமிழியக்கமாக இன்று வடிவெடுக்கிறது. நம் சட்டமன்றத் தலைவர் தமிழ்க் குடிமகனார் இத்துறையில் காட்டும் ஆர்வம் பாராட்டத் தக்கது. ஆனால் இந்தத் தமிழியக்கத்திற்கு எதிர்ப்புகள் ஏராளம், ஏராளம். ஆங்கில நாளேடுகள் இந்த முயற்சியினை எதிர்த்து எழுதி வருகின்றன. தமிழ்நாட்டில் தமிழில் பெயர்ப்பலகைகள் வேண்டுமென வலியுறுத்துவது தவறாகாது.

இந்த மொழி இறவாத மொழியன்றோ? தொடர்ந்து பல்லாயிரம் ஆண்டுகள் அது வாழ வேண்டுமானால் தமிழர் அதை நாவிலே அல்லவா நடமாட விட வேண்டும்! அந்த இறவாத மொழிக்குத் தீக்குளித்து இறந்தவர்தாம் எத்தனை பேர்! உலகிலே மொழிக்காக உயிர் நீத்தவன் தமிழன்தான். 'உடல் மண்ணுக்கு', 'உயிர் தமிழுக்கு' என முழக்கமிட்ட இளைஞர் தமிழ் இளைஞர் அன்றோ? சில இலட்சியங்களுக்காக தென் வியட்நாமில் புத்தமதத் துறவியர் தீக்குளித்தனர். பற்றற்ற அவர்கள் தீக்குளித்தது வியப்பில்லை; கழிதுமில்லை. ஆனால் அன்றாட வாழ்வில் ஈடுபாடுடைய, மனைவி, மக்கள், சுற்றம், நண்பர் எனும் உணர்வுகளுக்கு ஆளாகிய தமிழர் எண்மர் தீக்குளித்த கதை வரலாற்று ஏடுகளின் எந்தப் பக்கத்திலும் காணக்கிடைக்காதவை. அந்த இளைஞர்க்கு ஊக்கம் தந்தது பாரதிதாசனின் தமிழியக்க முழக்கமன்றோ?

தமிழைத் தமிழர் ஒழுங்காகப் பேசாதவரை, தமிழில் பெயர்ப் பலகைகள் தமிழ் நாட்டில் காணப் படாதவரை அவரின் இரண்டாவது கட்டளை புறக்கணிக்கப்பட்டதாகவே கருதப்படும்.

பாரதிதாசனின் மூன்றாவது கட்டளை இந்தியா எங்கணும் நல்ல வரவேற்பைப் பெற்றுவிட்டது. உலகிலேயே குடும்பக்கட்டுப் பாட்டை அரசின் கொள்கையாக முதன் முதலாக அறிவித்த நாடு இந்தியா தான். இன்று இந்தியா பின் தங்கிய நாடல்ல. ஆனால் அதன் விரைந்த முன்னேற்றத்தைப் பல்கிவரும் மக்கள் தொகை வீழ்த்தி விடுகிறது.

குழந்தைகள் மிகுதி; குடும்பம் அவதி;
பிள்ளைகள் பெருக்கம்;
வளமையின் சுருக்கம்

இதை நன்குணர்ந்த பாரதிதாசன் மூன்றாவது கட்டளை இட்டார். தமிழ் இலக்கியங்கள் பிள்ளைப்பேற்றைத் பெரிதும் போற்றும், எனினும் இரு கவிஞர்கள் பிள்ளைப்பேற்றைக் கண்டித்தனர். ஒருவர் பட்டினத்தார்.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து
நவநிதியம் தேடி
நலமொன்றும் அறியாத,
நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல்
போலப்
பொலபொலெனக் கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்
ஈசல்கள் கிளம்புவதுபோலக்

குழந்தைகள் அறிவிலாப் பெற்றோர்க்குப் பெருகுவது கண்ட பட்டினத்தார் அன்றே குடும்பக்கட்டுப் பாட்டைச் சுட்டிக் காட்டினார். ஆனால் அவர் பெண்களைப் பழித்ததுபோல் பாரதிதாசன் பழிக்கவில்லை.

இன்றைய மனிதன் காதலும் பெற வேண்டும். ஆனால் குழந்தைகள் பெறக்கூடாது. இந்தச் சிந்தனை ஓட்டம் முற்போக்காளராகிய பாரதிதாசனைத் தாக்கி இருக்கிறது. அவர் அன்றே,

''காதலுக்கு வழிவகுத்துக்
கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்;
இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை!
தவிப்பதற்கோ பிள்ளை!
சந்தான முறைநன்று;
தவிர்க்கும்முறை தீதோ?''

என்று பாடி வைத்தார். ஏழ்மையின் காரணமாய் பிள்ளைகள் இருப்பதைக் கண்ட பாரதிதாசன், அவை உணவின்றி, உடையின்றி நலிவதைக் கண்ட பாரதிதாசன், அவை பெற்றாரால் விற்கப்படுவதைக் கண்ட பாரதிதாசன் குடும்பக் கட்டுப்பாட்டைத் துணிந்து வலியுறுத்தினார். இந்தியா விடுதலை பெறும் முன்னரே, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு முன்னரே அவர் இப்படி எழுதி இருப்பது குடும்பநலத்துறை சார்ந்த அரசு அலுவலர்க்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனால் பாரதிதாசன் இப்பாடலில் தேவாதிகளுக்கும் ஒழுக்கவாதிகளுக்கும் இடையில்சிக்கித் தவிக்காமல் பொருளியல் கண்ணோட்டத்தில் தமிழர்க்கு மூன்றாம் கட்டளையையும் இட்டிருக்கிறார் என்பது எண்ணி எண்ணி மகிழற்பாலது.

அந்த மூன்று கட்டளைகளில் முதலும் மூன்றும் தமிழரால் புரிந்து கொள்ளப்பட்டன; ஓரளவு நிறைவேற்றப்பட்டன. ஆனால் இரண்டாம் கட்டளைதான் இடுப்பொடிந்து கிடக்கிறது. அந்த இரண்டாம் கட்டளை நிறைவேற்றப்பட்டாக வேண்டும். அப்போதுதான் பாவேந்தரின் நூற்றாண்டு விழாவுக்குப் பொலிவு இருக்கும்;


With Best Compliments From

**N.K. RAMASWAMY**

**LAKSHMI TALKIES**
**NAGERCOIL**

THE BEST ENTERTAINING HOUSE IN THE HEART OF THE TOWN

மாணவர் பக்கம்

# கவனம்! கவனம்!

—பி.வி. கிரி



பள்ளிக்குச் சென்றால்
படிப்பினில் கவனம்!

வேலைக்குச் சென்றால்
வினையினில் கவனம்!

விளையாடச் சென்றால்
வீரத்தில் கவனம்!

கடைக்குச் சென்றால்
கருத்தினில் கவனம்!

பயணம் செய்தால்
பாதையில் கவனம்!

நீந்திடச் சென்றால்
நீச்சலில் கவனம்!

கவனம்! கவனம்!
எதிலும் கவனம்!

கவனம் இருந்தால்
புவனம் நமதே!



## இந்தியாவில் தயாராகும் புதிய மருந்து

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படுபவர்களுக்குத் தேவைப்படும் காப்பு மருந்து ஒன்று, இந்தியாவில் முதன்முதலாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தயாரித்திருப்பவர் பம்பாயைச் சேர்ந்த டாக்டர் திருமதி சாரதா ஜே. செனாய் ஆவார்.

ஒரு மாத்திரையின் விலை ரூ.8 முதல் 10 வரை ஆகிறது. ஒரு நாளுக்கு 3 மாத்திரைகள் சாப்பிட வேண்டும். இத்தகைய மாத்திரைகள் இதுவரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. இப்போது, இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது பெருமைக்குரிய செய்தி.

ஒரு நாட்டின் வாழ்வும் தாழ்வும் அந்த நாட்டு இளைஞர்கள் பெறும் கல்வியைப் பொறுத்தே அமையும்!

—அரிஸ்டாட்டில்

பட்டங்கள் மனிதனுக்குப் பெருமை தருவதில்லை; மனிதன்தான் பட்டங்களுக்குப் பெருமை தருகிறான்.

—மாக்கியவல்லி

## குழந்தைகள் நடத்தும் செய்தி நிறுவனம்

முழுக்க முழுக்கக் குழந்தைகளையும், இளைஞர்களையும் கொண்டே ஒரு செய்தி நிறுவனம், வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. அதன் பெயர் 'சில்ட்ரன்ஸ் எக்ஸ்பிரஸ்'

நியூயார்க்கைத் தலைமையிடமாகக் கொண்ட இந்தச் செய்தி நிறுவனத்தில் 100 எழுத்தாளர்கள் மற்றும் தொழில் நுட்ப நிபுணர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அத்தனை பேருமே 8 முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்கள்! இவர்களில் இந்தியச் சிறுமிகள் மூவரும் உள்ளனர்.

நியூயார்க்கில் ,மன்ஹாட்டன் பகுதியில் 25-வது தெருவில் இந்தச் செய்தி நிறுவனம் உள்ளது. இதனை முன்னாள் வழக்கறிஞரும், வர்த்தகருமான ராபர்ட் கிளாம்பிட் என்பவர் 13 ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவினார். பின்னர் இது படிப்படியாக வளர்ந்து புகழ்பெற்றுள்ளது. மாத இதழ் ஒன்றையும் இந்த நிறுவனம் நடத்துகிறது. தொலைக்காட்சியில் ஒரு புதிய தொடரையும் இது துவக்கியுள்ளது. 150க்கும் மேற்பட்ட அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு இந்த நிறுவனம் தனது செய்திகளை அனுப்பி வைக்கிறது.

**சாதனைகள்**

துவக்க காலம் முதற்கொண்டே, இந்தப் புதுமைச் செய்தி நிறுவனம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. குழந்தைத் தொழிலாளர் பிரச்னை முதற்கொண்டு, அண்மையில் நடந்து முடிந்த ஜனநாயக , குடியரசுக் கட்சிகளின் அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர் தேர்வு மாநாடுகள் வரையில், பலவற்றைக் குறித்து இந்த நிறுவனத்தின் இளம் நிருபர்கள் செய்தி சேகரித்து வெளியிட்டுள்ளனர்.

இந்த நிறுவனத்தில் பணியாற்றும் கவிதா என்னும் இந்தியச் சிறுமிக்கு 13 வயதாகிறது. கடந்த இரு ஆண்டுகளாக இவர் இந்நிறுவனத்துக்காகச் செய்திகளைச் சேகரிக்கிறார். ''என் வயதுக்கு அப்பாற்பட்ட வகையில், என்னால் இத்துறையில் ஒரு முத்திரை பதிக்க முடியும் என்பதை இங்கு எனது அனுபவம் நிருபித்துள்ளது'' என்று அவர் சொன்னார். சமந்தா மண்டோர், மெலிஸ்ஸா மண்டோர் என்னும் மற்ற இரு இந்தியச் சிறுமிகளும் சகோதரிகள்.

—அமெரிக்கத் தகவல் மையம்



# சிறுசேமிப்பு முதலீட்டாளர்களுக்கு மாபெரும் பரிசுத் திட்டம்!

ஆர். பாஸ்கரன், இ.ஆ.ப.,
சிறுசேமிப்பு இயக்குநர்
சென்னை.

பொதுமக்களிடையே உள்ள உபரி வருமானத்தைச் சிறுசேமிப்பில் முதலீடு செய்து, அதன் மூலம் தேசிய நல, வளர்ச்சிப் பணிகளுக்காகப் பயன்படுத்துவதே, தேசிய சேமிப்புத் திட்டங்களின் முக்கியமான குறிக்கோள் ஆகும்.

மக்களின் எதிர்காலத் தேவைக்காகச் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குவதற்கும், மக்களிடையே சிக்கன உணர்வை ஏற்படுத்தி சேமிக்கும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் மட்டுமல்லாமல், எதிர்கால நலனை முன்னிட்டு வருமான வரிக்கான திட்டங்களை வகுப்பதற்கும், இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பலதரப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல திட்டங்கள் உள்ளன. அவை:

1) இந்திர விகாஸ் பத்திரம், 2) கிசான் விகாஸ் பத்திரம், 3) தேசிய சேமிப்புத் திட்டம் 1987, 4) தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு, 5) அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம், 6) 10 ஆண்டு சமூகப் பாதுகாப்புப் பத்திரம், 7) குறிப்பிட்ட கால முதலீட்டுத் திட்டம், 8) ஐந்தாண்டு ரெக்கரிங் டெப்பாசிட் திட்டம், 9) அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு, 10) 15 ஆண்டு சேம நல நிதிக் கணக்கு, 11) ஓய்வு பெறும் அரசு ஊழியர்க்கான டெப்பாசிட் திட்டம்.

ஓய்வு பெறுபவர்கள், தினக் கூலிகள், மாணவர்கள், குடும்பத் தலைவிகள், வருமான வரி செலுத்துபவர்கள் இவர்களின் தேவைகளுக்கு ஏற்ப மேற்கூறிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

### பரிசுக் கூப்பன் திட்டம்:

சிறுசேமிப்பு வசூலில் மந்தமான காலமாகக் கருதப்படும் 1.6.90 முதல் 31.12.90 வரையிலான காலத்தில் சிறுசேமிப்பு மொத்த வசூலைத் தீவிரப்படுத்த 19.6.90-இல் ''மாவட்ட அளவிலான பரிசுகள் இணைந்த சேமிப்புத் திட்டம் - 1990'' என்ற பெயரில் சிறப்புத் திட்டம் ஒன்றை 1.6.90 முதல் 31.12.90 வரையிலான காலத்திற்கு அரசு அறிமுகம் செய்துள்ளது.

இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:-

(1) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டமும், மாவட்ட அளவிலான பரிசுகள் இணைந்த சேமிப்பு திரட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு அலகாகக் (யூனிட்டாக) கருதப்படும்.

(2) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட அளவிலான பரிசுகள் இணைந்த சேமிப்பு திரட்டும் திட்டத்தின் மேலாளர்களாக இருப்பர். சென்னை நகரைப் பொறுத்த வரை சிறுசேமிப்பு இயக்குநர், இத்திட்டத்தை அமலாக்கும் மேலாளராக இருப்பார்.

(3) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள அஞ்சலகங்கள் கிளை அஞ்சலகங்கள் - அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றில் உள்ள சிறுசேமிப்புத் திட்டங்களில் ஏதேனும் ஒரு திட்டத்தில் முதலீடுதாரர்களால் செய்யப்படும் முதலீடுகள் இத்திட்டத்திற்குத் தகுதியுடையன.

(4) தனிப்பட்ட முதலீடுதாரர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் இலவசப் பரிசுக் கூப்பன்களைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள்.

(5) 1.6.90 முதல் 31.12.90 வரையிலான காலத்தில்கீழ்க்காணும் திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500-க்கும் ஒரு இலவசப் பரிசுக்கூப்பன் அளிக்கப்படும்.

(அ) மாதாந்திர வருமானத் திட்டம், (ஆ) அஞ்சலக கால வைப்புத் திட்டம், (இ) கிசான் விகாஸ் பத்திரம், (ஈ) இந்திரா சேமிப்புத் திட்டம், (உ) அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் - வளரும் மாத சேமிப்புத் திட்டம், (ஊ) தேசிய சேமிப்புத் திட்டம் - 1987, (எ) தேசிய சேமிப்புப் பத்திரம் - எட்டாவது வெளியீடு, (ஏ) 15 ஆண்டுப் பொது சேம நிதிக்கணக்குத் திட்டம்.

(6) 1.6.90 முதல் 31.12.90 வரையில் அஞ்சலகத் தொடர்வைப்புத் திட்டம் - வளரும் மாதச் சேமிப்புத் திட்டம் ஆகியவற்றில் முதலீடு செய்யப்படும் முதலீடுகள் மேற்கூறிய பரிசுத் திட்டத்திற்குத் தகுதியுடையவை.

(7) ஒரு இலட்சம் பரிசுக் கூப்பன்கள் கொண்ட ஒரு வரிசைக்கு ஒரு குலுக்கல் நடத்தப்படும். ஒரு வரிசைக்குரிய ஒரு இலட்சம் பரிசுக் கூப்பன்கள் அனைத்தும் முதலீட்டாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பின்னர், அதற்குரிய குலுக்கல் நடத்தப்படும். இத்திட்டத்தின் மேலாளர்கள் அவரவர்களுக்குரிய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் இக்குலுக்கல் முடிவுகள் குறித்து விரிவான விளம்பரம் செய்வார்கள்.

ஒவ்வொரு வரிசை பரிசுக் கூப்பன்களுக்கும் உரிய பரிசுகள் விவரம் வருமாறு:-

| பரிசு களின் எண் ணிக்கை | பரிசுப்பொருளின் தன்மை | பரிசுப்பொருட்கள் விவரம் |
|---|---|---|
| 1 | சூப்பர் பம்பர் பரிசு | மாருதி கார் |
| 1 | முதல் பரிசு | பஜாஜ் ஸ்கூட்டர் |
| 2 | இரண்டாவது பரிசு | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி (ஈ.சி.கலர் டெலிவிஷன்) |
| 3 | மூன்றாவது பரிசுகள் | குளிர்பதனப் பெட்டி |
| 5 | நான்காவது பரிசுகள் | மோஃபா |
| 10 | ஐந்தாவது பரிசுகள் | தையல் இயந்திரம் |
| 10 | ஆறாவது பரிசுகள் | சைக்கிள் |
| 30 | ஏழாவது பரிசுகள் | குவார்ட்ஸ் கைக்கடிகாரம் |
| 200 | ஆறுதல் பரிசுகள் | சுவர்க்கடிகாரம் |
| 262 | மொத்த பரிசுகள் | |

சென்னை நகரைப் பொறுத்தவரையில் சிறுசேமிப்பு இயக்குநர் அவர்களும், மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களும் இத்திட்டத்தைச் செயல்படுத்த மேலாளர்களாக இயங்குவர். ஒவ்வொரு ரூபாய் 500/- முதலீட்டிற்கும் முதலீடுதாரருக்கு ஒரு இலவசப் பரிசுக் கூப்பன் வழங்கப்படும். ஒரு இலட்சம் இலவசப் பரிசுக் கூப்பன்கள் வழங்கிய பின் குலுக்கல் நடத்தப்படும். பரிசு பெற்றவர்கள் பரிசுப் பொருளுக்குரிய ரொக்க மதிப்பைப் பெறுவதற்கும் இத்திட்டத்தில் வாய்ப்புண்டு.

தனியார் நிறுவனங்களில் செய்யப்படும் முதலீட்டிற்கு அதிகபட்சமாக வட்டி வழங்குவதாக விளம்பரப்படுத்தப் பட்டாலும், அது முழுப் பாதுகாப்புத் தன்மையற்றது. ஆனால், அரசு செக்யூரிட்டிகள், உயர்ந்தபட்சப் பாது காப்பு அளிப்பதுடன் முதலீடு மற்றும் வட்டிக்கு வரி விலக்குச் சலுகையையும் அளிக்கின்றன. அவற்றில் கிடைக்கப்பெறும் வட்டி விகிதமும் உயர்ந்தபட்சமாக உள்ளது. உதாரணமாக, இந்திரா விகாஸ் பத்திரம் 20% தனிவட்டி அளிக்கவல்லது. மேலும் 15 ஆண்டு பொதுச் சேம நிதிக்கணக்கு (PPF) தேசிய சேமிப்புத் திட்டங்கள் அதிகபட்ச வட்டியை அளிப்பதுடன், வரிச்சலுகைகளை யும் அளிக்கக் கூடியது.

### முதலீட்டாளர்களுக்கு ஊக்கத் தொகை:

1.6.90 முதல் 31.12.90 வரை ரூ.1,000/-ம், அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(1) கிசான் விகாஸ் பத்திரம், (2) தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு 1987, (3) தேசிய சேமிப்புப் பத்திரம் - எட்டாவது வெளியீடு, (4) அஞ்சலக மாதாந்திர வரு மானத் திட்டம், (5) அஞ்சலக குறித்த கால முதலீடு, (6) பொது சேம நல நிதிக் கணக்கு, (7) சமூகப் பாது காப்புப் பத்திரம், (8) ஓய்வு பெறும் அரசு ஊழியர் களுக்கான டெப்பாசிட் திட்டம்.

மேற்கண்ட சிறுசேமிப்புத் திட்டங்களில், பொது மக்கள் சேர்ந்து அரசு அளித்துள்ள சிறப்புச் சலுகை களைப் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

## காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாகத்தொழில் நுணுக்கக் குழு

காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து மத்திய அரசு, நீதிபதி முகர்ஜி தலைமையில் நடுவர் மன்றத்தை அமைத்துள்ளது. இந்தப் பிரச்சினை தொடர்பாக, தமிழக அரசின் சார்பில் ஆதாரங் களைத் தருவதற்கு தொழில் நுணுக்கக் குழு ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. இக்குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

1. திரு. ஏ. மோகன கிருஷ்ணன்
   ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் (தலைவர்)
2. திரு. பி. மாணிக்கவாசகம்
   ஓய்வுபெற்ற தனி அலுவலர்,
3. திரு. ஏ. லோகநாதன்
   மேற்பார்வைப் பொறியாளர்,
   பொதுப்பணித் துறை, தஞ்சாவூர்.
4. திரு. ஆர். முரளிதரன்
   உதவிப்பொறியாளர், பொதுப்பணித்துறை.
5. திரு. எம்.எஸ். ராமமூர்த்தி
   முதன்மைத் தலைமை வரைவாளர்,
6. திரு. கொளத்து
   முதன்மைத் தலைமை வரைவாளர்,
7. திரு. கிருஷ்ணமூர்த்தி
   ஓய்வுபெற்ற இணைச் செயலர், சட்டத்துறை
8. திரு. டி. கிருஷ்ணசாமி
   செயற்பொறியாளர், (செயலர்)
   பொதுப்பணித்துறை, மதுரை.

திரு. ஆர். திருமலை - தனி ஆலோசகர்
(பாசன மேம்பாட்டு நீர்வள
நிலை ஆணைக்குழுத் தலைவர்)





தமிழ்நாட்டில் உள்ள ஆண்-பெண் அனை வரும் கல்வியறிவு பெறவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு; கல்வி வளர்ச்சிக்காகக் கடந்த ஓராண் டாகச் செயல்படுத்தப்பட்டு வரும் அற்புதப் பணிகளில் குறிப்பிடத்தக்க சில- இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.



# மாணவ மணிகளின் நலன் காக்கும் அரசு

◦ மகளிர் தொழிற் கல்வி வாய்ப்பு பெருகுவதற்காக சேலம்-கோவை-திருச்சி மாவட்டங்களில் தொழிற் பயிற்சி நிலையங்களும், 439 சிற் றூர்களில் வரும் ஆண்டில் புதிய ஓராசிரியர் ஆரம்பப் பள்ளிகளும் ஏற்படுத்தப்படும் .

◦ ஆரம்பப் பள்ளிகளில் கூடுத லாகச் சேர்க்கப்படும் மாணவர்களுக் குப் போதிய இடவசதி இப்போது இல்லை; எனவே, கிராமப்புற ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களைச் சரிவரப் பராமரிக்கவும்- பழுது பார்க்கவும் ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

◦ கொடைத்தன்மை வாய்ந்தோர்- முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை பயிலும் சிறுமியரைத் தத்தெடுத்து அச்சிறுமியரின் பெற் றோருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.250/- வழங்குவதற்கான 'வளர்ப்புப் பெற் றோர் திட்டம்' என்ற புதுமையான திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட் டுள்ளது. பள்ளிகளில் சேர்பவர்கள் தொடர்ந்து பயிலாமல், இடையில் நின்றுவிடும் நிலை சிறுமியரிடையே உள்ளது; அதனைச் சீர்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் .

◦ அனைத்துத் தொடக்கப் பள்ளி களிலும் 5-ஆம் வகுப்பு வரை படிப் படியாகப் பெண்களே ஆசிரியர் களாக நியமிக்கப்படுவார்கள்...

◦ 18.5.90-ல் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையொன்று, வரும் கல்வியாண்டில் - அதாவது 1990-91-ஆம் ஆண்டு முதல், முதல் மூன்று வகுப்புகளுக்கும் பெண் ஆசிரியைகளையே பணிய மர்த்த வழிசெய்கிறது.

◦ 500-க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இடங்களில் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படும்.

◦ பணியில் இருக்கும்போது இயற்கை எய்தும் ஆசிரியர்களைச் சார்ந்திருப் பவர்கள், ஆசிரியர் பயிற்சி பெற்றுப் பணியில் அமர, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒவ்வொன்றிலும் இரண்டு இடங்கள் இந்த ஆண்டு முதல் ஒதுக் கப்படும்.

◦ தொழிற் கல்வியை வாரத்திற்கு ஆறுமணி நேரம் கற்பிக்கும் பகுதி நேர ஆசிரியர்களின் பணிகள் ரூ.1400-2600 எனும் ஊதிய விகி தத்தில் இரண்டு ஆண்டுகளில் வரன் முறைப்படுத்தப்படும்.

◦ தொழில் பயிலகங்கள் மேம்பாட் டிற்காகத் திட்டமிடப்பட்டு ரூ.100 கோடிக்கு உலக வங்கிக் கடன் கோரப்படும்.

◦ 1990-91-ஆம் ஆண்டிலிருந்து, மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு அனைத்து ஊராட்சிகளி லும் வயதுவந்தோர் கல்வி மையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

◦ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப் பினர், ஆதி-திராவிடர், பழங்குடி யினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவ-மாணவிகள் அதிக அளவு வாய்ப்புகளைப் பெறுவதற்காக நுழைவுத் தேர்வு எழுதுவதற்கு அவர் களுக்கு வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு மதிப்பெண்களை அரசு மேலும் குறைத்துள்ளது.

◦ வெளிநாடுகளில் உள்ளதைப் போலக் குழந்தைவழி நலக் கல்வித் திட்டத்தையும் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. குழந்தைகள் சுத்தமாக வும், நோய்க்கு ஆளாகாமலும் இருப் பதற்குக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்து, அந்தக் குழந்தைகள் மூல மாக மற்ற குழந்தைகளுக்கு அதன் தன்மையை உணர வைக்கும் திட்டம் தான் குழந்தைவழி நலக்கல்வித் திட்டமாகும்.

குழந்தைகளுக்கான திட்டம் என் பதால் ஒரு குழந்தையைக் கொண்டு இத்திட்டத்தைத் தொடங்கி வைப்பது என்ற முடிவுப்படி- குடும்ப நலத் துறை இயக்குநர் திரு பி.எஸ். பாண்டியன் தலைமையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேத்தி செந்தாமரை மூலம் 1.4.'90 அன்று சென்னையில் இத்திட்டம் சிறப்புறத் தொடங்கி வைக்கப்பட்டது.

◦ முதல் வகுப்பிலிருந்து எட்டாம்

வகுப்பு வரை படிக்கும் ஊனமுற்ற மாணவர்கள் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்காக ஆண்டிற்கு ரூ.10 முதல் ரூ.84 வரை உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பத்தாயிரம் மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

○ ஆறுமாதம் முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு வழங்குவதற்கான திட்டம் ரூ.350 கோடியில் உலக வங்கி நிதி உதவியுடன், தமிழகத்தில் தீட்டப்பட்டுள்ளது. சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகள் அதிக ஊட்டச்சத்து பெறவும், கண்ணில் ஏற்படும் குறைகளைத் தவிர்க்கவும் மருத்துவ நிபுணர்களின் அறிவுரையின் பேரில் 3-க்கு மேல் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை இரண்டு லட்சம் இன்டர்நேஷனல் யூனிட்டால் வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

○ சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ-மாணவியர்க்கு இலவசக் காலணிகள் வழங்கும்பொருட்டு, காலணிகள் தயாரிப்பதற்காக சமூகநலத் துறையில் மகளிர் காலணி கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இச்சங்கத்தின்மூலம் இரண்டாயிரத்திற்கும் மேலான ஆதிதிராவிட மகளிர் வேலைவாய்ப்புப் பெற்றார்கள்.

○ தமிழ்நாட்டில்- உயர்நிலைப் பள்ளிகளில் (S.S.L.C.) படிக்கும் மாணவர்களில் அதிக மதிப்பெண் பெறும்முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே முதல் பரிசு (ரூ.3000), இரண்டாம் பரிசு (ரூ.2000), மூன்றாவது பரிசு (ரூ.1000) ஆகியவை மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. 1989 முதல் அதை மாற்றி- எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளில் ஐந்து பாடங்களுக்கும், தனித்தனியாக ஒவ்வொரு பாடத்திற்கும் மூன்று பரிசுகள் வீதம் அரசு 15 பரிசு களை வழங்குகிறது.

○ மேனிலைப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு மட்டும் முறையே ரூ. 5000/-, ரூ.3000/- ரூ.2000/- என வழங்கப்பட்டது. இதை மாற்றி-



1989 முதல் மேனிலைப் பள்ளியில் தமிழ், சிறப்புத் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிப்பாடங்களுக்குத் தனித்தனியாக முதல் பரிசு ரூ.5000/-, இரண்டாம் பரிசு ரூ.3000/-, மூன்றாம் பரிசு ரூ.2000/- ஆகியவையும் மற்ற 22 பாடங்களுக்குத் தனித்தனியாக முதல் பரிசு ரூ.3000/-, இரண்டாவது பரிசு ரூ.2000/-, மூன்றாம் பரிசு ரூ.1000/- எனக் கணக்கிட்டு மொத்தம் 75 பரிசுகளை அரசு வழங்கி வருகிறது.

பிளஸ்-2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் - ரொக்கப் பரிசுகளைத் தமது திருக்கரத்தாலேயே வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டது.

○ ஆண்களுக்கு மட்டும் என்றிருக்கிற கல்லூரிகளில்- இனி, பெண்களுக்கும் இடம் ஒதுக்கவேண்டுமென 19.5.'90-ல் தமிழக அரசு ஓர் ஆணை பிறப்பித்தது.

○ பெண்களுக்கெனத் தனிப்பட புதிய கல்லூரிகள் தொடங்க இயலாத நிலைமை இருப்பதால்- இவ்வாறு, ஆண்கள் கல்லூரிகளை ஆண்களும் பெண்களும் சேர்ந்து பயிலும் கல்லூரிகளாக மாற்ற அரசு முடிவு செய்திருக்கிறது. மாநிலத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரிகள் 54-ல் 14 கல்லூரிகள் மகளிருக்காகவும், 29 கல்லூரிகள் மாணவ - மாணவியர் பயிலும் கல்லூரிகளாகவும், மீதியுள்ள 11 கல்லூரிகள் மட்டுமே ஆண்கள் பயிலும் கல்லூரிகளாகவும் இயங்கி வருகின்றன. இந்த ஆண்கள் கல்லூரிகள் அமைந்துள்ள இடங்களில் பெண்களுக்கான அரசு கல்லூரிகள் இல்லையென்றாலோ, பெண்களுக்கான தனியார் கல்லூரிகள் இல்லையென்றாலோ அக்கல்லூரிகளில் 30 சதவிகிதம் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மேலும் இந்த அடிப்படையில், தனியார் ஆண்கள் கல்லூரிகளில் அந்த நகரில் பெண்களுக்கெனத் தனியே கல்லூரிகள் இல்லையென்றால்- 30 சதவிகிதம் மகளிரை அக்கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

○ மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 28.3.'90 அன்று சட்டப் பேரவையில் அறிவித்ததற்கு இணங்க- தமிழகத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் 8-வது வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்குப் போக்குவரத்துக் கழகங்களின் நகரப் பேருந்துகளில், அவர்களின் வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்றுவர இலவசப் பயண அடையாள அட்டைகள் அந்தந்தப் பள்ளிகள் மூலம் வழங்கப்பட தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

○ இதுதவிர- பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்குகின்ற பள்ளிகளில் பயிலும் இதர மாணவர்கள் மற்றும் கல்லூரிக் கல்வி, மருத்துவக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி, பொறியியற் கல்வி, சட்டக் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் இயங்கிடும் பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்களின் மாணவர்களுக்கும் அரசு உதவியுள்ளது. இம்மாணவர்கள் வீட்டிலிருந்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குப் நகரப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் சென்றுவர இதுவரை இருந்துவந்த முப்பத்து மூன்றரை சதவிகிதம் கட்டணச் சலுகை, ஐம்பது சதவிகிதச் சலுகை என உயர்த்தப்பட்டு, மாதாந்திர சலுகைச் சீட்டுகள் வழங்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

○ கடந்த கல்வியாண்டு முதலாகவே மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்வி மேம்பாட்டுக்காக வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அதன் அறிக்கை மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

○ மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் ஆகியோரின் சமூக - கல்வி, பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்தவெனத் தனியே ஒரு துறை அமைக்கப்பட்டது.

○ படிப்பார்வம் ஏழை எளிய பெண்களுக்கும் வரவேண்டும் என்ற எண்ணத்தில் எட்டாம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு ஐயாயிரம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது; ஐந்தாம் வகுப்பு வரை படித்த பழங்குடிப் பெண்களுக்கும் இந்த நிதியுதவி உண்டு. 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்' என்ற பெயரால் இத்திட்டம் சிறப்பிக்கப்படுகிறது.

○ தமிழகத்தில், மேலும் 5 இடங்களில் ரூ.10 கோடியே 50 இலட்சம் செலவில், பெண்களுக்கென்று தனியாகத் தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ) நிலையங்கள் அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**பாவேந்தர் நூற்றாண்டு:**



செயற்கரும் செயல்
செய்தல் வேண்டும்;
பெறற்கரும் புகழ்
பெறுதல் வேண்டும்!
—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

○ தமிழ்நாட்டில் 3 வேளாண்மைக் கல்லூரிகள் இருப்பினும்- 'உழவே தலை' என்பதை உணர்ந்த இந்த அரசு திருச்சி மாவட்டத்தில் 'அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி' என ஒன்றைத் தொடங்கியுள்ளது.

○ இவ்வரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொள்வதற்கு முன் நிலவிய சூழல்களைக் கருத்திற் கொண்டு, விரிவான பரிசீலனைக்குப் பின்னர், பிற்படுத்தப்பட்டோரின் மொத்த இட ஒதுக்கீடான 50 விழுக்காட்டிற்குள், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்குத் தனியே 20 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் பயனாக, 1988-ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களில் 68 மாணவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு மாறாக, 1989-ஆம் ஆண்டில் 187 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதேபோன்று 1988-ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சேர்ந்த 354 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு மாறாக, 1989-ல் 685 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

○ மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ-மாணவியர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கும் திட்டம், 1989-90-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், பயனடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 60,833 ஆகும்.

○ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்காக 1989-90-ஆம் ஆண்டில் மாணவ-மாணவியர் விடுதிகள் 25 திறக்கப்பட்டன. இவ்வாண்டில் 50 புதிய விடுதிகள் திறக்கப்படவிருக்கின்றன. இவ்விடுதிகளை நல்ல கட்டடங்களில் அமைக்க வேண்டிய அவசியத்தையும், மாணவர்கள் தங்களின் கல்வியைச் சீரிய வகையில் பெறுவதற்கு ஏற்ற சுற்றுப்புறச் சூழலை அமைத்துத்தர வேண்டிய அவசியத்தையும் நன்குணர்ந்து இந்த ஆண்டில் மொத்தம் ரூ.4 கோடி செலவில் 40 புதிய விடுதிக் கட்டடங்களைக் கட்டுவதற்கான திட்டத்தை அரசு துவக்கியுள்ளது.

○ புதிய இட ஒதுக்கீட்டுக் கொள்கை, வன்னியர்கள் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமுதாய மாணவர்களின் எண்ணிக்கையைத் தொழிற் கல்லூரிகளில் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.

○ மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகிய பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசப் பட்டப் படிப்புக்கான வருமான உச்ச வரம்பு முற்றிலும் நீக்கப்பட்டது.

○ மாணவர்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் பேனாக்கள், உருள் முனைப் பேனாக்கள், பென்சில்கள், ரீபில்கள், எழுத்தழிப்பான், எழுத்து முனை கூராக்கும் கருவிகள், கரும் பலகைகள், கரும்பலகைத் துடைப்பான்கள், ரப்பர் விளையாட்டுப் பந்துகள், அறுவைக் கருவிகள் அடங்கிய பெட்டிகள் போன்ற கல்வி சம்பந்தப்பட்ட பல பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது எனச் சட்டமன்றத்திலே . மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

○ ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவியருக்கு, பட்டப்படிப்புவரை இலவசக் கல்வி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1989-90-ஆம் கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப்படிப்புத் திட்டம்

எனப் பெயரிடப்பட்டு உள்ளது. இந்தத் திட்டம் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவியருக்கு அமல்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

◎ முறைகேடாகவும், ஒழுங்கீனமாகவும் நடைபெற்றுவந்த தனியார் சுயநிதி பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்விக் கூடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின்மீது முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன; தகுதியற்றவை மூடப்பட்டன.

◎ தமிழ்நாட்டில் பள்ளி மாணவ, மாணவியர் மருத்துவ வசதித் திட்டம் 'ஸ்கூல் ஹெல்த் புரோகிராம்' 153 தொடக்க சுகாதார நிலையங்களிலும், 40 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. ஒரு தொடக்க சுகாதார நிலையத்தில் 2 ஆயிரம் மாணவ மாணவியர், ஒரு நகராட்சியில் 10 ஆயிரம் மாணவ மாணவியர் என்ற அடிப்படையில் 706 இலட்சம் மாணவ மாணவியர்களுக்கு மருத்துவ ஆய்வு நடத்தப்படுகிறது.

◎ தற்போது தொடக்க சுகாதார நிலையம் 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒன்று என்று ஏற்படுத்தப்பட்டு உள்ளதால் மாநிலம் முழுவதும் புதிய சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் பள்ளிக்கூடங்களில் பயிலும் அனைத்து மாணவ,மாணவியர்களுக்கும் ஆண்டு மருத்துவ ஆய்வு மற்றும் சிகிச்சை செய்வதற்காக ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தால் 12 கோடிக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் பயன் பெறுவார்கள். இதற்கு முதல் கட்டமாக ஒரு கோடி ரூபாய் சிறப்பு ஒதுக்கீடு செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

◎ ஒவ்வொரு மாவட்டத்திலும், மேல்நிலைப் பள்ளித் தேர்வில் அந்தந்த மாவட்டத்தில் முதல், மற்றும் இரண்டாம் மதிப்பெண்கள் பெற்றுத் தொழில் கல்லூரிகளில் சேரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவியர்களுக்கும் 1989-90-ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.2000 என உயர்த்தப்பட்ட வீதத்தில் ஐந்து வருடங்களுக்குப் பேரறிஞர் அண்ணா



நினைவு விருதுகள் வழங்கப்படுகின்றன.

◎ இதேபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாம் வகுப்பில், முதல் இரண்டு நிலைகளில் மதிப்பெண் பெற்று, பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிலும் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியருக்குத் தந்தை பெரியார் நினைவு விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகளைப் பெற, பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000 என்று இருந்தது. 1989-90-லிருந்து வருமான வரம்பு நீக்கப்பட்டது. இதற்காக 1990-91-ஆம் ஆண்டில் ரூ.5,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், 250 மாணவ, மாணவியர் பயன் அடைவார்கள்.

◎ பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த- விடுதியில் தங்கிப் பயிலும் மற்றும் விடுதியில் தங்காமல் பிற இடங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் படிப்புதவித் தொகை அளிக்கப்படுகிறது. விடுதியில் தங்காது பிற இடங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கான படிப்புதவித் தொகையில், படிப்புக் கட்டணம், தனிக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணம், புத்தகங்களின் தொகை ஆகியவை அடங்கும்.

◎ விடுதிகளில் தங்கிப் பயிலுபவர்களுக்கான படிப்புதவித் தொகையில் மேற்சொன்ன கட்டணங்களுடன் நிர்ணயிக்கப்பட்ட உண்டி, உறையுள் கட்டணமும் அடங்கும். இவர்களது பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.5,000 ஆக இருந்ததை உயர்த்தி ரூ.12,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர்க்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், சீர்மரபினர் மாணவ, மர்ணவியர்க்கு ஆறாம் வகுப்பிலிருந்தும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆனால் - இவ்வுதவித் தொகையைப் பெற, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 விழுக்காடு மதிப்பெண்ணிற்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் சீர்மரபினர் மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதே போதுமானதாகக் கொண்டு உதவித்தொகை வழங்கப்படுகிறது. உதவித்தொகை பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு 1989-90 முதல் நீக்கப்பட்டு விட்டது.

◎ பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்குப் படிப்புதவித் தொகை வழங்க அந்தந்தக் கல்வி நிறுவனங்களின்



மேதகு தமிழக ஆளுநர் பர்னாலா அவர்கள் 23.6.90 அன்று கோவையில் நடைபெற்ற அரசு விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார். அப்போது அவர், ரூ.5 கோடி அளவிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை ஏழை எளிய மக்களுக்கு வழங்கினார். ஆட்டோ ஓட்டுநர் பயிற்சியளித்துப் பெண்களுக்கு உரிமம் வழங்கும் திட்டத்தின்கீழ், ஆறு பெண்களுக்கு உரிமம் வழங்கினார். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. இராமன் இ.ஆ.ப., திரு மு. இராமநாதன் எம்.எல்.ஏ., திரு இரா. மோகன் எம்.எல்.ஏ., ஆகியோரும் இந்த விழாவில் கலந்து கொண்டார்கள்.

முதல்வர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்களுக்குக் கல்லூரி வகுப்பு வரை, அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாது இலவசக் கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 60,833 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.

◎ அனைத்திந்திய உயர் அரசுப் பணிகளுக்காக மைய அரசு தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் எழுதவிருக்கும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக, இத்துறை 1971-ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகிறது. இந்நிலையத்தில் 60 மாணவ, மாணவியர் (விடுதியில் தங்கிப் பயிலுவோர் 50 பேர், வெளியில் தங்கிப் பயிலுவோர் 10 பேர்) சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்நிலையத்தில் சேர, பெற்றோர்களின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.12,000-லிருந்து ரூ.24,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இலவச தங்கும் வசதியும் திங்களொன்றுக்கு ரூ.250/-க்கு மிகாத செலவில் உண்டி வசதியும் செய்து தரப்படுகிறது என்ற நல்ல செய்தி சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இப்பயிற்சி நிலையம், இந்திய ஆட்சிப் பணி மற்றும் ஏனைய மைய அரசுப் பணிகளுக்கான தேர்வுகளுக்குப் பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வுக்குழு, இரயில்வே பணியாளர் தேர்வுக் குழு மற்றும் இதர பல்வேறு பணியாளர் தேர்வு அமைப்புகள் நடத்தும் தேர்வு எழுதவும் சிறப்புப் பயிற்சி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

இதனால், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கு நல்ல வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற அரசின் நோக்கம் நிறைவேறும்.

◎ கோவை, அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில், அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதவிருக்கும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபின மகளிருக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்காக, 1989-90-ஆம்

ஆண்டு முதல், சிறப்புப் பயிற்சி மையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் ஆண்டு தோறும் 25 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1990-91-ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினரைச் சேர்ந்த மேலும் நான்கு தொகுதியினருக்கு அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகள் எழுத, சிறப்புப் பயிற்சித் திட்டம் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் ஆண்களும் பெண்களுமாக 25 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர். இத்திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2.40 இலட்சம் செலவாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், டாக்டர் அழகப்பா பல்கலைக் கழகம், காந்தி கிராமியப் பல்கலைக் கழகம் மற்றும் திருநெல்வேலி புனித சேவியர் கல்லூரி ஆகிய இடங்களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் பயனடையும் வகையில் இப்பயிற்சிகள் அளிக்கப்படும். அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளைத் தமிழகத்திலிருந்து மேலும் அதிகமானவர்கள் எழுத இச்சிறப்புப் பயிற்சி உதவும்.

● சென்னையில் உள்ள சிறப்புப் பயிற்சி நிலையத்தை நடத்தவும், கூடுதல் வசதிகள் செய்து கொடுக்கவும் 1990-91-ஆம் ஆண்டில் ரூ.19,40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

● பொதுத் தொகுப்பு (open competition),
பிற்படுத்தப்பட்டோருக்கான
தொகுப்பு (B.C.), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) மற்றும் சீர்மரபினருக்கான தொகுப்பு, ஆதி-திராவிட பழங்குடி மக்கள் தொகுப்பு என மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி ஆகிய தொழில்கல்வித் தேர்வுக்கு அந்தந்தத் தொகுப்புக்கு உரிய மதிப்பெண் எடுக்கும் மாணவர்களில் ஒரு குடும்பத்தில் பெற்றோரோ அல்லது உடன் பிறப்புகளோ பல்கலைக் கழகப் பட்டம் - பெறாதவர்களாக இருந்தால் அந்தக் குடும்பத்திலிருந்து வரும் முதல் மாணவருக்கு ஐந்து மதிப்பெண்கள் அதிகமாகத் தரப்படுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும் என்ற நல்ல செய்தி மாண்புமிகு முதல்வர் அவர்களால் மகிழ்வோடு தெரிவிக்கப்பட்டது.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய தொகுப்புகளில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி ஆகிய தொழிற்கல்விகளுக்கு - தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு, அவர்கள் குடும்பத்தில் இதுவரை பெற்றோரோ அல்லது உடன் பிறப்புகளோ பல்கலைக் கழகப் பட்டம் பெறாதவர்களாக இருந்தால் அந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12,000 ரூபாயும், அதற்குக் குறைவாகவும் இருந்தால் அந்தக் குடும்பத்தில் இருந்து வரும் முதல் மாணவராக இருந்தால் அவருக்கு மேற்கண்ட தொழிற்கல்வி வரை இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே சலுகையைப் பெறுவதற்கு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு மேலே குறிப்பிட்ட மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி போன்ற தொழிற்கல்விகளைப் பெற ஆண்டு வருமானம் 15,000 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

● வருமான வரம்பின்றி - ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும் இளங்கலைப் பட்டப் படிப்பு வரை (பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்) இலவசக் கல்வி வழங்கப்படுமென கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு முதல் - பிற்படுத்தப்பட்டோருக்கும்- அந்தக் குடும்பத்திலே இதுவரை பெற்றோரோ அல்லது உடன் பிறப்புகளோ யாரும் பல்கலைக் கழகப் பட்டம் பெறாதவர்களாக இருப்பின், அந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12,000 ரூபாயும் அல்லது அதற்குக் குறைவாகவும் இருக்குமேயானால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த முதல் மாணவருக்கு இளங்கலைப் பட்டப் படிப்புவரை (பி.ஏ., பி.காம்., பி.எஸ்.சி.) இலவசக் கல்வி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

● மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபோது ஆசிரியர் பயிற்சியைச் செம்மையாக நடத்துவதற்கும், நல்ல முறையில் கண்காணிக்கவும் ஓர் இயக்ககம் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்தார். அதற்கு இணங்க, 'ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்' அமைக்க அரசு 11.6.90 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

ஆசிரியர் பயிற்சியின் தரத்தை உயர்த்தப் பயன்பட வேண்டுமென்ற நோக்குடன் தனி இயக்குநர் ஒருவர் தலைமையின் கீழ் இப்பயிற்சி இயக்ககம் செயல்படும். புதிய பாடத் திட்டம் அமல்படுத்தப்பட்ட சூழ்நிலையில் அதன் தரத்திற்கேற்ற ஆசிரியர் பயிற்சிக்கான திட்டத்தினைத் தரமுள்ளதாக்க இந்தப் பயிற்சி இயக்ககம் துணை புரியும்.

எழுத்தறிவோ, படிப்பறிவோ அற்றவர்கள் எவருமே இல்லை என்கிற உன்னதமான நிலைமையினை நமது தமிழகம் மிக விரைவிலேயே பெற்றிட இந்த உயரிய திட்டங்கள் நிச்சயம் வழிவகுக்கும்; தமிழக அரசுக்குப் புகழ் குவிக்கும்.

—பி.எல். ராஜேந்திரன்

● மிகவும் பிற்பட்ட வகுப்பு, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பத்தாம் வகுப்புமுதல் பட்டப் படிப்புவரை - அவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் எவ்வளவாக இருந்தபோதிலும் இலவசக் கல்வி பெறலாம் என முன்பே அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்கு மாறாக அத்தகைய மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டிருந்தால் அவற்றை உடனடியாகத் திருப்பி வழங்க வேண்டும் என்றும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.



TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
## உதவி அறுவை மருத்துவர் (Assistant Surgeon)

கீழ் கொடுக்கப்பட்டுள்ள பதிவு எண்களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு மருத்துவப் பணியில் உதவி அறுவை மருத்துவர் பதவிக்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 20 | 21 | 22 | 24A | 25 | 30 | 36 | 43 | 51 | 52 | 57 | 76 | 101 |
| 102 | 119 | 136 | 143 | 152 | 163A | 164 | 172 | 176 | 180 | 182 | 184 | 219 | 222 | 250A |
| 263 | 274 | 278 | 279 | 282 | 308 | 310 | 325 | 359 | 360 | 363 | 367 | 381 | 400 | 401 |
| 411 | 415 | 420 | 421 | 444 | 445 | 478 | 479 | 533 | 560 | 588 | 601 | 614 | 626 | 643 |
| 651 | 652 | 660 | 662 | 667 | 688 | 694 | 725 | 731 | 732 | 734 | 736 | 737 | 738 | 743 |
| 746 | 748 | 753 | 777 | 809 | 814 | 837 | 866 | 883 | 917 | 923 | 927 | 933 | 934 | 939 |
| 950 | 955 | 956 | 957 | 961 | 973 | 995 | 997 | 999 | 1001 | 1005 | 1013 | 1024 | 1028 | 1036 |
| 1037 | 1040 | 1065 | 1109 | 1110 | 1111 | 1119 | 1129 | 1131 | 1145 | 1149 | 1150 | 1155 | 1164 | 1168 |
| 1170 | 1175A | 1177A | 1202 | 1218 | 1221 | 1236 | 1237 | 1244 | 1245 | 1299 | 1300 | 1301 | 1304 | 1305 |
| 1306 | 1311 | 1329 | 1331 | 1342 | 1348 | 1350 | 1351 | 1353 | 1363 | 1376 | 1382 | 1384 | 1414 | 1415 |
| 1420 | 1422 | 1423 | 1433 | 1433A | 1435 | 1447 | 1450 | 1451 | 1456 | 1468 | 1478 | 1484 | 1486 | 1489 |
| 1492 | 1494 | 1496 | 1497 | 1505 | 1507 | 1510 | 1512 | 1516 | 1532 | 1534 | 1543 | 1557 | 1585 | 1587 |
| 1591A | 1592 | 1593 | 1596 | 1599 | 1601 | 1615 | 1625 | 1629 | 1633A | 1650A | 1660 | 1665 | 1666 | 1668 |
| 1670 | 1673 | 1682 | 1689 | 1690 | 1720 | 1721 | 1725 | 1737 | 1739 | 1740 | 1747 | 1752 | 1753A | 1759 |
| 1763 | 1765 | 1768 | 1771 | 1774 | 1782 | 1784 | 1787 | 1787A | 1799 | 1800 | 1803 | 1806 | 1808A | 1857 |
| 1858 | 1860A | 1861 | 1864 | 1868 | 1877 | 1898 | 1905 | 1906 | 1912 | 1913 | 1933 | 1939 | 1966 | 1968 |
| 1973 | 1992 | 1995 | 2000 | 2015 | 2024 | 2043 | 2057A | 2058 | 2060A | 2088 | 2092 | 2101 | 2116A | 2118 |
| 2124 | 2129 | 2147 | 2160 | 2173 | 2174 | 2176 | 2179 | 2193 | 2201 | 2202 | 2203 | 2209 | 2210 | 2215 |
| 2219 | 2221 | 2222 | 2227 | 2228 | 2234 | 2238 | 2242 | 2242A | 2243 | 2248 | 2253 | 2257 | 2270 | 2275 |
| 2279A | 2281A | 2291 | 2294 | 2306 | 2314 | 2316 | 2319 | 2349 | 2352 | 2360 | 2361 | 2370 | 2382 | 2385 |
| 2387 | 2388 | 2407 | 2408 | 2420 | 2424 | 2428 | 2431 | 2434 | 2435 | 2438 | 2439 | 2445 | 2478 | 2485 |
| 2486 | 2499 | 2501 | 2514 | 2518 | 2531 | 2537 | 2539 | 2539A | 2547 | 2548 | 2549 | 2550 | 2552A | 2554 |
| 2558 | 2569 | 2570 | 2572 | 2573 | 2579 | 2583 | 2605 | 2618 | 2620 | 2628 | 2634 | 2635 | 2637 | 2638 |
| 2641 | 2648 | 2650 | 2659 | 2666 | 2678 | 2685 | 2687 | 2688 | 2689 | 2699 | 2700 | 2716 | 2726 | 2729 |
| 2732 | 2734 | 2737 | 2745 | 2754 | 2755 | 2768 | 2770 | 2781 | 2785 | 2786 | 2787 | 2789 | 2790 | 2792 |
| 2809 | 2812 | 2824 | 2834 | 2835 | 2837 | 2850 | 2851 | 2853 | 2854 | 2858 | 2864 | 2866 | 2871 | 2874 |
| 2877 | 2879 | 2882 | 2894 | 2896 | 2903 | 2904 | 2908 | 2925 | 2926 | 2929 | 2931 | 2946 | 2956 | 2957 |
| 2958 | 2959 | 2967 | 2969 | 2974 | 2980 | 2982 | 2985 | 2990 | 2992 | 2995 | 3059 | 3066 | 3085 | 3093 |
| 3098 | 3103 | 3104 | 3108 | 3117 | 3140 | 3145 | 3158 | 3159 | 3164 | 3180 | 3186 | 3193 | 3210 | 3214 |
| 3219 | 3223 | 3235 | 3246 | 3269 | 3270 | 3275 | 3281 | 3287 | 3289 | 3296 | 3301 | 3311 | 3318 | 3327 |
| 3333 | 3335 | 3349 | 3350 | 3361 | 3373 | 3375 | 3383 | 3384 | 3395 | 3419 | 3441 | 3442 | 3450 | 3464 |
| 3469 | 3470 | 3471 | 3472 | 3474 | 3479 | 3511 | 3522 | 3564 | 3570 | 3582 | 3590 | 3595 | 3596 | 3601A |
| 3603 | 3673 | 3681 | 3682 | 3687 | 3690 | 3771 | 3800 | 3806 | 3822 | 3827 | 3830 | 3835 | 3836 | 3841 |
| 3851 | 3864 | 3914 | 3925 | 3937 | 3941 | 3943 | 3955 | 3965 | 3982 | 3984 | 3985 | 4042 | 4050 | 4072 |
| 4076 | 4088 | 4096 | 4098 | 4112 | 4113 | 4131 | 4168 | 4202 | 4211 | 4213 | 4229 | 4379 | 4380 | 4394 |
| 4396 | 4401 | 4430 | 4434 | 4436 | 4455 | 4468 | 4473 | 4493 | 4512 | 4513 | 4530 | 4540 | 4558 | 4562 |
| 4569 | 4570 | 4587 | 4589 | 4602 | 4608 | 4611 | 4622 | 4635 | 4660 | 4664 | 4672 | 4673 | 4678 | 4682 |
| 4688 | 4704 | 4717 | 4725 | 4726 | 4731A | 4734A | 4741 | 4742 | 4747 | 4748 | 4750 | 4754 | | |

இருபது விண்ணப்பதாரர்களின் தெரிவு முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட - மற்றும் தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரர்களின் முடிவுகள் அவர்கள் பெற்ற மதிப்பெண்களுடன் அவர்களுக்குத் தனித்தனியாக அனுப்பப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதிவெண்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களின் தெரிவு முடிவுகள் அவர்களிடமிருந்து வரவேண்டிய மூலச்சான்றிதழ்களைச் சரிபார்க்கும் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

267A 726 1171 1398 1445 1792 2214 2552 2672 2672A 2677 3319 3567 3888 4012

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதிவெண்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களின் தெரிவு முடிவுகளும் அவர்களது சாதியினைச் சரிபார்க்கும் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

924 1993 2733 2744 3298

## காப்புப் பட்டியல் (RESERVE LIST)

தமிழ்நாடு மருத்துவப் பணியில் உதவி அறுவை மருத்துவர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களில் எவரேனும் பணியில் சேராத பட்சத்தில் அக் காலியிடங்களை நிரப்பும்பொருட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள பதிவெண்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களின் காப்புப் பட்டியல் (Reserve List) வெளியிடப்படுகின்றது. இக்காப்புப் பட்டியல் இப்பதவிக்கான அடுத்த தெரிவுப் பட்டியல் (Selection List) தயாராகும் வரை மட்டுமே செல்லத்தக்கதாகும்.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 44 | 98 | 230 | 231 | 241 | 249 | 265 | 267 | 273 | 283 | 287 | 298 | 302 | 304 | 346 |
| 361 | 405 | 557 | 605 | 608 | 620 | 628 | 650 | 668 | 678 | 745 | 860 | 910 | 931 | 1048 |
| 1144 | 1166 | 1208 | 1278 | 1295 | 1310 | 1341 | 1355 | 1381 | 1409 | 1449 | 1453 | 1454 | 1455 | 1493 |
| 1499 | 1503 | 1563A | 1586 | 1620 | 1659 | 1691 | 1722 | 1797 | 1805 | 1838 | 1914 | 1986 | 2009 | 2145 |
| 2154 | 2165 | 2177 | 2190 | 2230 | 2247 | 2293 | 2313 | 2356 | 2367 | 2390 | 2394 | 2467 | 2490 | 2519 |
| 2534 | 2540 | 2584 | 2593 | 2625 | 2630 | 2656 | 2721 | 2757 | 2779 | 2784 | 2791 | 2794 | 2797 | 2838 |
| 2872 | 2876 | 2900 | 2909 | 3033 | 3046 | 3070 | 3080 | 3106 | 3144 | 3146A | 3173 | 3179 | 3205 | 3216 |
| 3295 | 3313 | 3326 | 3355 | 3358 | 3391 | 3422 | 3527 | 3534 | 3535 | 3545 | 3553 | 3562 | 3584 | 3608 |
| 3629 | 3669 | 3674 | 3675 | 3706 | 3752 | 3766 | 3810 | 3838 | 3934 | 3979 | 3993 | 4020 | 4034 | 4350 |
| 4367 | 4376 | 4389 | 4568 | 4571 | 4582 | 4634 | 4643 | 4658 | 4719 | 4744 | 4749 | | | |

DIPR/1680/MS/90/MCS






குற்றால அருவி வண்ண முகப்பு மிக அருமை. 21-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தமிழரசுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்.

-ப. முருகேச பாண்டியன்,
காட்பாடி.

கண்ணாடிக் குச்சியில் கைவண்ணம்' கட்டுரை வியக்க வைத்தது.

-ஜெ. கண்ணன்
ஜெ. மேலூர்

வேலூர் அரசு அருங்காட்சியகம் பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது.

-ஏ. கந்தசுவாமி,
திருப்பூர்.

'பாரதிதாசனின் பண்புகள்' கட்டுரை சுவையாக இருந்தது.

-எஸ். பிரபாகரன்
மேல்பாலானந்தல்

வேலூர் அருங்காட்சியகக் கட்டுரை, பண்டைக்கால வரலாற்றையும், சிறப்பையும் எடுத்துக் கூறுகிறது.

-வே. சரவணக்குமார்
குமுக்கோட்டை

சென்னைத் துறைமுக வரலாறு, கட்டுரை மூலம் இதுவரை அறியாத செய்திகளை அறிந்து கொண்டோம்.

—கே.ஆர். நடராசன்
சந்திரபிள்ளை வலசு

'வளரும் வேளாண்மை'ப் பகுதி என் போன்ற விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது.

-சி. அப்பர் சுந்தரன்,
உ. அம்மாப்பட்டி.

'பலரும் போற்ற வாழ்ந்திடலாம்' என்னும் கவிதை பலாச்சுளை போல இருந்தது.

-ஆ. செயராமன்,
வடசிறுவலூர்.

Gram: GIGARETTES

PHONE: Off: 3713
Res: 3446

With Best Compliments

A.S.S. MANOHARAN & CO.,
MERCHANTS
KOTTAR, NAGERCOIL - 2.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்
சிறந்த சலவைக்கு
தேர்ந்தெடுங்கள்
மயில் சோப்
இதர தயாரிப்புகள்:
தீபம் பார் சோப்
மயில் டிடர்ஜென்ட்கேக் சோப்
வின்னர் சோப்
தயாரிப்பாளர்:
மயில் சோப் இன்டஸ்ட்ரீஸ்
கோட்டார், நாகர்கோவில்.
தொலைபேசி: அலுவலகம்: 5342 வீடு: 5668, 3967

தந்தி: 'நிஜாம்'  தொலைபேசி: 2263, 2186

**21-வது ஆண்டில் பீடுநடைபோடும்**
**'தமிழரசு' இதழுக்கு**
**எங்கள் நல்வாழ்த்துக்கள்**



# நிஜாம் லேடி

**ஸ்பெஷல்/பன்னீர்**
**புகையிலை**

தயாரிப்பாளர்கள்

**ஹாஜி A.M. அப்துல் ரஹிமான் ராவுத்தர் & கோ.**
**நிஜாம் புகையிலைத் தொழிற்சாலை,**

தபால் பெட்டி எண்.4
புதுக்கோட்டை - 622 001



TNPSC  **விளம்பர எண்: 24/90**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**அகில இந்திய பணிகள் மற்றும் மாநிலப் பணிகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கான அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள், செப்டம்பர் 1990.**

அகில இந்திய பணிகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். மற்றும் தமிழ்நாடு மாநிலப் பணிகளைச் சார்ந்துள்ள சில வகைப்பிரிவு அலுவலர்களுக்கான (Certain Classes of Officers) அரையாண்டு மற்றும் மொழித் தேர்வு இவ்வாணையத்தினால் 19.9.90 முதல் நடத்தப்படும். இத்தேர்வுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 21.8.1990 ஆகும். விண்ணப்பப்படிவத்தையும் சம்பந்தப்பட்ட விவரத்தையும் தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002 அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துக் கேட்டுப்பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்புகள்:**

1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளின் தற்போது பணியில் இருப்போருக்கு மட்டுமே இத்தேர்வுகள் உரியதாகும்.
2. இத்தேர்வுகளுடன் நடத்தப்பெறும் தமிழ்மொழி உயர்நிலைத் தேர்வே மற்ற மாநிலங்களைச் சார்ந்த அகில இந்திய பணிகளில் பணிபுரியும் அலுவலருக்கான ரூ.1,000/- ரொக்கப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழான 'தமிழ்ப்புலமைத் தேர்வும்' ஆகும். இத்தேர்வு எழுத விரும்பும் அலுவலர்கள் பத்தாண்டு பணிக்காலம் பூர்த்தி செய்யாதவர்களாயிருத்தல் வேண்டும். தேர்வு எழுத விரும்புவோர் தங்கள் மாநில அரசாங்கத்தின் தலைமைச் செயலர், வாயிலாக, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், சென்னை-600 009 அவர்களுக்கு 21.8.90-க்கும் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

டி.ஐ.பி.ஆர்/1797/எம்எஸ்/90/அக்கார்ட்

**TNPSC**

விளம்பர எண்: 25/90

## அரசு ஊழியர்கள் மற்றும் இதரர்களுக்கான சிறப்பு மற்றும் துறைத்தேர்வுகள் நவம்பர் 1990.

அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்குமான அடுத்த சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் (Special and Departmental Tests) 1990-ம் வருடம் நவம்பர் மாதம் 3-ஆம் தேதி சனிக்கிழமை முதல் 1990-ஆம் வருடம் நவம்பர் மாதம் 19-ஆம் தேதி திங்கட்கிழமை வரை நடைபெற விருக்கின்றன. தேர்வாணைய அலுவலகத்திற்கு இதற்கான விண்ணப்பங்கள் வந்து சேர்வதற் கான கடைசி தேதி 31.8.1990 ஆகும். இதற்கான முழு விவரங்களையும் அதற்கான விண்ணப்பப் படிவங்களையும் பெறுவதற்கான கோரிக்கைகள் ரூ.5.00 அஞ்சல் தலையுடன் கூடிய சுயவிலாசமிட்ட (30 × 12 செ.மீ.) உறையுடன், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை - 600 002 அவர்களுக்கு தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ தாங்கள் எழுதவிரும்பும் தேர்வு அல்லது தேர்வுகள் போன்ற விவரத்தைக் குறிப்பிட்டனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் பிற மொழியில் இருப்பின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பினையும் இணைத்தல் வேண்டும். அவ்வாறு ரூ.5.00 அஞ்சல் தலையுடன் கூடிய சுயவிலாசமிட்ட (30 × 12 செ.மீ) உறையுடன் வரப்பெறாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா. சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளுக்கான விண்ணப்பப் படிவங்களுக்குத் தனித்தனியாக கோரிக்கைகள் அனுப்பப்பட வேண்டும். முன்பு நடைபெற்ற தேர்வுகளுக்காக வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இத்தேர்வுக்குத் கண்டிப்பாக உபயோகிக்கக் கூடாது. இத்தேர்வுகளுக்கென பெற்ற விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து தேர்வுக் கட்டணத்திற்கான அஞ்சல் ஆணைகளுடன் அல்லது கேட்புக் கோசோலையுடன் கையொப்பமிட்ட ஒரே மாதிரியான புதிய இரண்டு நிழற் படங்களையும் (Photographs) இணைத்து விண்ணப்பங்கள் நேரடியாகத் தேர்வாணைய அலுவலகத்திற்கு 31.8.1990 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பப் பட வேண்டும்.

**குறிப்பு:** இவ்விளம்பரம் அரசுப் பணிகளில் புதிதாக நியமனத்திற்கோ அல்லது தற்காலிகப் பணியில் இருப்பவர்களுடைய பணியை நிரந்தரப்படுத்துவதற்காகவோ அல்ல.

DIPR/1820/MS/90/ad bureau/3469



**TNPSC**

## சிறப்புத் தேர்வு - மே - 1990

### மொழி பெயர்ப்புத் தேர்வு - முதல் தாள்

#### தமிழ்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 835 | 2365 | 4026 | 4730 | 5116 | 5163 | 5490 | 5565 | 6498 | 6674 | 6712 | 6893 | 6899 | 6920 | 7065 |
| 7463 | 7680 | 7779 | 7840 | 7849 | 7863 | 7925 | 8290 | 8332 | 8395 | 8418 | 8512 | 8701 | 8749 | 8851 |
| 8896 | 9015 | 9196 | 9203 | 9341 | 9361 | 9384 | 9416 | 9489 | 9546 | 9688 | 9732 | 9993 | 10028 | 10076 |
| 10175 | 10251 | 10319 | 10335 | 12277 | 12662 | 14013 | 14799 | 14936 | 15124 | 15351 | 17050 | 17113 | 17535 | 19899 |

#### தெலுங்கு

9521

#### இந்தி

9379 9594

## சிறப்புத் தேர்வு - மே - 1990

### மொழி பெயர்ப்புத் தேர்வு - இரண்டாம் தாள்

#### தமிழ்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 835 | 4026 | 4458 | 5116 | 5163 | 6674 | 6893 | 6895 | 6899 | 6920 | 7010 | 7065 | 7242 | 7463 | 7526 |
| 7779 | 7840 | 7849 | 8133 | 8228 | 8250 | 8395 | 8466 | 9015 | 9124 | 9174 | 9203 | 9219 | 9341 | 9351 |
| 9546 | 9713 | 9732 | 9813 | 9815 | 9911 | 10045 | 10076 | 10186 | 10223 | 10251 | 10398 | 11214 | 12272 | 12662 |
| 16079 | 16335 | 16730 | 18661 | 19899 | | | | | | | | | | |

#### இந்தி

8460

### ஊராட்சி வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வு: தாள் V (1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமும் அதன் கீழ் வெளியிடப் பெற்ற விதிகளும் ஆணைகளும்)

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22553 | 22595 | 23158 | 23164 | 23426 | 23643 | 23771 | 23788 | 24164 | 25349 | 25616 | 25843 | 26086 | 26200 | 26653 |
| 27422 | 27669 | 27909 | 28161 | 28481 | 29073 | 30301 | 31209 | 31554 | 31833 | 31979 | 32220 | 32301 | 32977 | 32978 |
| 33316 | 33324 | 33594 | 33772 | 33870 | 34568 | 34795 | 34945 | 35713 | 36034 | 36247 | 36341 | 36343 | 36359 | 36571 |
| 36650 | 36679 | 36929 | 36938 | 37107 | 37262 | 37271 | 37531 | 37939 | 38129 | 38397 | 38414 | 38785 | 39132 | 39282 |
| 39546 | 39695 | 39724 | 39885 | | | | | | | | | | | |

## சிறப்புத் தேர்வுகள் - மே - 1990

### நீதித்துறை உறுப்பினர்களுக்கான உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமுறைத் தேர்வு, பாகம் 11 தேர்ச்சி பெற்றவர்களின் பதிவெண்கள் பட்டியல்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 239 | 319 | 336 | 421 | 425 | 488 | 499 | 719 | 786 | 843 | 1157 | 1193 | 1220 | 1294 | 1328 |
| 1502 | 1654 | 1664 | 1793 | 1880 | 1939 | 2273 | 2541 | 2867 | 3238 | 3245 | 3319 | 3528 | 3590 | 3701 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3834 | 3933 | 3631 | 4186 | 4540 | 4643 | 4747 | 4824 | 5121 | 5165 | 5334 | 5427 | 5856 | 5942 | 5947 |
| 5999 | 6060 | 6078 | 6116 | 6138 | 6197 | 6385 | 6388 | 6406 | 6477 | 6674 | 6683 | 6899 | 6933 | 6956 |
| 7065 | 7109 | 7281 | 7374 | 7463 | 7486 | 7545 | 7609 | 7737 | 7779 | 7906 | 7969 | 7993 | 8088 | 8129 |
| 8213 | 8311 | 8357 | 8395 | 8460 | 8482 | 8546 | 8560 | 8599 | 8620 | 8760 | 8786 | 8797 | 8872 | 8944 |
| 8946 | 9005 | 9046 | 9122 | 9203 | 9219 | 9316 | 9343 | 9494 | 9614 | 9700 | 9804 | 9846 | 9864 | 9884 |
| 10003 | 10120 | 10154 | 10294 | 10319 | 10503 | 10538 | 10569 | 10764 | 10854 | 10902 | 10984 | 11012 | 11140 | 11327 |
| 11355 | 11478 | 11511 | 11516 | 11723 | 11767 | 12341 | 12343 | 12412 | 12447 | 12465 | 12704 | 12892 | 13180 | 13315 |
| 13343 | 13436 | 13470 | 13491 | 13496 | 13499 | 13758 | 13845 | 13988 | 13996 | 14015 | 14036 | 14060 | 14086 | 14136 |
| 14248 | 14443 | 14486 | 14607 | 14616 | 14733 | 14741 | 14748 | 14749 | 14995 | 15026 | 15062 | 15108 | 15153 | 15187 |
| 15213 | 15387 | 15620 | 15875 | 15969 | 16872 | 17086 | 17246 | 17252 | 17275 | 17276 | 17490 | 17518 | 17529 | 17687 |
| 17705 | 17711 | 17819 | 18043 | 18044 | 18494 | 18503 | 18639 | 18736 | 18748 | 18752 | 18778 | 18814 | 18840 | 18886 |
| 18991 | 19116 | 19245 | 19376 | 19377 | 19428 | 19472 | 19484 | 19517 | 19756 | 20089 | 20179 | | | |

## தேர்வுகள் - துறைத்தேர்வுகள் - மே '90
## தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குத் துறை - சார்நிலை அலுவல்களுக்கான துறைத்தேர்வு

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22454 | 22489 | 22499 | 22635 | 22672 | 22813 | 22834 | 22877 | 22966 | 24277 | 24402 | 24505 | 24586 | 24674 | 24703 |
| 24802 | 24832 | 25764 | 26296 | 26299 | 26573 | 26622 | 26678 | 26862 | 27006 | 27022 | 27072 | 27140 | 27186 | 27970 |
| 28271 | 28297 | 28329 | 29230 | 29354 | 29421 | 29423 | 29425 | 29462 | 29752 | 29917 | 30093 | 30097 | 30309 | 30444 |
| 30546 | 30563 | 30616 | 31006 | 31019 | 31035 | 31339 | 31568 | 31771 | 31791 | 31899 | 32153 | 32348 | 32521 | 32551 |
| 32552 | 32558 | 32571 | 32631 | 32647 | 32654 | 32733 | 32785 | 33156 | 34532 | 34628 | 34749 | 34757 | 34968 | 34999 |
| 35223 | 35339 | 35504 | 35777 | 35859 | 35868 | 35870 | 35943 | 35963 | 36008 | 36150 | 36204 | 36255 | 36364 | 36538 |
| 37297 | 37392 | 39958 | 39980 | | | | | | | | | | | |

## தேர்வுகள் - துறைத்தேர்வுகள் மே '90
## தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் பணியாளர்களுக்கான துறைத்தேர்வு முதல் தாள்: தேர்வு முடிவுகள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22027 | 22128 | 22374 | 22384 | 22562 | 22681 | 22784 | 22981 | 23200 | 23358 | 23486 | 24655 | 25815 | 26123 | 26321 |
| 26333 | 26373 | 26492 | 26598 | 26648 | 27933 | 27948 | 28222 | 28343 | 28446 | 28783 | 28837 | 29096 | 29242 | 29316 |
| 29409 | 29713 | 29795 | 29808 | 29990 | 30255 | 31434 | 31545 | 31838 | 31868 | 32159 | 32173 | 32181 | 32636 | 32770 |
| 33013 | 33227 | 33252 | 33393 | 33459 | 34089 | 34158 | 34160 | 35280 | 35402 | 35515 | 35737 | 36287 | 37062 | 37307 |
| 37634 | 38178 | 38368 | 39039 | 39141 | 39399 | | | | | | | | | |

## தேர்வுகள் - துறைத்தேர்வுகள் - மே '90
## பத்திரப் பதிவுத் துறைத்தேர்வு - தொகுதி 1
## இரண்டாம் தாள்-தேர்வு முடிவுகள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22016 | 22023 | 22067 | 22081 | 22403 | 22629 | 22852 | 22892 | 22925 | 23038 | 23130 | 23400 | 23610 | 23617 | 23873 |
| 24752 | 25402 | 26096 | 26389 | 26606 | 26625 | 26629 | 26693 | 26765 | 27325 | 27384 | 27440 | 27504 | 27576 | 28217 |
| 28692 | 28747 | 28990 | 29131 | 29368 | 29655A | 29682 | 30497 | 30585 | 30778 | 30856 | 30936 | 31145 | 31183 | 31262 |
| 31447 | 31711 | 32030 | 32063 | 32145 | 32245 | 32275 | 32284 | 32388 | 32293 | 32494 | 32895 | 32933 | 33119 | 34214 |
| 33457 | 34280 | 34585 | 34622 | 34712 | 34760 | 34766 | 35033 | 35755 | 35836 | 37284 | 37535 | 37673 | 37942 | 38323 |
| 39256 | 39281 | 39313 | 39350 | 39726 | 40038 | 40039 | | | | | | | | |



## தேர்வுகள் - துறைத்தேர்வுகள் - மே '90
## கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கான துறைத்தேர்வு - தணிக்கையியல்
## முதல் தாள் தேர்வு முடிவுகள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22010 | 22077 | 22166 | 22167 | 22176 | 22177 | 22228 | 22370 | 22481 | 22495 | 22502 | 22515 | 22522 | 22531 | 22747 |
| 22755 | 22769 | 22775 | 22887 | 22916 | 22937 | 22980 | 23008 | 23037 | 23077 | 23134 | 23151 | 23162 | 23166 | 23199 |
| 23222 | 23242 | 23247 | 23267 | 23288 | 23289 | 23303 | 23343 | 23459 | 23491 | 23505 | 23507 | 23539 | 23541 | 23570 |
| 23798 | 23860 | 23977 | 23987 | 24014 | 24047 | 24051 | 24070 | 24112 | 24220 | 24221 | 24239 | 24273 | 24281 | 24284 |
| 24364 | 24439 | 24601 | 24604 | 24643 | 24645 | 24670 | 24750 | 24775 | 24798 | 24830 | 24854 | 24883 | 24923 | 24924 |
| 24957 | 24977 | 24984 | 25035 | 25080 | 25084 | 25237 | 25285 | 25412 | 25449 | 25451 | 25455 | 25479 | 25500 | 25508 |
| 25512 | 25515 | 25533 | 25553 | 25586 | 25589 | 25614 | 25626 | 25639 | 25654 | 25672 | 25692 | 25720 | 25742 | 25747 |
| 25749 | 25750 | 25768 | 25828 | 25855 | 25868 | 25900 | 25901 | 25920 | 25950 | 25981 | 25984 | 26048 | 26077 | 26088 |
| 26108 | 26169 | 26245 | 26314 | 26406 | 26419 | 26420 | 26459 | 26514 | 26534 | 26536 | 26537 | 26685 | 26687 | 26688 |
| 26700 | 26712 | 26799 | 26848 | 26856 | 26859 | 26892 | 26903 | 27032 | 27077 | 27199 | 27209 | 27223 | 27225 | 27243 |
| 27262 | 27298 | 27300 | 27314 | 27317 | 27318 | 27323 | 27329 | 27350 | 27354 | 27374 | 27376 | 27389 | 27446 | 27453 |
| 27528 | 27547 | 27557 | 27637 | 27685 | 27689 | 27716 | 27761 | 27801 | 27814 | 27845 | 27981 | 28074 | 28085 | 28111 |
| 28131 | 28147 | 28167 | 28178 | 28188 | 28204 | 28232 | 28273 | 28319 | 28346 | 28416 | 28720 | 28725 | 28754 | 28921 |
| 28955 | 29003 | 29188 | 29212 | 29363 | 29445 | 29554 | 29876 | 30048 | 30111 | 30193 | 30199 | 30266 | 30727 | 30849 |
| 30862 | 30883 | 30921 | 30940 | 30948 | 30958 | 30966 | 31075 | 31083 | 31090 | 31108 | 31128 | 31148 | 31184 | 31190 |
| 31192 | 31229 | 31273 | 31291 | 31415 | 31460 | 31557 | 31562 | 31588 | 31662 | 31663 | 31697 | 31710 | 31758 | 31762 |
| 31764 | 31779 | 31883 | 31901 | 31908 | 31919 | 32038 | 32084 | 32090 | 32103 | 32111 | 32118 | 32123 | 32171 | 32227 |
| 32250 | 32313 | 32382 | 32385 | 32391 | 32408 | 32439 | 32467 | 32486 | 32622 | 32627 | 32644 | 32655 | 32679 | 32706 |
| 32727 | 32739 | 32748 | 32763 | 32772 | 32831 | 32834 | 32843 | 32886 | 32920 | 32959 | 32973 | 32996 | 32997 | 33164 |
| 33177 | 33179 | 33242 | 33242 | 33296 | 33387 | 33396 | 33760 | 34027 | 34131 | 34272 | 24285 | 34377 | 34428 | 34472 |
| 34517 | 34521 | 34653 | 34686 | 34716 | 34732 | 34828 | 34940 | 34962 | 34994 | 35001 | 35021 | 35048 | 35117 | 35193 |
| 35225 | 35237 | 35246 | 35259 | 35276 | 35277 | 35292 | 35312 | 35316 | 35376 | 35380 | 35388 | 35396 | 35405 | 35417 |
| 35475 | 35536 | 35547 | 35587 | 35594 | 35597 | 35607 | 35633 | 35720 | 35721 | 35722 | 35729 | 35733 | 35745 | 35795 |
| 35806 | 35811 | 35854 | 35873 | 35985 | 36042 | 36055 | 36059 | 36118 | 36213 | 36227 | 36243 | 36283 | 36292 | 36313 |
| 36328 | 36338 | 36375 | 36410 | 36427 | 36475 | 36495 | 36588 | 36648 | 36781 | 36793 | 36909 | 37019 | 37096 | 37200 |
| 37510 | 37540 | 37561 | 37604 | 37611 | 37633 | 37727 | 37811 | 38020 | 38027 | 38040 | 38069 | 38107 | 38281 | 38288 |
| 38346 | 38348 | 38384 | 38411 | 38491 | 38509 | 38598 | 38623 | 38700 | 38704 | 38731 | 38742 | 38869 | 38928 | 38941 |
| 39019 | 39092 | 39185 | 39201 | 39217 | 39435 | 39448 | 39597 | 39746 | 39894 | 40024 | 40100 | 40128 | 40156 | 40167 |

## சிறப்புத் தேர்வுகள் - மே '90
## வேளாண்மைத் துறையின் தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கான வேளாண்மைத் துறைத் தேர்வு

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 60 | 554 | 751 | 898 | 929 | 1007 | 1055 | 1104 | 1112 | 1224 | 1229 | 1372 | 1471 | 1713 | 2141 |
| 2456 | 3001 | 3360 | 3729 | 3849 | 3900 | 4576 | 4646 | 4697 | 4703 | 4864 | 5226 | 5611 | 5693 | 5748 |
| 6055 | 6258 | 6363 | 6465 | 6466 | 6491 | 7021 | 7215 | 7249 | 7290 | 7421 | 7513 | 7845 | 8042 | 8238 |
| 8780 | 8801 | 9771 | 9878 | 10558 | 10668 | 11927 | 12304 | 12570 | 12577 | 12873 | 12896 | 14579 | 14601 | 14892 |
| 14905 | 14969 | 14971 | 14980 | 15041 | 15098 | 15229 | 15376 | 15799 | 15849 | 15854 | 15922 | 16237 | 16257 | 16282 |
| 16799 | 16818 | 17180 | 17426 | 17431 | 17447 | 18078 | 18189 | 18353 | 18395 | 18475 | 18522 | 19016 | 19396 | 19488 |
| 19582 | 19634 | 19738 | | | | | | | | | | | | |

## ஊராட்சி வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கான துறைத்தேர்வு:
## தாள் IV-1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமும் அதன் கீழ் வெளியிடப்பெற்ற விதிகளும் ஆணைகளும்:

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22075 | 22140 | 22165 | 22182 | 22225 | 22304 | 22359 | 22360 | 22428 | 22443 | 22525 | 22532 | 22621 | 22748 | 22758 |
| 23007 | 23074 | 23128 | 23160 | 23196 | 23211 | 23234 | 23281 | 23291 | 23292 | 23296 | 23315 | 23394 | 23726 | 23758 |
| 23801 | 23823 | 23829 | 23853 | 23867 | 23884 | 23922 | 23958 | 23972 | 23990 | 24016 | 24017 | 24035 | 24041 | 24088 |
| 24121 | 24124 | 24127 | 24136 | 24204 | 24237 | 24244 | 24280 | 24287 | 24326 | 24349 | 24564 | 24594 | 24595 | 24606 |
| 24646 | 24681 | 24754 | 24872 | 24873 | 24929 | 25012 | 25018 | 25164 | 25174 | 25198 | 25209 | 25236 | 25293 | 25301 |
| 25306 | 25352 | 25457 | 25812 | 25917 | 25953 | 25955 | 25992 | 26008 | 26030 | 26085 | 26121 | 26231 | 26234 | 26264 |
| 26282 | 26291 | 26330 | 26359 | 26427 | 26443 | 26465 | 26520 | 26549 | 26657 | 26667 | 26702 | 26820 | 26839 | 26858 |
| 26977 | 27179 | 27297 | 27315 | 27370 | 27379 | 27455 | 27474 | 27480 | 27642 | 27646 | 27665 | 27697 | 27705 | 27708 |
| 27725 | 27734 | 27779 | 27897 | 28109 | 28125 | 28162 | 28174 | 28185 | 28198 | 28340 | 28524 | 29032 | 29168 | 29389 |
| 29496 | 29593 | 29874 | 29937 | 29943 | 30178 | 30226 | 30554 | 30633 | 30701 | 30911 | 30944 | 30954 | 31014 | 31039 |
| 31409 | 31445 | 31468 | 31528 | 31626 | 31754 | 31770 | 31782 | 31824 | 31839 | 31904 | 31910 | 31918 | 31921 | 31939 |
| 31941 | 31980 | 32006 | 32008 | 32018 | 32025 | 32043 | 32045 | 32057 | 32086 | 32104 | 32119 | 32142 | 32253 | 32351 |
| 32377 | 32386 | 32398 | 32435 | 32449 | 32465 | 32466 | 32472 | 32526 | 32565 | 32596 | 32611 | 32617 | 32626 | 32638 |
| 32641 | 32692 | 32702 | 32704 | 32714 | 32716 | 32724 | 32742 | 32769 | 32771 | 32782 | 32808 | 32839 | 32850 | 32872 |
| 32893 | 32896 | 32897 | 32916 | 32940 | 32966 | 33006 | 33016 | 33017 | 33019 | 33060 | 33080 | 33081 | 33092 | 33100 |
| 33118 | 33132 | 33149 | 33181 | 33183 | 33239 | 33260 | 33264 | 33269 | 33271 | 33314 | 33326 | 33351 | 33359 | 33394 |
| 33438 | 33470 | 33484 | 33495 | 33502 | 33522 | 33537 | 33542 | 33579 | 33612 | 33629 | 33639 | 33733 | 33776 | 33888 |
| 33900 | 33924 | 33939 | 33944 | 34194 | 34220 | 34221 | 34251 | 34273 | 34281 | 34298 | 34313 | 34327 | 34389 | 34397 |
| 34416 | 34445 | 34456 | 34462 | 34470 | 34479 | 34483 | 34488 | 34504 | 34530 | 34534 | 34582 | 34642 | 34661 | 34689 |
| 34737 | 34739 | 34740 | 34744 | 34783 | 34791 | 34806 | 34976 | 34993 | 35009 | 35093 | 35094 | 35187 | 35253 | 35377 |
| 35414 | 35437 | 35531 | 35535 | 35632 | 35651 | 35668 | 35744 | 35783 | 35791 | 35797 | 35819 | 35848 | 35872 | 35935 |
| 35958 | 35988 | 35994 | 36058 | 36089 | 36103 | 36116 | 36117 | 36119 | 36189 | 36193 | 36207 | 36304 | 36347 | 36374 |
| 36394 | 36609 | 36772 | 36783 | 36810 | 36812 | 36818 | 36887 | 36906 | 36951 | 37057 | 37104 | 37118 | 37193 | 37220 |
| 37253 | 37261 | 37313 | 37415 | 37529 | 37625 | 37649 | 37926 | 37954 | 37959 | 37967 | 38035 | 38055 | 38126 | 38280 |
| 38305 | 38319 | 38481 | 38517 | 38682 | 38745 | 38762 | 38825 | 38834 | 38943 | 39013 | 39086 | 39095 | 39248 | 39269 |
| 39285 | 39293 | 39325 | 39379 | 39391 | 39446 | 39503 | 39650 | 39668 | 39811 | 39841 | 39865 | 39880 | 39901 | 39986 |
| 40046 | 40055 | 40081 | 40140 | 40150 | 40154 | | | | | | | | | |

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



Licence No. TN/MS(C)/PP-23





திருச்சி மாவட்டம், குமுளூரில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரிக் கட்டடங்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களும், தமிழக அமைச்சர் பெருமக்களும், முன்னாள் அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களும் விழாவில் கலந்து கொண்டனர் (11.7.90).




3 - செப் 1990
எழும்பூர், சென்னை-600008.



சுவாமி சகஜானந்தா

தோற்றம்:
29.1.1890

மறைவு:
1.5.1959

# இந்த இதழில்...


உயர்பண்பு கொண்ட ஒப்பற்ற தலைவர்
— முதல்வர் கலைஞர் ... 2
சமுதாயத் தொண்டர் சகஜானந்தா ... 3
சுவாமி சகஜானந்தா அணையா தியாகச்சுடர் ... 5
தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முதல்வர் நிகழ்ச்சிகள் ... 7
நூற்றாண்டு விழாக் காணும் வ.ரா. ... 9
வாழ்வில் ஒளியேற்றும் திட்டம் ... 13
தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் ... 15
பல்லவர் காலக் கண்மாய்க் கல்வெட்டு கண்டுபிடிப்பு ... 16
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - விளம்பரங்கள் ... 17
டாக்டர் அம்பேத்கர் ஒரு சரித்திர நாயகர் ... 33
வளரும் வேளாண்மை ... 37
ஊரும் பேரும் ... 39
ஆனந்த வெள்ளத்தில் ஐம்பதாயிரம் குடும்பங்கள் ... 40
ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் நீதிமன்றங்கள் உதவிட வேண்டும்
முதல்வர் கலைஞர் ... 41
மாணவர் பக்கம் ... 43
வேலூர்ப் புரட்சி ... 44


## முகப்பில்...

இந்திய நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டு ஈடில்லாப் பெருமை பெற்ற எண்ணற்ற தமிழகத் தலைவர்களில் ஒன்பது பெருமக்கள் இந்த இதழின் முகப்பை அணி செய்கிறார்கள்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆடித் திங்கள் - 31

மலர்: 21 இதழ்: 4

16-8-1990


மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் மற்றும் ரசாயனத்துறை அமைச்சர் திரு எம்.எஸ். குருபாதசுவாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 12.8.90 அன்று சென்னை-மணலியில் புதிய ரசாயனத் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தார். அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப., 'டிட்கோ' தலைவர் திரு கே. வெங்கடேசன் இ.ஆ.ப.; தொழிற்சாலை அதிபர் திரு விஜயமல்லையா ஆகியோர் உடனிருக்கின்றனர்.



# உயர் பண்பு மணியட்ட ஒப்பற்ற தலைவர்!

## — முதல்வர் கலைஞர்

உயர்ந்த பண்புகளைக் கொண்ட தலைவர்களிலே ஒருவராக, அறிஞராக, சமூக சீர்திருத்தவாதியாக, ஆன்மீக சமயத் தலைவராக, கல்வித் துறை மேம்பாட்டு வித்தகராக, புனிதப் பணிக்கு, தன்னை அர்ப்பணித்துக் கொண்டவராக, ஒதுக்கப்பட்ட மக்களின் புரவலராக அறியாமை, வறுமை போன்ற இருளில் முடங்கிக் கிடக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை, கை தூக்கிவிட வந்த காவலனாக, வாழ்ந்து மறைந்த சுவாமி சகஜானந்தா அவர்களுடைய நூற்றாண்டு விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

சட்டப்பேரவையில் 1957-ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியிலே வெற்றிபெற்று அண்ணா அவர்களுடைய தலைமையிலேயே 15 பேர் கழகச் சார்பில் சட்டப் பேரவை உறுப்பினராகச் சென்றபோது சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு அருகாமையில் அமரக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான்.

'57-ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் அவர்களை சந்தித்து அவர் ஆற்றிய கருத்துரைகள் பலவற்றைச் செவி மடுத்து, சிந்தித்து, இத்தகைய பெரியவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் கலங்கரை விளக்குகளாக விளங்குகிறார்களே என்பதை எண்ணி வியப்புற்று மகிழ்ந்து போற்றி, புகழ்ந்து, கட்சி வேறுபாடுகளுக்கிடையேயும் தாழ்ந்து கிடக்கிற சமுதாயத்தை உயர்த்த வேண்டும் என்கிற ஒரு உன்னத நோக்கம், கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இழையோடிய காரணத்தால், அந்தப் பெருமகனை நாங்களெல்லாம் மதித்து வாழ்த்திக் கொண்டிருந்த போது 1959-ஆம் ஆண்டில் மறைந்துவிட்டார்கள்.

இந்தத் தில்லை திருத்தலத்திலே அவருடைய குருநாதருடைய ஆணைக்கேற்ப இங்கே வாழத்தொடங்கி, வாழ முடியாமல் இருந்த மக்களை எல்லாம் வாழ வைப்பதற்கு வகைகள் பல கண்டார். அவருடைய பெயரை நான் எண்ணி எண்ணிப் பார்த்தேன், எப்படி சகஜானந்தா என்ற பெயர் அவருக்கு அமைந்தது என்று!

நந்தனுடைய கொள்கைகளைப் போற்றி நந்தன் வழிநின்று, நந்தன் ஆன்மீகத் துறையிலே அன்றைக்கு நடத்திக்காட்டிய புரட்சியைப் போற்றி எந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயங்களுக்குச் செல்லக் கூடாது என்ற தடை உத்தரவு அன்றைக்கு இருந்த தருக்கர்களால் விடப்பட்டிருந்ததோ, அதை இடறியெறிய அன்றைக்கு நந்தன் புரட்சி செய்தார். அந்தப் புரட்சியைச் செய்து நந்தன் ஆலயத்திற்குள்ளே செல்ல ஆண்டவனுடைய அருளைப் பெற்றான் என்றெல்லாம் புராணங்கள் எழுதப்பட்டிருந்தாலும்கூட, தனி ஒருவனாக நின்று அந்தக் காலத்தில் நந்தன் நடத்திய புரட்சிதான், சிதம்பரம் கோவிலுக்குள்ளே அவன் தடைகளை உடைத்து நுழைந்த அந்த நிகழ்ச்சியாகும்!

1959-இல் அவர் மறைகிறார். அவருக்கு அதுவரையில் சிலை வைக்கவில்லை. 59-இல் மறைந்தவருக்கு 61-ஆம் ஆண்டு, 62-ஆம் ஆண்டு, 63-ஆம் ஆண்டு, 64-ஆம் ஆண்டிலும் சிலை வைக்கவில்லை. 69-ஆம் ஆண்டு கருணாநிதி முதலமைச்சராக வந்தபிறகு தான் 59-ல் மறைந்தவருக்கு 10 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு கருணாநிதி தலைமையிலே இங்கே சிலை வைக்கப்பட்டதென்றால் சகஜானந்தருக்காக உரிமை கொண்டாடக் கூடிய தகுதி, யோக்கியதை அத்தனையும் வாய்ந்தவர்கள் தான் இந்த மேடையிலே இப்போது வீற்றிருக்கிறார்கள்

அந்த நந்தனுடைய குணாதிசயங்களை —அவனுடைய புரட்சி உள்ளத்தை— புதுமை எண்ணத்தை - முனுசாமி என்கிற அந்தப் பெரியவரும் பெற்றிருந்த காரணத்தால் தான் தன்னுடைய பெயரை சகஜா நந்தன் என்று மாற்றிக்கொண்டிருக்கிறார். சகஜாநந்தன் அல்ல. 'சகஜா நந்தர்' அந்த நந்தனின் வழித் தோன்றலாக இன்னொரு நந்தன் இந்தத் தில்லைக்கு வந்தார். அந்த நந்தன்தான் சகஜாநந்தன் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே அவர் நடத்திய அரும்பெரும் செயல்கள், அவர் உருவாக்கிய கல்விப் பணி, இந்த சமுதாயம் தலை தாழ்ந்து கிடக்கக்கூடாது, தலை நிமிர்ந்து நடக்க வேண்டும் என்பதற்காக நடத்திய அறப் போராட்டங்கள் இவைகளெல்லாம் அவருடைய வாழ்க்கையில் வைர ஜொலிப்புகளாக இன்றைக்கும் தென்படக் கூடியவைகளாகும்.

அவர் இன்று இல்லையென்றாலும்கூட இந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் நம்முடைய விழாத்தலைவர் எடுத்துக்காட்டியதைப்போல, ஒரு பெரும் மாறுதலை இந்த சமுதாயம் சந்தித்திருக்கிறது. ஆனாலும் முழுமையான மாறுதல் ஏற்பட்டு விட்டதா, மனநிறைவு கொள்ளத்



தக்க மாறுதல் ஏற்பட்டுவிட்டதா என்றால் இல்லை. ஏனென்றால் இது, காலம் காலமாக நம்முடைய தலையிலே சுமத்தப்பட்ட, நம்முடைய சமுதாயத்திலே ஊற வைக்கப்பட்ட, நம்முடைய ரத்தத்திலே ஏற்றப்பட்ட உணர்வாக ஆகிவிட்ட காரணத்தால்தான் உடனடியாக அதை அகற்ற முடியாத ஒரு தொல்லைக்கு இந்த சமுதாய மக்கள் இன்றைக்கு ஆட்பட்டுக் கிடக்கின்றார்கள்.

இங்கே பேசிய பலரும், இறுதியாக எனக்கு முன்னால் பேசி சபாநாயகர் உட்பட அனைவரும், 'சகஜானந்தா அவர்களுடைய பெயரால் இங்கே ஒரு கல்லூரி அமைய வேண்டும், அது மகளிர் கல்லூரியாகவும், ஆடவர் கல்லூரியாகவும் இரண்டும் அமைய வேண்டும்' என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் அந்தக் கருத்துக்களுக்குப்புறம்பானவன் அல்ல. அவருடைய நூற்றாண்டு விழாவில் பெருமையோடு மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களையும் கலந்து கொண்டு, விரைவில் அந்தக்கல்லூரியினுடைய தொடக்கத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த விழாவில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(9.8.90 அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)**





# சமுதாயத் தொண்டர் சகஜானந்தா

தேவேந்திரநாத் சாரங்கி
இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தென் ஆர்க்காடு மாவட்டம்

இம்மண்ணுலகில் பிறக்கின்ற அனைவருமே மகாத்மாவாக ஆகிவிடுவதில்லை. அத்தகைய மகான்கள் இயற்கையின் உந்துதலினால்- தன்னலமற்ற அரும் பெரும் செயல்களினால்- வெளி உலகிற்குக் காட்டிக் கொள்ளும் சம்பவம் மிகவும் அரிதாகும். அத்தகைய மகான்களில் ஒருவர்தான் நந்தன் அருள் பெற்ற நந்தா விளக்காம் தவத்திரு சுவாமி சகஜானந்தா அவர்கள்.

**இளமைக் கல்வி:**

இளமையிலிருந்தே இறைவன் மீது பக்தி கொண்டவர் இவர்.

ஜனார்த்தன நாயுடு எனும் தனவந்தர் வீட்டில் பணிபுரிந்த சுவாமி சகஜானந்தா, தந்தை கோபத்தில் பேசியதால், பெற்றோரிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் முனுகுபட்டு கிராமம் சென்று நீலமேக பிள்ளை என்பவரது உதவியால், திண்டிவனம் மிஷன் பள்ளியில் சேர்ந்து இளமைக் கல்வியைத் தொடங்கினார்.

அந்த மிஷனில் உள்ள பாதிரிமார்கள் சுவாமிகளைக் கிறித்துவ மதமாற்றம் செய்ய முயற்சிக்கவே அவர்களிடம் இருந்து தப்பிச் சென்னை சென்றார். அங்கு மாசிலாமணி தேசிகர்- அமிர்தம்பாள் தம்பதியின் பாதுகாப்பில் இருந்து கொண்டு வடிவேல் செட்டியார், டி.கே. சிதம்பரநாத முதலியார் ஆகிய இருவரிடமும் முறையே மகாபாரதம், இராமாயணம் ஆகிய நூல்களைக் கற்றார்.

**அறிவில் சிறத்தல்:**

வியாசர்பாடி கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளிடம் சகல சித்தாந்த வேதாந்தங்களையும், புராணம், உபநிடதங்களையும் ஐயமறக் கற்றுணர்ந்த சுவாமிகள், பகவத் கீதையையும் கற்றுணர்ந்து வடமொழியில் வல்லவரானார். ஆதிசங்கரர் அருளிய மனுஷா பஞ்சரத்தினத்தை மிகத் தெளிவாக, வேதங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்களே வியக்கும் வண்ணம் எடுத்து ஓதினார். தியாகச் செம்மல் வ. உ. சிதம்பரனாரிடம் திருக்குறளைக் கற்றுத் தெளிவு பெற்றார்.

**சிதம்பரத்தில் சுவாமிகள்:**

தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் ஆணைப்படி 1910-ல் தில்லை நடராசப் பெருமானின் அருள் வேண்டி, 48 நாட்கள் தில்லையில் சாதுக்களுடன் கோயிலில் தங்கியிருந்தார். தில்லை நடராசன் திவ்விய தரிசனம் காணச் செல்லும் முன், நந்தனார் புனித நீராடிய ஓமக்குளத்தை ஒட்டி, தென்கரையில் ஒரு சிறு குடிசையில் நடராசன் என்ற சாதுவுடன் தங்கித் தன் பணியினைத் தொடங்கினார். சாதி, சமயம், மதம், இனம், குலம் போன்ற பாகுபாடுகள் நந்தனார் காலத்தைப் போலவே 1916-ஆம் ஆண்டிலும் இருந்தது. சிதம்பரத்தைச் சுற்றி வசித்து வந்த ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கை முறையைக் கண்டு இவர், மனம் வருந்தினார். அவர்களைச் சந்தித்து, 'மாமிசம் உண்ணக்கூடாது' என்றும், 'கள்குடிக்கக்கூடாது' என்றும், 'கோயிலில் வழிபாடு செய்தால் மனம் பண்படும்' என்றும், வழிபாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியும், பழமையில் ஊறிய அந்த மக்கள் செவிசாய்க்கவில்லை. இத்தகைய நிலையில் அந்த மக்களைத் திருத்த அவ்வினத்தைச் சேர்ந்த இளைய சமுதாயத்தின் மூலமாகத்தான் முடியும், அதுகூட அவர்களுக்குக் கல்விப் பணி மூலமாகத்தான் செய்ய முடியும் என்று முடிவு செய்து, ஆதிதிராவிட ஆண் பெண் இருபாலருக்கும் ஆகப் பதினைந்து பேர்களுக்கு ஒரு பள்ளி ஆரம்பித்து, ஓமக்குளம் வடபகுதியில் இருந்த திருவாளர் மாரிமுத்து ஆசிரியர் உதவியினால் கல்வி பயிற்றுவித்தார்

**நந்தனார் கல்விக்கூடம்:**

ஓமக்குளத்தில் தொடங்கப்பட்ட அந்தப் பள்ளியை திரு சுவாமிநாதன், சண்முகநாடார் இவர்கள் உதவியுடன் 50 பிள்ளைகளை வைத்து உறைவிடப் பள்ளியாக சுவாமிகள் நடத்தி வந்தார். தமது 20-ஆம் வயதில் 1910-இல் சிதம்பரம் வந்த சுவாமிகளை அறிஞர்களும், செல்வந்தர்களும் பாராட்டிச் செல்வதைக் கண்ட பரஞ்சோதி சுவாமிகளும் பண்ணப்பட்டு சத்குரு சுவாமிகளும், சுவாமிகளுக்குப் பல வழிகளிலும் துணையாக இருந்தனர். சுவாமிகளால் சில மாணவர்களை வைத்துத் துவக்கப்பட்ட நந்தனார் பள்ளியில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை அரசு அங்கீகரித்தது; சதாசிவ அய்யரைத் தலைமை ஆசிரியராகவும், குருசாமி அய்யரை எழுத்தராகவும் கொண்டு அந்தப் பள்ளி விளங்கியது.

**நந்தனார் கல்விக் கழகம்:**

சுவாமிகளது சீரிய கல்விப் பணியினையும், தொண்டினையும் சீர்திருத்த நடவடிக்கைகளையும் கண்ட ஆங்கிலேய அரசு சுமார் 100 ஏக்கர் தரிசு நிலங்களைக் கல்வி வளர்ச்சிக்காக சுவாமிகளுக்கு வழங்கியது. சென்னையில் தன்னை வளர்த்து ஆளாக்கிய மாசிலாமணி- அமிர்தம்பாள் தம்பதி'யை நிர்வாகியாகக் கொண்டு, 25 உறுப்பினர்கள் கொண்ட ''நந்தனார் கல்விக் கழகம்'' அமைக்கப்பட்டது. சுவாமிகள் அதற்குப் பொதுச் செயலாளராகவும், செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் அமைப்பாளராகவும் செயல்பட்டனர். ஆங்கிலேய அரசு வழங்கிய நிலத்தின் வருவாயிலும், அரசு உதவித் தொகை, நகரச் செல்வந்தர்கள் கொடுத்த நன்கொடைகள் ஆகியவற்றின் உதவி கொண்டும் பள்ளியையும், உணவு விடுதியினையும் திறம்பட நடத்தி, கல்வி வளர்ச்சிக்கு சுவாமி சகஜானந்தா அரும்பாடு பட்டார்.

சுவாமிகள் மலேசியா, சிங்கப்பூர், சைனா, ரங்கூன், பர்மா முதலான நாடுகளுக்குச் சென்று, தனவந்தர்களிடம் கொடைகள் பெற்றுக் கல்விக் கழகத்தைச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார்.

**சமயம் மற்றும் பொதுப்பணி:**

சுவாமிகள் அவர்கள், அவரது தெய்வ வழிபாட்டினாலும், சமய போதனைகளாலும் அனைத்துத் தரப்பு மக்களையும் கவர்ந்தார். சுவாமிகள் கோயிலுக்குள் நுழையக்கூடாது என்று கல்லெறிந்த மக்கள், பின்னர், சிதம்பரத்தில் தில்லை நடராசப் பெருமானின் தேரோடும் நான்கு வீதிகளிலும் சுவாமிகள் பக்திப் பரவசத்துடன், கண்ணை முடிக்கொண்டு, தெய்வ வழிபாட்டுப் பாடல்களைப் பாடிக் கொண்டு செல்லும் பொழுது அவரிடம் ஆசீர்வாதம் பெற்றனர். தன்னை வெறுத்தாரையும் பொறுத்து, தன்னகத்தே ஆட்கொண்டார். சுவாமிகள் சிவலோக நாதர் கோயிலை சிதம்பரத்தில் கட்டி சமயப் பணியாற்றியது ஒரு முத்தாய்ப்பான செயலாகும். சுவாமிகள் அவர்கள் நகர்மன்ற உறுப்பினராகவும், சிதம்பரம் நகரத் தந்தையாகவும் சில காலம் பணியாற்றினார். தமிழக சட்டமன்ற மேல் சபை உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் 35 ஆண்டுகள் - அவரது இறுதிக்காலம் வரை பணியாற்றிய தன் காரணமாக அவருக்கு 'சட்டமன்றத் தந்தை' என அரசு பெயர் சூட்டிச் சிறப்புச் செய்தது. மேலும், மாவட்ட நிர்வாகி ஆகவும், கல்வி அறநிலையப் பாதுகாப்பு ஆகியவற்றின் உறுப்பினராகவும் இவர் பொதுப்பணி ஆற்றியுள்ளார்.

1939-இல் நந்தனார் கல்விக் கழகம், அரசுடைமையாக்கப்பட்டு, அரசு நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி என்றும், நந்தனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி என்றும் அரசால் நிர்வகிக்கப்பட்டு, இன்று பெண்கள் பள்ளியில் 2500 மாணவிகளும், ஆண்கள் பள்ளியில் 4000 மாணவர்களும் படித்துப் பயனடைகிறார்கள். ஆதிதிராவிடர் நலத் துறையினால் நடத்தப்படும் சிதம்பரம் நந்தனார் மாணவர் விடுதிதான், தமிழகத்திலேயே மிகப் பெரியது ஆகும். இங்கு 1540 மாணவர்கள் தங்கிப் படித்துப் பயன்பெற்று வருகின்றனர்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடிவெள்ளியாய், துருவ நட்சத்திரமாய்த் தோன்றி, இந்திய அரசியல் சட்டத்தையே இயற்றி, இறவாப்புகழ் படைத்த டாக்டர் அம்பேத்கர் அவர்களது காலத்திற்கு முன்பே, தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி சமயப் பாகுபாட்டினால் பாதிக்கப்படுவதைக் கண்டு, அறியாமை எனும் இருளில் தட்டுத்தடுமாறிக் கொண்டிருந்த அந்தச்சமுதாய மக்கள் முன்னேற கல்வி எனும் ஒளிவிளக்கை ஏற்றி, நிறுவனங்களை அமைத்து, கல்வி ஒன்றினால்தான் அவர்களை முன்னேற்ற முடியும் என்று அரும்பாடுபட்ட சுவாமி சகஜானந்தா அவர்களது சமுதாயப் பணியையும், அவர்களது கல்வித் தொண்டினையும் பாராட்டியும், நினைவு கூர்ந்தும் ஆகஸ்ட் திங்களில், தமிழக அரசு சுவாமி சகஜானந்தா அவர்களது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடி, சிறப்புச் செய்துள்ளது.

சுவாமி சகஜானந்தா அவர்கள் 1959-ஆம் ஆண்டு இப்பூவுலகை விட்டு மறைந்தாலும், அவரது அரிய தொண்[டு]களாலும், ஆக்கப் பணிகளாலும் ந[ம்]மிடையே வாழ்ந்து கொண்டு இருக்கிறா[ர்]. அவரது புகழ், குன்றின் மேலிட்ட விள[க்]காய் பிரகாசித்துக் கொண்டிருக்கிற[து]. அவரது தொண்டினையும், கோட்பா[டு]களையும் பின்பற்றி நடத்தலே நா[ம்] அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

வாழ்க சுவாமி சகஜானந்தாவி[ன்] தொண்டு! வளர்க அவர்தம் புகழ்!!



## கருணைக் கடல் சகஜானந்தா

நோக்கும் பொருள்கள் யாவிலுமே - நெஞ்சம்
நோக்கித் தவிக்குது உன் உருவை
பார்த்துத் தணிக்க முடியாமல் - சமுதாயப்
பாசம் வாட்டுது என்னுடலை!

கொல்லையில் பூத்திடும் முல்லையிலே - அந்தி
கூட்டில் சிரித்திடும் ரோஜாவிலே!
சொக்கும் உன் சிலை எதிரினிலே - ஒளிச்
சோதியாய் உன் உரு தோணுதைய்யா!!

தாழ்த்தப்பட்ட மக்கள் நெஞ்சினிலே - தன்னை
தாழ்த்திக் கொண்டு தொண்டு செய்தவரே!
கருணைக் கடலாக வாழ்ந்தவரே - எமக்குக்
கால மெல்லாம் கல்வி தந்தவரே!

வாழ வழிவகை செய்தவரே - எங்கள்
வாழ்நாளில் ஒரு நாளும் நாம் மறவோம்!
போற்றி நின் சேவடி போற்றி நின்று - இந்தப்
புவி எல்லாம் நின் புகழ் பாடிடுவோம்!

ஜி கோ.தண்டபாணி



# சுவாமி சகஜானந்தா அணையா தியாகச் சுடர்

எல். இளையபெருமாள்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
தலைவர் ஸ்ரீ நந்தனார் கல்விக்கழகம்

சுவாமி சகஜானந்தா அவர்கள், வட ஆர்க்காடு மாவட்டம் ஆரணி வட்டம், ராயபுதுப்பாக்கம் அருகில் உள்ள சிறிய கிராமத்தில் அண்ணாமலை என்ற பெரியாருக்கும், அலமேலு என்ற அம்மையாருக்கும் 1890-ஆம் ஆண்டு சனவரி 29-இல் பிறந்தார். இப்பெரியாருக்குத் தாய், தந்தையர் வைத்த பெயர் முனுசாமி. விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோருக்குப் பிறந்ததால் தம் குடும்பத்தில் உள்ள சிரமங்களை நன்கு உணர்ந்தவராக இருந்தார். இவரது பெற்றோர்கள், அக்கிராமத்தில், ஒரு ரெட்டியார் குடும்பத்தில் விவசாய வேலை செய்து வந்தனர். சுவாமி அவர்கள் சிறு வயது முதற்கொண்டே தெய்வ பக்தியில் சிறந்து விளங்கினார். ஒரு நாள் தனது தாய் தந்தையரை முதலாளி கோபமாகப் பேசியதும், தன்னை விவசாய வேலையில் கட்டாயம் ஈடுபடச் செய்ததும், மிகவும் மன வருத்தத்தைச் சுவாமிகளுக்குக் கொடுத்தன.

**கல்வி**

சிறுவயது முதற்கொண்டே கல்வியில் பேராவலும், தெய்வ பக்தியும் கொண்ட சுவாமிகள், குடும்பச் சூழ்நிலையால் வேதனைப்பட்டு, வீட்டை விட்டு வெளியேறி, சென்னை வந்தடைந்தார். நடந்து வந்த களைப்பால் சென்னையில் உள்ள வியாசர்பாடி கரபாத்திரசிவப்பிரகாச சுவாமி மடத்தின் எதிரில் மயக்கமுற்று விழுந்து விட்டார்.

அதிகாலையில் சிவப்பிரகாச சுவாமிகள், மடத்தை விட்டு வெளியே வந்து உலாவ வந்த பொழுது மயக்கமான நிலையில் இருந்த சுவாமிகளை எழுப்பி "நீ யார்?" எனக் கேட்ட பொழுது "நான் பிரம்மம்; நந்தனார் குலம்" எனச் சொல்லக் கேட்ட சிவப்பிரகாச சுவாமிகள் மிக வியப்போடு "தீண்டாமைக் கொடுமை நிறைந்த இந்நாளில் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த ஒரு இளைஞன், இப்பதிலைச் சொல்லவில்லை, ஆண்டவனே இவ்விளைஞனுக்கு வழிகாட்டுகிறார்" என்று எண்ணி அன்று முதல் உணவு, உடை கொடுத்துக் கல்வியும் சொல்லிக் கொடுத்து வந்தார்.

தன்னை எந்த இனம் என்று யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சுவாமிகள் அவருக்கு எச்சரிக்கை செய்து இருந்தார். அன்றைய சூழ்நிலையில் இருந்த சாதிக்கொடுமைதான் காரணம். 1906-ஆம் ஆண்டு முதல் 1910-ஆம் ஆண்டுவரை சிவப்பிரகாச சுவாமிகள் வசம் மாணவனாக இருந்து தமிழ், சமஸ்கிருதம் தெளிவுறப் பயின்று சன்னியாசம் பெற்றார். அது சமயம், இவரது இயற்பெயரான "முனுசாமி" என்பதை மாற்றி "சகஜானந்தம்" என்று பெயர் சூட்டப்பட்டார். சுவாமி அவர்கள் பாரதியாரிடமும், வ.உ. சிதம்பரனாரிடமும் தமிழ் இலக்கண இலக்கியம் கற்றார்.

**ஆன்மீக வல்லுநர்:**

சுவாமி அவர்கள் சிதம்பரத்தில் அன்று ஆன்மீகத் துறையில் பெரும் புகழோடு விளங்கிய பரஞ்சோதி சுவாமிகளிடமும், பாம்பன் சுவாமிகளிடமும், மௌன சுவாமிகளிடமும், பரபிரம்ம யோகானந்த சுவாமிகளிடமும் ஆன்மீகத் துறையில் கலந்துரையாடி வாழ்ந்தார். தில்லையில் உள்ள தீட்சிதரிடம் சமஸ்கிருதத்தில் நான்கு வேதங்களைப் பற்றி விவாதித்து , வேதங்களில் எந்த ஒரு இடத்திலும் தீண்டாமை என்ற வார்த்தையோ- அல்லது மனித குலத்தின் எந்த ஒரு பிரிவினரையும் 'தீண்டாதவர்' என்றோ குறிப்பிடப்படவில்லை என விவாதித்து வெற்றி பெற்றார்.



1910-ஆம் ஆண்டு சிதம்பரத்தில் உள்ள ஓமக்குளம் தென்கரையில் உள்ள நந்தன் மடத்தில் வசித்து வந்த சன்னியாசி, அரதூர் ஆறுமுக சுவாமிகளோடு சேர்ந்து வாழ்ந்து, சமயத் தொண்டும் கல்வித் தொண்டும் சமூகத் தொண்டும் செய்வது என முடிவு செய்தார்.

**கல்விப் பணி**

ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த நந்தன் பேரில் ஆன்மீகத் துறையில் ஆர்வம் கொண்டு, நந்தனார் பெயரால் கல்வி நிலையம் தொடங்கி, நந்தனார் குலத்து மக்களுக்கு, எல்லா சமுதாய மக்களின் அன்புடனும் ஆதரவோடும் கல்விப்பணியினைத் தொடங்கினார். முதல் ஆசிரியராக திரு. மாரிமுத்து என்பவரை நியமித்து இப்பணியைத் தொடங்கினார். அது சமயம், அருகில் உள்ள ஓமக்குளம் தான் நந்தனார் மூழ்கி எழுந்த இடம் என்று தெரிந்து இருந்தும், ஆதிதிராவிடர் மக்கள் அக்குளத்து நீரை எடுக்கக் கூடாது என்று கட்டுப்பாடு இருந்தது. அதைக் கண்டு கண் கலங்கினார்.

1917-ஆம் ஆண்டு இக்குளத்தில் இறங்கி, தன் இன மக்களோடு தடை கடந்து, தண்ணீர் எடுக்க முயற்சி செய்தார்.

ஆன்மீகத் துறையில் உள்ள பெரியவர்களோடும், அண்ணாமலைச் செட்டியாரோடும், பனகல் ராஜாவிடமும், திருவாங்கூர் ராஜாவிடமும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா ஆகிய இடங்களில் வாழ்ந்த தமிழர்களோடும் தொடர்பு கொண்டு, சமயம், கல்வி போன்ற நற்பணிகளுக்காகச் சுற்றுப் பயணம் செய்தார்.

**பெண்கள் கல்வி**

சமயப் பணியோடு, தீண்டாமை ஒழிப்பு, மது விலக்கு, பொருளாதார உயர்வு, அரசியல் ஆகிய துறைகளிலும்,






ஆதிதிராவிட மக்கள் எழுச்சி பெறுவதற்குக் காலமெல்லாம் போராடினார். ஆண்கள் கல்வியுடன் பெண்கள் கல்வியும் மிகவும் முக்கியம் என்று உணர்ந்த சுவாமிகள் ஆண்களுக்கு ஒரு கல்விச் சாலையும், பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்விச் சாலையும் நிறுவி இரண்டு பள்ளிகளிலும் இரண்டு இலவச உணவு விடுதிகளையும், தன் சுய முயற்சியிலேயே உருவாக்கினார்.

**கல்விச் சாலைகள் அரசுடைமை**

ஆதிதிராவிட மக்களுக்கு ஆன்மீகத் துறையில் ஒரு மடத்தையும், கல்விக்காக ஒரு கழகத்தையும் நிறுவினார். ஸ்ரீ நந்தனார் கல்விக் கழகம், ஸ்ரீ நந்தனார் மடம் என்ற பெயரில் அவை சிறப்பாக நடைபெற்று வந்தன. 1939-ஆம் ஆண்டு சுவாமி அவர்களது வேண்டுகோளுக்கிணங்க அப்பொழுது ஆட்சிப் பொறுப்பில் இருந்த இராஜாஜி அவர்கள், பாடசாலைகளையும் விடுதிகளையும் அரசு ஏற்றுக் கொள்ளச் செய்தார். மடமும் கோயிலும் சுவாமி அவர்களது மேற்பார்வையில் இயங்கி வந்தன.

1.5.1959 அன்று சுவாமிகள் சமாதியானார்.

**தலைவர்கள் பாராட்டு**

இந்தப் பாடசாலை, மடம் ஆகிய நிறுவனங்களை மகாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால்நேரு, தக்கர்பாபா, சுபாஷ், எம்.சி.ராஜா, ராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசன், ராவ்பகதூர் ஏ.டி. பன்னீர் செல்வம், சிவராஜ் முனுசாமி பிள்ளை, ராஜாஜி, ஓ.பி. ராமசாமி ரெட்டியார், முன்னாள் சபாநாயகர் சிவசண்முகம்பிள்ளை, காமராஜ், கக்கன், ராஜேந்திர பிரசாத், திருவாங்கூர் மகாராஜா, ராஜா. சர். அண்ணாமலை செட்டியார் ஆகிய பெரியோர்கள் நேரில் பார்வையிட்டுக் குறிப்பு எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**அரசு, சுவாமிகளை கௌரவித்தல்**

சுவாமி அவர்களை ஆங்கில அரசாங்கத்தில் 1926-ல் பிரிக்கப்படாத சென்னை ராஜதானியில் மேல்சபை உறுப்பினராக அரசு நியமித்தது. அன்று முதல் 1959-ஆம் ஆண்டு வரை சுவாமி அவர்கள் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தார். மேலும் 1923-ஆம் ஆண்டு முதல் 1959-ஆம் ஆண்டு வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் செனட் சபை உறுப்பினராக இருந்தார்.

**சமுதாயத் தொண்டு**

சுவாமி அவர்கள் கிராமத் தொண்டு செய்யும் காலத்தில், மற்ற இனத்தவரால் மறிக்கப்பட்டு, மாட்டு வண்டியில் இருந்து இறக்கி விடப்பட்டார். சிதம்பரம் நகரத்தில் தேவாரம் பாடி வந்த மாணவ மாணவியரைக் கல்லால் அடித்த காலத்திலும், மனம் தளராமல் சமயத் தொண்டையும் சமுதாயத் தொண்டையும் செய்தார். நந்தனாரால் தோற்றுவிக்கப்பட்ட சமுதாயப் புரட்சி சுவாமி சகஜானந்தரால் வெற்றி பெற்றது என்று பெருமைப்படலாம்.

**கல்வி அறக்கட்டளை**

ஸ்ரீ நந்தனார் கல்விக் கழகம், ஸ்ரீ நந்தனார் கோயில், ஸ்ரீ சிவலோக நாதர் ஆலயம் ஆகியவையும் 29 நபர்கள் கொண்ட உறுப்பினர்களாலும், ஸ்ரீ நந்தனார் மடம் 7 உறுப்பினர்களைக் கொண்டும் பராமரிக்கப்படுகின்றன. இக்கல்விக் கழகம் இன்றும் சமயத் தொண்டு, தீண்டாமை ஒழிப்பு, மது விலக்குப் பிரச்சாரம் செய்வதோடு, ஆண்கள் மற்றும் பெண்கள் பாடசாலைகளுக்கு ஒரு ஆசிரியரை நியமித்து ஒரு வாரத்திற்கு இரண்டு நாள் தேவாரம், திருவாசகம் பயிற்றுவிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது.

வாழ்க சுவாமிகளின் புகழ்!
வளர்க அவர் தம் தொண்டு!!

## பாவேந்தர் நூற்றாண்டு:



பிரிவிலை; எங்கும் பேதம் இல்லை;
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்; 'உடைமை' மக்களுக்குப் பொது!
புவியை நடத்து- பொதுவில் நடத்து!
வானைப் போல மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!



### தென்னார்க்காடு மாவட்டத்தில்

# முதல்வர் கலைஞர் நிகழ்ச்சிகள்

சொன்னதைச் செய்வோம், செய்வதைச் 'சொல்வோம் என்று கூறி அதைச் செயலிலும் காட்டி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தில் 9.8.90 அன்று வருகை புரிந்து பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள்.

விருத்தாசலத்தில், ரூ.40 இலட்சத்து 26 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நீதிமன்றக் கட்டடத்தை 9.8.90 அன்று நடைபெற்ற விழாவில் உயர்நீதி மன்ற நீதிபதி கே.எஸ். பக்தவச்சலம் தலைமையில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். அப்போது பேசும் போது, 'சட்டம், நீதி, நிர்வாகம் ஆகிய மூன்றும் இணைந்து செயல்பட்டால்தான், ஜனநாயகம் தழைக்கும். சிறிய கிராமங்களில் உள்ள குடிமகன் கூடப் புரிந்து கொள்ளும் வகையில் நீதிமன்ற நடவடிக்கைகள் அமைய வேண்டும். ஒரு ஊரில் உள்ள நீதிமன்றக் கட்டிடத்தைப் பார்த்தால், அது நீதிமன்றம் என்று புரிந்து கொள்ளும் வகையில் தனித் தன்மையுடன் இருக்க வேண்டும். இந்தக் கட்டிடமும் அந்த வகையில், திராவிட-மொகலாய பாணியில் அமைய நடவடிக்கை எடுக்கப்படும். இந்தியா முழுவதும் உள்ள உயர்நீதி மன்றத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் 9 பேர்கள் மட்டுமே நீதிபதியாக உள்ளனர், அதில் 3 பேர் தமிழகத்தில் உள்ளனர்' என்று கூறினார்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் தமிழ்க்குடிமகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் சாதிக்பாட்சா, மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கே.என். நேரு, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட செசன்சு நீதிபதி பழனி சிவகுருநாதன் வரவேற்புரை நிகழ்த்த, தலைமைக் குற்றவியல் நீதிபதி திரு. ராமசாமி நன்றி கூறினார்.

குறிஞ்சிப்பாடியில் நடைபெற்ற விழாவில், தனது 67-வது பிறந்த நாள் அடையாளமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு 67 அரிசி மூட்டைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேவேந்திர நாத் சாரங்கி வசம் வழங்கினார். 6 மாத காலத்துக்கு இலங்கைத் தமிழர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க ரூ.6 கோடி ஒதுக்கிச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். விழாவிற்கு வழக்கறிஞர் மு. பாஸ்கரன் தலைமை தாங்கினார்.

சேத்தியாதோப்பில் ரூ.28 கோடி மதிப்பில் கட்டப்பட்ட எம்.ஆர். கிருஷ்ண மூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை, தொழிலாளர் குடியிருப்பு இல்லங்கள் சர்க்கரைக் கிடங்கு ஆகியவற்றைத் திறந்து வைத்தும், நிர்வாக அலுவலகக் கட்டிடம் - அலுவலர்கள், பணியாளர்கள் குடியிருப்பு ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டியும் பேசும்போது "இந்தியாவிலேயே இந்த சர்க்கரை ஆலையில் தான் ரூ.5 கோடி செலவில் மின்சார உற்பத்தியும், தன் தேவைக்குப் போக 3.5 மெகாவாட் மின்சாரமும் இந்த ஆலை மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்படுகிறது" எனக் குறிப்பிட்ட முதல்வர் அவர்கள், "கள்ளக்குறிச்சியிலும் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கப்படும்" என்றும், "இம்மாவட்டத்தில் ரூ.700 கோடி செலவில் காகிதத் தொழிற்சாலை அமைக்கப்படும்" என்றும் அறிவித்தார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன், மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் பொன்முடி, மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கே.என். நேரு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் சுந்தரம், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேவேந்திரநாத் சாரங்கி இ.ஆ.ப., ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர். சர்க்கரைத் துறை இணை ஆணையர் பழனிச்சாமி வரவேற்புரை ஆற்ற, தனி அதிகாரி திரு. அப்துல்லா நன்றி கூறினார்.

நந்தி விலகிநந்தனாருக்குக் காட்சி தந்த அருள்மிகு நடராசன் ஆனந்த நடனம் புரியும் திருத்தலமாம் சீர்மிகு சிதம்பரத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து, கல்வி ஒன்றினால்தான் ஏற்றத் தாழ்வை அகற்ற முடியும் என்று பாடுபட்ட சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழாவினை 9.8.90 அன்று மாலை, தமிழ்நாடு அரசு சிறப்புடன் கொண்டாடியது. சிதம்பரம் நந்தனார் மேல்நிலைப் பள்ளித் திடலில் நடைபெற்ற இந்த விழாவுக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன் தலைமை தாங்கினார். விழாவில் கலந்து கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பேசும் பொழுது, "அறியாமையைப் போக்கிடவும், மூடப் பழக்கங்களை ஒழிக்கவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டவர், சகஜானந்தா. அவரது பெயரில் கல்லூரி அமைக் கல்வி அமைச்சருடன் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும்" என்று கூறினார்.

விழாவில் சுவாமி சகஜானந்தா படத்தை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எல். இளையபெருமாள் திறந்து வைத்தார். பேராசிரியர் பொன். சுப்பிரமணியன் அவர்கள் எழுதிய, 'நந்தனார் கல்வி நிறுவனங்களும், சுவாமி சகஜாநந்தரும்' என்ற நூலின் பிரதி ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்க, திரு. எல். இளையபெருமாள் அதைப் பெற்றுக் கொண்டார்.

விழாவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் இலவச வீட்டுமனைப்பட்டா, அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம், இலவசத் தொழில் கருவிகள், வானொலிப் பெட்டி, கறவை மாடு வாங்குதல் போன்ற இனங்களுக்கு



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 9.8.90 அன்று சேத்தியாத்தோப்பில் திறந்து வைத்த 'எம்.ஆர். கிருஷ்ண மூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை'.

1593 நபர்கள் பயனடையும் வகையில் ரூ.6 இலட்சத்து 25 ஆயிரத்து 950 மானியத்துடன் அடங்கிய வகையில் ரூ.6 இலட்சத்து 42 ஆயிரத்து 950, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீடு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், சுய வேலை வாய்ப்பு, சுயவேலை வாய்ப்புப் பயிற்சி, ஆழ்துளைக் கிணறு, டயர் வண்டி, உழவுமாடு, மின் தெளிப் பான்கள் மற்றும் சைக்கிள், பெட்டிக் கடை, பாரம் சுமக்கும் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டி, தொழில் தொடங்க நிதி உதவி, தனி நபர் தொழில் முன்னேற்றத்திற்கு நிதி உதவி போன்ற இனங்களில் 502 பேர் பயன் அடையும் வகையில் ரூ. 17,87,675 மானியத்துடன் ரூ.35 இலட்சத்து 75 ஆயிரத்து 350, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் இலவச தொழில் கருவிகள் 45 பேர்களுக்கு, ரூ.25,670 செலவில் வருவாய்த் துறையின் சார்பில் வீட்டு மனைப்பட்டா, நிலப்பட்டா, விபத்து நிவாரண உதவித் திட்டம், நலிந்தோர் குடும்ப நல உதவித் திட்டம், குடிசைப் பாதுகாப்புத் திட்டம், பண்ருட்டியில் விஷசாராயத்தினால் பாதிக்கப் பட்டோருக்கு நிவாரணம், அடையாளம் தெரியாத வாகனங்களால் பாதிக்கப்பட் டோருக்கு ஆறுதல் நிதி, முதியோர் உதவித் தொகை, கிராமப் பணியாளர் சிறப்பு சேமநல நிதி, சாலை விபத்து நிவாரணத் திட்டம், குடும்பநல நிதி, முதலமைச்சர் நிவாரண நிதி போன்ற இனங்களில் 19,113 பேர் பயனடையும் வகையில் ரூ 83 இலட்சத்து 78 ஆயிரத்து 453 மானியமும் வழங்கப்பட்டது.

சமூக நலத்துறையின் சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம், விதவைகள் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம், மூன்று சக்கர சைக்கிள், தையல் இயந்திரம், செயற்கைக் கால்கள் வழங்குதல், ஊனமுற்றோருக்கு ஊன்று கோல்கள், சுயவேலை வாய்ப்பு நிதி உதவி, மூளை வளர்ச்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பராமரிப்பு நிதி உதவி, காதொலிக் கருவிகள் வழங்குதல், கண்ணொளிக் கண்ணாடி வழங்குதல் போன்ற இனங்களில் 4050 பேர் பயனடையும் வகையில் ரூ.44 இலட்சத்து 72 ஆயிரத்து 550 மானியத் துடன் ரூ.48 இலட்சத்து 85 ஆயிரத்து 550, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை யின் மூலமாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கரிம எரிவாயுத் திட்டத்தின் கீழ் கடன் நிதி உதவி போன்ற இனங்களில் 2,550 பேர் களுக்கு ரூ.63 இலட்சத்து 50 ஆயிரம் மானியத்துடன் ரூ.1 கோடியே, 90 இலட்சத்து 50 ஆயிரம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் டாக்சி வாங்க, ஆட்டோ ரிக்ஷா, மின் மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா போன்ற 34 இனங்களுக்கு ரூ. 1 இலட்சத்து 65 ஆயிரம் மானியத்துடன் ரூ. 2 இலட்சத்து 48 ஆயிரத்து 200 வழங்கப்பட்டது.

மாவட்ட தொழில் மையத்தின் சார்பில், சுய வேலை வாய்ப்புத் திட்டத் தின் கீழ், நிதி உதவி 10 பேருக்கு ரூ. 48 ஆயிரம் மானியத்துடன் ரூ. 1 இலட்சத்து 92 ஆயிரம், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் தையல் இயந் திரம், முன்னாள் இராணுவத்தினர் மகளிர் திருமண மானியம் போன்ற 6 இனங்களுக்கு ரூ.6,200 மானியம், பால் வளத்துறையில் கறவை மாடுகள் நிதி உதவி (தாட்கோ) 10 பேருக்கு ரூ.21 இலட்சம் மானியத்துடன் ரூ. 31 இலட்சத்து 6 ஆயிரம், மீன் வளத் துறையில், மீன்வலை, மீனவர் இறப்புக் காப்புறுதித் திட்டம் போன்ற இனங்களில் 64 பேருக்கு ரூ. 61 ஆயிரம் மானியத் துடன் ரூ. 1 இலட்சத்து 54 ஆயிரம், வீட்டு வசதித் துறையின் சார்பில் கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 60 பேர்களுக்கு ரூ. 60 ஆயிரம் மானியத் துடன் ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரம், வேளாண்மைத் துறையின் சார்பில் சிறப்புத் தானிய உற்பத்தித் திட்டங் களுக்காக 16,500 பேர்களுக்கு ரூ. 14,20,500 மானியத்துடன் ரூ.44,20,500, வனத்துறையின் சார்பில் மக்கள் நாற்றங்கால் அமைக்க 4 பேர் களுக்கு ரூ. 30,000, மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் உழவு மாடுகள், ஆடு வளர்ப்பு, டயர் வண்டிகள், ஆயில் என்ஜின், மின் மோட்டார், பம்பு செட், மீனவர்களுக்கான மீன்வலைகள் போன் றவை 178 பேர்களுக்கு ரூ. 5,81,110 மானியத்துடன் ரூ. 22,63,000, எண்ணெய் வித்துக்கள் துறையின் சார்பில் தென்னங்கன்றுகள், சோயா பின்ஸ்கள், மின்கிட், ஆமணக்குஇன்புட் கிட், எள் இன்புட் கிட், மணிலா உடைக்கும் கருவி, பயிர்ப் பாதுகாப்பு தெளிப்பான் கருவி, கலப்பைகள் போன்ற இனங்களில் 33,990 பேர் களுக்கு ரூ. 2,36,300 மானியத்துடன் ரூ. 4,93,100, ஆக திட்டங்களுக்காக 78,883 பேர்கள்பயனடையும் வகையில்

46-ஆம் பக்கம் பார்க்க



# நூற்றாண்டு விழாக் காணும் வ.ரா.



**— பழ. அதியமான்**

**இந்திய விடுதலைக்காக, மொழி விடுதலைக்காக, சமூக விடுதலைக்காக உழைத்த மாபெரும் எழுத்தாளர் வ.ரா. என்னும் வ.ராமசாமி அய்யங்கார்.**

இவர் தஞ்சாவூர் மாவட்டத்தில், திருவையாற்றுக்கு அருகில் உள்ள திங்களூர் என்னும் சிற்றூரில் 17.9.1889-இல் பிறந்தவர்; தந்தையார் வரதராஜ அய்யங்கார், தாயார் பொன்னம்மாள்.

திங்களூருக்கு ஒரு கல் தொலைவில் உள்ள திருப்பழனம் என்ற ஊருக்குக் குடும்பம் குடி பெயர்ந்தது. அவ்வூரில் உள்ள திண்ணைப் பள்ளிக் கூடத்திலும், பின்னர் தமிழ்த் தாத்தா உ.வே.சா-வின் ஊரான உத்தமதான புரத்திலும் இவர் திண்ணைப் படிப்பைத் தொடர்ந்தார். பின்னர், திருவையாற்றில் உயர்நிலைப் படிப்பும், தஞ்சாவூர், திருச்சி முதலிய நகரங்களில் F.A. படிப்பும் படித்தார். விடுதலைப் போராட்ட ஆவலால் கல்லூரிப் படிப்பு அதோடு நின்று போனது.

கல்கத்தாவில் சுரேந்திர நாத் பானர்ஜி நடத்திய தேசியக் கல்லூரியில் சேர முயன்று தோல்வியுற்ற பிறகு, வ.ரா. கல்லூரிப் படிப்புப் பற்றி நினைப்பதை முழுவதுமாக விட்டு விட்டார்.

புதுவையில் தலைமறைவாயிருந்த அரவிந்தருக்கு உதவி செய்யும் கடுமையான பணியில் வ.ரா. 1910-இல் ஈடுபட்டார். ஏற்கெனவே அங்கு தங்கியிருந்த பாரதியார், வ.வே.சு. அய்யர் ஆகியோருடன் வ.ரா.வுக்குத் தொடர்பு ஏற்பட்டது.

பாரதியாருடன் புதுவையில் தங்கியிருந்த அந்த வாழ்க்கை அனுபவங்களே 'மகாகவி பாரதியார்' என்ற நூலாக உருவெடுத்தது. பாரதியாரின் தொடர்பால் வ.ரா. முழுப் புரட்சிக்காரராக மாறினார். சனாதன தர்மத்தைப் போதிக்கும் வருணாசிரமக் கொள்கையை மறுப்பவராக வ.ரா. மாறினார்.

இவர் எழுதிய நூலில், பாரதியாரை நேரில் கண்ட அனுபவத்தை வ.ரா. வர்ணிப்பதைப் பாருங்கள்:

''பாரதியார் வீடு தெரியுமா? என்றேன். ''பட்டணத்து எஜமான், பாட்டுப் பாடுகிற எஜமான், மீசை வச்சிருக்காங்களே, அவுங்க தானே? அவுங்க இருக்கிற வீடு நல்லாத் தெரியுமே' என்றான் புதுவை புஷ் வண்டிக்காரன்."

''ஒரு வழியாய் பாரதியாரின் வீட்டுக்குப் போய், ''சார்'' என்று கூப்பிட்டு, திறக்கப்பட்டு உள்ளேயும் போய் விட்டேன். 'மீசை வச்சிருக்காங்களே, அவுங்களைக்' கண்டேன். சட்டை, அங்க வஸ்திரம் முதலியன இருப்பதாகவே நினைவில்லை. சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தேன். புலி பாய்வதைப் போலப் பாய்ந்து, என்னைத் தூக்கி நிறுத்தி, ''நமஸ்காரம் வேண்டாம். நீர் யார்? வந்த காரியத்தைச் சொல்'' என்றார். தமிழில் பதில் சொல்லியிருக்கலாமே! இங்கிலீஷ் படித்த கர்வம் ஆளை எளிதிலே விட்டு விடுமா? நான் இங்கிலீஷைப் பொழிய ஆரம்பித்தேன்."

''அடே, பாலு! வந்தவர் உனக்கு இணையாக இங்கிலீஷ் பொழிகிறாரடா? அவரிடம் நீ பேசு; எனக்கு வேலையில்லை'' என்று உரக்கக் கத்தினார். அப்போதுதான் அவருடைய மன வேதனை எனக்கு ஒருவாறு அர்த்தமாயிற்று."

''ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு இன்னும் எவ்வளவு காலம் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும்?'' என்று வருத்தக் குரலுடன் என்னைக் கேட்டார். எனக்கு அழுகை வந்து விட்டது.'' என்று எழுதியிருக்கிறார் வ.ரா.

முதல் சந்திப்பிலேயே, வ.ரா.வுக்குத் தாய்மொழிப் பற்று உருவாவதற்குக் காரணமாகி விட்டார் பாரதி. ''தமிழுக்கு உயர்வு உண்டு. தமிழனுக்கும் பெருமை உண்டு என்பது பாரதியாரைப் பார்த்த பின்னர்தான், என் மனத்தில் அழுத்தமாய்ப் பதிந்தது'' என்று எழுதியிருக்கிறார் வ.ரா.

மகாகவி பாரதியார் நூலில் வ.ரா. பல தலைவர்களின் உரையாடல் சிறப்புகளையெல்லாம் ஓரிடத்தில் விரிவாக விளக்குகிறார்-

''அந்தக் காலத்தில் இந்தியாவில் இருந்த தலைவர்களிடம் ஏகதேசம் எனக்குப் பழக்கம் உண்டு. சத்தியாக்கிரக இயக்கத்துக்குப் பின் தோன்றிய தலைவர்களிடமும் சிறிது அறிமுகமுண்டு. காந்திஜியையும் தெரியும். ஆனால் . சம்பாஷணையின் மாண்பிலும் இனிப்பிலும் அரவிந்தருக்கும் பாரதியாருக்கும் இணையாக யாரையுமே சொல்ல முடியாது என்பது என் கருத்து. ஒரு வேளை, காந்திஜியையும் கபர்தேவையும் விலக்காகச் சொல்லலாமோ என்னவோ?

திலகரின் சம்பாஷணையில்பொருளும் சக்தியும் இருக்கும். ஆனால் வழவழப்பும் இனிப்பும் நகைச்சுவையும் இரா.தோழ்ரான கபர்தேவின் பேச்சில் வியக்கத்தக்க நகைச் சுவையும் சிங்காரமும் செழித்து இருக்கும். சுரேந்திர நாதரின் பேச்சே பிரசங்கம். விபின் சந்திர பாலரின் பேச்சில், கசப்பும் கலந்து நிற்கும்; ஆனால் சக்தியும் நவீனமுங்கூட இருக்கும். கோகலேயின் பேச்சு தங்கக் கம்பி இழை சன்னப் பேச்சு. பிரோஷா மேத்தாவின் பேச்சு தடியடி முழக்கம். லஜபதிராய், அமரிக்கையுடன், முன்னெச்சரிக்கை நிறைந்த பேச்சுப் பேசுவார். ஜி. சுப்பிரமணிய அய்யர் விஸ்தாரமாகப் பேசுவார். சேலம் விஜய ராகவாச்சாரியார் சட்ட மேற்கோள், சரித்திர மேற்கோள் இல்லாமல் பேசவே மாட்டார்.

பாரதியார்-அரவிந்தர் சம்பாஷணையில் நவரசங்களும் ததும்பும். ஒழுகும். கவிதை, சரித்திரம், தத்துவம், அனுபவம்,

கற்பனை, ஹாஸ்யம், குறுக்கு வெட்டு, விஸ்தாரம், உண்மையை வெளிப்படுத்தும் ஆவல், அபரிமிதமான இலக்கியச் சுவை, எல்லை இல்லாத உடல் பூரிப்பு - எல்லாம் சம்பாஷணையினிடையே இடைவிடாது நர்த்தனம் செய்யும்.''

மேலே கண்ட வ.ரா.-வின் வரிகளிலிருந்து, அரவிந்தர் - பாரதி உரையாடலின் சிறப்பை மட்டுமா அறிய முடிகிறது? வ.ரா. என்னும் எழுத்துக் கலைஞர், எவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிறார் என்பதும் அதை எவ்வளவு அழகாக வெளிப்படுத்துகிறார் என்பதும் அறிய முடிகிறது.

*1914*-இல், புதுவையிலிருந்து வ.ரா. சொந்த ஊருக்குத் திரும்புகிறார். இதய அறுவைச் சிகிச்சை ஒன்று நடைபெறுகிறது. வ.ரா.-விற்கு இவ்விதய அறுவை சிகிச்சையைச் செய்தவர் பின்னாளில் சென்னை, காங்கிரஸ் அமைச்சரவையில் சுகாதார அமைச்சராகப் பொறுப்பேற்ற டாக்டர் டி.எஸ்.எஸ். இராசன் ஆவார்.

இதய அறுவைச் சிகிச்சை செய்து, ஓய்வில் இருந்த வ.ரா., *1915*-இல் 'சுந்தரி' என்னும் நாவலை எழுதினார், இந்நாவல் *1917*-இல் நூலாக வெளி வந்தது. இதற்கு முன்னர், 'ஜோடி மோதிரம்' என்னும் நாவலைத் தமிழில் மொழி பெயர்த்திருந்தார் எனினும், அது நூலாக வெளிவரவில்லை என்பதால், சுந்தரியே வ.ரா.-வின் முதல் நூல் என்னும் பெருமையைப் பெற்றது.

சுந்தரி அல்லது அந்தரப் பிழைப்பு என்பது அந்நாவலின் பெயராகும்: அக்கால கட்டத்தில் நாவல்களுக்கும், நூல்களுக்கும் இரண்டு பெயர் வைப்பது வழக்கமாகும். பி.ஆர். இராஜமையர் எழுதிய 'கமலாம்பாள் சரித்திரத்தின்' இன்னொரு பெயர் 'ஆபத்துக்கிடமான அபவாதம்' என்பதாகும். இருபெயர் வைக்கும் வழக்கம் *1935* வரை கூட நீடித்தது. 'முருகன் அல்லது அழகு' என்பது திரு.வி.க. நூல் ஒன்றின் பெயராகும்.

'சுந்தரி அல்லது அந்தரப் பிழைப்பில்', வ.ரா. விதவைப் பெண்ணொருத்திக்குத் திருமணம் செய்து வைத்துப் புரட்சி செய்கிறார். கோரிக்கையற்றுக் கிடக்கும் வேரில் பழுத்த பலாக்களைப் பயன்படுத்தி, சமூகப் புரட்சியை உண்டு பண்ணும் புரட்சிக்காரரராக வ.ரா. விளங்கினார்.

விதவைகளை, விதவைகளாகவே இருக்கச் செய்யும் கொடுமைக்காரர்களிடம் வ.ரா. பேசுவதைக் கேளுங்கள்.

''விதவைதான் மனித கோஷ்டியினின்றும் விலக்காயிற்றே, அவர்களுக்கு நாம் ஏன் சோறு போட வேண்டும்? ...... எல்லா விதவைகளுக்கும் அடுத்த மாத முதல் சோறில்லை என்று உலகத்திலே நோட்டீஸ் போட்டு விடு; அப்பொழுது வீரன், வீரன் என்று சொல்லிக் கொண்டு உன் பின்னால் நான் வருகிறேன். அல்லது சுருக்கமாக வேறொரு வழி சொல்லுகிறேன். ஸ்திரியாய்ப் பிறந்தால் விதவையாதல் கூடுமல்லவா? பெண் பிறவியைப் படைப்பினின்றும் நீக்கி விடுவோம்; அல்லது பிறக்கும்பொழுதே பெண் குழந்தைகளை யமபுரிக்கு அனுப்பி விடுவோம். இந்த ஏற்பாடு உன் மனதுக்கு இசைந்ததாயிருக்குமென்று நினைக்கிறேன்.''

என்று கிண்டல் செய்து, விதவைகளின் மறுமணத் தேவையை அந்நாவலில் வலியுறுத்தினார். தமிழ் நாவல் வரலாற்றில் விதவை மறுமணத்தை ஆதரித்து எழுந்த இரண்டாவது நாவல், 'சுந்தரி' யாகும்.

அரிசன சேவை, மது விலக்குத் தொண்டு, முதலியவற்றில் ஈடுபட்டு உழைத்த வ.ரா. 'சுதந்திரன்' என்றொரு இதழையும் நடத்தினார். 'வர்த்தக மித்திரன்' என்ற பெயரில், தஞ்சையில் நடந்து வந்த பத்திரிகையை வாங்கி, 'சுதந்திரன்' என்று பெயரை மாற்றி நடத்தியதாக வ.ரா.-வின் தம்பி வ.. இராஜகோபாலன் தெரிவிக்கிறார்.

'சுதந்திரனு'க்குப் பிறகு 'சமரச போதினி', 'தமிழ்நாடு', 'ஊழியன்', 'ஸ்வராஜ்யா' (தமிழ்), 'மணிக்கொடி', 'வீரகேசரி', 'நவயுகன்', 'பாரததேவி' முதலிய இதழ்களில் வ.ரா. பணியாற்றினார்.

*1924*-இல் காரைக்குடியில் 'சமரச போதினி'யில் பணியாற்றினார். டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களால் சேலத்தில் இருந்து நடத்தப்பட்ட 'தமிழ்நாடு' இதழில் பணியாற்றினார். *1927*-இல், காரைக்குடியில் தமிழ்க் கடல் ராய. சொக்கலிங்கம் அவர்கள் 'ஊழியன்' என்ற பெயரில் வார இதழ் நடத்தி வந்தார். அவ்விதழில் வ.ரா. துணை ஆசிரியராக ஒன்றரை ஆண்டுக்காலம் பணியாற்றினார். தேசியக்கருத்துக்களைப் பரப்பி வந்த அவ்விதழ், சமூக சீர்திருத்த ஆர்வம் கொண்டும் விளங்கியது. அவ்விதழில் வ.ரா. 'மலர் மணம்' என்ற பொதுத் தலைப்பின் கீழ், பல்வேறு கட்டுரைகளைச் சுவை ததும்பும் வகையில் எழுதியுள்ளார்.

'மனித இயற்கை' என்னும் சிறப்புத் தலைப்பில், 'மலர் மணம்'- பகுதியில் வ.ரா. கீழ்வருமாறு எழுதியுள்ளார்:

'குடியில்லாத வீட்டுக்கு இடிபாறை தேவையில்லை. காலஞ்சென்றால், அந்த வீடு தானாகவே கீழே விழுந்து விடும். கருமம் செய்யாமல் சோம்பிக் கிடக்கும் மனிதனுக்கு இயமன் தேவையில்லை; நோய் தேவையில்லை; தானாகவே சாவான். இது இயற்கையின் ஒரு விநோதமான அதிசயமாகும். அதனாலேதான் 'முக்தி பெற்ற மனிதனும் கருமம் செய்ய வேண்டும்'' என்றான் கண்ணன் கீதையில். மனித இயற்கை என்னவென்று கண்டு, அதன் பெருமையை உணர்வதற்குக் கருமம் அவசியமானது''.

'மனிதன் சோம்பலாக வாழக் கூடாது, உழைத்து,பொறுப்போடு வாழ வேண்டும்' என்ற கருத்தினை விவரிக்கும் அக்கட்டுரையில், மேலே கண்டது சிறு பகுதியாகும்.

'ஸ்வராஜ்யா' (தமிழ்) இதழ், முன்னாளில் சென்னை மாநில முதல்வராக இருந்த டி.பிரகாசம் அவர்களால் நடத்தப் பெற்றதாகும். அவ்விதழில் எம். எஸ். சுப்பிரமணிய அய்யர், வெ.சாமிநாத சர்மா, வ.ரா. போன்றோர் துணை ஆசிரியர்களாக விளங்கினர்..

''தமிழ் ஸ்வராஜ்யாவில் இரண்டு சிறப்பு அம்சங்கள். ஒன்று 'மின்னொளி', மற்றொன்று 'கதர் பத்தி' மின்னொளி- அரசியல் பகுதி. எதுகை, மோனை நிறைந்த நடையில் சுப்பிரமணிய அய்யர் எழுதுவார். கதர் பத்தி- வ.ரா.வின் ஏக போகம்.

அந்த நாட்களில் கதர்ப் பிரசாரம் அதிகம். எங்காவது, யாராவது கதரைப் பற்றி ஏதாவது பேசியிருப்பார்கள் அல்லது ஏதாவது நிகழ்ந்திருக்கும். அதை இழையாகத் திரித்து, அதற்கு வண்ணம் தோய்த்து, அதைச் சிட்டமாக்கி விடுவார் வ.ரா. நேர்த்தியான சமூகத் தத்துவக் கட்டுரையாக அது அமையும். வ.ரா. வின் கை வண்ணம் கதர் பத்தியிலே தெளிவாக வெளிப்பட்டது'' என்பார் கு. சீனுவாசன் தன் முன்னுரை ஒன்றில்.

## பாவேந்தர் நூற்றாண்டு:



**இதயம் அன்பு நதியில் நனையட்டும்**
**இதுஎனது என்பது ஒழியட்டும்;**
**உணர்ச்சிக்கு ஊக்கமிட்டுத்**
**தளர்ச்சியைத் தவிர்ப்போம்**
**இதுஎனது சொந்தப்பொருள் என்கிற**
**மனிதரைக் கண்டு சிரிப்போம்!**

— பாவேந்தர்



இருப்பினும், சைமன் குழு இந்திய கருத்துக்களை வேண்டுமென்றே ஒதுக்கி வைத்து, அரசியல் கட்சிகளுள் ஒருமித்த நோக்கு இல்லாததால் இந்திய வாக்கெடுப்பில் தனி வாக்குத் தொகுதிகள் தொடரப் பரிந்துரை செய்தது. இத்தருணத்தில் 1930-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் லண்டனில் வட்ட மேசை மாநாட்டிற்கு டாக்டர் அம்பேத்கர் அழைக்கப்பட்டார். இந்த மாநாடு இங்கிலாந்து மற்றும் இந்திய வரலாற்றில் ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். ஏனென்றால், ஒடுக்கப்பட்ட வகுப்பின் பிரதிநிதி ஒருவர் மற்ற இந்தியர்களுடன் அழைக்கப்பட்டது இந்த மாநாட்டில்தான். முதல் தடவையாக இந்திய அரசியல் சட்டத்தை அமைக்கும் உரிமை இவர்களுக்கு வழங்கப்பட்டது இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றில் உண்மையிலேயே இது ஒரு முக்கிய சம்பவமாகும். ஒடுக்கப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் 'சுயராஜ்யம் இந்தியாவின் குறிக்கோள்' என்று முடிவு செய்தனர். டாக்டர் அம்பேத்கர் மக்களின் உரிமையைக் கேட்பதாகவும், சுயராஜ்யத்தில் விடாப்பிடியாக இருப்பதாகவும் கூறினார். வட்ட மேசை மாநாட்டில் 2-ஆம் கூட்டம், அறிவிக்கப்பட்டு டாக்டர் அம்பேத்கர் அதற்கும் அழைக்கப்பட்டார்.

கடைசியாக பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் சாதிப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அதன்படி, ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு வட்டாரச் சபையில் தனி இடமும், தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் மற்றும் பொதுத் தொகுதிகளில் வாக்களிப்பதற்கும் இரட்டை உரிமைகளும்வழங்கப்பட்டன. தனித் தொகுதிகள் ஒதுக்கப்படும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக காந்தி தனது முடிவைத் தெரிவித்தார். கடைசியாக மகாத்மா காந்தியும், டாக்டர் அம்பேத்கரும் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு மாகாண மற்றும் மத்திய சபையில் சில ஒதுக்கீடுகள் செய்து கொண்டு 24.9.1931-இல் ஒரு பொது உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இது வரலாற்றுச் சிறப்புமிக்க பூனா உடன்படிக்கை என்று சொல்லப்படும்.

''ஹரிஜன்'' என்று காந்தியால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையின் முதல் வெளியீட்டில் டாக்டர் அம்பேத்கர் ஒதுக்கப்பட்டவர்கள் என்பது சாதி முறையில் ஒரு சிறு உற்பத்தியே என்றும், சாதிகள் இருக்கும் வரை ஒதுக்கப்பட்டவர்கள் இருப்பார்கள் என்றும் கூறினார். சாதி முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டாலொழிய எதுவும் ஒதுக்கப்பட்ட சாதியை விடுவிக்க முடியாது.

அம்பேத்கர் நூற்றாண்டு

● சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே என்னுடைய இலட்சியம். அத்தகைய சமூக அமைப்பு ஏன் ஏற்படக் கூடாது? சகோதரத்துவம் ஏன் உண்டாகலாகாது?

— டாக்டர் அம்பேத்கர்

டாக்டர் அம்பேத்கர் இந்திய அரசியலில் நெருக்கடியான நிலைமையில் இருக்கும்போது, அவருடைய வாழ்க்கைத் துணைவியார் திருமதி ராமாபாய் 1935-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் தேதி இயற்கை எய்தினார்.

ஏறக்குறைய இத்தருணத்தில் டாக்டர் அம்பேத்கர் புத்தமதத்தைத் தழுவ ஆழ்ந்து சிந்தனை செய்தார். அவருடைய தொண்டர்களும் அதேபோல் செய்ய வேண்டுமென விரும்பினார். அவருடைய வாதம் என்னவென்றால், புத்த மதத்தில் மத மற்றும் சமூக வேறுபாடுகள் இல்லை என்பதுதான். அவரைப் பொறுத்த வரையில் புத்த மதம், மதம் மாறியவர்களுக்குச் சமநிலை தருகிறது; மேலும் அவர்களுள் சாதி வித்தியாசமில்லை. அவர் 'இந்து மதத்தைச் சார்ந்தவராயினும் தான் ஓர் இந்துவாகச் சாகப் போவதில்லை' என்று கூறினார். அவருடைய வாழ்நாள் குறிக்கோளைப் பூர்த்தி செய்ய டாக்டர் அம்பேத்கர் 14.10.1956-இல் ஏறக்குறைய மூன்று இலட்சம் ஆதரவாளர்களுடன் நாக்பூரில் உள்ள தீக்ஷா பூமி என்ற இடத்தில் புத்தமதத்தைத் தழுவினார். டாக்டர் அம்பேத்கர் குடியானவர்களுக்கு அவர்களுடைய ஏழ்மையின் காரணத்தை நினைத்துப் பார்க்க அறிவுரை கூறினார். சாதி, மத, பேதமில்லாமல் அவர்களை ஒன்றுபடும் படியும் கூறினார். தொழிற்சாலைகளில் ஒரு நாளுக்கு எட்டு மணி நேர வேலைக்கான சட்டத்தைக் கொண்டு வந்ததும் அவரே. எனவே, அம்பேத்கர் தொழிலாளர் தலைவராகவும் விளங்கினார்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததும், டாக்டர் அம்பேத்கர் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் அமைப்பின் தலைமைச் சிற்பியாகவும் திகழ்ந்தார். அரசியல் சட்டசபை ஒரு வரைவுக் குழுவை அமைத்து அதற்குத் தலைவராக டாக்டர் அம்பேத்கரையும் நியமித்தது. வரைவுப் பணியை முடித்ததும் டாக்டர் அம்பேத்கர் கட்டாயம் ஓய்வெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தன்னைக் கடைசிக் காலத்தில் பார்த்துக் கொள்ள ஒருவர் தேவைப்பட்டது. அதற்காக, 15.4.1948-இல் அம்பேத்கர் டாக்டர் சவீதா கபீரைத் திருமணச் சட்டப்படி மணந்தார்.

இதற்கிடையில், அரசியல் சட்டப் பிரிவுகள் பரிசீலிக்கப்பட்டு, ஒவ்வொன்றாய் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1948-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரிவு 11-ன் கீழ் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் பெரும் பாராட்டுதலோடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தாழ்த்தப்பட்டோரின் மத்தியில் மனித உரிமை முன்னேற்றம் மற்றும் சுயமரியாதை இவைகளை நிலை நாட்டுவதற்கும், சுய விமோசனம் அடைவதற்கும் தன் வாழ்க்கைப் பணியைச் செய்தார். சாதாரண மனிதனுக்கும் தன்னுடைய சக்தியில் நம்பிக்கை ஊட்டி, அதை அவன் வெளிப்படுத்தி, தன் காலிலேயே அவன் நிற்பதற்கு அவர் கற்றுத் தந்தார்.

6.12.1956-இல் பாபா சாகிப் அம்பேத்கர் காலமானார்.

**நன்றி: புதுவைச் செய்திகள்**

## தமிழ் இதழியல் சுவடுகள்

**ஆசிரியர்:** மா.சு. சம்பந்தன்.
**வெளியீடு:**

தமிழர் பதிப்பகம்,
243, லிங்கி செட்டித் தெரு,
சென்னை - 600 001.

விலை: ரூ.30 பக்கம்: 288

உலக மக்களால் போற்றிப் புகழப் படும் இதழியல் துறை இன்று அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. இளைய தலைமுறை அதில் ஆர்வம் செலுத்தி வருகிறது. பல்கலைக் கழகங் களிலும் இத்துறைக்கான பட்டப்படிப்புகள் உள்ளன.

இத்தகு மேன்மைமிகு இதழியல் துறை விடுதலைக்கு முன்பு எப்படி இருந்தது. இதழியல் முன்னோடிகள் எப்படி யெல் லாம் இன்னலுக்குள்ளாகியிருக்கின்றனர் என்பன போன்ற தகவல்களையெல்லாம் ஒரு சேரத் தொகுத்துத் தந்துள்ளார் இந்நூலாசிரியர்.

அக்காலத்தில் வெளிவந்த இதழ் களைப் பற்றிய தகவல்களும், அவற்றின் அக்கால மொழி நடையும் தெளிவுபடக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

நூலின் தொடக்கத்திலேயே (முன்னுரை) பல செய்திகளைத் தெரிந்து கொள்கி றோம். தமிழ்மொழியில் முதன் முதலாக இதழ்களைப் பற்றிய தகவலைச் சேகரித் தவர், சேலம் பகடாலு நரசிம்மலு நாயுடு. இவர் அக்காலத்தில் இதழியலுக்கு ஆற்றிய தொண்டுகள் இந்நூலில் கோடிட்டுக் காட்டப்படுகின்றன.

இதேபோல, எஸ்.ஜி. இராமாநுஜலு நாயுடு, குருமலை சுந்தரம் பிள்ளை, ஆ. சங்கரலிங்கம் பிள்ளை, பி. வேணு கோபால்சாமி நாயுடு, பாரதியார் இப்படிப் பல இதழியல் முன்னோடிகள் பற்றிய செய்திகள்- அவர்கள் இதழிய லுக்கு ஆற்றிய தொண்டுகள் விரிவாக வும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளன.

திரு.வி.க., பி.வரதராஜுலு நாயுடு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கல்கி, ஆதித்தனார் போன்ற பெரு மக்கள் பத்திரிகையுலக ஜாம்பவான் களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். அவர் களைப் பற்றிய செய்திகளோடு, அவர்கள் நடத்திய இதழ்கள் பற்றிய தகவல்களும் சுவைபடக் கூறப்பட்டுள்ளன.

பத்திரிகைத் துறையில் நுழைய விரும் பும் இக்கால இளைஞர்கள், இதழியல் துறையில் ஆர்வம் செலுத்துவோர், ஏன் அனைவருமே இந்நூலைப் படித்துத் தெரிந்து கொள்வது நல்லது. இந்த அரிய நூலை உருவாக்கிய நூலாசிரியர் பாராட் டுக்குரியவர்.

— மறைமலை

# நூல் நயம்

## வாசன் ஆட்சிச் சொல் கையகராதி

**தொகுப்பாசிரியர்கள்:**
பேராசிரியர். வி. கணபதி, சு. கணபதி
க. சந்திரிகா ராஜமோகன்
**வெளியீடு:**

சாந்தா பப்ளிஷர்ஸ்,
5, ஸ்ரீபுரம் 2-ஆம் தெரு,
சென்னை - 600 014.

விலை: ரூ.27 பக்கம்: 439

தமிழகத்தில் தமிழ் ஆட்சிமொழியாக் கப்பட்டதால், அரசு அலுவலகங்கள் ஆங்கில மொழிக்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தவும், புதிய சொற்களை உருவாக்கவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் காரணமாக அரசு, ஆட்சிச் சொல் அகராதி வெளி யிட்டுள்ளது. என்றாலும் தற்போது பதிப் பகத்தார்களும் இந்த முயற்சியில் ஈடு பட்டுள்ளது பாராட்டுக்குரியது. அந்த வகையில் இந்த அகராதி கையடக்கமாக அமைந்து, பொருளடக்கத்தில் சிறந்து விளங்குகிறது. தெளிவான அச்சு துறைப் பகுப்பு முதலியவை நூலுக்குப் பெருமை சேர்க்கின்றன.

- எஸ்.எஸ் சுந்தரம்

## சிறுவர் களஞ்சியம்

**பதிப்பாசிரியர்கள்:** ஸ்வீட்லின், பிரியா.
**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பூங்கா நகர்,
சென்னை-600 003.

விலை: ரூ.55 பக்கம்: 213

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் உடல்நலம் மட்டுமல்ல, அறிவு நலமும் பெற்று விளங்கிட வேண்டும் என்கிற நோக்கில் தயாரிக்கப் பட்டதுதான், 'சிறுவர் களஞ்சியம்' என்னும் இந்நூல்.

'கவிதைச் சோலை' என்னும் பகுதி யில், குழந்தைக் கவிஞர்களின் தேர்ந் தெடுத்த பாடல்கள் படங்களுடன் இடம் பெற்றுள்ளன. இதேபோல, நாடகப் பகுதியிலும் குழந்தைகளை நல்வழிப் படுத்தும் நாடகங்கள் உள்ளன. அத்துடன் சிறுகதைகளும் உள்ளன.

மேலும், பறவைகளைப் பற்றிப் பல தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம். ஏராளமான பொது அறிவுத் தகவல்களை யும் அறிந்து கொள்கிறோம்.

பொதுவாக, இந்நூல் ஒரு குழந் தைகள் கலைக் களஞ்சியமாகவே விளங்கு கிறது.

—பி.வி. கிரி

## உலகம் பிறந்தது நமக்காக

**ஆசிரியர்:** நெ.சி. தெய்வசிகாமணி
**வெளியீடு:**

பாலர் பதிப்பகம்
309, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600 001.

விலை: ரூ.7.00 பக்கம்: 66

முதலில் சூரியன், பூமி, சந்திரன், கோள்கள் பற்றியும், விண்மீன்கள் பற்றி யும் சிறுவர்கள் மனதில் பதியும் வண்ணம் எளிமையாக, விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

உலோகங்கள், ரேடியம், பாதரசம் ஆகியவற்றைப் பற்றியும் அழகாக விவ ரித்து இறுதியில் பூமியைப் பற்றியும் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. சிறுவர்கள் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

## வீரச் சிறுவர்கள்

**ஆசிரியர்:** புலவர் அண்ணாமலை

**வெளியீடு:**

பம்மி பதிப்பகம்
32, வெங்கட்ட ரங்கம் பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

விலை: ரூ.15 பக்கம்: 128

சிறுவர்களிடையே இயற்கையாய் அமைந்துவிட்ட தீரமும், வீரமும் நாட்டுக் கும், வீட்டுக்கும் பயன்பட வேண்டும் என்பதை இந்நூல் விளக்குகிறது.

சிறுவர்கள் நாட்டுப் பற்றுடையவர் களாக, நல்லவர்களாக, வல்லவர்களாக, சிறந்த நண்பர்களாகத் திகழ வேண்டு மென்பதை இக்கதைகளில் எடுத்தியம்பு கிறார் ஆசிரியர்.

## வாதநோய்க்கு வகையான மருந்துகள்

**ஆசிரியர்:** டாக்டர் திருமலை நடராசன்
**வெளியீடு:**

தமிழ்ச் செல்வி நிலையம்,
43, சித்திரைக் குளம் வடக்குத் தெரு
மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை: ரூ.10.00 பக்கம்: 104

வெளிநாடுகளில் குணமாக்க முடியாத நோயாளிகள் சிலர், சித்த வைத்திய சிகிச்சையால் குணமாக்கப்பட்டிருக் கிறார்கள். அதேபோல் வாத நோய் நீங்கி நலமுடன் வாழ சிறந்த சித்த மருத்துவ முறைகளை விளக்குகிறது இந்நூல்.

வாத நோயின் வகைகள் (சுமார் 27) அவற்றின் தன்மைகள், அவற்றைக் குளியல் முறை, பற்று முறை, மேற் பூச்சு முறை, கட்டு முறை, படுக்கை முறை, சூரணம், இளகல் போன்ற முறைகளில் நீக்குவது பற்றியும் இவற்றிற்கான மருந்துகள் செய்யும் முறைகள் பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

— குமார்




## பயறு வகைப் பயிர்களில் நூற்புழு

பயறுவகைப் பயிர்களைத் தாக்கும் நூற்புழுக்களில் முக்கியமானவை வேர் முடிச்சு நூற்புழுவும், முட்டைக்கூடு நூற் புழுவுமாகும்.

இந்த நூற்புழுக்கள் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. உருவத்தில் உருண் டையாக, அளவில் ஒரு கடுகின் பாதி அளவில் (உருப்பெருக்காடியின் உதவி யால் கைக்கண்ணாடி 10 பெருக்கம் கொண்டதால் பார்க்க முடியும்) வேர்ப் பகுதியில் ஒட்டிக் கொண்டிருக்கும். வேர் முடிச்சு நூற்புழுவினால் பாதித்த வேர் களின் முடிச்சு கண்ணுக்குத் தெரியும். வேர்முடிச்சு நூற்புழுவால் தட்டைப்பயறு மற்றும் உளுந்துப் பயிரில் சுமார் 30 சத மகசூல் பாதிப்பும், முட்டைக்கூடு நூற் புழுவால் துவரை, உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப்பயறு வகைப்பயிரில் 50 சத மகசூல் பாதிப்பும் ஏற்படும். திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தென் ஆர்க்காடு, கோவை மற்றும் பெரியார் மாவட்டங் களில் நூற்புழு பாதிப்பு அதிகம் என ஆராய்ச்சியில் தெரிய வந்தது.

பயறுவகைப் பயிர்களை அதே நிலத் தில் திரும்பத் திரும்பப் பயிரிடுவதாலும் அல்லது காய்கறிப் பயிரான வெண்டை, தக்காளி, மிளகாய்ப்பயிருக்குப் பின்னர் பயறுவகைப் பயிர்களைப் பயிரிடுவ தாலும், வேர்முடிச்சு நூற்புழுக்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்து அதிக சேதம் விளைவிக்கும். 'என்' பயிருக்குப் பின்னால் சாகுபடி செய்த பயறு வகைப் பயிர்கள் முட்டைக்கூடு நூற்புழுக்களால் அதிகமாகச் சேதமடை யும். எனவே, நூற்புழுக்களின் பாதிப் பிலிருந்து பயிரை மீட்கப் பயிர்ச்சுழற்சி பராமரிப்பு முறை மிகச் சிறந்தது. பயறு வகைத் தானியங்களுக்குப் பின்னர் சிறு தானியப்பயிரான ராகி, கம்பு அல்லது சோளம் பயிரிடுவதால் நூற்புழுக்களி லிருந்து பாதுகாப்பு பெறலாம். சிறு தானியப் பயிருக்கு அடுத்தாற்போல்சாகு படியாகும் பயிறுவகைப் பயிர்கள் நன்கு வளர்ந்து நல்ல மகசூல் தரவல்லவை. தொழு உரம், குப்பை உரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு (200 கிலோ எக்டேர்) இடுவதாலும் நூற்புழுக்களின் எண்ணிக்கை குறைந்து மகசூல் பெருகும்.

## பூச்சிகொல்லிகளை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்த வேண்டாம்:

விவசாயத்தில் அளவுக்கு அதிக மாகப் பூச்சிகொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவது நல்லதல்ல என்று அமெரிக்க வல்லுநர் ஒருவர் கருத்து தெரி வித்திருக்கிறார்.

பூச்சிகொல்லி மருந்துகளை ஒரு குறிப் பிட்ட அளவுக்கு மேல் பயன்படுத்தினால், விளைச்சல் அதிகரிப்பதற்குப் பதிலாகச் சுற்றுச்சூழல் பாதிப்புதான் அதிகமாகும் என்று எட்வர்ட் ரிம்பெர்க் என்னும் அந்த அறிஞர் குறிப்பிட்டிருக்கிறார்.

சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய இத்தகைய பூச்சிகொல்லி மருந்து களுக்குப் பதிலாக, தானாகவே அழிந்து விடக்கூடிய பூச்சிகொல்லிகளைப் பயன் படுத்தலாம் என்று அவர் யோசனை கூறி இருக்கிறார். இதற்குக் கொஞ்சம் கூடுதல் செலவு பிடிக்கும் என்றாலும், விவசாயத் தின் மூலம் சுற்றுச்சூழல் பாதிக்கப் படாமல், இவற்றினால் பெருமளவுக்குத் தவிர்க்க முடியும் என்று அவர் கூறினார்.

-அமெரிக்கத் தகவல் நிலையம்

## தக்காளி விதை பிரிக்கும் கருவி

தக்காளி, யாவராலும் விரும்பி உப யோகப்படுத்தப்படும் காய்கறி ஆகும். இது பச்சையாகவோ, பதப்படுத்தியோ அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளப் படுகிறது. இதைப் பயிரிடுவதற்காக, முதிர்ந்த பழங்களிலிருந்து விதைகளைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்துகிறார்கள். பிரிக்கும்பொழுது விதைகள் சிதைபடா மலிருக்க, விதைகள் கையால் எடுக்கப் படுகின்றன. இதனால் சிரமம் மட்டு மல்லாமல் அதிக நேரமும், செலவும் ஆகிறது. இதைத் தவிர்ப்பதற்காக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, வேளாண் பதனஞ்செய் துறையில் ஒரு இயந்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விதைகள் சிதை படாமல் பிரித்தெடுக்கப் படுவதோடு, உடன் கிடைக்கும் பழக் கூழிலிருந்து பழச்சாறு, ஜாம், ஜெல்லி போன்றவையும் தயாரிக்கலாம்.

இவ்விதை பிரிக்கும் இயந்திரத்தின் மைய அச்சில், பழங்களை வெட்டும் கத்திகள் மற்றும் அடிப்பான்கள் பொருத் தப்பட்டுள்ளன. இயந்திரத்தினுள் பழங் களைச் செலுத்தும் அமைப்பும் மைய விலக்கு பிரிப்பானும் பழக்கூழை வெளி யேற்றும் குழாயும் அமைக்கப் பட்டுள்ளன. இதை இயக்க இரண்டு குதிரைச் சக்தி மின் மோட்டார் தேவைப் படுகிறது. இயந்திரத்தின் அனைத்துப் பாகங்களும் எவர்சில்வரினால் செய்யப் பட்டுள்ளதால் பழக்கூழைப் பதப்படுத்தி உணவில் சேர்க்கலாம்.

### விதை பிரித்தெடுக்கும் முறை:

இயந்திரம் இயங்கும் நிலையில், சிறி தளவு தண்ணீருடன் 10லிருந்து 15 கிலோ தக்காளியை உட்செலுத்த வேண்டும். செலுத்தப்பட்ட தக்காளி நன்கு வெட்டப் பட்டு அடிப்பான்களால் கூழாக்கப்படு கின்றன. வடிகட்டியின் துளைகள் தக்காளி விதைகளை விடப் பெரிதாக இருப்பதால், பழக்கூழ் விதைகளுடன் மையவிலக்கு பிரிப்பானைச் சென்றடைகிறது. அங்கு விதைகளும் பழக்கூழும் பிரிக்கப்படு கின்றன். பழக்கூழ், குழாய்கள் மூலம்

## மாநகர நலப்பணிகளைத் துரிதப்படுத்தி
## உள்ளாட்சித் துறை அமைச்சர் நடவடிக்கை

**தா**ம்பரம் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய மாநகராட்சிக் கோட்டங்கள் 148, 149, 150 இன் பகுதிகளை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி 27.6.90 அன்று பிற்பகல் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.ஏ. வைத்தியலிங்கம், ஆணையாளர் திரு. மு. அபுல்ஹசன், உதவி ஆணையாளர் டாக்டர் பி.ஆர். ராஜ் மோகன் மற்றும் மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வடிகால் அதிகாரிகளுடன் சுற்றிப் பார்த்தார். பொதுமக்கள் குறைகளைக் கேட்டார். சுகாதாரச் சீர்கேடுகளைக் களைய அதிகாரிகளுக்கு 15 நாள் கெடு விதித்தார்.

வேளச்சேரி காமராசர் சாலையில் உள்ள கழிவறைக்கு உடனடியாக நீர் வழங்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு உத்தரவிட்டார். பிள்ளையார் கோயில் தெருவில் சாக்கடை நீர் தேங்கியிருந்தது. அதை அப்புறப்படுத்தவும், பழுதடைந்த குப்பைத் தொட்டியைச் சரியாகக் கட்டவும். குப்பைகூளங்களை உடனடியாக அப்புறப்படுத்தவும், முட்டுக்காடு சாலையில் பழுதுபட்டிருந்த கழிவறையை இடித்துப் புதிய கழிவறை கட்டவும் இதே சாலையில் இருந்த மாநகராட்சி மருந்தகத்தைப் பார்வையிட்டு அந்தக் கட்டடத்தைப் பழுது பார்த்துப் பொலிவூட்டவும் பணித்தார்.

திருவான்மியூர் காலனிக் கழிவறைக்கு உடனடியாக நீர்வசதி செய்து தரவும், திருவீதியம்மன் கோயில் தெருவில் ஆக்கிரமிப்புக்கு அளிக்கப்பட்டிருந்த தடையை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து அதை அப்புறப்படுத்தவும், அவ்வை நகரில் உள்ள ஆக்கிரமிப்பையும் உடனடியாக கோர்ட்டு தடை நீக்க நடவடிக்கை எடுத்து கழிவறையைப் பழுது பார்க்கவும் உத்தரவிட்டார். அங்கிருக்கும் சலவைச் சாலையைப் பழுது பார்த்து அதற்குச் செல்லும் சாலையையும் செப்பனிடவும், அவ்வை நகர் பிரதான சாலையைப் புதுப்பிக்கவும், கோட்டம் 150-இல் உள்ள அனைத்து மாநகராட்சிக் கட்டங்களுக்கும் பொலிவூட்டவும் உத்தரவிட்டார். அவ்வை நகரில் உள்ள விளக்குகளை எரிய வைக்கப் பணித்தார். கோட்டம் - 149 திருவள்ளுவர்புரத்தில் கால்வாய்க்குக் குறுக்கே பாதசாரிகள் நடந்து செல்ல நடைபாலம் அமைக்கப் பணித்தார்.

மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் 15 நாட்களுக்குள் சுட்டிக் காட்டப்பட்ட குறைகளை அகற்றிவிட வேண்டும் என்றும், மீண்டும் 15 நாள் கழித்து இப்பகுதியைப் பார்வையிடப் போவதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்.

---

வெளியேற்றப்பட்டு பதப்படுத்தப்படுகின்றது. விதைகள் மைய விலக்குப் பிரிப்பானின் உள் பகுதியில் நிறுத்தி வைக்கப்படும். விதைகள் பின்னர் நைலான் பிரஷினால் சேகரிக்கப்படுகின்றன பிரித்தெடுக்கப்பட்ட விதைகள் உலர்த்தப்பட்டு, அமிலம் சேர்த்து, பிசிறு நீக்கி சுத்தப்படுத்தப்படுகின்றன.

இந்த இயந்திரத்தில் 10 முதல் 15 கிலோ வரை தக்காளியை ஒரே சமயத்தில் விதை பிரித்தெடுக்கலாம். ஒரு நாளைக்கு 5 குவிண்டால் தக்காளிப் பழங்களை விதை பிரித்தெடுக்கலாம். ஒரு கிலோ தக்காளி பிரித்தெடுக்க ஆகும் செலவு ரூ.7.50. இந்த இயந்திரத்தின் விலை ரூ.9,000.

### வேளாண் கழிவுகளை எரிக்கும் உலையுடன் கூடிய உலர்த்தி

**பொ**துவாக வேளாண்மை விளை பொருட்கள் வெய்யிலில் உலர்த்தப்படுகின்றன, மழைக் காலங்களிலும், மற்றும் குளிர் காலங்களிலும் சூரிய வெப்பம் குறைவாக இருப்பதால் பொருட்களை உலர்த்த அதிகக் காலமாகிறது. இதனால் பொருட்கள் கெட்டுப் போவதால், உலர்த்துதல் விவசாயிகளுக்கு ஒரு பிரச்சினையாகவே இருக்கிறது.

இக்குறையை நீக்குவதற்காக இயந்திரம் மூலம் வெப்பக்காற்று உற்பத்தி செய்து, உலர்த்தும் முறை அவசியமாகிறது.

இயந்திர உலர்த்திகளில் மின்சக்தி மற்றும் பெட்ரோலியப் பொருட்கள், எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகை எரிபொருட்களில் விலை உயர்வினால் இயந்திர உலர்த்திகளை உபயோகப்படுத்த அதிகச் செலவாகிறது. இதனால் வேளாண் கழிவுகளை எரிபொருளாக உபயோகிக்கக் கூடிய வகையில் வேளாண் கழிவுகளை உபயோகித்து வெப்பக்காற்று உருவாக்கும் கருவி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக, வேளாண் பதனஞ்செய் துறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கருவியில் வேளாண் கழிவுகளை எரிக்க அடுப்பு, காற்று ஊதுவான், கொள்கலன் உள்ளன. கருவியைத் தேவையான இடத்திற்கு நகர்த்த ஏதுவாக சக்கரங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

வேளாண் கழிவுகளை எரிக்கும் பகுதி மற்றும் எரிவாயு வெளிச்செல்லும் பகுதி ஆகிய இரு முக்கியமான பகுதிகள் இக்கருவியில் உள்ளன. இப்பகுதிகள் இருபெரிய குழாய்களின் நடுவே அமைக்கப்படுகின்றன காற்று ஊதுவானால் வெளிக்காற்று இக்குழாய்களில் உறிஞ்சப்பட்டு, வெப்ப மாற்றுதல் அடிப்படையில் சூடாக்கப்படுகின்றது. சூடான இக்காற்று ஊதுவான் மூலமாக தானிய கொள்கலத்தினுள் அனுப்பப்படுகின்றது. கழிவு எரிவாயு புகைபோக்கியின் மூலமாக வெளியேறுகிறது.

இவ்வியந்திரத்தின் மூலமாக 90 டிகிரி செல்சியஸ் அளவிற்குக் காற்றின் வெப்ப நிலையை உயர்த்த முடியும். வெளிக்காற்றை நேரிடையாக உட்செலுத்தும் வசதியும் உள்ளதால், வெளிக்காற்றையும், வெப்பக்காற்றையும் கலந்து தேவைக்கேற்ப காற்றின் வெப்பநிலையை உயர்த்தியும், தாழ்த்தியும் கொள்கலத்தினுள் அனுப்ப ஏதுவாகிறது.

இவ்வியந்திரத்தை உபயோகித்து தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகளும் உலர்த்தலாம். உலர்த்தும் பொருள்களுக்கு ஏற்றவாறு காற்றின் வெப்ப நிலையையும், உலர்த்தும் நேரத்தையும் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வியந்திரத்தின் விலை ரூ.15,000 ஆகும்.

**வேளாண் தகவல் பணிமையம்**

**ஜி.டி. நாயுடு அரசினர்**
**வேளாண்மைப் பல்கலைக் கழகம்.**

---

# ஊரும் பேரும்

**ஒரு குறிப்பிட்ட நில அமைவிடத்தில் அதிகமாகக் காணப்படும் மரம், செடி, கொடி ஆகியவற்றின் பெயரைக் கொண்டு, அவற்றின் பெயராலேயோ அல்லது அந்த அடிப்படையிலான பெயர் திரிந்து மாறுதல் அடைந்தோ, அந்தப் பகுதியிலுள்ள ஊர்ப் பெயர்கள் வழங்கப்படுவதுண்டு.**

**புதுக்கோட்டை மாவட்டம், அக்காலத்தில் காடுகள் நிறைந்த பகுதி; காடுகள் திருத்தப்பட்டு நாடானபோது அப்பகுதியில் நிறைந்து காணப்பட்ட மரம், செடி, கொடிகளின் பெயரால் ஊர்ப்பெயர்கள் வழங்கப்பட்டு வந்திருப்பதை இன்றளவும் காணலாம்.**

**இந்த அடிப்படையில் வழக்கிற்கு வந்த சில ஊர்ப் பெயர்களும், அவற்றிற்குத் தொடர்பான தாவரங்களின் பெயர்களும் இங்கு தரப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| அறந்தாங்கி | அதாங்கி (கம்பிமரம்) |
| இரும்பாளி | இரும்புளி |
| ஓணான்குடி | ஓணான்கொடி |
| இலுப்பூர் (இலுப்பையூர்) | இலுப்பை |
| கட்டுமாவடி | கட்டுமாவு |
| கொக்குமுட்டை | கொக்கிமுள்ளு |
| கொத்தமங்கலம் | கொத்தமரம் |
| கொன்னையூர் | கொன்னை |
| ஆட்டான்குடி | ஆட்டான்கொடி |
| மோசகுடி | மொச்சக்குடி |
| விராலிமலை | விராலி |
| காரையூர் | காரை |
| முள்ளுக்குண்டு | முள்ளுக்கடம்பு |
| பூவன்பட்டி | பூவம் |
| செங்கீரை | செங்காரை |
| வேலாவயல் | வேலா |
| உசிலம்பட்டி | உசிலை |
| கிளாங்காடு | கிளாங்காய் |
| கூகைப்புலிக்குடி | கூரைப்புல் |
| தூறைக்காடு | தூரைக்கொடி |
| கடுக்காய்காடு | கடுக்காய் |
| கண்ணியான்கொல்லை | கண்ணி |
| பேயாடிப்பட்டி | பேய்மிரட்டி |
| மஞ்சள்கரை | மஞ்சள்துத்தி |
| முருங்கைக்கொல்லை | முருங்கை |
| பிலாவிடுதி | பலா |
| குருந்தடிமனை | |
| குருந்தம்பட்டி | குருந்து |
| வள்ளிக்காடு | வள்ளிக்கீரை |
| தூரன்விடுதி | தூரைக்கொடி |
| ஆலங்காடு | ஆலமரம் |
| கல்லாக்கோட்டை | கல்கோட்டை |
| புளிச்சங்காடு | புளிச்சை |
| மல்லிகை நத்தம் | மல்லிகை |
| மணியம்பள்ளம் | மாணியம் பூண்டு |
| தினைக்குளம் | தினை |
| கத்திரிக்காடு | கத்திரி |
| புங்கங்காட்டுப்பட்டி | புங்கம் |
| செந்தட்டிப்பண்ணை | செந்தட்டி |
| முல்லையூர் | முல்லை |
| நாவலிங்கக்காடு | |
| பெருநாவலூர் | நாவல் |
| சீத்தப்பட்டி | சீத்தா |
| எருக்கலக்கோட்டை | எருக்கு |
| அத்தாணி | அத்தடலி |
| ஆடலை | ஆடாலி |
| பூவத்தகுடி | பூவத்தி |
| கம்மங்காடு | கம்பு |
| மேற்பனைக்காடு | |
| பனைவயல்/பனையப்பட்டி | பனை |
| சுரக்காய்ப்பட்டி | சுரக்காய் |
| முள்ளிப்பட்டி | முள்ளிச்செடி |
| நெரிஞ்சிக்குடி | நெரிஞ்சி |
| ஈச்சம்பட்டி, ஈச்சங்குடி | ஈச்சமரம் |
| வாகவாசல் | வாகை |
| புளிவயல் | புளி |
| கடம்பவயல் | கடம்பன் |
| பின்னங்குடி | பின்னை |
| கொள்ளுத்திடல் | கொள்ளு |
| அடம்பூர் | அடம்பை |
| எட்டிச்சேரி | எட்டி |

**—மேற்கண்ட பகுதிகள் இன்றும் இப்பகுதியில் காணப்படுகின்றன.**

**—ஆதாரம்:**

**புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக்குழு செய்தி மலர்.**

# ஆனந்த வெள்ளத்தில் ஐம்பதாயிரம் குடும்பங்கள்

இந்தியாவிலே முதன் முதலாகக் குடிசை மாற்று வாரியத்தை அமைத்தவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்! அதன் விளைவாகத் தமிழ்நாட்டில் குடிசைகள் அடுக்குமாடிக் கட்டடங் களாக உயர்ந்தன. தற்போது அந்த அடுக்கு மாடிக் குடியிருப்புக்களைக் குடியிருப்போருக்கே சொந்த மாக்க முதல்வர் கலைஞர் அவர்கள் 27.6.90 அன்று ஆணை பிறப்பித்துள்ளார். அந்தச் சீரிய திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:-

★ வாரியத்தினால் ஒதுக்கீடு பெற்றவர்கள் அல்லது அவர்களுடைய வாரிசுதாரர்கள் வீட்டின் உரிமையைப் பெறலாம்.

★ 1989-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 27-28-ஆம் தேதிகளில் குடியிருந்த தகுதி படைத்த வர்களும் இந்த உரிமையைப் பெறலாம்.

★ 50,000 குடியிருப்புகள் ரூ. 92 கோடி மதிப் புள்ளதில், தமிழக அரசு சுமார் ரூ.40 கோடி மானியமாகக் குடிசைவாழ் மக்களுக்கு அளிக்கிறது.

★ குடியிருக்கும் வீட்டினைப் பின்வரும் தவணை முறையில் பணம் செலுத்திச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்:-

| குடியிருப்பின் விவரம் | ஒவ்வொரு மாதமும் கட்ட வேண்டிய தொகை | மொத்தம் கட்ட வேண்டிய ஆண்டுகள் |
|---|---|---|
| (அ) 1971 மார்ச் முடிய கட்டப்பட்ட குடியிருப்புகள் | ரூ.50/- | 10 |
| (ஆ) 1971 ஏப்ரல் முதல் 1975 மார்ச் முடிய கட்டப்பட்ட குடியிருப்புகள் | ரூ.75/- | 10 |
| (இ) 1975 ஏப்ரல் முதல் 1980 மார்ச் முடிய கட்டப்பட்ட குடியிருப்புகள் | ரூ.100/- | 10 |
| (ஈ) 1980 ஏப்ரல் முதல் 1990 மார்ச் முடிய கட்டப்பட்ட குடியிருப்புகள் | ரூ.125/- | 15 |
| (உ) 1990 ஏப்ரல் முதல் கட்டப்படும் குடியிருப்புகள் | ரூ.150/- | 20 |

### சிறுபான்மையின நலக்குழு

சிறுபான்மையின மக்களின் நலனைப் பேணுவதற்காக 'சிறுபான்மை யின நலக்குழு' ஒன்றைத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவில் இடம் பெற்றுள்ளவர்களின் பெயர்கள் வருமாறு:-

1. திரு. வி.எம். அப்துல் ஜபார்
   தலைவர்
   (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்)
2. பேராசிரியர் ஏ.எஸ்.எம். மரியநல்லு
   துணைத் தலைவர்
3. திரு. எம். சாந்திலால் ஜெயின்
   உறுப்பினர்.
4. திரு. கே.பி. கொட்டாரக்காரா
   உறுப்பினர்.
5. திரு. பி. ஓபுல் ரெட்டி
   உறுப்பினர்
6. திரு. கே.எஸ். ஷெட்டி
   உறுப்பினர்
7. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர்
   உறுப்பினர் - செயலர்

**சிறுபான்மையின நலக்குழுவின் முதல் கூட்டம் 4.6.90 அன்று நடைபெற்றது.**

★ தவணை முறையில் குடியிருப்புகளைப் பெறுபவர்களே இனி வீடுகளைப் பராமரித்துக் கொள்ள வேண்டும். இதற்கு ஆங்காங்கு குடியிருப்பு தாரர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஏற்பாடு செய்யும்.

★ அடிமனையும் வீட்டைச் சுற்றியும் வீட்டிற்குப் போகும் பாதை உள்ள மனைகளும் கூட்டுறவுச் சங்கத்திற்கு நீண்ட காலக் குத்தகைக்குக் கொடுக் கப்படும். கூட்டுறவுச் சங்கத்தில், குடியிருப்போர் எல்லோரும் உறுப்பினராக வேண்டும்.

★ வாடகைக்குத் தற்போது குடியிருப்போர், வாடகை பாக்கி இருந்தால், அதில் 50 சதவிகிதம் முழுமையாகச் செலுத்தினால், மீதித்தொகை தள்ளு படி செய்யப்படும்.

★ **இந்தச் சலுகைகள் வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்பட்டு, குடிசை வாழ் மக்களுக்கு அளிக்கப் பட்டுள்ள குடியிருப்புகளுக்கும் பொருந்தும்.**



# ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் நீதிமன்றங்கள் உதவிட வேண்டும்!

## முதல்வர் கலைஞர்

"ஏறத்தாழ மூன்று அல்லது மூன்றேகால் கோடி ரூபாய் செலவில் இந்த வளாகத்திலே நீதி மன்றங்களுக் கான கட்டிடங்களை, வசதி வாய்ப்புகளை உருவாக்கு வதற்கு நீண்ட காலமாகத் திட்டமிடப்பட்டு- இன்று நிறைவேற்றி வைக்கப்படுகிறது.

'நீதிபதி' என்ற சொல்லைப் பார்த்தால் அதிலுள்ள முதல் இரண்டு எழுத்துக்கள் மாத்திரம் நீதியைக் குறிப்பிட வில்லை. 'நீதிபதி' என்ற சொல்லின் முதலெழுத்து 'நீ' என்றும் கடைசி எழுத்து 'தி' என்றும் அமைந்துள்ளது- அதாவது நீதி என்று அமைந்துள்ளது.

களிலிருந்துதான் வருகிறார்கள்; வழக்காடுகின்றவர்கள் சமுதாயத்தை அடிப்படையாக வைத்து, சமுதாய நல நிலவரங்களை உணர்ந்தவர்கள், சமுதாயச் சூழலில் அன்றாடம் வளர்ந்து இருந்திட வேண்டும்.

அதைத்தான் "சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. அந்தப் பிரகாசமான விளக்கை ஏழை எளிய மக்களால் பெற முடிவதில்லை" என்று ஆதங்கத்தோடு அறிஞர் அண்ணா சொன்னார்.

ஏழைஎளிய மக்களும் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெறவேண்டும் என்கிற முயற்சியில், அரசுக்கு உதவியாக வழக்கறிஞர்களும் நீதிபதிகளும்- அரசுக்குச் சார்பாக



**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 29.7.90 அன்று, சேலத்தில் அன்னை அஞ்சுகம் உள் விளையாட்டரங்கம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி, அண்ணா போக்கு வரத்துக் கழகப் புதிய கிளை ஆகியவைகளைத் துவக்கி வைத்து, ஏழைஎளிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

எனவே இந்த 'நீதிக்கு'க் கட்டுப்பட்டவராக நீதிபதி இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் அந்தச் சொல்லே கூட அமைந்துள்ளது

தமிழில் ஆயுத எழுத்து எப்படியோ, அதைப்போல இந்த ஜனநாயகத்தின் ஆயுத எழுத்தாக நீதி, நிர்வாகம், சட்டமன்றம் ஆகிய இம்மூன்று துறைகளும் அடங்கி இருக்கின்றன.

இன்னும் புராணிகர் பாஷையில் சொல்ல வேண்டுமே யானால், சிவனுடைய முக்கண்ணைப்போல - சட்ட மன்றம், நிர்வாகம் ஆகியவைகளுக்கு இடையிலே - மூன்றாவது கண்ணாக நெற்றிக் கண் இருப்பது போல- நெற்றிக் கண்ணாக விளங்குவதுதான் நீதித்துறையாகும்."

இத்தகைய மிக முக்கியமான இந்தத் துறை வழக்கறிஞர் களால் உருவாகக்கூடிய ஒன்று. நீதிபதிகள் வழக்கறிஞர்

அல்ல - உதவியாக இருந்திட வேண்டும் என்கிற வேண்டு கோளை வைத்திட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் முதலிலே குறிப்பிட்ட ஜனநாயகத்தின் இந்த மூன்று கூறுகளுமே அணுகுவது சட்டத்தின் ஆட்சியைத் தான். சட்டமன்றத்தில் சமுதாயத்திற்குத் தேவையான- மக்களுக்குத் தேவையான - மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட — மக்கள் பிரதிநிதிகளைக்கொண்டு சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

அப்படி உருவாக்கப்பட்ட சட்டங்களைக் கொண்டு, ஆட்சி நடத்த வேண்டியது நிர்வாகம்; அதைத்தான் சட்டத் தின் ஆட்சி என்கிறோம்.

அந்தச் சட்டத்தின் ஆட்சியை, நிர்வாகம் செம்மையாக நடக்கிறதா என்பதை அறியவும், அந்தச் சட்டத்தின் ஆட்சிக்கு அடங்கி, கட்டுப்பட்டு, பொது மக்கள்

நடந்துகொண்டார்களா என்பதை ஆராய்ந்து அறியவும் நீதிமன்றத்துறை என்கிற மூன்றாவது துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒன்றோடொன்று மோதிக்கொள்ளக் கூடாது.

பொதுவாக நீதி மன்றத்திலே நடக்கிற நிகழ்ச்சிகள், அந்த நிகழ்ச்சிகளோடு தொடர்பு கொண்டிருக்கின்ற மக்களுக்குப் புரியக் கூடிய நிகழ்ச்சிகளாக இருந்திட வேண்டும்.

87-க்கும் மேற்பட்ட நீதிபதிகள், ஏறத்தாழ 130 ஆண்டுகளுக்கு மேலாக வயது நிறைந்த சேலம் மாவட்டத்து நீதி மன்றத்தில் பணியாற்றி இருக்கின்றார்கள். அவர்களில் நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் நம்மவர்கள் அல்ல; வெள்ளைக்காரர்கள்.

வெள்ளைக்காரர்கள் நீதி பரிபாலனம் நடத்திய அந்தக் காலத்தில் வேண்டுமானால், வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திலே, தங்களுக்காக எப்படி வாதாடுகிறார்கள், உள்ளபடியே வழக்கறிஞர்கள் நம்முடைய நிலையை உணர்ந்து வாதாடுகிறார்களா - எத்தகைய திறமையோடு வாதாடுகிறார்கள். நல்ல முறையில் வாதாடியும்கூட நீதி கிடைக்காமல் எப்படிப்போய் விட்டது என்பதையெல்லாம் தெரிந்து கொள்கிற பக்குவத்திலே நம் நாட்டுப் பாமர மனிதன் இல்லை.

நான் 'பாமர மனிதன்' என்று சொல்வதற்காக யாரும் வருத்தப்பட மாட்டார்கள். இன்றைக்கும் நம்முடைய சமுதாயத்திலே, கிராமப் புறங்களிலே, படிப்பறிவு அதிகம் இல்லாத மக்கள் நிரம்ப இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அவர்களெல்லாம் இன்றைக்கு நீதி மன்றங்களில் தங்களுக்காக, தங்களால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்கள் எப்படி வாதாடுகிறார்கள், எதிர் வழக்கறிஞர்கள் எப்படி வாதாடுகிறார்கள், இந்த இரண்டு வாதங்களையும் கேட்டு நீதிபதி அளித்த தீர்ப்பு சரியானதா, அல்லவா என்பதைத் தன் மனச்சாட்சிக்குக் கேட்டுக் கொள்ளக் கூட அந்தச் சாதாரண மனிதனுக்கு- அந்தப் பாமர மனிதனுக்கு இன்றைக்கு வாய்ப்பில்லை. பெரும்பாலான இடங்களில் மெல்ல மெல்ல, கடந்த சில பல ஆண்டுகளாக நீதி மன்றங்களிலே தமிழில் நடவடிக்கைகள் நடைபெறுகிற காரணத்தால், ஓரளவு அதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

எனவேதான், நீதி மன்றங்களில் நடக்கின்ற தீர்ப்பு வரையில் எல்லாமே தமிழில் இருக்க வேண்டும் என்கிற ஒரு முனைப்பான முயற்சி, கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டு, அது முற்றிலும் முழுமை அடைந்தது என்று நாம் மனநிறைவு கொள்ள முடியாத அளவிற்கு இன்றைக்கு ஓரளவிற்கு நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

அதற்கு என்ன காரணமென்றால், ஆங்கிலத்திலே இன்றைக்கு நீதி மன்றங்களிலே பயன்படுத்துவதற்காக இருக்கிற சொற்களைப்போல் தமிழில் இன்னும் ஏராளமான சட்டச் சொற்கள் வரவில்லை. கண்டுபிடிக்கப்படவில்லை என நான் சொல்லமாட்டேன்; அவைகளெல்லாம் பழக்கத்திற்கு வரவில்லை. அப்படி வராத காரணத்தினால்தான் இன்றைக்கும் 'வாய்தா' என்று சொல்லுகின்றோம். Hearing என்று சொல்லுகின்றோம். இவ்வாறெல்லாம் சொல்கிறோமேயல்லாமல் அதற்குரிய தமிழ்ச் சொற்கள் புழக்கத்தில் இல்லாத காரணத்தால் பயன்படுத்திட இயலவில்லை.

சட்டம் இன்றைக்கு எல்லோராலும் தமிழிலே புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு வருவதற்கும், நீதிமன்ற நிகழ்ச்சிகள் அனைவராலும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய அளவிற்கு வருவதற்கும், சட்டத் துறையிலே பல்வேறு சொற்கள் கண்டுபிடிக்கப்பட்டாக வேண்டும். அந்த முயற்சியிலே நாம் வெற்றி பெற்றால் தான் ஏழை எளியோர், பாமர மக்கள், எல்லாப் பகுதியிலும் இருப்போர் தங்களுக்காக எப்படி வாதாடப்படுகிறது, என்ன வாதாடப்படுகிறது, என்பதைத் தெரிந்து கொள்ள இயலும்.

நீதிக்கு, நிர்வாகம் கட்டளையிட்ட காலம் ஒன்று இருந்தது. அதற்குப் பிறகுதான் நீதி-நிர்வாகம் பிரிக்கப்பட்டு, ஜனநாயகத்தின் மூன்று கண்களாக- மூன்று முக்கியத் துறைகளாக இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அத்தகைய நீதிமன்றங்கள் எல்லா வகையிலும் இன்றைக்கு ஒடுக்கப்பட்டிருக்கின்ற, அடக்கப்பட்டிருக்கின்ற தமிழக மக்களுக்காக வாதிடுகின்ற பாசறைகளாக விளங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

***நீதிமன்றம் என்பது உயர்ந்தவர்கள் இருக்கின்ற இடம். அவைகளை ஏழைகள் நெருங்க இயலாது என்ற நிலை கூடாது. உலகத்தில் இருக்கின்ற எல்லாவற்றிலும் உயர்ந்த இடம் நீதிமன்றம் என்றாலும்கூட, அந்த உயர்ந்த இடத்திலே இருப்பவர்கள், தாழ்ந்த மக்களை - பிற்படுத்தப்பட்ட மக்களை - சாதாரண, சாமான்ய - ஏழை எளிய மக்களைக் குனிந்துபார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.***

***சூரியன் உயர்ந்துதான் இருக்கிறான். ஆனாலும் சூரியன் கீழே குனிந்து பார்க்கிற காரணத்தால்தான் நாமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.***

***நிலவு உயர்ந்த இடத்திலேதான் இருக்கிறது. நிலவு நம்மையெல்லாம் குனிந்து பார்க்கிற காரணத்தால்தான் நாமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.***

எனவே நீதிமன்றங்கள், உயர்ந்த இடத்திலே இருக்கக் கூடிய அமைப்புகள் என்றாலுங்கூட, அவைகள் சாதாரண மக்களை - அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை - தாழ்ந்து கிடக்கின்ற சமுதாயத்தைத் தலை குனிந்து பார்த்து, அவர்களைக் கைதூக்கி விடுகின்ற நிறுவனங்களாகப் - பாசறைகளாக நீதிமன்றங்கள் இருந்திட வேண்டும். அத்தகைய உணர்வை, சேலத்தில் நீதிமன்றக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுகின்ற இந்த விழாவிலே நாம் அனைவரும் பெறுவோமாக.''

***— சேலத்தில் 29.7.90 அன்று ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஆற்றிய***

**மாண்புமிகு முதல்வர் அவர்களால் 29.7.90 அன்று சேலத்தில் திறந்து வைக்கப்பட்ட மத்திய மேம்பாலம்.**



## மாணவர் பக்கம்

# தியாகச்சுடர் சிதம்பரனார்



**தி**யாகச்சுடர் வ.உ.சிதம்பரனார் அன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் வழக்கறிஞர் உலகநாதபிள்ளை-பிரமாயி அம்மாள் தம்பதியருக்கு 5-9-1872-இல் மகனாகப் பிறந்தார்.

கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்று 1895-இல் வழக்கறிஞரானார். தேசிய இயக்கத்தில் ஈடுபட்டார். பாலகங்காதர திலகரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அவரது தளபதியாக, நாட்டின் தென் பகுதியில் பணியாற்றினார். விடுதலைப் போர்க்களத்தில் வீறு கொண்டெழுந்தார். தீவிர வாதியாகத் திகழ்ந்தார். விடுதலை முழக்கத்தை மேடைகளில் முழங்கி வந்தார்.

நூல் நூற்பு நிறுவனம், சுதேசியப் பண்டக சாலை ஆகிய இரண்டையும் நிறுவிச் சுதேசியம் வளர்த்தார். 1906- இல் சுதேசி நாவாய்ச் சங்கத்தை நிறுவி, சுதேசிக் கப்பல் ஓட்டினார்.

விபின் சந்திரபாலர் சிறையிலிருந்து விடுதலை பெற்றபோது அதனைப் பாராட்டும் வகையில் தூத்துக்குடியில் மாபெரும் ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார் சிதம்பரனார். அந்த ஊர்வலத்திற்கு அந்நாளைய அரசு தடை விதித்திருந்தது. நாட்டுப்பற்று மிக்க சிதம்பரனார் தடையை மீறினார்.

**அதன் விளைவு?** அவர் கைது செய்யப்பட்டார். அவர் மீது அரசு நிந்தனைக் குற்றம் சாட்டப்பட்டது. 40 ஆண்டுச் சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. பின்னர் மேல் முறையீட்டில் அது, 6 ஆண்டாகக் குறைக்கப் பெற்றது.

சிதம்பரனாருக்குத் தீர்ப்பு வழங்கிய நீதிபதி பின்ஹே தமது தீர்ப்பில் ''சிதம்பரனார் பெரிய ராஜத்துரோகி. அவரது எலும்புக் கூடு கூட ராஜ விசுவாசத்திற்கு விரோதமானது. சிதம்பரனாரின் பிரசங்கத்தையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

சிதம்பரனார் கோயம்புத்தூர், கண்ணனூர் சிறைகளில் தமது தண்டனையைக் கழித்தார். அவரது கால்களில் பெரு விலங்கு போடப்பட்டிருந்தது.

உடல் நலம் குன்றியிருந்தபோதும் சிறையதிகாரிகள் அவரிடம் கடுமையாக வேலை வாங்கினர். ஒரு மாட்டைப் போல் செக்கிழுக்க வைத்தனர்.

1912 டிசம்பர் திங்களில் விடுதலை பெற்ற சிதம்பரனார், பின்னர் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈடுபட்டார். பறிக்கப்பட்ட வழக்கறிஞர் பதவியை மீண்டும் பெற்றார். நாளடைவில் உடல் நலிவுற்று, 1936 நவம்பர் 18-ஆம் நாளன்று அமரரானார்.

## சனிக் கிரகத்தின் புதிய துணைக்கோள் கண்டுபிடிப்பு

சனிக் கிரகத்தின் புதிய துணைக்கோள் ஒன்றை அமெரிக்க வானியல் வல்லுநர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். அமெரிக்காவின் 'வாயேஜர்-2' விண்கலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்து அனுப்பியிருந்த புகைப்படங்களைக் கம்ப்யூட்டர் மூலம் அவர் ஆய்வு செய்து கொண்டிருந்தபோது, இந்தப் புதிய துணைக்கோள் கண்டுபிடிக்கப்பட்டது.

'வாயேஜர்-2' என்னும் ஆளில்லாத விண்கலம் 1980-81-ஆம் ஆண்டுகளில் சனிக் கிரகத்தைச் சுற்றிப் பறந்தபோது அது சுமார் 30,000 புகைப்படங்களை எடுத்துப் பூமிக்கு அனுப்பி இருந்தது.

இந்தப் புதிய துணைக்கோளின் குறுக்களவு சுமார் 19 கிலோமீட்டர்கள். சனிக் கிரகத்தின் துணைக்கோள்களிலேயே மிகவும் சிறியது இதுதான். இந்தப் புதிய கண்டுபிடிப்பை சர்வதேச வானியல் யூனியன் அங்கீகரிக்க வேண்டும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தத் துணைக்கோளையும் சேர்த்தால், சனிக் கிரகத்தின் மொத்தத் துணைக்கோள்களின் எண்ணிக்கை 18 ஆக உயருகிறது.

சனிக் கிரகத்தின் வெளிப்புற வளையத்தில் சுமார் 320 கிலோமீட்டர் அகலத்துக்குப் பெரிய இடைவெளி ஒன்று உள்ளது. இது 'என்க் இடைவெளி' (Encke's Gap) என்று அழைக்கப்படுகிறது.

சனிக் கிரகத்தைச் சுற்றியுள்ள வளையங்கள் எண்ணற்ற துகள்களால் ஆனவை. நுண்ணிய துகள் முதற்கொண்டு, பாறாங்கல் அளவு வரையில், இந்தத் துகள்களின் அளவுகள் வேறுபடுகின்றன. பெரும்பாலான இந்தத் துகள்கள் பனிக்கட்டியாலும், உறைந்து போன கற்களாலும் ஆனவையாகும்.

**- அமெரிக்கத் தகவல் நிலையம்**

# வேலூர்ப் புரட்சி

**வே**லூர்க் கலகம் எனப்படும் வேலூர்ப் புரட்சி 'வீழ்ந்து பட்டோம்' நாம் என்றுணர்ந்த தென்னிந்திய மக்கள் விழித்தெழுந்த வீரக் கதையாகும்.

மாவீரன் திப்புவின் வீழ்ச்சிக்குப் பின், அவரது குடும்பத்தினர் கைதிகளாய் வேலூர்க் கோட்டையுள் அடைக்கப்பட்டனர். அவர்களை 1500 இந்திய, 379 வெள்ளைச் சிப்பாய்கள் காவல் புரிந்தனர்.

**1806**

ஆங்கிலப் படையின் முதல் ரெஜிமெண்டின் முதல் பட்டாலியனின் ஆறு கம்பெனிகளும், நான்காவது ரெஜிமெண்டின் இரண்டாவது பட்டாலியனும் பணியில் இருந்தன. ஏப்ரல், மே மாதம் வாக்கில் சிப்பாய்களுக்குப் புதிய சீருடை அமுலாக்கப்பட்டது. புதிய தலைப்பாகை, தோலால் ஆன குல்லாய்ச் செண்டு, புதிய காலுறைகள் வழங்கப்பட்டு அணியுமாறு வற்புறுத்தப்பட்டது. ஆனால் வேலூர்ச் சிப்பாய்களுக்கு அதனை ஏற்க மனமில்லை.

வாலாஜாபாத்திலும் அப்படியே. தம் ஆணை செயல்படாமற் போனதற்காக அவமானமுற்ற வெள்ளை அதிகாரிகள், சுதேசி சிப்பாய்களைப் பட்டினி போட்டனர். முன் நின்றவர்களுக்கு தலா 900 சவுக்கடி தண்டனை அளித்தனர். ஒரு சிப்பாயின் மாதச் சம்பளம் 7 ரூபாய் மட்டுமே. அதை விட்டெறிந்து விட்டு வேலையிலிருந்து வெளியேற வேண்டும் என ஆபாச அடைமொழியோடு அவர்கள் வெள்ளையரை வைதனர்.

சிப்பாய்களின் மனத்தில் எதிர்ப்புணர்வென்னும் நெருப்பு! திப்புவின் நினைவு எரிநெய் ஆயிற்று!

திப்புவின் புதல்வர்கள், வேலூர்ப் பட்டாளத்தின் சுதேசித் தலைவர்கள், சிப்பாய்களின் எண்ணம் செயலாக ஊக்கம் கொடுத்தனர். மதுரைக் கலவரம் (1804), சித்தூர்க் கலவரம் (1804-5), மலபார் புரட்சி (1802-5), திருவாங்கூர் புரட்சி (1804-5) முதலானவையும் அவர்களது உணர்ச்சிகளைக் கூடுதலாக்கின.

புரட்சியாளர்கள், வேலூருக்கு அப்பால், நெல்லூர், காளஸ்திரி பகுதிகளோடு ரகசியத் தொடர்பு கொண்டார்கள். இந்து முஸ்லீம் மக்களை, சிப்பாய்களை வெள்ளையர்க்கு எதிராக ஒன்றிணைக்க முயன்றார்கள் - தமக்கெதிராக வதந்தி பரப்புவோர் இராணுவ நடவடிக்கைக்கு உள்ளாவர் என்று மிரட்டியது கும்பினி ஆட்சி.

ஜூலை 4-ம் நாள் புரட்சி தினமாய்க் குறிக்கப்பட்டது. ஆனால் அது 8-ம் தேதி என மாறி மீண்டும் 9-ம் தேதி ஆயிற்று. அன்று மாலையும் இரவும், பல்வேறு காரணங்கள் காட்டி சிப்பாய்களில் பல பேர் கோட்டைக்குள்ளேயே தங்கினர். வெள்ளை அதிகாரிகள் உறங்கிக் கொண்டிருந்தனர். 10-ம் தேதி விடிந்து கொண்டிருந்தது. இரவு இரண்டு மூன்று மணி. சிப்பாய்கள் சிறு பீரங்கிகளைச் சப்தமேதுமற்று நகர்த்திச் சென்று வெள்ளைக் குடியிருப்புகளுக்கு எதிரே நிலை நிறுத்தினர். சைகை கிடைத்ததும் துப்பாக்கி, பீரங்கிகள் முழங்கின.

கர்னல் பான்கோர்ட் முதல் பலி. அடுத்து கர்னல் மெக்சிராஸ். மெக்சிராஸின் சடலத்தின் மீது சிப்பாய்கள் காறி உமிழ்ந்து, எட்டி உதைத்து இகழ்ந்தனர். அவர்தான் புதுத்தொப்பி அணியக் கட்டாயப் படுத்தியவர். அரண்மனைப் பணியாளர் கேப்டன் வில்லிசனைச் சுட்டு வீழ்த்தினர். சார்ஜெண்ட் ஜான் ஈலே துரத்திச் சென்று வளைந்த கொடுவாளால் வெட்டப்பட்டார். திப்புவின் இளவரசர்களது பணியாட்கள், புரட்சி நடத்திய சிப்பாய்களுக்கு முழு உற்சாகத்துடன் உதவி செய்தனர். எதற்கோ, கோட்டையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த மேஜர் ஆம்ஸ்ட்ராங் என்ன கலவரம் இது' என்றறிய, பல்லக்கு விட்டிறங்கினார். கனன்ற குண்டுகளே அவரது கேள்விக்குப்பதிலுரைத்தன.

ஐநூறு இந்திய சிப்பாய்கள் ஒன்று திரண்டு வெள்ளைக் குடியிருப்புகளின் மீது குண்டுமழை பொழிந்தனர். 69-ம் ரெஜிமெண்டின் வெள்ளை வீரர் அநேகம் பேர் மாண்டு வீழ்ந்தனர். சார்ஜெண்ட் காஸ்கிரேவ் ஊனப்பட்டு வீழ்ந்தார்.

ஒன்றரை மணி நேரம், தாக்குதல் தீவிரமாக நீடித்தது. பின் இளவரசர் முஸ்-உத்-தீன் ஆணைப்படி கோட்டையில் வெற்றி முழக்கத்தோடு பச்சை வர்ணப் பின்னணியில் கர்ஜித்து நிற்கும் வரிப் புலிக் கொடியொன்று ஏற்றப்பட்டது. அந்த நேரம் கோட்டை முழுவதும் புரட்சியாளர்கள் வசத்தில் இருந்தது.

காலை 9.30 மணி அளவில் வெளியிலிருந்து வெள்ளைப்படை உதவிக்கு வந்தது. மைசூர் இளவரசரும் தான்தான் தலைவர் என்று அறிவித்து முன் வரவில்லை. புரட்சியின் நோக்கத்தை மறந்து போன இந்திய சிப்பாய்கள் கொள்ளையடிப்பதில் தீவிரம் காட்டினர். அதனால் பெருங் குழப்பம் விளைந்தது. காலை 10-மணி அளவில் வெள்ளையர் கை ஓங்கிற்று. இந்தியச் சிப்பாய்கள் துருவித் துருவித்தேடப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆங்கிலேயர்க்கெதிரான இந்தியாவின் முதலாவது இராணுவக்கிளர்ச்சி இப்படித் தோல்வியுற்றது.

**— டாக்டர் பி. சின்னையன் அவர்களது**
**The Vellore Mutiny - 1806**
**என்னும் நூலிலிருந்து.**



## வேலூர்க் கோட்டை

**தெ**ன்னிந்தியப் படை அரண்களுள் மிகச் சீரிய இராணுவக் கட்டுமானம் கொண்ட வேலூர்க் கோட்டை விஜய நகரப் பேரரசைச் சார்ந்த சின்ன பொம்மி நாயக்கரால் தோற்றுவிக்கப்பட்டது. காலம் 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதி. இதன் பிரதான மதிற்சுவர் கருங்கல்லாலானது. வட்ட நீள் சதுர வடிவமான கொத்தளங்கள் உண்டு. இதைச் சுற்றி பரந்த அகழியொன்று வடிகால் மூலம் நீரால் நிரப்பப்பட்டது.

17-ஆம் நூற்றாண்டின் நடுவில் பீஜப்பூர் சுல்தான் இக்கோட்டையைக் கைப்பற்றினார். 1675-ஆம் ஆண்டு துக்காஜிராவ் என்பவரின் தலைமையின்கீழ் மராத்தியர்கள் பதினான்கு மாதங்கள் இக்கோட்டையை முற்றுகையிட்டு இறுதியாக - 1676-ஆம் ஆண்டு கைப்பற்றினார்கள். ஆனால் இரண்டு ஆண்டுகள் கழித்து பீஜப்பூர் படை மீண்டும் இக்கோட்டையைக் கைப்பற்றியது. சில ஆண்டுகள் கழித்து இக்கோட்டை மீண்டும் மராத்தியர் வசமாயிற்று.

1708-ல் ஆர்க்காட்டினைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த தாவுத்கான் என்ற கர்நாடக நவாப் இக்கோட்டையைக் கைப்பற்றினார். சுமார் ஒரு நூற்றாண்டு வரையில் நவாபின் கட்டுப்பாட்டில் இக்கோட்டை இருந்தது. இதற்கிடையில் குலாம் முரதசா அலி, கர்நாடக நவாபிற்கெதிராக வேலூரில் கலகம் செய்ய அவருக்கு பிரஞ்சு தளபதி டூப்ளே ஆதரவளித்தார். இருப்பினும் கர்நாடக நவாபின் கூட்டாளிகளான ஆங்கிலேயர்களின் ஆதரவோடு அக்கலகம் முறியடிக்கப்பட்டது. அப்போதிருந்து வேலூர்க் கோட்டை ஆங்கிலேயரின் பாசறையாக மாறியது.

இரண்டாம் மைசூர் யுத்தத்தின்போது ஹைதர் அலி இக்கோட்டையைக் கைப்பற்றினார். ஆனா ஆங்கிலேயர் அதை மீண்டும் தம் வசமாக்கி கொண்டார்கள். நான்காம் மைசூர் யுத்தம் திப் சுல்தானின் வீழ்ச்சியுடன் முடிவுற்றபோது, அவர உறவினர்கள் கோட்டையில் சிறை வைக்கப்ப டனர். கோட்டை வளாகத்தில் 1806-ல் புரட் மூண்டது.

தற்போது கோட்டையினையும் சுற்றுப் புற களையும், இந்திய தொல்பொருள் துறை பா காத்து வருகிறது.

**8-ஆம் பக்கத் தொடர்ச்சி**

மொத்தம் ரூ.2,44,09,408 மானியத்துடன் ரூ. 4,70,86.213 நிதி உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 235 மாணவ மாணவிகள் தங்கிப்படிக்க ரூ.2.90 இலட்சத்தில் அவியலூரில் ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக் கட்டிடம், ரூ.11.7 இலட்சத்தில் 30 மாணவியர்கள் பயன் பெறும் வகையில் சிங்கனூர் ஆதிதிராவிட நல விடுதிக் கட்டிடம், மாபொடையூரில் ஆதிதிராவிட நல உயர் நிலைப் பள்ளிக் கட்டிடம், 535 பேர் பயன்பெறும் வகையில் ரூ. 13 இலட்சத்தில் கோமுகி அணை உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் ஆக ரூ.38.50 இலட்சம் மதிப்பில் கட்டிடங்களையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் தொழுதூரில் 50 மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் ஆதிதிராவிட நல மாணவியர் 'விடுதி ரூ.14 இலட்சத்திலும், பரிவளாகத்தில் 50 மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ. 18 இலட்சம் மதிப்பிலும், 542 மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் கவறையில் ரூ. 15 இலட்சத்தில் உயர்நிலைப் பள்ளி கூடுதல் கட்டடமும், சேமக் கோட்டையில் 317 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.11 இலட்சத்தில் உயர்நிலைப் பள்ளி கூடுதல் கட்டிடமும், சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழா நினைவரங்கம் சிதம்பரத்தில் ரூ.15 இலட்சத்தில் கட்டவும் ஆக 959 பேர் பயனடையும் வகையில் ரூ. 74 இலட்சம் மதிப்புள்ள கட்டிடங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் சார்பில் சின்ன நெற்குணம் குடிநீர்த் திட்டம் ரூ. 2 இலட்சத்திலும், மஞ்சக்கொள்ளை குடிநீர்த் திட்டம் ரூ.3.32 இலட்சத்திலும், ராதாவிளாகம் குடிநீர்த்திட்டம் ரூ. 4.15 இலட்சத்திலும் மானிய ஆடூர் குடிநீர்த்திட்டம் ரூ. 3 இலட்சத்திலும், ரெட்டியூர் குடிநீர்த் திட்டம் ரூ. 2.77 இலட்சத்திலும் ராயநல்லூர் குடிநீர்த் திட்டம் ரூ. 2.76 இலட்சத்திலும் நத்தமலை குடிநீர்த் திட்டம் ரூ. 1.83 இலட்சத்திலும், கீழ்க் கடம்பூர் குடிநீர்த் திட்டம் ரூ.2.09 இலட்சத்திலும், நாட்டர் மங்களம் குடிநீர்த் திட்டம் ரூ. 2.14 இலட்சத்திலும் ஆக மொத்தம் ரூ. 31.75 இலட்சத்துக்குக் குடிநீர்த் திட்டங்களை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மக்களுக்கு அர்ப்பணித்தார்.

ஆக மொத்தம் ரூ. 6.14 கோடி மதிப்பில் 91,295 பேர்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கினார். மொத்தத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சி எழுச்சியுடனும், வெற்றிகரமாகவும் அமைந்தது.

**ஆ. கோபாலன்,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூர்.






இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே.

நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்,
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்,
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்,
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

தேவி! நின்னொளி பெறாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்தன்
பாலனம் படைத்தி லாதார்?

ஒழிவறு நோயிற் சாவார்,
ஊக்கமொன் றறிய மாட்டார்;
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையில் நிற்பார்;
இழிவுறு வாழ்க்கை தேரார்,
கனவிலும் இன்பங் காணார்;
அழிவறு பெருமை நல்கும்
அன்னை! நின் அருள் பெறாதார்.



| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27122 | 27125 | 27127 | 27129 | 27135 | 27150 | 27161 | 27169 | 27170 | 27171 | 27172 | 27173 | 27175 | 27191 | 27218 | 27219 | 27221 | 27236 | 27259 | 27260 |
| 27269 | 27276 | 27277 | 27302 | 27309 | 27310 | 27327 | 27337 | 27341 | 27342 | 27349 | 27364 | 27369 | 27385 | 27386 | 27397 | 27404 | 27417 | 27418 | 27432 |
| 27435 | 27437 | 27439 | 27447 | 27451 | 27472 | 27475 | 27477 | 27490 | 27498 | 27500 | 27501 | 27506 | 27516 | 27517 | 27555 | 27591 | 27594 | 27598 | 27599 |
| 27601 | 27613 | 27614 | 27617 | 27618 | 27619 | 27627 | 27629 | 27633 | 27640 | 27644 | 27659 | 27660 | 27663 | 27664 | 27677 | 27678 | 27679 | 27680 | 27683 |
| 27687 | 27721 | 27723 | 27724 | 27731 | 27732 | 27733 | 27736 | 27743 | 27796 | 27797 | 27868 | 27931 | 27944 | 27973 | 28279 | 28311 | 28318 | 28323 | 28328 |
| 28421 | 28537 | 28538 | 28558 | 28577 | 28598 | 28689 | 28693 | 28709 | 28712 | 28713 | 28723 | 28731 | 28766 | 28785 | 28800 | 28810 | 28838 | 28841 | 28846 |
| 28847 | 28848 | 28850 | 28857 | 28859 | 28890 | 28891 | 28906 | 28910 | 28940 | 28941 | 28942 | 28945 | 28954 | 29002 | 29013 | 29086 | 29104 | 29122 | 29124 |
| 29127 | 29130 | 29160 | 29171 | 29174 | 29175 | 29206 | 29234 | 29235 | 29257 | 29266 | 29269 | 29275 | 29333 | 29350 | 29357 | 29376 | 29441 | 29442 | 29446 |
| 29497 | 29498 | 29596 | 29598 | 29606 | 29672 | 29676 | 29679 | 29707 | 29730 | 29759 | 29863 | 29919 | 29934 | 29944 | 29945 | 29975 | 29991 | 29996 | 30009 |
| 30026 | 30032 | 30081 | 30089 | 30130 | 30166 | 30174 | 30175 | 30184 | 30207 | 30244 | 30245 | 30307 | 30310 | 30317 | 30339 | 30344 | 30372 | 30408 | 30417 |
| 30461 | 30465 | 30468 | 30500 | 30524 | 30534 | 30536 | 30557 | 30560 | 30568 | 30594 | 30611 | 30612 | 30670 | 30677 | 30688 | 30696 | 30705 | 30812 | 30829 |
| 30854 | 30858 | 30871 | 30890 | 30895 | 30929 | 30933 | 30949 | 30973 | 30993 | 31051 | 31084 | 31095 | 31130 | 31187 | 31197 | 31221 | 31280 | 31281 | 31300 |
| 31319 | 31333 | 31386 | 31394 | 31399 | 31400 | 31421 | 31539 | 31683 | 31686 | 31687 | 31701 | 31724 | 31737 | 31785 | 32075 | 32190 | 32321 | 32324 | 32328 |
| 32329 | 32360 | 32363 | 32384 | 32414 | 32424 | 32457 | 32458 | 32475 | 32490 | 32495 | 32511 | 32515 | 32528 | 32530 | 32568 | 32605 | 32609 | 32659 | 32667 |
| 32675 | 32689 | 32786 | 32804 | 32918 | 32922 | 32925 | 32955 | 32961 | 33018 | 33020 | 33039 | 33068 | 33091 | 33107 | 33110 | 33114 | 33160 | 33202A | 33219 |
| 33230 | 33350 | 33420 | 33425 | 33458 | 33466 | 33489 | 33509 | 33514 | 33523 | 33528 | 33531 | 33577 | 33648 | 33649 | 33676 | 33677 | 33767 | 33769 | 33798 |
| 33831 | 33856 | 33895 | 33898 | 33904 | 33920 | 33938 | 33944 | 34037 | 34062 | 34066 | 34070 | 34088 | 34149 | 34155 | 34156 | 34172 | 34177 | 34237 | 34243 |
| 34279 | 34300 | 34375 | 34496 | 34525 | 34609 | 34639 | 34646 | 34754 | 34776 | 34825 | 34827 | 34869 | 34947 | 34965 | 34970 | 34992 | 35024 | 35026 | 35039 |
| 35053 | 35072 | 35100 | 35104 | 35106 | 35118 | 35119 | 35123 | 35161 | 35268 | 35275 | 35331 | 35415 | 35418 | 35419 | 35436 | 35449 | 35464 | 35487 | 35490 |
| 35502 | 35548 | 35573 | 35577 | 35602 | 35636 | 35638 | 35640 | 35644 | 35655 | 35681 | 35684 | 35715 | 35760 | 35813 | 35825 | 35869 | 35875 | 35905 | 35922 |
| 35924 | 35945 | 35956 | 35973 | 35989 | 35992 | 36024 | 36025 | 36041 | 36057 | 36115A | 36126 | 36141 | 36158 | 36170 | 36183 | 36260 | 36288 | 36305 | 36312 |
| 36314 | 36315 | 36318 | 36418 | 36448 | 36473 | 36512 | 36528 | 36530 | 36533 | 36567 | 36578 | 36623 | 36640 | 36673 | 36682 | 36690 | 36691 | 36706 | 36770 |
| 36783 | 36792 | 36796 | 36797 | 36802 | 36805 | 36806 | 36807 | 36808 | 36825 | 36826 | 36850 | 36856 | 36868 | 36925 | 36935 | 36994 | 37050 | 37116 | 37179 |
| 37182 | 37185 | 37225 | 37247 | 37248 | 37249 | 37324 | 37362 | 37372 | 37375 | 37376 | 37422 | 37456 | 37460 | 37461 | 37469 | 37477 | 37496 | 37516 | 37517 |
| 37522 | 37537 | 37543 | 37548 | 37551 | 37580 | 37582 | 37598 | 37618 | 37619 | 37622 | 37632 | 37642 | 37659 | 37679 | 37703 | 37709 | 37713 | 37723 | 37731 |
| 37732 | 37747 | 37749 | 37859 | 37861 | 37960 | 38018 | 38022 | 38031A | 38035 | 38052 | 38062 | 38081 | 38083 | 38159 | 38161 | 38169 | 38173 | 38182 | 38183 |
| 38221 | 38229 | 38239 | 38242 | 38260 | 38268 | 38303 | 38306 | 38320 | 38330 | 38336 | 38360 | 38364 | 38405 | 38409 | 38412 | 38415 | 38429 | 38440 | 38442 |
| 38461 | 38465 | 38478 | 38482 | 38496 | 38502 | 38537 | 38541 | 38543 | 38566 | 38569 | 38572 | 38573 | 38577 | 38633 | 38636 | 38639 | 38643 | 38646 | 38649 |
| 38652 | 38653 | 38654 | 38660 | 38669 | 38673 | 38681 | 38682 | 38684 | 38686 | 38689 | 38692 | 38695 | 38696 | 38705 | 38724 | 38739 | 38746 | 38752 | 38755 |
| 38775 | 38776 | 38778 | 38790 | 38791 | 38800 | 38803 | 38850 | 38880 | 38882 | 38891 | 38893 | 38896 | 38910 | 38917 | 38929 | 38930 | 38931 | 38938 | 38962 |
| 38963 | 38964 | 38977 | 38981 | 38985 | 38986 | 38988 | 38992 | 38993 | 38996 | 39002 | 39003 | 39005 | 39009 | 39026 | 39032 | 39033 | 39048 | 39061 | 39062 |
| 39064 | 39093 | 39095 | 39097 | 39098 | 39112 | 39115 | 39116 | 39148 | 39149 | 39150 | 39157 | 39164 | 39207 | 39210 | 39215 | 39216 | 39218 | 39228 | 39238 |
| 39243 | 39303 | 39304 | 39326 | 39342 | 39394 | 39417 | 39419 | 39420 | 39421 | 39427 | 39442 | 39443 | 39471 | 39483 | 39489 | 39493 | 39494 | 39495 | 39499 |
| 39515 | 39528 | 39530 | 39531 | 39535 | 39541 | 39543 | 39559 | 39562 | 39563 | 39564 | 39565 | 39567 | 39568 | 39574 | 39575 | 39581 | 39599 | 39626 | 39627 |
| 39628 | 39629 | 39630 | 39633 | 39642 | 39649 | 39660 | 39661 | 39662 | 39691 | 39693 | 39697 | 39704 | 39720 | 39735 | 39738 | 39748 | 39750 | 39755 | 39756 |
| 39762 | 39763 | 39766 | 39778 | 39788 | 39793 | 39794 | 39795 | 39822 | 39835 | 39850 | 39873 | 39892 | 39907 | 39911 | 39940 | 39949 | 39957 | 39960 | 40021 |
| 40034 | 40036 | 40064 | 40125 | 40155 | 40181 | | | | | | | | | | | | | | |

**The result of the candidates with Register Numbers 24616, 36673 and 37119 are withheld and will be published later.**

**துணை ஆய்வாளர்களுக்கான தேர்வு - முதல் தாள் (இடைநிலை மற்றும் சிறப்புப் பள்ளிகளுக்குரியது)**
**(நூல்கள் இல்லாமல்)**

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22008 | 22030 | 22037 | 22059 | 22074 | 22134 | 22141 | 22148 | 22163 | 22172 | 22219 | 22236 | 22255 | 22258 | 22264 | 22293 | 22320 | 22328 | 22329 | 22351 |
''ஒரு நல்ல கவிஞனோ எழுத்தாளனோ உருவாகிறான் என்பதைவிடப் பிறக்கிறான் என்பதே பொருத்தமாகும். ஏனென்றால்- எழுத்தாளனாகவோ, கவிஞனாகவோ ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டு, அப்படி உருவாக முடியாமல் போனவர்கள் பலர். எழுத்தாளர் வ.ரா. அப்படித்தான் சுதந்திரச் சிந்தனையாளராகவே பிறந்தார்; பிராமண குலத்திலே பிறந்தும் ஒரு சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். அவர், தேசிய இயக்கத்திலே ஈடுபாடு கொண்டு, சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகப் பல்வேறு தொல்லைகளை ஏற்றவர்; மனிதரில் மேல் கீழ் இல்லை என்றவர்; ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலை மாற்றப்படவேண்டும் என்று தமது கதை-கட்டுரைகள் மூலம் வலியுறுத்தியவர்; வாதிட்டவர்.

''1943-44-ல், பாரதியைப்பற்றி முதன் முதலாக வ.ரா. எழுதிய நூல்தான் உண்மையான பாரதியாரை உலகிற்குக் காட்டியது. மறுமலர்ச்சியாளரான வ.ரா. புதிய சிந்தனைக்கு உரிய இடம் தந்தவர். எல்லோரும் இந்த நாட்டில் ஓரினமாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையோடு செயல்பட்டவர். அவரது பிறந்த நாளில் -நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.''

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு க. முத்துசாமி அவர்கள் நன்றி கூறினார்.

விழாத் தொடக்கத்தில் ராதிகாவின் தந்திரக் காட்சியும், முடிவில் நாடகமும் நடந்தது.

**— நமது செய்தியாளர்.**



## அறிவியல் புரட்சியில் சூப்பர் கம்ப்யூட்டர்கள்

சூப்பர் கம்ப்யூட்டர்கள் அறிவியல் துறையில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றன.

● சூப்பர் கம்ப்யூட்டர்களை வைத்துச் சில நிமிடங்கள் பணியாற்றுவதன் மூலம், பல கோடி ஆண்டுகளுக்கு முன்னால் அண்டங்களும் விண்மீன்களும் உருவானது எப்படி என்பது குறித்து வானியல் வல்லுநர்கள் ஆய்வு நடத்த வசதி ஏற்பட்டுள்ளது.

● ஊனமுற்றோருக்குத் தேவையான செயற்கையான முழங்கால் மூட்டுகளையும், இடுப்பு மூட்டுகளையும் இந்த சூப்பர் கம்ப்யூட்டர்களை வைத்து, அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் கச்சிதமாக உருவாக்க முடிகிறது.

● இப்போது, ஆண்டுதோறும் சுமார் 2 இலட்சம் பேருக்கு செயற்கை மூட்டுகள் பொருத்தப்படுகின்றன. அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் இத்தொகை பலமடங்கு பெருகக்கூடும்.

● சூப்பர் கம்ப்யூட்டர்கள் நமது அறிவியலில் எந்த அளவுக்கு மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன என்பதைப் பெரும்பாலான மக்கள் இன்னமும் உணரவில்லை என்கிறார் கார்நெல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளரான மெல்வின் காலோஸ்.

● 'பல்சார்கள்' எனப்படும் தொலைதூர நட்சத்திரங்களிலிருந்து வரும் சமிக்ஞைகளை ஆராய்வதாக இருந்தாலும் சரி; அல்லது பூமிக்குள் ஒலி அலைகளை அனுப்பி, அதன் எதிரொலியின் அடிப்படையில் பூமியின் உட்புறத்தை ஆராய்வதாக இருந்தாலும் சரி; இதுபோன்ற சிக்கலான பணிகளுக்கு சூப்பர் கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்தலாம்.

● சாதாரணமாகப் பரிசோதனைக் கூடங்களில் மேற்கொள்ள முடியாத, சிக்கலான அல்லது அதிகச் செலவு பிடிக்கக்கூடிய ஆய்வுகளை நடத்துவதற்கு சூப்பர் கம்ப்யூட்டர்கள் பயன்படுகின்றன.

● பெரிய நகரங்களில் காற்று மண்டலம் அசுத்தமடைவது பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்கும் 'கிரே' சூப்பர் கம்ப்யூட்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**—அமெரிக்கத் தகவல் நிலையம்**

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

★ சத்துணவு சாப்பிடுகின்ற குழந்தைகளில் முட்டை வேண்டாம் என்கின்ற குழந்தைகளுக்கு, முட்டைக்குப் பதிலாக ஊட்டச்சத்து உருண்டை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அறிவித்தார் (26.6.90).

★ இராமநாதபுரம் நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கத் தமிழக அரசு இராமநாதபுரம் நகராட்சிக்கு ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது என்று அறிவித்துள்ளது (29.6.90).

★ முதல்வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்க்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்ததையொட்டி, தென்னார்க்காடு, செங்கை அண்ணா மாவட்டங்களில் இதுவரை 67 ஆயிரம் மாணவ மாணவியர்க்கு இலவச பஸ் பாஸ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது (29.6.90).

★ வேளச்சேரி ஏரியின் குறுக்கே கக்கன் நகரையும்- பிருந்தாவன் நகரையும் இணைக்கும் வகையில் ரூ.8.9 இலட்சம் செலவில் புதிய பாலம் கட்டுவதற்கான அடிக்கல்லை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் நாட்டினார் (30.6.90).

★ அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு பென்சன் திட்டம் விரைவில் அமலாக்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு மு. கண்ணப்பன் அவர்கள் அறிவித்தார் (30.6.90).

★ தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ.500/- கோடி முதல் ரூ.1,000/- கோடி வரையிலான காகித உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது என்றும், கரும்புச் சக்கையிலிருந்து செய்தித்தாள் காகிதம் (நியூஸ்பிரிண்ட்) தயாரிக்கும் மற்றுமொரு தொழிற்சாலை அமைக்கத் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார் (5.7.90).

★ உழவர்கள், கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்கள் ஆகியோர் 12 இலட்சம் பேர்களுக்குப் பலனளிக்கும் வகையில் ரூ.10,000 வரையிலுள்ள கடன்களுக்கு நிவாரணம் அளிக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீவிர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (3.7.90).

★ நடப்புக் கல்வியாண்டில் 70 புதிய உயர் நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தவும் ஏற்கெனவே இருந்து வரும் 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க.அன்பழகன், அவர்கள் அறிவித்தார் (4.7.90).

★ வேளாண்மையில் புதிய விஞ்ஞான முறைகளைத் தமிழக அரசு புகுத்தியதன் விளைவாக உணவு உற்பத்தியில் மாபெரும் சாதனை புரிந்துள்ளோம் என்று குமுளூரில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் (11.7.90).

★ நடப்புக் கல்வியாண்டு முதல், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்புவரை ஆங்கில போதனா மொழிக் கல்வி பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்க்கு அவர்களது பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானத்தைக் கணக்கிற்கொள்ளாமல் மாதாந்திரக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்திரவிட்டுள்ளது.

இதன்படி 1990-91-ஆம் ஆண்டில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மேற்கூறப்பட்ட மாணவ மாணவியர் மாதாந்திரக் கல்விக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை (12.7.90).

★ ஐந்தாண்டுகளில் ஆதிதிராவிடர் அனைவர்க்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்றும் நடப்பு ஆண்டில் 40 ஆயிரம் ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு க.சுந்தரம் அவர்கள் அறிவித்தார் (15.7.90).

★ நெசவாளர்களின் வருமானத்தைப் பெருக்கவும் தரமான துணிகள் உற்பத்திக்கு வழி வகுக்கவும் கைத்தறித் துணி உற்பத்தியைப் பெருக்கவும் கூட்டுறவு அமைப்பின் கீழுள்ள கைத்தறிகளை நவீனப்படுத்த இந்த ஆண்டு ரூ.1.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்கள் அறிவித்தார் (15.7.90).

★ வேளாண்மைப் பொருட்கள் சார்ந்த தொழில்களுக்கான தொழிற்பேட்டை ஒன்று ரூ.30 கோடி செலவில் திண்டுக்கல் அருகிலுள்ள சிறுமலைப் பகுதியில் தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது (22.7.90).



# தொழில் துறையில் முதன்மை பெற தமிழக அரசு பாடுபடுகிறது

## - மாண்புமிகு முதல்வர் கலைஞர்

1988-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் அன்று பொறுப்பேற்றிருந்த ஆளுநர் அவர்கள் எடுத்துக்கொண்ட தொழில் வளர்ச்சி முயற்சிகள், கடந்த இரண்டு ஆண்டுகளாக விரைவாக, வேகமாக, விவேகமாகத் தொடரப்பட்டு, இன்றைக்கு ஒரு புதிய முன்னேற்றத்தைத் தமிழகம் காணுகிறது என்கிற மகிழ்ச்சிகரமான சூழ்நிலை இங்கே நிலவுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் நான் ஆற்றிய முதல்



பணி, தமிழகத்திலே உள்ள தொழில் அதிபர்களையெல்லாம் தலைமைச் செயலகத்திற்கு அழைத்து அவர்களோடு கலந்து உரையாடி, தமிழ்நாட்டில் தொழில்வளத்தைப் பெருக்குவதற்குத் தேவையான வசதிகளை, வாய்ப்புக்களை உருவாக்கித் தர இந்த அரசு தயாராக இருக்கிறது; நீங்கள் தயங்காமல் தமிழ்நாட்டில் தொழில்வளத்தைப் பெருக்க உடனடியாக முன்வாருங்கள் என்று கேட்டுக்கொண்டதுதான்.

அதற்கு அடுத்தபடியாக இந்தியா முழுமையும் உள்ள 50-க்கும் மேற்பட்ட தொழிலதிபர்களை சென்னையிலே - தலைமைச் செயலகத்திலே அழைத்துப் பேசி, வெளி மாநிலங்களிலே உள்ளவர்களும் தமிழகத்தில் தொழில் துவங்க வசதி வாய்ப்புகள் செய்து தரப்படும் என்று உறுதியளித்து அவர்களும் இத்தகைய முனைப்பான முயற்சியிலே இன்றைக்கு ஈடுபட்டிருக்கின்றார்கள்.

நான் ஒரு பத்து - பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாப் மாநிலத்தினுடைய முதலமைச்சர் மறைந்த குர்னாம் சிங் அவர்களால் அழைக்கப்பட்டு, அந்த மாநிலத்தைச் சுற்றிப் பார்த்தபோது, எங்கணும் சிறிய தொழிற்சாலைகள் தெருவோரங்களில், வீதிகளில் அமைந்திருக்கின்ற அரிய காட்சியைக் கண்டபோது, தமிழ்நாடும் இப்படி தொழில் வளம் குலுங்குகின்ற பூமியாக - மாநிலமாக மாறுவது எந்நாள் என்று எண்ணி, பஞ்சாப் சுற்றுப்பயணம் என்னுடைய உள்ளத்திலே உருவாக்கிய அந்த உணர்வின் அடிப்படையில் 76-வரையிலே, கடந்த காலத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது தொழில்வளம் தமிழகத்திலே பெருகி, பல்வேறு பணிகளை அரசின் சார்பில் ஆற்றிட முடிந்தது.

இடையிலே ஏற்பட்ட தொய்விற்குப்பிறகு மீண்டும் தமிழகத்தை அது மூன்றாவது இடத்திலே இருந்து பதின்மூன்றாவது இடத்திற்குப் போனதா, பதினான்காவது இடத்திற்குப் போனதா என்கின்ற ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தமிழகத்தில் தொழில் வளத்தினை முதலிடத்திலே கொண்டு வந்து வைக்க வேண்டும் என்ற அந்த உணர்வோடு இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

அதற்குத் தனியார் பலரும், அந்தத் தனியார் தொழில்களிலே ஈடுபாடு கொண்டிருக்கிற தொழிலாளர் தோழர்களும், நிர்வாகிகளும் நல்ல முறையில் இன்றைக்கு ஒத்துழைக்க முன் வந்திருக்கிறார்கள்.

முன்பு ஆட்சிப் பொறுப்பிலே நான் இருந்த போதுதான் தொழில் துறையிலே ஒரு புதிய கொள்கை வகுக்கப்பட்டது.

JOINT SECTOR என்கின்ற ஒரு கூட்டு முயற்சி அன்றைக்கு வகுக்கப்பட்டு, 26 சதவிகிதம் அரசின் சார்பிலும், 25 சதவிகிதம் தனியார் சார்பிலும், மீதமுள்ள பங்குகள் பொதுமக்கள் சார்பிலும் என்று வகுக்கப்பெற்று JOINT SECTOR தொழில்கள் அன்றைக்குத் தொடங்கப்பட்டன.

இப்போது கடந்த ஆண்டில் மேலும் ஒரு கொள்கை அதிலே விரிவாக்கப்பட்டிருக்கின்றது.

ASSOCIATED SECTOR— அது JOINT SECTOR-யைப் போல 25 சதவிகிதம் அல்லது 26 சதவிகிதம் என்றில்லாமல், அரசின் சார்பில் 11 சதவிகிதம் என்கின்ற அளவிலே பங்குதாரர்களாகச் சேருவது என்பதும், அதன்மூலமாகத் தனியார்துறை பொதுவாகத் தொழில்வளம் பெருகிட அரசு ஊக்கங்களை அளித்தது என்பதும் வகுக்கப்பெற்று, இந்த இரு துறைகளும், JOINT SECTOR, ASSOCIATED SECTOR -ஆகிய இரு நிலைகளிலும் இன்றைக்கு நாம் எதிர்பார்த்த அளவிற்குப் பெரு வெற்றியைப் பெற்று வருகின்றோம்.

இந்தப் பகுதியைப்பொறுத்தவரையில், மணலி தமிழகத்தினுடைய தொழில் பட்டணமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் அது விளங்குவதற்கு ஏற்றவகையிலே பெரிய நிலப் பரப்புகள் இங்கே இருக்கின்றன. அதன் நிலப் பரப்புகளையெல்லாம் அரசு பயன்படுத்திக் கொண்டு தொழில் வல்லுநர்களுடைய கூட்டுறவோடு இந்த வட்டாரத்திலே இன்னும் பல தொழில்களைத் தொடங்கத் தயாராக இருக்கிறது என்கிற இந்த நல்ல செய்தியை இந்த விழாவிலே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த சில ஆண்டுக் காலமாகக் கிடப்பிலே போடப்பட்டுக் கிடக்கின்ற அரோமெடிக் தொழிற்சாலையை விரைவிலே தொடங்கவேண்டும் என்கின்ற முயற்சி இருக்கின்றது. அதையும் JOINT SECTOR முறையிலே - SPIC நிறுவனமும், TIDCO நிறுவனமும் சேர்ந்து நடத்துவது என்கின்ற முயற்சியிலே [illegible]ருக்கிறோம்.

## அரசின் அறிவிப்புகள்

★ இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வரும் அகதிகள் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலேயே வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும் என்று மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் திருச்சியில் அறிவித்தார் (25.7.90).

★ துவக்கப்பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களின் சீரமைப்புப் பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் அறிவித்தார் (24.7.90).

இந்த நேரத்திலே நான் - நம்முடைய ஆளுநர் அவர்கட்கும் தெரியும் என்றாலும்கூட, இப்படிப் பட்ட பொது நிகழ்ச்சியில் தெரியப்படுத்துவதன் மூலம் அது மத்திய சர்க்கார் செவிகளிலே விழும் என்பதற்காக இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'அரோமெடிக் தொழிற்சாலை' தமிழகத்தில் நிறுவப்பட வேண்டும் என்கின்ற முயற்சியிலே நான் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றேன். மத்திய அமைச்சர் குருபாதசாமி அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கின்றேன். பிரதமரிடத்திலே பல முறை பேசியிருக்கின்றேன். இருந்தாலும் ஒரு சிறிய ஆபத்து. அதை வேறு ஒரு மாநிலமும் கேட்டுக் கொண்டிருக்கிறது. கேட்கிற மாநிலம் சாதாரண மாநிலமாக இருந்தால் பயப்பட மாட்டேன். உத்திரப்பிரதேசம் அரோமெடிக் தொழிற்சாலை அங்கே வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது, சலீம்பூர் என்ற இடத்திலே அமைக்க வேண்டுமென்று, ஆனால் தலின்பூர் என்ற இடத்திலே அரோமெடிக் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை எழுப்புவதற்கு முன்பே அதற்கான Letter of intend அத்தனையும் பெற்றுத் தயாராக இருக்கிற மாநிலம் தமிழ்நாடு என்பதை இந்த மாபெரும் நிகழ்ச்சியின் மூலமாக மத்திய அரசிலே உள்ளவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உத்திரப்பிரதேசத்தினுடைய வாதம்- எங்களுக்குத்தான் தரவேண்டும் என்பதாகும். நம்முடைய வாதம்- அவர்களுக்கும் கொடுங்கள், எங்களுக்கும் கொடுங்கள் என்பதாகும்.

இது பரந்த மனப்பான்மை அடிப்படையில்- தமிழனுக்கே உரிய பெருந்தன்மையோடு வைக்கப்படுகின்ற வாதம் என்பதைப் பெருந்தன்மைக்கு மதிப்பளிக்கின்ற பிரதமர் வி.பி.சிங் அவர்கள் நிச்சயமாக உணர்ந்து செயல்படுவார் என்று நான் நம்புகின்றேன்.

சில மாநிலங்களில் மத்திய சர்க்காருடைய [illegible]

## பாவேந்தர் நூற்றாண்டு:

> இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்
> இலேசுவழி ஒன்றுண்டு; பெண்கள் ஆடவர்கள்
> எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்
> தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்ஒரு நூலா?
>
> — பாவேந்தர்

கப்பட்டு விடுகின்றன. நாம் கொஞ்சம் கட்டுப்பாட்டிற்கு எப்போதும் மதிப்பளிப்பவர்கள். பிறகு வரும் அனுமதி என்று தொழில்களை ஆரம்பித்து விடலாம். இருந்தாலும் கட்டுப்பாட்டிற்கு மதிப்பளிக்கின்ற காரணத்தினால் மத்திய அரசினுடைய அந்த அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நிகழ்ச்சியின் மூலமாகவே இந்தக் கருத்தின் அடிப்படையில் உடனடியாக மத்திய அரசு அரோமெடிக் தொழிற்சாலையைத் தமிழகத்திலே இந்தப் பகுதியிலே தொடங்குவதற்கான அனுமதியை விரைவிலே வழங்கும் என்று எதிர்பார்க்கின்றேன். வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கான முயற்சிகளில் நான் ஈடுபடுகிற நேரத்தில்- தொழிலில் இன்றைக்கு மிகவும் முன்னேறியிருக்கின்ற, அதுவும் குறிப்பாகச் சிறுதொழிலில் மிகவும் முன்னேறியிருக்கின்ற பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்த நம்முடைய ஆளுநர் அவர்கள், இன்றைக்கு, தமிழகத்திலே ஆளுநர் பொறுப்பை ஏற்றிருக்கின்றார்கள். அவருடைய உதவியோடும் இதை நான் நிச்சயமாகச்செய்து முடிப்பேன் என்கின்ற உறுதிமொழியை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் ஏ.சி. முத்தையா அவர்கள் இங்கே பேசும்போது, இந்த வட்டாரத்தில் தொழில்கள் தொடங்குவதற்கு மேலும் அரசு வசதி வாய்ப்புகளை வழங்க வேண்டும். குறிப்பாகத் தொழிலுக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு அந்த அளவிற்காவது சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீரை இங்கே வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதற்கான ஒரு தனி அமைப்பேகூட இயங்கினால் பரவாயில்லை என்றுகூட இங்கே சுட்டிக் காட்டினார். இதுபோல நல்ல யோசனைகள் நிச்சயமாக வரவேற்கப்படும்; ஏற்றுக்கொள்ளப் படும். எனவே அந்தக் கோரிக்கையும் அரசின் சார்பிலே பரிசீலிக்கப்பட்டு, விரைவில் நிறைவேற்றி வைக்கப்படும்.

தொழில்வளம் சிறக்க, பரந்த மனப் பான்மையோடு இத்தகைய கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றி வைக்கப்படும் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இந்தத் திட்டத்தினுடைய சிறப்பு அம்சங்கள்- அவர்கள் எல்லாம் குறிப்பிட்டிருந்தாலும்- நானும் குறிப்பிட விரும்புகின்றேன்.

குறித்த காலத்திற்கு- ஆறு மாதத்திற்கு முன்பே இந்த நிறுவனம் தனது உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது ஒரு சிறப்பு அம்சம், உற்பத்தியை ஆரம்பித்தவுடனேயே உற்பத்தித் திறனுக்கு நூறு பங்கிற்கு மேலாக உற்பத்தி செய்யப்பட்டது ஒரு சிறப்பு அம்சம். பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழல் அமைப்பில் சிறப்பானதாக இந்நிறுவனம் விளங்குவது இன்னொரு சிறப்பு அம்சம். உற்பத்திப் பொருளான லேப் உலகத்திலேயே சிறந்த பொருளாக மதிக்கப்படுகிறது இங்கே. அது மற்றொரு சிறப்பு அம்சம். உற்பத்தி தொடங்கிய முதலாவது ஆண்டிலேயே 12 விழுக்காடு பங்குதாரர்கட்கு லாபத்திலேயிருந்து வழங்கப்பட்டது மற்றொரு சிறப்பம்சம். இரண்டாவது ஆண்டு மொத்த லாபம் ரூ.18 கோடியாகப் பெற்றதும், பங்குதாரர்களுக்கு லாபத்திலே 15 விழுக்காடு அளித்ததும் மற்றொரு சிறப்பு அம்சம்.

இதை நாட்டுக்கு அர்ப்பணிக்கின்ற இந்த நல்ல நேரத்தில் இன்றைய தினம் துவங்கப்படுகின்ற திட்டங்களைப் பற்றியும் நான் சொல்ல விரும்புகின்றேன்.

ரூபாய் ஒன்பது கோடி செலவிலே, பன்னிரெண்டு மெகாவாட் மின்சாரத்தை இந்த நிறுவனம் இப்போது உற்பத்தி செய்து தொடங்கி வைக்கப்படுகிறது. இதிலே ஒரு ஒன்பது மெகாவாட் மின்சாரத்தை மாத்திரம் இந்நிறுவனம் பயன்படுத்திக் கொண்டு மூன்று மெகாவாட் மின்சாரத்தை உபரியாக மற்றவர்களிடத்தில் அளிக்கத் தயார் என்று மார்தட்டுகின்ற அளவிற்கு இந்நிர்வாகத்தில் இன்றைக்கு ஈடுபாடு கொண்டிருக்கிற நண்பர்கள் இந்த முயற்சியிலே வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

எனவே ஒரு பதினைந்து கோடி ரூபாய் அளவிலே உள்ள திட்டம் இன்றைய தினம் புதியதாகத்தொடங்கப்படுகிறது.

ஏறத்தாழ ரூ.200 கோடி அளவிலான திட்டத்தை இங்கே நாட்டிற்கு அர்ப்பணிப்பதிலும், அதனோடு சேர்ந்துள்ள மற்றொரு திட்டத்தைத் தொடங்கி வைப்பதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மகிழ்ச்சியின் அடையாளமாக- நம்முடைய கவர்னர் பெருமான் அவர்களும், நானும் இந்த நிகழ்ச்சிக்கு வந்தோம் என்பதன் அடையாளமாக- இந்தத் தொழிற்சாலையிலே வேலை செய்கிற 539 தொழிலாளர்களுக்கு இந்த விழா நிகழ்ச்சியின் அடையாளமாக அவர்களுக்கெல்லாம் ஓராண்டு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது, இன்கிரிமெண்ட் தரப்படுகிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை- நிர்வாகத்திலே உள்ளவர்களின் ஒப்புதலோடு உங்களுக்குத் தெரிவித்து, இந்த இனிய விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்லவாய்ப்புப்பெற்றமைக்காக என்னுடைய இதய நிறைவை இங்கே எடுத்து வைத்து இந்த அளவில் விடைபெறுகிறேன்.

**— 7.8.90, சென்னை-மணலியில் நடைபெற்ற 'தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவன' விழாவில் பேசியது.**

# பாவேந்தன் பாட்டு

— கருவூர். கன்னல்

அரிமாவின் நோக்கைப்போல் நடைமி ருக்கும்!
அதற்குள்ளே குறிக்கோளின் விடைமி ருக்கும்!
சிரிக்கின்ற புரட்சிப்பெண் குடிமி ருப்பாள்!
சீரெல்லாம் மாந்தநேயம் எட்டிப் பார்க்கும்!
நரியைப்போல் பிறர்வாழ்வைக் கெடுத்து ஏற்றம்
நடத்துகின்றார் முன்னேற்றம் கிழிந்து போகும்!
விரிவானின் மழைமேகம் களைவ தைப்போல்
விடியலுக்குச் சொற்களெல்லாம் அணிவ குக்கும்!

பெண்டுகளின் நலன்காக்க அணிதி ரட்டும்!
பெரியாரின் குறிக்கோள்கள் நிறைந்தே ஓடும்!
கண்களைப்போல் விளங்குகின்ற கல்வி வேண்டி
கவிதைகளும் எதிரொலிக்கும்! தமிழி னத்தின்
மண்ணுக்குள் வளர்த்துவிட்ட சாதி நோயை
மாய்ப்பதற்கு மருந்துகளைத் தோற்று விக்கும்
நண்ணிலவுப்பாட்டுநடை கல்வி மூந்த
தமிழ்நிலத்து மாந்தர்களை நிமிர வைக்கும்!

வெண்ணிலவுப் பாட்டுக்கள் தமிழைப் பாடி
வீதியெங்கும் தமிழ்வளர்க்கும்! உலக மெல்லாம்
மண்மூடிப் போனாலும் தமிழை மட்டும்
மறையாமல் காப்பதற்குத் துணைமை செய்யும்!
உண்மைகளின் ஊர்வலங்கள் நடக்கும் பாட்டில்
உலகத்தின் பொய்வேடம் களைய மட்டும்
எண்ணங்கள் தூய்மையுற வேண்டு மென்றால்
எப்போதும் பாவேந்தன் பாட்டே தேவை!




# புரட்சிக் குயில்

தூத்துக்குடி நா. புகழேந்தி

பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பினார் - தமது
பாத்திரத்தால் புதுமைகளை நிரப்பினார்
வகுத்ததொரு நீதிநெறி உணர்த்தினார் - நமது
வாழ்க்கைமுறைக் கோணல்தனை நிமிர்த்தினார்.

மடமைதனை எதிர்த்துக்கொடி தூக்கினார் - நல்ல
மாண்புகளைக் கவிதைகளில் ஆக்கினார்
"கடமையினைச் செய் என்றே ஊக்கினார் - பொய்மைக்
கதைகளையே தூசெனவே போக்கினார்!

சாதிமத பேதங்களைச் சாடினார் - மதத்தால்
சண்டையிடும் உலகு கண்டேவாடினார்!
ஆதியிலே பிறந்ததமிழ் நாடினார் - அந்த
அழகுமொழி வாழ்கவென்றே பாடினார்!

பொதுவுடைமை வேண்டியவர்பாடினார் - மெத்தப்
பொருள்பதுக்கும் மாந்தர்தமைச் சாடினார்!
புதுமையுகம் எழுகவென்றே ஆடினார் - மக்கள்
புரட்சிகண்டு வாழ்த்துக்கவி கூறினார்!

காதலிலே ஒழுக்கத்தை ஊட்டினார் - தமிழர்
கற்புநெறி உலகில்நிலை நாட்டினார்!
சாதலிலே வீரத்தைக் காட்டினார் - மிகுந்த
தன்மானக் கதைகளையும் தீட்டினார்.

புயலாக எழுந்துபகை வீழ்த்தினார் - கொடிய
பொய்சூது வஞ்சம், நீழ் ஆழ்த்தினார்!
பெயலாக வந்துதமிழ் வாழ்த்தினார் - கவிதைப்
பொன்னேட்டில் தன்புகழை நாட்டினார்!

# பா உலகின் ஒளிச்சுடர்

— செ. பன்னீர் செல்வம்

எடுப்பு

பாரதி தாசனடி! - அவன்
பாட்டுக்கு எழில்தந்த நேசனடி! - தோழி
... (பாரதி)

தொடுப்பு

வீட்டுக்கு விளக்காகும் அவன்பாட்டு! - அது
நாட்டுக்கு நலந்தருந்தேன் தமிழ்ப்பாட்டு!
... (பாரதி)

முடிப்பு

பெண்ணுக்கு உரிமைப்போர் தொடுத்தானடி! (கைம்
பெண்ணுக்கு மறுமணந்தான் கொடுத்தானடி!
மண்ணுக்குப் பொதுவுடைமை கண்டானடி! தமிழைக்
கண்ணுக்குள் பாவையெனக் கொண்டானடி!
... (பாரதி)

மாந்தரில்மா மலைபோலே வாழ்ந்தானடி! - பா
வேந்தரென மக்கள்மனம் சூழ்ந்தானடி!
தீந்தமிழ்ப்பா உலகில்ஒளிச் சுடராமடி - அவன்
ஏந்துமுளம் கரைகாணாக் கடலாமடி!
... (பாரதி)

தமிழ்வானில் கதிர்போலக் காய்ந்தானடி! - அவன்
தமிழ்ப்பாவை கரும்பெடுத்து வேய்ந்தானடி!
தமிழ்ச்சோலை நிலவாகத் திகழ்ந்தானடி - அவன்
தமிழ்த்தாயின் மடிமீது தவழ்ந்தானடி!
... (பாரதி)



# பாட்டிசைத்த குயிலே...

— ஈரோடு ப. கதிரவன்



தமிழ்க்கவிதை உலகத்தின் தலைவா உன்றன்
தாள்பணிந்தே இம்மடலை வரைகின் றேன்நான்
இமைபோல நற்றமிழைக் காத்தி ருந்தீர்
இணையற்ற அணிபலவும் தமிழன் னைக்கே
அமைத்தழகு பார்த்திருந்தீர் அன்பி னாலே
ஆருயிரை அதற்களித்தீர்; காலம் சொல்லும்
சமைத்திட்ட காவியங்கள் சான்றாய் நின்றே
சாற்றிடுமும் புகழ், பெருமை யாவும் நன்றே!

நெருப்பாற்றில் குளித்தெழுந்த உமது பேனா
நெத்தியடி பழமைக்குத் தந்த துண்டு(
துருப்பிடித்த சாதியினைத் துரத்தி ஓட்டி
தூயதாடிப் பெரியாரின் தொண்ட ரானீர்
திருப்புமுனை கவியுலகில் உமது பாட்டால்
திறம்படவே செய்வித்தீர்; காலம் வாழ்த்தும்;
ஒருகவிஞன் இனியுண்டோ உம்மைப் போலே
ஓங்குபுகழ் தமிழ்வளர்க்க; மானம் காக்க!

நீர்கண்ட தமிழியக்கக் கனவு யாவும்
நிறைவேறும் நிகழ்ச்சியினைப் பார்க்கும் போது
சீர்திருத்தக் கவியேஉம் உருவம் நெஞ்சில்
சிலையாகிச் சிரிக்கின்ற நிலையில், பொங்கும்
ஆர்வத்தில் எனைமறந்தேன்; நினைவில் நீரே
அலைமோதி நிற்கின்றீர் பாவின் வேந்தே
பார்த்தும்மைப் பேசிடவே துடிக்கு துள்ளம்
பாட்டிசைத்த குயிலும்மால் வாழும் வையம்!

# மணலியில் அரோமேடிக் தொழிற்சாலை



## மாண்புமிகு மத்திய அமைச்சர் அறிவிப்பு

சென்னை அருகில் மணலியில் ரூ.1356 கோடி முதலீட்டில் அரோமேடிக் தொழிற்சாலை நிறுவிட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. எம். எஸ். குருபாதசாமி அவர்கள், சென்னையில் 12.8.90 அன்று செய்தியாளர் களிடம் அறிவித்தார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வற்புறுத்தி வந்த இந்தக் கோரிக்கை வெற்றி பெற்றுள்ளது.

சென்னை வந்த மாண்புமிகு மத்தியப் பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு எம். எஸ். குருபாதசாமி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். அதன்பின் செய்தியாளர்களிடையே பேசிய அவர், இது குறித்து மேலும் கூறியதாவது:

"இன்று காலை தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்து உரையாடியது மிகவும் பயனுள்ளதாகவும், மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் அமைந்தது. கலைஞர் அவர்கள் எப்பொழுதுமே என்னிடம் பரிவும் அன்பும் காட்டுபவர். இன்று அவர் வழக்கம்போல் என்னிடம் காட்டிய பரிவுக்கும், அன்புக்கும், உபசரிப்புக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மணலியில் 1356 கோடி ரூபாய் முதலீட்டில் அரோமேடிக் தொழிற்சாலை அமைய உள்ளது. பொதுத்துறை நிறுவனமான சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும், ஸ்பிக் நிறுவனமும் கூட்டாக இந்தத் தொழிற்சாலையை அமைக்கின்றன. இதற்கான முதல் கட்ட அனுமதியை, திட்ட முதலீட்டுக் குழு வழங்கிவிட்டது. இரண்டாவது கட்ட அனுமதிக்கான ஆய்வுகள் அக்குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விரைவில் இரண்டாவது கட்ட முதலீட்டுக்கான அனுமதியும் வழங்கப்பட உள்ளது.

"மணலியில் அமைய இருக்கும் ஆலைக்கு நிதி நிலை அறிக்கை ரீதியான ஆதரவு எதுவும் தேவையில்லை. இங்கு தொழிற்சாலை அமைக்க 374 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி தேவைப்படுகிறது. இத்தொகை ஏற்றுமதிகள் மூலம் சமாளிக்கப்படும். இந்தத் தொழிற்சாலைத் திட்டத்தைத் துவக்குவதற்குத் திட்ட வேலைகளுக்கு முன் தேவைப்படும் பணிகளுக்காக ரூபாய் 18 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

"சென்னை எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை, ஸ்பிக் ஆகிய நிறுவனங்களுக்கிடையே உடன்பாடு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டிருக்கிறது; தொழிற்சாலைக்கான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி ஏற்கெனவே துவங்கி விட்டது. இத்தொழிற்சாலைக்குத் தேவையான சுற்றுச் சூழல் துறையின் அனும்தியும், உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்காகக் கூட்டு முதலீட்டாளர்கள் வெளி நாடுகளிலிருந்து தொழில்நுட்ப உதவிகளுக்காக ஒரு பங்குதாரரையும் தேர்வு செய்துள்ளனர்.

"இதில் தொழில் முதலீட்டாளர்கள் 176.28 கோடி ரூபாயும், வெளிநாட்டுக் கூட்டாளிகள் 39.90 கோடி ரூபாயும் முதலீடு செய்கிறார்கள். இதில் டெப்ட் ஈக்யூட்டி விகிதம் 3:1 என்ற விகிதத்தில் இருக்கும். இத்தொழிற்சாலை 2 லட்சம் டன் சுத்திகரிக்கப்பட்ட திரிப்தாலிக் அமிலத்தை உற்பத்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான வேலைகள், வரும் ஏப்ரல் மாதத்தில் துவங்கும்.

"எட்டாவது திட்டக் காலத்தில் இத்தகைய தொழிற்சாலை ஒன்று மட்டும் போதும் என்ற எண்ணம் இருந்தது. இரண்டு தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டத்திற்கு வகை செய்யுமாறு நான் என்னுடைய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன்."

மணலியில் இத்தொழிற்சாலை அமைப்பது குறித்துப் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் ஐயப்பாடுகள் எழுந்த சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்தத் தொழிற்சாலை உத்திரப் பிரதேசத்தில்தான் அமைக்கப்படவேண்டும் என்று, உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தந்த நிர்ப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவையும் இணங்கியது.

எனினும், இத்தொழிற்சாலை, தமிழகத்தில் அமைக்கப்படவேண்டும் என்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மிகுந்த தீவிரம் காட்டினார். அண்மையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மத்திய அரசு உத்திரப் பிரதேசத்தில் இத்தொழிற்சாலையை அமைக்க விரும்பினால், அமைத்துக் கொள்ளட்டும். ஆனால், அதே நேரத்தில் இத்தொழிற்சாலை தமிழ்நாட்டில் உள்ள மணலியிலும் அமைக்கப்படவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் வேண்டுகோள் ஏற்கப்பட்டு 1356 கோடி ரூபாய் முதலீட்டில், மணலியில் அரோமேடிக் தொழிற்சாலை அமைகிறது என்ற செய்தியை மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. குருபாதசாமி அவர்கள், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் வீட்டிலேயே செய்தியாளர்களின் மத்தியில் அறிவித்தார் என்பது, முதல்வர் கலைஞரின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி; தமிழகத்தின் தொழிற்வளர்ச்சிக்குக் கிடைக்க வெற்றியாகும்."

அறிவியல் அற்புதம்:

# சோதனைக் குழாய் மூலம் சாதனை

தென்னிந்தியாவில் முதன் முறையாக, சென்னை மருத்துவமனை ஒன்றில் சோதனைக் குழாய் மூலம் குழந்தை பிறந்துள்ளது.

குழந்தைப் பேறு இல்லாதவர்களின் குறையைப் போக்கிட- 'குழந்தைச் செல்வம் இல்லையே!' என ஏங்குவோரின் கனவை நனவாக்கிட அறிவியல் தந்த அற்புதம் தான், சோதனைக் குழாய்க் குழந்தை!

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி அருகே உள்ள

முதல் சோதனைக் குழாய்க் குழந்தை 1978-ஆம் ஆண்டு இலண்டனில் பிறந்தது. 1984-ஆம் ஆண்டு இந்தியாவில் பம்பாயில் 2-வது சோதனைக் குழாய்க் குழந்தை பிறந்தது. 1990-ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் முதன்முறையாக, சென்னையில் 3-வது சோதனைக் குழாய்க்குழந்தை பிறந்துள்ளது.



சோதனைக் குழாய் மூலம் பிறந்த குழந்தையைக் கையில் ஏந்தியுள்ளார், டாக்டர் கமலா செல்வராஜ்

சுந்தரபாண்டியபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திரு. ராமமூர்த்தி, இவரது மனைவி பொன்னாள். இவர்கள் இருவருக்குமே வயது 46. இந்தத் தம்பதியினருக்குப் பல ஆண்டுகளாகக் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்தது.

இந்த நிலையில்தான் திரு. ராமமூர்த்தி-பொன்னாள், தம்பதியினர் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஜி.ஜி. மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கமலா செல்வராஜ் அவர்களைச் சந்தித்தனர்.

முதலில் சோதனைக் குழாய்க் குழந்தை என்றால் என்ன? என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

பெண்ணின் கருமுட்டையையும், ஆணின் உயிரணுக்களையும் எடுத்து, தகுந்த சூழ்நிலையில் இணைய வைக்கப்படுகிறது. இணைந்து வளர்ந்த கருவை, மீண்டும், பெண்ணின் கர்ப்பப் பைக்குள் செலுத்தி அவரைத் தாய்மை அடையச் செய்யப்படுகிறது. பிறகு பிறக்கும் குழந்தையே, சோதனைக் குழாய்க் குழந்தை ஆகும்.

ராமமூர்த்தி-பொன்னாள் தம்பதியினருக்குப் பிறந்த சோதனைக் குழாய்க் குழந்தை குறித்து, இந்த மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கமலா செல்வராஜ் அவர்கள் கூறியதாவது:

"கடந்த மூன்று ஆண்டுகளாக, பொன்னாள் எங்கள் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக வந்து கொண்டிருந்தார். பொன்னாளுக்குப் பரிசோதனை நடத்தப்பட்டு, அவரது கர்ப்பப் பையில், இணைந்த கருவைச் செலுத்தி அவரது உறவினர் வீட்டில் தங்க வைத்தோம். மீண்டும் சோதனை செய்து பார்த்ததில், கர்ப்பப் பையில் கரு இணைந்து வளரத் தொடங்கியதை அறிந்தோம்.

"அதன் பிறகு எங்கள் மருத்துவமனையிலேயே தங்க வைத்து, கண்காணித்து வந்தோம். 'ஸ்கேன்' மூலம் பார்த்ததில் பெண் குழந்தை வளர்வதையும் அறிந்தோம்."

ராமமூர்த்தி-பொன்னாள் தம்பதியினருக்கு 1.8.1990 அன்று சோதனைக் குழாய் மூலம் பெண் குழந்தை பிறந்தது.

இது குறித்து இந்தத் தம்பதியினர் கூறியதாவது:

"எங்களுக்கு 1959-ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. கடந்த 31 ஆண்டுகளாகக் குழந்தை இல்லாமல் கவலையாக இருந்தோம். எப்படியாவது ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும் என்று உறுதியாக இருந்தோம். அந்தச் சமயத்தில்தான், சோதனைக் குழாய் மூலம் குழந்தை பெறுவது என்று ஒரு முடிவுக்கு வந்தோம். குழந்தையும் நல்லபடியாகப் பிறந்துள்ளது. இப்போது நாங்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!"

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாழ்த்து

சோதனைக் குழாய் மூலம் குழந்தை பிறந்த செய்தி அறிந்த, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், குழந்தை பிறந்த அன்று இரவே மருத்துவமனைக்குச் சென்று, அந்தக் குழந்தையைப் பார்த்து, தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். ஒரு பவுன் தங்கச் சங்கிலியையும் அக்குழந்தைக்கு அணிவித்தார்.

குழந்தைக்குப் பெயர் சூட்ட வேண்டாமா?

மருத்துவம் பார்த்த, டாக்டர் கமலாவின் பெயரையே வைக்க வேண்டும் என்று பெற்றோர்கள் விருப்பம் தெரிவித்ததால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், அக்குழந்தைக்குக் கமலா என்று பெயர் சூட்டினார். சாதனை புரிந்த மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கமலா செல்வராஜ் அவர்களையும் வெகுவாகப் பாராட்டினார்.



# தந்தை பெரியாரின் தீர்க்கதரிசனம்

தந்தை பெரியார் அவர்களின் தீர்க்கதரிசனம் அசாதாரணமானது. எதிர்காலத்தை எண்ணி தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய கருத்துரைகள் ஒரு காலத்தில் கனவுலகச் சிந்தனைகளாகக் கருதப் பட்டிருக்கலாம். ஆனால் இன்று நடைமுறையில் நம் முன்னே நடைபெறும் காட்சிகளாக அந்தச் சிந்தனைகள் மலர்ந்துள்ளன.

இதனை எண்ணியே நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் தொகுத்து 'இனிவரும் உலகம்' என்ற தலைப்பில் 21-3-1943, 28-3-43 'திராவிட நாடு' இதழ்களில் வெளியிட்டுள்ளார்கள்.

"பிள்ளைப் பேற்றுக்கு ஆண்-பெண் சேர்க்கை என்பது கூட நீக்கப்படலாம். ஆண்-பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்."

-இவ்வாறு பெரியார் அவர்கள் கூறியது இன்று நடைமுறை நிகழ்ச்சியாக மாறிவிட்டது.

## பாவேந்தர் நூற்றாண்டு:

நீக்குகபே ராசை-தம்பி
நிகர்எவரும் ஆவார்!
போக்குசினம் தீச்சொல்-நீ
பொன் அறத்தை வாழ்த்து!
சேர்க்கும்அறம் உன்னை-ஒரு
தீங்குமற்ற வாழ்வில்!
ஊர்க்குழைக்க வேண்டும்-நீ
உண்மையுடன் தம்பி!

— பாவேந்தர்




### தொலைக் காட்சிக் கலை

ஆசிரியர்: வெ. நல்லதம்பி
வெளியீடு:

வள்ளுவன் வெளியீட்டகம்,
81, மூன்றாவது கிழக்குத் தெரு,
திருவான்மியூர், சென்னை-41.

பக்கம்: 232 (டெம்மி) விலை ரூ.35

நூற்றுக்கு 75 சதவிகிதம் இல்லங்களில் தொலைக்காட்சியைக் கண்டு மகிழும் நிலை இன்று உருவாகியுள்ளது. தொலைக்காட்சியின் மூலம் பல நாடுகள் குறித்துத் தெறிந்து கொள்கிறோம். பல்வேறு இயந்திரங்கள் குறித்து அறிந்து கொள்கிறோம். பார்வைக்கு விருந்தும் - உள்ளத்துக்கு மகிழ்வும் அறிவுக்கு ஊட்டச் சத்தும் ஒரே நேரத்தில் வழங்கும் சாதனம் தொலைக்காட்சி என்று சொல்லலாம். இவ்வளவு பயன்களையும் நம்மில் மிகப் பலருக்கு தொலைக்காட்சி எப்படி ஒளி பரப்பாகிறது என்பதோ-அதன் பேராற்றல் குறித்தோ சரிவரத் தெரியாது. அதனை விளக்குகிறது இந்த நூல்.

தொலைக்காட்சி என்றால் என்ன, அதனைப் பயன்படுத்தும் துறைகள் யாவை, ஒளிபரப்பு எப்படிச் செய்யப்படுகிறது, இந்தியாவில் தொலைக் காட்சி ஒளிபரப்பு எப்போது தொடங்கியது, தொலைக்காட்சிக் காமிராவின் அமைப்பு எப்படி உள்ளது என்பன போன்ற ஏராளமான செய்திகளை இந்நூலில் இனிய எளிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். தொழில் நுட்பம் சார்ந்த நூல்கள் நமது கழகத்தில் வருவதில்லை என்னும் நிலையைப் போக்குவதற்கு இந்நூல் உதவுகிறது.

வரைபடங்கள், புகைப்படங்கள் ஆகியவை தேவைப்படும் இடங்களில் இடம்பெற்றுள்ளன. இதனால் வாசகர்கள்-நூலின் கருத்தை எளிதாக அறிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது.

— எஸ். எஸ். சுந்தரம்

### மனத்தை உழுத மகான்

ஆசிரியர்: சேயோன்
வெளியீடு:

முரளி பதிப்பகம்,
6, வசந்தா பிரஸ் சாலை,
அடையாறு, சென்னை-600 020

பக்கம்: 152 விலை ரூ.15

நிலத்தை உழுதால் நெல் முத்துக்கள் கிடைக்கும், மனத்தை உழுதால் சிந்தனை முத்துக்கள் கிடைக்கும் என்பதை மிக அழகாகத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறார் ஆசிரியர். மனத்தை உழுத அந்த மகான்தான், மகாகவி பாரதியார். அவரை நம் மனத்தில் பதிய வைக்கிறார்.

இதேபோல், இதயத்தைத் தொடும் இனிய ஈட்டுரைகள் அடுத்தடுத்து வருகின்றன.

மணிமேகலைக் கருத்துக்கள், குரு நானக் உபதேச மொழிகள், திருநாவுக்கரசரின் தேனமுதம், ஔவைப்பாட்டியின் ஆத்திசூடி, கலிங்கத்துப்பரணியின் காட்சிகள், விவேகானந்தரின் விவேகம், பண்டைக் கால இலக்கியத் 'தூதர்கள்' இவற்றின் தொகுப்பே இந்நூல். இலக்கிய ஆர்வலருக்கு இனிய நூல்.

— பி.வி. கிரி

### உற்சாகமாக ஓய்வு பெறுவது எப்படி?

ஆசிரியர்: டாக்டர் மு. முத்துக்காளத்தி
வெளியீடு: கண்ணம்மாள் பதிப்பகம்,
விற்பனை உரிமை:

பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை-600 108.

பக்கம்:84 விலை:ரூ.8

அலுவலிலிருந்து ஓய்வு பெறுபவர்கள் ஒருவிதமான கலக்கத்துக்கு ஆளாகி வருவது இயல்பு. விதைக்கும் காலத்தில் தூங்கிவிட்டு அறுவடைக் காலத்தில் அரிவாளுடன் வயலுக்குச் செல்லும் அப்பாவிகளைப் போல, ஓய்வு எய்தும் வயது வருவதைத் தெரிந்து கொண்டும் எதிர்காலம் குறித்துத் திட்டமிடாமல் இருந்துவிட்டு ஓய்வுபெறும் நாளன்று உள்ளம் வருந்துகின்ற பெருமக்கள் இருக்கிறார்கள். அத்தகையவர்களின் கலக்கத்தைக் கலைக்கும் வண்ணம் இந்நூலை உருவாக்கியுள்ளார் ஆசிரியர். ஓய்வுபெறுபவர்களுக்கு, உளநூல் அடிப்படையில் சில உத்திகளை வழங்கி உற்சாக மூட்டுகிறார்-உரம் ஏற்றுகிறார்.

"முன்பு செலவுக்கு வருமானம் தேடினீர்கள்! இப்பொழுது வருமானத்துக்குச் செலவு செய்யுங்கள். அதிலும் மிச்சம் பிடியுங்கள்! எனக் கூறியிருப்பது நல்ல அறிவுரை ஆகும்.

ஓய்வுபெற்ற அரசு ஊழியர் ஒருவரின் ஆலோசனைகளையும் இந்நூலில் இணைந்திருப்பது பாராட்டுக்குரியது.

—தமிழ்ப்பித்தன்

### நெஞ்சைத் தொடும் நிலவு

ஆசிரியர்:
கவிஞர் தூத்துக்குடி நா. புகழேந்தி,
வெளியிட்டோர்:

புகழ்மலர் பதிப்பகம்,
144, சிவந்தாகுளம் சாலை,
தூத்துக்குடி-628 003

பக்கம்: 148 விலை ரூ.15

எளிமையான, இனிமையான நடையில் உள்ள 75 கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ள நூல் இது. இவற்றில் மரபுக் கவிதைகள் சில; சந்தக் கவிதைகள் பல. ஒவ்வொரு கவிதையிலும் ஒவ்வொரு புதிய கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கவிதை எழுதும் விரல்களில்
கணையாழியை மாட்டுங்கள்;
கணையாழியை மாட்டியே
கவிதைப் பயிரை வளருங்கள்;

— என்று கவிதைத் தமிழ் வளர்ப்பில் இப்படி ஓர் பாடலில் தனக்குள்ள ஆர்வத்தைக் காட்டியுள்ளார், நூலாசிரியர்

### ஓமியோபதி சிகிச்சை முறை

ஆசிரியர்: டாக்டர் கே. ராஜு
வெளியிட்டோர்:

அம்புஜம் பதிப்பகம்,
25, கோர்ட் ரோடு,
மணக்காடு, சேலம்-636 007

பக்கம்: 208 விலை ரூ.30/-

'ஓமியோபதி விளக்கம்-கேள்வி, பதில்' என்பதில் தொடங்கி - 'வீட்டிற்கான அவசர மருந்துகள் பட்டியல்' என்பது வரை 50 ஓமியோபதிமுறை மருத்துவக் கட்டுரைகளின் களஞ்சியமாகத் திகழும் நூல் இது. காய்ச்சல், கட்டிகள், முகப்பரு போன்ற சாதாரணப் பாதிப்புகள் மட்டுமல்ல; இரைப்பைக் கோளாறு, இருதய நோய், பால் உணர்வுக் கோளாறு போன்ற பல பெரிய விஷயங்களும் கூட நூலாசிரியரால் இதில் தொடப்பட்டுள்ளன. — பி. எல். ஆர்.

### அவன் ஒருவனல்ல

ஆசிரியர்: மாத்தளை சோமு
வெளியீடு:

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-1

விலை:ரூ.13 பக்கம்:143

ஈழ நாட்டு மக்களை வைத்து எழுதப்பட்ட சிறுகதைகள்.

தோட்டப் பள்ளி ஆசிரியர், கிழவன் கிழவி, கல்லுடைக்கும் தொழிலாளர் என்று வித்தியாசமான கருவைக் கொண்ட சிறுகதைகள் இதில் உள்ளன.

-என். குமாரசாமி

# தமிழ்நாடு மின்சார வாரியம்
## பூனாச்சி சிறு புனல் மின் திட்டம்
### ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வை பொறியாளர்/பொதுவியல்/புனல் மின் அலுவலகம் இரண்டாவது தளம்/கிழக்கு, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. **பணியின் பெயர்:** | பூனாச்சி (2 × 1 மெகாவாட்) சிறு மின் திட்டத்தில் பேரழுத்த நீர் குழாய்களுக்காக (Penstock pipes) எஃகு வாங்கி, அவைகளை தயாரித்து, களத்தில் பாதுகாத்து புழங்கி, நிர்மானித்து சோதனை செய்து செயல் முறைக்கு கொண்டு வந்து வாரியத்திடம் ஒப்புவித்தல். |
| 2. **ஏறத்தாழ பணியின் மதிப்பு:** | ரூ.48 இலட்சங்கள் மட்டும். |
| 3. **ஒப்பந்த வரை எண்:** | SECH. 17 |
| 4. **பிணை வைப்புத்தொகை:** | ரூ.50,000/- (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) |
| 5. **ஒப்பந்தம் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும்.** | 1990 செப்டம்பர் 26-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணி வரை. |
| 6. **தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும்.** | 1990 செப்டம்பர் 26-ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி. |
| 7. **ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை** | (அனைத்து வரிகள் உள்பட) |
| தமிழ் நாட்டிற்குள்: ரூ.450/- | (ரூபாய் நானூற்று ஐம்பது மட்டும்) |
| தமிழ் நாட்டிற்கு வெளியே ரூ.500/- | (ரூபாய் ஐநூறு மட்டும்). |
| 8. **ஒப்பந்தத்தை அனுப்புதல்:** | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு. ஒப்பந்தங்கள் ஒப்பந்தவரையறையில் உள்ள பகுதி ஏ.3-ன் 15-வது பிரிவில் கண்டுள்ள விதிகளின்படி அனுப்பப்பட வேண்டும். இவ்விதி முறைகளுக்கு முரணாக சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். |

ஒப்பந்தப் புள்ளிக்காரர்களுக்கு தேவையான முன் தகுதிகள் கீழ் வருமாறு:

1. ஒப்பந்தம் கொடுப்பவர், குறைந்த பட்சம் 100 மீட்டர் நீளமுள்ள ஏறத்தாழ இதே விட்டமுள்ள நீர் அழுத்தக் குழாய் வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்க வேண்டும்.
2. ஒப்பந்தம் கொடுப்பவர், கடந்த மூன்று வருமான ஆண்டுகளில், வருடந்தோறும் குறைந்த பட்சம் செய்து முடிந்த வேலையின் மதிப்பு (Turn-over) ரூ.40.00 இலட்சங்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள் தணிக்கை அலுவலருக்கு (முதல்தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை சென்னை-600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையை பணமாகவோ/Pay Order/D.D. வாயிலாகவோ ஒப்பந்த வரையறை எண். குறிப்பிட்டுச் செலுத்திப் பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு மேற்பார்வை பொறியாளர்/பொதுவியல்/புனல் மின் அலுவலகத்தில் 27.8.1990 காலை 10.30 மணி முதல் 24.9.90 மாலை 5.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த வரையின் விலைத் தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத் தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) கூடுதலாக செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்தவரையறை தவறிப்போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத் தக்கதல்ல. மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வை பொறியாளர், பொதுவியல்/புனல், 2-வது தளம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர். மாளிகை, 800, அண்ணா சாலை, சென்னை-600 002-க்கு அனுப்பப்பட வேண்டும்.

பிணை வைப்புத் தொகையின்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்கு பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. செய்யப்படும் எந்த ஒரு விற்பனை ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும்போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

**தலைமை பொறியாளர்/பொதுவியல்/வடிவமைப்பு**
**சென்னை-2.**

DIPR/77/NLG/90/CANCO





**TNPSC**

**விளம்பர எண்: 27/90**

தமிழ்நாடு மருத்துவப் பணியில் 6 உதவி மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) (Assistant Medical Officer Homoeopathy) பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 10.9.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகிறது.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) - 1

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./.சீ.ம.) - 1 (பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) - 1

பகிரங்கப் போட்டி - 3 (ஓரிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 35 வயதிற்கு குறைவாக (சலுகைகள் பற்றிய விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன).

**QUALIFICATIONS:**

I (1) Any of the following Post-Graduate Diplomas of the Faculty of Homoeopathy (London), namely:-

(i) F.F. Hom. (Lond.)
(ii) M.F. Hom. (Lond.)
(iii) D.F. Hom. (Lond.)

or

(2) Any Diploma granted by any of the following Institutions in West Bengal, namely:-

(i) The Calcutta Homoeopathic Medical College.
(ii) D.N.De. Homoepathic Medical College.
(iii) The Prathap and Herring Homoeopathic Medical College.
(iv) The Midnapore Homoeopathy Medical College.
(v) The Bengal Allen Homoeopathy Medical College.

or

(3) Government Diploma in Integrated Medicine (Homoeopathy) awarded by the Board of Indian Medicine, Hyderabad.

or

(4) Any degree, diploma, licence, certificate or any other like award conferred, granted, or issued on passing the final examination held by any of the following:

(i) General Council and State Faculty of Homoeopathic Medicine, West Bengal.
or
(ii) Council of Homoeopathic Medicine, Calcutta, West Bengal
or
(iii) Andhra Board for Ayurveda and Homoeopathy, Hyderabad, Andhra Pradesh.
or
(iv) State Board of Homoeopathic System of Medicine, Patna, Bihar.
or
(v) Board of Homoeopathic System of Medicine, Delhi.
or
(vi) Council of Homoeopathic System of Medicine, Trivandrum, Kerala State.
or
(vii) Board of Homoeopathic and Bio-Chemic Systems of Medicine, Madhya Pradesh, Bhopal.
or
(viii) Court of Examiners in Homoeopathy, Bombay, Maharashtra.
or
(ix) State Board of Homoeopathic System of Medicine, Lucknow and Agra University, Agra.

or

(5) The Diploma in Homoeopathy Medicine and Surgery issued to the Students of the Homoeopathy Medical College, Madurai on passing the final Examination held by the Tamil Nadu Homoeopathy Council during the year 1973-74.

or

(6) The diploma in Homoeopathy Medicine and Surgery issued to the Students of the Government Homoeopathy Medical College, Madras by the Director of Government Examinations, Madras.

and

II. Candidates possessing a degree of Diploma in Homoeopathy should have registered his name in the Tamil Nadu Homoeopathy Council.

**NOTE:** (i) Candidates who were holding temporary appointment as Medical Officer (Homoeopathy) (now Assistant Medical Officer (Homoeopathy) in the Tamil Nadu Medical Service on 28.6.83, may also apply even if they do not satisfy the prescribed age limit and qualification.

(ii) Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum marks, for selection.

**EXPLANATION:** 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependant to protect her from starvation.

ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம. மற்றும் பி.வ., ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்ப கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை"களில் தரப்பட்டுள்ளன.

(பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்.)

விண்ணப்பப்படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.8.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.8.90 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) "கேட்புக் காசோலை" (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கிலமொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/1987/MS/90 9/8/90



**TNPSC**

**விளம்பர எண்: 28/90**

தமிழ்நாடு மின் ஆய்வுத்துறை பணியில் உதவி மின் ஆய்வாளர் (Assistant Electrical Inspector) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 17.9.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000 (பகிரங்கப் போட்டி - 1).

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக. (வயது வரம்பு பற்றிய சலுகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (i) A degree in Electrical Engineering.

and

(ii) Practical experience in large electricity supply undertakings or the Tamil Nadu Electricity Board including experience in design office for a period of not less than three years.

NOTE: Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum marks for selection.

EXPLANATION: 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்" தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.8.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.8.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) "கேட்புக் காசோலை" (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26×12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

டிஐபிஆர்/2014/எம்எஸ்/90/அக்கார்ட்

# TNPSC

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## சென்னை - 600 002.

**Special and Departmental Test Examination, May 1990**

It is hereby notified that the candidates whose Register Numbers are given below are declared to have passed in the test under which their numbers appear.

These results are subject to clarification with detailed particulars to be published in due course which will be final.

### DEPARTMENTAL TEST FOR GRAMASEVAKS, GRADES I AND II AND GRAMASEVIKAS - VILLAGE SWARAJ - MAY 1990

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22051 | 22056 | 22060 | 22093 | 22136 | 22139 | 22190 | 22191 | 22214 | 22239 |
| 22263 | 22340 | 22345 | 22366 | 22373 | 22397 | 22400 | 22463 | 22497 | 22521 |
| 22529 | 22588 | 22607 | 22713 | 22774 | 22783 | 22855 | 22856 | 22950 | 22969 |
| 22995 | 22998 | 23003 | 23009 | 23027 | 23032 | 23044 | 23053 | 23092 | 23093 |
| 23131 | 23133 | 23142 | 23144 | 23155 | 23159 | 23208 | 23209 | 23307 | 23308 |
| 23312 | 23371 | 23377 | 23380 | 23388 | 23403 | 23404 | 23423 | 23439 | 23443 |
| 23475 | 23476 | 23477 | 23490 | 23513 | 23520 | 23527 | 23528 | 23557 | 23577 |
| 23579 | 23595 | 23601 | 23604 | 23626 | 23627 | 23629 | 23635 | 23637 | 23638 |
| 23645 | 23649 | 23665 | 23673 | 23706 | 23743 | 23786 | 23807 | 23821 | 23856 |
| 23888 | 23890 | 23891 | 23892 | 23900 | 23901 | 23904 | 23929 | 23931 | 23954 |
| 23968 | 23968எ | 23970 | 24045 | 24046 | 24053 | 24054 | 24059 | 24108 | 24116 |
| 24120 | 24130 | 24178 | 24218 | 24283 | 24307 | 24321 | 24333 | 24354 | 24359 |
| 24366 | 24382 | 24482 | 24492 | 24501 | 24538 | 24540 | 24577 | 24583 | 24588 |
| 24616 | 24676 | 24729 | 24794 | 24796 | 24842 | 24843 | 24844 | 24850 | 24853 |
| 24894 | 24902 | 24904 | 24974 | 25026 | 25046 | 25060 | 25076 | 25089 | 25116 |
| 25147 | 25153 | 25199 | 25222 | 25225 | 25255 | 25289 | 25380 | 25383 | 25399 |
| 25405 | 25408 | 25409 | 25422 | 25427 | 25470 | 25476 | 25477 | 25478 | 25488 |
| 25493 | 25529 | 25542 | 25554 | 25570 | 25596 | 25598 | 25615 | 25617 | 25622 |
| 25635 | 25638 | 25646 | 25659 | 25671 | 25678 | 25680 | 25682 | 25688 | 25694 |
| 25697 | 25705 | 25710 | 25723 | 25727 | 25730 | 25757 | 25759 | 25762 | 25776 |
| 25792 | 25796 | 25811 | 25816 | 25817 | 25820 | 25822 | 25839 | 25844 | 25845 |
| 25851 | 25862 | 25874 | 25914 | 25925 | 25927 | 25936 | 25940 | 25944 | 25965 |
| 25966 | 25970 | 25972 | 25988 | 25998 | 26001 | 26012 | 26021 | 26024 | 26025 |
| 26026 | 26041 | 26049 | 26051 | 26052 | 26061 | 26181 | 26184 | 26230 | 26275 |
| 26316 | 26346 | 26511 | 26521 | 26543 | 26605 | 26634 | 26664 | 26691 | 26752 |
| 26754 | 26762 | 26766 | 26789 | 26791 | 26802 | 26806 | 26807 | 26808 | 26810 |
| 26826 | 26833 | 26834 | 26841 | 26872 | 26875 | 26884 | 26899 | 26926 | 26939 |
| 26942 | 26943 | 26952 | 26965 | 26972 | 26978 | 26981 | 26985 | 26988 | 26989 |
| 26996 | 26997 | 26999 | 27000 | 27019 | 27025 | 27035 | 27037 | 27040 | 27043 |
| 27051 | 27057 | 27070 | 27073 | 27075 | 27079 | 27080 | 27094 | 27095 | 27100 |
| 27101 | 27102 | 27122 | 27125 | 27127 | 27129 | 27132 | 27161 | 27169 | 27170 |
| 27171 | 27188 | 27218 | 27219 | 27269 | 27276 | 27277 | 27306 | 27327 | 27334 |
| 27337 | 27341 | 27349 | 27363 | 27364 | 27369 | 27404 | 27418 | 27420 | 27423 |
| 27434 | 27435 | 27437 | 27439 | 27447 | 27460 | 27475 | 27477 | 27490 | 27500 |
| 27501 | 27555 | 27591 | 27594 | 27599 | 27601 | 27614 | 27618 | 27627 | 27629 |
| 27640 | 27644 | 27659 | 27663 | 27664 | 27667 | 27677 | 27679 | 27680 | 27681 |
| 27683 | 27687 | 27724 | 27733 | 27743 | 27819 | 27868 | 27898 | 27901 | 27920 |
| 27931 | 27944 | 27953 | 27967 | 27973 | 27999 | 28088 | 28173 | 28186 | 28279 |
| 28308 | 28311 | 28312 | 28317 | 28318 | 28323 | 28328 | 28433 | 28486 | 28537 |
| 28538 | 28558 | 28577 | 28598 | 28600 | 28657 | 28696 | 28713 | 28723 | 28766 |
| 28775 | 28842 | 28846 | 28847 | 28848 | 28850 | 28852 | 28857 | 28890 | 28910 |
| 28911 | 28940 | 28942 | 28945 | 28954 | 28977 | 29002 | 29053 | 29122 | 29124 |
| 29127 | 29155 | 29165 | 29234 | 29259 | 29266 | 29269 | 29308 | 29424 | 29441 |
| 29497 | 29596 | 29676 | 29707 | 29773 | 29863 | 29934 | 29945 | 29955 | 30027 |
| 30081 | 30183 | 30207 | 30241 | 30245 | 30282 | 30344 | 30593 | 30594 | 30621 |
| 30768 | 30791 | 30812 | 30829 | 30840 | 30848 | 30854 | 30858 | 30860 | 30863 |
| 30890 | 30916 | 30933 | 30972 | 30973 | 30974 | 30978 | 30985 | 30991 | 30993 |
| 31012 | 31046 | 31051 | 31067 | 31073 | 31081 | 31084 | 31085 | 31087 | 31130 |
| 31131 | 31147 | 31180 | 31202 | 31287 | 31313 | 31352 | 31383 | 31399 | 31400 |
| 31419 | 31421 | 31462 | 31509 | 31531 | 31539 | 31683 | 31686 | 31701 | 31724 |
| 31729 | 31732 | 31737 | 31741 | 31778 | 31781 | 31785 | 31794 | 31809 | 31944 |
| 32015 | 32168 | 32190 | 32201 | 32458 | 32515 | 32609 | 32659 | 32667 | 32675 |
| 32899 | 32918 | 32922 | 32925 | 32945 | 32955 | 32961 | 32965 | 32980 | 33010 |
| 33054 | 33091 | 33099 | 33114 | 33160 | 33219 | 33350 | 33466 | 33469 | 33509 |
| 33677 | 33769 | 33798 | 33898 | 33904 | 33938 | 34037 | 34066 | 34088 | 34147 |
| 34156 | 34300 | 34375 | 34433 | 34555 | 34590 | 34646 | 34827 | 34947 | 34970 |
| 34992 | 35105 | 35119 | 35128 | 35269 | 35331 | 35410 | 35436 | 35464 | 35487 |
| 35502 | 35548 | 35573 | 35640 | 35644 | 35679 | 35684 | 35715 | 35760 | 35771 |
| 35813 | 35825 | 35875 | 35905 | 35922 | 35945 | 35956 | 35974 | 35989 | 35992 |
| 36015 | 36025 | 36041 | 36115எ | 36158 | 36183 | 36288 | 36305 | 36312 | 36314 |
| 36318 | 36418 | 36448 | 36473 | 36512 | 36528 | 36530 | 36578 | 36633 | 36640 |
| 36682 | 36690 | 36706 | 36712 | 36749 | 36770 | 36783 | 36797 | 36802 | 36825 |
| 36826 | 36839 | 36850 | 36877 | 36884 | 36892 | 36905 | 36911 | 36925 | 36935 |
| 36994 | 37012 | 37050 | 37065 | 37115 | 37121 | 37182 | 37185 | 37241 | 37247 |
| 37248 | 37268 | 37324 | 37328 | 37362 | 37372 | 37422 | 37457 | 37460 | 37475 |
| 37477 | 37478 | 37496 | 37516 | 37522 | 37537 | 37543 | 37545எ | 37548 | 37569 |
| 37580 | 37616 | 37619 | 37622 | 37659 | 37663 | 37664 | 37668 | 37670 | 37681 |
| 37683 | 37704 | 37728 | 37732 | 37749 | 37750 | 37751 | 37859 | 37960 | 37978 |
| 38017 | 38018 | 38022 | 38031எ | 38039 | 38083 | 38135 | 38137 | 38139 | 38159 |
| 38160 | 38198 | 38217 | 38221 | 38229 | 38239 | 38260 | 28261 | 38306 | 38320 |
| 38330 | 38337 | 38364 | 38399 | 38409 | 38415 | 38441 | 38442 | 38461 | 38478 |
| 38485 | 38494 | 38498 | 38502 | 38505எ | 38506 | 38511 | 38537 | 38543 | 38569 |
| 38485 | 38494 | 38498 | 38502 | 38505எ | 38506 | 38511 | 38537 | 38543 | 38369 |
| 38571 | 38573 | 38577 | 38633 | 38636 | 38638 | 38639 | 38643 | 38646 | 38649 |
| 38653 | 38654 | 38658 | 38660 | 38681 | 38682 | 38684 | 38686 | 38689 | 38690 |
| 38692 | 38695 | 38696 | 38705 | 38716 | 38724 | 38726 | 38728 | 38746 | 38752 |
| 38754 | 38755 | 38790 | 38791 | 38800 | 38882 | 38891 | 38893 | 38896 | 38968 |
| 38980 | 38981 | 38985 | 38988 | 38992 | 38993 | 38996 | 38998 | 39002 | 39005 |
| 39009 | 39025 | 39026 | 39032 | 39033 | 39048 | 39061 | 39062 | 39066 | 39093 |
| 39098 | 39112 | 39121 | 39123 | 39128 | 39147 | 39149 | 39152 | 39154 | 39157 |
| 39159 | 39164 | 39186 | 39188 | 39207 | 39210 | 39215 | 39218 | 39225 | 39228 |
| 39231 | 39238 | 39243 | 39244 | 39275 | 39303 | 39304 | 39326 | 39331 | 39338 |
| 39342 | 39377 | 39417 | 39420 | 39427 | 39428 | 39442 | 39443 | 39449 | 39456 |
| 39465 | 39471 | 39472 | 39476 | 39478 | 39480 | 39482 | 39489 | 39493 | 39494 |
| 39495 | 39496 | 39497 | 39498 | 39499 | 39528 | 39531 | 39532 | 39535 | 39540 |
| 39550 | 39559 | 39562 | 39563 | 39564 | 39567 | 39568 | 39574 | 39575 | 39581 |
| 39582 | 39591 | 39626 | 39627 | 39628 | 39629 | 39630 | 39632 | 39633 | 39642 |
| 39649 | 39660 | 39662 | 39691 | 39693 | 39697 | 39701 | 39704 | 39735 | 39750 |
| 39751 | 39753 | 39755 | 39756 | 39766 | 39788 | 39789 | 39793 | 39794 | 39795 |
| 39835 | 39846 | 39847 | 39850 | 39855 | 39869 | 39873 | 39907 | 39913 | 39916 |
| 39918 | 39919 | 39921 | 39939 | 39940 | 39941 | 39949 | 39960 | 39966 | 39975 |
| 39984 | 39991 | 39994 | 40014 | 40021 | 40049 | 40054 | 40057 | 40062 | 40064 |
| 40084 | 40089 | 40109 | 40112 | 40125 | 40127 | 40131 | 40139 | 40152 | 40155 |
| 40176 | 40178 | 40181 | 40185 | | | | | | |

**The results of the candidates with following Register Numbers have been withheld and will be published later.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23975 | 24061 | 24109 | 24114 | 24128 | 24129 | 24159 | 24322 | 24334 | 24358 |
| 24401 | 24407 | 24412 | 24414 | 24458 | 24473 | 24474 | 24476 | 24493 | |

நிலஅளவைத் தேர்வு (திருத்தியமைக்கப்பட்டது) பாகம்-1
முதல் தாள்—மே 1990.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22619 | 22637 | 24546 | 25158 | 25224 | 25235 | 25246 | 27540 | 32421 | 32564 |
| 32756 | 32800 | 33235 | 33318 | 33382 | 33447 | 33520 | 33533 | 33622 | 33714 |
| 33792 | 33923 | 34056 | 34182 | 34247 | 34268 | 34270 | 34889 | 34901 | 35323 |
| 35355 | 37689 | 39178 | | | | | | | |

நிலஅளவைத் தேர்வு (திருத்தியமைக்கப்பட்டது) பாகம்-1
இரண்டாம் தாள்—மே 1990

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22103 | 22616 | 22619 | 22637 | 22641 | 22670 | 22726 | 22917 | 23252 | 24546 |
| 24551 | 24552 | 24617 | 24685 | 24707 | 24922 | 25033 | 25048 | 25246 | 27803 |
| 27918 | 32421 | 32519 | 32531 | 32756 | 32800 | 32928 | 33291 | 33382 | 33447 |
| 33476 | 33533 | 33588 | 33616 | 33923 | 33979 | 34051 | 34185 | 34196 | 34268 |
| 34270 | 34889 | 34909 | 34922 | 35124 | 35222 | 35282 | 35285 | 35323 | 35355 |
| 35714 | 35842 | 36155 | 36302 | 36396 | 36462 | 36490 | 37538 | 37636 | 38058 |
| 38210 | 39264 | 39792 | 40001 | 40177 | | | | | |

நிலஅளவைத் தேர்வு (திருத்தியமைக்கப்பட்டது) பாகம்-1
மூன்றாம் தாள்—மே 1990

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22637 | 22917 | 24551 | 24575 | 24962 | 25246 | 27340 | 27803 | 27806 | 32756 |
| 32800 | 33235 | 33282 | 33287 | 33298 | 33318 | 33622 | 33714 | 34268 | 34270 |
| 35323 | 35325 | 35714 | 34751 | 35842 | 35867 | 36083 | 36129 | 36302 | 36396 |
| 36462 | 36490 | 36531 | 39178 | | | | | | |

தேர்வுகள்—துறைத் தேர்வுகள்—மே 1990—வருவாய் வரைவாளர் தேர்வு
முதல் தாள்—தேர்வு முடிவுகள் தேர்ச்சி பெற்றோர் பட்டியல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23212 | 23612 | 23770 | 23783 | 24935 | 24937 | 24997 | 25049 | 25096 | 25111 |
| 25154 | 25188 | 25385 | 25394 | 24788 | 25467 | 25527 | 25563 | 25575 | 25599 |
| 25612 | 25690 | 25711 | 25814 | 25858 | 25903 | 25957 | 26103 | 26111 | 26120 |
| 26147 | 27961 | 28531 | 28651 | 28668 | 29369 | 29371 | 30185 | 30591 | 31013 |
| 31206 | 31507 | 31750 | 31790 | 32397 | 32423 | 32442 | 32471 | 32488 | 32517 |
| 32607 | 32726 | 32768 | 32810 | 32868 | 34107 | 34696 | 35011 | 35543 | 36757 |
| 36866 | 37296 | 37403 | 37404 | 37564 | 37689 | 37734 | 37785 | 37915 | 38212 |
| 38313 | 38459 | 38634 | 38779 | 39274 | 39307 | 39323 | 39353 | 39375 | 39384 |
| 39485 | 39576 | 39598 | 39670 | 39731 | 39895 | 39988 | 40071 | 40102 | 40111 |
| 40123 | 40124 | 40126 | | | | | | | |

தேர்வுகள்—துறைத் தேர்வுகள்—மே 1990—வருவாய் வரைவாளர் தேர்வு
இரண்டாம் தாள் தேர்வு முடிவுகள்—தேர்ச்சி பெற்றோர் பட்டியல்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22227 | 23564 | 23783 | 23800 | 24101 | 24104 | 24469 | 24997 | 25067 | 25096 |
| 25111 | 25206 | 25690 | 26683 | 26697 | 26711 | 26743 | 26769 | 26925 | 26951 |
| 27130 | 27228 | 27482 | 30942 | 31105 | 31206 | 31277 | 31382 | 31507 | 31659 |
| 31790 | 32397 | 32517 | 32814 | 32881 | 32937 | 33051 | 33075 | 33194 | 34587 |
| 36757 | 36815 | 36900 | 37342 | 37564 | 37689 | 38019 | 38454 | 38634 | 38779 |
| 38979 | 39015 | 39230 | 39274 | 39353 | 39375 | 39384 | 39485 | 39538 | 39576 |
| 39593 | 40071 | | | | | | | | |

தேர்வுகள்— துறைத் தேர்வுகள்— மே 1990— வருவாய் வரைவாளர் தேர்வு
மூன்றாம் தாள் தேர்வு முடிவுகள்— தேர்ச்சி பெற்றோர் பட்டியல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24503 | 24661 | 24937 | 26294 | 28220 | 28531 | 29369 | 30926 | 30979 | 31450 |
| 31784 | 32505 | 32582 | 32607 | 32768 | 32844 | 32881 | 33051 | 33052 | 33075 |
| 34404 | 34598 | 34715 | 34818 | 35302 | 35617 | 36177 | 36311 | 36358 | 36590 |
| 36605 | 36615 | 36643 | 36686 | 36757 | 36803 | 36815 | 36931 | 37071 | 37130 |
| 37152 | 37281 | 37338 | 37403 | 37404 | 37610 | 38911 | 39099 | 39576 | 39670 |
| 39988 | | | | | | | | | |



TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# சென்னை - 600 002.

தமிழ்நாடு வேளாண்மைத் துறையில் வேளாண்மை அலுவலர் (ஆராய்ச்சி) பதவிக்கு (1989-90-ஆம் ஆண்டு) தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதிவெண்களடங்கிய பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 35 | 42 | 56 | 57 | 74 | 109 | 113 | 129 | 134 | 165 | 179 |
| 182 | 194 | 224 | 225 | 227 | 238 | 240 | 243 | 271 | 303 | 304 | 309 |
| 321 | 337 | 342 | 357 | 363 | 376 | 399 | 411 | 418 | 420 | 441 | 443 |
| 446 | 450 | 451 | 453 | 462 | 468 | 469 | 486 | 500 | 547 | 578 | 582 |
| 583 | 585 | 591 | 600 | 619 | 624 | 637 | 762 | 763 | 765 | 770 | 794 |
| 797 | 818 | 830 | 853 | 862 | 919 | 928 | 939 | 947 | 967 | 974 | 981 |
| 983 | 993 | 1009 | 1025 | 1026 | 1029 | 1034 | 1042 | மற்றும் 1066 | | | |

பதிவெண் 353-ஐ கொண்ட விண்ணப்பதாரரின் தெரிவு முடிவு அவரிடமிருந்து வர வேண்டிய மூலச்சான்றிதழ்களைச் சரிபார்க்கும் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

காப்புப் பட்டியல்

தமிழ்நாடு வேளாண்மைத் துறையில் வேளாண்மை அலுவலர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களில் எவரேனும் பணியில் சேராத பட்சத்தில் அக்காலி இடங்களை நிரப்பும் பொருட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள பதிவெண்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களின் காப்புப் பட்டியல் ( Reserve List ) வெளியிடப்படுகின்றது. இக்காப்புப் பட்டியல் இப்பதவிக்கான அடுத்த தெரிவுப் பட்டியல் தயாராகும் வரை மட்டுமே செல்லத்தக்கதாகும்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 237 | 320 | 388 | 390 | 435 | 447 | 519 | 540 | 601 | 618 | 680 | 694 |
| 775 | 815 | 848 | 886 | 935 | 1022 | 1035 | 1045 மற்றும் 1047 | | | | |

டிஐபிஆர்/2055/எம்எஸ்/90/அக்கார்ட்

## புதிய வாழ்வு

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பால்னாங்குப்பம் கிராமத்தினைச் சார்ந்த செல்வி சின்னப்பாப்பா எனும் இருபத்தைந்து வயது பெண்மணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மனிதாபிமான அடிப்படை முயற்சியினால், பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டு, சொந்த கிராமத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அவருடைய சகோதரர் பாதுகாப்பில் விடப்பட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1.7.90 அன்று வேலூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட போது, செல்வி. சின்னப்பாப்பாவிற்கு மனிதநேய அடிப்படையில் புனர்வாழ்வு அளிக்கும் வகையில் கறவை மாடு வாங்குவதற்கு ரூ.4,750 நிதியுதவி அளிக்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி, 19.7.90 நாளன்று பால்னாங்குப்பம் கிராமத்தில் நடந்த சிறிய விழாவில், அப்பெண்மணிக்குப் பாரத ஸ்டேட் வங்கி மூலம் கறவை மாடு ஒன்று வழங்கப்பட்டது. மேலும், விரைவில் மற்றொரு கறவை மாடு அப்பெண்மணிக்கு வழங்கிடக் கடனுதவி அளிக்கப்படும் என்று திருப்பத்தூரில் உள்ள பாரத வங்கியின் கிளை மேலாளர் அறிவித்துள்ளார்.



# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2

தேர்வாணையத்தால் 4.2.90 அன்று தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் புள்ளியியல் துறையில் புள்ளியியல் உதவி ஆய்வாளர் பதவிகளுக்கு நடத்தப்பட்ட முதனிலைத் தேர்வு (Preliminary Examination) முடிவின் அடிப்படையில் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப் பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பிரதான எழுத்துத் தேர்வுக்கு நாள், நேரம் மற்றும் தேர்வு மையம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படும். **இப்பட்டியலில் இடம்பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள். மேலும் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படாத விண்ணப்பதாரர்களுக்கு தனியாக தகவல் எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறார்கள்.**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1501 | 1505 | 1510 | 1518 | 1522 | 1525 | 1526 | 1528 | 1537 | 1542 | 1554 | 1559 | 1560 | 1561 | 1562 |
| 1576 | 1587 | 1591 | 1595 | 1599 | 1605 | 1610 | 1617 | 1624 | 1645 | 1646 | 1652 | 1660 | 1667 | 1673 |
| 1677 | 1678 | 1680 | 1681 | 1683 | 1685 | 1690 | 1691 | 1705 | 1707 | 1708 | 1713 | 1714 | 1734 | 1741 |
| 1746 | 1747 | 1758 | 1760 | 1762 | 1766 | 1768 | 1783 | 1784 | 1786 | 1791 | 1792 | 1793 | 1795 | 1805 |
| 1807 | 1814 | 1815 | 1822 | 1826 | 1829 | 1833 | 1839 | 1844 | 1862 | 1863 | 1865 | 1866 | 1872 | 1873 |
| 1878 | 1879 | 1899 | 1903 | 1909 | 1917 | 1922 | 1924 | 1925 | 1928 | 1930 | 1932 | 1947 | 1949 | 1960 |
| 1964 | 1967 | 1973 | 1987 | 1991 | 2002 | 2012 | 2019 | 2024 | 2026 | 2033 | 2036 | 2037 | 2038 | 2040 |
| 2044 | 2047 | 2056 | 2061 | 2078 | 2085 | 2087 | 2088 | 2091 | 2093 | 2094 | 2096 | 2098 | 2101 | 2105 |
| 2106 | 2110 | 2113 | 2115 | 2116 | 2120 | 2126 | 2129 | 2136 | 2140 | 2151 | 2152 | 2164 | 2181 | 2182 |
| 2185 | 2191 | 2194 | 2196 | 2198 | 2200 | 2201 | 2205 | 2209 | 2210 | 2213 | 2214 | 2220 | 2224 | 2229 |
| 2231 | 2234 | 2242 | 2244 | 2262 | 2265 | 2271 | 2279 | 2283 | 2286 | 2303 | 2305 | 2307 | 2316 | 2318 |
| 2323 | 2329 | 2337 | 2340 | 2341 | 2345 | 2356 | 2360 | 2364 | 2370 | 2375 | 2378 | 2393 | 2400 | 2419 |
| 2423 | 2440 | 2448 | 2449 | 2451 | 2456 | 2457 | 2462 | 2464 | 2466 | 2467 | 2475 | 2514 | 2517 | 2518 |
| 2521 | 2523 | 2527 | 2529 | 2552 | 2560 | 2575 | 2582 | 2583 | 2587 | 2595 | 2596 | 2600 | 2601 | 2602 |
| 2603 | 2606 | 2626 | 2636 | 2643 | 2655 | 2657 | 2660 | 2670 | 2671 | 2674 | 2675 | 2677 | 2680 | 2681 |
| 2684 | 2689 | 2694 | 2703 | 2705 | 2708 | 2712 | 2716 | 2721 | 2724 | 2726 | 2727 | 2736 | 2738 | 2739 |
| 2741 | 2742 | 2743 | 2746 | 2750 | 2751 | 2752 | 2753 | 2754 | 2757 | 2762 | 2763 | 2771 | 2772 | 2775 |
| 2776 | 2778 | 2780 | 2781 | 2782 | 2783 | 2784A | 2787 | 2789 | 2796 | 2799 | 2805 | 2822 | 2827 | 2836 |
| 2853 | 2857 | 2874 | 2877 | 2911 | 2918 | 2933 | 2947 | 2948 | 2958 | 2970 | 2972 | 2981 | 2996 | 2998 |
| 3001 | 3002 | 3008 | 3013 | 3014 | 3017 | 3024 | 3026 | 3031 | 3033 | 3039 | 3040 | 3043 | 3045 | 3048 |
| 3062 | 3066 | 3068 | 3070 | 3075 | 3080 | 3081 | 3082 | 3090 | 3091 | 3093 | 3095 | 3098 | 3102 | 3107 |
| 3110 | 3112 | 3115 | 3119 | 3124 | 3149 | 3150 | 3156 | 3170 | 3177 | 3179 | 3184 | 3185 | 3192 | 3195 |
| 3204 | 3207 | 3208 | 3212 | 3214 | 3215 | 3220 | 3224 | 3233 | 3234 | 3241 | 3242 | 3244 | 3246 | 3249 |
| 3250A | 3254 | 3255 | 3257 | 3259 | 3265 | 3267 | 3286 | 3287 | 3288 | 3295 | 3311 | 3315 | 3316 | 3321 |
| 3322 | 3324 | 3326 | 3327 | 3332 | 3335 | 3341 | 3342 | 3344 | 3347 | 3370 | 3378 | 3388 | 3400 | 3406 |
| 3410 | 3416 | 3417 | 3425 | 3427 | 3431 | 3438 | 3440 | 3441 | 3449 | 3454 | 3461 | 3463 | 3464 | 3471 |
| 3485 | 3487 | 3491 | 3496 | 3502 | 3505 | 3511 | 3526 | 3529 | 3551 | 3552 | 3553 | 3557 | 3558 | 3560 |
| 3564 | 3565 | 3579 | 3582 | 3599 | 3603 | 3616 | 3617 | 3621 | 3627 | 3633 | 3640 | 3648 | 3658 | 3660 |
| 3666 | 3673 | 3680 | 3686 | 3703 | 3708 | 3728 | 3732 | 3733 | 3751 | 3758 | 3768 | 3769 | 3771 | 3783 |
| 3787 | 3788 | 3790 | 3802 | 3805 | 3806 | 3807 | 3816 | 3818 | 3830 | 3839 | 3848 | 3849 | 3866 | 3867 |
| 3875 | 3878 | 3879 | 3880 | 3894 | 3898 | 3908 | 3910 | 3927 | 3930 | 3933 | 3941 | 3943 | 3946 | 3947 |
| 3952 | 3953 | 3955 | 3965 | 3970 | 3981 | 3987 | 3995 | 4005 | 4014 | 4015 | 4020 | 4021 | 4024 | 4028 |
| 4029 | 4030 | 4046 | 4053 | 4061 | 4063 | 4066 | 4073 | 4081 | 4086 | 4088 | 4096 | 4097 | 4103 | 4108 |
| 4109 | 4116 | 4122 | 4126 | 4129 | 4136 | 4142 | 4151 | 4156 | 4157 | 4161 | 4165 | 4175 | 4179 | 4188 |
| 4189 | 4190 | 4192 | 4194 | 4201 | 4204 | 4208 | 4209 | 4211 | 4212 | 4216 | 4223 | 4226 | 4229 | 4247 |
| 4249 | 4255 | 4264 | 4277 | 4278 | 4284 | 4286 | 4295 | 4299 | 4305 | 4312 | 4315 | 4324 | 4325 | 4330 |
| 4337 | 4343 | 4344 | 4347 | 4371 | 4381 | 4388 | 4391 | 4395 | 4400 | 4403 | 4404 | 4429 | 4436 | 4438 |
| 4459 | 4462 | 4483 | 4490 | 4497 | 4519 | 4522 | 4524 | 4527 | 4528 | 4529 | 4532 | 4533 | 4540 | 4551 |
| 4560 | 4615 | 4616 | 4636 | 4637 | 4658 | 4659 | 4665 | 4670 | 4673 | 4697 | 4710 | 4717 | 4723 | 4724 |
| 4728 | 4731 | 4733 | 4737 | 4753 | | | | | | | | | | |

**செயலாளர்**



TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**சென்னை-600 002.**

தேர்வாணையத்தால் 4-2-90அன்று தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் புள்ளியியல் துறையில் புள்ளியியல் ஆய்வாளர் பதவிகளுக்கு நடத்தப்பட்ட முதனிலைத் தேர்வு ( Preleminary Examination ) முடிவின் அடிப்படையில் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பிரதான எழுத்துத் தேர்விற்கு நாள், நேரம் மற்றும் தேர்வு மையம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் பிரதான எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள். மேலும் பிரதான எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்படாத விண்ணப்பதாரர்களுக்குத் தனியாகத் தகவல் எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறார்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0006 | 0009 | 0013 | 0019 | 0104 | 0118 | 0119 | 0159 | 0180 | 0196 |
| 0208 | 0211 | 0241 | 0247 | 0249 | 0278 | 0279 | 0288 | 0291 | 0295 |
| 0322 | 0332 | 0333 | 0337 | 0338 | 0363 | 0384 | 0408 | 0445ஏ | 0448 |
| 0456 | 0471 | 0483 | 0495 | 0496 | 0504 | 0505 | 0508 | 0509 | 0516 |
| 0534 | 0560 | 0563 | 0596ஏ | 0603 | 0606 | 0614 | 0654 | 0655 | 0670 |
| 0674 | 0694 | 0695 | 0696 | 0700 | 0705 | 0716 | 0725 | 0729 | 0731 |
| 0740 | 0765 | 0767 | 0783 | 0787 | 0792 | 0817 | 0860 | 0875 | 0892 |
| 0905 | 0910 | 0935 | 0946 | 0952 | 0956 | 0957 | 0989 | 1017 | 1024 |
| 1025 | 1033 | 1053 | 1071 | 1107 | 1115 | 1116 | 1119 | 1120 | 1128 |
| 1130 | 1131 | 1150 | 1163 | 1164 | 1177 | 1178 | 1214 | 1215 | 1228 |

செயலாளர்

டிஜூபி[illegible]ர்/2016/எம்எஸ்/90/அக்கார்ட்

**ன்காம் அட்டை சொல்லும் செய்தி :**



சீர்திருத்தக் கொள்கைகளை- பகுத்தறிவுக் கருத்துக்களை- தமிழ்த் திரைப்படங்களின் வாயிலாக உலா வரச் செய்து சமுதாயத்தில் மறு மலர்ச்சி பாயச் செய்த பெருமை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களைச் சாரும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அருகில் உள்ள ஒழு கிணசேரியில் சுடலை முத்து-இசக்கி யம்மாள் தம்பதியின் மகனாக 29.11.1908-இல் பிறந்தவர் என்.எஸ்.கிருஷ்ணன். அவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும் சிறுவயதிலேயே கலை ஆர்வம் என்னும் செல்வத்தை மிக அதிக அளவில் பெற்றிருந்தார்.

நாடகங்களில் நடித்தார்; நடிப் புலகில் ஒளிவீசித் திகழ்ந்தார். நகைச்சுவைப் பாத்திரத்தையே விரும்பி ஏற்றார். நாடெல்லாம் போற்றும் நகைச்சுவை நடிகரானார். காலத்தின் கட்டாயத்தால் நாடக உலகிலிருந்து திரைப்பட உலகில் புகுந்தார்; திறம்பட நடித்தார்; திக்கெலாம் புகழ் தேடிக் கொண்டார். கலைவாணர் என்னும் பட்டத்தையும் பெற்றார்; மக்களின் கவலையையும் கண்ணீரையும் நகைச்சுவை மருந்து கொண்டு நீக்கினார்.

நகைச்சுவை வெடிகளை உதிர்ப்பதுடன் நல்ல நல்ல கருத்து மணிகளையும் மக்கள் மன்றத்திற்குக் காணிக்கை ஆக்கினார். சிரிக்க வைத்து நாட்டைச் செழிக்க வைக்கும் சீர்திருத்தக்காரராக விளங்கினார்.

அவரது மேதையைத் தமிழகத்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களெல்லாம் பாராட்டிப் போற்றியிருக்கிறார்கள். அறிஞர் பெருமக்களையும் அரசியல் விற்பன்னர்களையும்- தமது அருங்கருத்துகளால் - அதிசயிக்க வைத்த பெருமை- சிரிப்புக் கடலிலே மூழ்க வைத்த திறமை கலைவாணரின் தனி உடைமை!

''கலை காலத்தை வெல்வது. கலைவாணருடைய நகைச்சுவை இப்போதும் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவுக்கு இருக்கிறது. கலைக் கல்லூரி அமைத்து அவர் ஆசானாக இருந்து பணியாற்ற வேண்டியவர்; எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைவாணரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

## கலை உலக ஆசான் கலைவாணர்

''நமது நகைச்சுவை அரசு கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தனது தொழிலில் ஒரு மேதாவி என்றாலும் அதை நடத்தும் முறையில் ஒரு பெரிய புரட்சியாளர் என்றே சொல்ல வேண்டும். அதுவும் லெனின் செய்தது போன்ற புரட்சி என்றே சொல்ல வேண்டும்.

''நாடகப் புரட்சி உலகைப் பற்றிச் சரித்திரம் எழுதப்பட்டால், அச்சரித்திரத்தின் அட்டைப் பக்கத்தில் என்.எஸ்.கிருஷ்ணன் படம் போடாவிட்டால் அச்சரித்திரம் தீண்டப்படாததாகி விடும்''— தந்தை பெரியாரின் பாராட்டு வாசகம் இது.

"கிருஷ்ணன் தமிழ் மக்களைச் சிரிக்க வைக்கும் மகான்.

"கிருஷ்ணன் பிறருடைய உள்ளத்தைக் குத்திப் பிளக்கிறதில்லை. அவர் பிறருடைய உள்ளத்தை விரியச் செய்கிறார். அதை விளையாட்டுப் பொம்மையாக அடித்து விடுகிறார்''— மறுமலர்ச்சி எழுத்தாளர் வ.ரா. கலைவாணரை இப்படிப் போற்றிப் புகழ்ந்தார்.

சிறுகுழந்தை முதல் வயது முதிர்ந்தவர்வரை கலைவாணரின் நகைச் சுவையில் சொக்கிப் போயிருக்கிறார்கள் என்பதைத் திரையுலக வரலாறு நமக்கு எடுத்துச் சொல்கிறது.

கருத்துச் செல்வத்தை மட்டுமல்ல- கையிலிருந்த பொருட் செல்வத்தையும் ஏழை எளியவர்களுக்கு வழங்கி இதயம் மகிழ்ந்தவர் கலைவாணர்.

தனிப்பட்ட முறையில் தன்னை அணுகிவந்து பண உதவி கேட்டவர்களுக்கெல்லாம் அள்ளிக் கொடுத்த வள்ளல் அவர்.

வாரி வழங்கிய வள்ளலே 1957 ஜூலை மாதத்தில் நோய்க்கு ஆளானார். சிலநாள் சென்னை பொது மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற்றார். எனினும் நோய் குணமாகவில்லை.

ஆகஸ்ட் திங்கள் 30-ஆம் நாளன்று இன்னுயிர் நீத்தார். மறைந்து 33 ஆண்டுகள் உருண்டோடி விட்டன என்றாலும், அவரைப் பற்றிய நினைவுகள் தமிழ்மக்களின் நெஞ்சில் நீங்காது நிலை பெற்றிருக்கின்றன.

1969-இல் அவரது திருவுருவச் சிலை தியாகராய நகர் வாணிமகால் அருகில் அன்றைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அண்ணா பங்கு பெற்ற கடைசிப் பொதுநிகழ்ச்சியாக அது அமைந்தது. அதன் பின்னர் அண்ணா, உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சேர்ந்தார். சிகிச்சை பயனின்றி பிப்ரவரி 3-இல் மறைந்தார்

கலைவாணரின் பாடல்களில் சீர்திருத்தக் கருத்துகள் சிறந்தோங்கியிருந்ததற்கும் அந்தப் பாடல்கள் மக்களைக் கவர்ந்ததற்கும்- பாடல் எழுதிய உடுமலை நாராயண கவிக்கும் பெரும் பங்கு உண்டு. உடுமலையாரை நன்கு வேலை வாங்கி, தனக்கு ஏற்ற விதத்தில் பாடல்களை எழுத வைத்த திறமை கலைவாணருக்கு மட்டுமே உண்டு.

கலைவாணரின் நினைவு நாளை முன்னிட்டு, கலைவாணரும் அவரிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா, உடுமலை நாராயண கவி ஆகிய மும்மணிகளும் வீற்றிருக்கும் அபூர்வமான புகைப்படத்தை. பின்பக்க அட்டையில் வெளியிட்டுப் பெருமை கொள்கிறது 'தமிழரசு'

**_எஸ்.எஸ்.சுந்தரப**


/ அதி / நவீன / பருத்தி / வகைகள் /



எங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA


மல்லிகை





சென்னையில் 26.8.90 அன்று நடைபெற்ற திரு.வி.க. பிறந்தநாள் விழாவின்போது- மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், புலவர் கா. கோவிந்தன் அவர்களுக்கும் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்களுக்கும் திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்பித்தார். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் உடன் உள்ளார்.



14 4059

## இந்த இதழில்...


முப்பால் தந்த வள்ளுவருக்கு முக்கடல் சங்கமத்தில் உருவச்சிலை ... 2
திரு.வி.க. விருது வழங்கும் விழா ... 4
[illegible] ஒரு மாலைமணி ... 6
ஈரோட்டண்ணல் (கவிதை) ... 9
நெஞ்சம் மறக்குமோ? ... 10
அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள் ... 13
ஒன்றா இரண்டா, எடுத்துச் சொல்ல? ... 14
மாவட்டச் செய்திகள் ... 17
ஆனைமலைக் காடர்கள் ... 24
பார் உய்யப் பாடிய பாவேந்தர் ... 28
வேளாண்மை ... 30
ஆசிரியர் பெருமை (கவிதை) ... 33
அள்ளக் குறையாதது கல்விச் செல்வம் ... 34
பண்பாட்டுப் பெட்டகம் ... 45



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆவணித் திங்கள் - 31

மலர்:21 இதழ்:6

16-9-1990




# பெரியார் — அண்ணா சந்திப்பு



பெரியார் நிமிர்ந்து பார்த்தார். தமக்கு முன் வந்து நின்ற இளைஞனின் எழுச்சியையும் ஏதோ சொல்லத் துடிக்கும் ஆர்வத்தையும் கண்டு கொண்டார்.

''தம்பி, உன் பேரென்ன?''

''அண்ணாதுரை.''

''என்ன செஞ்சிக்கிட்டிருக்கே?''

கல்லூரியில் படிக்கிறேன்; பரீட்சை எழுதியிருக்கேன்.''

படிப்பு முடிஞ்சதும் உத்தியோகம் பார்க்கப்போறியா?''

ஆமாம், அதுக்குத்தான் படிக்க வச்சிருக்காங்க. வேறு எதுக்காகப் படிக்கிறதுங்க?'' என்று அண்ணா திரும்பித் தம்மைக் கேட்பார் எனப் பெரியார் எதிர்பார்த்தார். ஆனால், பதில் வேறுவிதமாக வந்தது. ''உத்தியோகம் பார்க்க விருப்ப மில்லே!''

பதில் கேட்டுப் பெரியார் பிர மித்தார். விழிகளில் வியப்புப் படர, பார்வையில் புதுமை மலர, இளைஞர் அண்ணாவை அன்போடு நோக்கி னார். ''இந்த நாளில் இப்படி ஓர் இளைஞனா? படிப்பது உத்தியோகம் பார்ப்பதற்காக அல்ல என்று ஆணித்தரமாக அறிவிக்கிறானே? தெளிவாகத் தெரிவிக்கிறானே?''

அண்ணாவின் பேச்சும், துடிப்பும் குரலும் கேள்விக்குத் தங்கு தடையின்றி வருகிற பதிலும் பெரியாரை மிகவும் கவர்ந்தன. அன்று எத்தனையோ அலுவல்கள் அவருக்கு இருந்தும், அண்ணாவோடு மேலும் பேச வேண்டும் என்றே பெரியாருக்குத் தோன்றியது.

''அப்படியானா, படிப்பு முடிஞ்சதும் என்ன செய்யப் போவதா உத்தேசம்?''

''பொது வாழ்வில் ஈடுபடப் போகிறேன் ஐயா!''

அண்ணா அப்படிச் சொன்னதும் பெரியாரின் பற்கள் தாடிக்கு வெளியே வெள்ளையாகத் தெரிந்து முறுவல் காட்டின. அருகில் நின்றிருந்த அண்ணாவை அன்போடு இழுத்துத் தம்மோடு அணைத்துக் கொண்டார்.

''இங்கே 'செங்குந்தர் இளைஞர் மாநாடு' கூட்டியிருக்கேன். மாநாடு நடத்திய பலனை இப்பவே கண்டுட்டேன். தம்பி, ஒன்னைப் போல இளைஞருங்க தான் இப்படி வலியப் பொது வாழ்வுக்கு உற்சாக வெள்ளமாகப் புரண்டு வரணும். நீயும் வா! வா!'' என்று வாயார வரவேற்றார், பெரியார்.

1935-ஆம் ஆண்டில் திருப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சி இது. எத்தனையோ தேசிய, அரசியல் எழுச்சிகளுக்கு இடம் கொடுத்த திருப்பூர், பெரியார்-அண்ணா சந்திப்புக்கும் காரணமாக இருந்தது. அந்தச் சந்திப்புதான் அண்ணாவின் வாழ்க்கையில் ஒரு திருப்பம் தந்தது. அன்று முதல் பெரியார்-அண்ணாவின் அரசியல் குருவானார்;- தந்தையானார்; தலைவரானார்!

— 'அண்ணாவின் கதை'

தினமணி கதிர்

# முப்பால் தந்த வள்ளுவருக்கு

# முக்கடல் சங்கமத்தில் உருவச் சிலை

## -முதல்வர் கலைஞர்-



திருவள்ளுவர் சிலையின் மாதிரி தோற்றம்

**133** அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை இங்கே குமரிக் கடலிடையே அமைக்கப்பட விருக்கிறது. ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய் செலவில் அந்தச் சிலை அமைவதற்கான எல்லா விதமான ஏற்பாடுகளும், முழு முயற்சிகளும் ஆக்கப் பூர்வமான பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டன.

இங்கே திருவள்ளுவர் சிலை வைப்பதற்கான உளியின் ஓசை கேட்கத் தொடங்கும். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. விவேகானந்தர் மண்டபம் இங்கே அமைக்கப்பட்டபோது, பல நேரங்களிலே நான் இங்கே வந்து தங்கியிருந்த நேரத்தில், இரவு எல்லாம் உளியின் ஓசை கேட்டுக் கொண்டே இருக்கும். ஒரு தனி இசையாகவேகூட என்னுடைய செவிகளிலே ஒலித்தது. அதுபோன்ற ஒரு இசையைத் திருவள்ளுவர் சிலைக்காக ஒலிக் கிறார்கள் என்கின்ற பேரானந்தமான நினை வுடன் - சிலையைக் காண நான் அடிக்கடி இந்த மாவட்டத்திற்கு வருவேன். இந்தக் கடற்கரையிலே உள்ள விடுதிகளிலே தங்குவேன். அந்த ஓசையைக் கேட்பேன். அந்த ஓசை எழும்போதெல்லாம் திருக்குறளைக் கேட்கின்ற இன்பத்தைப் பெறு வேன் என்று நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்தச் சிலை 133 அடி உயரத்தில் அமைகிறது என்று இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே அடி பீடம் 38 அடி உயரம். அந்த பீடத் திற்கு மேல் வள்ளுவரின் சிலை 95 அடி. இதுகூட ஒரு இலக்கணத்தோடு, ஒரு நயத்தோடு, சிற்ப நயத்தோடு இந்த அடிகளின் கணக்குகள்கூட அமைந்திருக்கின்றன..

பேராசிரியர் இங்கே அழகாகக் குறிப்பிட்டார். நாஞ்சிலார்கூட அதை எடுத்துச் சொன்னார். முப்பாலைப்போல மூன்று கடலும் கூடுகின்ற இந்த இடத்தில் வள்ளுவருக்குச் சிலை அமைகிறது என்று அவர்கள் இங்கே அழகுபட வர்ணித் தார்கள்.

அதைப்போல இந்த 38 அடி எதைக் குறிக்கிறது என்றால்- வள்ளுவருடைய மூன்று பால்களில் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் இவைகளில்- அறத்துப்பால் 38 அதிகாரங்களைக் கொண்டது. எனவே, அறத்தின் அடிப்படையில் தான் பொருளும் இன்பமும் அமைகிறது, என்ப தற்கு ஏற்ப 38 அடி பீடமும், பொருட்பாலும், இன்பத்துப்பாலும் 95 அதிகாரங்கள் கொண்டவை. அதைக் குறிக்கும் விதத்தில் அது திருவள்ளுவர் சிலையாகவும் அமைய இருக்கின்றது.

அது மாத்திரமல்ல; ஏதோ தூரத்தொலைவு களிலிருந்து பார்த்தால் ஒரு பெரிய சிலை என் கின்ற அளவோடு மாத்திரமல்ல; உள்ளே சென்று வர, புறத்திலே மாத்திரமல்ல; அகத்திலேயும் அறி கின்ற அளவிற்கு அந்தச் சிலை ஒரு கூடு வடிவ மாக அமையப்பெற்று, சிலைக்குள்ளேயே மக்கள் சென்று சிலைக்குள் இருந்தவாறே வெளிப்புறங் களையெல்லாம் பார்க்கக்கூடிய அளவில் அமைக் கப்படுகிறது. அதிலும் ஒரு புதுமையாக உச்சிக்குச் சென்ற உடன் அங்கு வெற்றிடம் என்று இல் லாமல் உட்பகுதியிலேயே ஒரு சிறிய வள்ளுவர் சிலை 5 அல்லது 6 அடி உயரத்தில் தரைப்பகுதி யிலே உள்ளே இருந்து பார்ப்பதற்கு ஏற்ற வகை யிலே அமைக்கப்படுகிறது.

இவைகளையெல்லாம் நான் எண்ணிப் பார்க் கிறேன். கற்பனை செய்து பார்க்கிறேன். இந்தக் கற்பனையெல்லாம் இரவிலே கனவாக வர வேண்டும் என்றுகூட நான் விரும்புகிறேன்; வேண்டுகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு சிலையை அமைத்து, தமிழகத்திலே உள்ள 5 கோடி மக்களிலே பாதிப் பேராவது இந்தப் பகுதிக்கு வந்து, கன்னியாகுமரி முனையிலே இருந்து திருநெல்வேலி மாவட்டம், மதுரை மாவட்டம் வரையிலே பெருகி இருக்கின்ற மக்கள் கடல், நேரடியாகச் சிலை திறப்பு விழா வைக் காண முடியாவிட்டாலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலமாகத் தமிழ் மக்கள் அந்தச் சிலை திறப்பு விழாவைக் காணவும்- அந்தச் சிலை திறப்பு விழாவைக் காண உலகம் முழுவதிலுமிருந் தும் தலைவர்களும் உலகம் முழுவதிலுமிருந்து தமிழ்ப் பெருங்குடி மக்களும், வெவ்வேறு இனத்த வரும் வரவேண்டும் என்கின்ற கனவைக் காணு கின்றேன். அந்தக் கனவு பலிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். அது பலிப்பதற்கான வாழ்த்துக் களை உங்களிடமிருந்து நான் வேண்டுகிறேன்.

***-6.10.90 அன்று, கன்னியாகுமரியில், கடலிடையே திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணியைத் துவக்கி வைத்து, ஆற்றிய உரையிலிருந்து.***





## புதிய விடியல்

**டாக்டர் கு.வெ. பாலசுப்பிரமணியன்**

பெரியார்க்குக் கைத்தடிபோல் இருந்து பின்னர்
பீரங்கி போல்வளர்ந்து தமிழி னத்தை
வரிவேங்கைக் குலமாக வளர்த்து விட்ட
வளர்தமிழின் பேரறிஞன்; குற்றா லத்தின்
அருவிக்கோர் மொழிபெயர்ப்பு; கோடி மக்கள்
அசையாமல் அமரவைக்கும் மகுடிக் காரன்;
செருக்கற்ற எளிமையாலே உடன்பி றப்பாய்ச்
செல்வமிகு இளையோரை அணைத்தார் அண்ணா!

காலமெனும் வல்லாளன் காஞ்சி யென்ற
கடும்பற்று மதவாதக் காட்டிற் குள்ளே
தூழநெடுந் தீப்பரவ வைத்த சின்னச்
சுடர்நெருப்புத் துண்டாவார்; அறிஞர்; செம்மல்;
வேழநெடும் படைபோல இளைஞர் தம்மை
முன்நடத்திச் சென்றமகன்; சீர்தி ருத்தப்
பாலமிட்டுப் பழமையாற்றில் மூழ்கி டாமல்
பைந்தமிழர் தமைக் காத்த மன்னன், அண்ணன்!

தென்னாட்டின் போர்முரசம்; இந்தி யென்னும்
தீநாக்குத் தமிழகத்தைத் தீண்டி டாமல்
தன்னாவால் பறைமுழக்கிக் காத்த வேந்தன்;
சந்தமிகு செந்தமிழ்க்குச் சொந்தக் காரன்;
முன்னிருந்த ஆட்சியெனும் பாறாங் கல்லை
முன்வந்து தன்நாக்கு நெம்பு கோலால்
சொன்னபடி புரட்டியவன்; அண்ணா என்னும்
தூரியனே புதுவிடியல் கோல மிட்டான்!

பெரியாரும் அண்ணாவும் இருக்கின் றார்கள்;
பிறந்தார்கள், சாகவில்லை; வரலாற் றேட்டின்
வரிகளிலே எழுத்தெழுத்தாய்க் கலைந்திடாமல்
வாழ்கின்றார்; இல்லையெனில் இந்த மண்ணின்
நெறியெல்லாம் பிறராலே நீங்கி இந்நாள்
நீர்க்குமிழி போல் மறையும் தமிழச் சாதி;
சிறிதேனும் நினைந்திருப்போம் சிலைமுன் நின்றே
சிந்திப்போம் அவ்விருவர் பிறந்த நாளில்!

இரண்டாவது அட்டை சொல்லும் செய்தி

'தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது' வழங்கும் விழா 26.8.'90 அன்று சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கில் மாண்புமிகு கல்வியமைச்சர், பேராசிரியர் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இவ்விழாவில் கலந்துகொண்டு விருதுகளை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு கு.சிவஞானம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. அனந்த கிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் பிறந்த நாளான 26-ஆம் நாளன்று நடைபெற்ற இவ் விழாவில் புலவர் கா. கோவிந்தன் அவர்களுக்கும், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்களுக்கும் 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. பின்னர், புலவர் கா.கோவிந்தன் அவர்களும், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களும் ஏற்புரை வழங்கினார்கள்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருதுகளை வழங்கி, விழாப் பேருரை ஆற்றுகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

# திரு.வி.க. விருது வழங்கும் விழா

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களுடைய நினைவு போற்றுகின்ற இந்த விழா நிகழ்ச்சியில் தமிழக அரசின் சார்பாக இரு அறிஞர் - பெரு மக்களுக்கு விருது வழங்குகின்ற பேறு பெற்றமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது பெறும் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் புலவர் கோவிந்தனார் அவர்கள் பிறந்ததும் 1916. இருவருமே ௮6.

அத்தகைய இரண்டு தமிழ்ப் பெருமக்களுக்கு விருது வழங்குகிற - நிகழ்ச்சியிலே தலைமை வகிப்பதில் பேராசிரியர் பெருமை கொள்கிறார்; விருதுகளை வழங்கியதில் நான் பெருமை கொள்கிறேன். அவர்களெல்லாம் தமிழை நன்கு அறிந்தவர்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் தமிழை அறிந்தவர்களை அறிந்தவன். அதனால் தான் அவர்களுக்கு விருது வழங்குவதிலே நான் பெருமை கொள்கிறேன். அதை ஒரு பெரும் பேறாகக் கருதுகிறேன்.

புலவர் அவர்கள் இந்த இயக்கத்தில்-திராவிட இயக்கத்தில் தந்தை பெரியார் அவர்களுடைய காலத்திலேயே தன்னை இணைத்துக் கொண்டவர். தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அன்புத் தம்பியாகவும் எங்களுக்கெல்லாம் உற்ற துணையாகவும் இருந்து இந்த இயக்கம் சோதனைகளையும் வேதனைகளையும் சந்திக்கின்ற காலகட்டத்திலும் தமிழ்நாட்டு மக்களை ஒளிமிகுந்த எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும் என்கின்ற பணியில் கைகோத்து நிற்பவர்.

திருவத்திபுரத்திலே செய்யாறில் அவர் பல ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து நடத்தி வருகின்ற பொங்கல் விழா அழைப்பிதழை இங்கே காட்டி அந்த விழாவிற்கு என்னையும் பல முறை அழைத்திருப்பதைக் குறிப்பிட்டார். அவர் என்னை அந்த விழாக்களுக்கு அழைத்த நேரத்தில், இப்படி கொக்குப்போல் நரைத்த தலை அவருக்கு இல்லை. நானும் இப்படி இல்லை. அந்த அளவிற்கு இளமைத் தோற்றத்தோடு 1947-48-49-ஆம் ஆண்டுகளில் அவர் தமிழர் திருநாளைத் திருவத்திபுரத்தில் கொண்டாடியது மாத்திரம் அல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை 'திராவிட நாடு' இதழின் முதல் பக்கத்தில் புலவர் அவர்களைப் பற்றியும் திருவத்திபுரம் திராவிட இயக்கத் தோழர்களைப் பற்றியும் பெருமையோடு கட்டுரை தீட்டுகின்ற அளவிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய ''இரணியன் அல்லது இணையற்ற வீரன்'' என்ற நாடகத்தைத் தடையை மீறி நடத்துவதற்கும் காரணமாக இருந்தவர்.

இப்படி தடை பல கடந்து தமிழ்ச் சமுதாயம் தன்மானத்தோடு வீறுகொண்டு விளங்கிட வேண்டும். நெஞ்சை நிமிர்த்தியே வாழ வேண்டும் என்று மனதிலே உறுதி படைத்தவராக அந்த வட்டாரத்திலே உலவிக் கொண்டிருப்பவர் புலவர்.

இங்கே வரவேற்புரை ஆற்றிய சிவஞானம் புலவரைப்பற்றிக் குறிப்பிடும்போது, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் என்று சொன்னார். இந்த 'முன்னாள்' என்ற சொல்லை இனிமேலாவது தமிழ் அறிஞர் பெருமக்கள்கூட தகுதியான இடத்தில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாள் சட்ட மேலவை என்று சொன்னால் பொருந்தும். ஏனென்றால் இப்போது சட்ட மேலவை இல்லை. சட்டப் பேரவை - இருக்கும் போதே முன்னாள் சட்டப்பேரவை என்று சொல்வது மரபல்ல. சட்டப்பேரவையின் முன்னாள் தலைவர் என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

புலவருடைய தமிழ் அறிவு எவ்வளவு விரிவானது, எப்படிப் பரந்து கிடப்பது - வான்போல, கடல்போல என்பதையெல்லாம் நான் விளக்கி நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. அவருக்கு எத்தகைய புகழ் தமிழால் - தமிழ் உரிமைகளுக்காக நடத்துகின்ற போராட்டத்தால் கிடைத்திருக்கிறதோ, அதைப் போலவே வேறு முனையில் தமிழைக் காப்பாற்றவும், தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவும் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பெருந்தகைதான், தமிழ்ப் பேரறிஞர் தான் அ.ச.ஞானசம்பந்தனார் அவர்கள்.

அவருக்கு நினைவு இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது- 1950 அல்லது 51-ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். வடசென்னையில் ஒரு பள்ளி நிகழ்ச்சியிலே அவ்வை டி.கே.சண்முகம் தலைமையில் நானும் அ.ச.ஞானசம்பந்தமும் பேசினோம். ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பேசினோம். அப்போது அவர் என்பால் கொண்டிருந்த அன்புக்கு மாறுபாடு இல்லை; நான் அவர்பால் கொண்டிருந்த அன்புக்கு மாறுபாடு இல்லை. கருத்துக்களிலே அன்றைக்கு மாறுபாடு இருந்தது.

அவ்வை டி.கே.சண்முகம் தலைமை ஏற்றிருந்த காரணத்தால் இருவரும் எடுத்துச் சொன்ன கருத்துகளுக்குச் சமரசமான ஒரு முடிவை அந்த விழா நிகழ்ச்சியிலே அவர் தெரிவித்தார். அவரை நான் அடிக்கடி சந்திக்கின்ற வாய்ப்பு கிட்டாதுபோயினும்; அவருடைய நூல்கள் வாயிலாக அவரைப் பார்த்துக்கொண்டிருப்பவன் நான். அவருடைய எழுத்துக்கள் வாயிலாக அவரைச் சந்தித்துக் கொண்டிருப்பவன் நான்.

அவர் இன்றைக்கு ஆற்றுகின்ற பெரும்பணி திரு.வி.க. அவர்களின் வேதனையைப் போக்குகின்ற பணி என்று சொன்னால் அது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு.வி.க. தமிழைப் பற்றியும், தமிழர்களைப் பற்றியும் சொன்ன ஒரு கருத்து - ''தமிழினைப் போல் உயர்ந்தமொழி தரணியில் வேறு எங்குமில்லை, தமிழனைப் போல் மொழிக் கொலையில் தலைசிறந்தோர் எவர் உளரே?'' இது திரு.வி.க.வின் வேதனை. அந்தக் கொலையைத் தடுக்கின்ற முயற்சியிலே வெற்றிபெற்று மேலும் வெற்றிகளைப் பெறத் துடித்துக் கொண்டிருப்பவர் தமிழ்ப் பேரறிஞராக விளங்குகின்ற அ.ச.ஞானசம்பந்தம் ஆவார்.

இந்த இருவருக்கும் திரு.வி.க.வின் பெயரால் விருது வழங்குவது என்பது மிகப் பொருத்தம். இதைவிடப் பொருத்தமாக வேறு இருவர், இந்த நாளில் இந்த விருதினைப் பெறக் கிடைத்திலர் என்பதுதான் என்னுடைய முடிந்த முடிவாக இந்த அவையிலே நான் வெளியிட விரும்புகின்ற கருத்தாகும்.

எனவே திரு.வி.க. தொடங்கிய அந்தப் புதிய வரலாறு தமிழால் எழுதமுடியும்; தமிழாலும், தமிழைப் பயன்படுத்தியும் செய்திகளை வெளியிடலாம் என்று தொடங்கிய அந்தப் புரட்சிதான் இன்றளவும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

ஆனால் இப்போது அந்தத் தமிழ்ப் புரட்சியை மாய்த்திடலாம் என்ற எண்ணத்தோடு சில ஏடுகளில் வெளிவரும் தமிழ்க் கதைகள்-கட்டுரைகள் இவைகளை நான் படிக்கிறேன். அவற்றில் தமிழைத் தேடுகிறேன், தேடுகிறேன், தேடிக் கொண்டேயிருக்கிறேன்.

ஒரு கதையில் எழுதியிருக்கிறார்கள்:

''சர்மிளா திடீரென்று அந்த ரூமுக்குள் எண்டர் பண்ணியது எல்லோருக்கும் திரில்லாக இருந்தது. அவள் ஃபிளவர் டிசைன் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நைலான் சாரியுடன் ''குட்மார்னிங்'' என்று கூறிக்கொண்டே கையில் இருந்த ஹேண்ட் பாக்கிலிருந்து ஒரு புளு 'கலர் கர்சீப்பை எடுத்தாள். வாட் ஏ வொண்டர்! அந்தக் கர்ச்சீப் ரத்தக்கறை படிந்திருந்தது. சர்மிளாவின் ஃபேஸ் அதைவிட ரெட்டிஷாக இருந்தது. ரூமிலிருந்த ஸ்டூடன்ட்ஸ் ஸ்டன்னாகி நின்றனர்!''

இப்படி ஒரு கதையிலே படித்தேன்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது? தமிழ் 'எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

வயதானாலும் வாட்களாக இருந்து, பேராசிரியர் அ.ச.ஞா. அவர்களே, புலவர் கோவிந்தனார் அவர்களே! அந்தத் தமிழ்க்கொலையைத் தடுத்திட எங்களுக்குத் துணை நில்லுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

-இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

## வேலை வாய்ப்புத் தரும் பொம்மைத் தொழில்





காஞ்சிபுரம், மீஞ்சூர், சென்னை கொசப்பேட்டை, கடலூர் ஆகிய இடங்களிலிருந்து பொம்மைகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வருகின்றன. இது தவிர, பாண்டிச்சேரி, ஆந்திர மாநிலத்திலுள்ள கொண்டப்பள்ளி, சென்னப் பட்னா மற்றும் கர்நாடகா, மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், கேரள மாநிலங்களிலும் வண்ணமிகு பொம்மைகள் தயாரிக்கப்படுகின்றன.

இதன் மூலம் ஏராளமான கிராமப்புறக் கைவினைஞர்கள் வேலைவாய்ப்பும் பெறுகிறார்கள். வீட்டுக்கு ஒரு பொம்மை வாங்குவதன் மூலம், ஏழைத் தொழிலாளி ஒருவருக்கு வாழ்வு தருகிறோம் என்பதை எண்ணி நாம் மகிழலாம்.

மண், காகிதம், மரம், துணி, உலோகம் முதலானவற்றாலான கண்ணைக் கவரும் வண்ண பொம்மைகள் அண்மையில் காதி கிராமோத்யோக் பவனில் நடந்த பொம்மைக் கொலுவில் இருந்தன.



# அண்ணா ஒரு மாலைமணி

## எஸ்.எஸ்.தென்னரசு எம்.எல்.ஏ.

சர்க்கரைப் பொங்கல் திகட்டக் கூடியது என்பது உலகம் கண்ட உண்மையே. ஆனால் அதனினும் இனிய, அண்ணாவின் தமிழ் யாருக்கும் திகட்டுவதில்லை என்பதுதான் ஆச்சரியம்! புலவர்கள் கையாளும் கடுந்தமிழைக்கூட அண்ணா பொது மேடைகளில் இனிதாகப் பயன்படுத்தி மகத்தான வெற்றியை ஈட்டியிருக்கிறார். பன்னெடுங் காலமாக, தமிழ் இலக்கியங்களிலும், அதன் பதவுரைகளிலும் முடங்கிக் கிடந்த அரிய தமிழ்ச் சொற்களைப் பொது மக்கள் மத்தியில் புழக்கத்திற்குக் கொண்டுவந்த பெருந்தகையாளர் அறிஞர் அண்ணா அவர்கள்தான்.

அண்ணாவின் மேடைப்பேச்சுகள் இலக்கியங்களுக்கு இணையானவை! அண்ணாவின் எழுத்துக்களைவிட, அண்ணாவின் பேச்சுகளே ஏழை, எளிய மக்களிடையே அதிக அளவிற்குக் கிளர்ச்சியை உண்டு பண்ணியிருக்கின்றன. 'ஞாயிற்றுக்கிழமை அண்ணா பேசுகிறார்-' 'சனிக்கிழமை அண்ணா வருகிறார்'- என்ற சொற்றொடர்கள் தொடர்பு கொண்ட பகுதிகளில் ஆலயங்களின் 'காப்புக் கட்டுக்கள்' போல மூச்சுக்கு முப்பது தடவைகள் பேசப்படுவதுண்டு! அறிஞர் அண்ணா ஒரு இயக்கத்தின் தந்தை என்றாலும், அவரது மேடைப்பேச்சு ஒரு இனமக்களுக்கு வேத வாக்காகவே இருந்தது!

அண்ணா, எதற்கும் தனக்குள்ளேயே ஒரு இலக்கணம் வகுத்துக் கொள்ளும் பழக்கம் கொண்டவர். பொது மேடைக்கு அவர் புறப்படுவதிலிருந்து நிகழ்ச்சி முடிகிறவரை அண்ணாவிற்கென்று சில சிறப்புக்கள் உண்டு!



நீண்டநேரம் பகலில் தூங்கி விட்டு அண்ணா ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டால் அன்று அவர் உரை மிகச் சிறப்பாகவும், தனிச்சுவையுடனும் அமையும் என்ற நம்பிக்கை, அண்ணாவை' விட, அவரைச்சுற்றியிருக்கும் அவரது தலைமுறையாளருக்கு மிகுதியாக இருக்கும்! இதுபற்றி அண்ணாவிடம் கேட்ட போது ''அது முழுவதும் உண்மை அல்ல; ஓரளவு உண்மை!'' என்று கூறியுள்ளார்.

அறிஞர் அண்ணா, பொதுக் கூட்டங்களுக்குத் தாமதமாகத்தான் வந்து சேருவார். அதற்கு அவர் கூறும் காரணம்- ''நான் கடைசியாகத்தானே பேசுகிறேன். பின் எதற்காக முன்கூட்டியே வந்து உட்கார்ந்திருக்க வேண்டும்''- என்பதுதான். உண்மை இதுவாக இருக்க, விமர்சகர்களோ, அண்ணா தாமதமாக வருவதை அவரது குணம் என்று கற்பித்துக்காட்டி வந்தார்கள்.

எவ்வளவு நேரமும் சுவை குன்றாமல் பேசும் பேரறிவு பெற்றவர் அறிஞர் அண்ணா. ஆனால் அவர் நெடுநேரம் பேசுவதில்லை. அதுவும் மிகப்பெரிய கூட்டங்களில் பேச்சைச் சுருக்கிக்கொள்ளும் பழக்கத்தை அவர் மறந்தும் கைவிட்டதில்லை. அறிந்தவைகளையெல்லாம் பேசி விடுவது அவருக்குப் பிடிக்காத



ஒன்று. அதேபோது, பேச வேண்டியதைப் பேசாமல் விடுவதையும் அவர் விரும்புவதில்லை. சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லுவதையே அவர் பெரிதும் விரும்புவார்.



அண்ணா, அவர் கலந்துகொள்ளும் கூட்டங்களில் பேசத்தெரிந்தவர்கள் எத்தனை பேர் மேடையில் இருந்தாலும் அவர்கள் அனைவரையும் பேசவைப்பார். எவரது மனக் குறைக்கும் அவர் ஆளாக மாட்டார். எத்தனை பேர் பேசினாலும், அத்தனை பேரும் சொல்லாத புதிய கருத்தை அன்றைய கூட்டத்தில் அண்ணா வெளியிடுவார். அதுவே அவருக்குள்ள தனி மகத்துவம்!

அறிஞர் அண்ணா, அவர்களின் சொற்பொழிவுகளில் உபகதைகள், உவமானங்கள் இடம் பெறாமல் இருக்காது. இளைஞர்களுக்குச் சொல்லும் போது காதல் கதைகளையே உதாரணங்களாகக் கூறுவார். தாய்மார்களுக்குச் சொல்லும் போது, குழந்தைகளைப் பற்றியே அவரது உவமானங்கள் சுற்றிச்சுற்றி வரும். தன்னுடைய இயக்கத்தின் பொறுமையைப்பற்றிச் சொல்ல நேர்ந்தால் அதை ஒரு தாயாகவே வர்ணிப்பார். அவசியப்பட்டால் இயக்கத்தைப் பருவமங்கையாக எடுத்துக்கொண்டு அதற்கு வரும் விபத்துக்களை விளக்குவார். விளக்க வேண்டும் என்று விரும்பிய கருத்தை வந்திருப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்கு அவர் எடுத்துக் கொண்ட உதாரணங்களே பேருதவி புரிந்திருக்கின்றன. அவரது வாழ்நாளில், மக்களுக்கு அவர் புகுத்த வேண்டுமென்று ஆசைப்பட்ட கருத்துக்களைப் புகுத்தத் தோற்றதில்லை. தானே உருவாக்கும் கொள்கையானாலும், முதலில் அதை நன்றாகத் தெளிந்து உணர்ந்த பின்னரே அதன் மீது நம்பிக்கை வைப்பார். அண்ணா நம்பிக்கை கொண்ட பின்னர்தான் அந்தக் கொள்கையைப் பொது மக்களுக்குப் போதனை புரிவார். போதனை புரியத் தொடங்கிவிட்டால் அதனைப் பொதுமக்கள் புரிந்து கொள்ளும்வரை ஒவ்வொரு நாளும் புதிய புதிய கதைகள் மூலம் விளக்கிக் கொண்டிருப்பார். அப்போது மக்கள் அதைப் பின்பற்றவில்லையென்றால் கூட அண்ணா பின்வாங்கிவிடமாட்டார். ''மக்களுக்குப் புரியும் வகையில் எனக்குத்தான் சொல்லத் தெரியவில்லை; அது என் குறையே தவிர கொள்கைகளின் குறையல்ல'' என்று தன்னடக்கத்தோடு கூறுவாரே தவிர, கொள்கைகளை விட்டுவிட மாட்டார்.

அறிஞர் அண்ணாவின் பேச்சுக்கு உதாரணம் சொல்லவேண்டுமானால் இமயமலையைத்தான் சொல்ல முடியும்; இமயம் உயரத்தில் பெரியது என்பதற்காக 'மட்டுமல்ல; இமயமலைக்கு இன்னொரு தனிச்சிறப்பு உண்டு. இமயத்தின் உயரத்தில் ஒவ்வொரு ஆயிரம் அடிக்கும் அதன் இதமும் பதமும் மாறுபடுகிறது. அடிவாரத்தில் தானியங்கள் விளைகின்றன. கொஞ்சம் உயரப்போனால் செடி கொடிகள்; அதற்கு மேலே போனால் ஊசியிலை மரங்கள்; சிகரத்தில் பனிக்காடு! அண்ணாவின் மேடைப்பேச்சும் அதுபோன்றதே. தாழ்வாரத்தில் பாமர மக்களுக்குரிய சாதாரணப்பேச்சு, அடுத்து கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான தத்துவ விளக்கம்; மூன்றாவதாக, அரசியல் ஆக்க மன்றங்களில் அறிவுரை; இறுதியாக இலக்கியத்திறனாய்வு! ஒரே இமயமலையின் மடியில் பல்தரப்பட்ட வளங்கள் இருப்பதுபோலவே அண்ணாவின் அறிவுள்ளத்தில் விதவிதமான சிந்தனைகள் விளைந்திருக்கின்றன.

அறிஞர் அண்ணா தனது மேடைப் பேச்சு ஒரு நாளும் தோல்வியடையாது என்று திடமாக நம்புகின்றவர். காரணம், தான் பேசவேண்டியதை, தேர்ந்து எடுத்துத்தான் பேசுவதாகக் குறிப்பிடுகிறார்.

ஒரு முறை, அறிஞர் அண்ணா அவரது தலைமுறையினரோடு பேசிக் கொண்டிருக்கும்போது ''உன் பேச்சு ஊஞ்சல் மாதிரி! இங்கும் அங்கும் போய்வரும்'',

''உன் பேச்சு ராட்டினம் மாதிரி; ஒன்றையொன்று தொடாது''.

''உன்பேச்சு கிலுகிலுப்பை மாதிரி, அழுகின்ற குழந்தையைக் கூடச் சிரிக்க வைத்துவிடும்''- என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்போது அண்ணாவின் அன்புக்குரிய ஒரு தம்பி அண்ணாவிடம் ''உங்கள் பேச்சு எது மாதிரி'' என்று கேட்டார்.

''என் பேச்சு, மணிகளை எடுத்து மாலையாகத் தொடுப்பது மாதிரி'' என்று கூறினார். அதுதான் நூற்றுக்கு நூறு உண்மை.

பேரறிஞர் அண்ணா, பட்டம் பெற்றது பொருளாதாரத்துறையில்; ஆனால் அவர் பட்டம் பெறாமலே மொழிப்புலமையிலும் வல்லுநராகவும் திகழ்ந்தார். அண்ணாவிடம் உள்ள மொழிப்புலமையில் தமிழ் மிஞ்சியதா? ஆங்கிலம் மிஞ்சியதா? என்று இன்றுவரை எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்

அறிவியக்கத்தின் குழுக்கூட் ...ளில் கூட, பேசுவதற்கு முன் ...லத்தில்தான் அண்ணா குறிப் ...ளைத் தயார் செய்வார். அவர் ...ற்பொழிவு, பாடத்திட்டங் ...ளப்போல முறைப்படி அமைந் ...கும். முன்னாடி சொல்ல ...டியதைப் பின்னாடியோ, ...வுரையில் கூறவேண்டியதைத் ...டக்கத்திலோ அள்ளித் தெளித்து ...போதும் அவையோரை அண்ணா ...ஞ்சுளிக்கச் செய்ததில்லை.

...திகாசங்களில் அவருக்கு மிகவும் ...தமானது இராமாயணம்தான்! ... புரிவதற்காக மட்டுமின்றி, ... ஒரு ராஜ குடும்பத்தின் கதை ...தற்காகவும் அண்ணா அதை ... விரும்பிப்படித்தார், என்று ... நெருங்கிய நண்பர்கள் கூறு ...ர்கள். மேடைகளில் உதார ...ள் கூட இராமாயணத்தில் ...ந்துதான் அண்ணா அதிகமாகக் ...யிருக்கிறார். பாரதத்தில் தான் ...ழ்ச்சிகள் அதிகம் என்றாலும் ...ண்ணா பாரதத்தை அரிதாகத் ...ன் பயன்படுத்தினார்.

## உண்மையான சோசலிசம்

**ஒரு சிலரின் வாழ்க்கை வளமாகவும் - பலருடைய கண்கள் குளமாகவும் இருக்கின்ற சமுதாய நிலை மாறவேண்டும் - அதுதான் உண்மையான சோசலிசம்.**

**முதல்வர் கலைஞர்**

அண்ணாவின் மேடைப்பேச்சு, பாட்டுக்கச்சேரி போன்று, திட்டமிட்டுத் தயாரிக்கப்படுவதலல. மேடைக்கு வந்தபிறகு அமைவது தான் அவர் சொற்பொழிவு. அறிஞர் அண்ணா, எல்லோரையும் கவரும் மணமகனைப் போல் மேடையில் அரசோச்சி, ஈடில்லாப் புகழ் பெற்றதற்கு அவரது வெற்றிக்குரல் ஒரு காரணம்; 'பேரறிஞர் அண்ணாவைப்போன்ற ஒரு மணிமொழியாரை- அறிவாற்றல்மிக்க கனிமொழியாரை இந்திய நாட்டின் பொது மேடை இனிமேல் கண்டு மகிழுமா? என்பதற்குக் காலம் தான் விடையளிக்க வேண்டும்' என்று அண்ணா மறைந்தபோது அறிவாளர்கள் பலர் ஏங்கினார்கள். ஆனால் அந்தக்குறையைத் தமிழக முதல்வர் கலைஞர் இன்று நிறைவு செய்துவிட்டார்.

பேச்சாற்றல், எழுத்தாற்றல், உவமைகளைக் கையாளுதல், கொள்கை விளக்கம் அளிப்பதில் பின்பற்றும் லாவகம்- எல்லாவற்றிலுமே இன்று அண்ணாவின் ஆற்றல் அனைத்தையும் சுவீகரித்து ஒளி பெற்று விளங்குவது முதல்வர் கலைஞர் தான் என்பது நாடறிந்த உண்மை! அண்ணா இல்லாத குறையை நிவர்த்திக்கும் கலைஞரை, அண்ணா நினைவு நாளில் நினைத்து வாழ்த்தி மகிழ்வது தான் தமிழரின் கடமை!



சென்னை டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் தொகுதியைச் சேர்ந்த செரியன் நகரில் சுவர் இடிந்து விழுந்து உயிர் துறந்த 3 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.5,000, காயமடைந்த 6 பேர்களுக்கு தலா ரூ.500 நிவாரண நிதியை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் வழங்கினார்கள். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ஷீலாராணி சுங்கத் இ.ஆ.ப. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.பி.சற்குணம் உடன் உள்ளனர்.

# ஈரோட்டண்ணல்

## பாவலர் நாரா.நாச்சியப்பன்

பெரியார்தம் சொற்பொழிவைக்
கேட்டவர்கள் வெறுப்பகற்றிப்
பெரியார் கொள்கைக்

குரியாராய் மாறுவதன்
விந்தையிதன் உட்பொருளைச்
சொல்வேன்; கல்வி

தெரியாத மக்களையும்
வசப்படுத்தும் முறைமைதனில்
திறமை யாக

உரைபகர்வார்; தன்னுளத்துப்
பட்டதெலாம் ஒளியாமல்
உரைப்பார் கண்டீர்!

காற்றடிக்கும் புயல்வீசும்;
இடையின்றி மழைபொழியும்;
கருத்து வெள்ளம்

போற்பெருகும்; அருவியென
ஓடிவரும்; மணிக்கணக்காய்ப்
பொழியும்! பேச்சில்

ஆர்த்திருக்கும் நாட்டிலுள்ள
வகைப்பட்ட பழமொழிகள்
அத்தனையும்

சோற்றினுக்குக் காய்கின்ற
ஏழைகட்குச் செயல்காட்டிச்
சோர் வகற்றும்!

உவமைகளோ குவிந்திருக்கும்;
சுவைப்பேச்சுப் பேசுங்கால்
ஒன்றோ டொன்றாய்த்

தவழ்ந்துவரும் கேள்விகட்குப்
பதில்சொல்லத் தெரியாமல்
தவித்த பேர்கள்

இவர்கட்சித் தொண்டர்களாய்
இன்றிருக்கும் நிலையொன்றே
ஈரோட் டண்ணல்

இவர்பேச்சின் திறம்விளக்கப்
போதுமெனக் கூறிடுவேன்;
எழுச்சி கொள்வேன்!

சொற்பொழிவு மேடையிலே
ஏறியதும் நான்சொல்லும்
சொற்கள் தம்மில்

நெற்பயிரை அறுத்துவந்தே
உமி, அரிசி, தவிடிதென
நிலை பிரித்து

வைப்பதுபோல் தனித்தனியே
ஆராய்ந்து பார்த்ததன்பின்
வளர் கருத்திற்

கொப்புவன ஏற்றிடுக!
ஒவ்வாதேல் தள்ளுகென
உரைப்பார் ஐயா!

கருத்துக்குத் தடையிட்டு
வைத்திருந்த மதத்தலைவர்
சுயமை மாற்றிக்

கருத்துவெளிப் பட்டால்தான்
மற்றவரும் சிந்தித்துக்
காரி யத்தில்

திருத்தமுற உழைத்திடலாம்!
இல்லையெனில் முன்னேறக்
கருதிச் செல்லும்

கருத்துடையார் தடைப்படுவர்;
எனச்சொல்லி நமைக்கவர்ந்த
பெரியார் வாழ்க!



# நெஞ்சம் மறக்குமோ?

**- ரோஜா பாலு**

பேரறிஞர் அண்ணா அவர்களின் மனித நேயம் பலராலும் பாராட்டப் பெற்றது. அண்ணா தனது தம்பிகளையும் நேசித்தார். பொதுமக்களையும் நேசித்தார். இவ்வளவு ஏன், பகைவர்களையும் நேசித்தார். அவரது வெற்றிகரமான வாழ்க்கைக்கு இந்த அரும் பண்பு தான் அடித்தளம். அண்ணா பிறரை நேசித்தது போல அண்ணாவை மற்றவர்களும் மிகமிக நேசித்தார்கள். அண்ணாவிடம் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் கூட, அண்ணாவுக்கு எதிரே நின்று தனது கருத்துக்களைக் கூறியதில்லை. தனி மேடை போட்டு அவர்களால் தனி ஆவர்த்தனம் தான் செய்ய முடிந்தது.



அண்ணா ஆறறிவு பெற்ற மனிதர்களை மட்டுமல்ல, ஐந்தறிவு பெற்ற விலங்குகளையும் நேசித்தார். அந்த விலங்குகளும் அண்ணாவை மிக நேசித்திருக்கின்றன.

''வாலைக் குழைத்து வரும்
நாய்தான்-அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா''-

என்று பாரதியார், பாப்பாவுக்குச் சொன்ன அறிவுரையை எந்தப் பாப்பா கடைப்பிடித்ததோ நமக்குத் தெரியாது, அண்ணா அந்த வாசகத்திற்கு வடிவமாகத் திகழ்ந்தார்.

அண்ணா பொமரேனியன் இனத்தைச் சேர்ந்த நாய் ஒன்றை அன்புடன் வளர்த்து வந்தார். அதற்கு சங்கர் என்று பெயர் சூட்டியிருந்தார். அந்த நாயைக் கையில் எடுத்து அணைத்துக் கொள்வதிலும், அதனை முத்தமிடுவதிலும் அண்ணாவுக்கு அளவற்ற ஆர்வம் உண்டு.

1962-ஆம் ஆண்டு வாக்கில், அண்ணா அவர்கள் விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பத்து வாரச் சிறை தண்டனை விதிக்கப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் வளர்த்த அந்த நாய் அண்ணாவைப் பல நாட்களாக வீட்டில் காணாததால் தவியாய்த் தவித்தது. அதனுடைய தவிப்பை அண்ணாவின் இல்லத்தவர்களும் உணர்ந்தார்கள். இந்தத் தகவலை அண்ணாவிடம் சொன்னால், அவர் மனம் நோவார் என்பதால் அவர்கள் தெரிவிக்கவில்லை. ஆனால் அண்ணாவின் நண்பரான கே.டி.எஸ்.மணி அவர்களால் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. அந்தத் தகவலை அறிந்த அண்ணா, அடுத்த முறை தன்னைப் பார்க்க வரும்போது தான் அன்புடன் வளர்த்து வரும் 'சங்கரையும்' அழைத்து வரும்படி கூறினார்.

அதன்பின்னர், அண்ணாவை அவரது இல்லத்தார் ஒருமுறை சந்திக்கச் சென்றபோது சங்கரையும் அழைத்துச் சென்றனர். சிறை அதிகாரிகள் நாயை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டனர். அதனால் ஒரு ஜன்னல் கதவைத் திறக்கச் சொல்லி அதன் வழியாக சங்கரை அண்ணாவிடம் காண்பித்தார்கள். அதைப் பார்த்த அண்ணா மனம் உருகினார். அண்ணாவைப் பார்த்த 'சங்கர்' அவரிடம் தாவி ஓடியது. ஜன்னலின் வழியாகவே தலையையும் கால்களையும் நீட்டி, அண்ணாவை தொட்டுத் தொட்டு ஆறுதல் பெற்றது. அண்ணா அதன் செய்கையைக் கண்டு கண்கலங்கினார். சில விநாடிகள் கழிந்தன. சந்திப்புக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்தது. அண்ணாவும் சங்கரும் பிரிக்கப்பட்டார்கள். கலக்கத்துடன் பிரிந்த சங்கர், கவலையில் மூழ்கியது. தனது கவலையை அடுத்தவர்களிடம் தெரிவிக்க அதற்கு வாய் இல்லாததால் கண்ணீர் வடித்தது. அண்ணாவைப் பிரிந்திருக்கும் நிலையை எண்ணி எண்ணி அது கொஞ்சம் கொஞ்சமாக மெலிந்தது. சில நாட்களில் உயிரையே விட்டு விட்டது. செய்தி அறிந்த அண்ணாவும் கண்கலங்கினார்.

ஐந்தறிவு உயிருக்குக் கூட அண்ணாவிடம் அளவற்ற பற்றுதல் இருந்து வந்ததையும் விலங்குகளிடத்திலும் பேரன்பு செலுத்திய மாமனிதர் அண்ணா என்பதையும் இந்த நிகழ்ச்சி நமக்கு எடுத்துரைக்கிறது.

அண்ணா அவர்கள் தனது வீட்டில், மான் ஒன்றை மிகுந்த பிரியத்துடன் வளர்த்துவந்தார். வெளியூர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளுகின்ற காலத்தில், சுற்றுப் பயணத்தை முடித்து, வீட்டுக்குத் திரும்பியவுடன் முதல் முதலாக மானின் இருப்பிடம் சென்று அதனைப் பார்ப்பதும் அதனை ஆசையோடு தடவிக் கொடுப்பதும் அண்ணாவின் வாடிக்கை நிகழ்ச்சி.

ஒருமுறை அண்ணாவைக் காண்பதற்காகப் படத்தயாரிப்பாளர் ஒருவர் வந்திருந்தார். அவர் அண்ணாவை நெருங்குவதைப் பார்த்த மான், தனது கூர்மையான கொம்பினால் அந்தத் தயாரிப்பாளரின் தொடையில் குத்திவிட்டது. இரத்தம் பெருக்கெடுத்தது. அண்ணா உட்பட அங்கிருந்த அனைவரும் திகைப்படைந்தனர். சூழ்நிலையையும் தனது தவறையும் உணர்ந்துவிட்ட மான், உடனே பதறியபடி அண்ணாவின் காலடியில் சென்று விழுந்தது.

தன்னால் குத்தப்பட்ட மனிதர் ஒரு வேளை தன்னைத் தாக்கக்கூடும் - அடுத்தவர்கள் நம்மைத் தாக்கக் கூடும் - அதனால் நாம் அண்ணாவின் காலடியில் சென்று தஞ்சம் அடைவதுதான் நல்லது; அவர் கண்டிப்பாக அபயம் தருவார் என்று மான் எண்ணி, அவரிடம் சென்று சரணாகதி அடைந்தது போலவே இருந்தது, அந்தக் காட்சி. ஐந்தறிவு படைத்த மானுக்குக் கூட அண்ணாவின் இளகிய உள்ளம், இரக்கக் குணம் தெரிந்திருந்தது.

மானின் இந்த அபூர்வச் செயலைக் கண்ணால் பார்த்த அந்தப் படத்தயாரிப்பாளர் - தனக்கு ஏற்பட்ட காயத்தையும், வலியையும் மறந்து, மானின் செயலை எண்ணி நெகிழ்ந்து போனார்.

ஆண்டுதோறும் பொங்கல் திருநாளின் போது காஞ்சியிலுள்ள தனது வீட்டில், குடும்பத்தவர் அனைவருடனும் அமர்ந்து பொங்கல் உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் அண்ணா. எந்தச் சூழ்நிலையிலும் பொங்கலன்று குடும்பத்தவருடன் சேர்ந்தமர்ந்து உண்ணும் அரிய நிகழ்ச்சியை அண்ணா தவறவிடுவதில்லை.



> ஒரு மனிதன் தன்னிடத்தில் மற்றவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறானோ, எதிர்பாக்கிறானோ அப்படியே இவன் மற்றவர்களிடமும் நடந்து கொள்ளுவதுதான் ஒழுக்கமாகும்.
>
> — தந்தை பெரியார்

1968-ஆம் ஆண்டு இறுதியில் அண்ணா சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று திரும்பினார். சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றிருந்த போதும், அண்ணா மிகவும் மெலிவாகவே காணப்பட்டார். குளிர் சாதன வசதி செய்யப்பட்ட காரில் பயணம் செய்ய வேண்டும் என்றெல்லாம் அமெரிக்க மருத்துவர்கள் ஆலோசனை தெரிவித்திருந்தனர். அதை எல்லாம் புறக்கணித்தார் அண்ணா. பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றார். காஞ்சி பொங்கல் மலருக்கு வரிந்து வரிந்து கட்டுரைகள் - கடிதங்கள் தீட்டினார்.

1969-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் நாள் பொங்கல் திருநாள் வந்தது. அண்ணா வழக்கம் போல் தமது குடும்பத்தவர் அனைவருடனும் அளவளாவியபடி பொங்கல் விழாவினைக் கொண்டாடுவதற்காக சென்னையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு வந்திருந்தார். வழக்கம்போல் தாயார், துணைவியார், வளர்ப்பு மக்கள், மருமகள்கள் அனைவருடனும் அமர்ந்து அளவளாவினார்.

சாப்பாட்டு நேரம் வந்தது. அனைவரும் அமர்ந்து உண்பதற்குத் தயாராயினர். இலைகள் போடப்பட்டன. அண்ணா இலையின் முன் வந்து அமர்வார் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர் ஒரு நாற்காலியில் அமர்ந்தவாறே, ''என்னால் சாப்பிட முடியாது! சர்க்கரைப் பொங்கலை நன்றாகக் கரைத்து ஒரு தம்ளரில் கொடுங்கள்'' என்று கூறினார்.

அண்ணாவின் தாயாரும் மற்றவர்களும் இந்த வார்த்தையைக் கேட்டு வியப்படைந்தார்கள்.

''பொங்கலைக் கரைத்துக் குடிப்பதா? இது என்ன புது வழக்கம்'' என்று அண்ணாவின் தாயார் கேட்க, ''கட்டியாக இருந்தால் என்னால் அதை விழுங்க முடியாது'' என்று அண்ணா பதிலளிக்க, அந்தப் பதிலைக் கேட்டு அனைவரும் கலங்கினர்.

சில விநாடிகளில் சர்க்கரைப் பொங்கலை பாயசம்போல் கரைத்து ஒரு தம்ளரில் ஊற்றி அண்ணாவிடம் வழங்கினார்கள்.

அதனை வாங்கிய அண்ணா ஆர்வத்துடன் வாயிலே ஊற்றினார்; ஆனால் அதை விழுங்க முடியாமல் திணறினார். மிகுந்த தொல்லைக்கு ஆளானார். ஒரு வாய் விழுங்குவதும், மறுவிநாடி கண்கலங்குவதும், தவிப்பதும், பெருமூச்சுவிடுவதும் - இப்படியாக அண்ணா அன்று பட்ட சிரமத்தைப் பார்த்த அவரது குடும்பத்தினர் அனைவரும் கலங்கிவிட்டார்கள். கரைத்த பொங்கலைக்கூட அண்ணா அருந்த முடியாமல் தவித்தார்; துடிதுடித்தார். அவரது தவிப்பு, எதிரே இருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்து விட்டது. அவ்வளவு சிரமப்பட்டாலும் கூட அந்தப் பொங்கலை வேண்டாம் என்று ஒதுக்கவில்லை அண்ணா. ஆண்டுக்கு ஒருமுறை இல்லத்தவருடன் இனிதமர்ந்து அருந்தும் பொங்கலாயிற்றே! அதனை வேண்டாமென்று ஒதுக்க அவரது உள்ளம் எப்படி ஒப்புக் கொள்ளும்! அதனால் உடல் உபாதையைக் கூடப் பொருட்படுத்தாமல், அரைமணி நேரம் செலவிட்டு ஒரு தம்ளர் சர்க்கரைப் பொங்கலையும் அருந்தினார். அன்று அவர்பட்ட சிரமம், அனுபவித்த துன்பம், தவித்த தவிப்பு, துடித்த துடிப்பு இன்னும் என் கண்களையும் நெஞ்சத்தையும் விட்டு அகலாது நிலைத்து நின்று, எனது உள்ளத்தில் துன்ப அலைகளைத் தினமும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறது.

அண்ணாவுடன் ஒரே ஒருநாள் பழகியவர்கள் கூட அவரை எந்த நாளும் மறக்க முடியாது! இது வரலாறு வடித்துத்தரும் உண்மை!




# அரசின் அறிவிப்புகள்

# ஆக்கப் பணிகள்

★ தமிழ்நாட்டில் கைத்தறித் துறையில் 1989-ஆம் ஆண்டிற்கு முன்பு ரூ.2 கோடியே 53 இலட்சம் இழப்பு ஏற்பட்டு இருந்தது. கடந்த ஆண்டு (89-90) முதல் ரூ.3 கோடி இலாபம் கிடைத்துள்ளது என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் செய்தியாளரிடம் தெரிவித்தார் (25.7.90).

★ சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிகளில்- தாழ்த்தப்பட்ட, மலைவாழ் இனம் உள்ள பெண்களுக்காக 40 தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (29.7.90).

★ கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கென "ஊரக அடிப்படை வசதி சிறப்புத் திட்டம்" என்னும் புதிய திட்டத்தை 8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் நிறைவேற்றிட ரூ.75 கோடி செலவிடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (1.8.90)

★ குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைப் பழுது பார்ப்பதற்காக ரூ.2 கோடி செலவிடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (1.8.90).

★ ஊராட்சி ஒன்றியச் சாலைகள்பராமரிப்புக்காக நடப்பாண்டில் தமிழ்நாட்டிற்கு முதல் தடவையாக ரூ.1.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் (3.8.90).

★ காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலையில் சுமார் 8 ஆண்டுகளாக ஓடாமல் இருந்த இயந்திரத்தை உடனடியாக இயக்கும்படி மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் உத்தரவிட்டார் (2.8.90).

★ தமிழ்நாட்டிற்கு வந்துள்ள ஈழத் தமிழ்க் கர்ப்பிணிகளுக்கு, தமிழக மகளிருக்கு வழங்கப்படுவது போலவே ரூ.200 மகப்பேறு உதவியாக வழங்கவும், ஈழ அகதிகளின் குழந்தைகளுக்கு முட்டையுடன் சத்துணவு வழங்கவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது (4.8.90).

★ தமிழ்நாடு ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசுப் பணியாளர், ஆசிரியர் மற்றும் அவர்களுடைய வாரிசுகளுக்குத் திருமணக் கடன் உதவி 27.6.89 முதல் உயர்த்தி வழங்கிட தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதன்படி, முன்பு ரூ.1,500 திருமணக் கடனாகப் பெற்ற அரசுப் பணியாளர்கள் ரூ.3 ஆயிரமும் இதுவரை ரூ.3 ஆயிரம் பெற்றவர்கள் ரூ.5 ஆயிரமும் கடனாகப் பெறுவர்.

★ தமிழகத்தில் சமூக நலத்துறையின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட, உடல் ஊனமுற்றோருக்கான தனியார் சிறப்புப் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம் செய்வதில், உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை அளிக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார் (6.8.90).

★ பட்டதாரி அல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 5 மதிப்பெண்கள் கூடுதலாக வழங்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பிறப்பித்த உத்திரவால், சட்டக் கல்லூரி மாணவர் தேர்வில் 753 மாணவர்கள் பயன் பெற்றனர்.

★ சிதம்பரம் அருகிலுள்ள சேத்தியாத் தோப்பில் ரூ.28 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய சர்க்கரை ஆலையை முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார் (9.8.90).

★ மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவுரைப்படி, தென்னார்க்காடு மாவட்டம் முழுவதும் புதிய சாலைகள் அமைக்கவும், சாலைகளைப் பராமரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும், இப்பணிக்காக ரூ.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அறிவித்தார் (9.8.90).

★ மாதம் ஒன்றுக்குத் தமிழகத்தில் இரண்டு அல்லது மூன்று தொழிற்சாலைகள் தொடங்கப்படுகின்றன என்றும், தமிழகத்தில் தொழில் வளர்ச்சிப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்றும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் (9.8.90).

★ தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் பகுதியில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ) தமிழ்நாடு பெட்ரோபுராடெக்ட்ஸ் நிறுவனமும் இணைந்து ரூ.65 கோடி முதலீட்டில் நாளொன்றுக்கு 100 டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட காஸ்டிக் சோடா தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது (11.8.90).


சத்துணவுத் திட்டத்திற்காக 1990-91ல் ரூ173 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ.195 கோடி ஒதுக்கத் திட்டம்.
நம்ம குழந்தைங்க கவலையில்லாமப் படிக்க, அரசு அள்ளி அள்ளிச் செலவழிறாங்க பாரேன்!
ஏறிக்கிடுங்க!
அரசு
விவசாயிகள்
கடன் நிவாரணம்
விவசாயக் கடன்
விவசாயிகளுக்கு ரூ.500 கோடி அளவில் கடன் நிவாரணம் அளிக்கப்படுகிறது.
ஒன்றா இரண்டா...
மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி போன்ற தொழில் முறைக் கல்லூரிகளில் சேரும் பட்டதாரியல்லாத குடும்பத்தைச் சேர்ந்த முதல் மாணவருக்கு 5 மதிப்பெண்கள் அதிகமாகத் தரப்படுகின்றன.
நம்ம வீட்டுல பட்டதாரி இல்லேங்கற குறையை அரசு தீர்த்துட்டது!


அரசு தந்த சலுகையால் நம் கவலை நீங்கியதுங்க!
அரசுக்கு நன்றி சொல்லணும்!
நெல் வியாபாரிகளிடம் வசூலிக்கப்பட்டு வந்த லெவி 50 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
காவல் துறை அதிகாரிகள், பொது மக்கள் மீது சந்தேகத்தின் பேரில் வழக்குத் தொடரும் முறை ரத்து செய்யப்பட்டதால் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேர் வீண் தொல்லையிலிருந்து விடுபட வழி கிடைத்துள்ளது.
பயப்படாதீங்க! உங்கள் பாதுகாப்புக்கு அரசு உத்தரவிட்டுள்ளது!
எடுத்துச் சொல்ல!
சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் ஆகியவற்றால் கட்டப் பட்டுள்ள 50 ஆயிரம் குடியிருப்புகளில் வாடகைக்குக் குடியிருப்போருக்கு அந்த வீடுகளைத் தவணைமுறையில் சொந்தமாக்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

TNPSC

விளம்பர எண். 30/90

தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்புப் பணியில் ஆண்கள் சீர்திருத்தப் பள்ளிகளின் கண்காணிப்பாளர் (Superintendent of Boys Approved Schools in the Tamil Nadu Approved Schools and Vigilance Service) பதவி ஒன்றுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 1-10-1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்**:—மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000
(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்வுக்குப் பொருந்தாது)

**வயது** :—1-7-90 அன்று 35 வயதிற்குக் குறைவாக.
(சலுகைகள் பற்றிய விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.)

**Qualifications :** I (*a*) A first or Second Class B.A., or B.Sc., or B.Com. degree or B.O.L. of Annamalai University or B.B.A. of Madurai-Kamaraj University or B.Litt. of Madras University or a Diploma in Criminology and Forensic Science.

*and*

(*b*) B.T., or L.T., or B.Ed., degree.

II. Must be not less than 160 centimetres in height and 79 centimetres round the chest on full expiration and must have a chest expansion of not less than five centimetres.

*Note :* Preference will be given to destitute widows who posses the prescribed qualifications and who secure atlest the minimum marks for selection.

*Explanation* 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

**சலுகைகள்** : ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதி யிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற் படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பி னர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

**விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவி யின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக் கூடிய 1-9-1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூ. 10) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் ( State Bank of India ) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1-9-1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' ( Demand Draft ) யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26x12 செ. மீ.). அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.**

DIPR/2131/MS/90/MCS.




# மாவட்டச் செய்திகள்




## திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில்

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், மரங்கள் குறைந்த காடுகளில் காடுகளை மேம்பாடு அடையச் செய்யும் வகையில் மிகக் குறைந்த நேரத்தில் அதிக அளவு மரங்களை மிகப்பரந்த பரப்பளவில் வளர்த்திட வானூர்தி மூலம் விதை தூவி மரங்கள் வளர்த் திடத் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்த நிலப்பரப்பில் 3-ல் 1 பங்கு காடுகளாக இருத்தல் வேண்டும் என்ற நியதி இருந்தபோதிலும், இந்தியாவைப் பொறுத்தமட்டில் 4-ல் 1 பங்கிற்குக் குறைவாகவே காடுகள் உள்ளன. அதிலும் தமிழகத் தில் 6-ல் 1 பங்கு தான் காடுகளாக உள்ளது. இதில் 3-ல் 1 பங்கு, பேரளவிற்குத் தான் மலைக் காடுகள், அதாவது மரங்கள் இல்லாத பாறை களாக உள்ளன.

இந்நிலையை அகற்றிட வேண்டும் என்ற அடிப்படையில், காட்டு வளத் தைப் பெருக்கிட குறைந்த மனித சக்தியில் குறைந்த காலகட்டத்தில் காடுகளை வளர்த்திட வானூர்தி மூலம் விதை தூவும் திட்டம் சோத னைக்காகப பயன்படுத்தப்பட்டு வரு கிறது. 1950-ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசம், குஜராத் போன்ற மாநி லங்களில் வானூர்தி மூலம் விதை தூவப்பட்டது. சரியான பலன் கிடைக்கவில்லை. 1984-ஆம் ஆண்டில் வடஆர்க்காடு மாவட்டத் தில் இம்முறை கையாளப்பட்டது. மழையின்மையால் போதிய அளவு பயன் கிடைக்கவில்லை.

1989-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் பழனி மலைப் பகுதி களைச் சேர்ந்த ஒட்டன்சத்திரம் பகுதிகளில் 25 ஆயிரம் எக்டேரில் வானூர்தி மூலம் விதை தூவப் பட்டது. இப்பகுதிகளில் சிறந்த முறையில் எதிர்பார்த்த பலன் கிடைத்துள்ளதால் இந்த ஆண்டு சிறுமலைப் பகுதியில் இத்திட்டம் கையாளப்படுகிறது. நிச்சயம் வெற்றி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது. இவ்விதைகள் இரண்டு மூன்று மாதங்கள் தொடர்ந்து மழையில்லாவிட்டாலும், அடுத்துப் பெய்கின்ற மழைக்கு முளைத்திடும் வகையில் விதைகள் பக்குவப்படுத் தப்பட்டுள்ளன.

**இந்தியாவிலேயே தமிழகத்தில், அதிலும் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் வானூர்தி மூலம் விதை தூவும் திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.**

சிறுமலைப் பகுதிகளில் வானூர்தி மூலம் விதை தூவும் விழா, திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சக்திகாந்ததாஸ் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற் றது. அப்போது அவர் பேசுகையில்,

''வானூர்தி மூலம் விதை தூவி காடுகள் வளர்க்கும் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் சிறந்த வெற்றி பெற் றுள்ளது என்பதை அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

''கடந்த ஆண்டு ஒட்டன்சத்திரம் பகுதிகளில் உள்ள காடுகளில் இம்முறையைப் பயன்படுத்தி சிறந்த வெற்றி பெற்றுள்ளோம். அதனடிப் படையில்தான் சிறுமலை மற்றும் கன்னிவாடி மலைப் பகுதிகளில் 2 ஆயிரம் எக்டேரில் மரங்கள் வளர்ச்சி விதைகள் தூவப்படுகின்றன. இத் திட்டமும் கடந்த ஆண்டைப் போல் மிகச் சிறந்த வெற்றியைக் கொடுக்கும் என நம்புகிறேன். இத்திட்டம் வெற்றி பெறப் பொதுமக்களின் பங்கும் நிறைய உண்டு. எனவே, காடுகளை அழிப்பதைத் தவிர்த்து மரங்களை நட முன்வர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில், கூடுதல் ஆட்சியர் டாக்டர் அருள்மொழி, திட்ட அலு வலர் திரு. அசோக்ரஞ்சன் மொகந்தி கோட்ட வன அலுவலர் திரு. கந்தசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங் னார்கள்.

விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட வன அலுவலர் திரு. பிரகாசம் வரவேற்றுப் பேசினார். கன்னிவாடி வனச் சரக அலுவலர் திரு. கந்தசாமி நன்றி கூறினார்.

**எம். அண்ணாமலை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்.**



## திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில்...

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் 9.8.90 அன்று, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க.அன்பழகன் அவர்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

தானிப்பாடியில் ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்புள்ள ஆரம்பப்பள்ளி கூடுதல் கட்டடம், ரூ. 1 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்புள்ள கால்நடை மருந்தகம், ரூ.44 ஆயிரம் மதிப்புள்ள சங்கு ஒலிப்பான் ஆகியவற்றை 9.8.90 அன்று திறந்து வைத்தார்.

மேலும் இவ்விழாவில், திருமண உதவித் திட்டத்தின்கீழ் 5 பெண்களுக்கு 25 ஆயிரமும், மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் 230 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.46 ஆயிரமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 81 பேருக்கு ரூ.3 இலட்சத்து 52 ஆயிரமும், தாட்கோ மூலம் ரூ.76 ஆயிரத்து 800 மதிப்புள்ள 24 கறவை மாடுகளையும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில், "எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு தமிழ்நாட்டில் மட்டும் கல்விக்காக ரூ.1.42 கோடி கூடுதலாகச்செலவு செய்யப்படுகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக்கல்வி கற்க ஊக்கம் அளிக்க வேண்டும். என்னதான் ஆசிரியர்கள் திறமையாக இருந்தாலும்கூட பிள்ளைகளுக்குக் கருத்து வளம் மேம்பட்டால்தான் ஆசிரியர்கள் அளிக்கும் கல்வி பயன் அளிக்கும். பெற்றோர்கள் பிள்ளைகளின் நடைமுறைகளைக் கவனித்து ஒழுங்குபடுத்த வேண்டும்" என்றார்.

மேலும் இவ்விழாவில், இந்தியன் வங்கி சார்பில் 56 பேருக்குக் கறவை மாடு வளர்க்கும் திட்டத்தின்கீழ் ரூ.1 இலட்சத்து 78 ஆயிரத்து 800-ம், ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 3 பேருக்கு ரூ.81 ஆயிரமும், மளிகைக் கடை வைக்க 3 பேருக்கு ரூ.15 ஆயிரமும், 1084 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களும் இவ்விழாவில் வழங்கப்பட்டன.

முன்னதாக, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ.கோலப்பன், இ.ஆ.ப., தண்டராம்பட்டு பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்.சி. ராமசாமி கவுண்டர், பொன்முடி எம்.எல்.ஏ. உள்பட பலர் பேசினார்கள். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் பிச்சாண்டி, திரு. ஏ. ராஜேந்திரன், திரு. பெ.சு. திருவேங்கடம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையில் நடந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, திருவண்ணாமலை ராஜாஜன் தெருவில் உள்ள நகராட்சிப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கூடத்துக்கு ''அமராவதி முருகையன்'' என்ற பெயரை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சூட்டினார். அதே பள்ளிக் கூடத்தில் ரூ.3½ இலட்சம் செலவில் கட்டப்பட்ட 4 வகுப்பறைகள் கொண்ட கட்டடத்தையும் திறந்து வைத்தார். இந்த விழாவில் கர்ப்பிணிப் பெண்களுக்கான நிதி உதவியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார். மற்றும் இந்தியன் வங்கி, திருவண்ணாமலை பஜார் கிளை சார்பில், 72 பேருக்கு ரூ.4 இலட்சத்து 49 ஆயிரம் கடன் உதவியும் வழங்கப்பட்டது.

போளூர் சாலையில் உள்ள மத்தியப் பேருந்து நிலையத்தில் ரூ.20 இலட்சம் செலவில் 9 புதிய கடைகளையும், ஒரு சிற்றுண்டி விடுதியையும், சைக்கிள் நிறுத்தும் இடத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

வீராகுட்டைத் தெருவில் புதிதாகக் கட்டப்பட உள்ள நகராட்சி ஆரம்பப் பள்ளிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசுகையில், "தமிழ்நாட்டில் உள்ள பள்ளிக் கூடங்களைப் பழுது பார்க்க ரூ.8 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 439 புதிய பள்ளிக் கூடங்கள் திறக்கப்படும்" என்றார்.

இந்த விழாக்களில், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பெ.கோலப்பன் இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாவில் கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெ.சு. திருவேங்கடம், போளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.இராஜேந்திரன், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் திரு. பிச்சாண்டி, தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன்முடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**– ஜீ. மணிகுமார்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.**



## தருமபுரி மாவட்டத்தில்....

தருமபுரி மாவட்டத்தில் மகளிர் பொருளாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, மத்திய அரசால் மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டு மாநில அரசின் மூலமாக இத்திட்டம் சிறப்பாக [illegible] பெற்று வருகிறது. இத்திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமாகும்.

மகளிர், வருவாய் ஈட்டத்தக்க வகையில், தொழில்களைத் தேர்வு செய்து, இத்திட்டத்தின் கீழ் புகுத்தப்பட்டுள்ளது. அத்தோடு அந்தந்தக் கிராமங்களில் எளிதில் கிடைக்கக் கூடிய பல்வேறு சேவைகளையும் மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் பயனாளர் பெறக்கூடிய வகையில் ஒரு அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அமைப்பு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:

1. குழு அடிப்படையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கடன் தொகையை வழங்குவது.

2. 15 முதல் 20 வரையில் மகளிரைத் தேர்வு செய்து, குழுவாக அமைப்பது.

3. குறைந்த கால அளவில் குறைந்த அளவு தொழில் செய்யும் மகளிரை முழு நேரத்தில் ஈடுபடுத்திக் கூடுதலாகப் பொருள் ஈட்டக் கூடிய வகையில் மகளிர்களை ஈடுபடச்செய்வது.

4. குழந்தைகளின் இறப்பு, நோய் மற்றும் நோய்வாய்ப்படுதலைக் குறைத்தல்.

5. தாய் இறப்பு மற்றும் நோய் வாய்ப்படுதலைக் குறைத்து அவர்களின் நலனை மேம்படுத்துதல்.

இத்திட்டத்தின் துவக்க ஆண்டில் (1983-84இல்) தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி காவேரிப்பட்டிணம் ஆகிய இரண்டு வட்டாரங்களில் மட்டும் 20 குழுக்கள் கொண்டு, தலா 10 குழுக்கள் வீதம் செயல்படத் துவங்கியது. பின்னர் 1989-90 வரையில் இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு, வட்டாரத்திற்கு 30 குழுக்கள் வீதம் 16 வட்டாரங்களில் மொத்தம் 540 குழுக்கள் அமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. 540 குழுக்களிலும் 67 விதமான தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பயனாளர்கள் தங்களது தொழிலுக்கேற்றவாறு மாதத்திற்கு ரூ.400 முதல் ரூ.1,000 வரை வருமானம் ஈட்டுகின்றனர்.

மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டக் குழுவில் தயார் செய்யும் பொருட்களுக்கு விற்பனைத் தொடர்பு, தமிழ்நாடு கிராமம் மற்றும் குடிசைத் தொழில் வாரியம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியம் மற்றும் மாவட்டத் தொழில்மையத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனங்கள், மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டக் குழுவிற்குத் தேவையான தொழில் அடிப்படை வசதி மற்றும் துணை நலப் பணிகளுக்குமான வசதிகளை அளித்து, தக்க துணை புரிந்து வருகின்றன.

ஆண்டு வருமானம் ரூ. 4,800 க்கும் குறைந்த அளவு ஈட்டும் குடும்பத்திலுள்ள நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட அடிப்படையில் கடன் மான்யம் அளிக்கப்பட்டு, குழுவாக அமைக்கப்

படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், பயன் பெறும் குழுக்களுக்கு மத்திய அரசு, மாநில அரசு மற்றும் யூனிசெப் நிறுவனம் ஆகியவை சமப் பங்கில் ரூ. 15,000 சுழல் நிதியாக வழங்குகின்றன. இத்தொகை குழுவிற்குத் தேவையான மூலப்பொருட்கள் வாங்குவதற்கும் விற்பனை வசதிக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு குழு அமைப்பாளருக்கு மதிப்பூதியம் ரூ. 50 மிகாமல் மாதத்திற்கு அளித்து ஓராண்டிற்கு வழங்கப்படுகிறது. குழுவின் அடிப்படை வசதிக்காகவும், வருமானம் ஈட்டும் தொழிலை மேம்படுத்தும் நடவடிக்கைக்காகவும் இத்தொகை பயன்படுத்தப்படுகிறது. குழந்தைகள் நலத்திற்காக ஒரு முறைச்செலவினமாக இத்தொகை செலவிடப்படுகிறது. மேலும் ஒவ்வொரு குழு அமைப்பாளர்களுக்கும் மத்திய அரசு, மாநில அரசு, நிதியாக ஆண்டிற்கு ரூ.200 பயணப்படி வழங்குகின்றன

மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் வட்டாரங்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் மொத்தம் பதினொன்று பல்நோக்கு சமுதாயக்கூடம் ஊரக நில மற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடங்களைக் கட்டுவதற்குச் சுமார் ரூ 2.00 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இம்மையக் கட்டடங்கள், குழு உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் கிராமத்தில் உள்ளோரின் எழுத்தறியாமையைப் போக்கவும், குழந்தைகளின் சுகாதார நலனைக்காக்கவும் உற்பத்தி செய்த பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கவும், கட்டடத்திலேயே பொருட்களை உற்பத்தி செய்யவும்; கருத்தரங்கு, தொழில் பயிற்சி, முதியோர் கல்வி வகுப்பு மற்றும் சுகாதார நலப்பணிகளுக்கான முகாமிற்காகவும் இக்கட்டடங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்படி, மிளகாய்த்தூள், சாம்பார்பொடி தயாரிக்கும் தொழில்கள் நூல்ஹள்ளி கிராமத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் குறித்து, மகளிர் குழு அமைப்பாளர் திருமதி சம்பூரணம் அவர்களைச் சந்தித்தபோது, அவர் கூறினார்:

"இந்தக் கிராமத்தில் பதினைந்து உறுப்பினர்கள் கொண்ட மிளகாய்த்



தூள் தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இக்குழுவில் பத்து உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் வங்கி மூலமாக ரூ.4500 கடன் தருகின்றனர். இதில் மானியமாக ரூ.1500 வழங்குகின்றனர். மேலும் எங்களது குழு உறுப்பினர்கள் மூலம் மாதந்தோறும் 900 கிலோ வரை மிளகாய்ப் பொடி, சாம்பார் பொடி உற்பத்தி செய்கின்றோம். மேலும் இம்மாவட்டத்திலுள்ள சத்துணவுக் கூடங்கள், தமிழ்நாடு



நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களுடன் விற்பனை வசதிக்காக இணைக்கப்பட்டுள்ளன.

"மேலும் சுழல் நிதியாக ரூ.12,500 இக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. கடன் தொகையிலிருந்தும், சுழல் நிதியிலிருந்தும் ரூ.22,000 மதிப்பிற்காக அரவை இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முன் சிலமகளிர்கள் விவசாயக் கூலிகளாகவும் வேலை செய்து சரிவர வருமானம் இன்றி இருந்தனர். தற்போது இவர்கள் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடன் தொகை பெற்ற பின்னர், மாதத்திற்கு ரூ.500 வரை வருமானம் ஈட்டுகின்றனர்."

இத்திட்டத்தின் கீழ் நெடிமோட்ஆனை (ஆயத்த ஆடை) தயாரிக்கும் தொழில் பென்னாகரம் வட்டத்தில் முள்ளுவாடி கிராமத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இத்திட்டம் பற்றி மகளிர் குழு அமைப்பாளர் திருமதி ஜீனத் அவர்கள் கூறியதாவது:

"மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இக்கிராமத்தில் இஸ்லாமியப்பிரிவைச் சார்ந்த 20 பேர் உள்ளனர். இவர்களுக்குப் பென்னாகரம் இந்தியன் வங்கி மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.6,000 கடன் வழங்கப்பட்டு, கடன் தொகை முழுவதும் 10 உறுப்பினர்கள் திருப்பி செலுத்தியுள்ளனர். கடன் தொகையில் ரூ.4000 கடன் தொகையாகவும், ரூ.2000 மானியமாகவும் வழங்கப்படுகிறது.

நாங்கள் இத்திட்டத்தின் மூலம் பாவாடை, கிராமப் பெண்கள் பயன்படுத்தும் சிறு பைகள், பள்ளிச் சிறார்களுக்கான இலவசச்சீருடைகள், சுடிதார், பைஜாமா, கவுன்கள், சிறிய குழந்தைகளுக்கான ஆடைகள் ஆகியவற்றைத்தயார் செய்து, அவைகளை உள்ளூரிலும், உள்ளூர்ச் சந்தைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்கு உறுப்பினர்களுக்கு எந்த விதமான வருமானமும் இன்றி இருந்தவர்கள், தற்போது சராசரியாக மாதம் ஒன்றுக்கு ரூ.450 வருமானம் ஈட்டுகின்றனர்."



மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் காவேரிப்பட்டிணம் வட்டாரம், அகரம் கிராமத்தில் மண்பாண்டம் தயாரிக்கும் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது:

இத்திட்டம் பற்றி மகளிர் குழு அமைப்பாளர் திருமதி பழனியம்மாள் அவர்கள் கூறினார்:-

"இக்கிராமத்தில் பத்து உறுப்பினர்கள் அடங்கிய குழுவாகமண்பாண்டம் தயாரித்து விற்று வருகிறோம். எங்கள் ஒவ்வொருவருக்கும் கடன் தொகையாக ரூ.7,500, மானியமாக ரூ.2,500 பெற்றோம். நாங்கள் பானை, மாந்தொட்டி, குடிநீர் தொட்டி, பூந்தொட்டி மற்றும் அடுப்பு ஆகியவைகள் தயார் செய்து, காரிமங்கலம், நாரசம்பட்டி, அரசம்பட்டி மற்றும் கம்பைநல்லூர் வாரச் சந்தைகளில் விற்பனை செய்து வருகிறோம். ஒரு சிலர் பொம்மைகள் செய்யும் தொழிலும் செய்து வருகின்றனர்.

எங்கள் குழுவிற்குச் சுழல் நிதியாக ரூ.12,500 வழங்கப்பட்டது. இத்தொகையினை லாபம் ஈட்டித் தரும் தொழில்களுக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்திற்கு முன்னர் உறுப்பினர்களுக்கு ரூ.150-200 வரை மாத வருமானம் கிடைத்தது. தற்போது மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பின்னர், இக்குழு உறுப்பினர்களுக்கு மாதம் ரூ.750 மாத வருமானம் கிடைக்கப் பெறுகிறது".

இத்திட்டத்தின் கீழ்; தருமபுரி மாவட்டத்தில் 9,520 பெண்கள் பயன்பெற்று, அவர்களைச் சார்ந்த குடும்பங்களும் பயன் பெற்று வருகின்றன

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மகளிர் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், நல்ல பல திட்டங்களைத் தீட்டி, சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தருமபுரி மாவட்டத்தில், நலிந்த பெண்கள் மேன்மையுற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கா.அலாவுதீன் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத் திட்ட அலுவலர் திரு. ஆர். அழகிரிராஜ் அவர்களின் நிர்வாகத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**–சி.சு. சரவணன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தருமபுரி**

## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்...

**தி**ருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், இலங்கையிலிருந்து இதுவரை 589 குடும்பங்களைச் சார்ந்த 2,174 அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களின் இன்னல்களைப் போக்குகின்ற வகையில் மாவட்ட நிர்வாகம், அகதிகள் தங்குவதற்குப் பல்வேறு வசதிகளை உருவாக்கித் தந்துள்ளது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் நாரணம்மாள்புரம், தருவை, பெருமாள்புரம், தென்காசி, சங்கரன்கோவில், சமூகரெங்கபுரம், திருக்குறுங்குடி ஆகிய 7 இடங்களில் பல்வேறு குழுக்களாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மொத்தமுள்ள 2,174 அகதிகளில், 1,097 ஆண்களும், 1,077 பெண்களும் அடங்குவர். சிறுவர்கள் மட்டும் 677 பேர் உள்ளனர்.

இவர்களின் அடிப்படைத் தேவையான உறைவிடம், உணவு ஆகியவை சீராக வழங்கப்பட்டு வருகின்றன. இவர்கள் சமையல் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உடைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.இராசரெத்தினம், இ.ஆ.ப., அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சமூக அமைப்புகளும், ரோட்டரிச் சங்கங்களும், பல்வேறு வியாபாரத் தொழில் அமைப்புகளும் வழங்க முன் வந்தன. மாதந்தோறும் பெரியவர்கள் நபருக்கு ரூ.150-ம், சிறுவர்களுக்குத் தலா ரூ.75 வீதமும் அரசு ரொக்கப் பணமாக வழங்கி வருகிறது.

இவர்களுக்குக் குடும்ப அடையாள அட்டை வழங்கப்பட்டு, மானிய விலையில் அரிசி கிலோ 0.57 காசுக்குக் கொடுக்கப்படுகிறது.

மேலும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தில்





மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், 'காதிகிராப்ட்' பொம்மைக் கண்காட்சி மற்றும் விற்பனையைத் சென்னை குறளகத்தில் துவக்கி வைத்தார் (20.8.90).

ாவட்ட நிர்வாகத்தின் மூலம் அகதி ளின் பணி மற்றும் தொழில் றைகள் கணக்கிடப்பட்டு அவர் ளுக்கு விவசாயப் பண்ணை, அரிசி ூலை, பீடிக் கம்பெனி ஆகிய டங்களில் பணிபுரிவதற்கு நட டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ன. தினமும் அரசு மருத்துவக்குழு, காமிற்குச் சென்று பார்வையிட்டு ருகிறது.

மேலும் அகதிகளின் குழந்தைகள் ல்வி பயில்வதற்காக அகதிகள் காம் அருகே உள்ள பள்ளிகளில் 38 குழந்தைகள் கல்வி கற்க ற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கதிகளின் வாட்டம் போக்கிட, மிழ்நாடு அரசு எடுத்திடும் ஆக்கப் ர்வமான பணியினைத் தருவை காமில் உள்ள திரு. பிரீஸ் அவர்கள், மிழக அரசு தங்களது தேவைகளை டனுக்குடன் நிறைவேற்றி வருவது ண்டு மனநிறைவு கொள்வதாகத் தரிவித்தார்.

இலவச வேட்டியைப் பெற்றுக கொண்ட திரு.வடிஸ், முகாமில் தங்களுக்குத் தேவையான வசதிகள் யாவும் செய்யப்பட்டு வருவது குறித்து மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்களிடம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

நாரணம்மாள்புரம் முகாமிலுள்ள திரு.ஜெபமாலை அவர்கள், "அகதிகளுக்குத் தமிழக அரசு செய்து வரும் உதவிகளைக் கூறப்போனால் அது ஒரு காவியமாக மாறிவிடும்" என்று கூறினார்.

"இலங்கையில் பல்வேறு இன்னல்களுக்குட்பட்டுள்ள எங்களது சகோதரர்களை அழிவிலிருந்து மீட்டுத் தர அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்" என்று தருவை முகாமிலுள்ள அகதி திரு. செல்வம் கோரிக்கை விடுத்தார்.

அகதிகளுக்கு அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ள நிலைமைகளைக் கண்டறிய மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், அகதிகள் மறுவாழ்வு சிறப்பு ஆணையாளர் திரு. சி. என். ராமதாஸ் இ.ஆ.ப., ஆகியோர் முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டனர். மாவட்டத்தின் பல்வேறு தனியார் அமைப்புகளையும், நிறுவனங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொடர்பு கொண்டு பெருமளவில் இவர்களுக்கு உதவி வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து அகதிகளின் அனைத்துத் தேவைகளும் தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

— எஸ்.எம். பஷீர்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்



## கடல் அரிப்பைத் தடுக்க புதிய முறை

அலைகள் மோதுகின்ற கடற்கரையில், கான்கிரீட் பாளங்களை அருகருகே வைத்துச் சரிவான நிலையில் கடற்கரைச்சுவர் ஒன்றை உருவாக்கியுள்ளனர். அலைகள் எல்லை மீறிச் செல்லாதவண்ணம் இந்தத் தடுப்புச்சுவர் பாதுகாக்கிறது.

இதில் மற்றொரு புதுமை என்னவெனில், இந்தத் தடுப்புச்சுவரில் பயன்படுத்தப்பட்டுள்ள கான்கிரீட்டில் 30 சதவீதம் சாம்பல் உள்ளது. இது சாக்கடைக்கழிவை எரிப்பதன் மூலம் தயாரிக்கப்பட்டதாகும்.

அமெரிக்காவில் வர்ஜீனியா மாநிலத்தில், செஸபீக் வளைகுடா பகுதியில் இந்தப் புதுமையான தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய தொழில்நுட்பத்தினால் ஒரேசமயத்தில் இரட்டைப் பயன்கள் விளைகின்றன. கடல் அரிப்பையும் தடுக்க முடிகிறது; அதே சமயத்தில், கழிவுப் பொருட்களால் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்காதபடி, அவை புதிய பொருளாக மாற்றப்பட்டு ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

## இராமநாதபுரம் மாவட்டத்தில்...

மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் மண்டபம் முகாமை 22.7.90 அன்று சுமார் 2 மணி நேரம் சுற்றிப் பார்த்தார். அகதிகளைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

பிறகு மண்டபம் அகதிகள் முகாமில் மேதகு ஆளுநர் அவர்கள் செய்தியாளர்களுடன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

"அகதிகள் முகாமில் உள்ள குழந்தைகள் பெரியவர்களைச் சந்தித்து அவர்கள் கூறியவற்றைக் கேட்டேன். அரசு அகதிகளுக்குச் செய்து வரும் உதவிகள் மனநிறைவு அளிக்கிறது. அகதிகளின் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூட வசதி செய்து தரப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்களுக்கு உயர் கல்வியும் அளிக்கப்படும்; சலுகை விலையில் அரிசி, துணிகள், பாத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

"அகதிகளைப் பராமரிப்பது மற்ற உதவிகள் செய்வது மிகச் சிரமமான பணி. இந்தப் பணியைத் தமிழக அரசு சிறப்பாகச் செய்து வருகிறது.

"கவுரிமுத்து என்ற இளம் பெண் 1986-ஆம் ஆண்டு குண்டு வீச்சில் 2 கால்களையும் இழந்துள்ளதைப்பார்த்தேன். அவருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படும். மேலும் அந்தப் பெண்ணுக்குத் தேவைப்பட்டால் சென்னைக்கு அனுப்பி சிகிச்சை செய்ய ஏற்பாடும் செய்யப்படும்".

அகதிகள் முகாமை, மேதகு ஆளுநர் அவர்களுக்கு, மறுவாழ்வுத் துறை இயக்குநர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அர. செல்லமுத்து, இ.ஆ.ப. ஆகியோர் சுற்றிக்காண்பித்தனர்.

## இளம்பிள்ளைவாத நோய்த்தடுப்பு மற்றும் மறுவாழ்வுப்பணிகள்

இராமநாதபுரம் மாவட்டத்தில், இளம்பிள்ளைவாத நோய்த்தடுப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் தமிழ்நாட்டில் முன்னோடித் திட்டமாக ஒவ்வொரு கட்டமாக 5 கட்டங்களில் 1988-89-லிருந்து துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்ட நபர்களின் மருத்துவ, கல்வி, தொழில் மற்றும் பொருளாதார உதவிகளைப் பெறுவதற்காக, மதிப்பீட்டுக் குழுக்கள் மூலம் மதிப்பீடு செய்து, அவரவர்களுக்குத் தேவையான உதவிகள் அளித்துவரப்படுகின்றன.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு 1989 ஜனவரி முதல் 1990 மார்ச் வரை செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 40 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 8,933 பேருக்கு ஊனமுற்ற நபர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் முதற் கட்டத்தில் பரமக்குடி, போகலூர், நயினார் கோவில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 3 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் இளம்பிள்ளை வாத நோய்த்துடைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 3 ஊராட்சி ஒன்றியங்களில், பாதிக்கப்பட்ட 400 நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ, சமூக, பொருளாதார உதவிகளை வழங்குவதற்காக மருத்துவக் குழுவை அமைத்து, ஊராட்சி ஒன்றியத்தில் 5 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**வழங்கப்பட்ட இலவச மறுவாழ்வு உதவிகள்:**

1) 50 நபர்களுக்கு இலவச அறுவைச் சிகிச்சை செய்து கால் சரி செய்யப்பட்டது. 2) 225 நபர்களுக்கு காலிப்பர்கள் (காலுறைகள்) வழங்கப்பட்டன. 3) 130 நபர்களுக்கு அவர்களுடைய ஊருக்கே சென்று உடற்பயிற்சி மருத்துவம் அளிக்கப்பட்டது. 4) 40 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்பட்டது. 5) 25 நபர்களுக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. 6) 16 நபர்கள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். 7) 58 பள்ளி மாணவ, மாணவியருக்குக் கல்வி உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. 8) 98 பள்ளி மாணவ மாணவியருக்குக் கல்வி உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. 9) 22 நபர்களுக்கு நபருக்கு ரூ.300 உதவித் தொகையுடன் 6 மாதத்திற்குச் சுயதொழில் பயிற்சி அளிக்கப்பட்டது. 10) 18 நபருக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் 7 நபர்களுக்கு மாதம் ரூ.100 வீதம் 10 ஆண்டுகளுக்குப் பராமரிப்பு மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஊனமுற்ற 270 மாணவ, மாணவியருக்கு, கல்வி உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

— உல. இரவீந்திரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்

# ஆனைமலையின் காடர் பழங்குடிகள்

டாக்டர் நே. தேவசகாயம்
மானிடவியல் காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், சென்னை

**ஆனைமலைக் காடர்கள் யார்? அவர்கள் வாழ்க்கை, நாகரிகம் எப்படிப் பட்டது என்பதை விளக்கும் அரிய கட்டுரை இது. நம் காலத்தில், நம்மோடு வாழும் பழங்குடி மக்களைப் பற்றிய இந்தக் கட்டுரையில் பல புதிய செய்தி களைத் தெரிந்து கொள்கிறோம்.**

ஒரு காலத்தில் யானைகள் அதிகமாகக்காணப்பட்ட கோவை மாவட்ட யானை மலை/ஆனை மலைக் காடுகளில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் பழம் பெரும் பழங்குடிகளின் பெயரே, காடன்-காடர் (KADAR) என்றாகியது. பொள்ளாச்சி வட்ட மலைகளின் இருபகுதிகளான வால்பாறை, மற்றும் டாப் சிலிப் (TOP SLIP) பில் சுமார் 2,000 காடர் பழங்குடிகள் காட்டு மலைச்சரிவுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

டாப்சிலிப் பகுதியில் மலைப் பேருந்திலிருந்து நாம் இறங்கியவுடன் நம்மை இனிதே வரவேற்பது வனவிலங்குச் சரணாலயமாகும். புல்லினால் மூடப்பட்ட சிறுகுன்று போலுள்ள இம்மேட்டில், மூன்று பக்கக் காடுகளிலிருந்து புள்ளி மான்கள் கூட்டமாக தினமும் அதிகாலையில் மேயவரும் காட்சியைச் சுமார் 45 நிமிடங்கள் இங்கு வரும் உல்லாசப் பயணிகள் கவனிக்கத் தவறுவதில்லை. இரவில் பயணிகள் விடுதியின் அருகிலேயே பைசன் காட்டெருமை (Bison) நடமாடுவதும் அவைகளின் கண்கள் தீயைப் போன்று சிவந்திருப்பதும் இங்கு நாம் காணத்தகும் எழில்மிகு காட்சிகளில் ஒன்றாகும். ஆனால் பகலில் காட்டில் காணக்கூடியவை, நாம் பார்க்கக் கூடியவைகள் யானைகள் தான்.

இந்த விலங்கியல் சுற்றுலாக் காட்சிகளைத் தவிர, மானிடவியலார் விரும்பிச் சொல்வது, இந்த வனப்பான காட்டிலே, காடுகளின் நடுவிலே எளிய வாழ்க்கையை நடத்தும், நடத்திக் கொண்டுவரும் காடர் என்பவரைப் பற்றியேதான். தமிழ்நாட்டின் 42 பழங்குடியினரில் இவர்கள்



சாதாரணப் பழங்குடிகள் அல்ல! தங்களின் பூர்வீக, பாரம்பரிய கலாச்சாரத்திலே பிறந்து வளர்ந்த இப்பழங்குடிகள் நாளடைவில் தங்கள் சுற்றுப்புறங்களில் ஏற்பட்ட மாறுதல்கள், மாற்றங்கள் மற்றும் தங்களைக் கவர்ந்த வெளிப்பண்பாட்டினால் ஏற்பட்ட கரைகளினால், தங்களின் எளிய,

காடர்



சுத்தமான பாகுபடுத்தப்பட்ட பண்பாடுகள் சிறிது சிறிதாக மறைந்து போவதைக்கண்ட மானிடவியல் பிரிவின் சென்னை அருங்காட்சியகம், அச்சிதைவுகளை நினைவுபடுத்தக்கூடிய, அம்மக்களின் அரும் பொருள்களை ஓரளவு சேகரித்து அவைகளின் வழியே ஒருங்கிணைந்த அம்மக்களின் மூலப் பண்பாட்டைத் திரும்பவும் விளக்கக்கூடிய முயற்சியே, கடந்த ஆண்டில் மூன்று நாட்களாக ஆனை மலையை நோக்கி எடுத்த பொருள் சேகரிப்பு ஆய்வுப் பயணமாகும்.

டாப்சிலிப்பிலிருந்து எருமைப்பாறை என்ற காடரின் கிராமம் சுமார் 1½ கல் தொலைவில் பரம்பிக்குளம் செல்லும் பேருந்து சாலையின் அருகில் மலைச்சரிவில் அமைந்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மலைச்சரிவின் பகுதியில் இரண்டு பெரிய பாறைகள் எருமையைப் போல் இருந்ததாகவும், அவைகளை உடைத்து அவ்விடத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்னர் தமது முன்னோர் குடியேறியதாகவும் அப்பகுதி காடர் கூறுகின்றனர்.

தென்னிந்தியப்பழங்குடியினர் மொத்தமாக புரோட்டோ ஆஸ்திரலாயிட் (Proto-australoid) என்ற இன வகையைச் சார்ந்தவராயினும், குறிப்பாக



## காடர் நெருப்பு உண்டாக்குதல்

காடர் பழங்குடியினர் தங்களுக்குள் நீக்ராயிட் (Negroid) இனவகைக்குரிய அறிகுறிகளைக் கொண்டுள்ளனர். முக்கியமாக- தடித்த உதடு, கட்டையான உருவம், கருமைநிறம், தலைமுடி சுருட்டினது போன்றவையாகும்.

தென்னிந்தியா ஆஸ்திரேலியாவுடன் நிலப்பரப்பில் ஒன்றாக இருந்த அக்காலத்தில் காட்டுமிராண்டித்தனத்தையும் சற்று குறைந்த நாகரீக பண்பாட்டையும் கொண்ட இருவகை நீக்கிரோ இன மக்கள் இந்தியாவில் குடியேறினதாகவும், ஏற்கெனவே நிரந்தர்பூர்வீகப் பழங்குடிகள் இம்மக்களைக் கண்டு, காடுகளுக்கும், மலைகளுக்கும் ஓடிச் சென்றனர் என்றும், புதுமுகப் பழங்குடிகள், குமரி முதல் விசாகை, மற்றும் நாக்பூர் வரை பரவி வாழ்ந்தனர் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால் இக்கூற்றிற்கு மாறாக, வேறுவகை ஆய்வாளர்கள் காடர் பழங்குடிகளே, இந்தியாவின் முதுமை பூர்வீகப் பழங்குடியினர் என்று கூறுகின்றனர். அந்தமானின் நீக்கிரோ இனத்தவரைப் போன்ற கோவை மாவட்ட ஆனை மலை காடர், காட்டில் உணவைச் சேகரித்தும், வேட்டையாடியும், இறந்தவர்களைப் புதைத்தும், முன்பற்களை வெட்டியும், தங்கள் எண்ணிக்கையில் நாளடைவில் குறைந்தும் வருகின்றனர்.

எதுவாயினும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இவர்களின் இனவகையிலும், சமூகப் பொருளாதார வாழ்க்கையிலும் முக்கிய இடத்தைப் பெற்றவர்களாக இருக்கின்றனர்.

இம்மக்களை சிறப்பினவர்களாகக் காட்டிய அறிகுறிகள் யாவை? காடர் பழங்குடிகள் தங்கள் இருபாலரும் வயதிற்கு வந்தவுடன் தங்களின் மேல், கீழ்த் தாடைகளின் முன்பற்களை (Incisor teeth) கூரிய உளி கொண்டு செதுக்கி விடுதல் பழக்கமாக இருந்து வந்தது. இப்படிப்பல் செதுக்கப்பட்டிருந்தால் தான் அவள்/அவன் திருமணத்திற்குத்

### அரசுத் தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்

சென்னை உட்ஸ் சாலையில் இயங்கி வந்த அரசுத் தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம், மின் உரிமம் வழங்கும் வாரியம், மின் ஆய்வாளர்/சென்னை அலுவலகம் மற்றும் அண்ணாசாலையில் உள்ள மின்சார வாரிய வளாகத்தில் இயங்கி வந்த அரசு மின் தர நிர்ணய ஆய்வுக்கூடம் ஆகிய அலுவலகங்கள் 11.6.90 முதல் கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டையில் கட்டப்பட்டுள்ள மின் ஆய்வுத் துறையின் புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

தயாராக உள்ளார் என்பது அறிகுறி. இது இவர்களின் அழகை அதிகப்படுத்தும் செயல் என்றும், கூரிய முன்பற்களை வைத்தால் கொடிய விலங்குகளைப் போன்று இருப்பதாகவும் இம்மக்கள் நினைக்கின்றனர். டாப்சிலிப் மலைப்பகுதியில் எருமைப்பாறை கிராமத்தின் காடர்களை இந்த சமூகச் சடங்கைப் பற்றிக் கேட்டபோது, இந்தப் பழக்கம் தற்சமயம் மறைந்து வருவதாகவும், இக்காலக் காடர் இதைப் பின்பற்றுவதில்லை என்றும் கூறினர். இச்சடங்கு கடந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், சுமார் ஐம்பது வயது நிரம்பிய ஒரு காடர், இரவில் தீக்கழியுடன் தனது குடிசையைவிட்டு, இயற்கையின் கடனைக்கழிக்கச்சென்றதாகவும், அருகில் புதரில் பதுங்கியிருந்த புலி ஒன்று அவரை அடித்துத் தூக்கிச் சென்று விட்டதாகவும்,

பல மாதங்கள் கடந்தும் அவரைப் பற்றிய தகவல்/துப்பு கிடைக்கவில்லை என்றும், ஒரு ஆண்டு கழித்து, தண்ணீரைத் தேடி, காடர் மக்கள், தூரத்திலுள்ள ஒரு பள்ளத்தாக்கிற்குச் சென்றதாகவும், அங்கு ஒரு மண்டை ஓடு இருந்ததாகவும், அது யாருடையது என்று அடையாளம் காண முயன்றபோது, அந்த மண்டையின் முன்தாடையில் செதுக்கப்பட்ட பல் இருந்ததைக் கண்டு, இது தங்கள் காடர் வகுப்பைச் சேர்ந்தவர்தான் என்பதைக் கண்டு பிடிக்க முடிந்தது என்றால், இந்த விதமாகப் பல்லைச் செதுக்குதல் சடங்கின் முக்கியத்துவம் எப்படிப்பட்டதுஎன்று நாம் ஓரளவு அறிய முடியும்.

மற்றொரு சிறப்பு அறிகுறி, திருமணச் சடங்கில் ஆடவன் ஒருவன், அழகான, வேலைப்பாடான, ஐந்து முன்னைக் கொண்ட, 4 முதல் 6 அங்குல நீளமுள்ள மூங்கில்

சீப்பைத் தானே தயாரித்து, தான் மணக்கவிருக்கும் மங்கைக்கு அன்பளிப்பாக அளிப்பதாகும். இதைக் காடர் மகளிர் தலையின் முன்பக்கத்தில் சுருட்டை மயிரில் அணிவர். முதுவர் பழங்குடிகளிடமும் இன்றும் காணப்படும் இப்பழக்கம், காடர்களிடம் இன்று காணப்படவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்வரை இவர்களின் முதியோர் பலர், சிக்கிமுக்கிக் கற்களின் உதவியால் தீயை உண்டாக்கியதாகக் கூறப்பட்டது. நெல்லை, குமரிமாவட்ட காணிப் பழங்குடிகளைப் போன்றே, காடர்கள் சிக்கி முக்கிக் கற்களினால் நெருப்பை உண்டாக்குவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பஞ்சு, காய்ந்த இலைகளை வைக்க காணிப்பழங்குடிகள், சிறிய மூங்கில் பெட்டிகளுக்குப் பதிலாக, காலப்போக்கில் தகர ப்வுடர் டப்பாக்களில் போட்டு வைக்கின்றனர். சிறிய பிலிண்ட் (Flint) கல்லை இடது கை விரலில், வலது கை விரலினால் ஒரு தட்டையான சிறிய இரும்புத் துண்டினால் உரசித்தட்டி, தீயை மூட்டுவர். கை விரல்களின் இடையே வைத்துள்ள பஞ்சு, காய்ந்த இலைத்துண்டுகளில் தீப்பொறிகள் பட்டு, நெருப்பு உண்டாக்கப்படுகிறது. இப்பழக்கம் நாளடைவில் மறைந்துள்ளது.

எறுமைப்பாறை கிராமத்தில் சுமார் இருபது கூரை வீடுகளில் காடர் வாழ்ந்து வருகின்றனர். முற்காலத்தில் பெட்டிபோன்ற அமைப்புடைய மூங்கிலினால் முற்றுமாகக் கட்டப்பட்ட வீடுகள் தற்போது காணப்படவில்லை என்றாலும், சாதாரண, எளிய குடிசைவீடுகள் முக்கோண வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இக்குடிசைகளின் கூரை இத்தாயி (Ithai) எனப்படும் கொடியின் இலைகளால் மூடப்படுகிறது. சில சமயங்களில் தேக்குமர இலைகளும் கூரைக்கு உதவுகின்றன. காடரின் இத்தகைய கூரைவீடுகள் மலைச்சரிவில் ஆங்காங்கே சற்றுத்தள்ளி, தனித்தனியே



காடர்கள்

அமைக்கப்படுகின்றன. வீட்டைச் சுற்றிலும் புல், செடிகள் அகற்றப்பட்டு, அவ்விடங்கள் கொத்தப்பட்டு, மரவள்ளி, சர்க்கரைவள்ளி, மாவட்டக் கிழங்கு, காவாத்துக் கிழங்கு, பப்பாளி,பலா, மாமரம், கொய்யா, யூக்கலிப்டைஸ் ஆகிய மரங்களும் நடப்படுகின்றன. இவ்விதமாகத் தனித்தனியே குடிசைகளை அமைத்தலும், வீட்டைச் சுற்றிய நிலத்தில் சிறு தோட்டங்களை அமைப்பதும், நெல்லை, குமரி மாவட்டக் காணிப்பழங்குடிகளைப் போன்றே காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விதமாக "நிழலின் பார்வையில் பயிரிடுதல்" முக்கியமாக உணவைச் சேகரிக்கும் பழங்குடிகளிடம் காணப்படுகிறது.

காடர்களின் முக்கிய பணி, உணவைக் காடுகளில் சேகரிப்பதாகும். மரம்,செடி, கொடிகளை வெட்ட உபயோகிக்கும் முக்கிய வெட்டும் கத்தி - மண்டைக் கத்தியாகும். இதன் மரப்பிடி கேரளத்தின் தழுவலைப் பின்பற்றியதாக காணப்படுகிறது. மற்றொரு கத்தி, கொக்கிரக் கத்தி- இது நீண்ட கழியுடன் இணைக்கப்பட்டுள்ளது. மூன்றாம் கத்தி- கோல்வடிக் கத்தியாகும். இது தோண்டும் கத்தி (Digging Stick) அல்லது கொத்து வகையைச் சார்ந்ததாகும். நீண்ட கழியின் ஒரு நுனியில் தட்டையான இரும்புக் கத்தியை இணைத்து, காடர் மகளிர் காட்டிற்குச் சென்று, காட்டுக் கிழங்குகள், வேர்கள், தண்டுகள் ஆகியவைகளைப் பூமியிலிருந்து தோண்டி எடுப்பர். இவைதவிர, காடுகளில் கிடைக்கும் கொட்டைகள், தேன், மெழுகு, இஞ்சி, மஞ்சள், குங்கிலியம் ஆகியவைகளையும் சேகரித்து அவற்றை டாப்சிலிப் பகுதியிலுள்ள தூணக்கடவு மலை வாழ் பழங்குடிகளின் பொருள் வாணிபக் கூட்டுறவுக் கழகத்திற்குக் (Hill Range Co-operative Marketing Society) கொடுத்து தினக்கூலியைப் பெறுவர்.

காட்டுப் பொருள்களைச் சேகரிப்பதில், முக்கியமாகத் தேனைக் காட்டு மரங்களிலிருந்து சேகரிப்பதில் காடர்கள் வல்லுநர்கள். மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில் இவர்கள் தேனைச் சேகரிக்கின்றனர். தேன் கூடு இருக்கும் மரத்தில் ஏறுவதற்கு ஆறு அங்குலம் நீளமுள்ள மூங்கில் பத்தைகளை ஒரு முனையைக் கூர்மையாகச்செதுக்கி வைத்து, அவற்றை ஒவ்வொன்றாக மரத்தின் தண்டில் வலப்புறம், இடது புறமாக மாற்றி மாற்றி அடித்து இறக்கி, அவைகளைப் படிக்கட்டுகளாகப் பயன்படுத்தி, தங்கள் கால்பாதங்களை மாறிமாறி அவைகளில் வைத்து மரத்தில் உயர ஏறுவர். இம்முறையை இன்னமும் காடர் பின்பற்றுகின்றனர். தேனைச் சேகரிக்க உபயோகித்த மூங்கில் பாத்திரங்களை இன்று தங்களது உணவுப் பொருள்களைச் சேகரித்து வைக்கும் குடுவைகளாக அல்லது அளவைகளாக அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

பயிர்த்தொழிலில் ஈடுபட இவர்களுக்கு விருப்பம் இல்லை. ஏனென்றால், முயல், நரி, காட்டுப்பன்றி, யானை போன்ற விலங்குகள் பயிர்களை மற்றும் தங்களது தோட்டங்களை நாசப்படுத்தி விடுவதாகக் கருதுகின்றனர். இன்னும் ஒரு சிலர் உண்டை வில்லை (Pellet Bow)யை வேட்டையாடப் பயன்படுத்துகின்றனர்.

டாப்சிலிப்பில் மலைவாழ் சிறுவர்களுக்கெனப் பள்ளி



கொத்தும் கருவியுடன் காடர்ப் பெண்

அமைக்கப்பட்டுள்ளது. காடரின் மொழி, தமிழும், மலையாளமும் ஆகும். இறந்தவர்களைப் புதைக்கின்றனர். பேய், பிசாசுகளில் நம்பிக்கை உண்டு.

மறைந்து வரும் காடர்களின் மேற்குறிப்பிட்ட சிறப்பு அறிகுறிகளை என்றும் நினைக்கத்தக்கவகையில் அவர்களின் மூங்கிற் பொருட்கள் (தேன் சேகரிக்கும் பாத்திரம், கூடை, பாய், தட்டு, சீப்பு) மற்றும் கத்திகள், முக்கியமாகத் தோண்டும் கொத்து, சிக்கி முக்கிக்கல், உண்டைவில் ஆகிய ஒரு டஜனுக்கு மேற்பட்ட அரும்பொருள்களை, அருங்காட்சியக இயக்குநரின் மேற்பார்வையின்கீழ், (பொள்ளாச்சி டாப்சிலிப் பகுதியில் பயணத்தில் கிடைத்தவை) கடந்த பிப்ரவரி மாதம் அமைக்கப்பட்ட, கோவை மாவட்ட அருங்காட்சியகத்தில் 'டையோரமா' (diorama) காட்சிப் பெட்டியில், வண்ண ஒளிப்படங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## குடும்ப நலத்திட்டம் பின்பற்றுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

குடும்ப நலத் திட்டங்களைப் பிரபலமாக்குவதற்காக நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள் நல்ல பலனை அளித்துள்ளன. அறுவைச் சிகிச்சை, கருத்தடை மாத்திரைகள், உறைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை முதல் ஆறு மாதங்களில் 1.80 கோடியாக அதிகரித்துள்ளது. இது 7.81 சதவிகித அதிகரிப்பாகும்.

கருத்தடை உறைக்கான சமூக விற்பனைத் திட்டத்தின் கீழ் 1988 டிசம்பர் முதல் 1989 பிப்ரவரி வரை 91.73 மில்லியன் நிரோத் உறைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கருத்தடை மாத்திரைகளின் விற்பனையும் 10.50 இலட்சத்திலிருந்து 14.44 இலட்சமாக உயர்ந்துள்ளது.

இந்தியத் தொழில் நுட்பத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஐம்பது சதவீத காப்பர் டி சாதனங்களை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்க வேண்டும் என்று சுகாதாரம்-குடும்ப நலத்துறை அமைச்சகம் தீர்மானித்துள்ளது.



## இனிக்கும் செய்தி

ஆண்டொன்றுக்குச் சர்க்கரை உற்பத்தி செய்வதில் உலக நாடுகளிலேயே இந்தியா முதலிடம் வகிக்கிறது. இவ்வாண்டு மே மாதம் 15-ஆம் தேதி வரை 101.64 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்து உலகச் சாதனை படைத்துள்ளது.

இந்தியா தனது சென்ற ஆண்டின் சாதனையான 91.10 இலட்சம் டன்னை முறியடித்து 16.51 இலட்சம் டன் கூடுதலாக உற்பத்தி செய்துள்ளது.

இந்தியா தவிர உலகில் அதிகமான சர்க்கரை உற்பத்தி செய்யும் பிரேசில் நாட்டின் 1983-ஆம் ஆண்டின் சாதனை 88.44 இலட்சம் டன் மட்டுமே.

இவ்வாண்டின் கூடுதல் உற்பத்திக்கு முக்கிய காரணம் அரசினால் அதிகமாகச் சாறுபிழியும் கரும்பாலைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஊக்கத் தொகையே ஆகும்.

இந்தப் புதிய சாதனை படைத்தமைக்காக மத்திய உணவு, பொது விநியோகத் துறை அமைச்சர் திரு. நாதுராம் மிர்தா அவர்கள், சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்டியுள்ளார்.

அடுத்த பருவத்தில் விரைவில் சாறு பிழிவதற்கான ஊக்கத் தொகையை அரசு ஏற்கெனவே அறிவித்துவிட்டது.

# பார் உய்யப் பாடிய பாவேந்தர்

— டாக்டர் அ. முத்துசாமி



இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞர்களுள் தலைசிறந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். 'புரட்சிக்கவிஞர்' எனவும், 'பாவேந்தர்' எனவும் போற்றப்பெறும் பாரதிதாசன் 40600 அடிகள் பாடியுள்ளதாகக் கணக்கிடுவர். இவர்தம் பாடல்களில் கருத்து உண்டு; கற்பனை உண்டு; உணர்ச்சியுண்டு; ஒப்பற்ற வடிவம் உண்டு; புதுமையுண்டு; புரட்சியுண்டு; எளிமையும் இனிமையும் உண்டு. சுருங்கக்கூறின், பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்கள் கற்பவர்களையும் கேட்பவர்களையும் நன்னெறிப்படுத்தும் கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன எனின் மிகையாகாது.

**நிறைவாழ்வு வாழக் கல்வி வேண்டும்**

உலக மாந்தர் அனைவரும் அறியாமை நீங்கி அறிவுடையவராகத் திகழக் கல்வி மிகமிக இன்றியமையாததாகும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த பாரதிதாசன் கல்வி கற்றவரே முழுமையான வாழ்வை எய்துவர் எனவும், மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார். இவ்வுண்மையினை,

''கற்க எவரும், எக்குறை நேரினும்
நிற்காது கற்க, நிறைவாழ்வு என்பது
கற்கும் விழுக்காடு காணும், பெண்கள்
கற்க! ஆடவர் கற்க! கல்லார்
முதிய ராயினும் முயல்க கல்வியில்''

என உணர்த்துகின்றார்.

**பொல்லாங்கினை விட்டொழித்திடல் வேண்டும்**

இவ்வுலகில் நல்லவர்களிடையே நயவஞ்சகர்களும் நிறைந்துள்ளனர். இத்தகையோர் கற்றனவும் கேட்டனவுமாகிய அறக்கருத்துக்கள் அவர்தம் மனத்தடாகங்களைப் பண்படுத்தியதாகப் புலப்படவில்லை. இவர்களனைவரும் தாம் கற்றனவற்றையும் கேட்டனவற்றையும் சுயநலம் காரணமாகக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு மனிதசமுதாயத்திற்குக் கேடு சூழ்வதையே குறியாகக் கொண்டுள்ளனர். குறிப்பாகத் தமிழரே தமிழினத்தவர்க்குத் தீங்கு செய்வதைக் கண்டு மனம் வெதும்பிய பாவேந்தர்,

''தாய்நாடாம் தமிழ் நாட்டில்
இருக்கின்றாய் நீ!
புகுந்த நாடல்ல இது! பிறந்த நாடே!
பொல்லாங்கு கனவிலும் எண்ண
வேண்டாம்''

என இடித்துரைக்கின்றார்.

**பொய்யும் புரட்டும் நீங்கப் புரட்சி வேண்டும்**

புரட்சிக்கவிஞரின் புரட்சிக்கீதங்கள் பொய்யையும் புரட்டையும் நையப்புடைக்க வல்லனவாகும். புரட்சி எனும் சொல் தலைகீழ் மாற்றம் என்ற பொருளை உணர்த்தும். மனிதசமுதாயத்தில் ஆண்டாண்டுக் காலமாக நிலவிவருகின்ற தகாத வழிமுறைகளை மாற்றியமைப்பதே புரட்சியாகும். பாவேந்தரின் புரட்சி மனப்பான்மையை,

''ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பாநீ!''

என்னும் பாடலடிகள் பறைசாற்றி நிற்கின்றன. இப் பாடலடிகள், ஏழை பணக்காரன் என்ற நிலைமாறிச் சமதர்ம சமுதாயம் அமையவேண்டும் என வலியுறுத்துகின்றன.

''புதியதோர் உலகம் செய்வோம் — கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்''

எனப் பாடுவதும் அவர்தம் புரட்சி மனப்பான்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**பொதுவுடைமைக் கொள்கை போற்றிடல் வேண்டும்**

புரட்சிக்கவிஞர் பொதுவுடைமைக் கொள்கையை வற்புறுத்தியவர். ஏற்றத்தாழ்வற்ற புதிய உலகம் உருவாவதற்குப் பொதுவுடைமைக் கொள்கையைப் பாரெங்கணும் பரப்பிப் பாதுகாத்து வளர்க்கவேண்டும் என மனிதசமுதாயத்திற்கு அறைகூவல் விடுக்கின்றார். இவ்வுண்மையினை,

''பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும்
சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்''

எனும் அவர்தம் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

**சாதிக்குச் சாவுமணி அடிக்கவேண்டும்**

சாதியொழிப்புக்கு வித்திட்டவர்களுள் தலையாயவர் பாரதியார். அவரைப் பின்பற்றி அவர் தம் கவிதாமண்டலத்தைச் சார்ந்த பாரதிதாசன், சாதிப்பாகுபாட்டை மனிதசமுதாயத்திலிருந்து வேரோடு கிள்ளி எறிய வேண்டும் என இயம்புகின்றார்.

''பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல்
மடமை — இந்தப்
பிழை நீக்குவதே உயிருள்ளாரின் கடமை''

எனவும் உணர்த்துகின்றார்.

**கலப்புமணம் பூண்டிட வேண்டும்**

கலப்பில் வளர்ச்சியுண்டு என ஆன்றோர் உரைப்பர். போட்டியும் பூசலும் அற்ற நல்வாழ்வுக்கு வழி வகுப்பது கலப்புமணமே என்பது பாவேந்தர் கண்ட உண்மை.

''கலப்பு மணம் ஒன்றே
நல்வழிக்குக் கைகாட்டி''

எனக் கலப்புமணத்திற்கு வரவேற்பு இசைப்பது அவர்தம் சீர்திருத்த மனப்பான்மையைத் தெற்றெனக் காட்டுகின்றது.

**செம்மண் நிலமும் பெய்தமழையும்போல் சேர்ந்திட வேண்டும்.**

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் உள்ளத்தால் ஒன்றுபடுவதைச் செம்புலப் பெயல் நீரார் என்ற சங்கப்புலவர்,

''யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே''

எனப் பாடுகின்றார். இப்பாடலின் சிறப்பினை எண்ணியெண்ணி இன்புற்ற புரட்சிக்கவி, பாமரரும் அறிந்து கொள்ளும் வண்ணம் அதனை,

''என் தாய் யாரோ
உன் தாய் யாரோ — பெண்ணே,
என் தந்தை உன் தந்தை உறவினர் அல்லரே!
இன்று இங்கே உனை எவ்வாறு அடைந்தேன்?
நீ என்னை எவ்வாறு அறிந்தாய்? — நாம்
செம்மண் நிலமும் பெய்த மழையும் போல்
சேர்ந்தோம் அடடா இன்பம் ஆர்ந்தோம்
இருண்ட நெஞ்சில் வீறிட்ட காதலே
இருவரையும் சேர்த்தது இவ்வையம் மீதே மருண்ட
மக்கள் மாப்பிள்ளை பெண்களை
மனத்தில் கூட்டுவ தாக எண்ணுவார்.''

என எளிமைப்படுத்தி இனிமையாகப் பாடுவது அவர்தம் கவிப்புலமைக்குச் சிறந்த சான்றாகும்.



என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால் அன்பால்
உன்னத இமமா மலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல்எந் நாளோ?

**தமிழின் பெருமை**

பாவேந்தர் தமிழ் மொழியைச் சிறப்பித்துப் பாடியுள்ளதைப்போல் வேறு எவரும் பாடவில்லை என்றே கூறலாம். தமிழ்மொழியை அமுதம் என்றும், உயிருக்கு நிகரானது என்றும் குறிப்பிடுவது அதன்பால் அவருக்குள்ள பற்றினை எடுத்துக்காட்டுகின்றது.

''தமிழுக்கும் அமுதென்று பேர் — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!''

எனவும்,

''கனியிடை ஏறிய சுளையும் — முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் — காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் — தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும், — தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!''

எனவும் அன்னைத் தமிழைப் பாவேந்தர் பாரதிதாசன் புகழ்ந்தேத்துகின்றார்.

**அழகின் சிரிப்பு**

நீலவானில் பவனிவரும் நிலவுப் பெண்ணின் எழில்மிகு காட்சியை,

''நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை!
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ!''

எனப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

பாவேந்தர் பாரதிதாசன் தான் உணர்ந்த கருத்தை - ஒப்பற்ற கருத்தை - உலக மாந்தரும் உணர்ந்து உய்ய வேண்டும் எனும் நன்னெஞ்சம் படைத்தவர். அவர்தம் நன்னெஞ்சத்திலிருந்து பெருக்கெடுத்த கவிதைக் கடலில் மூழ்கி வாழும் நெறியறிந்து வாழ்வாங்கு வாழவேண்டியது ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

**வளரும் வேளாண்மை:**

# பவர்டில்லரால் இயங்கும் கருவி

பவர்டில்லர் ஒரு எளிய இயந்திரம். ஒரு டிராக்டர் நான்கு சக்கரங்களைக் கொண்டு செய்யும் பணிகளை இந்தப் பவர்டில்லர் இரண்டே சக்கரங்களின் துணை கொண்டு செய்கிறது. இதனை இயக்குவதற்குச்சிறப்பான திறமையோ, தொழில் நுட்பமோ தேவையில்லை. ஜப்பான், தாய்லாந்து, தென்கொரியா போன்ற நாடுகளில் பவர்டில்லர்களைப் பண்ணைகளில் பெண்களே இயக்கிப் பணிபுரிகிறார்கள். இதனை இயக்குவதற்கு ஓட்டுநர் உரிமம் போன்ற கட்டுப்பாடுகளும் இல்லை. ஆகவே, நமது உழவர்களும் இதனை வெகு விரைவில் எளிதாகக் கற்றுக் கொள்ளலாம்.

இது, நெல் நடவிற்குச் சேறு கலக்கி நிலத்தை மிகச் சிறந்த முறையில் பண்படுத்துவதற்கும், கரும்புப் பயிர் சாகுபடி நிலங்களில் கரும்பு வெட்டிய பிறகு உழுவதற்கும் மிகவும் உபயோகப்படுகிறது. சாதாரணமாக பவர்டில்லருடன் இணைப்புக் கருவிகளாகச் சுழல் கலப்பை, இரும்புக் கலப்பை, கொத்துக் கலப்பை மற்றும் டிரெயிலர் போன்ற கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகி வருகின்றன.

தற்பொழுது பவர்டில்லருடன் இணைத்து இயங்கக்கூடிய பல்வேறு கருவிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் சமப்படுத்தும் மற்றும் வரப்பு அமைக்கும்கருவியும் ஒன்றாகும்.


—திரு கே. கதிர்வேல்
உதவிப் பேராசிரியர்

திரு ஆர். கருணாநிதி
பேராசிரியர் மற்றும் தலைவர்.

திரு டி.வி. ஜாப்,
இணைப் பேராசிரியர்

பண்ணை எந்திரங்கள் துறை,
வேளாண் பொறியியற் கல்லூரி,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்,
கோவை.


இக்கருவியைப் பண்படுத்தப் பட்ட நிலத்தில் உயரமான பகுதியில் உள்ள மண்ணைத் தாழ்வான பகுதிக்குக் கொண்டு சென்று நிலத்தைச் சமப்படுத்துவதற்கும், புன்செய் நிலங்களில் அதிக மழை நீரினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுப்பதற்கும், மண்ணின் ஈரத்தன்மை காக்கப் பெறுவதற்கும் பயன்படுத்தலாம்.

பவர்டில்லரால் இயக்கப்படும் இக்கருவி ஒரு மீட்டர் அகலமுள்ள கெட்டியான இரும்புத் தகட்டினால் உள்நோக்கி லேசாக வளைக்கப்பட்டு உள்ளது. இத்தகட்டின் கீழ்ப்பாகத்தில் மண்ணை வெட்டிச் செல்வதற்கான இரும்புப் பட்டை பொருத்தப்பட்டுள்ளது. இரு பக்கங்களிலும் மண் சிந்துவதைத் தவிர்க்க பக்கவாட்டில் சிறகுகள் இணைக்கப்பட்டுள்ளன. இக்கருவி பவர்டில்லரின் முன்புறம் நான் நிலைப்படுத்தும் கைகளின் மூலம் உறுதியாகப் பொருத்தப்பட்டுள்ளன.

பவர்டில்லரால் இக்கருவி உந்தி முன்னுக்குத் தள்ளப்படும்பொழுது, இரும்புப் பட்டையினால் வெட்டப்பட்ட மண் சேகரிக்கப்பட்டு, வேண்டிய இடத்திற்குக் கடத்தப்படுகிறது. இக்கருவி, நிலத்தில் செல்லும் ஆழத்தைச் சுழல் கலப்பையின் பின்புறமுள்ள உருளையின் மூலம் கட்டுப்படுத்தலாம்.




பவர்டில்லரால் இயங்கும் சமப்படுத்தும் - வரப்பு அமைக்கும் கருவி

| | |
|---|---|
| 1: பவர் டில்லர் | 4. வெட்டு முனை |
| 2. சுழல் கலப்பை | 5. பக்கவாட்டுச் சிறகு |
| 3. நிலைப்படுத்தும் கைகள் | 6. சமப்படுத்தும் தகடு |

**சிறப்பியல்புகள்:**

- மேட்டுப் பகுதியிலிருந்து மண்ணைப் பள்ளத்திற்கு எடுத்துச் செல்ல மிகவும் உதவும்.
- மரச் சட்டம் மற்றும் பல வகையினால் நிலத்தைச் சமப்படுத்துவதை ஒப்பிடும்பொழுது நேரம் மிச்சப்படுவதுடன், நிலம் சீராகச் சமப்படுத்தப்படுகிறது.
- ஒரு கன மீட்டர் மண்ணை ஒரு மீட்டர் நீளத்திற்குக் கடத்த ஆகும் செலவு ரூ.1 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.
- இக்கருவியின் விலை சுமார் ரூபாய் 1,200 மட்டுமே.

மேலும் விவரங்கள் பெற அணுகவேண்டிய முகவரி:

பேராசிரியர் மற்றும் தலைவர்
பண்ணை எந்திரங்கள் துறை
வேளாண் பொறியியற் கல்லூரி
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்
கோவை - 641 003.

—நன்றி: 'செய்தி மடல்'

## அரசின் அரும்பணிகள்

★ தொய்வுற்ற தொழில் வளம் சிறப்புறச் செயல்பாடுகள்!

★ குனிந்து கிடந்த நிர்வாகம் நிமிர்ந்து நிற்கிறது!

★ மகளிர் நல்வாழ்வுக்கு அடுக்கடுக்கான திட்டங்கள், சட்டங்கள்!

★ எங்கிருந்து முறையீடு கிளம்பினும் உடனடியாக அதனைக் கவனிக்கும் அக்கறையுடன் அரசுப் பணிகள்!

★ கண்ணியமான பரிபாலனம் நடைபெறக் கண்டிப்பான ஆணைகள்! கடுமையான நடவடிக்கைகள்!

★ மாணவர்க்குப் பல்வேறு சலுகைகள்!

★ அரசு அலுவலர், ஆசிரியர், தொழிலாளர் கோரிக்கை நிறைவேற்றம்!

★ ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் எண்ணற்ற பணிகள்!

★ கிராமங்களைச் செழிப்புறச் செய்யும் வளர்ச்சித் திட்டங்கள்!

★ விவசாயிகள் நலனில் தனி அக்கறை!

★ ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மை மக்கள் நலனில் நாட்டம்!

★ மதப்போர் - சாதிப்போர் தூண்டி விடுவோர் மீது உரிய நடவடிக்கை!

★ அமைதியில் ஆர்வம்!

★ அடக்கமான போக்கு!

★ இந்திய ஒருமைப்பாட்டிற்கான உரிய நடிவடிக்கை!

★ மாநில உரிமைதளை என்றுமே விட்டுக் கொடுக்காத உரிமைக்குரல்!

## நீரிழிவு நோய் போக்கும் வெந்தய மருந்து

நாள்தோறும் உணவில் வெந்தயத்தைச் சேர்த்துக் கொண்டால் நீரிழிவு நோய் கட்டுப்படுகிறது; மாரடைப்பை ஏற்படுத்தும் கொலஸ்ட்ரால் என்னும் இரத்தக் கொழுப்பும் குறைகிறது. வெந்தயம், இரத்தத்தில் கணிசமான அளவு குளுகோஸைக் குறைக்கிறது. சிறுநீரில் சர்க்கரைச் சத்தை 64 சதவிகிதம் வரை குறைக்கிறது.

இந்த உண்மையை ஐதராபாத்தில் உள்ள தேசிய சத்துணவு நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இவர்கள் இரண்டாண்டுகளுக்கு முன்னரேயே வெந்தயத்தின் மருத்துவ குணத்தை ஆய்ந்து தெரிவித்தனர்என்பது குறிப்பிடத்தக்கது.

கண்சிகிச்சைக்குப் பயன்படக்கூடிய 'சினிராரியா மாரிடிமா' என்னும் ஓமியோபதி மூலிகை நீலகிரி மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மத்திய ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த மூலிகை இந்தியாவில் வளராது என்ற கருத்து இதுவரை நிலவி வந்தது. அதனால் தாவரத்தின் சாறு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டு வந்தது. இனி அதற்கு அவசியம் இருக்காது என்று நம்பப்படுகிறது.

# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

## "உங்கள் கவனத்திற்கு!"

தமிழக அரசாணை எண். 1101/89 நிதி (பரிசுச்சீட்டு) நாள் 6.10.89 மற்றும் அரசுக் கடித எண். 59482/ நிதி (பரிசுச்சீட்டு) நாள் 13.2.90ன் படியும், **தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் பூடான் (உயர்நீதி மன்ற 26.6.90 தேதியிட்ட இடைக்கால ஆணை நிபந்தனைகளுக்கு உட்பட்டு) ஆகிய மாநில பரிசுச் சீட்டுக்கள் மட்டுமே தமிழ்நாட்டில் விற்பனை செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது.**

தமிழக உயர்நீதிமன்றம் தனது 3.5.90 நாளிட்ட தீர்ப்பில் அரசாணையை அங்கீகரித்து **கீழ்க்கண்ட மாநிலங்களின் பரிசுச்சீட்டுக்களின் விற்பனையை தமிழ்நாட்டில் தடை செய்துள்ளது:-**

- டெல்லி
- மணிப்பூர்
- மிஜோராம்
- அசாம்
- அரியானா
- நாகலாந்து
- கோவா
- மேகாலயா
- பஞ்சாப்
- சிக்கிம்
- அருணாசல பிரதேசம்
- ராஜஸ்தான்
- இமாச்சல பிரதேசம்

எனவே மேற்படி பரிசுச்சீட்டுக்களை தமிழ்நாட்டில் விற்பனை செய்வதோ, அவற்றிற்கான விளம்பரத்தை வெளியிடுவதோ, அது குறித்து செய்தி வெளியிடுவதோ, குலுக்கல் முடிவுகள் வெளியிடுவதோ **இந்திய குற்றவியல் சட்டம் பிரிவு 294 - A ன் படி குற்றமாகும். மேற்கண்ட விதிகளை மீறுபவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.**

இயக்குநர்,
தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டுத்துறை
சென்னை-600 001.





தூயபணி செய்விப்பான் தலைவன்; என்றும்
தொண்டினையே தன்வாழ்வின் முதலாய்க் கொண்டு
தூயபணி செய்பவனே ஆசான்; பாரில்
எண்டிசையும் பேர்மணக்க நேர்மை காட்டி
எல்லோர்க்கும் அறிவூட்டும் திறமை யாலே
பண்டுமுதல் என்றென்றும் அறவோர் போற்றும்
பண்புநிறை வழிகாட்டி அவனே யாவான்.

அன்றன்று மறவாமல் உயர்வை எண்ணி
அறிவுதரும் நூல்களையும் தேடிக் கண்டு
என்றென்றும் சலிப்பின்றிக் கற்கும் தன்மை
இவனைஒரு மாணாக்கன் என்றே செப்பும்.
நன்றென்றும் தீதென்றும் நயமாய்ச் சொல்லி
நாள்தோறும் உய்வதற்கு வழியைச் சொல்லி
என்றென்றும் மாணாக்கர் உயர்வே எண்ணி
இருப்பதனால், அவர்கட்கு அன்னை யாவான்.

படிப்பினிலே மாணவர்க்கு ஆர்வம் ஊட்டி,
படிப்பிக்கும் முறைமையிலே திறமை காட்டி,
துடிப்பான அவர்நெஞ்சில் தூய்மை சேர்த்து,
தூண்டாத மணிவிளக்கின் தன்மை ஏற்றி,
நடிப்பான இவ்வுலகைப் புரிந்து கொண்டு
நயமுள்ள வாழ்வதனைத் தேர்ந்து கொள்ளும்
படிப்பினையை அவர்மனதில் பதிய வைக்கும்
பண்புநிறை அன்பதனால் தந்தை யாவான்.

தீங்குசெய்த போதினிலே இடித்துக் கூறி
தீமைதனை வாராமல் தடுத்துக் காத்துப்
பாங்குடனே வாழ்வதற்கு வழியும் கூறும்
பரிவுமிகப் பெற்றதனால் நண்பன் ஆவான்.
ஆங்காங்கே இருக்கின்ற மூடர் நெஞ்சில்
அறிவுநிறை சொல்லேரால் உழுது, வித்தி
ஓங்கி உயர் கலைகளையும் அழியச் செய்து
உலகுயரச் செய்வதனால் உழவன் ஆவான்.

அன்புக்கு ஏங்குகின்ற பிஞ்சு நெஞ்சும்
அறிவுக்கு ஏங்குகின்ற ஏழை நெஞ்சும்
பண்பினிலே மிகஉயர்ந்த ஆசான் தன்னால்
பயன்பெறுவதால் அவனும் வள்ளல் ஆவான்!
என்பினிலே வன்மைபெற்ற ஒரு மா ணாக்கன்
ஏதமிலா ஒருவனைத்துன் புறுத்தக் கண்டு
அன்பினிலே அருகழைத்து அச்சம் ஊட்டி
அன்புமுறை செய்வதனால் மன்னன் ஆவான்.

அவனன்றி ஓரணுவும் அசையா தென்ற
அருள்மிகுந்த சொற்களுக்குப் பொருத்த மாவான்;
தமரென்றும் பிறரென்றும் பாரான்; பாரில்
தனக்குப்பொருள் குவிப்பதற்கும் எண்ணான்; அன்னான்
கவணின்று புறப்பட்ட கல்லைப் போலக்
கலக்கமின்றித் தன்செயலில் ஊக்கம் கொள்வான்;
இவனின்றி இவ்வுலகில் ஏதும் இல்லை;
இவன்புகழே கதிர்உலவும் வானின் எல்லை!

**—கவிஞர் அகில். வரதராசன்**



# அள்ளக் குறையாதது கல்விச் செல்வம்

## முதல்வர் கலைஞர்

பல்கலைக் கழக வேந்தர், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்களே,
புதுவையின் துணை நிலை ஆளுநர் அவர்களே,
பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களே,
புதுவை முதலமைச்சர் அவர்களே,
அமைச்சர் பெருமக்களே,
ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களே,
மாணவச் செல்வங்களாம் அன்பு உடன்பிறப்புக்களே!

இந்தியத் திருநாட்டின் குடியரசுத் துணைத் தலைவராகவும் புதுவை மையப் பல்கலைக் கழகத்தின் வேந்தராகவும் அறிவுசால் பெருமகனாகவும் எளிமையின் இருப்பிடமாகவும் நாட்டின் தகைமைசால் சான்றோரில் ஒருவராகவும் திகழும் மேதகு சங்கர் தயாள் சர்மா அவர்களின் முன்னிலையில் பட்டமளிப்பு விழா உரையாற்றுவதில் மெத்தவும் பெருமை கொள்கிறேன்.

துடிப்பும் கல்வித் தொண்டாற்றும் ஆர்வமும் கொண்ட துணை வேந்தர் வேங்கடசுப்ரமணியம் அவர்கள் இந்த இரண்டாம் பட்டமளிப்பு விழாவில் நான் கலந்து கொள்ள வாய்ப்பு நல்கியமைக்கு என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடல் அலைகளின் ஒலியைத் தாலாட்டாகக் கொண்டு உறக்கம் கொள்ளாமல் - எழுச்சியூட்டும் சங்கநாதமாகக் கருதி எரிமலைச் சொற்களால் விடுதலைக் கவிதை உரைத்த பாரதியும் -'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே' - எனத் தோள் தட்டிய பாரதிதாசனும் உலவிய இந்த மண்ணின் பெருமை விண்ணை முட்டி; அதற்கு மேலும் உயர்ந்து நிற்பதாகும். ஆனந்தரங்கம் பிள்ளை, அரவிந்தர் என்ற புகழுக்குரிய பெருமக்களின் பெயர்கள் சொல்லிப் பூரிக்கும் புதுவையில் பாண்டிச்சேரி பல்கலைக் கழகமெனும் இந்த அற்புதப் பாசறையில் படைக் கலன்களாக உருவெடுத்துள்ள மாணவ இளம்பிறைகளாம் வளர் பிறைகள் முழு நிலவுகளாய் ஒளியுமிழ்ந்து நாட்டின் நலனுக்கும் ஒற்றுமைக்கும் சமுதாயச் செழுமைக்கும் பணியாற்றிடல் வேண்டுமென இந்தப் பட்டமளிப்பு விழாவில் வாழ்த்துகிறேன்.

நீடு துயில் நீக்கப் பாடி வரும். நிலா - காடு கமழ வந்த கற்பூரச் சொற்கோ - எனப் பாரதியைப் பாவேந்தர் பாடிப் புகழ்ந்தது போல், மாணவ சாதியைப் பார்த்து நான் மட்டுமல்ல; நாடே புகழ்ந்திடல் வேண்டும்.

'மாணவ சாதி' என மற்றொரு சாதி படைக்கின்றேன் என வியப்படையாதீர்! இருக்கின்ற சாதி மதச் சழக்குகளால் இருட்டறையில் கிடக்கின்ற இவ்வுலகைத் திருத்தி அமைத்து, 'ஒன்றே குலம் உண்மையே தெய்வம்' என ஆக்குதற்கு வல்லது மாணவ சாதியொன்றே எனும் நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு.

கற்றதனால் ஆய பயன் கண் மூடிப் பழக்கங்களை மண் மூடிப் போகச் செய்வது தானே! பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றிருந்த நிலை மாற்றிட இடையில் எழுந்த சதிக்குக் கால் முளைத்தன்றோ ''சாதி'' என்று ஆயிற்று! அந்தச் சாதி; இளங்குருத்துக்களாம் மாணவர் குழாமிடையும் ஊடுருவி; சாதிகள் இல்லையடி பாப்பா என்ற சங்க நாதமும் எட்டாத; கேளாக் காதினராய் அவர்களை ஆக்கி விட்டதே என எண்ணும் போது எத்துணை வேதனை! எத்துணை சோகம்!

எனவே சாதிப் பிணக்குகள், மத பேதங்கள் அகற்றி; அனைவர்க்கும் உரிய வாய்ப்புகள் கிடைத்திடத் தக்க சமூக நீதியெனும் கமலம் மலரக் கதிரொளியாகத் திகழ்வோம் என இற்றை நாளில் இளைய சமுதாயம் சூளுரை மேற்கொள்ளுமாக! இது என் விழைவு!

கல்வித் துறையில், சமுதாயத் துறையில் நலிந்திருப்போரை அடையாளங் கண்டு அவர்கட்கு சம வாய்ப்பு உரிமைகளையும், உதவிகளையும் வழங்குவதற்கு மட்டுமே ஒரு கால கட்டம் வரையில்; சாதி எனும் சொல் புழக்கத்தில் இருக்க அனுமதிக்கலாமே தவிர, அனுமதிக்கப்படும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, சாதிகள் ஒன்றோடொன்று மோதி, கலாம் விளைப்பதையோ, நாடு அமளிக் காடாக மாறுவதையோ, மனித நேய உணர்வு கொண்டோர் விரும்பிடார் என்பது மட்டுமல்ல; வெறுத்திடவும் தயங்கார்! அத்தகைய புதிய சிந்தனையாளர் பட்டியலில் மாணவர்கள், தங்களை இணைத்துக் கொள்ளாவிடில் பட்டங்கள் பெற்றுப் பயன் என்ன? எனும் கேள்விக்கு விடை, கேலிக்குரியதாகவே கிடைக்குமன்றோ!

---

மேலே உள்ள படத்தில்...

புதுவைப் பல்கலைக்கழக 2-வது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற- மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. சங்கர்தயாள் சர்மா மேதகு புதுவை துணைநிலை ஆளுநர் திருமதி சந்திரவதி, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர், மாண்புமிகு புதுவை முதல்வர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு தமிழ்நாடு-புதுவை மாநில அமைச்சர் பெருமக்கள் மற்றும் புதுவைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு.வேங்கடசுப்பிரமணியம் ஆகியோர்.

கல்வி கழனியாகிறது! பயிற்சி உழவாகிறது! அறிவு பயிராகிறது! மணிக்கதிர் மனையை வளமாக்குகிறது! இந்த மாநிலத்தை வளமாக்க மாணவரும் மணிக்கதிர் எனக் குலுங்கிட வேண்டாமோ! இந்தத் தணியாத ஆசையைத் தான் தரங்கம்பாடித் தமிழ் பாடும் கடல் ஆடும் புதுவையிலே வெளியிட்டு, இளைஞர் உலகை வேண்டி நிற்கிறேன்; பல்வேறு தேசிய இனங்களின் உரிமையும், பல்வேறு மொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் பாதுகாப்பும் தான் இந்திய நாட்டின் வலிமைக்கும் ஒற்றுமைக்கும் அசைக்க முடியாத அரண் என உணர்ந்து செயல்பட முனைவீர் என்று!

பயமறியாப் பருவம் மாணவப் பருவம் - ஏற்றுக் கொள்கிறேன் என் அனுபவச் சுவடுகள் அழிந்து விடாமல் இருப்பதால்! அதற்காகப் பண்பு அறியாப் பருவமாக அமைந்தும், அதற்கேற்ப இயங்கியும், முளை விடும் போதே "களை" இது எனக் கழறும் நிலையும் - மொட்டாக இருக்கும் போதே கருகிடும் முடிவும் ஏற்படாமல் காத்துக் கொள்ளும் கடமையும் கட்டுப்பாடும் மாணவச் செல்வங்களுக்கு மிக மிகத் தேவை!

கறுப்பு மனிதன் - ஆனால் நெருப்பு மனிதன் - நெல்சன் மண்டேலா; வாழ்நாளின் வசந்தப் பகுதியை இருபத்தேழு ஆண்டுகள் சிறையிலேயே செலவிட்டுச் சிரித்த முகமுடன் வெளியே வந்தவன்; அவன் மாணவப் பருவத்திலேயே தனது மூதாதையர் வரலாற்றை, அவர்கள் தமது மண்ணுக்காகப் போர் பல நடத்தியதை வீரகாவியங்களாகக் கேட்டு-கேட்டதைச் செவி மடலுடன் நிறுத்திக் கொள்ளாமல் சிந்தையிலும் செப்பேடாகப் பதித்துக் கொண்டதால் தான், இன்று உலகம் அவனை உச்சி மீது வைத்து உவகைக் கூத்தாடுகிறது!

சுதந்திரம் பெற்ற நாட்டில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழுகிறோம். கோணிப்பைக்குள் கால்களை விட்டுக் கொண்டு மிக மெதுவாக நடக்கும் பந்தயத்தில் நாம் வெற்றி பெற்று விடுகிறோம்! வேகமான போட்டி எதிலும் பெரிய வெளிநாடுகளின் பக்கத்திலே கூட போக முடியாமல்



பதக்கத்தை விட்டுக் கொடுத்து; அதில் பற்றற்றவர் என்பது போலச்சமாளித்துக் கொள்கிறோம்!

எல்லா வகையிலும் உலக நாடுகள், முன்னேறிக் கொண்டேயிருக்கின்றன! விஞ்ஞானப் புதுமைகள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செய்தியாக அந்த நாடுகளில் மலர்கின்றன! கோள்களில் குடியேறி மனிதன் கோலோச்சும் காலம் வந்தே தீருமென விஞ்ஞானி கொக்கரிக்கிறான்! அணுவையும் அசைத்து அற்புதங்கள் செய்கின்றனர் அங்கே! இங்கோ அவனன்றி அணுவும் அசையாது என்றுரைத்துத் தன்னம்பிக்கையைத் தகர்த்துக் கொண்டிருக்கிறோம்!

போர்களின் விளைவால் பொசுங்கிப் போன நந்தவனங்களாகி விட்ட நாடுகள்; இப்போது அனைத்து வளமும் பெற்ற அழகிய பூஞ்சோலைகளாகப் புன்னகை புரிகின்றன! ஆனால் இங்கே புது யுகம் தோன்றிட எத்தனை யுகங்கள் தேவைப்படுமோ தெரியவில்லை! புது யுகத்தை, புரட்சி யுகத்தைப் படைத்திடும் ஆற்றல், அறிவு, செயல், சிந்தனை, துணிவு, கனிவு எல்லாம் உடையோர் இளைய தலைமுறையினர் என நம்புகிறேன்.

வெளி நாடுகளின் ஒளி பற்றிக் கூறுவதால், இங்கே எல்லாமே இருட்டில் கிடக்கிறது எனப் பொருள் கொள்ளத் தேவையில்லை. "தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பன்ன இருள், தன் கட்டுக் தலைந்தது" எனப் பாடுவாரே பாவேந்தர் பாரதிதாசன்; அதற்கொப்ப இந்தத்



பாவேந்தர் நூற்றாண்டு:

தமிழ் எங்கள் உயிரென்ப தாலே - வெல்லும்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!
தமிழென்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன்றுமேல் தமிழ் நாடெங்கும் இருளாம்!

திருநாட்டில் இருள் விலகப் போவதை அறிவித்து, ஒளி உதயமாகப் போவதை உரைத்திடும் கட்டியக்காரனாக வைகறை வெளுப்பு வந்து கொண்டிருக்கிறது. வெளிச்சத்திலும் உறங்கிக் கொண்டிருப்போர் துயில் களைய, திருப்பள்ளி எழுச்சி பாடிப் பயனில்லை. அவர்கள் துள்ளியெழுந்திடத் துந்துபி முழக்கமாக இளையோர் குரல் எங்கணும் ஒலித்திடல் வேண்டும்.

தெருக்களில் பாருங்கள்; பிச்சையெடுக்கும் பட்டாளம் ஒரு புறம்! எச்சில் இலைகளுக்குப் போரிடும் படை வரிசை மற்றொரு புறம்! வேலை காலி இல்லை எனும் பலகையைச் சுட்டெரிக்க நெற்றிக்கண் இல்லையே எனத் துடிக்கும் கூட்டம் பிறிதொரு புறம்! இந்தக் கொடுமைகளை,கோஷங்கள் மட்டுமே அகற்றி விட இயலாது! கோட்டைகளிலிருந்து அறிவிக்கப்படும் சட்டங்களோ, திட்டங்களோ மாத்திரம் மாற்றி அமைத்துவிட முடியாது! அவற்றைச் செயல்படுத்தும் மனப்பான்மை, உறுதிப்பாடு, தூய்மை, வாய்மை அனைத்தும் தூங்காமை நிலையிலே - கற்ற கல்வியைத் துணிவுடன் பயன்படுத்திட மாணவ மணிகள் பயணம் மேற்கொண்டிட வேண்டும்! மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என நினைந்திடல் வேண்டும்!

உலகின் முன்னோடிகள் நாம்! எப்படி? குடியாட்சிக்கே இலக்கணம் வகுத்து, குடவோலை முறையைச் சொன்னவர்கள் நம்மவர்! உத்திரமேரூர் செப்பேடுகள் தான் குடியாட்சிக்கு முதல் வித்திட்டது. முதன்முதல் கல்விக்கு இலக்கணம் வகுத்தவரே நாம் தான்.

"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்று"

என்பது சங்க இலக்கிய வாக்கு. அறிவு தான் நாடுகளின் ஏற்றத்திற்குக் காரணம் என்ற இருபதாம் நூற்றாண்டின் கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே சொன்னார் நம் திருவள்ளுவர். 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்ற தாரக மந்திரத்தை உலகுக்கு அளித்தவரே பொய்யாமொழியார் தான்.

இன்று ஒரு கல்வி - ஒரே வழிக் கல்வியைத் தான் நாம் தருகிறோம். இதை மாற்றி, பலவழிக் கல்வி தர வேண்டுமென்கிறார்கள் இன்றையக் கல்வியாளர்கள். இதைத் தான் நம் பாரதி, 'பயிற்றுப்பல கல்வி தந்து பாரை உயர்த்திடல் வேண்டும்' என்றார்.

"கல்வி இருட்டிற்குக் கலங்கரை விளக்கு,
யாவர்க்கும் வாக்குரிமை இருக்கும் இந்நாட்டில்
யாவர்க்கும் கல்வி இருக்க வேண்டும்"

எனக் குடியாட்சியில் கல்வியின் நிலையை அடித்துரைத்தவர்தான் நம் பாவேந்தர்.

ஒரு முறை இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் கூறினார்.

"We have got the best of students and best of teachers but we produce the worst of results"

இது எப்படி? நம் மாணவர்கள் அருமையானவர்கள். நம் ஆசிரியர்கள் அற்புதமானவர்கள். ஆனால் நம் கல்வியின் விளைவோ பூஜ்யம். இதுதான் நம்முடைய இன்றைய கோளாறு. இதை எப்படிச் சீர்திருத்துவது? இந்த நோயை எப்படிக் குணப்படுத்துவது?

**அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சிய வாதிகள்தான் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள். ஏனெனில் பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால், இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டியில் வாழ்வர்.**

**—பேரறிஞர் அண்ணா**

அறிவுலகம் வளர்கிறது. இந்த நிலையில் நாம் நீண்ட உறக்கத்திலிருந்து கண் விழித்து, பகுத்தறிவுப் பயணத்தில் சேர வேண்டாமா என்று எண்ணிப் பார்த்துத் தான், ஊர்ந்தும் தவழ்ந்தும் பயணத்தைத் தொடருகிறோம்.

நமது இன்றைய வளர்ச்சிப் போக்கினை ஆராய்ந்தால் மேற்கு ஜெர்மனி ஓராண்டில் வெளியிடும் நூல்களை நாம் வெளியிட 45 ஆண்டுகளாகும் என்றும், அமெரிக்கா ஓராண்டில் வெளியிடும் நூல்களை நாம் வெளியிட 80 ஆண்டுகள் ஆகுமென்றும் கணக்கிட்டுள்ளனர். நாம் இந்த நிலையில் தான் தொடர்ந்து வளரப் போகிறோமா? என்பதை ஆழ்ந்து சிந்திப் பார்க்க வேண்டும்.

புதிய சிந்தனைகளை ஊட்டுவது, புதுத் தகவல்களைத் திரட்டுவது, மகத்தான மாற்றங்களை மலர வைப்பது என்ற வழிகளில் கல்வியுலகம் புதிய வளர்ச்சியைப் போற்றி வருகிறது. கல்வியை ஓர் அணிகலனாகக் கருதிய காலம் பழங்காலமாகும். இன்றோ மனித வளத்தை மேம்படுத்தும் மாபெரும் கருவியாக, ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு வேண்டிய **அனைத்துச் செல்வங்களையும்**, வளங்களையும் வழங்க வல்ல பொருளாதாரத் தேவையாக, அள்ளக் குறையா நிறை செல்வமாகக் கல்வி மாறியுள்ளது. உலகின் எந்தப் பகுதியில் நடைபெறும் கல்வி வளர்ச்சியையும் உடனுக்குடன் எந்த நாட்டினரும் பெறவும், தத்தம் மொழிகளில் அவற்றை மாற்றிக் கொள்ளவும் விரைந்து முயல வேண்டிய தேவையும் பெருகியுள்ளது. இம்மூன்று கூறுபாடுகளையும் உணர்ந்து நமது தாயகத்தின் கல்வி வளத்தை நாம் மேம்படுத்தி வருகிறோம். எளிய மக்களுக்கும், கல்வித் தெளிவு பெற்ற மக்களுக்கும் இடைவெளி பெருகுவது எப்போதும் நல்லதில்லை. எழுத்தறிவின்மை, எந்தப் பகுதியிலேனும் நாட்டில் இருந்து விட்டால் ஆயிரம் சிந்தனையாளர்கள் ஒருங்கே கூடி, புதுமையைப் புகுத்தினாலும் கூட பழமை தான் வென்று விடும். எனவேதான் நிலவொளியைப் போல் அறிவியல் திறமைகள் ஒளி வழங்காமல்- தெரு விளக்குப் போல - சிறு விளக்காக நமது நாட்டின் வளர்ச்சியில் ஓரளவுக்குத் தான் பங்கு பெறுகிறது. அறிவியல் மனப்பான்மை, அறிவியல் அணுகுமுறை, அறிவியல் உறுதிப்பாடு என்ற மூன்றும் நம் மக்களிடத்தில் போதிய எழுச்சியைப் பெறவில்லை. ஒரு பக்கத்தில் அறிவியல் வளர்ச்சியிருந்தாலுங்கூட, மூட நம்பிக்கையும், முறையற்ற பழக்க வழக்கமும் நம்மை விட்டு விலக முடியாமல் அவ்வப்போது தலை நீட்டுகின்றன. 'தொடுவுழி தொடுவுழி விலகுவதும் விடுவுழி விடுவுழி பாசி பற்றுவதும்' போல நமது நாட்டுச் சிந்தனைகளில் முழுமையான பகுத்தறிவு இடம் பெறாது போகிறது.

முயற்சிக்கு மூலதனமே, உள்ள உறுதிப்பாடுதான். உள்ளத்தின் உறுதி குலைந்தால், முயற்சி குலையும் என்பது உண்மை. ஓயாத முயற்சியும் - ஒடுங்காத உறுதிப்பாடும் - இரண்டு சிறகுகளாக அமையுமானால், நாம் எண்ணிய உயரத்தை எய்திட முடியும். 'நினைப்பதெல்லாம் நடக்காது'- 'நினைத்தது நடந்து விட்டால் ...' என்றெல்லாம் நமது மக்கள் ஐயப்பாட்டிலும் அச்சத்திலும் அமிழ்ந்து கிடக்கிறார்கள். எண்ணியது இயலும்; நினைப்பது நிகழும் என்ற நெஞ்சத் துணிவை - நம்பிக்கை உறுதியை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்ற நம்பிக்கையை ஊட்டும் திருக்குறள், 'எண்ணியதை மிக எளிதிலேயே பெறலாம்' என்னும் துணிவு தருகிறது. ''உள்ளியது எய்தல் எளிதுமன்'', என்பது குறள் மொழி.

இன்று பல்வேறு துறைகளில் தங்கப் பதக்கங்களும், பரிசுகளும் பெற்ற மாணவ, மாணவியரை வாழ்த்துகின்றேன். இங்கு நடந்த ஒரு நிகழ்ச்சி என்னை வியப்பிலாழ்த்தியது. சுமார் ஐந்தாண்டுகட்கு முன்பு தொடங்கப் பெற்ற இப்பல்கலைக் கழகம், தனது முதல் டாக்டர் பட்டம் பெற்றவர்களை இன்று அறிமுகப்படுத்தியது. இந்தப் புதுவை பல்கலைக் கழக வரலாற்றிலேயே முதல் டாக்டர் பட்டம் பெற்ற மாணவர் (The First ever Ph.D.) பெயர் உதயசூரியன் - இதை ஆத்திகர்கள் தெய்வச் செயல் என்பார்கள். நான் இதை அப்படிச் சொல்ல விரும்பவில்லை. 'புதுவைக் கடற்கரையில் சூரியோதயம்' என்பேன். இது அரசியல் சூரியோதயம் அல்ல. 'அறிவுக் கதிரவனின் உதயம்' என்பேன்.

அம்பேத்கர் நூற்றாண்டு:



**நாம் அடிமையாகப் பிறந்து விட்டோம் என்று உங்களுக்கு நீங்களே உறுதி செய்து கொண்டு விட்டீர்களானால், எந்த உரிமையையும் உங்களால் அடைய முடியாமலே போய்விடும்.**

பல்கலைக் கழகப் பட்டத் தகுதியோடு பொது உலகுக்குத் தொண்டாற்ற வரும் உங்களை இருகரம் நீட்டி வரவேற்கிறேன். உங்கள் கல்விப் பயன் உலகுக்குச் சொந்தமாகட்டும்! அதனால் சமுதாய வாழ்வு வசந்தமாகட்டும்! பேரறிஞர் அண்ணா ஒரு பல்கலைக் கழகப் பேருரையில் குறிப்பிட்டது போல, அரசியல் கலையரங்கங்களில் - ஆட்சியியல் துறையில் - அரசியல் சார்ந்த செயற்களத்தில் நீவிர் ஆற்றிட வேண்டிய கடமை, பொறுப்பு குறித்து ஒன்றே ஒன்றினை மட்டும் சுட்டிக் காட்டுகின்றேன். நமக்கு வாய்த்துள்ள ஜனநாயக அரசு முறையை மெத்தவும் பத்திரமாகவும், சிறிதும் சேதமுறாமலும் பாதுகாப்பது உம்போன்ற பட்டதாரிகளின் முதல் பெரும் கடமையாகும். மக்களது அன்றாட வாழ்க்கைக்குள்ள தட்டுத் தடங்கல் அனைத்தையும் தகர்த்துப் பாதுகாப்பு அளித்திடும் என்ற நம்பகமான -

இதற்கு மேலைநாட்டார் ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். 'அந்தந்த மாணவனுக்கு விருப்பமானதைக் கொடு' என்பதே அவர்கள் சித்தாந்தம். நாம் பழைய மெக்காலே முறையில் சில பாடங்களை முக்கியம் என நினைக்கிறோம். இன்று இசை, பரதநாட்டியம் இவற்றை எடுத்துக் கொண்டால், நாம் அவை பற்றி வானளாவ புகழ்கிறோமே தவிர இவற்றைப் பாடத் திட்டத்தின் முன்னணியில் வைக்கவில்லை.

அண்மையில் ஒரு அமெரிக்க சஞ்சிகையில் படித்தேன். அவர்கள் "Shoe Polishing" - என்ற தலைப்பில் "Ph.D" செய்கிறார்கள். விந்தையாக இருக்கிறதா? அதற்குக் கட்டுரையாளர் பதிலளிக்கிறார், 'காலணி பளபளப்பை ஒரு கலையாக அமெரிக்கர்கள் செய்கின்றனர். இது எப்படி? 'Shoe Polishing'' என்ற தொழில்துறை பல கோடிக்கணக்கான மூலதனங்களைக் கொண்டு இயங்குகின்றது. 'எப்படி மெண்டு துறையில் நாம், பட்ட மேற்படிப்பு மேற்கொள்ளலாமோ, அப்படித் தான் இதிலும்' என்கிறார். "Education for felt needs" - 'தேவைக்கேற்ற கல்வி' என்பதே அவர்கள் குறிக்கோள்.

இப்போது தெரிகிறதா அவர்கள் எப்படி வளருகிறார்கள் என்று? யார் யாருக்கு எது தேவையோ அது கொடுக்கப்படுகிறது. இதை "Cafeteria System of Education" என்பார்கள். நம்மைப் போல் எதையும், யார் மீதும், திணிப்பது கிடையாது. தேவையற்றது இங்கு திணிக்கப்படுகிறது. கல்வி, திணிக்கப்படும் விஷயமல்ல. அது தானாகவே மலர வேண்டியது, வளர வேண்டியது, அது மலர, வளரும் வாய்ப்புக்களை அளிக்கவேண்டும்.

வாழ்வின் பல துறைகளில், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவை என்று அண்மைக் காலம் வரை நாம் கருதியவை, இன்று நடைமுறை நிகழ்ச்சிகளாகி விட்டன. கனவுகளாக, கவிஞரின் கற்பனைகளாக நேற்றுவரை இருந்த பல, இன்று கண்முன் காட்சிகளாக நிற்கின்றன. மரணமிலாப் பெருவாழ்வு கூட மனிதனுக்கு இயலாததல்ல என்ற அளவிற்கு



மாண்புமிகு தமிழக முதல்வர்-முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 27.8.90 அன்று புதுவையில் பாவேந்தர் பாரதிதாசனார் நூற்றாண்டு விழா தோரண வாயில்களுக்கு அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு புதுவை முதல்வர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்களும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு-புதுவை அமைச்சர் பெருமக்களும் இவ் விழாவில் கலந்து கொண்டார்கள்.

---

நம்பிக்கை தந்திடும் அரசு முறையான ஜனநாயகத்தை மிளிரச் செய்திடல் வேண்டும். அத்துடன் உமது பணி முற்றுப் பெறாது - பெற்றிடவும் கூடாது. சமுதாயத்தின் பேரங்கமாக - மிகப் பெரும்பாலோராக உள்ள சாமானியன் - சராசரி மனிதன். அந்தச் சாமானியனின் வாழ்வினை உயர்த்திடும் உன்னதமான பணிக்கு உங்களை அழைக்கிறேன்! அவனை மனித சமுதாயத்தின் கீழ்ப்படியிலேயே பின்தங்கவிட்டுத் தத்தளித்துத் தவித்திடச் செய்திடோம்!

அன்பின் வெளிச்சம் இருளைத் துடைக்கட்டும்!
அறிவுப் புது வெள்ளம் தடையை உடைக்கட்டும்!

*******

உங்கள் பேராற்றல் சரிதம் படைக்கட்டும்!
உலகுக்கு உங்கள் திறமை கிடைக்கட்டும்!

என்று உடன் பிறப்புக்களாகிய உங்களை வாழ்த்திப் பாராட்டி, இன்று நான் புதுவைப் பல்கலைக் கழகம் வந்த தன் நினைவாக, பேரறிஞர் அண்ணா பெயரில் ஆண்டு தோறும் செப்டம்பர் 15-இல் சொற்பொழிவு நிகழ்த்த அறக்கட்டளை நிதியாக, ஒரு இலட்ச ரூபாய் மானியமாக தமிழக அரசின் சார்பில் புதுவைப் பல்கலைக் கழகத்துக்கு அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடை பெறுகிறேன்.

வணக்கம்

---

**TNPSC**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## தொகுதி-1ல் (Group-I Services) அடங்கிய பதவிகளுக்கு முதன்மைத் தேர்வு (Main Written Examinations)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-1-இல் (Group-I Services) அடங்கிய பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் தேதிகளில் நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது.

| நாள் மற்றும் தேதி | நேரம் | தேர்வுத்தாள் |
|---|---|---|
| சனிக்கிழமை 6.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | முதல் தாள் (ஆங்கிலம்) |
| ஞாயிற்றுக் கிழமை 7.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | இரண்டாம் தாள் பொது அறிவு (முதல் பாகம்) |
| திங்கட் கிழமை 8.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | மூன்றாம் தாள் பொது அறிவு (இரண்டாம் பாகம்) |
| செவ்வாய் கிழமை 9.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப | நான்காம் தாள் (பிரிவு 1-ல் அடங்கிய விருப்பப் பாடங்கள் |
| புதன் கிழமை 10.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | ஐந்தாம் .தாள் (பிரிவு 2-ல் உள்ள விருப்பப் பாடங்கள்) |
| வியாழக் கிழமை 11.10.90 | 10.00 மு.ப. - 1.00 பி.ப. | ஆறாம் தாள் (பிரிவு 3-ல் உள்ள விருப்பப் பாடங்கள்) |

தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு (Hall Ticket) தேர்வுக்கான இடம், நேரம் முதலியவற்றை தேர்வுக்கு பத்து தினங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே அனுப்பப்படும். தேர்வு நாளுக்கு ஒரு வாரம் முன்னதாக தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு கிடைக்கப் பெறாதவர்கள் விண்ணப்பத்துடன் அனுப்பிய நிழற் படத்துடன் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஒம்./ செயலாளர்

தேதி:31.8.90

DIPR/2194/MS/90/ad.bureau/4005

# தந்தை பெரியாருடன் பெருமக்கள்



பேரறிஞர் அண்ணா அவர்களுடன்



பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடன்



மூதறிஞர் ராஜாஜி அவர்களுடன்



தொழில்மேதை ஜி.டி. நாயுடு அவர்களுடன்



ஈழத்தலைவர் செல்வநாயகம் அவர்களுடன்



ஜின்னா, அம்பேத்கார் ஆகியோருடன்

# பேரறிஞர் அண்ணாவுடன் பெருமக்கள்



மூதறிஞர் ராஜாஜியுடன்...



பெருந்தலைவர் காமராசருடன்...



ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடுடன்..



ஜிடி.நாயுடு , கருமுத்து தியாகராசருடன்...



...சின் முன்னாள் தலைவர்



இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர்
திரு. ...

**TNPSC**

**விளம்பர எண்: 32/90**

தமிழ்நாடு மின் ஆய்வாளர் பணியில், இளநிலை மின் ஆய்வாளர் பதவியில் (Junior Electrical Inspector) மூன்று காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 8.10.1990 அன்று மாலை 5.45 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,640-60-2,600-75-2,900.

(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்விற்கு பொருந்தாது).
மூன்று காலியிடங்களில் ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது.

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப் பெறாவிடில், அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக. (சலுகைகள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளது).

**தகுதி:** A degree in Electrical Engineering.

**NOTE:** Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum qualifying marks for selection.

**EXPLANATION:** "Destitute widow" means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை"களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.9.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.9.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) "கேட்புக் காசோலை" (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26×12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற் கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2195/MS/90/MCS



# பண்பாட்டுப் பெட்டகம்

டாக்டர் சூ. இன்னாசி
பேராசிரியர்-தலைவர்
கிறித்துவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்



இருளிலே ஒளிர்கின்ற விண்மீன்கள் எண்ணில் அடங்கா. அவற்றுள் விடிவெள்ளி எனச் சூட்டப்பெறும் விண்மீனுக்குத் தனிச் சிறப்புண்டு. இருள் மண்டிக் கிடந்த உலகிற்கு ஒளி வரப் போகிறது என்பதனை முன்னறிவிக்கும் அடையாளமாக அதனைக் கொண்டு, அவ்வொளியை எதிர்பார்க்கும் உணர்வைப் பெற்று உலகினர் செயல்படத் தொடங்குவர்.

விண்வெளியிலே மட்டுமன்றி இம் மண்வெளியிலும் அத்தகைய மீன் ஒன்று ஏறத்தாழ எண்பது ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றியது. அது மக்களது அகவிருள் போக்கி அறிவொளி தரும் விண்மீனாகச் சுடர்விட்டது; அச்சுடரொளி தான் பேரறிஞர் அண்ணா என்ற திருப் பெயர் தாங்கித் தமிழகத்திற்கு நம்பிக்கை ஊட்டியது; தமிழ் வளர்ச்சிக்கு ஊன்று கோல் தந்தது; தமிழர்தம் வாழ்விற்கு உணர்வூட்டம் வழங்கியது.

## கவின் கோபுரம்:

தமிழகத்தின் பெருமைக்குச் சிறப்புச் சேர்ப்பனவாகக் காணுமிடமெல்லாம் தோன்றுகின்ற கவின் கோபுரங்களைக் காட்டுவர். கலை வண்ணங்களாலும், கட்டிட நுட்பங்களாலும் காண்போரை வியக்க வைக்கும் தன்மை கொண்ட அவை பாராட்டப்படுகிறதற்குரியனவே ஆயினும், அவை பன்னூற்றாண்டுகளாய் வீழ்ந்துபடா வண்ணம் தாங்கிக் கொண்டு வந்திருக்கின்ற அவற்றின் அடிப்படையை எண்ணிப்பார்ப்பார் இலர். ஒரு சில பொறியியல் வல்லுநர்கள்-கட்டிடக்கலை விற்பன்னர்கள் மட்டுமே சிந்தித்திருப்பர்.

பேரறிஞர் அண்ணாவும் போற்றப் படுவதற்குரிய சீரிய கோபுரமே. அக் கோபுரத்தை வியப்பவர்கள் அவர்தம் சீர்திருத்த உணர்வென்னும் செங்கல், அவற்றின் இடையே பொதிந்துள்ள தமிழ்ப்பற்று என்னும் சாந்து, அவற்றின் மேற்பூச்சாக அமைந்துள்ள அவர்தம் எழுத்தாற்றல், பேச்சுவன்மை, அவற்றின் உச்சிக்கலசமாக ஒளிர்கின்ற அவர் வகித்த முதல்வர் பதவி ஆகியவற்றைக் கொண்டு பாராட்டிப் பெருமைப்படுவர்.

ஆனால் அவையனைத்துக்கும் மேலாக அவற்றைத் தாங்கி வருகின்ற அடிப்படை போல அமைந்து அவரோடு உணர்வொன்றிக் கலந்திருந்த பண்பாடு என்பதே பெரிதும் போற்றற்குரியது.

கட்டிடத்தின் அடிப்படைக்கல், மண்ணில் மறைந்து கிடப்பது; மற்றவர்க்கு எளிதில் தெரியாதது. மற்றவைபோல வண்ணம் தீட்டப் பெறாதது. அவ்வாறே எழுத்து, பேச்சு, நிருவாகத் திறன் எல்லாம் யாவரும் எளிதில் உணர்ந்து போற்றும் தன்மையது. ஆனால் பண்பாடு அரிதிற்கண்டு பாராட்டப்படும் தன்மையாயினும் என்றும் நிலை பேற்றுக்கு உரியதாகும்.

பெட்டகம் என்பது பணத்தைப் பாதுகாக்கப் பயன்படுவது; வீட்டினுள் தனியறையில் மற்றவர் பார்வையில் படாமல் வைக்கப்படுவது. துணிகளைப் பாதுகாக்கப் பயன்தரும் பீரோக்களை விட, உருவில் சிறியது எனினும் உறுதியானது. தேவையான சமயத்தில் தேவையான அளவில் எடுத்துத் தேவைப்படுவோருக்கு வழங்கும்பொழுது மட்டும் திறக்கப்படுவதாகும். பேரறிஞர் அண்ணா அவர்களும் பண்பாடு என்னும் பொன்னணிகளைப் பூட்டி வைக்கும் பெட்டகமாகத் திகழ்ந்தார். தேவையான நேரத்தில் பெட்டகத்தினின்று பண்பாட்டு அணிகலன்கள் வெளிப்படும். அதனைப் பெற்றுக் கொள்வோர் அவர்தம் உள்ளக் கிடக்கையை வியந்து போற்றித் தமது நன்றியினைப் புலப்படுத்துவர். ஆதலின் பேரறிஞர் அண்ணா ஒரு பண்பாட்டுப் பெட்டகமாகவே திகழ்ந்தார்.

## மனிதப்பண்பாடு:

மனிதனை மனிதனாக மதிக்கும் உள்ளுணர்வு எழுந்தால் அதுவே சிறந்ததொரு பண்பாடாக மதிக்கப் பெறும். தற்கால உலகில் அஃது அருகிப் போய்

**TNPSC**

விளம்பர எண்: 31/90

தமிழ்நாடு மருத்துவப்பணியில் கதிர்வீச்சு பௌதிகத்தில் (Radiology Physics) உதவிப் பேராசிரியர் பதவியில் இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய **ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும்** 8.10.1990 அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2,800-100-4,000.

(இந்த இரண்டு காலியிடங்களும் முன் தேர்வில் நிரப்பப்படாத காலியிடங்களாகும். ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்த காலி இடங்களை நிரப்ப இது மூன்றாவது முயற்சியாகும்).

**வயது:** வயது வரம்பு இல்லை.

**தகுதி:** A degree of M.Sc. (Medical Physics) obtained after undergoing studies at the College of Engineering, Guindy belonging to the Anna University, Madras and duly declared eligible for appointment as Radiological Safety Officers in the Medical Institutions by the Division of Radiological Protection of the Bhabha Atomic Research Centre, Bombay.

or

A degree of M.Sc. (Physics) and a Diploma in Radiology Physics awarded by the Bombay University after undergoing one year Post Graduate Course in Hospital Physics and Radiology Physics conducted by the Division of Radiology Protection of the Bhabha Atomic Research Centre.

**NOTE:** Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum marks for selection.

**EXPLANATION:** "Destitute widow" means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பைச் சார்ந்த தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர் போன்றவர்களுக்கு தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன.

விண்ணப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரி **இலவசமாக** பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு இருக்க வேண்டும். அத்துடன் சுயவிலாசம் எழுதிய உறையும் (26×12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

டிஐபிஆர்/2189/எம்எஸ்/90/அக்கார்ட்

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



